லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

7

ருஷ்யாவின் குடிமக்களுக்கு

தேச மக்களுக்கு

போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது?

உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம்

வினோதமானதும் விபரீதமானதும்

T. 11975

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!



வி. இ. லெனின். 1918

வி. இ. லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி 7

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
விற்பனையாளர்கள்
சென்னை

В. И. Ленин

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

ТОМ 7

на тамильском языке

V. I. Lenin

SELECTED WORKS. IN TWELVE VOLUMES,

VOLUME 7

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயைசெய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1981

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-034}{016(01)-81}$ 680—80

0101020000

பொருளடக்கம்

ருஷ்யாவின் குடிமக்களுக்கு! 11
தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ், அக்டோபர் 25-26 (நவம்பர் 7-8) 1917 12
1. தொழிலாளிகள், படையாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு! 12
2. சமாதானம் பற்றிய அறிக்கை, அக்டோபர் 26 (நவம்பர் 8) 14
சமாதானம் பற்றிய அரசாணை 15
3. சமாதானம் பற்றிய அறிக்கை மீதான விவாதத்தைத் தொடர்ந்து ஆற்றிய முடிவுரை, அக்டோபர் 26 (நவம்பர் 8) 22
4. நிலம் பற்றிய அறிக்கை, அக்டோபர் 26 (நவம்பர் 8) 27
நிலம் பற்றிய அரசாணை 28
5. தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் அமைப்பது பற்றிய முடிவு 34
தொழிலாளர் கண்காணிப்புப் பற்றிய நகல் ஒழுங்குமுறை விதிகள் 37
மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் கம்பியில்லாத் தந்திச் செய்தி, அக்டோபர் 30 (நவம்பர் 12) 1917 40

ரு. ச. ஜ. தொ. க. (போ.) இன் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் ஆற்றிய உரைகள், நவம்பர் 1(14) 1917. குறிப்பேடுகள் 42
1. 42
2. 42
3. 43
மத்தியக் கமிட்டிக்கு அகத்தே இருக்கும் எதிர்ப்பணி பற்றிய ரு. ச.ஜ. தொ. க. (போ.)இன் மத்தியக் கமிட்டித் தீர்மானம், நவம்பர் 2(15) 1917 44
ரு. ச. ஜ. தொ. க. (போ.)இன் ம. க. இன் பெரும்பான்மை இடமிருந்து சிறுபான்மைக்குத் தரப்பட்டதான இறுதி எச்சரிக்கை 48
தேச மக்களுக்கு. 52
விவசாயிகள் கேள்விகளுக்குப் பதில் 56
ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி (போல்ஷிவிக்)யின் மத்தியக் கமிட்டியில் இருந்து. எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் ருஷ்யாவின் அனைத்து உழைக்கும் வர்க்கங்களுக்கும் . . 58
விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் விசேஷ அகில ருஷ்யக் காங்கிரஸ், 1917 நவம்பர் 10-25 (நவம்பர் 23-டிசம்பர் 8) 66
1. நகல் தீர்மானம் 66
2. நிலப்பிரச்சினை மீதான முடிவுரை, நவம்பர் 18 (டிசம்பர் 1). பத்திரிகைச் செய்தி . . 68
தொழிலாளருக்கும் உழைக்கும் சுரண்டப்படும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணி. ''பிராவ்தாவுக்கு'' ஒரு கடிதம் 72
அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வு, டிசம்பர் 1(14) 1917 76

ஓர் உயர் பொருளாதாரக் கவுன்சில் நிறுவப்படும் பிரச்சினை மீதான உரை. பத்திரிகை செய்தி . . . 76
தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் தொழிலாளர் பிரிவின் கூட்டத்தில் பெத்ரோகிராத் தொழிலாளரின் பொருளாதார நிலை மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் கடமைகள் குறித்து ஆற்றிய உரை, டிசம்பர் 4(17) 1917. பத்திரிகைச் செய்தி 77
அரசியல் நிர்ணய சபை பற்றிய ஆராய்ச்சியுரைகள் 81
உணவுக்காகவும் சமாதானத்துக்காகவும் . . 89
வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரை, டிசம்பர் 14(27) 1917. குறிப்பேடுகள் 91
வங்கிகளின் தேசவுடைமையாக்கமும் அதன் அமுலாக்கத்திற்கு அவசியமான நடவடிக்கைகளும் பற்றிய நகல் அரசாணை 95
போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது? . . 101
உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம். 117
அரசியல் நிர்ணய சபையின் கலைப்புப் பற்றிய நகல் அரசாணை 122
துரதிருஷ்ட சமாதானம் என்னும் பிரச்சினையின் வரலாறு குறித்து 126
ஒரு தனியான, பிரதேசக் கைப்பற்றல் தன்மை கொண்ட சமாதானம் உடனே ஏற்பட வேண்டும் என்ற பிரச்சினை மீதான ஆராய்ச்சியுரைகள் . . 126

தனியான பிரதேசக் கைப்பற்றல் பாணி சமாதானத்தை உடனே செய்து கொள்வது பற்றிய பிரச்சினை குறித்த ஆராய்ச்சியுரைகளுக்குப் பின்னுரை 140

சமாதானம் மற்றும் போர் பற்றி ரு.ச.ஜ. தொ.க.(போ.)இன் மத்தியக் கமிட்டி கூட்டத்தில் ஆற்றிய உரைகள், ஜனவரி *11(24) 1918*.

குறிப்பேடுகள் 143

1. 143

2. 147

3. 147

தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் மூன்ருவது அகில ருஷ்யக் காங்கிரஸ், ஜனவரி *10-18 (23-31) 1918* 149

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நடவடிக்கைகள் பற்றிய உரை, ஜனவரி *11(24)* 149

ஜெர்மன் ரைக் அரசாங்கத்துக்கு நகல் கம்பியில்லாச் செய்தி 179

சோஷலிஸ்டு தாயகம் ஆபத்தில் இருக்கிறது! . 181

தனியான, பிரதேசக் கைப்பற்றல் தன்மை கொண்ட சமாதானப் பிரச்சினை மீது ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி மேற்கொண்ட நிலை 184

வேதனைதரும், ஆனல் அவசியமான படிப்பினை . 190

அரசாங்கத்தின் வெளியேற்றம் பற்றி மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நகல் முடிவு . . 197

விநோதமானதும் விபரீதமானதும் 198

ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்) இன் விசேஷ ஏழாவது மாநாடு மார்ச்சு 6-8 1918 212

1. மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை, மார்ச்சு 7 212
2. மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை மீது ஆற்றிய கடைசி உரை, மார்ச்சு 8 248
3. போர், சமாதானம் பற்றிய தீர்மானம் . . 260
4. போர், சமாதானம் பற்றிய தீர்மானத்திற்குச் சேர்ப்பு, மார்ச்சு 8 262
5. வேலைத்திட்டத்தின் மறுசீராய்வு பற்றியும் கட்சியின் பெயரை மாற்றுவது குறித்துமான அறிக்கை, மார்ச்சு 8 263
6. கட்சியின் பெயரையும் கட்சியின் வேலைத்திட்டத்தையும் மாற்றுவது குறித்த தீர்மானம் . 284
7. மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாக இருக்க ''இடது சாரிக் கம்யூனிஸ்டுகள்'' மறுப்பு குறித்துள்ள தீர்மானம் 286

பதிப்பாளர் குறிப்புகள் 288

பெயர்க் குறிப்பகராதி 329

ருஷ்யாவின் குடிமக்களுக்கு!

இடைக்கால அரசாங்கம் பதவியில் இருந்து அகற்றப் பட்டு விட்டது. அரசு அதிகாரம் தொழிலாளர்கள், படை யாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் அமைப்பான புரட்சிகர-ராணுவக் கமிட்டியின்[1] கரங்களுக்கு மாற்றப்பட்டு விட்டது. இது பெத்ரோகிராத் பாட்டாளி களுக்கும் காவற்படைக்கும் தலைமை தாங்குகிறது.

மக்கள் எந்த லட்சியத்துக்காகப் போராடினர்களோ அந்த லட்சியம்—ஜனநாயக சமாதானத்தை உடனடியாக வழங்குவது, நிலப்பிரபுத்துவ நிலவுடைமை உரிமையை ஒழிப்பது, உற்பத்தி மீது தொழிலாளர் கண்காணிப்பு, சோவியத் ஆட்சி அதிகாரத்தை நிறுவுவது—என்பது உறுதி யாக நிலைநாட்டப்பட்டது.

தொழிலாளிகள், படையாளிகள், விவசாயிகளின் புரட்சி நீடூழி வாழ்க!

காலை 10 மணி, அக்டோபர் 25, 1917.

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் புரட்சிகர-ராணுவக் கமிட்டி

ரபோச்சிய்-இ-சொல்தாத், *இதழ் 8, அக்டோபர் 25 (நவம்பர் 7), 1917*

நூல் திரட்டு, *தொகுதி 35, பக்கம் 1*

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ்[2]

அக்டோபர் 25—26 (நவம்பர் 7—8) 1917

1

தொழிலாளிகள், படையாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு!

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் ஆரம்பமாகி விட்டது. இந்தக் காங்கிரசில் மிகப் பெரும் பெரும்பான்மையான சோவியத்துகள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. விவசாயிகள் சோவியத்துகளைச் சேர்ந்த பல பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டிருக்கிறார்கள். சமரசமாக விட்டுக் கொடுக்கும் மத்திய நிர்வாகக் கமிட்டியின் ஆட்சி நிர்வாகம் முடிவுற்று விட்டது. மிகப்பெரும் பெரும்பான்மையான தொழிலாளிகள், படையாளிகள் மற்றும் விவசாயிகளின் ஆதரவோடும், பெத்ரோகிராதில் நடைபெற்ற தொழிலாளிகள் மற்றும் காவற்படையினரின் வெற்றிகரமான புரட்சி எழுச்சியின் ஆதரவோடும், காங்கிரஸ் தனது கரங்களில் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்கிறது.

இடைக்கால அரசாங்கம் வீழ்த்தப்பட்டு விட்டது. இடைக்கால அரசாங்கத்தில் பதவியில் இருந்த பெரும்பாலோர் ஏற்கெனவே கைதுசெய்யப்பட்டு விட்டனர்.

சோவியத் ஆட்சி அதிகாரம், எல்லாத் தேசங்களுக்குமான ஓர் உடனடியான ஜனநாயக சமாதானத்தையும், எல்லாப் போர்முனைகளிலும் உடனடியான ஒரு போர்நிறுத்தத்தையும் முன்வைக்கும். நிலவுடைமையாளர்களதும், முடிக்குரியதும்[3], சமயமடங்களுக்குரியதுமான நிலத்தை நஷ்டஈடு எதுவும் இன்றி விவசாயிகள் கமிட்டிகளிடம் உடைமை மாற்றி ஒப்படைக்கும், சேனையில் முழுமையான ஜனநாய

கத்தைக் கொண்டு வருவது மூலம் படையாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும், உற்பத்தி மீது தொழிலாளர் கண்காணிப்பை நிலைநாட்டும், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அரசியல் நிர்ணய சபை[4] கூட்டப்படுவதை உத்தரவாதம் செய்யும், நகரங்களுக்கு ரொட்டியும் கிராமங்களுக்கு முக்கியமான அவசியப் பொருட்களையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யும், ருஷ்யாவில் வாழ்ந்து வரும் எல்லா மக்கள் இனங்களுக்கும் மெய்யான சுயநிர்ணய உரிமையினை உத்தரவாதம் செய்யும்.

வட்டாரங்களில் எல்லா ஆட்சி அதிகாரமும் தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளுக்கு மாற்றப்படும், அவை உண்மையான புரட்சிகர அமைப்பை உத்தரவாதம் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் ஆணையிடுகிறது.

போர்முனையில் உள்ள படையாளிகள் எச்சரிக்கையாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறது. புதிய அரசாங்கம் அது எல்லா மக்களின் முன்னும் நேரடியாக பிரேரேபிக்கும் ஒரு ஜனநாயக சமாதானத்தை ஏற்படுத்துவதில் வெற்றியடையும் காலம் வரையில், ஏகாதிபத்தியத்தின் எல்லாத் தாக்குதல்களையும் எதிர்த்துப் புரட்சியைப் புரட்சிகரச் சேனையால் பாதுகாக்க முடியும் என்று சோவியத்துகளின் காங்கிரஸ் மெய்யாகவே நம்புகிறது. சொத்துடைய வர்க்கங்களின் பால் பயனீட்டு ஆணைகள், வரிவிதிப்புகள் செய்யும் உறுதியான கொள்கையின் மூலம் புரட்சிகரச் சேனைக்குத் தேவையானவற்றை வழங்கப் புதிய அரசாங்கம் அனைத்தையும் செய்யும், படையாளிகள் குடும்பங்களின் நிலைமையை மேம்படுத்தும்.

கர்னீலவின் ஆதரவாளர்களான கேரென்ஸ்கி, கலேதின் மற்றும் பிறர் பெத்ரோகிராதுக்கு எதிராகத் துருப்புக்களைக் கொண்டுவர முயல்கிறார்கள். கேரென்ஸ்கியால் ஏமாற்றப்பட்டு பெத்ரோகிராதுக்கு எதிராக அனுப்பிவைக்கப்பட்ட சில படைப்பிரிவுகள் எழுச்சியுற்ற மக்களின் பக்கம் வந்துவிட்டன.

படையாளிகளே, கர்னீலவ்வாதியான கேரென்ஸ்கியை எதிர்த்துத் தீவிரமாகப் போராடுவீர்! எச்சரிக்கையாக இருப்பீர்!

ரயில்வேத் தொழிலாளர்களே, பெத்ரோகிராதுக்கு எதிராக கேரென்ஸ்கியால் அனுப்பிவைக்கப்பட்ட எல்லாத் துருப்பு ரயில்களையும் தடுத்து நிறுத்துங்கள்!

படையாளிகளே, ஆலையிலும் அலுவலகத்திலும் உள்ள தொழிலாளர்களே, புரட்சியின் கதியும் ஜனநாயக சமாதானத்தின் கதியும் உங்கள் கரங்களில் உள்ளன!

புரட்சி நீடுழி வாழ்க!

தொழிலாளர்கள்,
படையாளர்கள்
பிரதிநிதிகளின்
சோவியத்துகளின்
அகில ருஷ்யக் காங்கிரஸ்

விவசாயிகள்
சோவியத்துகளின்
பிரதிநிதிகள்

அக்டோபர் 25
(நவம்பர் 7), 1917ல்
எழுதப்பட்டது

2

சமாதானம் பற்றிய அறிக்கை அக்டோபர் 26 (நவம்பர் 8)

சமாதானம் பற்றிய பிரச்சினை இன்று ஒரு சூடான பிரச்சினை, வேதனையான ஒரு பிரச்சினை. இதைப் பற்றி ஏராளமாகப் பேசப்பட்டுள்ளது எழுதப்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் பெருமளவுக்கு இதை விவாதித்திருக்கிறீர்கள் என்பதில் ஐயமில்லை. நீங்கள் தேர்ந்தெடுக்கும் அரசாங்கம் வெளியிட வேண்டிய ஒரு பிரகடனத்தை நான் படிப்பதற்கு அனுமதியுங்கள்.

சமாதானம் பற்றிய அரசாணை

அக்டோபர் 24—25 புரட்சியால் உருவாக்கப்பட்டதும், தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளை அடிப்படையாக்கியதுமான, தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம், ஒரு நீதியான, ஜனநாயகமான சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை உடனடியாகத் தொடங்கும்படி போரில் ஈடுபட்டுள்ள எல்லா மக்களையும் அவர்களது அரசாங்கங்களையும் கேட்டுக்கொள்கிறது.

போரினால் வளமும் வலுவும் இழந்து, அலைக்கழிக்கப்பட்டும் துன்புற்றும் உள்ள போரிடும் நாடுகளின் மிகப் பெரும் பெரும்பான்மையான தொழிலாளி வர்க்கத்தினர்களும் இதர உழைக்கும் மக்களும் ஒரு நீதியான, ஜனநாயக சமாதானத்திற்கு ஏங்கி நிற்கிறார்கள். ஜாரின் முடியரசு வீழ்த்தப்பட்டது முதல் ருஷ்யாவின் தொழிலாளிகளும் விவசாயிகளும் இத்தகைய ஒரு சமாதானம் வேண்டும் என்று மிகவும் திட்டவட்டமாயும் விடாப்பிடியாகவும் கோரிவந்திருக்கிறார்கள். இத்தகைய ஒரு சமாதானத்தை அரசாங்கம், பிரதேசக் கைப்பற்றல்கள் இல்லாத (அதாவது அன்னிய நிலங்களைப் பிடித்தடக்கல் இல்லாத, அன்னிய தேசங்களை வலுவந்தமாக இணைத்துக்கொள்வது இல்லாத) இழப்பீட்டுத் தண்டத் தொகைகள் இல்லாத ஓர் உடனடி சமாதானம் என்றே பொருள் கொள்கிறது.

இந்த வகையான சமாதானத்தைப் போரிடும் நாடுகள் யாவும் உடனடியாகச் செய்துகொள்ள வேண்டும் என்று ருஷ்ய அரசாங்கம் பிரேரேபிக்கிறது. இத்தகைய சமாதானத்தின் எல்லா நிபந்தனைகளையும், எல்லா நாடுகளின் எல்லா மக்களினங்களின் மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரபூர்வமான சட்டமன்றங்கள் இறுதியாக ஊர்ஜிதம் செய்வதை எதிர்நோக்கி, இப்போதே உறுதியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கான தனது ஆயத்தத்தை அது வெளிப்படுத்துகிறது.

பொதுவாக ஜனநாயகவாதிகளின் குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்தின் நீதி உணர்வுக்கு ஏற்ப, அரசாங்கம்

அன்னிய நாடுகள் கவர்ந்துகொள்ளப்படுவதையும் பிரதேசக் கைப்பற்றல்களையும் பின்வரும் பொருளில் கருதிப்பார்க்கிறது. அதாவது, சிறிய அல்லது பலவீனமான தேசம் ஒரு பெரிய வலிமை மிகுந்த அரசாக அந்தத் தேசத்தின் துல்லியமான தெளிவான சுயவிருப்பமான ஒப்புதல் மற்றும் விருப்பம் வெளியிடப்படாமலே கூட்டி இணைக்கப்படுகிறது. இத்தகைய நிர்ப்பந்தமான கூட்டிணைவு நடைபெற்ற காலம் பொருட்படுத்தப் படுவதில்லை. சம்பந்தப்பட்ட அரசுடன் வலுவந்தமாகக் கைப்பற்றிச் சேர்க்கப்பட்ட, அல்லது அதன் எல்லைகளுக்குள் வலுவந்தமாக வைத்திருக்கும் தேசத்தின் வளர்ச்சி அல்லது பின்தங்கிய நிலைமையும் பொருட்படுத்தப் படுவதில்லை. இந்த தேசம் ஐரோப்பாவில் இருக்கிறதா அல்லது தொலைவான கடல் கடந்த நாடுகளில் இருக்கிறதா என்பதும் பொருட்படுத்தப் படுவதில்லை.

ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைகளுக்குள் ஒரு தேசம் அது எதுவாயினும் சரி, அதன் வெளிப்படையான விருப்பத்துக்கு—இவ்விருப்பம் பத்திரிகைகள், பொதுக் கூட்டங்கள், கட்சிகளின் முடிவுகள், தேசிய ஒடுக்கு முறையை எதிர்த்த கண்டனங்கள் எழுச்சிகள் ஆகிய எந்த வழியில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் சரி—நேர்மாறாக அதற்கு சுதந்திரமான ஓட்டு மூலம் தனது அரசுவடிவத்தைப் பற்றி முடிவு செய்வதற்கான உரிமை வழங்கப்படாவிட்டால்—இந்த ஓட்டு கூட்டி இணைக்கும் அல்லது பொதுவாக வல்லதான அரசின் துருப்புக்கள் முற்றாக வெளியேறிய பிறகு, நிர்ப்பந்தம் கிஞ்சிற்றும் கொண்டுவரப்படாத நிலையில் எடுக்கப்படும்—அத்தகைய கூட்டிணைவு பிரதேசக் கைப்பற்றல் ஆகும் அதாவது கவர்ந்துபற்றுதலும் வன்முறையும் ஆகும்.

அவை வென்று கைப்பற்றியுள்ள பலவீனமான மக்களினங்களை வல்லமையும் செல்வம் படைத்தவையுமான தேசங்கள் இடையே எப்படிப் பங்கு போட்டுக் கொள்வது என்ற பிரச்சினை மீது இந்தப் போரை நீட்டிப்பதானது மனித குலத்துக்கு எதிரான மாபெரும் குற்றம் என்று தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் கருதுகிறது. எனவே, எவ்விதமான விதிவிலக்கும் இன்றி எல்லா மக்களினங்களுக்

ЕЖЕДНЕВНАЯ ВЕЧЕРНЯЯ ГАЗЕТА

РАБОЧІЙ и СОЛДАТЪ

Органъ Петроградскаго Совѣта Рабочихъ и Солдатскихъ Депутатовъ.

Цѣна въ Петроградѣ 15 к.
Въ пр. гор. и жел. дор. 20 к.

№ 9. Четвергъ, 26 Октября (8 ноября нов. ст.) 1917 года. № 9.

Адресъ конторы и редакціи: Смольный Институтъ, 3-й этажъ, Комната № 50 (Тел. 110-36, 108-85, 98-60, соедин. съ комн. № 50)

РАБОЧИМЪ, СОЛДАТАМЪ и КРЕСТЬЯНАМЪ!

Второй Всероссійскій Съѣздъ Совѣтовъ Рабочихъ и Солдатскихъ Депутатовъ открылся. На немъ представлено громадное большинство Совѣтовъ. На съѣздѣ присутствуетъ и рядъ делегатовъ отъ крестьянскихъ Совѣтовъ. Полномочія соглашательскаго Ц. И. К. окончились. Опираясь на волю громаднаго большинства рабочихъ, солдатъ и крестьянъ, опираясь на совершившееся въ Петроградѣ побѣдоносное возстаніе рабочихъ и гарнизона, Съѣздъ беретъ власть въ свои руки.

Временное Правительство низложено. Большинство членовъ Временного Правительства уже арестовано.

Совѣтская власть предложитъ немедленный демократическій миръ всѣмъ народамъ и немедленное перемиріе на всѣхъ фронтахъ. Она обезпечиваетъ безвозмездную передачу помѣщичьихъ, удѣльныхъ и монастырскихъ земель въ распоряженіе крестьянскихъ комитетовъ, отстоитъ права солдата, проведя полную демократизацію арміи, установитъ рабочій контроль надъ производствомъ, обезпечитъ своевременный созывъ Учредительнаго Собранія, озаботится доставкой хлѣба въ города и предметовъ первой необходимости въ деревню, обезпечитъ всѣмъ націямъ, населяющимъ Россію, подлинное право на самоопредѣленіе.

Съѣздъ постановляетъ: вся власть на мѣстахъ переходитъ къ Совѣтамъ Рабочихъ, Солдатскихъ и Крестьянскихъ депутатовъ, которые и должны обезпечить подлинный революціонный порядокъ.

Съѣздъ призываетъ солдатъ въ окопахъ къ бдительности и стойкости. Съѣздъ Совѣтовъ увѣренъ, что революціонная армія сумѣетъ защитить революцію отъ всякихъ посягательствъ имперіализма, пока новое правительство не добьется заключенія демократическаго мира, который оно непосредственно предложитъ всѣмъ народамъ. Новое Правительство приметъ всѣ мѣры къ тому, чтобы обезпечить революціонную армію всѣмъ необходимымъ, путемъ рѣшительной политики реквизицій и обложенія имущихъ классовъ, а также улучшитъ положеніе солдатскихъ семей.

Корниловцы — Керенскій, Каледпнъ и др. дѣлаютъ попытки вести войска на Петроградъ. Нѣсколько отрядовъ, обманнымъ путемъ двинутыхъ Керенскимъ, перешли на сторону возставшаго народа.

Солдаты, окажите активное противодѣйствіе корниловцу Керенскому! Будьте на сторожѣ!

Желѣзнодорожники, останавливайте всѣ эшалоны, посылаемые Керенскимъ на Петроградъ!

Солдаты, рабочіе, служащіе, — въ вашихъ рукахъ судьба революціи и судьба демократическаго мира!

ДА ЗДРАВСТВУЕТЪ РЕВОЛЮЦІЯ!

Всероссійскій Съѣздъ Совѣтовъ
Рабочихъ и Солдатскихъ Депутатовъ.
Делегаты отъ Крестьянскихъ Совѣтовъ.

வி. இ. லெனின் எழுதிய தொழிலாளிகள், படையாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு! அறிக்கையுடன் ரபோச்சிய்-இ-சொல்தாத் (''தொழிலாளியும் படையாளியும்'') என்ற பத்திரிகையின் இதழ் 9, அக்டோபர் 26 (நவம்பர் 8), 1917ன் முதல் பக்கம்

கும் சம அளவில் நீதியானதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளின் மீது இந்தப் போரை நிறுத்தி உடனடியாக சமாதான நிபந்தனைகளில் கையொப்பம் இடுவதென்ற தனது வைராக்கியத்தை முழுப்பற்றுடன் அறிவிக்கிறது.

அதே சமயம் மேலே குறிப்பிடப்பட்ட சமாதான நிபந்தனைகளை ஓர் இறுதி எச்சரிக்கையாகக் கருதவில்லை என்று தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் தெரிவிக்கிறது. வேறு சொற்களில் கூறினால், இதர சமாதான நிபந்தனைகளைச் சிந்தித்துப் பார்க்கத் தயாராக உள்ளது. போரிடும் நாடுகள் எதுவும் அவற்றை சாத்தியமான அளவு விரைவில் வெளியிட வேண்டும் என்று மட்டுமே வலியுறுத்துகிறது. சமாதான நிபந்தனைகளில் அப்பட்டமான தெளிவும் எல்லாவிதமான ஐயப்பாடும் இரகசியமும் இல்லாத நிலையும் வேண்டும் என்று மட்டுமே வலியுறுத்துகிறது.

புதிய அரசாங்கம் இரகசிய அரசுறவுத் தந்திரத்தை ஒழித்துக் கட்டுகிறது. தன்னைப் பொருத்தவரை எல்லாப் பேச்சுவார்த்தைகளையும் எல்லா மக்களின் முன்பாகவும் முற்றிலும் பகிரங்கமாக நடத்துவது என்ற தனது உறுதியான உத்தேசத்தை வெளியிட்டுள்ளது. 1917 பிப்ரவரி முதல் அக்டோபர் 25 வரை நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் அரசாங்கம் ஊர்ஜிதம் செய்த அல்லது செய்து முடித்த இரகசிய உடன்படிக்கைகளை உடனடியாகவும் முழுமையாகவும் வெளியிடும். அந்த இரகசிய உடன்படிக்கைகளில், பெரும்பாலும் ருஷ்யாவின் நிலப்பிரபுக்கள் முதலாளிகளுக்கு சாதகங்களையும் தனி உரிமைகளையும் பெற்றுத்தருவதையும், மகாருஷ்ய இனத்தவர்கள் புரிந்துள்ள பிரதேசக் கைப்பற்றல்களை அவர்கள் தம்மிடமே வைத்திருக்கவோ அல்லது விஸ்தரிக்கவோ செய்வதையும் நோக்கமாகக் கொண்ட அம்சங்கள் அடங்கி இருக்குமானால், அவை அனைத்தையும் நிபந்தனை இன்றியும் உடனடியாகவும் ரத்துச் செய்துவிடுவதாக தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் பிரகடனம் செய்கிறது.

சமாதானத்திற்காக பகிரங்கமான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும்படி எல்லா நாடுகளின் அரசாங்கங்களிடமும்

மக்களிடமும் பிரேரேபிக்கும் நமது அரசாங்கம், தன்னைப் பொருத்தவரை, இந்தப் பேச்சுவார்த்தைகளை எழுத்து மூலமோ, தந்தி மூலமோ பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இடையிலான பேச்சுக்கள் மூலமோ, அல்லது அத்தகைய பிரதிநிதிகளின் ஒரு மாநாட்டிலோ நடத்தத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது. இத்தகைய பேச்சுவார்த்தைகளை எளிதாக நடத்துவதற்காக நமது அரசாங்கம் நடுநிலைமை நாடுகளுக்கு அதிகாரபூர்வமான பிரதிநிதிகளை நியமனம் செய்கிறது.

எல்லாப் போரிடும் நாடுகளின் அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் ஓர் உடனடியான போர்நிறுத்தத்தை நமது அரசாங்கம் முன்வைக்கிறது. தன்னைப் பொருத்தவரை இந்தப் போர்நிறுத்தம் மூன்று மாதங்களுக்குக் குறைவானதாக இல்லாதபடிச் செய்து முடிக்க விரும்புகிறது. போரில் ஈடுபட்டோ அல்லது அதில் கலந்து கொள்ளும் கட்டாயத்துக்கு உள்ளாகியோ இருக்கும் எல்லா மக்கள் அல்லது தேசங்களின் பிரதிநிதிகள் எவ்வித விதிவிலக்கும் இன்றிக் கலந்து கொண்டு சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளைப் பூர்த்தி செய்யவும், சமாதானத்திற்கான நிபந்தனைகளை இறுதியாக ஊர்ஜிதம் செய்வதற்கு எல்லா நாடுகளின் மக்களின் பிரதிநிதிகளின் அதிகார பூர்வமான சட்டமன்றங்களைக் கூட்டுவதற்கும் அனுமதிக்கும் அளவுக்குப் போதுமான நீடித்த காலாவகாசத்திற்குப் போர்நிறுத்தம் இருக்க வேண்டும் என்று கருதுகிறது.

சமாதானத்திற்கான இந்த யோசனையைப் போரிடும் எல்லா நாடுகளின் அரசாங்கங்கள் மற்றும் மக்களின் முன் வைக்கும் ருஷ்யாவின் இடைக்கால தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம், மனித குலத்தின் மூன்று மிகவும் முன்னேறிய தேசங்களும் இன்றைய போரில் கலந்து கொண்டுள்ள ஆகப்பெரிய அரசுகளுமான இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் வர்க்க உணர்வுடைய தொழிலாளிகளுக்கு விசேஷ வேண்டுகோள் விடுக்கிறது. இந்த நாடுகளின் தொழிலாளிகள் முன்னேற்றம், சோஷலிசம் என்ற லட்சியங்களுக்காக மாபெரும் பங்குப்பணி ஆற்றியிருக்கிறார்

கள். இங்கிலாந்தின் சார்ட்டிஸ்டு இயக்கம்,[5] பிரெஞ்சு பாட்டாளி வர்க்கம் நடத்தியுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகள்,[6] இறுதியாக ஜெர்மனியின் சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டத்துக்கு[7] எதிரான வீரஞ்செறிந்த போராட்டம் மற்றும் உலகமுற்றும் உள்ள தொழிலாளிகளுக்கு முன்மாதிரியாகத் திகழக் கூடியதான வெகுஜன பாட்டாளி வர்க்க அமைப்புகளை ஜெர்மனியில் நிறுவியது போன்ற பல மாபெரும் உதாரணங்களை அவர்கள் வழங்கியுள்ளனர். பாட்டாளி வர்க்க வீர சாதனைகளின் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் உடைய படைப்பாற்றல் பணியின் இந்த உதாரணங்கள் யாவும் குறிப்பிடப்பட்ட நாடுகளின் தொழிலாளிகள் போரின் பயங்கரத்தில் இருந்தும் அதன் பின்விளைவுகளில் இருந்தும் மனித குலத்தைக் காப்பது என்ற தம்முன் உள்ள கடமையினைப் புரிந்து கொள்வார்கள், இந்தத் தொழிலாளிகள் தமது சர்வாம்சமான, வைராக்கியமான, மிகவும் உயர் ஊக்கம் மிகுந்ததுமான செயல் மூலம், வெற்றிகரமான முறையில் சமாதானத்துக்கு வர நமக்கு உதவுவார்கள், அதே சமயம் உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் திரளை, எல்லா வடிவிலுமான அடிமைத் தனத்தில் இருந்தும் எல்லா வடிவிலுமான சுரண்டலில் இருந்தும் விடுவிப்பார்கள், என்பதற்கான ஒரு பிரதிக்ஞை ஆகும்.

அக்டோபர் 24—25 புரட்சியால் உருவாக்கப்பட்டதும் தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகளின் சோவியத்துகளின் ஆதரவை அடிப்படையாக்கியதுமான தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் உடனே சமாதானத்திற்கான பேச்சு வார்த்தைகளைத் தொடங்க வேண்டும். நமது வேண்டுகோள் அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் ஒருங்கே விடுக்கப்பட வேண்டும். நாம் அரசாங்கங்களைப் புறக்கணிக்க முடியாது, காரணம் அவ்வாறு செய்வது சமாதானத்தைச் செய்துகொள்வதற்கான சாத்தியப்பாடுகளைத் தவக்கப்படுத்தும். ஒரு மக்கள் அரசாங்கம் அவ்வாறு

செய்யக் கூடாது. அதே சமயம் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்காமல் இருக்கும் உரிமை நமக்கு இல்லை. எல்லா இடங் களிலும் அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் இடையில் வேறு பாடுகள் உள்ளன. எனவே போர் மற்றும் சமாதானம் என்ற பிரச்சினையில் தலையிடுவதற்கு நாம் மக்களுக்கு உதவ வேண் டும். பிரதேசக் கைப்பற்றல்கள், இழப்பீட்டுத் தண்டத் தொகைகள் இல்லாத ஒரு சமாதானத்திற்கான நமது வேலைத் திட்டம் முழுவதையும் நாம் நிச்சயம் எல்லா வழிகளி லும் வற்புறுத்துவோம். அதில் இருந்து நாம் பின்வாங்க மாட்டோம். ஆனல் அவர்களது நிபந்தனைகள் நம்முடைய வற்றில் இருந்து வேறுபட்டவை, எனவே நம்முடன் பேச்சு வார்த்தைகள் தொடங்குவதில் பயன் இல்லை, என்று கூறு வதற்கு நமது எதிரிகளுக்குச் சந்தர்ப்பம் தர மாட்டோம். அந்தச் சாதகமான நிலைமை அவர்களுக்குக் கிடைக்காத படிச் செய்ய வேண்டும். நமது நிபந்தனைகளை ஓர் இறுதி எச்சரிக்கை என்ற வடிவில் முன்வைத்தல் கூடாது. எனவே, நாம் எந்த சமாதான நிபந்தனைகளையும் எல்லா யோசனை களையும் ஆழ்ந்து கவனிக்க விரும்புகிறோம் என்ற அம்சம் இதிலடங்கும். நாம் அவற்றை ஆராய்ந்து பார்ப்போம். ஆனல் இதனல் அவற்றை அவசியம் ஒப்புக் கொள்ள வேண் டும் என்பது கிடையாது. அவற்றை ஆராயும்படி அரசியல் நிர்ணய சபையிடம் சமர்ப்பிப்போம். என்ன சலுகைகள் அளிக்கப்படலாம் எவை அளிக்கப்படலாகாது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் அதற்கு உண்டு. உதட்டளவில் சமாதானம், நீதி என்று பேசியும், உண்மையில் பிரதேசக் கைப்பற்றல் மற்றும் கொள்ளைக்காரப் போர்களைத் தொடுத் தும் வரும் அரசாங்கங்கள் கையாண்டுவரும் மோசடியை எதிர்த்து வருகிறோம். எந்த அரசாங்கமும் தான் நினைப் பதை எல்லாம் வெளியே சொல்லாது. ஆனல் நாம் இரகசிய அரசுறவுத் தந்திரத்தை எதிர்க்கிறோம், மக்கள் அனைவரும் முற்றுக நேரில் காணும் வகையில் பகிரங்கமாகச் செயல் படுவோம். இடர்ப்பாடுகளைக் கண்டு நாம் கண்ணை மூடிக் கொள்ளவில்லை, அவ்வாறு நாம் என்றுமே செய்தது கிடை யாது. மறுப்பதால் போரை முடிவுக்குக் கொண்டுவர முடி

யாது, ஒரு தரப்பால் அதை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. நாம் மூன்று மாதங்களுக்கான போர்நிறுத்தத்தைப் பிரேரேபிக்கிறோம், ஆனால் இதைவிடக் குறைந்த காலத்ததாயினும் அதை நிராகரிக்க மாட்டோம். சிறிது காலத்துக்கு என்றாலும் கூட, முற்றும் சோர்வடைந்த சேனை சற்றே ஓய்வு கொள்ளலாம். மேலும் நிபந்தனைகள் குறித்து விவாதிப்பதற்காக எல்லா நாகரிகமடைந்த நாடுகளிலும் தேசிய சட்டமன்றங்கள் கூட்டப்பட வேண்டும்.

உடனடியான ஒரு போர் நிறுத்தத்தைப் பிரேரேபிப்பதில், நாம் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்குப் பெரும்பணி ஆற்றியுள்ள நாடுகளின் வர்க்க உணர்வுடைய தொழிலாளிகளுக்கு வேண்டுதல் செய்கிறோம். சார்ட்டிஸ்டு இயக்கம் கண்ட பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். திரும்பத்திரும்ப நடை பெற்ற புரட்சி எழுச்சிகளில் தமது வர்க்க உணர்வின் வலிமையினை வெளிப்படுத்திய பிரான்சின் தொழிலாளிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தி, வலிமை மிகுந்த ஸ்தாபனங்களை நிறுவியுள்ள ஜெர்மனியின் தொழிலாளிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

மார்ச் 14ந் தேதிய அறிக்கையில்[8] நாம் வங்கி அதிபர்களை வீழ்த்த வேண்டும் என்று கோரினோம். ஆனால் நமது வங்கி அதிபர்களை வீழ்த்தாதது மட்டும் அல்ல, நாம் அவர்களுடன் கூட்டணி சேர்ந்தோம். இப்போது நாம் வங்கி அதிபர்களின் அரசாங்கத்தை வீழ்த்தியுள்ளோம்.

அரசாங்கங்களும் முதலாளி வர்க்கமும் தமது சக்திகளை ஒன்றிணைக்கச் சகல முயற்சியும் செய்து தொழிலாளிகள், விவசாயிகளின் புரட்சியை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க முயலும். ஆனால் மூன்றாண்டு காலப் போர் மக்கள் திரளுக்குப் போதிய படிப்பினை தந்தது. இதர நாடுகளில் இருக்கும் சோவியத் இயக்கம் மற்றும் கொலைகார வில்ஹெல்மின் ஜங்கர்களால்[9] நசுக்கப்பட்ட ஜெர்மன் கடற்படையாளர் கலகம்[10] அதற்கு நல்ல படிப்பினை. இறுதியாக நாம் ஆப்பிரிக்காவின் உள்பகுதிகளில் வாழவில்லை, மாறாக செய்தி

கள் விரைவில் பரவக் கூடிய ஐரோப்பாவில் வாழ்கிறோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தொழிலாளிகளின் இயக்கம் வெற்றி வாகை சூடும், அது சமாதானம் மற்றும் சோஷலிசத்திற்கான பாதை சமைக்கும். (நீடித்த கரவொலி.)

3

சமாதானம் பற்றிய அறிக்கை மீதான விவாதத்தைத் தொடர்ந்து ஆற்றிய முடிவுரை அக்டோபர் 26 (நவம்பர் 8)

இந்தப் பிரகடனத்தின் பொதுத் தன்மை குறித்து நான் எதுவும் விவரிக்கப் போவதில்லை. உங்களது காங்கிரஸ் நிறுவப்போகும் அரசாங்கம் முக்கியமல்லாத அம்சங்களைத் திருத்தலாம்.

சமாதானத்திற்கான நமது கோரிக்கைக்கு ஓர் இறுதி எச்சரிக்கையின் வடிவம் தரப்படுவதை நான் திடமாக எதிர்ப்பேன். ஓர் இறுதி எச்சரிக்கை நமது முழு லட்சியத் துக்குமே பேரபாயமாகித் தீரலாம். நாம் அதைக் கோர முடியாது. காரணம் ஏகாதிபத்திய அரசாங்கங்கள் விஷ யத்தில் நமது கோரிக்கைகளில் ஏற்படும் சில முக்கியமில் லாத மாற்றம், நமது இணக்கமின்மை காரணமாக சமாதா னத்திற்கான பேச்சுவார்த்தைகளில் இறங்குவது சாத்திய மில்லாது போய்விட்டது என்று சொல்வதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும்.

நமது வேண்டுகோளை எல்லா இடங்களுக்கும் அனுப்பி வைப்போம். அது எல்லோருக்கும் அறிவிக்கப்படும். நமது தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் முன்வைக்கும் நிபந்தனைகளை ஒளிமறைவு செய்தல் சாத்தியமல்ல.

நமது தொழிலாளிகள், விவசாயிகளின் புரட்சியை ஓசைப்படாது வைத்திருப்பது என்பது சாத்தியமல்ல. அது

வங்கி அதிபர்கள் மற்றும் நிலவுடைமையாளர் அரசாங்கத்தை வீழ்த்திவிட்டது.

அரசாங்கங்கள் ஓர் இறுதி எச்சரிக்கைக்குப் பதிலளிக்காமல் இருக்கலாம். ஆனால் நாம் வகுத்துமுன்வைத்துள்ள வாசகத்துக்குப் பதிலளித்தே தீர வேண்டும். தமது அரசாங்கங்கள் நினைப்பது என்ன என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்வார்களாக. நமக்கு இரகசியங்கள் எதுவும் வேண்டாம். நாட்டின் பொதுஜனக் கருத்தின் மேற்பார்வையின் கீழ் அரசாங்கம் எப்போதும் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

இறுதி எச்சரிக்கைகள் மீது நாம் விடாப்பிடியாக இருப்பதால், அவனுக்கு இன்னொரு அரசாங்கம் விரும்புவது என்ன என்று தெரியாத நிலையில், தொலைவில் உள்ள ஒரு குபேர்னியாவைச் சேர்ந்த விவசாயி என்ன சொல்வான்? அவன் கூறுவான்: தோழர்களே, வெவ்வேறு சமாதான நிபந்தனைகள் பிரேரேபிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதை நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்? அவற்றை நான் விவாதித்திருக்க முடியும், அவற்றைப் பரிசீலனை செய்திருக்க முடியும், எப்படிச் செயல்படுவது என்று அரசியல் நிர்ணய சபையில் இருக்கும் எனது பிரதிநிதிகளுக்குத் தெரிவித்திருக்க முடியும். அரசாங்கங்கள் ஒப்புக்கொள்ளாவிடில், நியாயமான நிபந்தனைகளுக்காக நான் புரட்சிகர முறையில் போராடத் தயாராக இருக்கிறேன். ஆனால் சில நாடுகளுக்கு அத்தகைய நிபந்தனைகள் இருக்கலாம் தாமே தொடர்ந்து போராடும்படி இந்நாடுகளின் அரசாங்கங்களுக்குப் பரிந்துரைக்க நான் தயாராக இருக்க முடியும். நமது கருத்துக்களின் முழுமையான நிறைவாக்கம் முதலாளித்துவ அமைப்பு முழுவதையும் வீழ்த்துவதையே முற்றுகப் பொருத்திருக்கிறது. இதைத்தான் விவசாயி எம்மிடம் கூறுவான். சில்லரை விஷயங்களில் மிகமிக விட்டுக்கொடாத போக்கில் இருந்ததாகக் குறை சொல்வான். நமக்குப் பிரதானமாக உள்ள காரியம் முதலாளி வர்க்கத்தின் மற்றும் அரசாங்கத்தின் தலைமையில் இருக்கும் அதன் முடியுடைய அல்லது முடி இல்லாத கொலை

யாளிகளின் எல்லா இழிதன்மையையும், கயமையையும் அம்பலப்படுத்துவதேயாகும்.

நமது விட்டுக்கொடாத போக்கின் பின்னல் புகலிடம் தேடவும், அவர்கள் ஏன் கொலைக்களத்துக்கு அனுப்பப் படுகின்றனர் என்பதற்கான காரணத்தை மக்களிடம் இருந்து மறைக்கவும், அரசாங்கங்களுக்கு ஒரு வாய்ப்பை நாம் கொடுக்கக் கூடாது கொடுக்க முடியாது. இது ஒரு சிறு துளியே, ஆனுல் முதலாளித்துவ அடிப்படுத்தல் என்ற கல்லை அரித்து அழிக்கும் இந்தச் சிறு துளியை நாம் நிராகரித்து விடக் கூடாது. ஓர் இறுதி எச்சரிக்கை நமது எதிராளிகளின் நிலையை எளிதாக்கிவிடும். நாம் எல்லா நிபந்தனைகளையும் மக்களுக்கு அறிவிப்போம். நமது நிபந்தனைகளைக் கொண்டு எல்லா அரசாங்கங்களையும் எதிரிடுவோம். அவை தமது மக்களுக்குப் பதில் கூறட்டும். முடிவு எடுப்பதற்காக எல்லா சமாதான யோசனைகளையும் அரசியல் நிர்ணய சபையிடம் சமர்ப்பிப்போம்.

தோழர்களே, நீங்கள் மிகவும் கவனமாகக் கருத்துச் செலுத்த வேண்டிய இன்னொரு விஷயம் இருக்கிறது. இரகசிய உடன்படிக்கைகள் வெளியிடப்பட வேண்டும். பிரதேசக் கைப்பற்றல்கள் மற்றும் இழப்பீட்டுத் தண்டத் தொகைகள் பற்றிய ஷரத்துக்கள் அகற்றப்பட வேண்டும். தோழர்களே, பல்வேறுன ஷரத்துக்கள் உள்ளன. கொள்ளைக்கார அரசாங்கங்கள் கொள்ளையடிப்பது குறித்துத் தம்மிடையே உடன்பாடுகளைச் செய்து கொண்டன என்பது மட்டும் அல்ல. ஆனுல் அவற்றுக்குள்ளே அவை பொருளாதார உடன்பாடுகளையும் நல்ல அண்டை உறவுகள் பற்றிய பல்வேறு ஷரத்துக்களையும் உள்ளடக்கி இருந்தன.

உடன்படிக்கைகளால் நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாது. உடன்படிக்கைகள் நம்மைச் சிக்கல் படுத்த இடந்தர மாட்டோம். கொள்ளை மற்றும் வன்முறை மீதான எல்லா ஷரத்துக்களையும் நாம் நிராகரிப்போம். ஆனுல் நல்ல அண்டை உறவுகளுக்கு வகை செய்யும் எல்லா ஷரத்துக்களையும் எல்லாப் பொருளாதார உடன்பாடுகளையும் நாம் வரவேற்போம். இவற்றை நம்மால் நிராகரிக்க

முடியாது. மூன்று மாதங்களுக்குப் போர்நிறுத்தத்தைப் பிரே ரேபிப்போம். நாம் இவ்வளவு நீண்ட காலத்தைத் தேர்ந் தெடுத்திருப்பதற்குக் காரணம் மக்கள் மிகவும் சோர்ந்து போயிருக்கிருர்கள், மூன்ருண்டு காலத்துக்கும் அதிகமாக நடைபெற்றுவரும் இந்த இரத்தவெறிக் கொலைக்களத்தில் இருந்து ஓய்வை விரும்புகிருர்கள். சமாதான நிபந்தனைகளை விவாதிக்கவும் நாடாளுமன்றமும் பங்குபற்றும் வகையில் தமது சித்தத்தை வெளியிடவும் மக்களுக்கு ஒரு வாய்ப் பளிக்கப்பட வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். இதற்குக் காலாவகாசம் தேவை. நாம் ஒரு நீடித்த போர் நிறுத்தத்தைக் கோருகிறேம். அதன் மூலம் இடைவிடாத படுகொலை என்ற கோரத்தில் இருந்து பதுங்கு குழிகளில் இருக்கும் படையாளிகளுக்குச் சற்றே ஓய்வு கிடைக்க வழி செய்யலாம். ஆனல் குறுகிய காலப் போர்நிறுத்தத்திற் கான யோசனைகளையும் நிராகரிக்க மாட்டோம். அவற்றைப் பரிசீலிப்போம். ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதங் களுக்கான போர்நிறுத்தம் செய்ய முன்வந்தாலும் அதை ஒப்புக்கொள்வது நமது கடமையாகும். மேலும் போர் நிறுத்தத்திற்கான நமது யோசனை ஓர் இறுதி எச்சரிக்கையின் வடிவில் இருத்தல் கூடாது. ஏனெனில் நமது விரோதிகள் நமது விட்டுக்கொடாத தன்மையைப் பயன்படுத்தி மக் களிடமிருந்து முழு உண்மையையும் மறைக்க இடம் தரக் கூடாது. இது ஓர் இறுதி எச்சரிக்கையின் வடிவில் இருக்கக் கூடாது. ஏனெனில் ஒரு போர்நிறுத்தத்தினை விரும் பாத அரசாங்கம் கொலைகாரத் தன்மை கொண்டதாகும். போர்நிறுத்தத்திற்கான நமது யோசனையை நாம் ஓர் இறுதி எச்சரிக்கை வடிவில் முன்வைக்காவிட்டால் அதன் மூலம் அரசாங்கங்கள் கொலைகாரத்தன்மையுடையவை என்பதை மக்களுக்குப் புலப்படுத்தலாம். அத்தகைய கொலைகாரர் களுடன் மக்கள் இணங்கிப் போக மாட்டார்கள். இறுதி எச்சரிக்கையைக் கையாளாமல் இருப்பது மூலம் நாம் பல வீனத்தைக் காட்டுகிறேம் என்பதாக ஆட்சேபம் எழுப்பப் படுகிறது. ஆனல் மக்களின் வலிமை பற்றிப் பேசும் போது எல்லா முதலாளித்துவப் போலிவாதங்களையும் அகற்றி எறிய

வேண்டிய காலம் வந்துவிட்டது. முதலாளித்துவக் கருத்துப் படி, ஏகாதிபத்திய அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிந்து மக்கள் கண் மூடித்தனமாகப் படுகொலையை நோக்கிச் செல்வதில் வலிமை இருக்கிறது. முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மக்கள் எங்கே தூக்கி எறியப்பட வேண்டும் என்று விரும்புகிறார்களோ அங்கு அரசாங்கப் பொறியமைவின் அதிகாரம் மூலம் அரசு மக்களை தூக்கி எறிவதற்கு முடிந்தால் மட்டுமே அந்த அரசு வலிமையுள்ளது என்று முதலாளி வர்க்கம் ஒப்புக் கொள்ளும். வலிமை பற்றிய எமது கருத்து வேறானது. மக்கள் அரசியல் உணர்வு பெற்று இருக்கும் போதுதான் அரசு வலிமையுள்ளதாகும் என்பது நமது கருத்து. மக்களுக்கு எல்லாம் தெரிந்திருந்து, அவர்கள் எல்லாவற்றைப் பற்றியும் அபிப்பிராயம் உருவாக்க முடிந்து, எல்லாவற்றையும் உணர்வுபூர்வமாகச் செய்ய இயலும் போதுதான் அரசு வலிமையுள்ளதாகும். சோர்வைப் பற்றி உண்மையைச் சொல்ல நாம் அஞ்ச வேண்டுவதில்லை. இன்று எந்த அரசு சோர்வடையாமல் இருக்கிறது, எந்த தேசம் இதைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசாமல் இருக்கிறது? இத்தாலியை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு இந்தச் சோர்வுத்தன்மை காரணமாக இந்தப் படுகொலையை நிறுத்தும்படிக் கோரி நீடித்த புரட்சிகர இயக்கமே நடந்தது. போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து ஜெர்மனியில் தொழிலாளர்களின் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடக்கவில்லையா? கொலைகார வில்ஹெல்மாலும் அவனது கையாட்களாலும் இரக்கமின்றி அடக்கப்பட்ட ஜெர்மன் கடற்படையினர் கலக எழுச்சிக்குக் காரணம் இந்தச் சோர்வுதானே! ஜெர்மனியில் மக்கள் சோர்வு பற்றியும் போரை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றியும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அந்நாடு போன்று இவ்வளவு அதிகக் கட்டுப்பாடுடைய ஒரு நாட்டில் இத்தகைய நிகழ்வுகள் ஏற்படுமானால் இதையே நாமும் பகிரங்கமாகச் சொல்ல அஞ்சத் தேவையில்லை. காரணம் இது உண்மை, நமது நாட்டுக்கும் சரி, போரிடும் எல்லா நாடுகளுக்கும் போரிடாத நாடுகளுக்கும் கூட இது உண்மை.

4

நிலம் பற்றிய அறிக்கை
அக்டோபர் 26 (நவம்பர் 8)

நிலப்பிரச்சினையைத் தெட்டத்தெளிவாக முன்வைக்க வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதை புரட்சி நிருபித்து விட்டது, நிதர்சனப்படுத்திக் காட்டி விட்டது என்று நாம் நிலைநாட்டுகிறோம். இரண்டாவது, அக்டோபர் புரட்சி, ஆயுதமேந்திய எழுச்சி வெடித்ததானது விவசாயி களிடம் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக நிரூபிக்கிறது. வீழ்த்தப்பட்ட அரசாங்கமும் மென் ஷிவிக் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின்[11] சமரசப் படுத்தும் கட்சிகளும் பல்வேறு சாக்குப் போக்குகளால் நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தொடர்ந்து ஒத்திப் போட்டதன் மூலம் பெரும் குற்றம் இழைத்து விட்டன. இதன் மூலம் நாட்டில் பொருளாதாரக் குழப்பத்தையும் விவசாயிகளின் கலகத்தையும் கொண்டுவந்து விட்டன. நாட்டுப் புறத்தில் கலவரம் மற்றும் அராஜகம் பற்றி அவை பேசுவதில் பொய் தொனிக்கிறது. அது பேடித் தனமானது ஏமாற்றும் தன்மையுள்ளது. அறிவான நடவடிக்கைகளால் கலவரங்களும் அராஜகமும் எங்கேயாவது எப்போதாவது ஏற்பட்டது உண்டா? அரசாங்கம் அறிவாகச் செயல்பட்டிருக் குமானால், அதன் நடவடிக்கைகள் ஏழை விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்திருக்குமானால், விவசாயி மக்கள் திரளின் மத்தியில் அமைதி இன்மை ஏற்பட்டிருக்குமா? அவ்க்சேன்தியெவ், டான் சோவியத்துகளும் அங்கீகரித்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எல்லாம் விவசாயிகளின் நலன்களுக்கு விரோதமாக இருந்தன, அவர்களைக் கலகம் செய்ய நிர்ப்பந்தித்தன.

கலகத்தைத் தூண்டிவிட்ட பிறகு அரசாங்கம் கலவரம் பற்றியும் அராஜகம் குறித்தும் கூக்குரல் இடுகிறது. அவற் றுக்கு அதுவே பொறுப்பாளி. இக்கலகத்தை இரத்தம் சிந்தி

யும் இரும்பு போன்ற அடக்குமுறையாலும் நசுக்க இருந்தது. ஆனுல் புரட்சிகரப் படையாளிகள், கடற்படையினர் மற்றும் தொழிலாளரின் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சி யால் அதுவே வெள்ளத்திலடித்துச் செல்லப்பட்டது. தொழி லாளர், விவசாயிகள் அரசாங்கத்தின் முதல் கடமை நிலப் பிரச்சினைக்கு நிச்சயமாயும் தீர்வு காண்பதாகும். இது பெரு மளவிலான ஏழை விவசாயி மக்கள் திரளை அமைதிப்படுத் தும் திருப்திப்படுத்தும். உங்கள் சோவியத் அரசாங்கம் பிறப் பிக்க வேண்டிய அரசாணையின் ஷரத்துக்களைப் படிக்கிறேன். இந்த அரசாணையின் ஒரு ஷரத்தில் விவசாயிகள் பிரதிநிதி களின் வட்டார சோவியத்துகளின் 242 கட்டளைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட நிலக் கமிட்டிகளுக்கான கட்டளை உருவகம் பெற்றுள்ளது.

நிலம் பற்றிய அரசாணை

1) நிலவுடைமை தனி உரிமை எவ்விதமான இழப் பீடும் இன்றி உடனே ஒழிக்கப்படுகிறது.

2) நிலப்பிரபுக்களின் நிலங்கள், மன்னர் குடும்ப உறுப் பினர்களின் நிலங்கள், மடங்கள் சமயநிறுவனங்களுக்கு உரிய தான எல்லா நிலங்களும் அவற்றின் எல்லாக் கால்நடை கள், விவசாயக் கருவிகள், கட்டடங்கள் மற்றும் அவை சம் பந்தப்பட்ட சகலமும் சகிதம் வோலஸ்து நிலக் கமிட்டிகள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயெஸ்து சோவியத்து கள் வசம் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது வரை யில் ஒப்படைக்கப்படும்.

3) இது முதல் கொண்டு மக்கள் முழுமைக்கும் சொந்த மாகிவிட்ட பறிமுதல் செய்யப்பட்ட உடைமைகளுக்குச் சேதம் விளைப்பது கடும் குற்றம் என்று பிரகடனம் செய்யப் படுகிறது. இது புரட்சிகர நீதிமன்றங்களின் தண்டனைக்கு உட்படும். நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப் படும் பொழுது மிகவும் கண்டிப்பான ஒழுங்கைக் கடைப் பிடிக்கவும் எந்த நிலங்கள் எந்த அளவுக்குப் பறிமுதல்

செய்யப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கவும் பறிமுதல் செய்யப்பட்ட எல்லாச் சொத்துக்களைப் பற்றிய ஒரு விளக்கமான விவரப்பட்டியல் தயாரிக்கவும் மக்களுக்கு உடைமை மாற்றம் செய்யப்பட்டதான எல்லா நிலங்களையும் அவற்றின் கட்டடங்கள் கருவிகள் கால்நடைகள் விளைபொருள் இருப்பு அனைத்தையும் மிகவும் கண்டிப்பாக புரட்சிகரமான வழியில் பாதுகாப்பதற்கும் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயெஸ்து சோவியத்துகள் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

4) 242 வட்டார விவசாயிகள் கட்டளைகளின் அடிப்படையில் இஸ்வேஸ்தியா வ்ஸேரொசிய்ஸ்கவோ சவேத்தா க்ரெஸ்தியான்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ் (''விவசாயிகள் பிரதிநிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் செய்திகள்'')[12] என்னும் பத்திரிகையின் ஆசிரியர் குழுவினர்களால் தொகுக்கப்பட்ட, இந்தப் பத்திரிகையின் 88ஆவது இதழில் (பெத்ரோகிராத், ஆகஸ்டு 19, 1917) வெளியிடப்பட்டுள்ள பின்வரும் விவசாயிகள் கட்டளை, நிலச்சீர்திருத்தம் பற்றி அரசியல் நிர்ணய சபை இறுதி முடிவு எடுக்கும் வரை இந்த மாபெரும் நிலச்சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான வழி காட்டியாக எல்லா இடங்களிலும் பயன்பட வேண்டும்.

நிலம் பற்றிய விவசாயிகள் கட்டளை

''நிலப்பிரச்சினை அதன் முழு அளவில் பொதுஜன அரசியல் நிர்ணய சபையின் மூலம் மட்டுமே தீர்க்கப்பட முடியும்.

''நிலப்பிரச்சினைக்கு உரிய மிகவும் நியாயமான தீர்வு பின்வருமாறு:

''1) நிலவுடைமை தனி உரிமை என்றென்றைக்குமாக ஒழிக்கப்படும். நிலத்தை விற்கவோ, வாங்கவோ, குத்தகைக்கு விடவோ, அடகு வைக்கவோ அல்லது வேறுவழிகளில் பராதீனப்படுத்தவோ முடியாது.

''அரசு, மன்னர், மன்னர் குடும்ப உறுப்பினர்கள், மடம், சமயநிறுவனம், ஆலை, தலைமுறை,[13] தனியார், பொது,

விவசாயிகள் ஆகிய எதற்குச் சொந்தமாக இருந்தாலும் சரி தனி, பொது விவசாயி ஆகியோருக்குக் கட்டுப்பட்ட உடைமையாக இருந்தாலும் சரி எல்லா நிலமும் இழப்பீடு எதுவும் இன்றிப் பறிமுதல் செய்யப்படும். அனைத்து மக்களின் உடைமையாகப் பிரகடனம் செய்யப்படும். அது பாடுபடும் மக்களுக்குச் சொந்தமாகும்.

''இந்த உடைமைப் புரட்சியால் பாதிக்கப்படும் நபர்கள் புதிய வாழ்க்கை நிலைமைகளுக்குத் தகவமைத்துக் கொள்வதற்கு அவசியமான காலம் வரை மட்டுமே பொது உதவிக்கு உரியவர்கள் என்று கருதப்படுவார்கள்.

''2) கனிஜ மூலம், எண்ணெய், நிலக்கரி, உப்பு இத்தியாதி சுரங்கச் செல்வம் அனைத்தும், அரசு முக்கியத்துவமுடைய எல்லாக் காடுகளும் நீர் ஆதாரங்களும் அரசின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும். சிறிய நீரோடைகள், ஏரிகள், காடுகள் ஆகியவை கம்யூன்களின் பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும், இவற்றை வட்டார ஸ்தல சுயாட்சி அமைப்புகள் நிர்வாகம் செய்யும்.

''3) உயர் மட்டமான விஞ்ஞானமுறை சாகுபடி நடத்தப்பட்டுவரும்—பழத் தோட்டங்கள், தோட்டப் பண்ணைகள், விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், வெப்ப மூடு தோட்டங்கள் போன்ற நிலங்கள் பங்கிடப்பட மாட்டா, மாருக மாதிரிப் பண்ணைகளாக மாற்றப்படும். இவை அரசு அல்லது கம்யூன்களின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும். இது இத்தகைய நிலங்களின் அளவு, முக்கியத்துவம் ஆகியவற்றைச் சார்ந்து இருக்கும்.

''நகரங்களிலும் கிராமங்களிலும் பழத் தோட்டங்கள், காய்கறித் தோட்டங்களைக் கொண்ட குடும்ப நிலம் அவற்றின் இப்போதைய சொந்தக்காரர்களின் பயன்பாட்டுக்கே ஒதுக்கப்படும். இந்தக் குடும்ப நிலங்களின் அளவும் அவைகளைப் பயன்படுத்துவதற்காக வசூலிக்கப்படும் வரியின் அளவும் சட்டத்தால் வரையறுக்கப்படும்.

''4) பொலிகுதிரைப் பண்ணைகள், அரசாங்கத்துக்கும் தனியாருக்கும் சொந்தமான மரபுவழிக் கால்நடைகள், கோழிப் பண்ணைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு மக்கள் முழுமையின் உடைமையாக்கப்படும் இத்தகைய பண்ணைகளின் அளவு மற்றும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ப அரசு அல்லது கம்யூனின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும்.

''இழப்பீடு பற்றிய பிரச்சினை அரசியல் நிர்ணய சபையால் பரிசீலிக்கப்படும்.

''5) பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களில் இருந்து

எல்லாக் கால்நடைகளும் விவசாயக் கருவிகளும் அவற்றின் அளவு மற்றும் முக்கியத்துவத்தைச் சார்ந்து அரசு அல்லது கம்யூனின் முற்ற முழுமையான பயன்பாட்டுக்கு ஒதுக்கப் படும், இதற்கு இழப்பீடு எதுவும் செலுத்தப்பட மாட் டாது.

''ஆகச் சொற்பமான நிலம் வைத்திருக்கும் விவசாயி களின் விவசாயக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட மாட்டா.

''6) நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை ருஷ்ய அரசின் எல்லாக் குடிமக்களுக்கும் (ஆண், பெண் என்ற பாகுபா டின்றி) நிலத்தைத் தமது சொந்த உழைப்பு, தமது குடும் பத்தாரின் உதவி அல்லது பங்காளி சேர்த்துக் கொண்டு பயிர் செய்ய விரும்பும் அனைவருக்கும் வழங்கப்படும். ஆனால் அவர்கள் அதில் பயிர் செய்ய முடியும் காலம் வரை மட்டுமே வழங்கப்படும். தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்துவது அனுமதிக்கப்பட மாட்டாது.

''கிராமக் கம்யூன் உறுப்பினர் ஒருவர் இரண்டாண்டு காலம் வரையில் தற்காலிக உடல்நலமின்மையால் ஏலாமல் இருக்கும் பட்சத்தில் இந்தக் காலத்தில் கிராமக் கம்யூன், அவர் மீண்டும் வேலை செய்ய முடியும் வரையில் கூட்டாக இந்த நிலத்தில் பயிர் செய்யும்.

''முதுமை அல்லது உடல்நலமின்மையால் நிரந்தரமாக ஏலாதுபோய் நிலத்தில் தாமே பயிர் செய்ய முடியாமல் போய்விட்ட விவசாயிகள் அந்த நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை இழந்து விடுவார்கள். இதற்குப் பதிலாக அரசி டம் இருந்து பென்ஷன் பெறுவார்கள்.

''7) நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை சமத்துவ அடிப் படையில் இருக்கும். வட்டார நிலைமைகளுக்கு ஏற்ப, உழைப்புத் தரம் அல்லது பிழைப்பூதியத் தரத்தைப் பொ ருத்து உழைக்கும் மக்களிடை நிலம் பகிர்ந்தளிக்கப்படும்.

''நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையின் வடிவங்களில் அறவே எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. ஒவ்வொரு தனிப் பட்ட கிராமம் அல்லது குடியிருப்பும் செய்யும் முடிவுப்படி இவை குடும்ப நிலம், பண்ணை நிலம், கம்யூன் நிலம் அல்லது கூட்டுறவுநிலம் எதுவாக வாயினும் இருக்கலாம்.

''8) பராதீனப்படுத்தப்படும் நிலம் அனைத்தும் தேசிய நில சேமத்தில் அடங்கும். விவசாயிகளிடையே இதைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை சமூக அந்தஸ்து வேறுபாடுகள் எதுவும் இல்லாத, ஜனநாயக முறையில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள, கிராம மற்றும் நகரக் கம்யூன்கள் முதல் மத்திய வட்டார அமைப்புகள் வரை வட்டார மற்றும் மத்திய ஸ்தல சுயாட்சி அமைப்புகள் நிறைவேற்றுகின்றன.

''இந்த நில சேமம், மக்கள் தொகைப் பெருக்கம், உற்பத்தித் திறன் அதிகரிப்பு, சாகுபடியில் விஞ்ஞானத் தரத்தின் ஏற்றம் ஆகியவற்றைச் சார்ந்து அடிக்கடி மறுபங்கீடு செய்யப்படும்.

''ஒதுக்கப்பட்ட நிலங்களின் வரம்புகள் மாற்றப்படும் போது ஒதுக்கப்பட்ட நிலத்தின் மையப்பகுதி அப்படியே இருக்கும்.

''கம்யூனை விட்டு விலகும் உறுப்பினர்களின் நிலம் நிலச் சேமத்தில் மீண்டும் போய்ச் சேரும்; இத்தகைய நிலங்களைப் பயன்படுத்த அவ்வாறு விலகிச் சென்ற உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்களுக்கோ அல்லது அவர்கள் நியமனம் செய்த நபர்களுக்கோ சாதகமான உரிமை வழங்கப்படும்.

''நிலச் சேமத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் திருப்பித்தரப்பட்ட பொழுது முழுதும் பயன்படுத்தப்படாத அளவுக்கு நிலத்தில் போடப்பட்ட கனி உரம் மற்றும் இதர மேம்பாடுகளுக்கான செலவு ஈடு செய்யப்படும்.

''ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் கிடைத்துள்ள சேம நிலம் வட்டார மக்களின் தேவைக்குப் போதாமல் இருக்குமானுல் உபரியாக இருக்கும் மக்கள் வேறிடத்தில் குடியிருத்தப்படுவர்.

''இந்த மறுகுடியிருத்தலை ஏற்பாடு செய்யும் பொறுப்பை அரசு ஏற்கும். இதற்காக வேண்டிய செலவுகளையும், கருவிகளை வழங்குவதற்கான செலவுகளையும் அது ஏற்றுக் கொள்ளும்.

''மறுகுடியிருத்தல் பின்வரும் வரிசைக் கிராமத்தில் இருக்கும்: மறுகுடியிருப்பை விரும்பும் நிலமற்ற விவசாயிகள், பிறகு விஷமத்தனமான வழக்கங்களைக் கொண்ட கம்யூன் உறுப்பினர்கள், துறந்தோடிகள் இத்தியாதி—இறுதியாக இது சீட்டுக்குலுக்கியோ அல்லது உடன்பாட்டின் மூலமோ செய்யப்படும்.''

இந்தக் கட்டளையின் உள்ளடக்கம் முழுவதும், அகில ருஷ்யாவிலுமுள்ள மிகப் பெரும்பான்மையான வர்க்க உணர்வுடைய விவசாயிகளின் சித்தத்தை வெளியிடுகிறது என்ற முறையில் இடைக்காலச் சட்டமாகப் பிரகடனம் செய்யப்படுகிறது. இது அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும் வரையில் சாத்தியமான அளவுக்கு உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். இதன் சில ஷரத்துக்கள் விவசாயிகள்

பிரதிநிதிகளின் உயெஸ்து சோவியத்துகள் நிர்ணயிப்பது போன்று உரிய முறையில் படிப்படியாகச் செயல்படுத்தப் படும்.

5) சாதாரண விவசாயிகள் மற்றும் சாதாரண கசாக்குகளின்[14] நிலங்கள் பறிமுதல் செய்யப்பட மாட்டா.

இந்த அரசாணையும் கட்டளையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களால் உருவரை செய்யப்பட்டதாகக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. அதனுல் என்ன? யார் உருவரை செய்தால் தான் என்ன? ஒரு ஜனநாயக அரசாங்கம் என்ற முறையில் நாம் அதோடு வேறுபட்டாலும் கூட மக்கள் திரளின் முடிவைப் புறக்கணிக்க முடியாது. அனுபவம் என்ற நெருப்பில், இந்த அரசாணையை நடைமுறையில் பயன்படுத்தி வட்டாரங்களில் இதை நிறைவேற்றுவது மூலம் உண்மை எங்கே காணக் கிடக்கிறது என்பதை விவசாயிகள் தாமாகவே உணர்வார்கள். விவசாயிகள் தொடர்ந்து சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் பின்பற்றிய போதிலும், இந்தக் கட்சிக்கு அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் ஓட்டுக்களில் பெரும்பான்மையைத் தந்த போதிலும்—அதனுல் என்ன? என்றே நாம் கூறுவோம். அனுபவம் சிறந்த ஆசான். அது யார் சரி என்பதைப் புலப்படுத்தும். விவசாயிகள் இப்பிரச்சினைக்கு ஒரு முனையில் இருந்து தீர்வு காணட்டும் நாம் இன்னெரு முனையில் இருந்து தீர்வு காணுவோம். புரட்சிகரப் படைப்பாற்றல் பணியின் பொதுவான நீரோட்டத்திலும், புதிய அரசு வடிவங்களை விரிவிளக்கம் செய்வதிலும் அனுபவம் நம்மை ஒன்றுசேரும்படிக் கட்டாயப்படுத்தும். நாம் அனுபவத்தால் வழி நடத்தப்பட வேண்டும். மக்கள் திரளின் படைப்பாற்றல் திறன்களுக்கு முழுமையான சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும். ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியால் வீழ்த்தப்பட்ட பழைய அரசாங்கம் பழைய, மாறுதல் அற்ற ஜாராட்சி அதிகார வர்க்கத்தின் உதவியுடன் நிலப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றது. ஆனுல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மாருக அதிகார வர்க்கம் விவசாயிகளை எதிர்த்

துப் போராடியது. நமது புரட்சியின் எட்டு மாதங்களில் விவசாயிகள் சிலவற்றை அறிந்து கொண்டிருக்கிறார்கள். நிலப்பிரச்சினைகள் அனைத்துக்கும் அவர்களே தீர்வு காண விரும்புகிறார்கள். எனவே இந்த நகல் சட்டத்திற்கான எல்லாத் திருத்தங்களையும் நாம் எதிர்க்கிறோம். இதில் விவரங்களை நாங்கள் விரும்பவில்லை. நாம் எழுதுவது ஓர் அரசாணை, ஒரு செயல் வேலைத்திட்டம் அல்ல. ருஷ்யா மிகவும் பரந்தது, அதில் வட்டார நிலைமைகள் வேறுபடுகின்றன. நாம் செய்வதைவிடவும் சிறப்பாகவும் சரியாகவும் விவசாயிகள் தாமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் இதை நமது உணர்வில் செய்கிறார்களா அல்லது சோஷலிஸ்டு-புரட்சியாளர் வேலைத் திட்டத்தின் உணர்வில் செய்கிறார்களா என்பது இங்கு முக்கியம் அல்ல. நாட்டுப் புறத்தில் நிலவுடைமையாளர்கள் இல்லை, எல்லாப் பிரச்சினைகளையும் அவர்கள் தாமே தீர்க்க வேண்டும், தாமே தமது வாழ்க்கையை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விவசாயிகளுக்கு உறுதியான உத்தரவாதம் தரப்பட வேண்டும். (பலத்த கரவொலி.)

5

தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் அமைப்பது பற்றிய முடிவு

தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் அகில ருஷ்யக் காங்கிரஸ் தீர்மானிப்பதாவது:

அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும் வரை, நாட்டை ஆளுவதற்கு மக்கள் கமிசார்களின் கவுன்சில் என்று அழைக்கப்படும் தொழிலாளிகள், விவசாயிகளின் இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவோம். அரசுச் செயல்பாடுகளின் தனிப்பட்ட கிளைகளின் நிர்வாகம் விசேஷ கமிஷன்களிடம் ஒப்

படைக்கப்படும். அவைகளின் உறுப்பினர்கள் காங்கிரசால் அறிவிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் நிறைவேற்றப்படுவதை உத்தரவாதம் செய்வர். அவர்கள் ஆண் பெண் தொழிலாளிகள், கடற்படையாளிகள், படையாளிகள், விவசாயிகள், அலுவலக ஊழியர்களின் வெகுஜன அமைப்புகளுடன் மிகவும் நெருக்கமான தொடர்பு பூண்டு வேலை செய்வார்கள். அரசாங்க அதிகாரம் இந்தக் கமிஷன்களின் தலைவர்கள் அடங்கிய ஒரு குழுவிடம் அதாவது மக்கள் கமிசார்களின் கவுன்சிலிடம் வழங்கப்படும்.

மக்கள் கமிசார்களின் செயல்பாடுகள் மீதான கண்காணிப்பும், அவர்களை மாற்றீடு செய்யும் உரிமையும், தொழிலாளர்கள், விவசாயிகள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் அகில ருஷ்ய காங்கிரசின், அதன் மத்திய நிர்வாகக் கமிட்டியின் அதிகாரத்துக்குட்பட்டவை.

தற்போது மக்கள் கமிசார்களின் கவுன்சில் பின்வருமாறு அமையும்:

கவுன்சிலின் தலைவர்—விளதீமிர் உல்யானவ் (லெனின்);

உள்துறை விவகார மக்கள் கமிசார்—அ. இ. ரீக்கவ்;

விவசாயத் துறை மக்கள் கமிசார்—வி. பா. மில்யூத்தின்;

தொழிலாளர் நல மக்கள் கமிசார்—அ. க. ஷ்லியாப்னிக்கோவ்;

சேனை, கடற்படை விவகாரம்—வி. அ. அவ்சேயென்கோ (அந்தோனவ்), நி. வ. க்ரிலென்கோ மற்றும் பா. எ. திபென்கோ கொண்ட கமிட்டி;

வாணிகம், தொழில்துறை விவகார மக்கள் கமிசார்—வி. பா. நகீன்;

கல்வித்துறை மக்கள் கமிசார்—அ. வ. லுனச்சார்ஸ்கி;

நிதித்துறை மக்கள் கமிசார்—இ. இ. ஸ்குவர்த்ஸோவ் (ஸ்தெபானவ்);

அயல்துறை விவகார மக்கள் கமிசார்—லெ. த. பிரன்ஷ்டைன் (திரோத்ஸ்கி);

நீதித்துறை மக்கள் கமிசார்—கி. இ. அப்போக்கவ் (லோமவ்);

உணவுத்துறை மக்கள் கமிசார்—இ. அ. தெயொட ரோவிச்;

தபால், தந்தித்துறை மக்கள் கமிசார்—நி. அவீலவ் (கிளேபவ்);

தேசிய இனங்கள் விவகாரத்துறை தலைவர்—இ. வி. ஜூகஷ்வீலி (ஸ்தாலின்).

ரயில்வேத்துறை மக்கள் கமிசார் பதவி தற்காலிகமாகக் காலியாக வைக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 26 (நவம்பர் 8), 1917

தொழிலாளிகள், படையாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு! வேண்டுகோள் ரபோச்சிய்-இ-சொல்தாத் *செய்தித்தாளின் இதழ்9, அக்டோபர் 26 (நவம்பர் 8), 1917ல் வெளியிடப்பட்டது;* சமாதானம் பற்றிய அறிக்கையும், நிலம் பற்றிய அறிக்கையும், சமாதானம் பற்றிய அறிக்கை மீதான விவாதத்தைத் தொடர்ந்து ஆற்றிய முடிவுரையும் பிராவ்தா, *இதழ் 171லும்* இஸ்வேஸ்தியா, *இதழ் 209லும், நவம்பர் 10 (அக்டோபர் 28) 1917ல்* வெளியிடப்பட்டன; சமாதானம் பற்றிய அரசாணை பிராவ்தா, *இதழ் 170லும்* இஸ்வேஸ்தியா, *இதழ் 208லும், நவம்பர் 9 (அக்டோபர் 28), 1917லும்,* நிலம் பற்றிய அரசாணை பிராவ்தா, *இதழ் 171 மற்றும்* இஸ்வேஸ்தியா, *இதழ் 209லும், நவம்பர் 10 (அக்டோபர் 28), 1917லும்,* தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் அமைப்பது பற்றிய முடிவு ரபோச்சிய்-இ-சொல்தாத் *இதழ் 10ல், அக்டோபர் 27 (நவம்பர் 9), 1917லும்* வெளியிடப்பட்டன

நூல் திரட்டு, *தொகுதி 35, பக்கங்கள் 7-29*

தொழிலாளர் கண்காணிப்பு பற்றிய நகல் ஒழுங்குமுறை விதிகள்[15]

1) (மொத்தமாய்) ஐந்து தொழிலாளிகள் அல்லது ஐந்து அலுவலக ஊழியர்களுக்குக் குறையாமல் வேலைக்கு அமர்த்தியுள்ள, அல்லது ஆண்டுக்கு 10,000 ரூபிள்களுக்குக் குறையாத பணப் புரள்வு உடையதான, எல்லாத் தொழிற் துறை, வாணிக, வங்கி, விவசாய மற்றும் இதர நிறுவனங்களில், உற்பத்தி, சரக்கு இருப்பு, எல்லா உற்பத்திப் பண்டங்களையும் மூலப் பொருட்களையும் கொள்முதல் செய்வது, விற்பனை செய்வது ஆகியவற்றின் மீது தொழிலாளர் கண்காணிப்பு கொண்டுவரப்படும்.

2) தொழிலாளர் கண்காணிப்பு ஒரு நிறுவனத்தின் எல்லாத் தொழிலாளர் மற்றும் அலுவலக ஊழியர்களால் செயல்படுத்தப்படும். அதை அனுமதிக்கும் அளவுக்கு நிறுவனம் சிறியதாக இருந்தால் நேரடியாக செயல்படுத்தப்படும். அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அமல் செய்யப்படும். இப்பிரதிநிதிகளை பொதுக் கூட்டங்களில் உடனடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இக்கூட்டத்தில் தேர்தல்கள் பற்றிய குறிப்பேடுகள் எடுக்கப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் அரசாங்கத்துக்கும், தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் வட்டார சோவியத்துகளுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.

3) தொழிலாளிகள், அலுவலக ஊழியர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அனுமதி வழங்கப்பட்டால் அல்லாமல் அரசு முக்கியத்துவமுடைய ஒரு நிறுவனம்

அல்லது தொழில்துறை நிறுவனத்தின் வேலையை நிறுத்து வதோ (ஷரத்து 7ஐப் பார்க்க) அல்லது அதன் நடப்பில் ஏதேனும் மாறுதல்கள் செய்வதோ கறாராயும் தடை செய்யப்படும்.

4) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எல்லா கணக்கு ஏடுகள் தஸ்தாவேஜுகளையும் பார்க்கவும், மூலப் பொருட்கள், கருவிகள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் எல்லா பண்டசாலைகள் சேமிப்புகளையும் எவ்வித விதிவிலக்கும் இன்றிச் சென்று பார்க்கவும் வாய்ப்புடையவர்களாவர்.

5) தொழிலாளர், அலுவலக ஊழியர் பிரதிநிதிகளின் முடிவுக்கு நிறுவன உடைமையாளர்கள் கட்டுப்பட வேண்டும். இம்முடிவுகளைத் தொழிற்சங்கங்கள் அவற்றின் காங்கிரசுகளினுல் மட்டுமே நீக்கம் செய்ய முடியும்.

6) அரசு முக்கியத்துவம் உடைய எல்லா நிறுவனங்களிலும் எல்லா உடைமையாளர்களும், தொழிலாளர் கண்காணிப்பை அமல் செய்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர், அலுவலக ஊழியர் பிரதிநிதிகள் எல்லோரும் மிகவும் கறாரான ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணிக்காக்கவும், நிறுவன உடைமையைப் பாதுகாக்கவும் அரசுக்குப் பொறுப்பாளிகளாவர். கடமையில் கவனமின்மை, இருப்புகளை ஒளித்து வைத்தல், கணக்குகளை மறைத்தல் ஆகிய குற்றங்களைச் செய்யும் நபர்கள் தண்டிக்கப்படுவார்கள். அவர்களது சொத்து முழுதும் பறிமுதல் செய்யப்படும், ஐந்தாண்டுகள் வரை சிறைத் தண்டனை அளிக்கப்படும்.

7) அரசு முக்கியத்துவமுடைய நிறுவனங்கள் என்பதன் பொருள், நாட்டுத் தற்காப்புக்காக வேலை செய்யும் எல்லா நிறுவனங்கள் அல்லது மக்கள் திரளின் வாழ்க்கைக்கு அவசியமான பொருட்களை உற்பத்தி செய்வதுடன் தொடர்புடைய நிறுவனங்கள் என்பதாகும்.

8) தொழிலாளர் கண்காணிப்புப் பற்றி மேலும் விரிவான விதிகளைத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் வட்டார சோவியத்துகளும் ஆலைக் கமிட்டிகள், அலுவலக ஊழியர்

கமிட்டிகள் ஆகியவற்றின் மாநாடுகளும் (இக்கமிட்டிகளின் பிரதிநிதிகளின் பொதுக் கூட்டங்களில்) தயாரிக்கும்.

அக்டோபர் 26 அல்லது 27 (நவம்பர் 8 அல்லது 9), 1917ல் எழுதப்பட்டது

லெனின் நூல் திரட்டு, தொகுதி 22ல், இரண்டாம் மூன்றும் ருஷ்யப் பதிப்புகளில், 1929ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 35, பக்கங்கள்30-31

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் கம்பியில்லாத் தந்திச் செய்தி அக்டோபர் 30 (நவம்பர் 12) 1917

எல்லோருக்கும் அறிவிப்பதாவது,

சோவியத்துகளின் அகில ருஷ்ய காங்கிரஸ் ஒரு புதிய சோவியத் அரசாங்கத்தை நிறுவியிருக்கிறது. கேரென்ஸ்கியின் அரசாங்கம் வீழ்த்தப்பட்டு விட்டது, கைது செய்யப்பட்டுள்ளது. கேரென்ஸ்கி ஓடிப் போய்விட்டார். எல்லா நிறுவனங்களும் சோவியத் அரசாங்கத்தின் கரங்களில் உள்ளன. அக்டோபர் 25ந் தேதி சொந்தப் பிணையின் மீது விடுவிக்கப்பட்ட ஜங்கர்களின் (ராணுவப் பள்ளி மாணவர்களின்)[16] கலகம் அக்டோபர் 29ந் தேதி வெடித்தது. அதே நாளில் அந்தக் கலகம் அடக்கப்பட்டது. கேரென்ஸ்கியும் சாவின்கவும் ஜங்கர்களுடனும் கசாக்குகளில் ஒரு பகுதியுடனும் சேர்ந்து கொண்டு கள்ளத் தனமாக ஜார்ஸ்கயே செலோவுக்குத்[17] தப்பி ஓடி விட்டார்கள். பெத்ரோகிராத் மீது ஏற்பட்டுள்ள புதிய கர்னீலவ் தாக்குதலை அடக்க சோவியத் அரசாங்கம் படைகளைத் திரட்டியிருக்கிறது. கவசப் போர்க்கப்பலான''ரிஸ்பூப்லிக்கா''(''குடியரசு'') தலைமையிலான கடற்படை தலைநகருக்கு வரும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. கேரென்ஸ்கியின் ஜங்கர்களும் கசாக்குகளும் ஊசலாடுகின்றனர். கசாக்குகள் ஏமாற்றப்பட்டுள்ளனர், உண்மையான விவகாரங்களை அவர்கள் உணரும் பட்சத்தில் அவர்கள் சுடுவதற்கு நிச்சயம் மறுப்பார்கள் என்று கேரென்ஸ்கியின் முகாமில் இருந்து வந்துள்ள கைதிகள் நம்மிடம் உறுதியாகக் கூறுகிறார்கள். சோவியத் அரசாங்கம் இரத்தம் சிந்தலைத் தவிர்க்க எல்லா முயற்சிகளும் செய்து வருகிறது. இரத்தம் சிந்தலைத் தவிர்க்க முடியாவிட்டால்,

கேரென்ஸ்கியின் படைப் பிரிவுகள் சுடுவதற்குத் தொடங்கு மானுல் இந்தப் புதிய கேரென்ஸ்கி-கர்னீலவ் போர்ச் செயலை தாட்சண்யம் இன்றி அடக்குவதற்கு அரசாங்கம் தயங்காது.

உங்களுக்குத் தகவல் தரும் முறையில் ஏற்கெனவே கூடிக் கலந்துவிட்ட சோவியத்துகளின் காங்கிரஸ் இரண்டு முக்கியமான அரசாணைகளை ஏற்றுக் கொண்டது என்பதை அறிவிக்கிறோம்: 1) நிலப்பிரபுக்களின் எல்லா நிலங்களையும் விவசாயிகள் கமிட்டிகளுக்கு உடனடி உடைமை மாற்றம் செய்வது பற்றி; 2) ஒரு ஜனநாயக சமாதானத்திற்கான பிரேரணை பற்றி.

சோவியத் அரசாங்கத்தின் தலைவர்

விளதீமிர் உல்யானவ் (லெனின்)

இஸ்வேஸ்தியா, *இதழ் 212,*
அக்டோபர் 31, 1917 மற்றும்
கஸேத்தா வ்ரேமென்னவோ
ரபோச்சியோ-இ-க்ரெஸ்தியான்ஸ்
கவோ ப்ரவீதெல்ஸ்துவா, *இதழ் 2,*
அக்டோபர் 30 (நவம்பர் 12), 1917

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கம் 41

ரு. ச. ஐ. தொ. க. (போ.) இன் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் ஆற்றிய உரைகள் நவம்பர் 1 (14) 1917

குறிப்பேடுகள்

1

காமெனெவின் கொள்கையை உடனே தடுத்து நிறுத்த வேண்டும் என்று தோழர் லெனின் கருதுகிருர். ரயில்வேத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்பதற்கு இடமே இல்லே.[18] மாஸ்கோவுக்கு ராணுவப் படைகளே அனுப்ப வேண்டும். ரயில்வேத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியைப் பற்றிய தீர்மானத்தை முன்வைக்கிருர். இக்கமிட்டி சோவியத்தில் பிரதிநிதித்துவம் பெறவில்லே. அதில் அதைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. சோவியத்துகள் சுயவிருப்பமான அமைப்புகள், ஆனல் இக்கமிட்டிக்கு மக்களிடையே எவ்வித ஆதரவும் இல்லே.

2

பேச்சுவார்த்தைகள் ராணுவ நடவடிக்கைகளுக்கான ஒரு ராஜதந்திரத் திரையாகவே உதவும் என்று தோழர் லெனின் கருதுகிருர். இதற்குச் சரியான ஒரே தீர்வு ஊசலாட்டக்காரர்களின் ஊசலாட்டங்களுக்கு முடிவு கட்டுவதும் நம்மை நாமே உறுதிப்படுத்திக் கொள்வதும் ஆகும். மாஸ்கோ வாசிகளுக்கு உதவி வழங்க வேண்டும், அது நமது வெற்றியை உறுதிப்படுத்தும்.

3

இப்பிரச்சினை அடிப்படையானது என்று லெனின் கருது கிறார். ஊசலாட்டத்துக்கு முடிவு கட்டுவதற்கான காலம் வந்து விட்டது என்று நினைக்கிறார். இக்கமிட்டி கலேதின் கள் மற்றும் கர்னீலவ்கள் பக்கம் ஆதரவாக இருப்பது தெட்டத்தெளிவு. ஊசலாட்டம் எதுவும் கூடாது. நாம் பெரும் பான்மையான தொழிலாளர், விவசாயிகள் மற்றும் படை வீரர்களால் ஆதரிக்கப்படுகிறோம். மக்கள் திரள் எமக்கு எதிராக இருப்பதாக இங்கு எவராலும் நிரூபிக்க முடிய வில்லை. ஒன்று கலேதினின் கையாட்களுடன் இருக்க வேண் டும், அல்லது மக்கள் திரளுடன் இருக்க வேண்டும். நாம் மக்களை நம்ப வேண்டும். நாட்டுப் புறப் பகுதிகளுக்குப் பிரசாரகர்களை அனுப்பி வைக்க வேண்டும். மாஸ்கோ வுக்குத் துருப்புக்களை ஏற்றிச் செல்லுமாறு இக்கமிட்டியிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அது மறுத்து விட்டது. நாம் மக்களிடம் வேண்டுகோள் விட வேண்டும். அவர்கள் அதை வீழ்த்துவார்கள்.

புரொலிட்டார்ஸ்கயா ரெவலூத்சியா என்ற சஞ்சிகையின் இதழ் 10ல், 1922ல் முதலில் பிரசுரிக்கப்பட்டது	*நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 43*

மத்தியக் கமிட்டிக்கு அகத்தே இருக்கும் எதிர்ப்பணி பற்றிய ரு. ச. ஐ. தொ. க. (போ.) இன் மத்தியக் கமிட்டித் தீர்மானம்

நவம்பர் 2 (15) 1917

இப்போதைய கூட்டம் வரலாற்று முக்கியத்துவம் உடையது என்றும் எனவே இங்கு வெளிப்பட்ட இரு நிலைகளையும் பதிவு செய்வது அவசியம் எனவும் மத்தியக் கமிட்டி கருதுகிறது.

1) மத்தியக் கமிட்டியின் அகத்தே உருவாக்கப்பட்டுள்ள எதிர்ப்பணி போல்ஷிவிசத்தின் மற்றும் பொதுவாக பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் எல்லா அடிப்படை நிலைகளில் இருந்தும் முழுமையாக விலகிச் சென்று விட்டது என்று மத்தியக் கமிட்டி கருதுகிறது. இதற்குக் காரணம் இந்த எதிர்ப்பணி ருஷ்யாவில் சோஷலிஸ்டுப் புரட்சி சாத்தியமல்ல என்ற அறவே மார்க்சியம் அல்லாத கூற்றையும், சோவியத் அமைப்பின் திட்டவட்டமான சிறுபான்மையின் இறுதி எச்சரிக்கைகள் மற்றும் ராஜினமா அச்சுறுத்தல்களுக்கு இணங்கி விட்டுக் கொடுப்பதன் அவசியத்தையும் வற்புறுத்துகின்றது. இதன் மூலம் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரசின் சித்தத்தையும் முடிவையும் குறுக்கிட்டுக் குலைக்கிறது. ஏற்கெனவே துவக்கப்பட்டுள்ள பாட்டாளி வர்க்க மற்றும் ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரத்தை சீர்குலைவு செய்கிறது.

2) புரட்சிகரப் பணிகளுக்குத் தடங்கல் செய்தல் மற்றும் இன்றைய தருணத்தில் மிகவும் தீங்கான ஊசலாட்டங்களுக்கும் முழுப் பொறுப்பாளி எதிர்ப்பணியே என்று மத்தியக் கமிட்டி சாற்றுகிறது. அவர்களது விவாதங்களையும் ஐயுறவையும் பத்திரிகைகளில் நடத்தும்படியும் தமக்கு நம்

பிக்கையில்லாத நடைமுறை வேலையில் இருந்து விலகிக் கொள்ளும்படியும் அவர்களைக் கோருகிறது. ஏனெனில் இந்த எதிர்ப்பணி முதலாளித்துவ வர்க்கத்தின் மிரட்டலின்பால் அச்சத்தையும் மக்களிடையிலான (புரட்சிகரமல்லாத) வலு விழந்து போன பகுதியின் மனப் பாங்கையுமே பிரதிபலிக்கிறது. வேறு எதையும் அன்று.

3) சோவியத் ஆட்சி அதிகாரம் என்ற கோஷத்துக்குத் துரோகம் செய்யாமல் முற்றிலுமான போல்ஷிவிக் அரசாங்கத்தைக் கைவிட முடியாது என்பதை மத்தியக் கமிட்டி வலியுறுத்திக் கூறுகிறது. காரணம் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசின் பெரும்பான்மை, காங்கிரசில் இருந்து எவரையும் விலக்குதல் செய்யாமலே இந்த அரசாங்கத்திடம் ஆட்சி அதிகாரத்தினை ஒப்படைத்தது.

4) தொழிலாளர், படையாளிகள், விவசாயிகளின் சோவியத்துகளுக்கே ஆட்சி அதிகாரம் என்ற கோஷத்துக்குத் துரோகம் செய்யாமல் சோவியத்துகளுடன் சோவியத் மாதிரி அல்லாத அமைப்புகளை இணைத்துக் கொள்வது பற்றிய சின்னத்தனமான பேரங்களில் இறங்க முடியாது என்பதை மத்தியக் கமிட்டி வலியுறுத்திக் கூறுகிறது. இத்தகைய அமைப்புகள் நிலவுடைமையாளர்கள் மற்றும் முதலாளிகளின் வீழ்ச்சிக்காகப் போராடும் மக்களின் புரட்சிகர முன்னணிப் படையின் சுயவிருப்பமான சங்கங்கள் அல்ல.

5) சோவியத்துகளில் இருக்கும் சிறுபான்மையின் இறுதி எச்சரிக்கைகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு இணங்கி விட்டுக் கொடுப்பது என்பது சோவியத் ஆட்சி அதிகாரத்தை மட்டுமன்றி ஜனநாயகத்தையே முற்றுகக் கைவிடுவதற்குச் சமமானதாகும், இத்தகைய விட்டுக்கொடுப்பு பெரும்பான்மை பெரும்பான்மையைப் பயன்படுத்த அஞ்சுவதற்குச் சமமாகும், இது அராஜகத்துக்கு அடிபணிவது மற்றும் எந்த ஒரு சிறுபான்மையும் திரும்பத் திரும்ப இறுதி எச்சரிக்கை விடுக்க இடமளிப்பதற்கும் சமமாகும் என்று மத்தியக் கமிட்டி வலியுறுத்திக் கூறுகிறது.

6) சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் இருந்து எவரையுமே விலக்குதல் செய்திராத

நிலையில், வெளிநடப்புச் செய்தவர்கள் மீண்டும் திரும்பிவர இப்போதும்கூட அனுமதிப்பதற்குத் தான் முற்றிலும் தயாராகஇருப்பதாயும், வெளிநடப்புச் செய்தவர்களுடன் சேர்ந்து சோவியத்துகளின் அகத்தே ஒரு கூட்டாட்சிக்கு ஒப்புக் கொள்வதாயும், இதன் பின் விளைவாக வேறு எவருடனும் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு போல்ஷிவிக்குகள் மறுத்தார்கள் என்ற பேச்சு அறவே பொய் என்றும் மத்தியக் கமிட்டி வலியுறுத்திக் கூறுகிறது.

7) இப்போதைய அர்சாங்கம் நிறுவப்பட்ட நாளன்று அது நிறுவப்படுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பாக மத்தியக் கமிட்டி இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின்[19] மூன்று பிரதிநிதிகளைத் தனது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைத்தது எனவும், அவர்கள் அரசாங்கத்தில் சேர வேண்டும் என்று முறையாகப் பிரேரணை செய்தது என்றும் மத்தியக் கமிட்டி வலியுறுத்திக் கூறுகிறது. இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் மறுப்பு தற்காலிகமானதாயும், சம்பிரதாயமானதாயும் இருந்த போதிலும், அவர்களுடன் ஓர் உடன்பாடு ஏற்படவில்லை என்ற மெய்நிலைக்கு இந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களே முற்றிலும் பொறுப்பாளிகள்.

8) போல்ஷிவிக் பிரிவால் முன்வைக்கப்பட்ட ஒரு தீர்மானம் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை மத்தியக் கமிட்டி நினைவுக்குக் கொண்டு வருகிறது. இந்தத் தீர்மானம் சோவியத்தைப் போர்முனைகளில் இருந்து வரும் படையாளிகளையும், மற்றும் வட்டாரங்களில் கிராமங்களில் இருந்து வரும் விவசாயிகளையும் கொண்டு வலிமைப்படுத்தத் தயாராக இருப்பதாகச் சாற்றியது. எனவே போல்ஷிவிக் அரசாங்கம் விவசாயிகளுடனை ஒரு கூட்டாட்சியை எதிர்த்தது என்ற துணிபுரை அறவே பொய்யாகும். இதற்கு நேர்மாறாக, நமது அரசாங்கத்தின் நிலச் சட்டம் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்டளையை முழுமையாகப் பிரதி செய்யப்பட்டது எனவும் எனவே போல்ஷிவிக்குகள் ருஷ்ய மக்கள் தொகையின் மிகவிரிவான பெரும்பான்மையுடன்

கூட்டாட்சி நிறுவிக் கொள்ள முழுமையாயும் மனப் பூர்வமாயும் தயாராக இருந்தார்கள் என்பதற்கு இதுவே நடைமுறை நிரூபணம் எனவும் மத்தியக் கமிட்டி சாற்றுகிறது.

9) எல்லா இடர்ப்பாடுகளும் இருந்த போதிலும், ருஷ்யாவிலும், ஐரோப்பாவிலும் ஒருங்கே சோஷலிசத்தின் வெற்றியை இன்றைய அரசாங்கத்தின் கொள்கையை நெறி பிறழாது தொடர்ந்து பின்பற்றுவது மூலம் மட்டுமே உறுதிப்படுத்த முடியும் என்று மத்தியக் கமிட்டி இறுதியாக வலியுறுத்திக் கூறுகிறது. இந்த சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றியில் மத்தியக் கமிட்டி தனது உறுதியான நம்பிக்கையை வெளியிடுகிறது. ஐயுறவுவாதிகளும் ஊசலாட்டக்காரர்களும் தமது ஊசலாட்டங்களை உதறி விட்டு முழுமனதுடனும், உயர் ஊக்கத்துடனும் இந்த அரசாங்கத்தின் செயல்களை ஆதரிக்க வேண்டும் என்று மத்தியக் கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

லெனின்

முதல் மூன்று ஷரத்துக்கள் இல்லாமல்
நவம்பர் 17 (4), 1917ல் பிராவ்தா,
இதழ் 180ல் வெளியிடப்பட்டது

லெனின் நூல் திரட்டு,
தொகுதி 30, இரண்டாம் மூன்றும்
ருஷ்யப் பதிப்புகளில், 1932ல்
முதன் முதலாக முழுமையாக
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 44-46

ரு. ச. ஜ. தொ. க. (போ.) இன் ம. க. இன் பெரும்பான்மை இடமிருந்து சிறுபான்மைக்குத் தரப்பட்டதான இறுதி எச்சரிக்கை[20]

ரு. ச. ஜ. தொ. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் பெரும்பான்மை, மக்கள் கமிசார்களின் கவுன்சில் இதுகாறும் கடைப்பிடித்து வந்துள்ள கொள்கையை முழுமையாக அங்கீகரிப்பதோடு, மத்தியக் கமிட்டியில் உள்ள சிறுபான்மைக்குப் பின்வரும் ஆணித்தரமான அறிவிப்பை நல்குவது அவசியம் என்று கருதுகிறது.

இன்றைய தருணம் நமது கட்சியின் கொள்கை தோழர் லெனினால் சமர்ப்பிக்கப்பட்டு மத்தியக் கமிட்டியால் நேற்று நவம்பர் 2ல் ஏற்கப்பட்டதான தீர்மானத்தில் வரையறுக்கப் பட்டுள்ளது.* ஆட்சி அதிகாரத்தை ஏற்க முடியாது என்று மறுக்கும்படி நமது கட்சியைத் தூண்டும் ஒவ்வொரு முயற் சியும் பாட்டாளி வர்க்கத்தின் லட்சியத்துக்குச் செய்யும் துரோகமாகும், என்று இத்தீர்மானம் சாற்றுகிறது. காரணம், சோவியத்துகளின் அகில ருஷ்யக் காங்கிரஸ், லட்சக்கணக்கான தொழிலாளர், படையாளிகள் மற்றும் விவசாயிகளின் பேரால், இந்த ஆட்சி அதிகாரத்தை நமது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் நமது கட்சியின் பிரதி நிதிகளிடம் ஒப்படைத்துள்ளது. நமது போர்த்தந்திரத் தின் இந்த அடிப்படையான கொள்கைவழி சமரசவாதத்தை எதிர்த்த நமது போராட்டம் முழுவதில் இருந்தும் தர்க்க ரீதியாகப்பின் தொடர்வதாகும். இதுவே, கேரென்ஸ்கி அர

* இந்தத் தொகுதி, பக்கங்கள் 44—47 பார்க்க.— ப-ர்.

சாங்கத்துக்கு எதிரான புரட்சி எழுச்சியில் நமக்கு வழி காட்டியது. தற்போது இதுவே போல்ஷிவிசத்தின் புரட்சி கர சாரமாக விளங்குகிறது. இது மீண்டும் ஒரு முறை மத்தியக் கமிட்டியால் ஆதரித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த கொள்கை வழி கட்சியின் எல்லா உறுப்பினர்களையும் முதலாவதும் முக்கியமாகவும் மத்தியக் கமிட்டியில் இருக்கும் சிறுபான்மையை முற்ற முழுமையாகக் கட்டுப்படுத்துவதாகும்.

இருப்பினும், சிறுபான்மையின் பிரதிநிதிகள் மத்தியக் கமிட்டியின் நேற்றைய கூட்டத்துக்கு முன்பும் பின்பும் நமது கட்சியின் அடிப்படைக் கொள்கை வழிக்கு அப்பட்டமாயும் எதிரான ஒரு கொள்கையையே பின்பற்றி வந்திருக்கிறார்கள். இது, ஆகப் பெரும் உறுதியும், திடத்தன்மையும் அத்தியாவசியமாக இருக்க வேண்டிய நேரத்தில் நமது சொந்த அணிகளை உரங்குலைக்கிறது.

இவ்வாறாக, மத்திய நிர்வாகக் கமிட்டியின் நேற்றைய கூட்டத்தில் போல்ஷிவிக் பிரிவு, மத்தியக் கமிட்டியின் சிறுபான்மை உறுப்பினர்களின் பகிரங்கமான நேரடியான பங்குபற்றலுடன் மத்தியக் கமிட்டியின் முடிவுக்கு (அரசாங்கத்தில் நமது கட்சியின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் பற்றியது) எதிராகப் பகிரங்கமாக வாக்களித்தது. இது இணைவரையற்ற முறையில் கட்டுப்பாட்டை மீறி நடப்பதாகும். மத்தியக் கமிட்டிக்குப் பின்னால் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர். மத்தியக் கமிட்டியில் பல மணி நேரம் விவாதித்த பிறகு இதே எதிர்ப்பணி உறுப்பினர்கள் கிளப்பிய விவாதம் நடைபெற்ற பிறகு இவ்வாறு நடந்து கொண்டனர். இது, கட்சியின் கதி, புரட்சியின் கதி கட்சியின் பணியின் உடனடியான விளைவினைச் சார்ந்திருக்கும் ஒரு தருணத்தில், கட்சி வேலையை நாசப்படுத்தி கட்சி நிறுவனங்களைக் கட்டாயப்படுத்தவே எதிர்ப்பணி உத்தேசித்திருக்கிறது என்பதைத் தெட்டத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இத்தகைய நிலவரங்களுக்கு நாம் பொறுப்பு ஏற்க முடியாது, பொறுப்பு ஏற்க விரும்பவும் இல்லை.

மத்தியக் கமிட்டியின் சிறுபான்மைக்கு இந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, இந்தச் சிறுபான்மை கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பணிந்து நடக்கவும், மத்தியக் கமிட்டியால் ஏற்கப்பட்டதான தோழர் லெனின் தயாரித்த தீர்மானத்தில் முறைப்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ள கொள்கையை நிறைவேற்றவும் பொறுப்பு மேற்கொள்ளுமா? என்ற கேள்விக்கு எழுத்து மூலமான பதிலை மத்தியக் கமிட்டி ஆணித்தரமாகக் கோருகிறது.

இந்தக் கேள்விக்கு எதிர் மறையாகவோ அல்லது திட்டவட்டம் இன்றியோ ஒரு பதில் தரப்படும் பட்சத்தில் நாம் பின்வரும் மாற்று யோசனையை பெத்ரோகிராத் கமிட்டி, மாஸ்கோ கமிட்டி, மத்திய நிர்வாகக் கமிட்டியிலுள்ள போல்ஷிவிக் பிரிவு, பெத்ரோகிராத் நகர மாநாடு, மற்றும் விசேஷ கட்சிக் காங்கிரஸ் ஆகியவற்றின் முன்னே உடனடியாக வைப்போம்:

ஒன்று, எதிர்ப்பணி இன்று யார் சார்பில் நமது வேலையை நாசப்படுத்தி வருகிறதோ இது அந்த நேச சக்திகளுடன் சேர்ந்து ஒரு புதிய அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பைக் கட்சி இன்றைய எதிர்ப்பணியிடம் ஒப்படைக்க வேண்டும்—அவ்வாறு செய்யப்படுமானால் இந்தப் புதிய அரசாங்கத்துடனை உறவுகளில் நாம் அறவே விடுபட்டு நிற்பதாகக் கருதுவோம். இந்த அரசாங்கத்தால் எத்தகைய முக்கிய பங்கும் ஆற்ற முடியாது, ஊசலாட்டம், ஆற்றல் இன்மை, குழப்பம் ஆகியவற்றை மட்டுமே கொண்டுவர முடியும்.

அல்லது மத்தியக் கமிட்டியின் நேற்றைய முடிவில் வெளியீடான சாத்தியமான ஒரே புரட்சிகரக் கொள்கைப் பாதையினை கட்சி ஊர்ஜிதம் செய்யும்—இதில் எமக்குச் சந்தேகம் இல்லை—அவ்வாறு செய்யும் பட்சத்தில் எதிர்ப்பணி உறுப்பினர்கள் தமது சீர்குலைவு வேலைகளை நமது கட்சி அமைப்புக்கு வெளியே செய்ய வேண்டும் என்று கட்சி ஆணித்தரமாகக் கோர வேண்டும். வேறு தீர்வு எதுவும் இல்லை, இருக்கவும் முடியாது. ஒரு பிளவு மிகவும் வருந்தத்தக்கது என்பது அறிவு பூர்வமான உண்மை. ஆனல் உள்ளுக்குள்

சீர்குலைவு, நமது சொந்த முடிவுகளையே குலைவு செய்தல், தாறுமாறுக்கல் மற்றும் வீழ்த்துதல் செய்வதை விடவும் நேர்மையான பகிரங்கமான பிளவு ஒப்பற்ற வகையில் மேலும் சிறந்ததாகும். எப்படியும், நமது வேறுபாடுகளை (இது பிரதானமாயும் நோவயா ஷீஸ்ன் ''புதிய வாழ்வு''[21] மற்றும் மார்த்தவ் குழுவுடனான நமது வேறுபாடுகளின் நேர் பகர்ப்பே) மக்களின் நியாயத் தீர்ப்புக்குச் சமர்ப்பிப்பதால், நமது கொள்கைக்குப் புரட்சிகரத் தொழிலாளர், படையாளிகள் மற்றும் விவசாயிகளின் தயக்கமற்ற அர்ப்பணிப்பான ஆதரவு உறுதியாகக் கிடைக்கும், ஊசலாடும் எதிர்ப்பணியை ஆற்றல் இழந்த தனி நிலைக்கு விரைவில் தள்ளி விடுவோம். இதை ஒரு கணமும் நாம் சந்தேகிக்கவில்லை.

நவம்பர் 3 (16), 1917ல் எழுதப்பட்டது

புரொலிட்டார்ஸ்கயா ரெவலூத்சியா என்ற சஞ்சிகையின் இதழ் 7ல், 1922ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 35, பக்கங்கள் 47-49

தேச மக்களுக்கு

தோழர்களே—தொழிலாளர்களே, படைவீரர்களே, விவசாயிகளே, அனைத்து உழைப்பாளி மக்களே!

தொழிலாளர்கள், விவசாயிகளது புரட்சி பெத்ரோகிராதில் இறுதியாக வெற்றி பெற்று விட்டது—கேரென்ஸ்கியால் ஏமாற்றப்பட்ட சிறு தொகையினரான கசாக்குகளில் கடைசியாய் எஞ்சியோரும் விரட்டப்பட்டு விட்டனர், அல்லது கைது செய்யப்பட்டு விட்டனர். மாஸ்கோவிலும் புரட்சி வெற்றி வாகை சூடி விட்டது. பெத்ரோகிராதிலிருந்து அனுப்பப்பட்ட துருப்பு ரயில்கள் சிலவும் வந்துசேரும் முன்பே மாஸ்கோவில் ராணுவ மாணவர்களும் கர்னீலவ் கும்பலைச் சேர்ந்த ஏனையோரும் சமாதானத்துக்குரிய நிபந்தனைகளையும் ராணுவ மாணவர்களை நிராயுதபாணிகளாக்குதலையும் இரட்சணியக் கமிட்டியைக்[22] கலைத்தலையும் ஏற்றுக் கையொப்பமிட்டு விட்டனர்.

புதிய அரசாங்கத்துக்கும், அதன் சமாதான அரசாணைக்கும், நிலத்தை உடனடியாய் விவசாயிகளுக்கு மாற்றும் அரசாணைக்கும், போர்முனையிலுள்ள படையாட்களிலும் கிராமாந்திரங்களிலுள்ள விவசாயிகளிலும் மிகப் பெருவாரியானோரின் ஆதரவைத் தெரிவித்துப் போர்முனையிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் நாள்தோறும் மணிதோறும் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. பெரும்பான்மையான மக்கள் ஏற்கெனவே புரட்சியின் பக்கம் சேர்ந்து கொண்டுவிட்டதால் தொழிலாளர்கள், விவசாயிகளது புரட்சியின் வெற்றி உறுதியாகி விட்டது.

நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் மற்றும் முதலாளிகளுடன் நெருக்கமான தொடர்புடைய அலுவலகச் சிப்பந்திகள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் மேல் மட்டத்துக் கோஷ்டிகளும்—சுருங்கக் கூறின் செல்வந்தர்களும் அவர்களை ஆதரிப்போரும்—இந்தப் புதிய புரட்சியிடம் பகைமை காட்டுகின்றனர், இதன் வெற்றியை எதிர்க்கின்றனர், வங்கிகளை மூடப் போவதாய் அச்சுறுத்துகின்றனர், பல்வேறு அலுவலகங்களின் வேலைகளைச் சீர்குலைத்தும் பூரணமாய் நின்றுவிடச் செய்தும் வருகிறார்கள், பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் எல்லா வழிகளிலும் புரட்சிக்குத் தடை போட்டு வருகிறார்கள். இவையெல்லாம் முற்றிலும் புரிந்து கொள்ளக்கூடியவையே. இத்தகைய எதிர்ப்பு தவிர்க்க முடியாதபடி ஏற்படவே செய்யுமென்பது அரசியல் உணர்வு படைத்த ஒவ்வொருவரும் நன்கு அறிந்ததுதான். போல்ஷிவிக்குகளுடைய கட்சிப் பத்திரிகைகள் யாவும் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் இது குறித்து எழுதி வந்திருக்கின்றன. உழைக்கும் வர்க்கங்கள் இந்த எதிர்ப்பைக் கண்டு கணப் பொழுதும் கலக்கமடையப் போவதில்லை. முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவாளர்களது அச்சுறுத்தல்களையும் வேலைநிறுத்தங்களையும் கண்டு எவ்விதத்திலும் அவை தயங்கப் போவதில்லை.

பெரும்பான்மையான மக்கள் நம் பக்கம் உள்ளனர். உலகெங்கும் உழைப்பாளரும் ஒடுக்கப்பட்டோருமான மக்களின் பெரும்பான்மையோர் நம் பக்கமே இருக்கிறார்கள். நமது இலட்சியம் நேர்மையானது. வெற்றி நமதே என்பது உறுதியாகி விட்டது.

முதலாளிகள், மேல் மட்டத்து அதிகாரிகள் ஆகியோரது எதிர்ப்பு தகர்க்கப்பட்டுவிடும். வங்கிகளையும் சிண்டிக் கேட்டுகளையும் தேசவுடைமையாக்கும் விசேஷ அரசுச் சட்டத்தின் கீழ் வருவோரைத் தவிர்த்து எந்த ஒருவரும் தமது சொத்துக்களை இழக்க வேண்டியிராது. இந்த விசேஷச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. உழைப்பாளி மக்களில் எந்த ஒருவருக்கும் ஒரு கோப்பெக்குகூட நஷ்டம் ஏற்படாது, மாறாக அவருக்கு உதவி வழங்கப்படும். மிக

வும் கண்டிப்பான கணக்கீட்டையும் கண்காணிப்பையும் அன்னியில், நிர்ணயமான வரிகளை முழு அளவில் வசூலிப்பதை அன்னியில், வேறு எந்தச் சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்ளும் உத்தேசம் அரசாங்கத்திடம் இல்லை.

இந்த நியாயமான கோரிக்கைகளை ஆதரித்து மிகப் பெருவாரியான மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகளது இடைக்கால அரசாங்கத்தின் பின்னுல் அணி திரண்டுள்ளனர்.

தோழர்களே, உழைப்பாளி மக்களே! இப்பொழுது **நீங்களேதான்** அரசின் ஆட்சிப் பீடத்தில் இருக்கிறீர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள். நீங்கள் தாமே ஒன்றுபட்டு அரசின் **எல்லா** விவகாரங்களையும் **உங்களுடைய** கைகளில் எடுத்துக் கொள்ளாவிடில் யாரும் உங்களுக்குத் துணை புரியப் போவதில்லை. இப்பொழுது முதலாய் **உங்களுடைய** சோவியத்துகள்தான் அரசு அதிகார உறுப்புகள், முழு அதிகாரம் படைத்த சட்ட மன்றங்கள்.

உங்களுடைய சோவியத்துகளை மையமாய்க் கொண்டு ஒன்றுதிரளுங்கள். அவற்றைப் பலப்படுத்துங்கள். நேரில் நீங்களே பணியில் இறங்குங்கள்; அடியிலிருந்து தொடங்குங்கள் வேறு யாருக்காகவும் காத்திராதீர்கள். மிகக் கண்டிப்பான புரட்சிகரச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுங்கள். குடிகாரர்களும் குண்டர்களும் எதிர்ப்புரட்சி இராணுவ மாணவர்களும் கர்னீலவ் கும்பலைச் சேர்ந்தோரும் இன்ன பிறரும் அராஜகத்தை உண்டாக்க மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளையும் ஈவிரக்கமின்றி நசுக்குங்கள்.

பொருளுற்பத்தி, பண்டக் கணக்கீடு இவற்றின் மீது மிகக் கண்டிப்பான கண்காணிப்பை நிறுவுங்கள். மக்களுடைய இலட்சியத்துக்குத் தீங்கிழைக்கத் துணிவோர் எல்லோரையும்—அவர்கள் இழைக்கும் தீங்கு உற்பத்தியைச் சீர்குலைப்பதாய் (சேதம் உண்டாக்குதல், தாமதப்படுத்தல், கவிழ்த்தல்) இருப்பினும் சரி, தானியத்தையும் பண்டங்களையும் கள்ளச் சேமிப்பு செய்வதாய், தானிய அனுப்பீடுகளுக்கு இடையூறு செய்வதாய், ரயில் போக்குவரத்தையும் தபால், தந்தி, தொலைபேசி வசதிகளையும் சீர்குலைப்பதாய்

இருப்பினும் சரி, மாபெரும் சமாதான இலட்சியத்துக்கோ நிலத்தை விவசாயிகளுக்கு மாற்றும் இலட்சியத்துக்கோ உற்பத்தியின் மீதும் பண்ட வினியோகத்தின் மீதும் தொழிலாளர் கண்காணிப்பை உறுதி செய்யும் இலட்சியத்துக்கோ எவ்வகையிலும் எதிராய்ச் செயல்படுவதாய் இருப்பினும் சரி இவர்கள் எல்லோரையும்—கைது செய்து புரட்சிகர நீதி மன்றங்கள் வசம் ஒப்படையுங்கள்.

தோழர்களே, தொழிலாளர்களே, படைவீரர்களே, விவசாயிகளே, அனைத்து உழைப்பாளி மக்களே! ஆட்சியதிகாரம் அனைத்தையும் உங்களுடைய சோவியத்துகளின் கைகளிலே எடுத்துக் கொள்ளுங்கள். விழிப்புடன் இருங்கள், உங்களுடைய நிலத்தையும் தானியத்தையும் ஆலைகளையும் இயந்திர சாதனங்களையும் பண்டங்களையும் போக்குவரத்து வசதிகளையும்—இப்பொழுது முதல் முற்றிலும் உங்களுடைய சொத்தாகிவிடும் பொதுச் சொத்தாகிவிடும் இவை யாவற்றையும்—கண்ணின் கருமணியென பாதுகாத்திடுங்கள். படிப்படியாய், விவசாயிகளில் பெரும்பான்மையோரது உடன்பாட்டுடனும் அங்கீகாரத்துடனும், அவர்களுடையதும் மற்றும் தொழிலாளர்களுடையதுமான நடைமுறை அனுபவத்துக்கு ஏற்ப நாம் உறுதியாகவும் பிறழாமலும் சோஷலிசத்தின் வெற்றியை நோக்கி முன்னேறிச் செல்வோம்—மிகுந்த நாகரிக வளர்ச்சியுடைய நாடுகளின் முன்னேறிய தொழிலாளர்கள் முத்தாய்ப்பு வைத்துப் பூர்த்தி செய்யப் போகும் இந்த வெற்றி எல்லா நாடுகளின் மக்களுக்கும் நிலையான சமாதானம் கிட்டச் செய்யும், எல்லாவித ஒடுக்குமுறையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் அவர்களை விடுவிக்கும்.

1917, நவம்பர் 5,
பெத்ரோகிராத்

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் தலைவர்
வி. உல்யானவ் (லெனின்)

பிராவ்தா, இதழ் 4,
(மாலை இதழ்)
நவம்பர் 19 (6), 1917

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 65-67

விவசாயிகள் கேள்விகளுக்குப் பதில்[23]

விவசாயிகள் கேட்கும் எண்ணற்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கும் முறையில் தெரிவிப்பது என்னவெனில், நாட்டில் ஆட்சியதிகாரம் அனைத்தும் இனி தொழிலாளர்கள், படைவீரர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளுக்கே முற்றிலும் உரியதாகும். தொழிலாளர்களுடைய புரட்சி பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் வெற்றி பெற்று விட்டது, ருஷ்யாவின் ஏனைய எல்லா இடங்களிலும் வெற்றி பெற்று வருகிறது. தொழிலாளர்கள், விவசாயிகளுடைய அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்கு எதிராய், முதலாளிகளுக்கு எதிராய்த் தொழிலாளர்களுடன் விவசாயிப் பெருந்திரளினரது, ஏழை விவசாயிகளது, பெரும்பான்மை விவசாயிகளது கூட்டணிக்கு வகை செய்கிறது.

எனவே விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகள், பிரதானமாய் உயெஸ்து சோவியத்துகளும், பிறகு குபேர்னியா சோவியத்துகளும் இப்பொழுதிலிருந்து, அரசியல் நிர்ணயச் சபை கூடி முடிவு செய்வதற்கிடையில், அவையவற்றின் வட்டாரப் பிரிவுகளில் முழு அரசாங்க அதிகாரத்துக்கும் உரிமையுடையனவாக்கப்படுகின்றன. நிலப்பிரபுக்களினது நிலவுடைமையானது சோவியத்துகளின் இரண்டாம் அனைத்து ருஷ்யக் காங்கிரசால் ஒழிக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள தொழிலாளர்கள், விவசாயிகளது இடைக்கால அரசாங்கம் நிலத்தைப் பற்றிய அரசாணை ஒன்றை ஏற்கெனவே பிறப்பித்திருக்கிறது. இந்த அரசாணைக்கேற்ப நிலப்பிரபுக்களின் எல்லா நிலங்களும் முற்றிலும்

விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் கைக்கு மாறிவிடுகின்றன.

வோலஸ்து நிலக் கமிட்டிகள் உடனே நிலப்பிரபுக்களுடைய எல்லா நிலங்களின் நிர்வாகத்தையும் மேற்கொண்டு, மிகவும் கண்டிப்பான கணக்குப் பதிவுக்கு ஏற்பாடு செய்து, குறையற்ற ஒழுங்கு முறையைப் பேணிக் காக்கவும், முன்பு நிலப்பிரபுக்களது சொத்துக்களாய் இருந்தவற்றை மிகுந்த கண்டிப்புடன் பாதுகாக்கவும் வேண்டும். இனி இந்தச் சொத்துக்கள் மக்கள் அனைவரின் சொத்துக்களாகும், ஆகவே மக்கள் தாமே இவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

உயெஸ்து விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் ஆமோதிப்புடன் வோலஸ்து நிலக் கமிட்டிகள் வெளியிடும் எல்லாத் தீர்வு ஆணைகளும் சட்டத்துக்கு உரிய வலிமையுடையனவாகும்; இவை நிபந்தனையின்றியும் தாமதமின்றியும் நிறைவேற்றப்பட்டாக வேண்டும்.

சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசால் நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகளது அரசாங்கம் மக்கள் கமிசார்களின் கவுன்சில் என்பதாய்ப் பெயரிடப்பட்டிருக்கிறது.

விவசாயிகளைத் தத்தமது வட்டாரங்களிலும் ஆட்சியதிகாரம் அனைத்தையும் தாமே மேற்கொள்ளுமாறு மக்கள் கமிசார்களின் கவுன்சில் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறது. விவசாயிகளுக்குத் தொழிலாளர்கள் தமது குறைவிலாத, முழுநிறைவான, சர்வாம்ச ஆதரவை அளிக்கின்றனர்; சாகுபடி இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றின் உற்பத்திக்கு அவர்கள் ஏற்பாடு செய்கின்றனர்; தானியம் வழங்கித் துணை புரியும்படி விவசாயிகளை அவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் தலைவர்

வி. உல்யானவ் (லெனின்)

பெத்ரோகிராத்,
நவம்பர் 5, 1917

இஸ்வேஸ்தியா, இதழ் 219,
நவம்பர் 8, 1917

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 68-69

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி (போல்ஷிவிக்)யின் மத்தியக் கமிட்டியில் இருந்து

எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும்
ருஷ்யாவின் அனைத்து உழைக்கும் வர்க்கங்களுக்கும்

தோழர்களே!

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் பெரும்பான்மையினர் போல்ஷிவிக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகளே என்பது எல்லோரும் பொதுவாக அறிந்த விஷயமே.

பெத்ரோகிராத், மாஸ்கோ மற்றும் ருஷ்யா முழுவதிலும் அண்மையில் நடைபெற்ற வெற்றிகரமான புரட்சியை சரிவரப் புரிந்து கொள்வதற்கு இந்த உண்மை அடிப்படையானது. எனினும் இந்த உண்மை முதலாளிகளின் எல்லா ஆதரவாளர்களாலும் அவர்களது தன்னறிவில்லாத துணையாட்களாலும் இடையறாது மறக்கப்பட்டு வருகிறது. இவர்கள் எல்லா ஆட்சி அதிகாரமும் சோவியத்துகளுக்கே என்ற புதிய புரட்சியின் அடிப்படைக் கோட்பாட்டை அரித்தழிக்கின்றனர்கள். ருஷ்யாவில் சோவியத் அரசாங்கம் தவிர்த்த வேறு எந்த அரசாங்கமும் இருத்தல் கூடாது. சோவியத் ஆட்சி அதிகாரம் ருஷ்யாவில் வென்று அடையப்பட்டது. ஒரு சோவியத் கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்கு ஆட்சியாதிகாரம் மாற்றி வழங்கப்படுவது புரட்சி எதுவும் இன்றி சோவியத்துகளின் முடிவால் மட்டுமே சோவியத்துகளுக்குப் புதிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது மூலம் மட்டுமே உத்தரவாதம் செய்யப்படுகிறது. சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் பெரும்பான்மை ஓட்டுக்கள் போல்ஷிவிக் பிரிவுக்குக் கிடைத்தன. எனவே அந்தக் கட்சியால் நிறுவப்பட்டது மட்டுமே சோவியத் அர

சாங்கம் ஆகும். புதிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்குச் சில மணி நேரம் முன்னதாக, சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் இப்புதிய அரசாங்கத்தின் உறுப்பினர் பட்டியலை சமர்ப்பிப்பதற்கு முன்பதாக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் குழுவின் மூன்று ஆக முக்கியமான உறுப்பினர்களான தோழர்கள் கம்கோவ், ஸ்பிரோ மற்றும் கரேலின் ஆகியோரை போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி தனது அமர்வுக்கு வரும்படி அழைத்தது, புதிய அரசாங்கத்தில் சேரும்படி அவர்களை அழைத்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் தோழர்கள் சேர மறுத்தது பற்றி நாம் மிகவும் வருந்துகிறோம். அவர்களது மறுப்பு புரட்சியாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் வீர ஆதரவாளர்கள் விஷயத்தில் அனுமதிக்கத்தக்கதல்ல என்று நாம் கருதுகிறோம். நாம் எந்தத் தருணத்திலும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் பெரும்பான்மைக் கட்சி என்ற முறையில் நாம் அரசாங்கத்தை அமைக்கும் உரிமையுடையவர்கள் என்பதையும் அவ்வாறு செய்வது மக்கள் பாலான எமது கடமை என்பதையும் நாம் சாற்றுகிறோம்.

எமது கட்சியின் மத்தியக் கமிட்டி சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசுக்கு மக்கள் கமிசார் பதவிகளுக்கு முற்றிலும் போல்ஷிவிக்குகளடங்கிய ஒரு பட்டியலை சமர்ப்பித்தது என்பதையும், முற்றிலும் போல்ஷிவிக் அரசாங்கத்துக்கான இந்தப் பட்டியலை காங்கிரஸ் ஒப்புக் கொண்டது என்பதையும் எல்லோரும் அறிவார்கள்.

எனவே போல்ஷிவிக் அரசாங்கம் ஒரு சோவியத் அரசாங்கம் அல்ல என்று தோற்றச் செய்யும் அறிவிப்புகள் அப்பட்டமான பொய்களே. இவை மக்களின் விரோதிகளிடம் இருந்தே, சோவியத் ஆட்சியின் விரோதிகளிடம் இருந்து மட்டுமே வருகின்றன, வர முடியும். மாறாக இப்போது, சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசுக்குப் பிறகு, மூன்றாவது காங்கிரஸ் கூடும் வரை, சோவியத்து

களுக்குப் புதிய தேர்தல்கள் நடத்தப்படும் வரை அல்லது மத்திய நிர்வாகக் கமிட்டியால் ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை போல்ஷிவிக் அரசாங்கத்தை மட்டுமே சோவியத் அரசாங்கமாகக் கருத முடியும்.

* * *

தோழர்களே! நேற்று, நவம்பர் 4ந் தேதி, நமது கட்சியின் மத்தியக் கமிட்டி மற்றும் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் சில உறுப்பினர்கள்—காமெனெவ், ஸினோவியெவ், நகீன், ரீக்கவ், மில்யூத்தின் மற்றும் சிலர்—நமது கட்சியின் மத்தியக் கமிட்டியில் இருந்து ராஜினமாச் செய்தனர்; கடைசி மூவர் மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் இருந்து ராஜினமாச் செய்தார்கள். நமது கொள்கை பாட்டாளி வர்க்க மற்றும் புரட்சிகரப் பாதையில் சென்ற போதிலும், நமது கட்சியைப் போன்ற பெரிய ஒரு கட்சியில், மக்கள் விரோதிகளை எதிர்த்த போராட்டத்தில் தனிப்பட்ட தோழர்கள் போதியளவு திடமும் உறுதியும் இல்லாது காணப்படுவது தவிர்க்க முடியாதது. நமது கட்சி இப்போது எதிரிடவிருக்கும் கடமைகள் மெய்யாகவே அளப்பரியவை, இடர்ப்பாடுகள் பிரம்மாண்டமானவை. முன்னுட்களில் பொறுப்பான பதவிகள் வகித்து வந்த நமது கட்சியின் உறுப்பினர்கள் சிலர் முதலாளி வர்க்கத்தின் தாக்குதலை அஞ்சி நமது அணிகளில் இருந்து ஓடி விட்டார்கள். இந்த நடப்புக் கண்டு முதலாளி வர்க்கமும் அதன் உதவியாளர்கள் அனைவரும் வன்மத்துடன் மகிழ்ச்சி கொண்டாடுகின்றனர். போல்ஷிவிக் அரசாங்கத்தின் சிதைவு பற்றி ஆர்ப்பரிக்கின்றனர், அது வீழ்ச்சியுறும் என்று குறி கூறுகின்றனர்.

தோழர்களே! இந்தப் பொய்களை நம்பாதீர்கள். ராஜினமாச் செய்த தோழர்கள் துறந்தோடிகளாகவே செயல்பட்டிருக்கிறார்கள். காரணம் அவர்கள் அவர்களுக்குப் பொறுப்புத் தரப்பட்ட பதவிகளை விட்டு நீங்கியது மட்டுமல்ல, நமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் நேரடியான முடிவை மீறி நடந்திருக்கிறார்கள். அது பெத்ரோகிராத் மற்றும்

மாஸ்கோ கட்சி அமைப்புகள் ஒரு முடிவை எடுக்கும் வரையில் அவர்கள் தமது ராஜினுமாக்களைத் தவக்கம் செய்யும் படிக் கட்டுப்பாடு செய்தது[24]. இந்தத் துறந்தோட்டத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நமது கட்சியைச் சேர்ந்தவர்களும் அல்லது அதை ஆதரிப்பவர்களுமான வர்க்க உணர்வுடைய எல்லாத் தொழிலாளர்களும் படையாளிகளும் விவசாயிகளும் இந்தத் துறந்தோடிகளின் செயல்களை இதே போன்ற கடுமையுடன் நிச்சயமாயும் கண்டிப்பார்கள் என்பதில் எமக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு.

நமது கட்சியின் உயர் பிரிவைச் சேர்ந்த ஒரு சில தனிநபர்கள் துறந்தோடி விட்ட சம்பவம், நமது கட்சியைப் பின்பற்றி வரும் மக்கள் திரளின் ஒற்றுமையை ஒரு கணமும் சிறிதளவும் உலைத்து விடாது, எனவே நமது கட்சியையும் உலைத்து விடாது என்று நாம் சாற்றுகிறோம்.

இந்தத் துறந்தோடிகளில் இருவர், காமெனெவும் ஸினேவியெவும் பெத்ரோகிராத் புரட்சி எழுச்சிக்கு முன்பே துறந்தோடிகளாயும் கருங்காலிகளாயும் செயல்பட்டவர்கள் என்பதை தோழர்களே, நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். 1917 அக்டோபர் 10ந் தேதியன்று நடந்த மத்தியக் கமிட்டியின் தீர்மானகரமான கூட்டத்தில் அவர்கள் புரட்சி எழுச்சிக்கு எதிராக வாக்களித்தது மட்டுமன்றி மத்தியக் கமிட்டி இந்த முடிவை எடுத்ததற்கும் பிறகு புரட்சி எழுச்சிக்கு எதிராகக் கட்சி ஊழியர்களிடையே கிளர்ச்சி செய்தார்கள். தொழிலாளிகளை ஆதரிக்க அஞ்சி, முதலாளி வர்க்கத்தை ஆதரிப்பதில் அதிகமாக விருப்பம் காட்டும் செய்திப் பத்திரிகைகள் (உதாரணம் நோவயா ஷீஸ்ன்) முதலாளித்துவப் பத்திரிகைகள் முழுவதோடும் பொதுவாகச் சேர்ந்து நின்று நமது கட்சியின் ''சிதைவு'' பற்றியும், ''புரட்சி எழுச்சியின் வீழ்ச்சி'' பற்றியும் எல்லாம் அந்த நேரத்தில் கூக்குரல் எழுப்பியதை எல்லோரும் அறிவர். எனினும் நிகழ்ச்சிகள் சிலரின் பொய்களையும் அவதூறுகளையும் துரிதமாக மறுத்து நிராகரித்தன, வேறு சிலரின் ஐயங்கள், ஊசலாட்டங்கள் மற்றும் பயங்கொள்ளித்தனத்தைத் துரிதமாக மறுத்து நிராகரித்தன. பெத்ரோ

கிராத் புரட்சி எழுச்சியைக் குலைப்பதற்கான காமெனெவ் மற்றும் ஸினேவியெவின் முயற்சிகள் மீது அவர்கள் எழுப்ப முயன்ற ''புயல்'' அற்ப விஷயம் பற்றிய பேராரவார மாக வந்து முடிந்தது. அதே போதில் பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் போர்முனையிலும் பதுங்கு குழிகளிலும் கிராமங்களிலும் லட்சக்கணக்கான தொழிலாளர், படை யாளிகள் மற்றும் விவசாயிகள் புரிந்த மகத்தான வீரச் செயல்களும், மக்களின் மாபெரும் உற்சாகமும், ரயில் வண்டி தனது ஓட்டத்தில் மரத்துண்டுகளை ஒதுக்கித் தள்ளுவது போன்று துறந்தோடிகளை எளிதாக ஒதுக்கித் தள்ளிவிட்டன.

முதலாளிகள் தங்களை மிரட்ட இடங் கொடுத்தவர் களும், முதலாளிகளின் நேரடி அல்லது மறைமுக ஆதர வாளர்களின் கூக்குரலுக்கு அடிபணிந்தவர்களுமான பயந் தாங் கொள்ளிகள் ஊசலாட்டக்காரர்கள் மற்றும் சந்தேகப் பேர்வழிகள் எல்லோரும் வெட்கங்கெட்ட பேர்வழிகள் ஆவர்! பெத்ரோகிராத் மாஸ்கோ அல்லது இதர இடங்க ளில் தொழிலாளர் மற்றும் படையாளிகள் திரளின் மத்தி யில் தயக்கம் கிஞ்சிற்றும் இருக்கவில்லை. நமது கட்சி, ஒரு மனிதனைப் போல சோவியத் ஆட்சியைப் பாதுகாக்கவும், எல்லா உழைக்கும் மக்களின் அதில் முதலாவதும் முக்கிய மானதுமாக தொழிலாளர், ஏழை விவசாயிகளின் நலன் களைப் பாதுகாக்கவும் திடமாகவும் உறுதியாகவும் நிற் கிறது!

முதலாளித்துவக் கூலி எழுத்தாளர்களும் முதலாளிகள் தம்மை மிரட்டுவதற்கு இடம் கொடுத்தவர்களும், நாம் இணங்கிப் போகாதவர்கள், சமரசத்திற்கு இடமளியாத வர்கள், இன்னொரு கட்சியுடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள மறுப்பவர்கள் என்று ஒரே குரலில் நம் மீது குற்றம் சாட்டுகிறார்கள். தோழர்களே இது உண்மை அல்ல! நம்முடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள் ளும்படி இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை நாம் அழைத்திருக்கிறோம் தொடர்ந்து அழைத்தபடி இருக்கிறோம். அவர்கள் மறுத்து விட்டார்கள் என்றால் அது நமது குற்

றம் அல்ல. நாம் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினோம். சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசுக்கு வந்த பிரதிநிதிகள் கலைந்து சென்ற பிறகு இந்தப் பேச்சுவார்த்தைகளின் இடையே எல்லா வகையான சலுகைகளையும் வாக்களித்தோம். கர்னீலவ் பேர்வழிகளின் கூண்டு எனப்படும் பெத்ரோகிராத் நகர டூமாவின் ஒரு பகுதியின் பிரதிநிதிகளை ஆட்சியில் வர அனுமதிக்கவும் கூடத் தற்காலிகமாக ஒப்புக்கொள்ளும் அளவுக்கு வந்தோம். கர்னீலவ்வாதிக் கயவர்கள், முதலாளிகள் நிலவுடைமையாளர்களின் கண்ணுன புதல்வர்கள், ஜங்கர்கள் பெத்ரோகிராதில் கடந்த ஞாயிறன்று அவர்கள் செய்தது போல் மக்கள் சித்தத்தை எதிர்க்க இன்னும் ஒரு முறை முயல்வார்களானுல் இந்த டூமா மக்களால் வெள்ளத்திலடித்துச் செல்லப்படும். அவர்கள் அவ்வாறு மீண்டும் செய்ய விரும்புவார்கள் (நேற்று, நவம்பர் 3ந் தேதி புரிஷ்கேவிச்சின் சதித்திட்டமும் அவரிடமிருந்து நேற்றுக் கைப்பற்றப்பட்ட பத்திரங்களும் அம்பலப்படுத்தப் பட்டதால் இது நிரூபிக்கப்பட்டது). ஆனுல் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் பின்னுல் நின்று அவர்கள் மூலம் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்குச் செயல்பட்டு வரும் கனவான்கள் சலுகைகள் தருவதற்கான நமது ஆயத்தத்தை ஒரு பலவீனமாக அர்த்தப்படுத்திக்கொண்டனர், இந்த ஆயத்தத்தைச் சாதகமாக்கி நமக்குப் புதிய இறுதி எச்சரிக்கைகளைத் தருகின்றனர். நவம்பர் 3ந் தேதி மாநாட்டில் திரு அப்ரமோவிச் மற்றும் திரு மார்த்தவ் தோன்றி கைதுகளையும், முதலாளித்துவச் செய்திப் பத்திரிகைகளை அடக்குவதையும் நமது அரசாங்கம் நிறுத்தும் வரை பேச்சுவார்த்தைகள் நடைபெறு என்ற இறுதி எச்சரிக்கையை விடுத்தனர்.

நமது கட்சியும், சோவியத்துகளின் காங்கிரசின் மத்திய நிர்வாகக் கமிட்டியும் இந்த இறுதி எச்சரிக்கையினை ஒருங்கே ஏற்றுக் கொள்ள மறுத்தன. இந்த இறுதி எச்சரிக்கை கலேதின், முதலாளித்துவ, கேரென்ஸ்கி மற்றும் கர்னீலவ் ஆதரவாளர்களிடம் இருந்தே தோன்றியது என்பது கண் கூடு. புரிஷ்கேவிச்சின் சதித்திட்டம் மற்றும் பெத்ரோகிராத் மீது அணிவகுத்துச் செல்லப் போவதாக நம்மை அச்சுறுத்திய

17ஆம் சேனைப் பிரிவின் ஒரு பிரதிநிதிக் குழு நவம்பர் 5ல் பெத்ரோகிராதில் தோற்றமளித்தது (இது ஒரு கேலிக்கூத்தான அச்சுறுத்தல், ஏனெனில் இந்த கர்னீலவ் ஆதரிப்பு முன்னணிப் படைப் பிரிவு ஏற்கெனவே முறியடிக்கப்பட்டு காட்சினு[25] என்னும் இடத்தில் பின்வாங்கி விட்டது. இதில் பெரும்பாலர் சோவியத்துகளை எதிர்த்துப் போராட மறுத்தனர்) ஆகிய இந்த எல்லா நிகழ்ச்சிகளும் அப்ரமோவிச் மற்றும் மார்த்தவ் விடுத்த இறுதி எச்சரிக்கையின் மெய்யான கர்த்தாக்கள் யார், இந்தப் பேர்வழிகள் உண்மையில் யாருக்குச் சேவை புரிகிறுர்கள் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டன.

உழைப்பாளி மக்கள் பரபரப்பு இன்றியும் உறுதியாகவும் இருப்பார்களாக! சோவியத்துகளில் இருக்கும் சிறுபான்மையின் இறுதி எச்சரிக்கைகளுக்கு நமது கட்சி என்றும் பணியாது. இந்தச் சிறுபான்மை தம்மை முதலாளிகள் மிரட்டுவதற்கு இடமளித்தது. அதன் நல்லெண்ணங்கள் எதுவாக இருந்த போதிலும் இது கர்னீலவ் வாதிகளின் கரங்களில் வெறும் பொம்மையாகவே உண்மையில் செயல்படுகிறது.

நாம் சோவியத் ஆட்சி அதிகாரம் என்ற கோட்பாட்டின் மீது, அதாவது சோவியத்துகளின் கடந்த காங்கிரசில் ஏற்பட்ட பெரும்பான்மையின் ஆட்சி அதிகாரம் என்ற கோட்பாட்டின் மீது உறுதியாக நிற்கிறோம். சோவியத்துகளின் சிறுபான்மையுடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள நாம் ஒப்புக் கொண்டோம் இன்னும் ஒப்புக் கொள்கிறோம். ஆனல் அந்தச் சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கீழடங்குவதாக விசுவாசத்தோடும் நேர்மையோடும் ஒத்துக் கொள்ள வேண்டும். சோஷலிசத்தை நோக்கிப் படிப்படியான ஆனல் உறுதியான நெறிபிறழாத அடிகளை எடுத்து வைக்க சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் முழுமையாலும் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆனல் மக்களால் ஆதரிக்கப்படாத அறிவு ஜீவிகளின் கோஷ்டிகளின் எந்த ஒரு இறுதி எச்சரிக்கைக்கும் அடிபணிய மாட்டோம். எதார்த்த

உண்மையில் அவர்கள் கர்னீலவ் ஆதரவாளர், சாவின் கவின் ஆட்கள், ஐங்கர்கள் ஆகியவர்களால் மட்டுமே ஆதரிக்கப்படுகின்றனர்.

உழைப்பாளி மக்கள் பரபரப்பின்றியும் உறுதியாகவும் இருப்பார்களாக! நமது கட்சி சோவியத் பெரும்பான்மை யின் கட்சி அவர்களது நலன்களைப் பாதுகாக்கத் திடமாக வும் ஒற்றுமையாகவும் நிற்கிறது. முன் போலவே நமது கட்சியின் பின்னுல், நகரங்களில் வாழும் லட்சக் கணக்கான தொழிலாளர்கள், போர்முனையில் இருக்கும் படையாளிகள், கிராமங்களிலுள்ள விவசாயிகள் நிற்கிருர்கள், எதையும் செய்து எவ்வகையாலும் சமாதானத்தின் வெற்றியையும் சோஷலிசத்தின் வெற்றியையும் சாதனையாக்கத் தயாராக இருக்கிருர்கள்!

நவம்பர் 5—6 (18—19),
1917ல் எழுதப்பட்டது

பிராவ்தா, இதழ் 182,
நவம்பர் 20 (7), 1917ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 72-76

விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் விசேஷ அகில ருஷ்யக் காங்கிரஸ்[26]

1917 நவம்பர் 10-25
(நவம்பர் 23—டிசம்பர் 8)

1

நகல் தீர்மானம்

தொழிலாளர்கள், படையாளர்கள் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசால் அங்கீகரிக்கப் பட்டதும், ருஷ்யக் குடியரசின் இடைக்கால தொழிலாளர், விவசாயிகள் தற்காலிக அரசாங்கம் என்ற முறையில் மக் கள் கமிசார்களின் கவுன்சிலால் வெளியிடப்பட்டதுமான 1917 அக்டோபர் 26ந் தேதிய நிலம் பற்றிய சட்டத்தை (அரசாணையை) இந்த விவசாயிகளின் காங்கிரஸ் முழுமை யாகவும் எல்லா வழிகளிலும் ஆதரிக்கிறது. இந்தச் சட் டத்தைச் செயல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான தனது திடமான அசைக்க வொண்ணுத முடிவை விவசாயி களின் காங்கிரஸ் பிரகடனம் செய்கிறது. இதனை ஒரு முகமாக ஆதரிக்கும்படியும் வட்டாரங்களில் தவக்கம் எதுவு மின்றி தாமே நிறைவேற்றி முடிக்கவும் முன்வரும்படி எல்லா விவசாயிகளையும் கேட்டுக் கொள்கிறது. மேலும் உழைக்கும் சுரண்டப்படும் விவசாயிகளின் நலன்களுக் காகச் சொல்லில் மட்டுமன்றிச் செயலிலும் தமது பூரண அர்ப்பணிப்பை நிரூபித்துக் காட்டியவர்களும், நிலவுடை மையாளர்கள் முதலாளிகள் அவர்களது ஆதரவாளர்கள் மற்றும் கையாட்கள் தூண்டும் எந்த வகையான எதிர்ப் பையும் எதிரிட்டு, இந்த நலன்களை ஆதரித்து நிற்கக் கூடியவர்களுமான நபர்களை மட்டுமே எல்லாப் பொறுப் பான பதவிகளுக்கும் பணி இடங்களுக்கும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அக்டோபர் 25ல் தொடங்கிய தொழிலாளரின் சோஷ

லிஸ்டுப் புரட்சி வெற்றியடைந்தால் மட்டுமே நிலம் பற்றிய சட்டத்தில் உள்ளடங்கியுள்ள எல்லா நடவடிக்கைகளேயும் முழுமையாகச் செயல்படுத்த முடியும் என்று விவசாயி களின் காங்கிரஸ் தனது நம்பிக்கையை வெளியிடுகிறது. காரணம், சோஷலிஸ்டுப் புரட்சியால் மட்டுமே இழப்பீடின்றி உழைக்கும் விவசாயிகளுக்கு நிலத்தை உடைமை மாற்றி வழங்க முடியும், நிலவுடைமையாளர் கருவிகளைப் பறிமுதல் செய்ய முடியும், விவசாயிக் கூலித் தொழிலாளர்களின் நலன் களை முழுமையாகப் பாதுகாக்க முடியும், முதலாளித்துவக் கூலி அடிமைத் தனத்தின் அமைப்பு முழுவதையும் நிபந்தனை இன்றி ஒழிப்பதை உடனடியாகத் தொடங்க முடியும், பல் வேறு பிராந்தியங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் இடையே விவசாயம் மற்றும் தொழிற்துறை உற்பத்திப் பண்டங் களைச் சரியாகவும் திட்டமிட்ட முறையிலும் வினியோகம் செய்ய முடியும், வங்கிகளைக் கட்டுப்படுத்த முடியும் (இத்தகைய கட்டுப்பாடு இல்லாவிட்டால் நிலத்தின் தனி யுடைமை ஒழிக்கப்பட்ட போதிலும் மக்கள் நிலத்தின் எஜமானர்களாக இருக்க முடியாது), பிரத்தியேகமாயும் உழைக்கும் சுரண்டப்பட்ட மக்களுக்கு சகலதுறை அரசு உதவி வழங்கப்பட முடியும்.

எனவே, விவசாயிகளின் காங்கிரஸ் அக்டோபர் 25ந் தேதிய புரட்சியைப் பூரணமாக ஆதரிக்கிறது. அது துல்லிய மாயும் ஒரு சோஷலிஸ்டுப் புரட்சி என்ற முறையில் அதை ஆதரிக்கிறது. உரிய முறையில் படிப்படியே ஆனல் சிறிதளவும் ஊசலாட்டம் இன்றி, ருஷ்யக் குடியரசை சோஷலிஸ்டு முறையில் மாற்றி அமைப்பதற்கான நோக் கம் கொண்ட நடவடிக்கைகளை நிறைவேற்றி முடிப்பதென்ற தனது நெறிதிறம்பாத உறுதிப்பாட்டைப் பிரகடனம் செய்கிறது.

எதுமட்டுமே நிலையான வெற்றியையும் நிலம் பற்றிய சட்டத்தைப் பூரணமாக அமுல் செய்வதையும் சாதனை ஆக்க முடியுமோ அந்த சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக் குரிய ஓர் அவசியமான நிபந்தனை, முன்னேறிய நாடுகள் எல்லாவற்றிலும் தொழிலாளி வர்க்கத்துடன்—பாட்டாளி

களுடன்—உழைக்கும் சுரண்டப்படும் விவசாயி மக்களின் நெருங்கிய கூட்டணி ஏற்பட வேண்டும் என்பதாகும். ருஷ்யக் குடியரசில் அரசின் முழு அமைப்பும் நிர்வாகமும் இனி மேற்பட்டு அடி முதல் முடி வரை இத்தகைய கூட் டணியினை அடிப்படையாக்கியதாக இருத்தல் வேண்டும். அனுபவம் நிராகரித்து விட்ட ஒரு பாதைக்கு, முதலாளி வர்க்கம் மற்றும் முதலாளித்துவக் கொள்கையின் தீவிர ஆதரவாளர்களுடன் சமரசம் செய்து கொள்ளும் பாதைக் குத் திரும்புவதற்கான நேரடியும் மறைமுகமுமான, பகி ரங்கமும் இரகசியமுமான எல்லா முயற்சிகளையும் ஒவ்வொரு முயற்சியையும் நிராகரித்து, இந்தக் கூட்டணி மட்டுமே உலக முழுதிலும் சோஷலிசத்தின் வெற்றியை உறுதிப் படுத்த முடியும்.

நவம்பர் 14 (27), 1917ல் எழுதப்பட்டது

2

நிலப்பிரச்சினை மீதான முடிவுரை நவம்பர் 18 (டிசம்பர் 1)

பத்திரிகைச் செய்தி

போல்ஷிவிக்குகளுக்கு எதிராக சோஷலிஸ்டு-புரட்சி யாளர்கள் சாற்றிய அராஜகம் பற்றிய குற்றச் சாட்டு நிரு பிக்கப்படவில்லை என்பதைத் தோழர் லெனின் முதலில் எடுத்துக் காட்டினர்.

சோஷலிஸ்டுகள் அராஜகவாதிகளிடமிருந்து எந்த வழி யில் வேறுபடுகிருர்கள்? அராஜகவாதிகள் அரசு அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, அதே பொழுதில் சோஷலிஸ்டு கள், அவர்களிடையே உள்ள போல்ஷிவிக்குகள், அன்று இருந்த நிலவரத்துக்கும் அவர்கள் எதை நோக்கி முன் னேறிக் கொண்டிருந்தார்களோ அந்த சோஷலிசத்திற்கும்

இடையிலான மாறுதல் கட்டத்தில் அரசு அதிகாரத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

போல்ஷிவிக்குகள் வலுவான ஓர் அதிகாரத்தை ஆதரித்தார்கள், ஆனுல் அது தொழிலாளர், விவசாயிகளின் அதிகாரமாக இருக்க வேண்டும்.

எல்லா ஆட்சி அதிகாரமும் வலுக்கட்டாயமானதே. ஆனுல் இதுகாறும் இது எப்போதுமே சிறுபான்மையின் ஆட்சி அதிகாரமாக, தொழிலாளிக்கும் விவசாயிக்கும் எதிராகப் பயன்படுத்தக் கூடிய நிலவுடைமையாளர், முதலாளியின் ஆட்சி அதிகாரமாக இருந்து வந்துள்ளது.

போல்ஷிவிக்குகள் ஆதரிக்கும் ஆட்சி அதிகாரம், முதலாளிகள் மற்றும் நிலவுடைமையாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடியதான, பெரும்பான்மை தொழிலாளர், விவசாயிகளின் உறுதியான அதிகாரமாகும் என்று அவர் கூறினுர்.

நிலம் பற்றிய இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தீர்மானம் புதிய அரசாங்கத்தை ஒரு மக்கள் சோஷலிஸ்டு அரசாங்கம் என்று அழைத்திருக்கிறது எனவும், போல்ஷிவிக்குகளேயும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களேயும் நெருக்கமாக ஒற்றுமைப்படுத்த முடியும் அம்சங்களே விவரித்துள்ளது எனவும் பின்னுல் தோழர் லெனின் சுட்டிக் காட்டினுர்.

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் கூட்டணி, இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் போல்ஷிவிக்குகளுக்கும் இடையிலான ஓர் உடன்பாட்டுக்கான ஓர் அடிப்படையாகும்.

அது ஒரு நேர்மையான இணேவு, நேர்மையான கூட்டணி. இந்தப் புரட்சி ஒரு சோஷலிஸ்டுப் புரட்சி என்ற தமது துணிபை அறிவிப்பதில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மேலும் அதிகத் திட்டவட்டமாக இருப்பார்களானுல் அது உச்சமட்டத்திலும் கூட நேர்மையான இணேவாக விளங்கும். இது ஒரு சோஷலிஸ்டுப் புரட்சியாகவே இருந்தது. நிலத்தில் தனியுடைமை ஒழிப்பு, தொழிலாளர் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது, வங்கிகளேத் தேசவுடை

மையாக்குவது—இவையாவும் சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளேயாகும். அவை சோஷலிசம் அல்ல. ஆனல் அவை மாபெரும் தாவலில் சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளாகும். உடனடியாகத் தேனும் பாலும் பெருக்கெடுத்தோடும் என்று போல்ஷிவிக்குகள் தொழிலாளர் விவசாயிகளுக்கு வாக்குறுதி அளிக்கவில்லை. ஆனல் தொழிலாளர்களுக்கும் சுரண்டப்படும் விவசாயிகளுக்கும் இடையிலான நெருக்கமான கூட்டணியும், சோவியத்துகளின் ஆட்சி அதிகாரத்திற்கான உறுதியான ஊசலாட்டமற்ற போராட்டமும் சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும் என்று அவர்கள் சொன்னர்கள். உண்மையில் மக்கள் கட்சியாக இருக்க விரும்பும் எந்தக் கட்சியும் இந்தப் புரட்சி ஒரு சோஷலிஸ்டுப் புரட்சி என்பதைத் தெளிவாயும் திட்டவட்டமாயும் கூற வேண்டும்.

இதை இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் தெளிவாகவும் உறுதியாகவும் சாற்றும் பட்சத்தில் மட்டுமே, அவர்களுடனை போல்ஷிவிக்குகளின் கூட்டணி வளரும் வலுவடையும்.

போல்ஷிவிக்குகள் நிலத்தைச் சமூகவுடைமையாக்குவதற்கு எதிராக இருந்தார்கள் என்றும் அதனல் தான் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன் ஓர் உடன்பாட்டுக்கு வர முடியவில்லை எனவும் கூறப்பட்டது.

சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் நில சமூகவுடைமையாக்கலுக்கு எதிராக இருந்தது உண்மையே, ஆனல் அது இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடனை நேர்மையான கூட்டணியைத் தடை செய்யவில்லை என்று போல்ஷிவிக்குகள் அதற்குப் பதிலளிக்கிருர்கள்.

இன்றே நாளையோ இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் தமது விவசாயத்துறை அமைச்சரை நியமனம் செய்து அவர் நிலத்தைச் சமூகவுடைமையாக்கும் ஒரு சட்டத்தைப் பிரேரேபிப்பார். ஆனல் இச்சட்டத்தை எதிர்த்து போல்ஷிவிக்குகள் வாக்களிக்க மாட்டார்கள்; அவர்கள் ஒட்டளிக்காது விலகி நிற்பார்கள்.

முடிவாகத் தோழர் லெனின் தொழிலாளர், விவசாயி

களின் ஒரு கூட்டணியால் மட்டுமே நிலத்தைப் பெற முடியும் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று வலியுறுத்தினர்.

அரசியல் நிர்ணய சபையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சிறுபான்மையாக இருந்து நிலத்தை சமூகவுடைமையாக்குவதற்கான ஒரு மசோதாவை முன் மொழிவார்களானல் போல்ஷிவிக்குகள் என்ன செய்வார்கள்? ஓட்டு அளிக்காமல் விலகி நிற்பார்களா? என்று தோழர் லெனினிடம் கேட்கப்பட்டது. நிச்சயமாயும் மாட்டார்கள். போல்ஷிவிக்குகள் மசோதாவுக்கு ஓட்டளிப்பார்கள். விவசாயிகளை அவர்களுடைய விரோதிகளுக்கு எதிராக ஆதரிக்க வேண்டும் என்பதால் தான் இதற்கு ஓட்டளிக்கிருர்கள் என்ற ஒரு விளக்கத்தையும் முன்வைப்பார்கள்.

நகல் தீர்மானம் பிராவ்தா, இதழ் *190*லும் இஸ்வேஸ்தியா, இதழ் *226*லும், நவம்பர் *28 (15)*, *1917*ல் வெளியிடப்பட்டது; நிலப் பிரச்சினை மீதான முடிவுரை, இஸ்வேஸ்தியா, இதழ் *230*, நவம்பர் *19*, *1917*ல் மற்றும் பிராவ்தா, இதழ் *195*, டிசம்பர் *4* (நவம்பர் *21*), *1917*ல் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி *35*, பக்கங்கள் *96-97*, *100-101*

தொழிலாளருக்கும் உழைக்கும் சுரண்டப்படும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணி

''பிராவ்தாவுக்கு'' ஒரு கடிதம்

இன்று, சனிக்கிழமை, நவம்பர் 18ஆம் நாள், விவசாயிகளின் காங்கிரசில் நான் உரையாற்றிக் கொண்டிருந்த போது என்னிடம் பகிரங்கமாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு உடனடி நான் பதில் அளித்தேன். இந்தக் கேள்வியும் அதற்கான எனது பதிலும் உடனடியாக வாசகப் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுவது மிகவும் முக்கியமானது. காரணம் எனது சொந்த சார்பில் மட்டுமே நான் வழக்கமாகப் பேசிய போதிலும், நான் உண்மையில் போல்ஷிவிக் கட்சி முழுவதன் சார்பிலுமே பேசினேன்.

இந்த விஷயம் பின்வருமாறு.

போல்ஷிவிக் தொழிலாளர்களுக்கும், தற்போது பல விவசாயிகள் நம்பிக்கை வைத்திருக்கும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் இடையேயான ஒரு கூட்டணி பற்றிய பிரச்சினையைப் பற்றி விவரித்த நான் எனது உரையில் இந்தக் கூட்டணி ஒரு ''நேர்மையான இணைவாக'' ஒரு நேர்மையான கூட்டணியாக இருக்க முடியும், காரணம் கூலித் தொழிலாளர்களுக்கும் உழைக்கும் சுரண்டப்படும் விவசாயிகளுக்கும் இடையேயான நலன்களில் தீவிரமான வேறுபாடு இல்லை என்று வாதித்தேன். சோஷலிசத்தால் இவ்விரு பகுதியினரின் நலன்களையும் முழுமையாக நிறைவு செய்ய இயலும். சோஷலிசத்தால் மட்டுமே அவர்களது நலன்களை நிறைவு செய்ய முடியும். எனவே பாட்டாளிகளுக்கும் உழைக்கும் சுரண்டப்படும் விவசாயிகளுக்கும் இடையிலான ஒரு ''நேர்மையான கூட்டணி'' சாத்தியம், அவசியமும் ஆகும். இதற்கு நேர்மாறாக உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் வர்க்கங்கள் ஒரு பக்கமும் முதலாளித்துவ வர்க்

கம் மறுபக்கமும் கொண்டதான ஒரு ''இணைவு'' (கூட்டணி). ஒரு ''நேர்மையான இணைவாக'' இருக்க முடியாது காரணம் இந்த வர்க்கங்களின் நலன்களிடையே தீவிரமான வேறுபாடு உள்ளது.

அரசாங்கத்தில் பெரும்பான்மையாக போல்ஷிவிக்குகளும் சிறுபான்மையாக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள், அல்லது ஒரே ஓர் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்—விவசாயத்துறை கமிசார் இருப்பதாக வைத்துக் கொள்வோம் என்று நான் கூறினேன். அத்தகைய சந்தர்ப்ப சூழலில் போல்ஷிவிக்குகளால் ஒரு நேர்மையான இணைவைச் செயல்படுத்த முடியுமா?

அவர்களால் செயல்படுத்த முடியும். காரணம் எதிர்ப் புரட்சி நபர்களை (வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் பாதுகாப்புவாதிகள் உட்பட) எதிர்த்துப் போராடுவதில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்ற போதிலும், சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஏற்கப்பட்டதான நிலம் பற்றிய வேலைத் திட்டத்தில் முற்றிலும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் ஷரத்துக்கள் சம்பந்தப்பட்டதான பிரச்சினைகள் மீது போல்ஷிவிக்குகள் ஓட்டளிக்காது விலகி நின்றே தீர வேண்டும். உதாரணமாக, சமத்துவமான அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை மற்றும் சிறு உடைமையாளர்களிடை நிலத்தை மறுபங்கீடு செய்தல் குறித்த ஷரத்து அத்தகையதாகும்.

அத்தகைய ஷரத்து மீது ஓட்டளிக்காமல் விலகி இருப்பதன் மூலம் போல்ஷிவிக்குகள் தமது வேலைத்திட்டத்தைக் கிஞ்சிற்றும் மாற்றிவிடப் போவதில்லை. சோஷலிசம் வெற்றியுறும் போதில் (தொழிற்சாலைகள் மீது தொழிலாளர் கண்காணிப்பு, தொடர்ந்து அவற்றின் உடைமை பறிக்கப்படுதல், வங்கிகளின் தேசவுடைமையாக்கம், நாட்டின் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் ஒழுங்குறுத்த உயர் பொருளாதாரக் கவுன்சில் உருவாக்கம்) சிறிய உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் விவசாயிகள் முன்வைக்கும் இடைக்கால நடவடிக்கைகள், அத்தகைய நடவடிக்கைகள் சோஷலிச

லட்சியத்திற்குத் தீங்கிழையாத பட்சம், அவற்றைத் தொழிலாளர்கள் கட்டாயம் ஒப்புக் கொள்ளும் நிலை ஏற்படும். காவுத்ஸ்கியும் கூட அவர் இன்னும் மார்க்சியவாதியாக இருந்த போது (1899—1909) சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கான நடவடிக்கைகள் பெரு வீத விவசாயம் உள்ள நாடுகளிலும், சிறு வீத விவசாயம் உள்ள நாடுகளிலும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது என்பதை அடிக்கடி ஒத்துக் கொண்டார் என்று நான் கூறினேன்.

மக்கள் கமிசார்களின் கவுன்சிலிலோ அல்லது மத்திய நிர்வாகக் கமிட்டியிலோ இத்தகைய விஷயம் முடிவு செய்யப்படும் போது போல்ஷிவிக்குகளாகிய நாம் ஓட்டுச் செய்யாமல் விலகி இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். காரணம் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் (அவர்களை ஆதரிக்கும் விவசாயிகளும்) தொழிலாளர் கண்காணிப்பு, வங்கிகள் தேசவுடைமையாக்கப்படுவது முதலியவற்றை ஒப்புக் கொண்டால் முழுமையான சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய நடவடிக்கைகளில் சமத்துவமான அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை என்பது ஒன்று மட்டுமே ஆகும். இத்தகைய மாறுதல் கட்ட நடவடிக்கைகளை பாட்டாளி வர்க்கம் திணிப்பது என்பது அபத்தம். சோஷலிசத்தின் வெற்றியின் நலன்களை உத்தேசித்து இந்த மாறுதல் கட்ட நடவடிக்கைகள் விஷயத்தில் சிறிய உழைக்கும் சுரண்டப்படும் விவசாயிகளின் தேர்வுக்கே விட்டுக் கொடுக்கும் கடப்பாடு பாட்டாளி வர்க்கத்துக்கு உள்ளது. அவை சோஷலிசத்தின் லட்சியத்திற்கு எத்தகைய தீங்கும் விளைக்கா.

அதற்குப் பிறகு, ஓர் இடதுசாரி சோஷலிஸ்டுப்-புரட்சியாளர் (அவர் தோழர் ஃபியொஃபிலாக்தவ் என்று நினைக்கிறேன்) என்னிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டார்:

''முதலாளி வர்க்கம் விவசாயிகளுக்கு எதிராக இருக்க, முடிவு எடுப்பது போல்ஷிவிக்குகளைச் சார்ந்து இருக்கும் போதில் அரசியல் நிர்ணய சபையில் விவசாயிகள் சமத்துவமான அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை பற்றிய ஒரு சட்டத்தை நிறைவேற்ற விரும்பும் பட்சத்தில், போல்ஷிவிக்குகள் எவ்வாறு செயல்படுவார்கள்?''

நான் பதிலளித்தேன்: சோஷலிசத்தின் லட்சியம் தொழிலாளர் கண்காணிப்பு புகுத்தப்படல் வங்கிகளின் தேசவுடைமையாக்கம் இத்தியாதிகளால் உத்தரவாதம் செய்யப்படும் போது, அத்தகைய சந்தர்ப்பச் சூழல்களின் கீழ் தொழிலாளர் மற்றும் உழைக்கும் சுரண்டப்படும் விவசாயிகளின் இடையிலான கூட்டணி, பாட்டாளி வர்க்கக் கட்சியை முதலாளிகளை எதிர்த்து விவசாயிகளுக்கு ஆதரவாக ஓட்டளிக்கும்படிக் கட்டாயப்படுத்தும். ஓட்டு எடுக்கப்படும் போது போல்ஷிவிக்குகள் தமது மறுப்பை வெளிப்படுத்தவோ தமது உடன்பாடின்மையைப் பதிவு செய்யவோ உரிமைப்பட்டவர்கள் என்று கருதுகிறேன், ஆனால் அத்தகைய சந்தர்ப்பச் சூழலில் ஒரு பகுதியளவான பிரச்சினை மீது அவற்றுடன் வேறுபாடு இருக்கும் காரணத்தால், ஓட்டுச் செய்யாமல் விலகி இருப்பது, சோஷலிசத்திற்கான போராட்டத்தில் தமது நேசசக்திகளைக் காட்டிக் கொடுப்பதாகும். இத்தகைய நிலைமையில் போல்ஷிவிக்குகள் என்றுமே விவசாயிகளைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். ஆட்சி அதிகாரம் தொழிலாளர், விவசாயிகளின் அரசாங்கத்தின் கரங்களில் இருக்குமானால், தொழிலாளர் கண்காணிப்பு புகுத்தப்பட்டிருக்குமானால், வங்கிகள் தேசவுடைமையாக்கப்பட்டிருக்குமானால், நாட்டின் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் நெறியாக்கம் (ஒழுங்கியக்கம்) செய்ய தொழிலாளர், விவசாயிகளின் உயர் பொருளாதார அமைப்பு நிறுவப்பட்டிருக்குமானால் சமத்துவமான அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை போன்ற தான நடவடிக்கைகள் என்றுமே சோஷலிசத்துக்குக் கேடு விளைவிக்க முடியாது.

அம்முறையில் இருந்தது எனது பதில்.

நி. லெனின்

நவம்பர் 18 (டிசம்பர் 1), 1917ல் எழுதப்பட்டது

பிராவ்தா, இதழ் 194, டிசம்பர் 2 (நவம்பர் 19), 1917ல் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 35, பக்கங்கள் 102-104

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வு டிசம்பர் 1(14) 1917

ஓர் உயர் பொருளாதாரக் கவுன்சில்[27] நிறுவப்படும் பிரச்சினை மீதான உரை

பத்திரிகைச் செய்தி

லெனின் சோவியத் நகலை ஆதரித்துப் பேசுகிருர். உயர் பொருளாதாரக் கவுன்சிலை ஒரு நாடாளுமன்றத்துக்குக் குறுக்கி விட முடியாது. அது அரசியலில் மக்கள் கமிசார் களின் கவுன்சில் இருப்பது போன்று பொருளாதாரத்தில் முதலாளிகளையும் நிலவுடைமையாளர்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு உரிய அதே வகைப்பட்டதான போராடும் அமைப்பாக இருத்தல் வேண்டும் என்று சுட்டிக் காட்டினுர்.

நோவயா ஷீஸ்ன், *இதழ் 192,*
டிசம்பர் 3 (16), 1917

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கம் 134

தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் தொழிலாளர் பிரிவின் கூட்டத்தில் பெத்ரோகிராத் தொழிலாளரின் பொருளாதார நிலை மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் கடமைகள் குறித்து ஆற்றிய உரை

டிசம்பர் 4 (17) 1917

பத்திரிகைச் செய்தி

அக்டோபர் 25ந் தேதியப் புரட்சி பாட்டாளி வர்க்கத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த அரசியல் முதிர்ச்சியையும் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக உறுதியாக நிற்பதற்குரிய அதன் ஆற்றலையும் புலப்படுத்தி விட்டது. எனினும் சோஷலிசத்தின் முழுமையான வெற்றிக்கு பாட்டாளி வர்க்கம் திண்ணமாயும் ஆளும் வர்க்கமாக வேண்டும் என்ற உணர்வு நிரம்பியதான பிரம்மாண்டமான ஒழுங்கமைப்பு முயற்சி அவசியம்.

அரசு அமைப்பை சோஷலிஸ்டு வழிகளில் உருமாற்றுவதற்கான கடமைகள் பாட்டாளி வர்க்கத்தின் முன் உள்ளன. காரணம் ஒரு நடுப்பாதைக்கு ஆதரவாக வாதங்களை எடுத்துக்கூறுவது எவ்வளவு எளிதாக இருந்த போதிலும் அத்தகைய பாதை முக்கியமில்லாதது. நாட்டின் பொருளாதார நிலைமை எட்டிவிட்ட நிலையில் நடுப்பாதை எதற்கும் இடமே இல்லை. ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்த மகத்தான போராட்டத்தில் அரைகுறை நடவடிக்கைகளுக்கு இடமே இல்லை.

விவாதத்துக்குரிய பிரச்சினை—வெற்றியா தோல்வியா என்பதே.

தொழிலாளர் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்,

அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். இது தெளிவானது, காரணம் அவர்கள் இடைவழியான சமரச முடிவுகளை நிரா கரித்தார்கள். புரட்சி எந்தளவு அதிக ஆழ்ந்ததாக இருக் கிறதோ அந்த அளவுக்கு முதலாளித்துவத்தை ஒரு சோஷ லிஸ்டு பொறியமைவு மூலம் மாற்றீடு செய்வதை வெற்றி கரமாக்க மேலும் அதிக அளவில் செயலூக்கமுள்ள ஊழி யர்கள் தேவை. சீர்குலைவு எதுவும் இல்லாவிடினும் கூட குட்டிமுதலாளித்துவ சக்திகள் போதுமானவை அல்ல. இந்தப் பணி மக்கள் திரளை ஈடுபடுத்துவது மூலம் மட்டுமே, மக்கள் திரளின் சுயேச்சையான செயல்பாடுகள் மூலம் மட்டுமே வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் ஒன்றாகும். எனவே பாட்டாளி வர்க்கம் தற்போதைக்குத் தனது நிலைமையை மேம்படுத்திக் கொள்வது பற்றி எண்ணக் கூடாது, மாறாக ஆளும் வர்க்கமாக ஆவது குறித்து எண் ணிப்பார்க்க வேண்டும். நாட்டுப் புறத்துப் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த நலன்கள் குறித்து தெளிவாயும் உறுதியாயும் உணர்கிறது என்று எதிர்பார்க்க முடியாது. தொழிலாளி வர்க்கம் மட்டுமே அவ்வாறு உணர முடியும். மாபெரும் எதிர்கால வாய்ப்புகள் பற்றி உணரும் ஒவ் வொரு பாட்டாளியும் தன்னை ஒரு தலைவனாக உணர்ந்து மக்கள் திரளைத் தன்னுடன் கொண்டு செல்ல வேண்டும்.

உழைக்கும் எல்லோருக்கும் தலைவனாக இருக்கிறது என்ற பொருளில், பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கம் ஆக வேண் டும்; அது அரசியல் ரீதியில் ஆளும் வர்க்கம் ஆக வேண்டும்.

முதலாளி வர்க்கம் மட்டுமே அரசை நடத்த முடியும் என்ற தப்பெண்ணத்தை எதிர்த்துப் போராட வேண்டும். பாட்டாளி வர்க்கம் அரசின் நிர்வாகத்தைத் தானே எடுத்துக்கொள்ள வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் பணிகளைச் சிக்கலாக்குவதற்கு முதலாளிகள் தம்மால் இயன்ற சகலத்தையும் செய்து வரு கிறார்கள். பொருளாதாரத் துறையில் எல்லாத் தொழிலாளி வர்க்க நிறுவனங்களும்—தொழிற்சங்கங்கள், ஆலைக் கமிட்டிகள் மற்றும் பிற — ஒரு வைராக்கியமான போராட்டத்தை

நடத்த வேண்டும். தொழிலாளி வர்க்கப் புரட்சியைத் தகர்க்கும் பொருட்டு முதலாளி வர்க்கம் எல்லாவற்றையும் பாழ்படுத்தி வருகிறது, எல்லாவற்றையும் நாசப்படுத்தி வருகிறது. உற்பத்தியை ஒழுங்கமைக்கும் பணிகள் முற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மீது சுமந்தது. அரசு விவகாரங்களும், வங்கிகள் மற்றும் ஆலைகளை நிர்வாகம் செய்வதும் தொழிலாளர்களின் சக்திக்கு அப்பாற்பட்டவை என்ற தப்பெண்ணத்தை என்றென்றைக்குமாக ஒழித்துக் கட்ட வேண்டும். பிரம்மாண்டமான அன்றாட ஒழுங்கமைப்பு வேலை மூலம் மட்டுமே இவை அனைத்துக்கும் தீர்வு காண முடியும்.

பண்டங்கள் பரிமாற்றத்தை ஒழுங்கமைப்பதும், முறையான கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் புகுத்துவதும் மிகவும் முக்கியமானவை. இவை தொழிலாளி வர்க்கத்தின் பணிகளாகும். இவற்றை வெற்றிகரமாகச் செய்வதற்குத் தேவையான ஞானத்தை ஆலை வாழ்க்கை தொழிலாளி வர்க்கத்துக்கு வழங்கியுள்ளது.

ஒவ்வொரு ஆலைக் கமிட்டியும் தனது சொந்த ஆலையின் விவகாரங்களில் மட்டும் அக்கறை செலுத்தினால் போதாது; அரசு முழுதிலுமான வாழ்க்கையை முறைப்படுத்த உதவும் ஸ்தாபன குழுவாகவும் விளங்க வேண்டும்.

தனியுடைமைச் சொத்துக்களை ஒழிப்பது பற்றி ஓர் அரசாணை பிறப்பிப்பது எளிது. ஆனால் இதைத் தொழிலாளர் மூலம் மட்டுமே அமுல்படுத்த வேண்டும், அமுல்படுத்த முடியும். தவறுகள் ஏற்படும்—இவை ஒரு புதிய வாழ்க்கைப் பாதையினைப் படைத்து வரும் ஒரு புதிய வர்க்கத்தின் தவறுகளாகவே இருக்கும்.

பொருளாதார வாழ்வை ஒழுங்கமைப்பதற்கு ஒரு உறுதியான திட்டம் இருக்கவில்லை, இருந்திருக்க முடியாது.

எவராலும் திட்டம் ஒன்றை வழங்கி இருக்க முடியாது. ஆனால் மக்கள் திரளால் அவர்களது அனுபவத்தின் மூலம் கீழ்மட்டத்திலிருந்து வழங்கி இருக்க முடியும். நெறிமுறைகள் நிச்சயமாயும் அளிக்கப்படும், செல்வழி சுட்டப்படும், ஆனால் மேல்மட்டத்தில் இருந்தும் கீழ்மட்டத்தில் இருந்தும் ஏககாலத்தில் தொடங்க வேண்டுவது அவசியம்.

சோவியத்துகள் ருஷ்யாவில் எல்லா உற்பத்தியையும் ஒழுங்கியக்கம் செய்யும் அமைப்புகள் ஆக வேண்டும். ஆனால் அவை துருப்புக்கள் இல்லாத ராணுவத் தலைமையகங்கள் ஆகிவிடாமல் இருக்க, கீழ்மட்டங்களில் வேலை செய்ய வேண்டுவது அவசியம்....*

நாடு தழுவிய அளவில் கண்காணிப்பையும் உற்பத்தியையும் ஒழுங்கமைக்கத் தொழிலாளி வர்க்க மக்கள் திரள் ஆரம்பிக்க வேண்டும். தனிநபர்களின் அமைப்பு அல்ல மாறாக, எல்லா உழைக்கும் மக்களையும் கொண்ட அமைப்பு வெற்றியை உத்தரவாதம் செய்யும். நாம் அதைச் சாதித்தால், பொருளாதார வாழ்வை நாம் ஒழுங்குபடுத்தினால் எங்களை எதிர்த்து நிற்கும் சகலமும் தாமாகவே மறைந்து போகும்.

பிராவ்தா, இதழ் *208*, டிசம்பர் *20 (7), 1917* மற்றும் சொல்தாத்ஸ்கயா பிராவ்தா, இதழ் *104*, டிசம்பர் *14, 1917*	நூல் திரட்டு, தொகுதி *35*, பக்கங்கள் *146-148*

* தெளிவில்லாத சில சொற்கள் நீக்கப்பட்டுள்ளன. —ப-ர்.

அரசியல் நிர்ணய சபை பற்றிய ஆராய்ச்சியுரைகள்

1) ஓர் அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை புரட்சிகர சமூக-ஜனநாயகவாதத்தின் வேலைத்திட்டத்தின் முற்றிலும் நியாயமான ஒரு பகுதியாகும். காரணம் ஒரு முதலாளித்துவக் குடியரசில் அரசியல் நிர்ணய சபை ஆக உயர் வடிவமான ஜனநாயகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மேலும் ஒரு பூர்வாங்க நாடாளுமன்றத்தை[28] நிறுவுவது மூலம் கேரென்ஸ்கி தலைமையிலான ஏகாதிபத்தியக் குடியரசு தேர்தல்களில் மோசடி செய்யவும், பல வழிகளில் ஜனநாயகத்தை மீறவும் ஆயத்தம் செய்துவந்ததும் இதற்குக் காரணமாகும்.

2) அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் அதேபோதில், புரட்சிகர சமூக-ஜனநாயகவாதம் 1917 புரட்சியின் துவக்க முதலே சோவியத்துகளின் குடியரசு, அரசியல் நிர்ணய சபையுடனான வழக்கமான முதலாளித்துவக் குடியரசை விடவும் உயர் வடிவத்திலான ஜனநாயகம் என்பதைத் திரும்பத்திரும்ப வலியுறுத்தியது.

3) முதலாளித்துவ அமைப்பில் இருந்து சோஷலிஸ்டு அமைப்புக்கு, பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்கு மாறிச் செல்வதற்கு (தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின்) சோவியத்துகளின் குடியரசு (ஓர் அரசியல் நிர்ணய சபையால் அணிசெய்யப்பட்ட வழக்கமான முதலாளித்துவக் குடியரசுடன் ஒப்பு நோக்கும் போதில்) ஓர் உயர் மாதிரியிலான ஜனநாயக நிறுவனம் மட்டுமல்ல, ஆனால், சோஷலிசத்திற்கு மிகவும் வேதனை

இன்றி மாறிச்செல்வதை உறுதிப்படுத்தும் ஆற்றலுடைய ஒரே ஒரு வடிவமும் ஆகும்.

4) நமது புரட்சியில் 1917 அக்டோபரில் சமர்ப்பிக்கப் பட்டதான பட்டியல்களின் அடிப்படையில் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவதானது, இந்த அரசியல் நிர்ணய சபைக் கான தேர்தல்கள் பொது மக்களின் சித்தத்தையும் குறிப் பாக உழைக்கும் மக்களின் சித்தத்தையும் மெய்ப்பட வெளிப்படுத்தும் சாத்தியக் கூறுகளை விலக்கிவிடும் நிலைமை களின் கீழ், இப்போது நடைபெறுகிறது.

5) முதலாவதாக, கட்சிப் பெயர்ப் பட்டியல்கள் அந்தப் பட்டியல்களில் பிரதிபலிக்கும் கட்சிப் பிரிவுகளுக்கு ஏற்ப மக்களை மெய்யாகவே பிரிவினை செய்யப் பொருத்தமான முறையில் அமைந்தால் மட்டுமே, சரிசமவீதப் பிரதிநிதித் துவம் மக்களின் சித்தத்தை மெய்ப்பட வெளிப்படுத்துவதில் போய் முடியும். ஆனால் நம் விஷயத்தில் மே முதல் அக் டோபர் வரை மக்கள் மத்தியில் குறிப்பாயும் விவசாயிகள் மத்தியில் மிகப்பெருமளவிலான ஆதரவாளர்களைக் கொண் டிருந்த சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி 1917 அக்டோ பரில் அரசியல் நிர்ணய சபைக்கு ஒன்றிணைந்த தேர்தல் பெயர்ப்பட்டியலுடன் முன் வந்ததும், 1917 நவம்பரில் தேர்தலுக்குப் பிறகு சபை கூடுமுன்பு பிளவுற்றதும் எல் லோரும் நன்கறிந்ததே.

இந்தக் காரணத்தால், பெருந்திரளான வாக்காளர் சித்தத்துக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் இயைபுக்கும் இடையே சம்பிரதாயமான ஒரு பொருத்தம் கூட இல்லை, இருக்கவும் முடியாது.

6) இரண்டாவதாக, அரசியல் நிர்ணய சபைக்கான வேட் பாளர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு 1917 அக்டோபர் 25ந் தேதி தொடங்கிய அக்டோபர் சோவியத் பாட்டாளி வர்க்க-விவசாயிப் புரட்சியின் முழு வீச்சையும் முக்கியத் துவத்தையும் பேரளவிலான பெரும்பான்மை மக்கள் இன் னும் அறிந்து கொள்ள முடியாதிருந்த ஒரு நேரத்தில், அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்கள் நடைபெற்றதால் ஒருபுறம் மக்களின் சித்தத்துக்கும் குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தின்

சித்தத்துக்கும் மறுபுறம் அரசியல் நிர்ணய சபையின் இயைபுக்கும் இடையே இன்னும் அதிக முக்கியமான, சகஜமானதோ சட்டத்துக்குட்பட்டதோ அல்லாத, மாறுக சமூக-பொருளாதார வர்க்க ஆதாரமுடைய ஒரு முன்பின் முரண்பாடு ஏற்பட்டது.

7) சோவியத்துகளுக்கு ஆட்சி அதிகாரத்தை வென்று அளித்தும், முதலாளி வர்க்கத்திடமிருந்து அரசியல் ஆட்சியினை வலிந்து பறித்தும், அதைப் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஏழை விவசாயி மக்களுக்கும் மாற்றி வழங்கியும், நமது கண்முன்பாகவே அக்டோபர் புரட்சியானது, படிப்படியான வளர்ச்சி கட்டங்களைக் கடந்து முன்செல்கிறது.

8) இது அக்டோபர் 24—25ல் தலைநகரில் அடைந்த வெற்றியோடு துவங்கியது. அன்று, பாட்டாளிகளினதும் விவசாயிகளின் அரசியல் ரீதியில் மிகவும் செயலூக்கமுள்ள பகுதியினதும் முன்னணிப்படையான தொழிலாளர்கள், படையாளர்களின் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரஸ் போல்ஷிவிக் கட்சிக்குப் பெரும்பான்மையினைத் தந்து அதை ஆட்சி அதிகாரத்தில் ஏற்றிவைத்தது.

9) பின்னர் நவம்பர் டிசம்பர் நிகழ்வின் போது புரட்சி சேனை மற்றும் விவசாயிகள் முழுமைக்கும் பரவியது. இது, முதன் முதலாக பழைய தலைமை அமைப்புகள் (சேனைக் கமிட்டிகள், குபேர்னிய விவசாயிகளின் கமிட்டிகள், விவசாயிகள் பிரதிநிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் மத்திய நிர்வாகக் கமிட்டி ஆகியவை) பதவிகளில் இருந்து அகற்றப் பட்டதில் வெளிப்பட்டது. இந்த அமைப்புகள் புரட்சியின் ஒதுக்கப்பட்ட, சமரசம் செய்யும் கட்டத்தை அதன் முதலாளித்துவ கட்டத்தை வெளிப்படுத்தின; பாட்டாளி வர்க்க கட்டத்தை அல்ல. எனவே இவை, ஆழமான விரிவான மக்கள் திரளின் நெருக்குதலின் கீழ் தவிர்க்க முடியாத வகையில் நிச்சயமாயும் மறைந்தே தீர வேண்டும். அவற்றின் இடத்தில் புதிய தலைமை அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

10) தமது ஸ்தாபனங்களின் தலைமை உறுப்புகளை மறுகட்டுமானம் செய்வதற்கான சுரண்டப்பட்ட மக்களின் இந்த

வலிமை மிக்க இயக்கம், இப்போதும் கூட, *1917* டிசம்பர் நடுப்பகுதியிலும் கூட, முடிவடையவில்லை. இன்றும் அமர்வு நடத்திக் கொண்டிருக்கும் ரயில்வே ஊழியர்களின் காங்கிரஸ் இதன் கட்டங்களில் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

11) இதன் விளைவாக, ருஷ்யாவின் வர்க்கச் சக்திகளின் சேர்க்கை அவற்றின் வர்க்கப் போராட்ட நிகழ்வின் ஊடே *1917* நவம்பர், டிசம்பரில் மேற்கொண்டுள்ள வடிவம், *1917* அக்டோபர் நடுவில் அரசியல் நிர்ணய சபைக்காகத் தொகுக்கப்பட்டதான கட்சியின் வேட்பாளர் பட்டியல் எதைப் பிரதிபலித்ததோ அதிலிருந்து கோட்பாடு ரீதியில் வேறுபட்டதாக இருக்கிறது.

12) உக்ரேனிலும் (ஓரளவுக்கு பின்லாந்து பெலோருஷ்யாவிலும் காக்கஸசிலும் கூட) அண்மைக்கால நிகழ்வுகள் இதே போன்று வர்க்கச் சக்திகளின் மறு சேர்க்கையைச் சுட்டுகின்றன. இது ஒருபுறம் உக்ரேனிய ராடா[29], பின்னிஷ் ஸெய்மு ஆகியவற்றின் முதலாளித்துவ தேசியவாதத்துக்கும் மறுபுறம் இந்த ஒவ்வொரு தேசியக் குடியரசிலுமான சோவியத் ஆட்சி, பாட்டாளி வர்க்க-விவசாயிப் புரட்சிக்கும் இடையிலான போராட்டத்தின் செல்வழியில் நடைபெற்று வருகிறது.

13) கடைசியாக, சோவியத் ஆட்சியாளர்களுக்கு எதிராக தொழிலாளர், விவசாயிகளின் அரசாங்கத்துக்கு எதிராகக் காடேட்டு-கலேதின்வாதிகளின் எதிர்ப்புரட்சிக் கலகத்தால் துவக்கப்பட்டதான உள்நாட்டுப் போர் இறுதியாக வர்க்கப் போராட்டத்தை முன்னணிக்குக் கொண்டுவந்து விட்டது. ருஷ்ய மக்களை, அதிலும் முதன்மையாக ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் முன், வரலாறு எதிர் வைத்துள்ள மிகவும் கடுமையான பிரச்சினைகளுக்கு சகஜமான-ஜனநாயக வழியில் தீர்வு காண்பதற்கான எல்லா வாய்ப்புகளையும் அது பாழாக்கிவிட்டது.

14) இந்த முதலாளி, நிலவுடைமையாளர் கலகத்தை (காடேட்டு-கலேதின்வாதிகளின் இயக்கத்தில் வெளியீடாகியுள்ளது போன்ற) எதிர்த்து தொழிலாளரும் விவசாயிகளும்

முழு வெற்றியடைவது மூலம் மட்டுமே, இந்த அடிமை உடைமையாளர் கலகத்தை ஈவிரக்கமின்றி ராணுவத்தைக் கொண்டு அடக்குவது மூலம் மட்டுமே பாட்டாளி வர்க்க-விவசாயிப் புரட்சியை உண்மையாகப் பாதுகாக்க முடியும். நிகழ்ச்சிகளின் போக்கும், இந்தப் புரட்சியில் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியும் ''அரசியல் நிர்ணய சபைக்கே எல்லா ஆட்சி அதிகாரமும்'' என்ற கோஷத்தில் வந்து முடிந்துள்ளது. இது தொழிலாளர், விவசாயிகளின் புரட்சியின் சாதனைகளைப் புறக்கணிக்கிறது. சோவியத் ஆட்சியைப் புறக்கணிக்கிறது. தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரசின், விவசாயிகள் பிரதிநிதிகளின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரசின் முடிவுகளையும் புறக்கணிக்கிறது. உண்மையில் காடேட்டுகள்[30], கலேதின்வாதிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களின் கோஷம் ஆகிவிடுகிறது. அரசியல் நிர்ணய சபை சோவியத் ஆட்சியில் இருந்து பிரிந்து விலகுமானால் அதன் அரசியல் அழிவு தவிர்க்கவியலா முடிவாகும் என்பதை மக்கள் அனைவரும்* இப்போது முழுமையாக அறிவார்கள்.

15) தேசிய வாழ்வின் பிரத்தியேகமாயும் கடினமான பிரச்சினைகளில் ஒன்று சமாதானம் பற்றிய பிரச்சினை. சமாதானத்திற்காக உண்மையிலேயே புரட்சிகரமான ஒரு போராட்டம் அக்டோபர் 25 புரட்சியின் வெற்றிக்குப் பிறகே ஆரம்பமாயிற்று. இந்த வெற்றியின் முதல் பலன்கள், இரகசிய உடன்படிக்கைகள் பிரசுரம், போர்நிறுத்த ஏற்பாடு மற்றும் பிரதேசக் கைப்பற்றல்கள், தண்ட இழப்பீடுகள் இல்லாத பொது சமாதானத்திற்கான பகிரங்கப் பேச்சுவார்த்தைகளின் துவக்கம் ஆகியவற்றில் தோற்றமளித்தன.

இப்போது மட்டுமே, விரிவான மக்கள் பகுதிகள் சமாதானத்திற்கான புரட்சிகரப் போராட்டத்தின் கொள்கையை

---

* **பிராவ்தாவில்** தொடர்ந்து கூறப்படுவதாவது: ''இந்தக் கோஷம் உண்மையில் சோவியத் ஆட்சியை அகற்றுவதற்கான ஒரு போராட்டம் என்றே பொருள்படும் என்பதையும் உணர்ந்து வருகிறார்கள் மற்றும்....''—**ப-ர்.**

கருதிப் பார்க்கவும் அதன் பலன்களை ஆராயவுமான முழுமையான பகிரங்கமான வாய்ப்பினை மெய்யாகவே பெறுகிறார்கள்.

அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடைபெற்ற சமயத்தில் பெருந்திரளான மக்களுக்கு இத்தகைய வாய்ப்பு இருக்கவில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்டதான அரசியல் நிர்ணய சபையின் இயைபுக்கும், போரை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சினையில் மக்களின் மெய்யான சித்தத்திற்கும் இடையிலான இந்த முரண்பாடு இந்தக் கருத்துக் கோணத்தில் இருந்தும் தவிர்க்க முடியாததாகும்.

16) மேலே குறிப்பிட்டதான சந்தர்ப்பச் சூழல்கள் அனைத்தையும் சேர்த்துப்பார்க்கும் போது அதன் விளைவு பாட்டாளி-விவசாயிப் புரட்சிக்கு முன்பதாக, முதலாளி வர்க்கத்தின் ஆட்சியின் கீழ் நிலவிய கட்சிகளின் தேர்தல் பட்டியல்களின் அடிப்படையில் கூட்டப்பட்ட அரசியல் நிர்ணய சபை அக்டோபர் 25ல் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக சோஷலிஸ்டுப் புரட்சியைத் துவக்கிய உழைக்கும் சுரண்டப்படும் வர்க்கங்களின் சித்தம் மற்றும் நலன்களுடன் தவிர்க்க முடியாத வகையில் மோதியே தீரும் என்பதாகும். இயல்பாகவே, இந்தப் புரட்சியின் நலன்கள் அரசியல் நிர்ணய சபையின் சம்பிரதாயமான உரிமைகளைவிட—இந்த சம்பிரதாயமான உரிமைகள், அரசியல் நிர்ணய சபையின் சட்டத்தில் தமது பிரதிநிதிகளைத் திருப்பி அழைக்கவும், எந்த நேரத்திலும் ஒரு புதிய தேர்தல் நடத்தவுமான மக்களின் உரிமையை அங்கீகரிக்கும் ஷரத்து இன்மையால் அரித்தழிக்கப்படாவிடினும் கூட—உயர்ந்து நிற்கின்றன.

17) அரசியல் நிர்ணய சபை பற்றிய பிரச்சினையை, சாமான்ய முதலாளித்துவ ஜனநாயகத்தின் கட்டுக் கோப்புக்குள், வர்க்கப் போராட்டத்தையும் உள்நாட்டுப் போரையும் புறக்கணித்து, சம்பிரதாயமான சட்டக் கருத்து நிலையில் இருந்து கருதிப்பார்க்கும் ஒவ்வொரு நேரடி அல்லது மறைமுக முயற்சியும் பாட்டாளி வர்க்கத்தின் லட்சியத்துக்குத் துரோகம் செய்வதாகும். முதலாளித்துவ நோக்கு

நிலையை ஏற்றுக் கொள்வதாகும். இந்தத் தவறை எதிர்த்து எல்லோரையும் ஒருவர் விடாமல் எச்சரிக்கை செய்ய வேண்டுவது புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளின் கட்டப்பாடான கடமையாகும். அக்டோபர் புரட்சி எழுச்சியின் முக்கியத்துவத்தையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பணிகளையும் சரிவர கணிப்பதற்கு இயலாதிருந்த ஒரு சில தலைமைப் போல்ஷிவிக்குகள் இந்தத் தவறுக்குள் வழி பிறழ்ந்து சென்றனர்.

18) ஒருபுறம் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலுக்கும் மறுபுறம் மக்களின் சித்தம் மற்றும் உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் நலன்களுக்கும் இடையிலான முரண்பாடு காரணமாக உதித்தெழுந்துள்ள நெருக்கடிக்கு வேதனையற்ற பரிகாரம் பெறுவதற்குரிய ஒரே வாய்ப்பு மக்கள் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களை மறுபடியும் புதிதாகத் தேர்ந்தெடுக்கும் தமது உரிமையை மிகவும் விரிவாகவும் சாத்தியமான அளவுக்கு மிகவும் விரைவாகவும் பயன்படுத்துவதும், அரசியல் நிர்ணய சபை இந்தப் புதிய தேர்தல்கள் விஷயத்தில் மத்திய நிர்வாகக் கமிட்டியின் நியதியை ஒப்புக்கொள்வதும் ஆகும். மேலும் அரசியல் நிர்ணய சபை சோவியத் ஆட்சியையும் சோவியத் புரட்சியையும் சமாதானம், நிலம், தொழிலாளர் கண்காணிப்பு ஆகிய பிரச்சினைகளில் அதன் கொள்கையையும் தங்கு தடை இன்றி அங்கீகரிப்பதாயும் காடேட்டு-கலேதின்வாதிகளின் எதிர்ப்புரட்சியின் எதிரிகள் முகாமில் உறுதியாகச் சேர்ந்து கொள்வதாயும் பிரகடனம் செய்ய வேண்டும்.

19) இந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத பட்சம், அரசியல் நிர்ணய சபை சம்பந்தமான நெருக்கடிக்குப் புரட்சிகர வழியில் மட்டுமே, சோவியத் ஆட்சி இந்த எதிர்ப்புரட்சி எந்த கோஷங்கள் எந்த நிறுவனங்களுக்குப் பின்னால் மறைந்து நின்றாலும் சரி (அரசியல் நிர்ணய சபையில் பங்குபற்றினாலும் கூட) இந்த காடேட்டு-கலேதின் வாதிகளின் எதிர்ப்புரட்சிக்கு எதிராக மிகவும் ஊக்கமான விரைவான உறுதியான வைராக்கியமான புரட்சிகர நடவடிக்கைகளை எடுப்பது மூலம் மட்டுமே தீர்வு காண முடியும்.

இந்தப் போராட்டத்தில் சோவியத் ஆட்சியின் கரங்களைக் கட்டிப்போட நடத்தும் எந்த முயற்சியும் எதிர்ப்புரட்சிக்கு உதவி செய்வதற்குச் சமமாகும்.

டிசம்பர் 11
அல்லது 12 (24 அல்லது
25), 1917ல் எழுதப்பட்டது

பிராவ்தா, *இதழ் 213,*
டிசம்பர் 26 (13), 1917ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி *35,*
பக்கங்கள் *162-166*

உணவுக்காகவும் சமாதானத்துக்காகவும்[31]

இரண்டு பிரச்சினைகள் இதர எல்லா அரசியல் பிரச்சினைகளையும் விட முன்னிடம் பெறுகின்றன. இவை உணவு பற்றிய பிரச்சினையும் சமாதானம் பற்றிய பிரச்சினையும் ஆகும். இந்த ஏகாதிபத்தியப் போர், ஆகப் பெரிய ஆகச் செல்வம் படைத்த வங்கி நிறுவனங்களான ''பிரிட்டன்'' மற்றும் ''ஜெர்மனிக்கு'' இடையே நடைபெறும் போர், உலக ஆதிக்கத்திற்காகவும், அடித்த கொள்ளையைப் பங்கு போட்டுக் கொள்வதற்காகவும், சிறிய பலவீனமான நாடுகளைச் சூறையாடுவதற்காகவும் நடத்தப்படுகிறது. இந்தப் பயங்கரமான கொலைகாரத் தனமான போர் எல்லா நாடுகளையும் நாசமாக்கிவிட்டது. எல்லா மக்களையும் வலுவும் வளமும் இழக்கச் செய்துள்ளது. ஒன்று எல்லா நாகரிகத்தையும் பலி கொடுத்து அழிய வேண்டும் அல்லது புரட்சிகரமான வழியில் முதலாளித்துவ நுகத்தைத் தூக்கி எறிய வேண்டும், முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை ஒழித்தகற்றி சோஷலிசத்தையும் நீடித்த சமாதானத்தையும் வென்று பெற வேண்டும் என்ற இரண்டில் ஒரு வழியை மனிதகுலத்தின் முன்வைத்திருக்கிறது.

சோஷலிசம் வெற்றி வாகை சூடாவிட்டால், முதலாளித்துவ அரசுகளிடையிலான சமாதானம் ஒரு தற்காலப் போர் ஓய்வாக, ஓர் இடை நிகழ்வாக, மக்களை மீண்டும் புதிதாகக் கொன்று குவிப்பதற்கான ஒரு தயாரிப்புக் காலமாக மட்டுமே இருக்கும். சமாதானம் உணவு என்பவை தொழிலாளர் மற்றும் சுரண்டப்படுவோரின் அடிப்படையான கோரிக்கைகளாகும். போர் இந்தக் கோரிக்கைகளை மிகவும்

அவசர அவசியமாக்கி விட்டது. மிகவும் நாகரிகமடைந்த நாடுகளில் மிகவும் கலாசார வளர்ச்சி பெற்ற நாடுகளில் போர் பசி பட்டினியைக் கொண்டுவந்து விட்டது. மறுபுறம் ஒரு பிரம்மாண்டமான வரலாற்று நிகழ்ச்சிப் போக்கு என்ற முறையில் போர் சமுதாய வளர்ச்சியை முன் என்றும் கேட்டிராத அளவுக்கு துரிதப்படுத்தியுள்ளது. முதலாளித் துவம் ஏகாதிபத்தியமாக அதாவது ஏகபோக முதலாளித்துவ மாக வளர்ந்து போரின் செல்வாக்கின் கீழ் அரசு ஏகபோக முதலாளித்துவமாகிவிட்டது. சோஷலிசத்துக்கு உடனடி யான ஏற்றப்படி என்ற அளவுக்கு உலகப் பொருளா தாரத்தில் இப்போது ஒரு கட்டத்தினை எட்டியுள்ளோம்.

எனவே ருஷ்யாவில் துவங்கப்பட்டுள்ள சோஷலிஸ்டுப் புரட்சியானது உலக சோஷலிஸ்டுப் புரட்சியின் ஆரம்பம் மட்டுமே ஆகும். சமாதானம், உணவு, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவது, போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றப் புரட்சிகர முறைகளைப் பின்பற்றுவது, சோஷலிசத் தின் பூரண வெற்றி—இவையே இப்போராட்டத்தின் குறிக் கோள்கள்.

பெத்ரோகிராத், டிசம்பர் 14, 1917

டிசம்பர் 14 (27), 1917ல் ருஷ்ய மொழியில் எழுதப்பட்டது

Jugend-Internationale, இதழ் 11ல் 1918 மே மாதம் முதன்முறையாக ஜெர்மன் மொழியில் பிரசுரிக்கப் பட்டது

நூல் திரட்டு, தொகுதி 35, பக்கங்கள் 169-170

வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரை 1917 டிசம்பர் 14 (27)[32]

குறிப்பேடுகள்

நாம் ஓர் அகாதமான பள்ளத்தை நோக்கி, நிச்சயமான நாசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று வலியுறுத்துவது மூலம் முன்னால் பேசியவர் நம்மை அச்சுறுத்த முயன்றார். ஆனால் இந்த அச்சுறுத்தலில் நமக்குப் புதியதாக எதுவும் இல்லை. இந்தப் பேச்சாளர் சேர்ந்து நிற்கும் கோஷ்டியின் கருத்துக்களை வெளியிடும் செய்திப் பத்திரிகையான நோவயா ஷீஸ்ன் நமது புரட்சியானது குழப்பங்களையும் அராஜகமான கலவரங்களையும் தவிர வேறு எதையும் கொண்டு வராது என்று அக்டோபர் நாட்களுக்கு முன்பாகக் கூறியது. எனவே நாம் தவறான பாதையில் பயணம் செய்வது பற்றிய பேச்சு முதலாளித்துவ மனப்பாங்கின் ஒரு பிரதிபலிப்பேயாகும். இதை அக்கரை இல்லாத நபர்களும் கூட ஒழித்தமைவு செய்ய இயலாது. (சர்வதேசியவாதிகள் மத்தியிலிருந்து குரல் ''வாய்வீச்சு!'') இல்லை இது வாய்வீச்சு அல்ல கோடரி பற்றி நீங்கள் இடையறாது பேசுவதுதான் வாய்வீச்சு.

அரசாணையில் முன்வைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மட்டுமே கண்காணிப்பை உத்தரவாதம் செய்வதற்கான உறுதியான வழி.

பொறியமைவின் கடுஞ்சிக்கல், அதன் எளிதில் நொறுங்கும் இயல்பு, பிரச்சினையின் சிக்கலான தன்மை பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்—இவை எல்லோரும் அறிந்த சர்வ சாதாரண உண்மைகள். ஆனால் இந்த உண்மைகள் எல்லா சோஷலிஸ்டு நடவடிக்கைகள் மீதும் தடைபோடுவதற்காக

மாத்திரமே பயன்படுத்தப்படுமானுல், அந்தக் கொள்கையை மேற்கொள்ளும் எவரும் ஒரு வாய்வீச்சு வீரரே, ஆபத்தான ஒரு வாய்வீச்சு வீரரே என்று நாம் கூறுகிருேம்.

சேமநிலவறைகளில் கணக்குப் பரிசோதனே தொடங்க வேண்டும் என்று நாம் விரும்புகிருேம். ஆனுல் அவற்றில் தஸ்தவேஜுகளும் பத்திரங்களும் தவிர வேறு எதுவும் இல்லே என்று கற்றறிந்த நிபுணர்கள் எம்மிடம் சொல்கிருர்கள். அப்படியானுல் மக்கள் பிரதிநிதிகள் அவற்றைச் சரிபார்ப்பதில் தவறு என்ன?

அவர்கள் சொல்வது உண்மையானுல் நம்மை விமர்சனம் செய்யும் இதே கற்றறிந்த நிபுணர்கள் இதைப் பகிரங்கமாக ஏன் எடுத்துக் கூறுவதில்லே? கவுன்சில் முடிவுகள் செய்யும் போதெல்லாம் அவர்கள் ஒப்புக்கொள்வதாக, கோட்பாடு அளவில் மட்டுமே ஒப்புக் கொள்வதாகச் சாற்றுகிருர்கள். இதுவே முதலாளித்துவ அறிவு ஜீவிகளின் எல்லா சமரசவாதிகளின் பாதையாகும். அவர்கள் கோட்பாடு அளவிலான இடையருத உடன்பாடு மற்றும் நடைமுறையிலான வேறுபாடு மூலம் எல்லாவற்றையும் நாசப்படுத்துகிருர்கள்.

இவை எல்லாம் பற்றி உங்களுக்கு இவ்வளவு அதிகமாகத் தெரிந்திருந்து, அனுபவமும் ஏற்பட்டிருக்குமானுல், எங்களுக்கு ஏன் உதவக் கூடாது? எமது இடர்ப்பாடான பணிகளில் உங்களிடமிருந்து நாச வேலே தவிர வேறு எதுவும் கிட்டாதது ஏன்?

நீங்கள் சரியான விஞ்ஞான பூர்வமான தத்துவத்தில் இருந்து இயங்கத் தொடங்குகிறீர்கள். ஆனுல் எங்களுக்கோ தத்துவம் மேற்கொள்ள வேண்டிய செயல்களின் அடிப்படையாக இருக்கிறது, இந்தச் செயல்களில் எங்களுக்கு நம்பிக்கை தருகிறது, படுமோசமான பீதியை ஏற்படுத்துவதில்லே. ஒரு துவக்கத்தைச் செய்வது இடர்ப்பாடானது என்பது மெய்யே. மேலும் நாம் எளிதில் நொறுங்கும் பல சாதனங்களே எதிரிட நேர்கிறது. இருந்த போதிலும் நாம் அவற்றைச் சமாளித்துள்ளோம், அவற்றைச் சமாளித்து வருகிருேம், தொடர்ந்து அவற்றை சமாளிப்போம்.

ஒவ்வொரு புதிய முன்னேற்றப் படியையும் தடை செய்யவும், புதியவை குறித்த நிரந்தரமான அச்சத்தைப் புகட்டுவதும் தவிர வேறு எந்தக் காரியத்துக்கும் புத்தகப் படிப்பு உதவவில்லை என்றால் அது பயனற்றதாகும்.

எதிர்த்துப் போராடாமல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல், பழைய உலகினை இரும்புப் பிடியில் பற்றிப் பிடிக்காமல் வெற்றி சாத்தியம் என்று கற்பனுவாத சோஷலிஸ்டுகள் நீங்கலாக, வேறு யாரும், என்றும் துணிந்து உரைத்தது கிடையாது.

இந்த சர்வாதிகாரத்தைக் கோட்பாடு அளவில் நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள், ஆனால் அந்தச் சொல் ருஷ்யனில் மொழிபெயர்க்கப்படும் போதும் ஓர் ''இரும்புப் பிடி'' என்று கூறி, நடைமுறையில் பிரயோகிக்கப்பட்ட போதும் நீங்கள் இந்த விவகாரத்தின் எளிதில் நொறுங்கும் இயல்பு மற்றும் சிக்கலான தன்மை குறித்து எம்மை எச்சரிக்கை செய்கிறீர்கள்.

அழிக்கும் இரும்புக் கரம் படைக்கவும் செய்கிறது என்பதைப் பிடிவாதமாகக் காண மறுக்கிறீர்கள். கோட்பாடுகளில் இருந்து செயல்களை நோக்கிச் செல்வது எமக்குச் சந்தேகமன்னியில் சாதகமானதாகும்.

கண்காணிப்பைச் செயல்படுத்துவதற்காக நாம் வங்கி அதிபர்களை அணுகினோம். கடன்கள் முழுமையான கண்காணிப்பின் கீழ் பெறப்பட்டுச் சரியானபடி கணக்கு வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அவர்களுடன் சேர்ந்து வகுத்து விட்டோம். அவர்கள் அவற்றை ஒப்புக் கொண்டார்கள். ஆனால் மக்களின் நலன்களை மனமாற ஆதரிக்கும் வங்கி ஊழியர்களில் சில நபர்கள் எம்மிடம் சொன்னார்கள்: ''அவர்கள் உங்களை ஏமாற்றுகிறார்கள். உங்களை நேரடியாகப் பாதிக்கும் அவர்களது குற்றகரமான செயலை உடனடி விரைவாகத் தடை செய்யுங்கள்'' என்று. நாங்கள் விரைந்து செயல்பட்டோம்.

இது ஒரு சிக்கலான நடவடிக்கை என்பதை நாம் உணர்கிறோம். நம்மில் எவரும், பயிற்சி பெற்ற பொருளியலாளர்களும் கூட இதை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொள்ள முடி

யாது. எமது கரங்களில் சாவிகள் கிடைத்த பிறகு மட்டுமே, இந்த வேலையில் ஈடுபட்டுள்ள நிபுணர்களை நாம் அழைப்போம். அப்புறம் முன்னுள் கோடீச்வரர்கள் இடையில் இருந்தும் கூட ஆலோசகர்களை நாம் பெற முடியும். ஒவ்வொரு புரட்சிகர முன்முயற்சியையும் கேவலம் சொல் அளவுக்குக் குறுக்க அவர் முயலாத வரையில் வேலை செய்ய விரும்பும் எவரையும் நாம் அழைக்கிறோம். அவ்வாறு முயல்வதை நாம் சகிக்க மாட்டோம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற சொற்களை நாம் முழுமையான காரியப்பற்றுடன் தான் பயன்படுத்துகிறோம். அந்த சர்வாதிகாரத்தை நிச்சயம் செயல்படுத்துவோம்.

வங்கிகளுடன் நாம் உடன்பாட்டு வழிமுறைகளைக் கையாள விரும்பினோம். ஆலைகளுக்கு நிதி உதவுவதற்காகக் கடன்களை வங்கிகளுக்கு வழங்கினோம். ஆனால் அவைகள் முன் என்றும் கண்டிராத வகையில் சீர்குலைவு வேலை நடத்தின. நடைமுறை அனுபவம் வேறு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி எம்மை நிர்ப்பந்தித்தது.

இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களில் ஒரு தோழர் வங்கிகளை உடனடியாகத் தேசவுடைமையாக்குவதற்குக் கோட்பாடு அளவில் அவர்கள் வோட்டளிப்பார்கள் எனவும், பிறகு சாத்தியமான அளவு ஆகக் குறைந்த காலத்துக்குள் நடைமுறை நடவடிக்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார். அதில் அவர் பிழை புரிந்து விட்டார். ஏனெனில் நமது நகலில் கோட்பாடுகள் தவிர வேறு எதுவும் இல்லை. உயர் பொருளாதாரக் கவுன்சில் இதை விவாதிக்கக் காத்திருக்கிறது. ஆனால் அரசாணை ஏற்கப்படாவிடில் வங்கிகள் உடனே பொருளாதாரத்தை மேலும் சீர்குலைப்பதற்கான சகலத்தையும் செய்யும்.

இந்த அரசாணையை அங்கீகரிப்பது அவசரமானது. இல்லையேல் எதிர்ப்பும் சீர்குலைவும் நம்மை அழித்து விடும். **(ஆரவாரமான கரவொலி.)**

பிராவ்தா, இதழ் *216*,
***டிசம்பர் 29 (16), 1917* மற்றும்**
இஸ்வேஸ்தியா, இதழ் *253*,
டிசம்பர் 16, 1917

நூல் திரட்டு,
தொகுதி *35*,
பக்கங்கள் *171-173*

வங்கிகளின் தேசவுடைமையாக்கமும் அதன் அமுலாக்கத்திற்கு அவசியமான நடவடிக்கைகளும் பற்றிய நகல் அரசாணை[33]

நெருக்கடியான உணவு நிலைமையும், லாபக்கொள்ளையாலும் முதலாளிகள் மற்றும் அதிகாரிகளின் சீர்குலைவாலும் பொதுவான பொருளாதாரச் சீரழிவாலும் ஏற்பட்ட பஞ்சத்தின் அச்சுறுத்தலும், இந்தத் தீமையை எதிர்த்துப் போராட அசாதாரணமான புரட்சிகர நடவடிக்கைகள் எடுப்பதை அவசர அவசியமாக்கி விட்டன.

நாட்டின் எல்லாக் குடிமக்களும் இதில் முதன்மையாக உழைக்கும் வர்க்கங்கள் அனைத்தும் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் தலைமையில் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள இயலுமாறு செய்யவும், நாட்டின் பொருளாதார வாழ்க்கையை உடனடியாகவும் சர்வாம்ச ரீதியிலும் சகஜப்படுத்தவும், இதற்காக எவ்விதத் தயக்கமும் இன்றி மிகவும் புரட்சிகரமான முறையில் செயல்படவும் பின்வரும் விதிகள் அரசாணையாகப் பிறப்பிக்கப்படுகின்றன:

வங்கிகளின் தேசவுடைமையாக்கமும் அதன் அமுலாக்கத்திற்கு அவசியமான நடவடிக்கைகளும் பற்றிய நகல் அரசாணை

1. எல்லா கூட்டுப் பங்கு நிறுவனங்களும் அரசின் சொத்து என்று பிரகடனம் செய்யப்படும்.

2. கூட்டுப்பங்கு நிறுவனங்களின் போர்ட் உறுப்பினர்கள், டைரக்டர்கள் மற்றும் செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த எல்லாப் பங்குதாரர்களும் (அதாவது 5,000 ரூபிளுக்கு மேல் அதிகமான மதிப்புள்ள சொத்து வைத்திருப்பவர்கள் அல்லது மாதம் 500 ரூபிளுக்கு மேல் வருமானம் பெறுபவர்கள்) இந்த நிறுவனங்களின் அலுவல்களைச் சரியான முறையில் நடத்தவும், தொழிலாளர் கண்காணிப்புப் பற்றிய சட்டத்தைக் கடைப்பிடிக்கவும், எல்லாப் பங்குகளையும் அரசு வங்கியிடம் வழங்கவும், தமது செயல்பாடுகள் குறித்து தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகளின் உள்ளூர் சோவியத்துகளுக்கு வாரந்தோறும் அறிக்கை சமர்ப்பிக்கவும் கடப்பாடுடையவர்களாவர்.

3. வெளிநாட்டு உள்நாட்டு அரசுக் கடன்கள் யாவும் தள்ளுபடி செய்யப்பட்டன (ரத்துச் செய்யப்பட்டன).

4. பத்திரங்கள் மற்றும் எல்லா வகையான பங்குகளும் வைத்திருக்கும் சிறு பங்குதாரர்கள், அதாவது, மக்களிடையான உழைக்கும் வர்க்கங்களைச் சேர்ந்த சிறுபங்குதாரர்களின் நலன்களுக்கு முற்றுக உத்தரவாதம் அளிக்கப்படும்.

5. சர்வஜனக் கட்டாய உழைப்பு கொண்டுவரப்படுகிறது. பதினறுக்கும் ஐம்பத்தைந்துக்கும் இடையிலான வயதில் உள்ள ஆண் பெண் இருபாலரும் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் உள்ளூர் சோவியத்துகள் அல்லது சோவியத் ஆட்சியின் இதர உறுப்புகள் அவர்களுக்கு வகுத்தளிக்கும் வேலையைச் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

6. சர்வஜனக் கட்டாய உழைப்பைக் கொண்டுவருவதற்கான முதற்படி என்ற முறையில் செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த நபர்கள் (பாரா 2 பார்க்க) நுகர்வாளர்-தொழிலாளர் ஏட்டுப்புத்தகங்கள் அல்லது வரவுசெலவு-தொழிலாளர் ஏட்டுப்புத்தகங்களை வைத்திருக்க வேண்டும், அவற்றில் பதிவுகள் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும். இவை ஒவ்வொருவரும் மேற்கொண்ட வேலை நிறைவேற்றம் பற்றி வாரந்தோறும் பதிவு செய்வதற்காகப் பொருத்தமான தொழிலாளர் அமைப்புகளுக்கோ அல்லது உள்ளூர்

சோவியத்துகள் மற்றும் அவற்றின் உறுப்புகளுக்கோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7. உணவு இதர அவசியப் பொருட்களின் சரியான கணக்குப்பதிவு மற்றும் வினியோகம் ஆகிய காரியங்களுக்காக நாட்டில் உள்ள எல்லாக் குடி மக்களும் கட்டாயமாக ஒரு நுகர்வாளர் சங்கத்தில் சேர வேண்டும். உணவு போர்டுகள், வழங்கீடுக் கமிட்டிகள் மற்றும் இதே போன்ற இதர அமைப்புகள், அவற்றுடன்கூட ரயில்வே மற்றும் போக்குவரத்து சங்கங்கள், தொழிலாளர்கள் படையாளர்கள் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் நெறியாக்கத்தின் கீழ், இந்தச் சட்டம் கடைப்பிடிக்கப்படுவதை உத்தரவாதம் செய்யக் கண்காணிப்பை நிறுவ வேண்டும். குறிப்பாயும் செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த நபர்கள், நுகர்வாளர் சங்கங்களின் அலுவல்களை ஒழுங்கமைத்து நடத்தும் துறையில், சோவியத்துகள் அவர்களிடம் ஒப்படைத்த வேலையைச் செய்து முடிக்கக் கடமைப்பட்டவர்களாவர்.

8. ரயில்வேத் தொழிலாளர் மற்றும் ஊழியர் சங்கங்கள், குறிப்பாயும் உணவு எரிபொருள் இதர முக்கியத் தேவைகளை வழங்கும் விஷயத்தில் போக்குவரத்தை மேலும் நன்கு ஒழுங்கமைக்க அசாதாரணமான நடவடிக்கைகளை அவசரமாக உருவாக்கி உடனடியாக நிறைவேற்றி முடிக்கக் கடமைப்பட்டுள்ளன. இப்பணியில் அவை முதன்மையாகத் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள், பின்னல் அவற்றல் அதிகாரப்படுத்தப் பெற்ற அமைப்புகள் மற்றும் உயர் பொருளாதாரக் கவுன்சிலின் நெறிமுறைகள் மற்றும் உத்தரவுகளால் வழி நடத்தப்படும்.

இதேபோன்று, உள்ளூர் சோவியத்துகளுடன் சேர்ந்து செயல்பட்டுவரும் ரயில்வே சங்கங்கள், உணவு விஷயத்தில் வர்த்தகச் சூதாட்டங்களை எதிர்த்து ஊக்கத்துடன் போராடவும், எல்லாவகையான கொள்ளை லாபம் அடிப்பதையும் இரக்கமின்றி ஒடுக்கவும், புரட்சிகர நடவடிக்கைகள் மேற்

கொள்ளத் தயங்காமலும், செயல்பட வேண்டிய பொறுப்புடையனவாகும்.

9. தொழிலாளர் ஸ்தாபனங்களும் அலுவலக ஊழியர் சங்கங்களும் உள்ளூர் சோவியத்துகளும், மூடப்பட்டு வரும் அல்லது கலைக்கப்பட்டு வரும் நிறுவனங்களையும், வேலையற்ற தொழிலாளர்களையும், பயனுள்ள வேலை செய்யவும் அவசியப் பொருட்களை உற்பத்தி செய்யவும் முடுக்கி இயக்குவிக்க வேண்டும். அதோடு ஆர்டர்களைத் தேடிப் பெறவும் மூலப் பொருட்கள் மற்றும் எரிபொருளைத் தேடிப் பெறவும் வேண்டும். உயர் அமைப்புகளில் இருந்து விசேஷ நெறிமுறைகளைப் பெறுவதற்கு இடையில் இவ்வாறு செயல்பட வேண்டும். இந்த வேலையையோ அல்லது பண்ணை விளை பொருட்களுக்குத் தொழிற்துறைப் பண்டங்களைப் பரிமாற்றம் செய்யத் தொடங்குவதையோ ஒருபொழுதும் ஒத்திப்போடாது நடத்தும் அதே சமயத்தில், உள்ளூர் சங்கங்களும் சோவியத்துகளும், உயர் பொருளாதாரக் கவுன்சிலின் ஆர்டர்கள் மற்றும் நெறிமுறைகளைக் கறாராக அனுசரித்துச் செயல்பட வேண்டும்.

10. செல்வந்த வர்க்கங்களைச் சேர்ந்த நபர்கள் தமது பண உடைமைகள் எல்லாவற்றையும் அரசு வங்கியில் மற்றும் அதன் கிளைகளில் அல்லது சேமிப்பு வங்கிகளில் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். ஒரு வாரத்துக்கு *100* முதல் *125* ரூபிளுக்கு உட்பட்ட தொகையையே இவர்கள் வாழ்க்கைச் செலவுக்காக (உள்ளூர் சோவியத்துகள் நிலைநாட்டியுள்ள பிரகாரம்) திருப்பி வாங்கும் உரிமையுள்ளவர்களாவர். பொருள் உற்பத்தி மற்றும் வியாபாரத்துக்குத் தேவைப்படும் தொகையைத் திருப்பி எடுக்கத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்புகளின் எழுத்து பூர்வமான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்தச் சட்டம் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுவதை மேற்பார்வை செய்ய, நிலவில் உள்ள பணநோட்டுக்களைப் புதிய நோட்டுக்களுக்குப் பரிமாற்றம் செய்து கொள்

வதற்கான விதிகள் கொண்டுவரப்படும். அரசையும் மக்களையும் ஏமாற்றிய குற்றவாளிகளான நபர்களின் சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்படும்.

11. இந்தச் சட்டத்துக்கு எதிராகத் தவறிழைத்தவர்களும் சீர்குலைவு வேலை செய்தவர்களும் வேலைநிறுத்தம் செய்யும் அரசாங்க அதிகாரிகளும் லாபக் கொள்ளை அடித்தவர்களும் இதே போன்ற தண்டனைக்கு உள்ளாவர், அதோடு சிறைவாசம், போர்முனைக்கு அனுப்பப்படல் அல்லது கடின ஊழியத் தண்டனைக்கும் உள்ளாவர். மக்களின் இந்த மெய்யான விரோதிகளை எதிர்த்துப் போராட உள்ளூர் சோவியத்துகளும் அவற்றின் அதிகார வட்டத்தில் உள்ள அமைப்புகளும் மிகவும் புரட்சிகரமான நடவடிக்கைகளை அவசரமாக வகுத்தளிக்க வேண்டும்.

12. தொழிற்சங்கங்களும் உழைக்கும் மக்களின் இதர அமைப்புகளும் உள்ளூர், சோவியத்துகளுடன் சேர்ந்தும், கட்சி மற்றும் இதர ஸ்தாபனங்களால் சிபார்சு செய்யப்பட்ட மிகவும் நம்பகமான நபர்களுடன் இணைந்தும் இந்தச் சட்டத்தின் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்யக் கண்காணிப்பாளர்களின் நடமாடும் குழுக்களை உருவாக்கும். இக்குழுக்கள் செய்யப்பட்ட வேலையின் அளவையும் தரத்தையும் சரிபார்க்கும், சட்டத்தை மீறியவர்கள் அல்லது புறக்கணித்தவர்கள் என்ற முறையில் குற்றம் புரிந்த நபர்களைப் புரட்சிகர நீதிமன்றம் முன் விசாரணைக்குக் கொண்டுவரும்.

தேசவுடைமையாக்கம் செய்யப்பட்ட நிறுவனங்களின் தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களும் வேலையின் ஒழுங்கமைப்பை மேம்படுத்தவும், கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும், உற்பத்தித் திறனை உயர்த்தவும் சகல முயற்சிகளும் செய்தல் வேண்டும், அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழிலாளர் கண்காணிப்பு அமைப்புகள் உயர் பொருளாதாரக் கவுன்சிலுக்கு இந்த வகையில் அடைந்துள்ள பலன்களைப் பற்றி வாராந்திர அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும். குறைபாடுகள் அல்லது

அசட்டை செய்ததால் குற்றத்துக்காளானோர் புரட்சிகர நீதி மன்றத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும்.

1917 டிசம்பர் 14 (27)க்குப்
பின்பே எழுதப்பட்டது

நரோத்னயே கஸியாய்ஸ்துவோ,
இதழ் 11ல், 1918 நவம்பரில்
சுருக்கமான வடிவில் முதலில்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி *35,*
பக்கங்கள் *174-177*

1949ல், லெனின் நூல் திரட்டு,
தொகுதி *26ல்,* நான்காவது
ருஷ்யன் பதிப்பில் முதலில்
முழுமையாக வெளியிடப்பட்டது

போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது?

முதலாளித்துவப் போட்டி, தனியார் முன்முயற்சி மற்றும் முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ அமைப்பு முறையின் இதர நேர்த்தியான நற்பண்புகளேயும் வரப்பிரசாதங்களேயும் பற்றிப் புகழ்ந்து முதலாளித்துவ நூலாசிரியர்கள் எழுதியிருக்கிறுர்கள். இந்த நற்பண்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள மறுப்பதாயும் ''மானுட இயல்பைப்'' புரிந்து கொள்வதில் அசட்டை செய்வதாயும் சோஷலிஸ்டுகள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. ஆனுல் உண்மையில் முதலாளித்துவம் நீண்டகால முன்பே சிறுவீத சுயேச்சையான பண்ட உற்பத்தியைப் பெருவீத, மிகப்பெரு வீத ஆலே உற்பத்தி, கூட்டுப்பங்கு நிறுவனங்கள், சிண்டிக் கேட்டுகள் மற்றும் இதர ஏகபோகங்களால் பதிலீடு செய்து விட்டது. சிறுவீதப் பண்ட உற்பத்தி முறையின் கீழ் முதலாளித்துவப் போட்டி மூலம் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவை கணிசமான அளவுக்கு வளர வாய்ப்பு இருந்தது. ஆனுல் இத்தகைய பெருவீத முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவப் போட்டி என்பதன் பொருள் மக்கள் திரளின், அதன் மிகப் பெரும் பெரும்பான்மையின், நூறு உழைப்பாளிகளில் தொண்ணூற்றென்பது பேரின் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை நம்பற்கரிய முறையில் கொடுமையாக ஒடுக்குவது என்பதாகும். மேலும் முதலாளித்துவப் போட்டியானது நிதி மோசடி, தனிச் சலுகை, சமுதாய ஏணியின் உயர்படியில் இருப்போரிடம் கொத்தடிமைத் தனம் ஆகியவற்ருல் பதிலீடு செய்யப்பட்டுவிட்டது.

சோஷலிசம் போட்டியை அவித்து மறைத்து விடுவதில்லை. மாறுக அதை உண்மையிலேயே விரிவான அளவில் வெகு ஜன அளவில் செயல்படுத்தவும், உழைக்கும் மக்களை அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும் ஆயிரம் கோடி மக்கள் மூலம் முதலாளித்துவத்தால் நசுக்கப்பட்டு அடக்கப்பட்டு நெரிக்கப்பட்டு விட்ட மக்களிடம் அமோகமாக இருந்த அந்தத் தனி ஆற்றல்களை வெளிக்காட்டவும் உரியதான செயல் துறையில் அவர்களை உள்ளபடியே ஈர்ப்பதற்குமான வாய்ப்பினை சோஷலிசம் முதல் தடவையாகப் படைத்துருவாக்குகிறது.

இப்போது ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் ஆட்சியில் இருப்பதால் நமது பணி நேசப்போட்டியை ஒழுங்கமைப்பதாகும்.

முதலாளித்துவ வர்க்கத்தினை அண்டிவாழ்வோரும் மற்றும் கெஞ்சிப் பிழைப்போரும் சோஷலிசத்தை ஓர் ஒரே மாதிரியான, பழகிப் படிந்து போன, சலிப்பூட்டுகிற, கவர்ச்சியற்ற பாசறை அமைப்பு என்று வருணித்தார்கள். பண மூட்டைகளின் அடிவருடிகளும் சுரண்டலாளரிடம் இச்சகம் பேசுவோருமான முதலாளித்துவ அறிவுத்துறை கனவான்கள் சோஷலிசத்தை மக்களைக் ''கிலியூட்டுவதற்கான'' ஒரு பூச்சாண்டியாகப் பயன்படுத்தினர்கள். மக்களோ முதலாளித்துவத்தின் கீழ் கடுஞ்சிறை வாசம், பாசறைபாணிக் கட்டுப்பாடு, கடுமையான சலிப்புத்தரும் உழைப்பு, கொடிய வறுமையும் அரைப்பட்டினியுமான வாழ்க்கை என்ற கதிக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கடுஞ்சிறை வாசத்தில் இருந்து மக்களை விமோசனப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கை நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தல், தொழிலாளர் கண்காணிப்பைக் கொண்டுவருதல் மற்றும் வங்கிகளைத் தேசவுடைமையாக்குவதும் ஆகும். அடுத்த நடவடிக்கைகள் ஆலைகளை தேசவுடைமையாக்குதல், மக்கள் தொகை முழுவதையும் நுகர்வாளர் சங்கங்களில் கட்டாயமாக ஒழுங்கமைத்தல்—இந்தச் சங்கங்கள் அதே சமயம் விளைபொருட்களின் விற்பனைச் சங்கங்களாக இருக்கும்—தானி

யம் மற்றும் இதர அவசியப் பொருள் வர்த்தகத்தினை அரசு ஏகபோகமாக்குதல்.

ஊக்கம், நேசப்போட்டி, துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை உண்மையிலேயே பேரளவில் வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பு இப்போதுதான் உருவாக்கப்பட்டுள்ளது. முதலாளியை வெளியேற்றியுள்ள அல்லது மெய்யான தொழிலாளர் கண்காணிப்பு மூலம் மட்டுப்படுத்தியுள்ள ஒவ்வொரு ஆலையும், நிலவுடைமைச் சுரண்டலாளர் ஒழிக்கப்பட்டு அவரது நிலம் பறிமுதல் செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமமும் இப்போதுதான் உழைக்கும் மனிதன் தனது சிறப்பாற்றல்களை வெளிப்படுத்தவும், முதுகைச் சற்றே நிமிர்த்தவும், முழு ஆகிருதியுடன் எழுச்சியுற்று நிற்கவும், தான் ஒரு மானுடஜீவி என்று உணரவுமான ஒரு துறையாக விளங்குகிறது. நூற்றாண்டுகள் காலமாகப் பிறருக்குப் பாடுபட்டும், சுரண்டலாளருக்காகக் கட்டாய உழைப்பைச் செய்தும் வந்த பிறகு முதல் தடவையாகத் தனக்காகவே உழைப்பது என்பது சாத்தியமாகியுள்ளது. மேலும் ஒருவர் தனது வேலையில் நவீனத் தொழில்நுட்பத்தின் மற்றும் கலாசாரத்தின் சகல சாதனைகளையும் ஈடுபடுத்துவதை சாத்தியமாக்குகிறது.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்னும் நிலைக்கு மனிதகுல வரலாற்றில் ஏற்பட்ட இந்த மகத்தான மாற்றம், பிணக்கு, இடர்ப்பாடுகள், மோதல்கள், வேரூன்றி விட்ட புல்லுருவிகள் மற்றும் அவர்களை அண்டிப்பிழைப்போருக்கு எதிரான பலப்பிரயோகம் இன்றி நிகழ முடியாது. இந்த விஷயத்தில் எந்தத் தொழிலாளிக்கும் எவ்விதப் பிரமைகளும் கிடையாது. கொடிய வறுமையாலும், சுரண்டலாளர்களுக்குப் பல்லாண்டுகள் புரிந்த அடிமை உழைப்பு மூலமும், அவர்களிடமிருந்து பெற்ற எண்ணற்ற வசைகள் மற்றும் அவமானம் மூலமும் வயிரமடைந்த தொழிலாளர்களும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் அந்தச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பைத் தகர்ப்பதற்கு அதிகக் காலம் பிடிக்கும் என்பதை உணர்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களும் விவசாயிகளும்

நோவயா ஷீஸ்ன் ஆதரவாளர்கள்[34] அல்லது இதர சகதியைச் சேர்ந்த அறிவுத்துறை கனவான்களின் உணர்ச்சிப் பசப்புப் பிரமைகளால் கிஞ்சிற்றும் பீடிக்கப்படவில்லை. இந்தக் கனவான்கள் முதலாளிகளை ''கண்டனம் செய்து'' தொண்டை கம்மக் ''கூக்குரலிட்டவர்கள்'', அவர்களை எதிர்த்து ''பாவலா காட்டியவர்கள்''. ஆனால் செயல்களுக்கு வரும் போது அச்சுறுத்தல்களைச் செயல்படுத்தவரும் போது, முதலாளிகளை அகற்றும் வேலையை நடைமுறையில் நிறைவேற்ற வரும் போதும் கண்ணீர் விட்டுக் கரைந்து அடிபட்ட நாய்க்குட்டிகளைப் போல நடந்து கொள்வார்கள்.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்ற நிலைக்கு, பிரம்மாண்டமான, தேசிய (ஓரளவுக்கு சர்வதேசிய, உலக) வீதத்தில் உழைப்பைத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும் நிலைக்கு ஏற்படும் மகத்தான மாற்றத்துக்கு—சுரண்டலாளர் எதிர்ப்பை ஒடுக்குவதற்கான ''ராணுவ'' நடவடிக்கைகளுடன்—பாட்டாளி வர்க்கமும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் எடுக்கும் மிகப் பெரிய ஒழுங்கமைப்பு, அமைப்பாளருக்குரிய முயற்சியும் தேவை. இந்த ஒழுங்கமைப்புப் பணி, நேற்றைய அடிமையுடைமையாளர்களையும் (முதலாளிகளையும்) முதலாளித்துவ அறிவுத்துறையைச் சேர்ந்த அவர்களது அடிவருடிக் கூட்டத்தையும் தாட்சண்யமின்றி ராணுவ முறைகளால் ஒடுக்கும் பணியுடன் பின்னிப் பிணைந்து ஓர் உருவமாகச் சமைந்துள்ளது. நேற்றைய அடிமையுடைமையாளர்களும் அவர்களது அறிவுத்துறைக் கையாட்களும் ''நாங்கள் எப்போதும் அமைப்பாளர்களாயும் தலைவர்களாயும் இருந்தவர்கள். நாங்கள் நாட்டாண்மை செய்தவர்கள் தொடர்ந்து அவ்வாறே செய்ய விரும்புகிறோம். 'சாமான்ய மக்களுக்கு', தொழிலாளர் விவசாயிகளுக்கு நாங்கள் கீழ்ப்படிய மறுக்கிறோம். நாங்கள் அவர்களுக்கு அடிப்பட மாட்டோம். பண மூட்டைகளின் தனியுரிமைகளையும் மக்கள் மீதான மூலதனத்தின் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக அறிவை ஆயுதமாக மாற்றுவோம்'' என்று கூறுகிறார்கள், நினைக்கிறார்கள்.

இவ்வாறுதான் முதலாளிகளும் முதலாளித்துவ அறிவு

ஜீவிகளும் கூறுகிறுர்கள், நினைக்கிறுர்கள், செய்கிறுர்கள். சுயநலத்தின் கருத்து நிலையில் இருந்து பார்த்தால் அவர்களது நடத்தை புரிந்து கொள்ளக் கூடியதேயாகும். பிரபுத்துவ நிலவுடைமையாளர்களை அண்டிவாழ்பவர்களும் கெஞ்சிப் பிழைப்பவர்களும் பாதிரிகளும் எழுது கோலர்களும் கோகல் சித்திரித்த அதிகார வர்க்கத்தினரும், பெலீன்ஸ்கியைப் பகைத்த ''அறிவுஜீவிகளும்'' கூட பண்ணை அடிமை முறையில் இருந்து விட்டுப் பிரிவது ''கடினம்'' என்று கண்டனர். ஆனுல் சுரண்டலாளர் மற்றும் அவர்களது அறிவுத்துறை ஏவலாட்களின் லட்சியம் கவைக்குதவாதது. தொழிலாளரும் விவசாயிகளும், அன்ஞர்களின் எதிர்ப்பைத் தகர்க்கத் தொடங்குகின்றனர். துரதிருஷ்டவசமாக இன்னும் போதியளவு உறுதியாகவும் வைராக்கியமாகவும் தாட்சண்யமின்றியும் செயல்படவில்லை. ஆனுல் அதை அவர்கள் தகர்த்தெறிவது திண்ணம்.

உழைக்கும் மக்கள்மீது சோஷலிஸ்டுப் புரட்சியால் சுமத்தப்படும் ஒழுங்கமைப்புப் பணிகளை—உலக வரலாற்றுப் பொருளில் மகத்தான உண்மையிலேயே வீரம் செறிந்த தான பணிகளை—''சாமான்ய மக்களும்'' ''சாமான்ய'' தொழிலாளரும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் செய்து சமாளிக்க முடியாது என்று ''அவர்கள்'' கருதுகிறுர்கள். தமக்குத் தாமே தேறுதல் சொல்லிக் கொள்வதற்கு முதலாளிகளுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் வழக்கமாகச் சேவை புரியப் பழகிவிட்ட அறிவுஜீவிகள்: ''நாங்கள் இல்லாமல் உங்களால் முடியாது'' என்று கூறுகிறுர்கள். ஆனுல் அவர்களது திமிரான வன்கூற்று வீண் முயற்சியாகும். கல்வி கற்ற மனிதர்கள் மக்களின் பக்கம், உழைப்பாளி மக்களின் பக்கம் ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கிறுர்கள். மூலதனத்தின் ஏவலாட்களது எதிர்ப்பைத் தகர்க்க உதவி புரிகிறுர்கள். விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பல ஆற்றல் மிகுந்த ஒழுங்கமைப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் தம்மைத் தாமே உணர்ந்து கொள்ளவும், மாபெரும் ஜீவாதாரமான படைப்பாற்றல் பணியினை நோக்கி விழிப்புற்று முழுமுயற்சி செய்யவும், தமது சொந்த சக்தி

களைக் கொண்டு சோஷலிஸ்டு சமூக அமைப்பைக் கட்டும் பணியினை நிறைவேற்றவும், இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறார்கள்.

இன்றுள்ள முக்கியமான கடமைகளில் ஒன்று, ஒருவேளை ஆக முக்கியமான கடமை தொழிலாளரின், பொதுவாக எல்லா உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் சுயேச்சையான முன்முயற்சியை வளர்ப்பது, படைப்பாற்றல் முறையிலான ஒழுங்கமைப்பு வேலையில் அதை சாத்தியமான அளவுக்கு விரிவாக வளர்ப்பது என்பதேயாகும். ''உயர்ந்த வர்க்கங்கள்'' என்று அழைக்கப்படுபவர்கள் மட்டுமே, செல்வந்தர்கள் மட்டுமே, செல்வந்தர் பள்ளிகளில் பயின்றவர்கள் மட்டுமே அரசை நிர்வாகம் செய்யவும் சோஷலிஸ்டு சமுதாயத்தின் ஒழுங்கமைப்பு வேலையை நெறியாக்கம் செய்யவும் வல்லவர்கள் என்றதான பழைய, அபத்தமான, காட்டுத்தனமான, வெறுக்கத்தக்க, அருவருப்பான தப்பெண்ணத்தை எதுவும் செய்து நாம் உடைத்தெறிதல் வேண்டும். இந்தத் தப்பெண்ணம் அழிகேடான மாமூல், மரத்துப் போன மனப்பாங்கு, அடிமைத்தனமான பழக்கங்கள் ஆகியவற்றாலும், இதற்கும் மேல் முதலாளிகளின் மோசமான சுயநலத்தாலும் வளர்க்கப்பட்டது. முதலாளிகளின் நலன், கொள்ளை செய்து ஆதிக்கம் செலுத்துவதும் ஆதிக்கம் செலுத்திக் கொள்ளை செய்வதும் ஆகும். இல்லை. தமக்கு அறிவின் சக்தி அவசியம் என்பதைத் தொழிலாளர்கள் ஒரு கணமும் மறக்க மாட்டார்கள். தொழிலாளர்கள் இப்போது குறிப்பாயும் அறிவைப் பெறுவதில் அசாதாரணமான ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதைப் பற்றி பாட்டாளிகளின் மத்தியில் தவறான கருத்துக்கள் இல்லை, இருக்கவும் முடியாது என்பதை இது புலப்படுத்துகிறது. படிக்கவும் எழுதவும் தெரிந்த, மக்களை எடைபோடத் தெரிந்த, நடைமுறை அனுபவம் பெற்றுள்ள ஒவ்வொரு சாமான்ய தொழிலாளியும் விவசாயியும் அமைப்பாளர் வேலையைச் செய்யும் திறனுடையவராவார். முதலாளித்துவ அறிவுஜீவிகள் யாரைப் பற்றி அத்தகைய ஆணவத்தோடும் வெறுப்போடும் பேசுகிறார்களோ அந்த ''சாமான்ய மக்கள்'' மத்தியில் இத்தகைய பல

ஆடவரும் மகளிரும் உள்ளனர். தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் மத்தியில் நிலவும் இது போன்ற செழுமையான ஆற்றல், இது வரை பயன்படுத்தப்படாத ஆதார சக்தியாகும்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகள் இன்னும் ''பயந்தவர்களாக'' உள்ளனர். அவர்கள்தாமே இப்போது ஆளும் வர்க்கம் என்ற கருத்துக்கு இன்னும் வழக்கப்பட்டு விடவில்லை. அவர்கள் இன்னும் போதியளவு உறுதிப்பாடு அடையவில்லை. தமது வாழ்க்கை முழுவதும் அடிக்குப் பயந்து வேலை செய்தும் வறுமையாலும் பட்டினியாலும் கட்டாயப் படுத்தப்பட்டும் வந்த லட்சோப லட்சம் மக்கள் உள்ளங்களில் இந்தப் பண்புகளைப் புரட்சியால் ஒரே வீச்சில் புகுத்த முடியாது. ஆனால் 1917 அக்டோபர் புரட்சி வலுவானது, நிலைத்து நிற்கக் கூடியது, வெல்லற்கரியது. காரணம் அது இந்தப் பண்புகளை எழுப்பியுள்ளது, பழைய தடைகளைத் தகர்க்கிறது, தேய்ந்து போன தளைகளை அகற்றுகிறது, உழைக்கும் மக்களைப் புது வாழ்வினை சுயேச்சையாகப் படைத்துருவாக்கும் பாதையில் தலைமை தாங்கி நடத்திச் செல்கிறது.

கணக்குப் பதிவு கண்காணிப்பு—இதுவே தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் ஒவ்வொரு சோவியத்தின், ஒவ்வொரு நுகர்வாளர் சங்கத்தின், ஒவ்வொரு வழங்கீடு ஒன்றியம் அல்லது கமிட்டியின், ஒவ்வொரு ஆலைக் கமிட்டியின் அல்லது பொதுவாகத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்பின் பிரதான பொருளாதாரப் பணியாகும்.

உழைப்பின் அளவையும் உற்பத்தி சாதனங்களையும் பழைய வழக்கப்படி ஓர் அடிமையின் நோக்கு நிலையில் இருந்து கருதிப் பார்ப்பதை எதிர்த்து நாம் போராட வேண்டும். அந்த அடிமையின் ஏகக் குறிக்கோள் உழைப்பின் கடுமையைச் சற்றே குறைப்பது அல்லது முதலாளி வர்க்கத்திடமிருந்து குறைந்தபட்சம் ஏதோ சில சிறு சலுகை பெறுவது என்பதாக இருந்தது. முன்னேறிய வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தை

ஏற்கெனவே தொடங்கி விட்டார்கள். அவர்கள் புதிதாக வந்தவர்களுக்கு உறுதியான எதிர்ப்புக் காட்டி வருகின்றூர் கள். இந்தப் புதியவர்கள் ஆலே உலகத்தை நோக்கி போரின் போது பிரத்தியேகமாயும் பெருந் தொகையில் திரண்டு வந்தார்கள். அவர்கள் இப்போது மக்களது உடைமைக் குள் வந்துவிட்ட மக்கள் ஆலேகளைப் பழைய முறையிலேயே நடத்த விரும்புகிருர்கள். அவர்களது ஒரே நோக்கம் ''சாத் தியமான அளவு பெரிய லாபத்தைத் திரட்டிக் கொண்டு பிறகு வெளியேறுவது'' என்பதே. இந்தப் போராட்டத்தில் முன்னேறிய தொழிலாளர் பக்கம் ஆதரவாக வர்க்க உணர் வுள்ள, நேர்மையான, சிந்திக்கிற விவசாயிகளும் உழைக் கும் மக்களும் சேருவார்கள்.

உயர் அரசு அதிகாரம் என்ற முறையில் தொழிலாளர் கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளாலோ, அல்லது அந்த ஆட்சி அதிகாரத்தின் நெறிமுறைகள் அல்லது ஆணேயுரிமையின் பேரிலோ கணக்கு வைத்தலும் கண்காணித்தலும் நடத்தப்படும் பட்சத்தில்—இது விரிந்து பரந்த பொதுவான சர்வப்பொது கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும், செய்யப்பட்ட உழைப்பு மற்றும் உற்பத்தியான பொருட்களின் வினியோகம் மீதான கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும்—இது பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி நிலேநாட்டப்பட்டு உறுதிப்பட்ட பிற கான சோஷலிஸ்டு மாற்றத்தின் சாரமாகும்.

சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்வதற்கு இன்றி யமையாது தேவைப்படும் கணக்கு வைத்தலும் கண்காணிப் பும் மக்கள் திரளால் மட்டுமே செயல்படுத்த முடியும். தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் பெருந்திரள் செல்வந்தர், கயவாளிகள், சோம்பேறிகள் மற்றும் போக்கிரிகள் விஷயத்தில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பில் சுயவிருப்ப மான மனச்சான்று பூர்வமான ஒத்துழைப்பைத் தோற்று விக்க வேண்டும். இந்த ஒத்துழைப்பு புரட்சிகர ஊக்கம் கொண்டதாக இருத்தல் வேண்டும். இதனுல் மட்டுமே, முதலாளித்துவத்திடமிருந்து சோஷலிசம் மரபாகப் பெற்ற தான சாபக்கேடான முதலாளித்துவ சமூக அமைப்பின்

மீதமிச்சங்களை, மனித குலத்தின் கசடுகளை, இந்தப் படு மோசமாக சிதிலப்பட்டுத் தேய்ந்து போன உறுப்புகளை, இந்தத் தொத்து நோயை, பிளேக் நோயை, சீழ்ப்புண்ணை வென்று ஒழிக்க முடியும்.

தொழிலாளர்களே விவசாயிகளே, உழைக்கும் சுரண்டப் படும் மக்களே! நிலம், வங்கிகள் மற்றும் ஆலைகள் இப் போது மக்கள் அனைவரின் சொத்துக்களாகி விட்டன! நீங்கள் நீங்களே பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்துக் கணக்கு வைக்கவும், கண்காணிப்புச் செய்யவும் வேலை தொடங்க வேண்டும். இது மட்டுமே சோஷலிசத்தின் வெற்றிக்கான பாதை, அதன் வெற்றிக்கான ஒரே உத்தர வாதம்! எல்லாச் சுரண்டலையும் எல்லா வறுமையையும் எல்லா ஏழ்மையையும் எதிர்த்து வெல்வதற்கான ஒரே உத்தரவாதம்! எல்லோருடைய தேவைகளையும் திருப்தி செய்வதற்குப் போதுமான ரொட்டி, இரும்பு, வெட்டு மரம், கம்பளி, பருத்தி மற்றும் மென்சணல் ருஷ்யாவில் இருக் கிறது. ஆனால் இதற்கு உழைப்பும் அதன் விளைபொருட்களும் சரியானபடி வினியோகிக்கப்பட வேண்டும். இந்த வினி யோகத்தின் மீது அனைத்து மக்களின் காரியகரமான நடைமுறை கண்காணிப்பு நிலைநாட்டப்பட வேண்டும். மக்களின் விரோதிகளான செல்வந்தர், அவர்களை அண்டி வாழ்பவர்கள், கயவர், சோம்பேறிகள், போக்கிரிகளை அர சியலில் மட்டுமின்றி, அன்றாடப் பொருளாதார வாழ்விலும் தோற்கடிக்க வேண்டும்.

இந்த மக்களின் விரோதிகளுக்கு, சோஷலிசத்தின் விரோதி களுக்கு, உழைக்கும் மக்களின் விரோதிகளுக்கு எவ்விதக் கருணையும் காட்டக் கூடாது. செல்வந்தர் மற்றும் அவர்களை அண்டிவாழ்வோர், முதலாளித்துவ அறிவுஜீவிகளை எதிர்த்து அழிக்கும் வரைப் போர், கயவர் சோம்பேறிகள் போக்கிரி களை எதிர்த்துப் போர்! அவர்கள் அனைவரும் ஒரே இனம், முதலாளித்துவத்தின் கான்முளைகள், பிரபுக்குல மற்றும் முதலாளித்துவ சமூக அமைப்பின் ஈற்றுக்கள். இந்த சமூக அமைப்பில் விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மக்களைக் கொள்ளையடிக்கிறார்கள், அவமதிக்கிறார்கள். இந்த சமூக

அமைப்பின் வறுமையும் இன்மையும் ஆயிரம் ஆயிரம் பேர்களைப் போக்கிரித்தனம், ஊழல் மற்றும் கயமைப் பாதையில் போகும்படி நிர்ப்பந்தித்து அவர்கள் தமது மானுடச்சாயல்கள் அனைத்தையும் இழக்கும்படிச் செய்கிறது. இந்த சமூக அமைப்பு, உழைக்கும் மனிதனிடம், ஏமாற்று மூலமாவது சுரண்டலில் இருந்து தப்பிக்கவும், அதிலிருந்து விடுபடவும், ஒரு கணமேனும் சரி விருப்பமற்ற உழைப்பில் இருந்து தப்பிக்கவும், சாத்தியமான எந்த வழியிலாவது, எதைச் செய்தும் குறைந்த பட்சம் ஒரு துண்டு ரொட்டியாவது பெற்று பட்டினி கிடக்காமல் தானும் தனது சுற்றமும் பசி வேதனையைச் சற்றே தணித்துக் கொள்ளவும் வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர்க்க முடியாத வகையில் வளர்க்கிறது.

செல்வந்தரும் கயவாளிகளும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே ஆவர். அவர்கள் முதலாளித்துவம் வளர்த்த புல்லுருவிகளின் இரண்டு பிரதான வகை இனங்களே. அவர்கள் சோஷலிசத்தின் பிரதான விரோதிகள். இந்த விரோதிகளை மக்கள் அனைவரின் விசேஷக் கவனக் கண்காணிப்பின் கீழ் வைக்க வேண்டும். சோஷலிஸ்டு சமூக அமைப்பின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைச் சிறிதளவு மீறினாலும் கூட அவர்கள் தாட்சண்ணியமின்றித் தண்டிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் பலவீனத்தின் வெளிப்பாடோ, தயக்கமோ, உணர்ச்சிப் பசப்போ எதுவும் சோஷலிசத்துக்கு எதிரான அளப்பரிய பாதகச் செயலாகும்.

இந்தப் புல்லுருவிகளை சோஷலிஸ்டு சமூக அமைப்புக்குத் தீங்கற்றவர்களாக மாற்ற வேண்டுமானால், அனைத்து மக்களும் லட்சோபலட்சம் தொழிலாளர்களும் விவசாயிகளும் சுய விருப்பத்தோடும், ஊக்கத்தோடும், புரட்சிகர உற்சாகத்தோடும் பங்கேற்கும் முறையில், செய்யப்பட்ட வேலை, பொருள் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்த கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் நாம் ஒழுங்கமைத்தல் வேண்டும். நேர்மையான, அறிவுடைய, திறமையுள்ள ஒவ்வொரு தொழிலாளி மற்றும் விவசாயியின் ஆற்றலுக்குள் முற்றும் அடங்கியதான கணக்கு வைத்தலையும்

கண்காணிப்பையும் ஒழுங்கமைக்கும் பொருட்டு நாம் அவர்களது ஒழுங்கமைக்கும் தனி ஆற்றல்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும். இந்தத் தனி ஆற்றல் அவர்கள் மத்தியில் காணப் படுகிறது. அவர்கள் மத்தியில் ஸ்தாபனத்துறையிலான சாதனை கள் விஷயத்திலான நேசப்போட்டியை எழுச்சியுற வைத்து தேசிய அளவில் ஒழுங்கமைக்க வேண்டும். படித்த மனி தனின் அவசியமான அறிவுரைக்கும், ''படித்தவர்'' மத்தி யில் மிக வழக்கமாக நிலவும் மடிமை மீதான ''சாமான்ய'' தொழிலாளி மற்றும் விவசாயி மேற்கொள்ளும் அவசிய மான கண்காணிப்புக்கும் இடையிலான வேறுபாட்டைத் தொழிலாளரும் விவசாயிகளும் தெளிவாகக் காணுமாறு செய்தல் வேண்டும்.

இந்த மடிமை, இந்தக் கவனம் இன்மை, துப்புரவு இன்மை, காலத்திட்பம் இன்மை, அமைதி இழந்த அவசரக் கோலம், செயலுக்குப் பதில் விவாதத்தையும் வேலைக்குப் பதில் பேச்சையும் மாற்றீடு செய்யும் விருப்பம், எதையும் முழுமையாகச் செய்து தீர்க்காமல் உலகிலுள்ள சகலத்தை யும் எடுத்துச் செய்வதற்கான விருப்பம் ஆகியவை ''படித்த வர்களின் இனப்'' பண்புகளாகும். இதற்குக் காரணம் அவர் கள் இயல்பாகவே மோசமானவர்கள் என்பது அல்ல. அவர் களது தீய சித்தமும் அல்ல. இதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கையின் பழக்கங்கள், அவர்களது வேலை நிலைமைகள், சோர்வடைதல், மூளை உழைப்பை உடல் உழைப்பில் இருந்து சகஜங்கெட்ட நிலையில் பிரிவினை செய்தல் ஆகிய இத்தி யாதிகள் அனைத்துமாகும்.

நமது புரட்சியின் பிழைகள் குறைபாடுகள் மற்றும் தவறுகளின் இடையில், நமது மத்தியில் இருக்கும் அறிவு ஜீவிகளின்—தற்போது தவிர்க்கவியலாத—இந்த வருந்தத் தகுந்த இனப்பண்புகளின் விளைவாக ஏற்பட்ட பிழைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அதோடு அறிவு ஜீவிகளின் ஒழுங்கமைக்கும் வேலை மீது தொழிலாளர்களின் மேற்பார்வை போதியளவு இல்லாததும் இப்பிழைகளின் பாற்படும்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் இன்னும் ''பயந்த

நிலையில்'' இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பயத்தை ஒழிக்க வேண்டும், அதை அவர்கள் நிச்சயமாயும் ஒழிப்பார்கள். படித்த நபர்கள், அறிவுஜீவிகள் மற்றும் நிபுணர்களின் அறிவுரைகள் நெறிமுறைகளை நாம் தவிர்க்க முடியாது. நல்லறிவுடைய ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் இதை முற்றிலும் நன்றாகப் புரிந்து கொள்கிறார். தொழிலாளர் விவசாயிகள் சார்பில் இருந்து போதிய கவனமோ தோழமை பூர்வமான மரியாதையோ குறைந்து விட்டதாக நமது மத்தியில் உள்ள அறிவுஜீவிகள் புகார் செய்ய முடியாது. ஆனால், அறிவுரைகள் நெறிமுறைகள் என்பன ஒரு விஷயம், நடைமுறையில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு இன்னொரு விஷயம் ஆகும். மிகப் பெரும்பாலும் அறிவாளிகள் அருமையான அறிவுரைகளையும் நெறிமுறைகளையும் தருகின்றனர். ஆனால் சொற்களைச் செயலாகப் பெயர்க்கும் காரியத்தில் நடைமுறைக் கண்காணிப்பைச் செயல்படுத்துவதில் இந்த அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளை நிறைவேற்றுவதில் அவர்கள் படுமோசமாக, அபத்தமான முறையில், வெட்கக்கேடான அளவில் ''வாய்ப்பு இழந்தவர்கள்'', ஆற்றல் அற்றவர்கள் என்பதை நிதர்சனப் படுத்தி விடுகிறார்கள்.

இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ''மக்கள்'' மத்தியில் இருந்தும், ஆலைத் தொழிலாளர் மற்றும் உழைக்கும் விவசாயிகள் இடையில் இருந்தும் வரும் நடைமுறை அமைப்பாளர்களின் உதவியும் தலைமைப் பாத்திரமும் வேண்டாம் என்று ஒழிப்பது அறவே சாத்தியமல்ல. ''பானைகள் செய்வது கடவுள்கள் அல்ல''—இந்த உண்மையைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது மனங்களில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதைய முழு விவகாரமும் நடைமுறை வேலையே என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தத்துவம் நடைமுறையாக மாற்றப்படும், நடைமுறையால் உயிர்க்களை ஊட்டப்படும், நடைமுறையால் சரிபார்க்கப்படும், நடைமுறையால் சோதிக்கப்படும் அந்த வரலாற்றுத் தருணம் வந்து விட்டது. இப்பொழுது, ''மெய்யான இயக்கத்

தின் ஒவ்வொரு படியும் ஒரு டஜன் வேலைத் திட்டங்களை விடவும் அதிக முக்கியமானது''[35] என்ற மார்க்சின் சொற்கள் குறிப்பாயும் மெய்மையாகின்றன. செல்வந்தர்களையும் கயவாளிகளையும் நடைமுறையில் மெய்யாகவே மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, முழுமையாக அகத்தே பதிவு செய்து, அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சோஷலிசம் பற்றிய அருமையான ஒரு டஜன் வாதங்களை விடவும் மதிப்புடையதாகும். ஏனெனில் ''தத்துவம் எனது நண்பரே, நரை கண்டது, ஆனால் வாழ்க்கையின் கற்பகத்தரு பசுமையானது''[36].

தொழிலாளர் விவசாயிகளிடையிலான நடைமுறை அமைப்பாளர்களிடை நேசப்போட்டி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அறிவாளிகள் மிகவும் விரும்பிச் செய்ய முனையும் மாறா நிலைப்படி உருவடிவங்களை நிலைநாட்டவும் மேலிருந்து ஒரே மாதிரித்தன்மையைத் திணிக்கவும் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்துப் போரிட வேண்டும். மாறா நிலைப்படி உருவடிவங்களுக்கும் மேலே இருந்து திணிக்கப்படும் ஒரே மாதிரித் தன்மைக்கும், ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு மத்தியத்துவத்துக்கும் இடையே பொதுவான அம்சம் எதுவுமே கிடையாது. விவரங்களில், பிரத்தியேக வட்டார இயல்புகளில், அணுகும் முறைகளில், கண்காணிப்பைச் செயல்படுத்தும் முறைகளில், புல்லுருவிகளை (செல்வந்தர், கயவர்கள், அக்கறையற்ற உணர்ச்சி வெறி பிடித்த அறிவாளிகள் இத்தியாதி) அழித்தொழித்து அவர்களைத் தீங்கற்றவர்கள் ஆக்குவதற்கான வழிகளில் பல்வகைத் தன்மை இருப்பதால் தலையாய கூறுகளின், அடிப்படைகளின், சாரத்தின் ஒற்றுமை குலைபடவில்லை ஆனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அடிமட்டத்தில் இருந்து வரும் முன்முயற்சி, சுயேச்சைப் போக்கு, செயல் சுதந்திரம் மற்றும் ஊக்கத்தை எவ்வாறு மாறாநிலைபடி உருக்களில் இருந்து விடுபட்ட சுயவிருப்பமான மத்தியத்துவத்தோடு இணைப்பது என்பதற்கு பாரிஸ் கம்யூன்[37] ஒரு மகத்தான உதாரணத்தினை வழங்கியது. நமது சோவியத்துகள் அதே பாதையைப் பின்பற்று

கின்றன. ஆனுல் அவை இன்னும் ''பயந்தவையாக உள்ளன.'' அவை இன்னும் தமது தொடக்க நிலே கடந்து முன்னேறவில்லே, சோஷலிச அமைப்பைக் கட்டுவது என்ற தமது புதிய மகத்தான படைப்பாற்றல் பணியில் இன்னும் ''ஒரு பிடிப்புப் பெறவில்லே''. சோவியத்துகள் மேலும் துணிவுடன் செயல்படத் தொடங்க வேண்டும், மேலும் அதிக முன்முயற்சியைத் தோற்றுவிக்க வேண்டும். எல்லா ''கம்யூன்களும்''—ஆலேகள், கிராமங்கள், நுகர்வாளர் சங்கங்கள், வழங்கீடுக் கமிட்டிகள்—உழைப்பு மற்றும் உற்பத்திப் பொருட்களே வினியோகிப்பதைக் கணக்கு வைக்கும் கண்காணிக்கும் நடைமுறை அமைப்பாளர்களாக ஒன்றுக்கொன்று நேசப்போட்டியிட வேண்டும். இந்தக் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு வேலேத் திட்டம் எளிதானது, தெளிவானது, எல்லோருக்கும் புரியக் கூடியது. எல்லோருக்கும் ரொட்டி, எல்லோருக்கும் சீரான காலணி நல்ல உடை, எல்லோருக்கும் குளிருக்கு அடக்கமான இருப்பிடங்கள். எல்லோரும் மனச் சாட்சிப்படி வேலே செய்ய வேண்டும், (தமது வேலேயைத் தட்டிக் கழிப்பவன் உட்பட) கயவாளி ஒருவன் கூட சுதந்திரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது, அவன் சிறையிலடைக்கப்பட வேண்டும் அல்லது மிகவும் கடுமையான வகைப்பட்ட கட்டாய உழைப்புத் தண்டனே அனுபவிக்கவிட வேண்டும். சோஷலிசத்தின் சட்டங்கள் விதிமுறைகளே மீறும் எந்த ஒரு செல்வந்தனும் கயவாளி அடைந்த கதியில் இருந்து தப்பி விட அனுமதிக்கக் கூடாது, நீதிப்படிச் செல்வந்தனுக்கும் அதே கதிதான் ஏற்பட வேண்டும். ''வேலேசெய்யாதவனுக்கு உணவில்லே.'' இதுவே சோஷலிசத்தின் நடைமுறைக் கட்டளேயாகும். இவ்வாறுதான் காரியங்கள் நடைமுறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். நமது தொழிலாளர் விவசாயி அமைப்பாளர்கள் ''கம்யூன்கள்'' பெருமிதம் கொள்ள வேண்டிய நமது நடைமுறை வெற்றிகள் இவையே. இது குறிப்பாயும் அறிவாளிகளிடையிலான அமைப்பாளர்களுக்குப் பொருந்தியதாகும் (குறிப்பாயும், காரணம் அவர்கள் தமது பொதுவான கட்டளேகள் மற்றும் தீர்மானங்கள் பற்றி மிகவும்

அதிகமாக, அளவுக்கு மேல் மிகவும் அதிகமாகப் பெருமிதம் கொள்ளும் வழக்கமுடையவர்கள்).

கணக்கு வைக்கவும் செல்வந்தர் கயவாளிகள் மற்றும் சோம்பேறிகளைக் கண்காணிக்கவும் ஆயிரக்கணக்கான நடைமுறை வடிவங்களும் முறைகளும் வகுக்கப்பட வேண்டும், கம்யூன்களாலேயே, நகரத்திலும் நாட்டுப் புறத்திலுமான சிறிய அலகுகள் மூலமே நடைமுறையில் சோதிக்கப்பட வேண்டும். பல்வகைத் தன்மை இங்கு பயனுறுதித்தன்மைக்கு உத்தரவாதமாக, தனியொரு பொது நோக்கத்தைச் சாதனையாக்குவதற்கான வெற்றிக்கு வாக்குறுதியாக, ருஷ்யா என்னும் நிலப்பரப்பில் கயவாளிகள், செல்வந்தராகிய மூட்டைப் பூச்சிகள் இத்தியாதி எல்லா கேடு சூழ் பூச்சி புழுக்களை அகற்றிச் சுத்தப்படுத்தும் சாதனமாக விளங்குகிறது. ஓர் இடத்தில் பத்துச் செல்வந்தர்கள், ஒரு டஜன் கயவாளிகள், வேலைக்கு மட்டம் போடும் (போக்கிரிகளைப் போல பெத்ரோகிராதில் குறிப்பாகக் கட்சி அச்சகங்களில் வேலைக்கு மட்டமடிக்கும் அச்சுக் கோப்போர் தோரணையில்) அரை டஜன் தொழிலாளர் சிறையில் தள்ளப்படுவர். இன்னொரு இடத்தில் அவர்கள் கக்கூசுகளைக் கழுவும்படி ஏவப்படுவர். மூன்றாவது இடத்தில் அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து வந்த பின் ''மஞ்சள் சீட்டுகள்'' வழங்கப்பட்டு அவர்கள் திருந்தும் வரை தீங்கு விளைக்கும் நபர்கள் என்பதாக எல்லோரும் கண்காணிக்கும்படி வைக்கப்பட்டிருப்பர். நாலாவது இடத்தில் சோம்பேறிகளில் பத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே சுடப்படுவர். ஐந்தாவது இடத்தில் கலவையான முறைகள் கையாளப்படும். தற்காலிக விடுதலை மூலம் திருந்தக் கூடியவர்களான செல்வந்தர், முதலாளித்துவ அறிவுஜீவிகள், கயவாளிகள், போக்கிரிகள் விரைவில் திருந்திக் கொள்வதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படுவர். எந்த அளவுக்கு அதிகமாகப் பல்வகைத் தன்மை இருக்குமோ அந்த அளவுக்கு நமது பொது அனுபவம் மேலும் சிறப்பாகவும் அதிகச் செழுமையாகவும் இருக்கும். சோஷலிசத்தின் வெற்றி மேலும் உறுதியானதாயும் அதிக துரிதமானதாயும் விளங்கும். நடைமுறையால்—நடைமுறையால்

மட்டுமே வகுக்க முடியும்—போராட்டத்துக்கான சிறந்த முறைகளையும் வழிகளையும் மேலும் எளிதாக வகுக்க முடியும்.

பட்டினியால் வாடும் மக்கள் இல்லாத, வேலையின்றித் திண்டாடுவோர் இல்லாத, சோம்பேறிச் செல்வந்தர் இல்லாத, அறிவுஜீவிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் வெறுக்கத்தக்க அடிவருடிகளும், நாசவேலை செய்வோரும் இல்லாத எந்தக் கம்யூன், எந்த பெரு நகர வட்டாரம், எந்த ஆலை அல்லது எந்தக் கிராமம் இருக்கிறது? தொழிலாளர் உற்பத்தித் திறனை உயர்த்தவும், ஏழைகளுக்கு நல்ல புதிய வீடுகள் கட்டித் தரவும், செல்வந்தர் வீடுகளில் ஏழைகளைக் குடி வைக்கவும், ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தின் ஒவ்வொரு குழந்தைக்கும் முறையாக ஒரு போத்தல் பால் வழங்கவும் எங்கே பெரும்பணி ஆற்றப் பட்டுள்ளது? இந்த அம்சங்களில்தான் கம்யூன்கள், குடிவாழ் கூட்டுக்கள், உற்பத்தியாளர்-நுகர்வாளர் சங்கங்கள், இணைப்புகள், தொழிலாளர்கள் படையாளர்கள் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஆகியவற்றுக்கிடையே நேசப்போட்டி வளர வேண்டும். இந்தப் பணியில் நடைமுறையில் தொண்டாற்ற தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் முன்வர வேண்டும், அரசு நிர்வாகத்தில் வேலை செய்ய அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் ஏராளமான தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேவலம் அடக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். தமது ஆற்றல்களைப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களே அவர்கள் மட்டுமே மக்களின் ஆதரவுடன் ருஷ்யாவைப் பாதுகாக்க முடியும், சோஷலிச லட்சியத்தைப் பாதுகாக்க முடியும்.

டிசம்பர் 24—27, 1917ல்
(ஜனவரி 6—9, 1918) எழுதப்பட்டது

முதலில் பிராவ்தா, இதழ் 17ல்,
ஜனவரி 20, 1929ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 195-205

உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம்[38]

அரசியல் நிர்ணய சபை தீர்மானிப்பதாவது:

I 1. ருஷ்யா தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் ஒரு குடியரசு என்று இதனுல் பிரகடனம் செய்யப்படுகிறது. மத்தியிலும் வட்டாரங்களிலும் எல்லா ஆட்சி அதிகாரங்களும் இந்த சோவியத்துகளுக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது.

2. ருஷ்யாவின் சோவியத் குடியரசு, சுதந்திர தேசங்களின் சுதந்திர ஒன்றியம் என்ற கோட்பாட்டின் மீது, சோவியத் தேசியக் குடியரசுகளின் ஒரு கூட்டாட்சியாக நிறுவப்பட்டுள்ளது.

II இதன் அடிப்படை நோக்கம் மனிதனை மனிதன் சுரண்டுவது அனைத்தையும் ஒழித்தல், சமூகம் வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதை முழுமையாக அகற்றுதல், சுரண்டலாளர் எதிர்ப்பை இரக்கமின்றி நசுக்குதல், ஒரு சோஷலிஸ்டு சமூக அமைப்பை நிலைநாட்டுதல், எல்லா நாடுகளிலும் சோஷலிசத்தின் வெற்றியை சாதனையாக்கல் என்பதாக இருப்பதால், இந்த அரசியல் நிர்ணய சபை மேலும் தீர்மானிப்பதாவது:

1. நிலத்தில் தனியார் உடைமை உரிமை இதனுல் ஒழிக்கப்படுகிறது. எல்லா நிலமும், எல்லாக் கட்டடங்கள், விவசாயக் கருவிகள் மற்றும் விவசாயப் பொருள் உற்பத்திக்கான இதர துணைப் பொருட்

கள் சகிதம் உழைக்கும் மக்கள் அனை வரின் சொத்து என்று பிரகடனம் செய்யப்படுகிறது.

2. சுரண்டலாளர் மீது உழைக்கும் மக் களின் ஆட்சி அதிகாரத்தை உத்தரவா தம் செய்யும் நோக்கத்திற்காகவும், ஆலை கள் சுரங்கங்கள் ரயில்வேக்கள் மற்றும் இதர உற்பத்தி சாதனங்கள் போக்கு வரத்து சாதனங்களைத் தொழிலாளர் விவசாயிகள் அரசின் சொத்தாக முழு மையாக மாற்றும் பொருட்டும் தொழி லாளர் கண்காணிப்பு மற்றும் உயர் பொருளாதாரக் கவுன்சில் சம்பந்தமான சோவியத் சட்டங்கள் இதனுல் ஊர்ஜி தம் செய்யப்படுகின்றன.

3. மூலதனத்தின் அடிமைத்தளையில் இருந்து உழைக்கும் மக்களை விமோசனப்படுத்து வதற்கான முன்நிபந்தனைகளில் ஒன்று என்ற முறையில் எல்லா வங்கிகளையும் தொழிலாளர் விவசாயிகளின் அரசின் சொத்தாக மாற்றுவது இதனுல் ஊர்ஜி தம் செய்யப்படுகிறது.

4. சமூகத்தின் புல்லுருவிப் பகுதிகளை ஒழிக் கும் நோக்கத்துடன் சர்வஜனக் கட்டாய உழைப்பு இதனுல் ஏற்பாடு செய்யப்படு கிறது.

5. உழைக்கும் மக்களின் முழு ஆட்சி அதி காரத்தை உறுதிப்படுத்தவும் சுரண்டலா ளர் ஆட்சியை மீட்டமைப்பதற்கான எல்லா சாத்தியக் கூறுகளையும் அகற்ற வும் வேண்டி உழைக்கும் மக்களுக்கு ஆயுதம் வழங்குதல், தொழிலாளர் விவ சாயிகளின் செஞ்சேனையை உருவாக்கு



உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம் என்ற லெனினது நூலின் கையெழுத்துப் பிரதியின் முதல் பக்கம். (1918 ஜனவரி துவக்கம்)

தல் மற்றும் உடைமை வர்க்கங்களை முற்றுகவும் நிராயுதர் ஆக்குதல் ஆகியவை இதனுல் ஆணையிடப்படுகின்றன.

III 1. மிகவும் கொலைகாரத்தனமான இப்போதைய போரில் உலகத்தை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்திய நிதி மூலதனம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் கொடும் பிடியில் இருந்து மனித குலத்தை விடுவிப்பது என்ற தனது உறுதியான வைராக்கியத்தை வெளியிடும் அரசியல் நிர்ணய சபையானது, இரகசிய உடன்படிக்கைகளைக் கண்டனம் செய்தும், போரில் சேனைகளில் இருந்த தொழிலாளர் விவசாயிகளுடன் விரிவான தோழமை கொள்ளலை ஏற்பாடு செய்தும், எதையும் செய்து, புரட்சிகரமான வழிகளால் பிரதேசக் கைப்பற்றல் மற்றும் தண்ட இழப்பீடுகள் இல்லாத, தேசங்களின் சுயேச்சையான சுயநிர்ணயத்தை அடிப்படையாக்கிய ஒரு ஜனநாயக சமாதானத்தை நாடுகளிடை ஏற்படுத்தவும் வேண்டி சோவியத் ஆட்சி பின்பற்றிய கொள்கையை மனப்பூர்வமாக அங்கீகரிக்கிறது.

2. இதே நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, அரசியல் நிர்ணய சபையானது, வளர்ச்சியடைந்த ஒரு சில தேசங்களைச் சேர்ந்த சுரண்டலாளர்கள், ஆசியாவிலும் பொதுவாகக் காலனிகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் உள்ள கோடிக்கணக்கான உழைக்கும் மக்களை அடிமைப்படுத்துவது மூலம் தமது செல்வச் செழிப்பைக் கட்டி வளர்க்க உதவிய முதலாளித்துவ நாகரிகத்தின் காட்டுமிரண்டிக் கொள்கையுடன் முற்றுக முறித்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

பின்லாந்தின் பூரண சுதந்திரத்தைப் பிரகடனம் செய்த, பாரசீகத்தில் இருந்து துருப்புக்களை விலக்கிக் கொள்ளத் தொடங்கிய, ஆர்மீனியாவின் சுயேச்சையான சுயநிர்ணய உரிமையைப்

பிரகடனம் செய்த மக்கள் கமிசார்களின் கவுன் சிலின் கொள்கையை அரசியல் நிர்ணய சபை வரவேற்கிறது.[39]

3. ஜார், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளித் துவ வர்க்கத்தின் அரசாங்கங்கள் பட்ட கடன் களை ரத்துச்செய்வது சம்பந்தமான சோவியத் சட்டத்தை சர்வதேச வங்கி, நிதி மூலதனம் ஆகியவற்றின் மீது தாக்கிய முதல் அடி என்று அரசியல் நிர்ணய சபை கருதுகிறது. மேலும் மூலதனத்தின் அடிமைத் தளையினை எதிர்த்து சர்வதேசத் தொழிலாளர்களின் புரட்சி எழுச்சி முழுமையாக வெற்றி பெறும் வரையில் சோவியத் ஆட்சி இந்தப் பாதையை உறுதி யாகப் பின்பற்றும் என்று அதன் நம்பிக்கையை வெளியிடுகிறது.

IV இந்த அரசியல் நிர்ணய சபை அக்டோபர் புரட் சிக்கு முன்னதாகத் தயாரிக்கப்பட்ட பட்டியல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். அப் பொழுது மக்கள் முழுத்திரளும் சுரண்டலாளர்களை எதிர்த்து எழுச்சியுறும் நிலையில் இருக்கவில்லை. சுரண்டலாளர்கள் தமது வர்க்கத் தனிசலுகைகளுக் காகத் தொடுக்கும் எதிர்ப்பின் முழுவலிமையினை மக்கள் இன்னும் அனுபவப்பட்டிருக்கவில்லை. சோஷ லிஸ்டு சமூகத்தைக் கட்டும் பணியில் இன்னும் ஈடுபட்டிருக்கவில்லை. எனவே அது சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராகச் சடங்கான முறையில் முன்வருவதும் கூட அடிப்படையில் தவறானது என்று அரசியல் நிர்ணய ச்பை கருதுகிறது.

தம்மைச் சுரண்டுவோரை எதிர்த்து மக்கள் இறுதிப் போராட்டத்தை இப்போது நடத்தி வரும் போது, எந்த ஓர் அரசாங்க அமைப்பிலும் சுரண்ட லாளர்களுக்கு இடம் கிடையாது என்று சாரத்தில் கருதுகிறது அரசியல் நிர்ணய சபை. ஆட்சி அதி காரம் உழைக்கும் மக்களிடமும் அவர்களது அதி

கார பூர்வமான பிரதிநிதியான தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளிடமும் முழுமையாகவும் முற்ருகவும் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

சோவியத் ஆட்சியையும் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் பிரகடனங்களையும் ஆதரிக்கும் அரசியல் நிர்ணய சபை அதன் சொந்தப் பணி சமூகத்தை சோஷலிஸ்டு முறையில் புனரமைப்பதற்கான அடிப் படைக் கோட்பாடுகளை நிலைநாட்டுவதில் அடக்கம் என்று கருதுகிறது.

ருஷ்யாவில் உள்ள எல்லா தேசங்களின் உழைக் கும் வர்க்கங்களின் உறுதியான நிலையான ஒன்றி யத்தை மெய்யாகவே சுதந்திரமான சுயவிருப்பமான முறையில் உருவாக்க முயலும் அதே சமயம் அரசி யல் நிர்ணய சபையானது தனது சொந்தப் பணி யினை ருஷ்யாவின் சோவியத் குடியரசுகளின் ஒரு கூட்டாட்சிக்கான அடிப்படை கோட்பாடுகளை உரு வாக்குவதோடு நிறுத்திக் கொள்கிறது. இந்தக் கூட் டாட்சி அரசாங்கத்தில் சேருவதா இல்லையா, இதர கூட்டாட்சி சோவியத் நிறுவனங்களில் சேருவதா இல்லையா, எந்த நிபந்தனைகளின் பேரில் என்பதை எல்லாம் ஒவ்வொரு தேசத்தின் தொழிலாளர்களும் விவசாயிகளும் சுதந்திரமான முறையில் தமது சொந்த அதிகாரபூர்வமான சோவியத்துகளின் காங்கிரசு களில் முடிவு செய்து கொள்ளும்படி விட்டுவிடுகிறது.

1918 ஜனவரி 3 (16)க்கு
முன்பாக எழுதப்பட்டது

பிராவ்தா, இதழ் 2
மற்றும் இஸ்வேஸ்தியா, இதழ் 2,
ஜனவரி 4 (17), 1918ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 221-223

அரசியல் நிர்ணய சபையின் கலைப்புப் பற்றிய நகல் அரசாணை[40]

நகல் அரசாணை

ருஷ்யப் புரட்சி அதன் தொடக்கத்திலேயே உழைக்கும், சுரண்டப்படும் வர்க்கங்கள் அனைத்துடையதுமான ஒரே வெகுஜன ஸ்தாபனம் என்ற முறையில், இந்த வர்க்கங்களின் முழுமையான அரசியல், பொருளாதார விடுதலைக்கான அவற்றின் போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் ஆற்றலுடையதுமான தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளை உருவாக்கியது.

ருஷ்யப் புரட்சியின் முதல் கட்டம் முழுவதன் போதும் சோவியத்துகள் எண்ணிக்கையில் பெருக்கமடைந்தன, வளர்ந்தன, வலுப்பெற்றன. முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வது என்ற பிரமைகளை உதறித்தள்ளவும், முதலாளித்துவ-ஜனநாயக நாடாளுமன்ற முறையின் வடிவங்களின் ஏமாற்றும் தன்மையினை உணரவும் தமது சொந்த அனுபவத்தாலேயே அவை பயிற்றுவிக்கப்பட்டன. இந்த வடிவங்களோடும் எல்லாவகையான சமரசங்களோடும் முறித்துக் கொள்ளாதவரை ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் விடுதலை சாத்தியம் அல்ல என்ற முடிவுக்கு அவை நடைமுறை அனுபவத்தில் இருந்து வந்து சேர்ந்தன. இந்த முறிவு அக்டோபர் புரட்சியுடன் வந்தது, அது சோவியத்துகளுக்கு முழு ஆட்சி அதிகாரத்தையும் மாற்றி வழங்கியது.

அக்டோபர் புரட்சிக்கு முன்பதாகத் தயாரிக்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசி

யல் நிர்ணய சபை, சமரசவாதிகளும் காடேட்டுகளும் ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்த போது நிலவிய அரசியல் சக்திகளின் பழைய உறவுகளின் வெளிப்பாடாகும். அந்தச் சமயத்தில் மக்கள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஓட்டு அளித்த போது அவர்கள் முதலாளிகளை ஆதரிக்கும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் சோஷலிசத்தை ஆதரிக்கும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் இடையே தேர்ந்தெடுக்கும் நிலையில் இருக்கவில்லை. எனவே முதலாளித்துவ நாடாளுமன்றக் குடியரசுக்கு முத்தாய்ப்பிட வேண்டிய அரசியல் நிர்ணய சபை, அக்டோபர் புரட்சியின் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பாதையில் கட்டாயம் ஒரு முட்டுக் கட்டையாக வேண்டி இருந்தது.

அக்டோபர் புரட்சியானது, சோவியத்துகளுக்கும் சோவியத்துகளின் வழியே உழைக்கும், சுரண்டப்படும் மக்களுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியது மூலம் சுரண்டலாளர்களின் மூர்க்கமான எதிர்ப்பை எழுப்பியது. இந்த எதிர்ப்பை நசுக்கியது மூலம் அது தன்னைத்தானே சோஷலிஸ்டுப் புரட்சியின் துவக்கமாக முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டது. பழைய முதலாளித்துவ நாடாளுமன்ற முறை அதன் குறிக்கோளின் எல்லை தாண்டி மிகையாகி விட்டது, சோஷலிசத்தை சாதனையாக்கும் நோக்கத்துக்கு அறவே பொருத்தமற்றதாகி விட்டது என்பதையும், சொத்துடைமை வர்க்கங்களின் எதிர்ப்பை வென்று அகற்றி சோஷலிஸ்டு சமூகத்திற்கான அடித்தளங்களை இடத்தக்க ஆற்றல் தேசிய நிறுவனங்களிடம் இல்லை, வர்க்க நிறுவனங்களிடம் (சோவியத்துகளைப் போன்றவை) மட்டுமே உள்ளது என்பதையும் உழைப்பாளி வர்க்கங்கள் அனுபவத்தில் இருந்து அறிந்தன. சோவியத்துகளின் முழு ஆட்சி அதிகாரத்தைக் கைவிடுவது, மக்களால் வென்று பெறப்பட்டதான சோவியத் குடியரசை முதலாளித்துவ நாடாளுமன்ற முறைக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் வேண்டிக் கைவிடுவது என்பது பின்னோக்கி வைக்கும் ஓர் அடியாகும், அது தொழிலாளர்,

விவசாயிகளின் அக்டோபர் புரட்சியின் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

மேலே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பச் சூழல்கள் காரணமாக, வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி, கேரென்ஸ்கி, அவ்க்சேன்தியெவ் மற்றும் செர்னேவின் கட்சி அரசியல் நிர்ணய சபையில் பெரும்பான்மை பெற்றது. இது ஜனவரி 5ந் தேதி கூடியது. இந்தக் கட்சி, சோவியத் ஆட்சி அதிகாரத்தின் உயர் உறுப்பான சோவியத்துகளின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் அறவே தெட்டத்தெளிவான, துல்லியமான ஐயப்பாடற்ற யோசனையை விவாதிக்கவும், சோவியத் ஆட்சியின் வேலைத்திட்டத்தை அங்கீகரிக்கவும், உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை ஏற்கவும், அக்டோபர் புரட்சியையும் சோவியத் ஆட்சி அதிகாரத்தையும் அங்கீகரிக்கவும் மறுத்தது இயல்பே. இந்த நடவடிக்கை மூலம் அரசியல் நிர்ணய சபை ருஷ்யாவின் சோவியத் குடியரசுடன் எல்லா உறவுகளையும் துண்டித்துக் கொண்டு விட்டது. எனவே, சோவியத்துகளில் அப்பட்டமாயும் மிகப் பெரும் பெரும்பான்மையாக இருக்கும், தொழிலாளர் மற்றும் பெரும்பான்மையான விவசாயிகளின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் போல்ஷிவிக் பிரிவும், இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் பிரிவும் இத்தகைய அரசியல் நிர்ணய சபையில் இருந்து விலக வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது.

உண்மையில் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக் கட்சியினர் அரசியல் நிர்ணய சபைக்கு வெளியே சோவியத் ஆட்சிக்கு எதிராக மிகவும் மூர்க்கமான போராட்டம் நடத்தி வருகிறுர்கள். அதை வீழ்த்த வேண்டும் என்று தமது பத்திரிகைகளில் பகிரங்கமாக அறை கூவல் விடுத்து வருகிறுர்கள். சுரண்டலில் இருந்து விமோசனம் பெறுவதற்குரிய நலன்களுக்கு இவ்வாறு நசுக்குவது மிகவும் முக்கியமானது என்ற போதிலும் தொழிலாளி வர்க்க சக்திகள் சுரண்டலாளர் எதிர்ப்பை நசுக்கியது தன்முனைப்பான செயல், சட்டவிரோதமானது என்று இக்கட்சிகள் சித்திரித்து வருகின்றன. அவை நாசவேலை செய்பவர்களை,

மூலதனத்தின் சேவகர்களைத் தாங்கி ஆதரிக்கின்றன. இது பயங்கரச் செயல்களுக்கு ஒளிமறைவின்றி அறைகூவும் அளவுக்குப் போய், ஒரு சில ''அடையாளம் காணவியலா கோஷ்டிகள்'' இச்செயல்களை ஏற்கெனவே தொடங்கி விட்டன. இத்தகைய சந்தர்ப்பச் சூழலில் அரசியல் நிர்ணய சபையில் மீதமுள்ள பகுதி சோவியத் ஆட்சியை வீழ்த்து வதற்கான எதிர்ப்புரட்சியாளர்களின் போராட்டத்துக்கு ஒரு திரையாக மட்டுமே பயன்படும்.

ஆதலால், இந்த அரசியல் நிர்ணய சபை இதனால் கலைக்கப்படுகிறது என்று மத்திய நிர்வாகக் கமிட்டி தீர் மானிக்கிறது.

ஜனவரி 6 (19), 1918ல்
எழுதப்பட்டது

பிராவ்தா, இதழ் 5 மற்றும் இஸ்வேஸ்தியா, இதழ் 5, *ஜனவரி 7 (20), 1918ல்* வெளியிடப்பட்டது	நூல் திரட்டு, தொகுதி 35, பக்கங்கள் 235-237

துரதிருஷ்ட சமாதானம் என்னும் பிரச்சினையின் வரலாறு குறித்து

இது வரலாற்றை விளக்குவதற்குரிய காலம் அல்ல என்று வாதிக்கப்படலாம். ஆம், சென்ற காலத்தில் இருந்து எழுந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சினை நிகழ் காலத்தோடு நடைமுறையில், பிரிக்கவொண்ணுத வகையிலும், நேரடியாகவும் சம்பந்தப்பட்டிராத பட்சம், நிச்சயமாயும் இந்த வகையான வன்கூற்று அனுமதிக்கப்படக் கூடியதே. எனினும் துரதிருஷ்ட சமாதானம், இயல்புமீறிய கடும் சமாதானம் பற்றிய பிரச்சினை மிகவும் சூடான பிரச்சினையாக இருப்பதால் அதைத் தெளிவாக்கம் செய்வது அவசியம். எனவே இந்த விஷயம் மீதான எனது ஆராய்ச்சியுரைகளை வெளியிடுகிறேன். அவைகள் 1918 ஜனவரி 8ந் தேதியன்று பெத்ரோகிராத் கட்சியின் பிரதான ஊழியர்கள் 60 பேர் அடங்கிய கூட்டத்தில் படிக்கப்பட்டன.

இதோ இந்த ஆராய்ச்சியுரைகள்:

ஜனவரி 7, 1918

ஒரு தனியான, பிரதேசக் கைப்பற்றல் தன்மை கொண்ட சமாதானம் உடனே ஏற்பட வேண்டும் என்ற பிரச்சினை மீதான ஆராய்ச்சியுரைகள்[41]

1) இன்றைய தருணத்தில் ருஷ்யப் புரட்சியின் நிலைமையைப் பார்த்தால், சோவியத் ஆட்சியையும் அது துவக்கி வைத்த சோஷலிஸ்டுப் புரட்சியையும் கிட்டத்தட்ட எல்

லாத் தொழிலாளர்களும், மிகப் பெரிய பெரும்பான்மை விவசாயிகளும் சந்தேகமின்றி ஆதரித்து நிற்கிறார்கள் என்பது தெரியவரும். இந்த அளவுக்கு ருஷ்யாவில் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றி உறுதியானது.

2) அதே சமயம் செல்வந்த வர்க்கங்களின் வெறிபிடித்த எதிர்ப்பால் உள்நாட்டுப் போர் தூண்டிவிடப்பட்டுள்ளது. நிலம், உற்பத்தி சாதனங்களிலான தனி உடைமை உரிமையினைப் பேணிக் காப்பதற்கான இறுதியும் தீர்மானகரமுமான போராட்டத்தைத் தாம் எதிரிடுவதை இந்த வர்க்கங்கள் முற்றிலும் நன்கு உணர்ந்து வருகின்றன. இந்த உள்நாட்டுப் போர் அதன் உச்ச கட்டத்தை இன்னும் எட்டவில்லை. இந்தப் போரில் சோவியத் ஆட்சி அதிகாரம் வெற்றி பெறுவது உறுதி. ஆனால் முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பு நசுக்கப்படுவதற்கு முன்னால் சில காலம் தவிர்க்க முடியாத வகையில் கடந்துவிட வேண்டும். இதற்குப் பெருமளவிலான முயற்சி முனைப்பாகச் செய்யப்பட வேண்டியது தவிர்க்க வொண்ணாதது. எல்லாப் போர்களையும் குறிப்பாக உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து வரும் பொருளாதாரச் சீர்குலைவு மற்றும் குழப்பத்தின் ஒரு சிறிய கால கட்டம் தவிர்க்க முடியாதது.

3) இதற்கும் மேலதிகமாக இந்த எதிர்ப்பு அதன் தீவிரம் குறைந்த இராணுவ முறையில் அல்லாத வடிவங்களில்—சீர்குலைவு, கயவர்களுக்கு லஞ்சம் கொடுத்தல், சோஷலிஸ்டுகளின் லட்சியத்தை அழிப்பதற்காக சோஷலிஸ்டுகள் அணிகளுக்குள் தந்திரமாகப் புகுந்து கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் கையாட்களைக் கூலிக்கமர்த்தல் ஆகியவையே இந்த வடிவங்களாகும்—மிகவும் பிடிவாதமானதாயும் பல் வகைப்பட்ட வடிவங்களை மேற்கொள்ளும் ஆற்றல் கொண்டதாயும் இருப்பது தெளிவுபட்டு விட்டது. எனவே இதை எதிர்த்த போராட்டம் இன்னும் சற்று அதிகக் காலம் எடுப்பது தவிர்க்க முடியாதது. இதன் பிரதான வடிவங்களில் சில மாதங்கள் கடக்கும் வரையில் இது முடிவுறாமல் இருக்கக் கூடும். இந்த முதலாளி வர்க்கத்தின் அதன் ஆதரவாளர்களின் இந்த மௌனமான மறைமுகமான எதிர்ப்பு

திட்டவட்டமாக நசுக்கப்படாத வரை சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றியடைய முடியாது.

4) இறுதியாக ருஷ்யாவில் சோஷலிச மாற்றத்தைக் கொண்டுவருவதற்குரிய ஸ்தாபனப் பிரச்சினைகள் மிகவும் அளவிறந்தவை, இடர்ப்பாடானவை. எனவே, சோஷலிஸ்டு பாட்டாளிகளின் எண்ணற்ற குட்டிமுதலாளித்துவ அனுதாபிகள் காரணமாகவும் அந்தப் பாட்டாளிகளின் தாழ்ந்த கலாசாரத் தரம் காரணமாகவும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஓரளவு நீண்ட காலம் எடுக்கும்.

5) இந்த சந்தர்ப்பச் சூழல்கள் அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது ருஷ்யாவில் சோஷலிசம் வெற்றி அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு காலம், குறைந்த பட்சம் சில மாதங்கள் தேவைப்படும் என்பது முற்றும் தெளிவாகத் தெரியவரும், இந்தக் காலத்தில் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து முதற்கண் தமது சொந்த நாட்டில் வெற்றி பெறவும், மிகவும் விரிவான அளவில் பரந்த செயல் விளைவுகளையுடைய வெகுஜன ஸ்தாபன வேலைகளைத் தொடங்கவும் சோஷலிஸ்டு அரசாங்கத்தின் கரங்கள் முற்றும் கட்டற்றுச் செயல்பட வேண்டும்.

6) ருஷ்யாவில் உள்ள சோஷலிஸ்டுப் புரட்சியின் நிலைமை நமது சோவியத் ஆட்சியின் சர்வதேசக் கடமைகள் பற்றிய எந்த ஒரு வரையறுப்புக்கும் அடிப்படையாக விளங்க வேண்டும். காரணம், போரின் நான்காவது ஆண்டில் சர்வதேச நிலைமை இருக்கும் பாங்கில் புரட்சி வெடித்தெழுவதையோ, ஐரோப்பிய ஏகாதிபத்திய அரசாங்கங்களில் ஏதேனும் (ஜெர்மன் அரசாங்கம் உட்பட) வீழ்த்தப்படுவதையோ குறிக்கும் உத்தேசமான தருணம் பற்றி முன்னறிந்து கூறுவது முற்றிலும் சாத்தியமல்ல. ஐரோப்பாவில் சோஷலிஸ்டுப் புரட்சி கட்டாயம் வர வேண்டும், நிச்சயமாயும் வரும் என்பதில் சந்தேகத்துக்கே இடமில்லை. சோஷலிசத்தின் இறுதி வெற்றிக்கான நமது எதிர்பார்ப்புகள் யாவும் இந்த இறுதிப்பாட்டையும், இந்த விஞ்ஞான முன்கணிப்பையும் ஆதாரமாக்கியுள்ளன. பொதுவாக நமது பிரசாரச் செயல்பாடுகளும் குறிப்பாகத் தோழமை கொள்ளலை ஒழுங்கமைத்த

லும் முனைப்பாக்கப்பட வேண்டும் விரிவுபடுத்தப்பட வேண்டும். ஐரோப்பிய சோஷலிஸ்டுப் புரட்சி விசேஷமாயும் ஜெர்மன் சோஷலிஸ்டுப் புரட்சி அடுத்த ஆறு மாதங்களில் (அல்லது அத்தகைய குறுகிய காலத்துள்) நடைபெறுமா இல்லையா என்பதை நிர்ணயம் செய்யும் முயற்சிகளின் மீது ருஷ்யன் சோஷலிஸ்டு அரசாங்கத்தின் போர்த்தந்திரங்களை ஆதாரப்படுத்துவது தவறு. காரணம் இதை நிர்ணயம் செய்வது முற்றும் சாத்தியமல்ல, இத்தகைய முயற்சிகள் புறநிலை நோக்கில் நின்று கூறினுல் கண் மூடித்தனமான சூதாட்டமே தவிர வேறு எதுவும் அல்ல.

7) பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் நடக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் இதற்குள்—ஜனவரி 7, 1918—ஜெர்மன் அரசாங்கத்தில் போர்க் கட்சியின் ஆதிக்கம் சந்தேகமின்றி ஓங்கி விட்டது என்பதைத் தெட்டத்தெளிவாக்கி விட்டன (நான்கு தரப்பு கூட்டணியின்[42] இதர அரசாங்கங்கள் அதன் ஆணைப்படி ஆடுகின்றன). இக்கட்சி ருஷ்யாவிடம் மெய்யாகவே ஓர் இறுதி எச்சரிக்கையை ஏற்கெனவே முன்வைத்து விட்டது (இது முறைப்படி எந்த நாள் வேண்டுமாயினும் முன்வைக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம், நிச்சயம் எதிர்பார்க்க வேண்டும்). இந்த இறுதி எச்சரிக்கை பின்வருமாறு: ஒன்று போர் தொடர்ந்து நடக்க வேண்டும் அல்லது பிரதேசக் கைப்பற்றல்கள் உடனுன சமாதானம், அதாவது நாம் பிடித்தடக்கிய எல்லாப் பிரதேசங்களையும் விட்டுக் கொடுக்க வேண்டும், அதே போதில் ஜெர்மானியர் பிடித்தடக்கிய பிரதேசங்கள் அனைத்தையும் அவர்களே வைத்திருப்பார்கள். நம் மீது ஒரு தண்ட இழப்பீட்டைத் (வெளியே கைதிகளின் பராமரிப்புக்கு என்ற வேடத்தில்) திணிப்பார்கள். இது ஏறத்தாழ மூவாயிரம் மில்லியன் ரூபிள்களாகும். இது பல ஆண்டுகளில் செலுத்தப்பட வேண்டும்.

8) பிரதேசக் கைப்பற்றலுடனுன இந்த சமாதானத்தை ஏற்பதா அல்லது உடனடியாக ஒரு புரட்சிகரமான போர் தொடுப்பதா என்ற கேள்வி ருஷ்யாவின் சோஷலிஸ்டு அரசாங்கத்தின் முன் உள்ளது. இந்தக் கேள்விக்கான விடையை எக்காரணத்தாலும் தாமதிக்க முடியாது. உண்மையில் நடுப்

பாதை என்பது சாத்தியம் அல்ல. இனி மேலும் ஒத்திப் போடுவது என்பது நடக்காது. ஏனெனில் இந்தப் பேச்சு வார்த்தைகளைத் திட்டமிட்டே நீட்டிப்பதற்கு சாத்திய மானதும் அசாத்தியமானதுமான சகலத்தையும் நாம் ஏற்கெனவே செய்து விட்டோம்.

9) உடனடியான புரட்சிகரப் போருக்கு ஆதரவான வாதங்களைப் பரிசீலிக்கும்போது நம்மை எதிர்ப்படும் முதல் வாதம் இந்த சந்தியில் ஒரு தனியான சமாதானம் என்பது புற நிலை நோக்கில் பார்த்தால் ஜெர்மன் ஏகாதிபத்திய வாதிகளுடனை ஓர் உடன்படிக்கை, ஓர் ''ஏகாதிபத்திய தன்மையதான பேரம்'' என்பதாகும். எனவே இத்தகைய சமாதானம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துடன் முற்றுக முறித்துக் கொள்வதாகும்.

இந்த வாதம் அப்பட்டமாயும் பிழையானது. ஒரு வேலை நிறுத்தத்தில் தோல்வியடைந்து, மீண்டும் வேலையில் சேரு வதற்காகத் தமக்குப் பாதகமாயும் முதலாளிகளுக்குச் சாதகமாயும் இருக்கும் நிபந்தனைகளில் கையொப்பமிடும் தொழிலாளர்கள் சோஷலிசத்துக்குத் துரோகம் செய் வதில்லை. முதலாளிகளுக்கு அளிக்கும் லாபத்திற்குப் பரிவர்த் தனையாக தொழிலாளரில் ஒரு பகுதியினருக்குச் சாதகங் களைப் பெறுவோரே சோஷலிசத்துக்குத் துரோகம் செய்யும் பேர்வழிகள் ஆவர்; கோட்பாட்டு அடிப்படையில் இத்தகைய நிபந்தனைகள் சாத்தியமல்ல.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்துடனை போரை தற்காப்புப் போர் நீதிப் போர் என்று அழைத்து, ஆனுல் உள்ளபடியே ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து ஆதரவு பெற்று அவர்களுடன் செய்து கொண்ட இரகசிய உடன் படிக்கைகளை மக்களிடமிருந்து மறைப்பவன் எவனே அவனே சோஷலிசத்துக்குத் துரோகம் செய்பவனுவான். மக்களிட மிருந்து எதையும் ஒளிக்காமல், ஏகாதிபத்தியவாதிகளுடன் எந்தவொரு இரகசிய உடன்படிக்கைகளும் செய்து கொள் ளாமல், பலவீனமான தேசத்துக்குப் பாதகமாயும், ஏகாதி பத்தியவாதிகளின் ஒரு கோஷ்டிக்குச் சாதகமாயும் இருக் கும் சமாதான நிபந்தனைகளில், அந்த சமயத்தில் போரைத்

தொடர்ந்து நடத்தப் பலம் இல்லாத நிலையில், கையொப்பம் இட ஒப்புக் கொள்ளும் ஒருவன் லவலேசமும் சோஷலிசத்துக்குத் துரோகம் செய்தவன் ஆகமாட்டான்.

10) உடனடிப் போருக்கு ஆதரவான இன்னொரு வாதம் சமாதானம் செய்து கொள்வதால் நாம் எதார்த்தத்தில் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் கையாட்கள் ஆகிவிடுகிறோம், காரணம் நமது போர்முனையில் இருந்து துருப்புக்களை விடுவித்துச் செல்ல அதற்கு நாம் வாய்ப்பைத் தருகிறோம், அதனிடம் லட்சக் கணக்கான போர்க் கைதிகளைச் சரணடைய வைக்கிறோம் என்பதாகும். ஆனால் இந்த வாதமும் வெளிப்படையாகவே பிழையானது. ஏனெனில் இன்றைய சந்தியில் ஒரு புரட்சிகரப் போர் என்பது புற நிலை நோக்கில் இருந்து கூறிடில் ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு அதன் நோக்கங்களை மேம்படுத்திக் கொள்வதற்கான சக்திகளை வழங்குவது மூலம் நம்மை அதன் கையாட்களாக்கி விடும். நாம் போரைத் தொடர்ந்து நடத்தும் பட்சத்தில் நமது படையாளி ஒவ்வொருவருக்கும் மாதம் நூறு ரூபிள் தருவதாக நமது தலைமைத் தளபதி க்ரிலென்கோவிடம் ஆங்கிலேயர்கள் நேரடியாக வாக்களித்தார்கள். ஆங்கில-பிரெஞ்சுகாரர்களிடமிருந்து நாம் ஒரு கோப்பெக்குகூட எடுத்துக் கொள்ளவில்லையாயினும், ஜெர்மன் சேனையின் ஒரு பகுதியைத் திசைமாற்றுவதன் மூலம், புற நிலை நோக்கில் கூறினால் அவர்களுக்கு உதவி செய்தவர்கள் ஆவோம்.

அந்தக் கருத்து நிலையில் இருந்து பார்த்தால் இந்த இரண்டு முடிவில் எதை எடுத்த போதிலும் நாம் ஏதோ ஒரு வகையான ஏகாதிபத்தியத் தளையிலிருந்து முழுமையாகத் தப்பிவிடப் போவதில்லை. உலக ஏகாதிபத்தியத்தை வீழ்த்தாமல் இதிலிருந்து முற்றாகத் தப்பித்துக் கொள்வது சாத்தியமல்ல. ஏதேனும் ஒரு நாட்டில் ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் வெற்றிவாகை சூடியதென்றால் அந்தக் கணம் முதல் பிரச்சினைகளை இந்த அல்லது அந்த ஏகாதிபத்தியத்தில் எது விரும்பத்தக்கது என்ற நோக்கு நிலையில் இருந்து முடிவு செய்யக் கூடாது. மாறாக, ஏற்கெனவே தொடங்கி விட்டதான சோஷலிஸ்டுப் புரட்சியை வளர்க்கவும் கெட்டிப்

படுத்தவுமான சிறந்த நிலைமைகள் எவை என்ற கருத்து நிலையில் இருந்தே முற்றும் முடிவு செய்தல் வேண்டும். இதிலிருந்து மேற்கொள்ளும் சரியான முடிவு இதுவே.

வேறு சொற்களில் கூறினல், நமது போர்த்தந்திரங் களின் அடிநிலையான கோட்பாடு இந்தச் சந்தியில் இரண்டு ஏகாதிபத்தியங்களில் எதற்கு உதவுவது லாபகரமானது என்பதல்ல; மாருக, சோஷலிஸ்டுப் புரட்சிக்கு அது தன்னைத் தானே கெட்டிப்படுத்திக் கொள்வதற்கான, அல்லது குறைந்தபட்சம் இதர நாடுகள் அதனுடன் சேரும் வரை யில் ஒரு நாட்டில் தன்னைத் தானே கட்டிக் காத்துக் கொள் வதற்கான, சாத்தியக் கூறினை மிகவும் உறுதியாகவும் நம்பக மாகவும் உத்தரவாதம் செய்வது எப்படி என்பதாகவே இருத்தல் வேண்டும்.

11) போரை எதிர்த்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி கள் இப்போது ''தோல்வி மனப்பான்மையினர்'' ஆகிவிட் டார்கள் எனவும் எம்மை ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்குப் பணிய வேண்டாம் என வேண்டிக் கொள்கிருர்கள் எனவும் கூறப்படுகிறது. ஆனல் நாம் ஒருவரது சொந்த ஏகாதி பத்திய முதலாளி வர்க்கத்தின் விஷயத்தில்தான் தோல்வி மனப்பான்மையினை அங்கீகரித்தோம். ஓர் அன்னிய ஏகாதி பத்தியத்தின் மீதான வெற்றியை, ஒரு ''நட்பு'' ஏகாதி பத்தியத்தின் வழக்கமான அல்லது மெய்யான கூட்டணி யால் அடையப்பட்ட வெற்றியைக் கோட்பாடு ரீதியில் அனு மதிக்கப்படக் கூடாத முறை, பொதுவாகத் தவருனது என்று கருதி நாம் எப்போதும் ஆதரிக்க மறுத்து வந்துள்ளோம்.

எனவே இந்த வாதம் முந்திய வாதத்தின் ஒரு சிறு வேறுபாடு மட்டுமே. ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயக வாதிகள் நாம் ஒரு நிர்ணய காலத்துக்குத் தனியான சமா தானம் செய்து கொள்வதைத் தவக்கம் செய்ய வேண்டும் என்று பிரேரேபித்து அந்தக் கட்டத்திற்குள் ஜெர்மனியில் புரட்சிகரச் செயல் புரிய உத்தரவாதம் அளிப்பார்களா ஞல், இந்தக் கேள்வி நமக்கு வேறு ஓர் இயல்பினை மேற் கொள்ளக் கூடும். இவ்வாறு கூறுவதற்கு மாருக ஜெர்மன் இடதுசாரிகள் வழக்கமாகச் சாற்றுவது: ''உங்களால் முடிந்த

வரை இழுத்துப் பிடியுங்கள், ஆனல் ருஷ்யாவின் சோஷலிஸ்டுப் புரட்சியின் நிலவரங்களின் கருத்து நிலையில் இருந்து இந்தக் கேள்விக்கு முடிவு செய்யுங்கள், ஏனெனில் ஜெர்மன் புரட்சி சம்பந்தமாக உங்களுக்கு ஆக்கபூர்வமான எதையும் நாங்கள் வாக்களிக்க முடியாது''.

12) கட்சியின் பல அறிக்கைகளில் நாங்கள் ஒரு புரட்சிகரமான போரை நடத்துவதாக உண்மையில் ''வாக்களித்தோம்'' எனவும், தனியான சமாதானம் செய்து கொண்டது மூலம் வார்த்தை தவறிவிட்டோம் எனவும் கூறப்பட்டிருக்கிறது.

அது உண்மையல்ல. ஓர் ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் ஒரு புரட்சிகரமான போருக்குத் "தயார் செய்து நடத்தவும்" வேண்டும் என்று கூறியிருந்தோம். கருத்தியலான அமைதிவாதத்தையும், ஏகாதிபத்திய சகாப்தத்தில் ''தாயகத்தின் பாதுகாப்பு'' என்ற தத்துவம் முழுமையாக நிராகரிக்கப்பட வேண்டும் என்பதையும் எதிர்க்கும் பொருட்டும், கடைசியாக படையாளிகளில் ஒரு பகுதியினரின் முற்றிலும் சுயநலத்தன்மை வாய்ந்த இயல்பினை எதிர்க்கவும் வேண்டியே இதைக் கூறினேம். ஒரு குறிப்பிட்ட தருணத்தில் அதைத் தொடங்குவது சாத்தியமா இல்லையா என்பதைக் கருதிப் பார்க்காமல் ஒரு புரட்சிகரப் போரைத் துவங்குவதாக நாங்கள் எவ்விதமான வாக்குறுதியும் அளிக்கவே இல்லை.

இந்த சந்தியிலும் கூட நாம் ஒரு புரட்சிகரமான போருக்குத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதில் கேள்விக்கே இடமில்லை. உடனடியாக நிறைவேற்றி முடிக்க முடிந்த எமது வாக்குறுதிகளை எல்லாம் பொதுவாக எப்படி நிறைவேற்றி முடித்தோமோ—இரகசிய உடன்படிக்கைகளை ரத்துச் செய்தோம், எல்லா மக்களுக்கும் ஒரு நியாயமான சமாதானத்தை வழங்கினேம், இதர மக்கள் எம்முடன் சேர்ந்து கொள்ள ஒரு வாய்ப்புத் தருவதற்காக வேண்டி பல தடவை சமாதானப் பேச்சுக்களை நீட்டிப்பதற்கு இயன்றது அனைத்தையும் செய்தோமோ—அதே போன்று இந்த வாக்குறுதியையும் நிறைவேற்றி முடித்து வருகிறோம்.

ஆனல் இப்பொழுது உடனடியாக ஒரு புரட்சிகரமான போரை நடத்துவது சாத்தியமா இல்லையா என்ற கேள்வி, இதற்குப் பொருளாயத நிலைகள் அனுமதிக்கின்றனவா இல்லையா என்ற நோக்கு நிலையில் இருந்தும், ஏற்கெனவே துவங்கி விட்டதான சோஷலிஸ்டுப் புரட்சியின் நலன்களைக் கருதியுமே முற்றுகவும் முடிவு செய்யப்பட வேண்டும்.

13) ஓர் உடனடியான புரட்சிகரப் போருக்கு ஆதரவான வாதங்களைத் தொகுத்துக் கூறும்போது அத்தகைய கொள்கை அழகும், உயிர்த்துடிப்பும் எடுப்பான தன்மையும் உள்ள மானுட நாட்டத்துக்கு இசைவானதாக இருக்கலாம் ஆனல் அது வர்க்க சக்திகளின் புறநிலையான ஒப்பு வலிமையையும், தற்போது நடந்து வரும் சோஷலிஸ்டுப் புரட்சியின் இன்றைய கட்டத்தின் பௌதிகக் காரணிகளையும் முற்றுகப் புறக்கணிப்பதாக இருக்கும் என்ற முடிவுக்கு வர வேண்டும்.

14) ஒரு ஜெர்மன் தாக்குதலை எதிர்த்து அடிப்பதற்கான வெற்றிகரமான நிலைமையில் நமது சேனை இப்போது அறவே இல்லை, அடுத்த சில வாரங்களுக்கு (ஒருவேளை அடுத்த சில மாதங்களுக்கு) இருக்காது என்பதில் சந்தேகமில்லை. இதற்கு முதல் காரணம் படையாளிகளில் பெரும்பான்மையினர் மிகவும் கடுமையாகச் சோர்வுற்று, வலுவிழந்த நிலையில் உள்ளனர், இதோடு உணவு வழங்கீடிலும் மிகையாகச் சோர்வடைந்தோரை மாற்றீடு செய்வதிலும் நம்பற்கரிய குழப்பம் நிலவுகிறது. இரண்டாவது காரணம் குதிரைப்படை அறவே தகுதியற்ற நிலையில் இருப்பதும், அதன் விளைவாக நமது பீரங்கிப்படை தவிர்க்க முடியாதபடி நாசமடைந்ததும். மூன்ருவது காரணம் ரீகா முதல் ரெவெல் வரையிலான கடற்கரையைப் பாதுகாப்பது அறவே சாத்தியமில்லாது போனது, இது எதிரிகளுக்கு மீதமுள்ள லிஃப்லாந்தையும் பின்னர் எஸ்த்லாந்தையும் கைப்பற்றிக் கொள்வதற்கு மிகவும் நிச்சயமான வாய்ப்பை அளிக்கிறது, நமது படைகளின் பெரும் பகுதியைப் பக்கவாட்டில் தாக்கி, இறுதியாக பெத்ரோகிராதைப் பிடித்துக் கொள்ளவும் வாய்ப்பை அளிக்கிறது.

15) மேலும், நமது சேனையில் உள்ள விவசாயிகள் பெரும்பான்மை இன்றைய சந்தியில் பிரதேசக் கைப்பற்றல் களுடனான ஒரு சமாதானத்துக்கு ஆதரவாகத் தயக்கம் இன்றி முன்வரும், ஆனால் ஓர் உடனடியான புரட்சிகரப் போருக்கு ஆதரவாக முன்வராது. சேனையில் சோஷலிஸ்டு மறுசீரமைப்பு, அதனுடன் செங்காவலர் படைப் பிரிவைச் சேர்த்தல் இத்தியாதி இப்போது மட்டுமே தொடங்கி உள்ளது.

சேனை முற்றிலும் ஜனநாயகமயமாக்கப்பட்ட நிலையில், பெரும்பான்மை படையாளிகளின் விருப்பத்துக்கு எதிராக போரை நடத்துவது துடுக்கான சூதாட்டமாகும். அதேபோதில் மெய்யாகவே நம்பகமான சித்தாந்த ரீதியில் உறுதியான ஒரு சோஷலிஸ்டு தொழிலாளர் விவசாயிகள் சேனையை உருவாக்குவதற்கு குறைந்தபட்சம் பல மாதங்கள் தேவைப்படும்.

16) ருஷ்யாவில் உள்ள ஏழை விவசாயிகள் தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் சோஷலிஸ்டுப் புரட்சியினை ஆதரிக்க வல்லவர்களே. ஆனால் உடனடியாக இந்த சந்தியிலேயே ஒரு முக்கியமான புரட்சிகரப் போரில் போராட ஒப்புக்கொள்ளும் அளவுக்கு வல்லவர்கள் அல்ல. இந்தப் பிரச்சினையில் எதார்த்தமான வர்க்க சக்திகளின் ஒப்புவலிமையைப் புறக்கணிப்பது பேராபத்தான தவறாகும்.

17) இதன் பின்விளைவாக, புரட்சிகரப் போர் சம்பந்தமான இன்றைய நிலைமை பின்வருமாறு:

அடுத்த மூன்று அல்லது நான்கு மாதங்களில் ஜெர்மன் புரட்சி வெடித்து எழுந்து வெற்றியடையுமானால், உடனடியான புரட்சிகரப் போர் என்பதன் போர்த்தந்திரங்கள் ஒருவேளை நமது சோஷலிஸ்டுப் புரட்சியை நாசமாக்காது போகலாம்.

எனினும், ஜெர்மன் புரட்சி அடுத்த சில மாதங்களில் நிகழாவிட்டால், போர் தொடருமானால், நிகழ்ச்சிகளின் போக்கின் தவிர்க்க வொண்ணாத தன்மை காரணமாக, மோசமான தோல்விகள் ருஷ்யாவை இதைவிட இன்னும் பிரதிகூலமான தனியான சமாதானத்தைச் செய்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்தும். மேலும் இந்த சமாதானம் சோஷலிஸ்டு

அரசாங்கத்தால் செய்து கொள்ளப்பட மாட்டாது, மாருக வேறு சில (உதாரணமாக முதலாளித்துவ ராடா[43] மற்றும் செர்னேவ் ஆதரவாளர்களின் கூட்டணி அல்லது அதைப் போன்ற சிலவற்றினல்) அரசாங்கத்தால் செய்து கொள்ளப் படும். போரினுல் அளவுக்குமேல் சோர்ந்து போய்விட்ட விவசாயிகள் சேனை முதல் தோல்விகளுக்குப் பிறகு—சில வாரங்களுக்குள் சில மாதங்கள் அல்ல—சோஷலிஸ்டு தொழிலாளர் அரசாங்கத்தை வீழ்த்துவது மிகவும் சாத்தியக் கூறுடையதாகும்.

18) நிலைமைகள் இவ்வாறு இருப்பதால், கேவலம் ஜெர்மன் புரட்சி உடனடி எதிர் காலத்தில் ஒரு சில வாரங் களில் துவங்கலாம் என்ற வாய்ப்பைமட்டுமே கருதி ருஷ்யாவில் ஏற்கெனவே தொடங்கிவிட்ட சோஷலிஸ்டுப் புரட்சியின் கதியைப் பணயம் வைப்பது அறவே அனு மதிக்கப்பட முடியாத போர்த்தந்திரமாகும். இத்தகைய போர்த் தந்திரங்கள் துடுக்கான சூதாட்டமாகும். இத்தகைய வரு தீங்கை மேற்கொள்ள நமக்கு உரிமை இல்லை.

19) நாம் ஒரு தனியான சமாதானத்தைச் செய்து கொள்வோமானல் அதன் விளைவாக ஜெர்மன் புரட்சிக்கு, அதன் எதார்த்த மெய்க்கோள்களைப் பொருத்தவரை அவற்றின் நிறைவேற்றம் எவ்வகையிலும் அதிகக் கடுமையாக இராது. ஒருக்கால் தேசியவெறி மயக்கம் அதைச் சில காலத் துக்குப் பலவீனப்படுத்தலாம். ஆனல் ஜெர்மனியின் நிலைமை மிகவும் அபாயகரமானதாக நீடித்து இருக்கும். இங்கிலாந் துடனும் அமெரிக்காவுடனுமான போர் நீடித்ததாக இருக் கும். ஆக்கிரமிப்புக்கார ஏகாதிபத்தியம் இருதரப்பிலும் முழுமையாகவும் முடிவாகவும் அம்பலப்படுத்தப்படும். ருஷ் யாவில் ஒரு சோஷலிஸ்டு சோவியத் குடியரசு நிறுவப்படுவது எல்லா நாடுகளின் மக்களுக்கும் ஓர் உயிரோட்டமுள்ள உதாரணமாக நிலவும், இந்த உதாரணத்தின் பிரசார வலிமை யும் புரட்சிகரமாக்கும் ஆற்றலும் அளப்பரியதாக இருக்கும். அங்கே—முதலாளித்துவ அமைப்பும், இரண்டு கொள்ளைக் காரக் கோஷ்டிகளிடையிலான கொள்ளைக்காரப் போர்

அம்பலப்படுத்தப்பட்டிருப்பதும். இங்கே — சமாதானம் மற்றும் ஒரு சோஷலிஸ்டு சோவியத் குடியரசும்.

20) தனியான சமாதானத்தைச் செய்து கொள்வது மூலம் நாம் இரண்டு பகைமையான ஏகாதிபத்தியக் கோஷ்டி களிடம் இருந்தும் இன்றைய தருணத்தில் எந்தளவு அதிக மாக சாத்தியமோ அந்த அளவுக்கு நம்மை நாமே விடு வித்துக் கொள்கிறோம். அவற்றின் பரஸ்பர விரோதத்தை யும் போர்ச் செயலையும் நாம் நமக்குச் சாதகமாக்கிக் கொள் கிறோம். இவை எமக்கு எதிரான அவர்களது ஒரு முனைப் படுத்தப்பட்ட நடவடிக்கைக்கு இடையூறு செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு சோஷலிஸ்டுப் புரட்சியை முன் கொண்டு செல்லவும் அதைக் கெட்டிப்படுத்தவும் நமது கரங்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையில் ருஷ்யாவைப் புன ரமைப்பதும், நகரங்களுக்கும் சிறுவிவசாய நுகர்வாளர் சங் கங்களுக்கும் இடையே பண்ட வகைகளில் விளைபொருட் களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதோடு இணைத்து, வங்கிகளும் பெருவீதத் தொழில்துறை யும் தேசவுடைமையாக்கப்படுவதும் நாம் சமாதானத் துடன் இன்னும் சில மாதங்கள் பணியாற்ற உத்தரவாதம் இருக்கும் பட்சத்தில், பொருளாதார முறையில் முற்றிலும் செயல்படுத்தக் கூடியவையாகும். இத்தகைய புனரமைப்பு சோஷலிசத்தை ருஷ்யாவிலும் உலகம் முழுவதிலும் ஒருங்கே வெல்லற்கரியதாக்கும். அதே சமயம் இது ஒரு வலிமை மிக்க தொழிலாளர், விவசாயிகளின் செஞ்சேனைக் குரிய ஒரு திடமான பொருளாதார அடித்தளத்தை உருவாக்கும்.

21) இந்தக் கால சந்தியில் ஓர் உண்மையான புரட்சி கரப் போர் என்பது, இதர நாடுகளில் உள்ள முதலாளித் துவ வர்க்கத்தினரை வீழ்த்தும் நோக்கத்துடன்—சோஷ லிஸ்டு சேனையால் தெளிவாக வரையறுக்கப்பட்டு முழுமை யாக ஒப்புக் கொள்ளப்பட்டதான நோக்கத்துடன்—முத லாளித்துவ நாடுகளை எதிர்த்து சோஷலிஸ்டுக் குடியரசு நடத் தும் போராகவே இருக்கும். இன்றைய தருணத்தில் நாம் இந்த நோக்கத்தை நம் முன் வைத்துக் கொள்ள முடி

யாது என்பது தெளிவானது. எதார்த்தத்தில் நாம் இப்போது போலந்து, லிதுவேனியா மற்றும் குர்லாந்தின் விடுதலைக்காகவே போராடியவர்களாவோம். ஆனால் எந்த மார்க்சியவாதியும் மார்க்சியத்தின் கோட்பாடுகளை, பொதுவாக சோஷலிசத்தின் கோட்பாடுகளைக் கைவிடாமல் தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் நலன்களைவிட சோஷலிசத்தின் நலன்கள் உயர்ந்தவை என்பதை மறுக்க முடியாது. பின்லாந்து உக்ரேன் போன்ற நாடுகளின் சுயநிர்ணய உரிமையினை அமுல்படுத்த நமது சோஷலிஸ்டுக் குடியரசு தன்னால் இயன்றதனைத்தையும் செய்துள்ளது, தன்னால் இயன்றதனைத்தையும் தொடர்ந்து செய்து வருகிறது. ஆனால் ஸ்தூலமான நிலையில் இன்றைய தருணத்தில் பல தேசங்களின் (போலந்து, லிதுவேனியா, குர்லாந்து) சுயநிர்ணய உரிமை மீறப்படுவதன் காரணமாக சோஷலிஸ்டு குடியரசு இருப்பதற்கே ஆபத்து ஏற்படுமானால், இயல்பாகவே, சோஷலிஸ்டுக் குடியரசு பாதுகாக்கப்படுவதற்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இதன் பின்விளைவாக ''நாம் ஒரு மானங்கெட்ட, அட்டூழியத்தனமான சமாதானத்தில் கையொப்பமிடக் கூடாது, போலந்துக்குத் துரோகம் செய்யக் கூடாது'' என்றெல்லாம் கூறும் எவரும், போலந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை மீது சமாதானம் செய்து கொள்வது மூலம் அவர் இங்கிலாந்து பெல்ஜியம் செர்பியா மற்றும் இதர நாடுகளுக்கு எதிராக ஜெர்மன் ஏகாதிபத்தியத்தினை இன்னும் அதிகமாக வலுப்படுத்தவே செய்கிறார் என்பதை உணரவில்லை. போலந்து, லிதுவேனியா மற்றும் குர்லாந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை மீதான சமாதானம் ருஷ்யாவின் நோக்கு நிலையில் இருந்து ஒரு ''தேசபக்த'' சமாதானமாக இருக்கும். ஆனால் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் பிரதேசக் கைப்பற்றுளர்களுடன் செய்துகொண்ட சமாதானம் என்று இருக்காது என்ற நிலை எவ்வகையிலும் ஏற்படாது.

1918 ஜனவரி *21.* மேலே வெளியிட்ட ஆராய்ச்சியுரையுடன் பின்வருவதைச் சேர்க்க வேண்டும்:

22) ஆஸ்திரியாவிலும் ஜெர்மனியிலும் நடைபெற்ற வெகுஜன வேலைநிறுத்தங்களும் அதன் பின்னல் பெர்லினிலும் வியென்னுவிலும் அமைக்கப்பட்ட தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளும், இறுதியாக ஜனவரி 18—20 முதல் பெர்லினில் தொடங்கிய ஆயுத மோதல்களும் தெருப் போராட்டமும்—இவை யாவும் ஜெர்மனியில் புரட்சி துவங்கி விட்டது என்ற மெய்நடப்புக்கான சான்றுகளாகக் கருதப்பட வேண்டும்.

இந்த மெய்நடப்பு தற்போதைக்கு சமாதானப் பேச்சுக்களை மேலும் தவக்கப்படுத்தி நீட்டி இழுப்பதற்கு நமக்கு வாய்ப்பளிக்கிறது.

ஆராய்ச்சியுரைகள் ஜனவரி 7 (20),
22ஆவது ஆராய்ச்சியுரை
ஜனவரி 21 (பிப்ரவரி 3),
முகவுரை பிப்ரவரி 11 (24)க்கு முன்பும்
1918ல் எழுதப்பட்டன

22 ஆவது ஆராய்ச்சியுரை இல்லாமல்
பிராவ்தா, இதழ் 34ல்,
பிப்ரவரி 24 (11), 1918ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 243-252

22 ஆவது ஆராய்ச்சியுரை
லெனின் நூல் திரட்டு,
தொகுதி 26ல்,
நாலாவது ருஷ்யப் பதிப்பில்,
1949ல் முதலில் வெளியிடப்பட்டது

தனியான பிரதேசக் கைப்பற்றல் பாணி சமாதானத்தை உடனே செய்து கொள்வது பற்றிய பிரச்சினை குறித்த ஆராய்ச்சியுரைகளுக்குப் பின்னுரை

மேலே குறிப்பிடப்பட்ட இந்த ஆராய்ச்சியுரைகளை 1918 ஜனவரி 8ந் தேதியன்று கட்சி ஊழியர்களின் ஒரு சிறிய தனிக் கூட்டத்தில் படித்தேன். அவற்றின் மீதான விவாதத்தில் இப்பிரச்சினை குறித்து கட்சிக்குள் மூன்று கருத்துக்கள் இருப்பது தெரியவந்தது. இக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் சுமார் பாதிப் பேர் புரட்சிகரப் போருக்கு ஆதரவாகப் பேசினர்கள் (இது சில சமயம் ''மாஸ்கோ'' நோக்கு நிலை என்று அழைக்கப்பட்டது, காரணம் இதை மற்ற அமைப்புகளுக்கு முன்னதாகவே நமது கட்சியின் மாஸ்கோ பிராந்திய பியூரோ ஒப்புக்கொண்டு விட்டது). பிறகு சுமார் கால்வாசிப் பேர் தோழர் திரோத்ஸ்கியை ஆதரித்தார்கள். ''போர் நடவடிக்கைகளை நிறுத்தி விட்டதாக அறிவிக்க வேண்டும், சேனையைக் கலைக்க வேண்டும், படையாளிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் ஆனல் ஒரு சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடக் கூடாது'' என்று திரோத்ஸ்கி முன்மொழிந்தார். இறுதியாக சுமார் கால்வாசிப் பேர் என்னை ஆதரித்தார்கள்.

இப்போது கட்சியில் நடைமுறையில் இருக்கும் நிலவரம் 1907 கோடையில் இருந்த நிலைமையை எனக்கு மிகவும் பலமாக நினைவூட்டுகிறது. அப்போது போல்ஷிவிக்குகளின் மிகப்பெரிய பெரும்பான்மை மூன்ருவது டூமாவைப்[44] பகிஷ்கரிப்பதை ஆதரித்தது. நான் அதில் பங்கு பற்றுவதை ஆதரித்து டானுடன் சேர்ந்து நின்றேன். எனது சந்தர்ப்பவாதத்துக்காக மூர்க்கமான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்

டேன். புறநிலே நோக்கில், இன்றைய பிரச்சினை ஒரு முழுமையான ஒப்புமை ஆகும். ஏனெனில் அன்று போலவே பெரும்பான்மையான கட்சி ஊழியர்கள் மிகச்சிறந்த புரட்சிகரச் செயல் நோக்கம் மற்றும் மிகச்சிறந்த கட்சி மரபுகளில் இருந்து செயல்படத் தொடங்கி ஒரு ''திடீர்வீச்சு'' கோஷத்தால் வசமிழந்திட இடமளிக்கிறுர்கள். புதிய சமூக-பொருளாதார மற்றும் அரசியல் நிலைமையைப் புரிந்து கொள்ளவில்லை. போர்த்தந்திரங்களில் விரைவான திடுமென்ற மாறுதல்களைக் கோரும் நிலைமைகளிலான மாறுதல்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. அன்று போலவே இன்றும் எனது வாதத்தின் சாரம், மார்க்சியம் எதார்த்த நிலைமைகளையும் அவற்றின் மாறுதல்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும், இந்த நிலைமைகளுக்குப் பிரயோகமாகத்தக்க வழியில் இந்தப் பிரச்சினை ஸ்தூலமாக முன்வைக்கப்பட வேண்டும் எனவும், நிகழ்ந்துள்ள ஆக முக்கியமான மாறுதல் ருஷ்யாவின் சோவியத் குடியரசு நிறுவப்பட்டிருப்பதே எனவும், சோஷலிஸ்டுப் புரட்சியை ஏற்கெனவே துவக்கி விட்ட இந்தக் குடியரசைப் பேணிக் காப்பது நமக்கும் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்துக்கும் மிகவும் முக்கியமானது எனவும், இந்தத் தருணத்தில் ருஷ்யா பறைசாற்றியுள்ள புரட்சிகரப் போர் என்ற கோஷம் ஒன்று ஒரு வெற்றுத் தொடராக ஆதரவற்ற பிரகடனமாக இருக்கும், அல்லது ஏகாதிபத்தியவாதிகள் நமக்கு வைத்துள்ள கண்ணியில் எதார்த்தத்தில் விழுந்து விடுவதற்குச் சமமானதாக இருக்கும் எனவும், அவர்கள் நாம் இன்னும் ஒரு பலவீனமான அலகாக இருக்கும் போதே இந்த ஏகாதிபத்தியப் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு நம்மை ஏய்த்துச் செயலாற்றுவிக்க விரும்புகிறுர்கள் எனவும், அதன் மூலம் இளம் சோவியத் குடியரசைச் சாத்தியமான அளவுக்கு எளிதாகவே நசுக்கி விடலாம் என்று கருதுகிறுர்கள் எனவும் தெளிவுபடுத்துவதே ஆகும்.

''நான் லெனினது பழைய நிலையை ஆதரிக்கிறேன்'' என்று ஓர் இளம் மாஸ்கோவாசி ஆர்த்துரைத்தார் (அந்தப்

பேச்சாளர்கள் குழுவினை வேறுபடுத்திக் காட்டும் மாபெரும் சிறப்பியல்புகளில் ஒன்று இளமை). அதே பேச்சாளர் ஜெர்மனியில் ஒரு புரட்சிநடப்பது சாத்தியமல்ல என்பது குறித்துப் பாதுகாப்புவாதிகள் கூறிய பழைய வாதங்களைத் திருப்பிக் கூறுவதற்காக என்னைக் கடிந்து கொண்டார்.

இங்குள்ள முழுச்சிக்கல் என்னவெனில், மாஸ்கோவாசிகள் பழைய போர்த்தந்திர நிலைமையிலேயே ஒட்டிக்கொள்ள விரும்புகிறார்கள், ஏற்பட்டுள்ள மாறுதலை எழுந்துள்ளதான புதிய எதார்த்த நிலைமையைக் காணப் பிடிவாதமாக மறுக்கிறார்கள் என்பதாகும்.

மாஸ்கோவாசிகள் பழைய கோஷங்களைப் பற்றார்வத்துடன் உருவிடும் போக்கில் போல்ஷிவிக்குகளாகிய நாம் எல்லோரும் இப்போது பாதுகாப்புவாதிகள் ஆகியுள்ளோம் என்ற உண்மையைக் கூட கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்திய பின், இரகசிய உடன்படிக்கைகளைக் கண்டனம் செய்து அம்பலப் படுத்திய பின், எல்லா மக்களுக்குமான உண்மையில் சமாதானத்தை முன்மொழிந்த பின்...*

1918 ஜனவரி 8 மற்றும் 11
(21 மற்றும் 24) தேதிகளுக்கிடை
யில் எழுதப்பட்டது

லெனின் நூல் திரட்டு,
தொகுதி 11ல்,
1929ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 253-254

---

* இங்கு கையெழுத்துப் பிரதி நின்று விடுகிறது.—ப-ர்.

சமாதானம் மற்றும் போர் பற்றி ரு.ச.ஜ.தொ.க.(போ.)இன் மத்தியக் கமிட்டி கூட்டத்தில் ஆற்றிய உரைகள் ஜனவரி 11(24) 1918[45]

குறிப்பேடுகள்

1

தோழர் லெனின் முதலில் உரை ஆற்றுகிறார். ஜனவரி 8(21)ல் நடைபெற்ற கூட்டத்தில் இந்தப் பிரச்சினை மீது மூன்று நிலைகள் வெளியிடப்பட்டன என்று சுட்டிக் காட்டு கிறார். அவர் முன்வைத்த இந்த ஆராய்ச்சியுரைகள் மீது அம்சத்தின் பின் அம்சமாக இப்பிரச்சினை விவாதிக்கப்பட வேண்டுமா அல்லது ஒரு பொது விவாதம் துவக்கப்பட வேண்டுமா என்று அவர் கேட்கிறார். இரண்டாவது கருத்து ஏற்கப்படுகிறது. தோழர் லெனின் பேசுகிறார்.

முந்திய கூட்டத்தில் வெளியிடப்பட்ட மூன்று நிலைகளை முன்வைத்துப் பேச்சைத் துவக்குகிறார். அவையாவன: 1) ஒரு தனிப்பட்ட பிரதேசக் கைப்பற்றல் பாணி சமா தானத்தில் கையொப்பமிடுதல்; 2) புரட்சிகரப் போரைத் தொடுத்தல்; 3) போர் முடிவுற்றதாகச் சாற்றுதல், சேனையைக் கலைத்தல், ஆனால் சமாதான உடன்படிக்கையில் கை யொப்பமிடாதிருத்தல். முந்திய கூட்டத்தில் முதல் நிலைக்கு 15 ஓட்டுகளும், இரண்டாவதற்கு 32 ஓட்டுகளும், மூன்றாவதற்கு 16 ஓட்டுகளும் கிடைத்தன.

போல்ஷிவிக்குகள் பாதுகாப்பை என்றுமே கைவிட்டது கிடையாது. இந்தப் பாதுகாப்புக்கு, தாயகத்தின் காப்புக்கு ஒரு திட்டவட்டமான ஸ்தூலமான சந்தர்ப்பம் இருக்க வேண்டும், தற்போது அது இருக்கிறது. அதாவது மிகவும் வலிமை வாய்ந்த சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சோஷலிஸ்டுக் குடியரசு பாதுகாக்கப்பட வேண்டும் என்று தோழர் லெனின் சுட்டிக் காட்டுகிறார். நமது தாயகத்தை,

சோஷலிஸ்டுக் குடியரசை நாம் எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது மட்டுமே இங்கு எழும் கேள்வி. சேனை போரினுல் மிகவும் களைத்துப் போயிருக்கிறது. குதிரைகள் இருக்கும் நிலையில் ஓர் எதிர்த்தாக்குதல் நடைபெறுமானுல் நாம் பீரங்கிகளைக் கொண்டு செல்ல முடியாது. பால்டிக் கடலில் உள்ள தீவுகளில் ஜெர்மானியர் மிகவும் சாதகமான இடங்களைப் பிடித்து வைத்திருக்கிருர்கள். அவர்கள் ஓர் எதிர்த்தாக்குதலைத் தொடங்கும் பட்சத்தில் வெறுங்கைகளாலேயே ரெவெலையும் பெத்ரோகிராதையும் அவர்களால் பிடித்துக் கொள்ள முடியும். இத்தகைய நிலைமைகளில் போரைத் தொடர்வது மூலம் நாம் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை மிகப்பெருமளவுக்கு வலுப்படுத்தியவர்களாவோம். எப்படியும் சமாதானம் செய்து கொண்டே தீர வேண்டும், ஆனல் இந்த சமாதானம் மேலும் மோசமானதாக இருக்கும், காரணம் இதைச் செய்து கொள்கிறவர்கள் நாமல்ல. நாம் இன்று செய்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும் இந்த சமாதானம் மானக்கேடான ஒன்று என்பதில் சந்தேகமில்லை. ஆனல் போர் துவங்குமானுல் நமது அரசாங்கம் அவ்வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும், சமாதானத்தை வேறு ஒரு அரசாங்கம் செய்து கொள்ளும். தற்போது நாம் பாட்டாளி வர்க்கத்தை மட்டுமன்றி ஏழை விவசாயி மக்களையும் சார்ந்து நிற்கிறோம். போர் தொடருமானுல் அம்மக்கள் நிச்சயம் நம்மைக் கைவிட்டுவிடுவார்கள். போரை இழுபறியாக நீடிப்பது பிரிட்டிஷ், பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்கு உகந்தது. இதற்குச் சான்று உதாரணமாக க்ரிலென்கோ தலைமை ராணுவ அலுவலகத்தில் அமெரிக்கர்கள் ஒவ்வொரு ருஷ்யப் படையாளிக்கும் 100 ரூபிள் தருவதாக முன்வந்ததைக் குறிப்பிடலாம். புரட்சிகரப் போர் என்ற நிலை எடுக்கிறவர்கள், நாம் இப்போர் மூலம் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தோடு ஓர் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருப்போம் எனவும், அதன் மூலம் ஜெர்மனியில் புரட்சியை எழுச்சியுறச் செய்வோம் எனவும் வலியுறுத்துகிருர்கள். ஆனல் ஜெர்மனி இன்னும் புரட்சியைக் கருக்கொண்டு மட்டுமே

இருக்கிறது, அதே சமயம் நாம் ஒரு முற்றும் ஆரோக்கிய மான சிசுவை—சோஷலிஸ்டு குடியரசை—ஏற்கெனவே பெற்று உருவாக்கி விட்டோம். போரை நாம் தொடங்கு வோமானுல் அதை நாம் கொன்று விட நேரலாம். ஜெர் மன் சமூக-ஜனநாயகவாதிகளின் சுற்றுக்கடிதம் நம் வசம் இருக்கிறது. மையத்தில் உள்ள இரு போக்குகளும் நமது விஷயத்தில் மேற்கொள்ளும் உறவு நிலை பற்றிய தகவல் இருக்கிறது. அவற்றில் ஒரு போக்கு நாம் விலைக்கு வாங்கப் பட்டு விட்டோம் எனவும், பிரெஸ்டில் நிகழும் நடப்பு நிகழ்ச்சிகள் ஒரு நாடகமே என்றும், இதில் நடிகர்கள் தமது பாத்திரத்தை நடிக்கிறுர்கள் என்றும் கருதுகிறது. இந்தப் பகுதி போர்நிறுத்தம் செய்ததற்காக நம்மைத் தாக்குகிறது. காவுத்ஸ்கிவாதிகளின் இன்னெரு பகுதி போல்ஷிவிக்குகளின் தலைவர்களின் சொந்த நேர்மையில் சந்தேகத்திற்கு இட மில்லை, ஆனுல் போல்ஷிவிக்குகளின் நடத்தை ஓர் உளவியல் புதிராக இருக்கிறது என்று கூறுகிறது.[46] இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் கருத்து என்ன என்பது நமக்குத் தெரியாது. சமாதானத்திற்கான நமது முயற்சிகளை பிரிட் டிஷ் தொழிலாளர்கள் ஆதரிக்கிறுர்கள். நாம் செய்து கொள் ளும் சமாதானம் கட்டாயம் மானக்கேடான ஒன்ருகவே இருக்கும் என்பது திண்ணம். ஆனுல் சமூக சீர்திருத்தங்களை (போக்குவரத்தை மட்டுமே எடுத்துக் கொள்க) நிறைவேற்றி முடிப்பதற்கு நமக்கு ஓய்வு நேரம் தேவை. நம்மை நாமே வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குக் காலாவகா சம் தேவை. முதலாளித்துவ வர்க்கத்தாரை நசுக்குவதை முழுமைப்படுத்த வேண்டும். இதற்கு நமது இரு கரங்களும் கட்டற்று இருக்க வேண்டும். இதைச் செய்து முடித்து விட் டால் நம் இரு கரங்களையும் விடுவித்துக் கொள்ள முடியும். பிறகு நாம் சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு புரட்சிகரமான போரை நடத்த முடியும். புரட்சிகரத் தொண் டர் சேனை இப்போது உருவாக்கப்பட்டுவருகிறது இதன் உயர் அணியினர் நமது வருங்கால சேனையின் அதிகாரி களாக விளங்குவார்கள்.

போரை முடிப்பது, சமாதான உடன்படிக்கையில் கை

யொப்பமிட மறுப்பது, சேனையைக் கலேப்பது என்ற தோழர் திரோத்ஸ்கியின் யோசனே—சர்வதேச அரசியல் ஆர்ப் பாட்டமாகும். நமது துருப்புக்களை விலக்கிக் கொள்வது மூலம் நாம் சாதிக்கப்போகும் ஒரே காரியம் எஸ்த்லாந்தின் சோஷலிஸ்டு குடியரசை ஜெர்மானியரிடம் ஒப்படைப்பதே யாகும். சமாதானம் செய்து கொள்வதால் நாம் ஜப்பானிய ரும் அமெரிக்கரும் இஷ்டப்படி நடக்க இடமளிப்பதாயும் அவர்கள் உடனே விளாடிவஸ்தோக்கைக் கைப்பற்றிக் கொண்டு விடுவார்கள் என்றும் கூறப்படுகிறது. ஆனல் அவர் கள் இர்க்கூட்ஸ்க் வந்து சேருவதற்கு முன்பே நாம் நமது சோஷலிஸ்டுக் குடியரசை வலுப்படுத்திக் கொண்டுவிட முடியும். சமாதான உடன்படிக்கையில் கையொப்பம் இடு வது மூலம் நாம் போலந்தின் சுயநிர்ணயத்திற்குத் துரோ கம் செய்கிருேம் என்பது உண்மை. ஆனல் நாம் எஸ்த்லாந் தின் சோஷலிஸ்டுக் குடியரசைத் தக்கவைத்துக் கொள் கிருேம், நமது வெற்றிகளே வலுப்படுத்திக் கொள்வதற் கான வாய்ப்பும் பெறுகிருேம். நாம் வலது திசையில் திரும்பு கிருேம், இது மிகவும் அழுக்கடைந்த கொட்டில் ஊடே இட்டுச் செல்கிறது என்பது நிச்சயம். ஆனல் இதை நாம் செய்தே தீர வேண்டும். ஜெர்மானியர் எதிர்த்தாக்குதல் தொடுப்பார்களானல், நாம் எந்த ஒரு சமாதான உடன் படிக்கையிலும் கையொப்பமிடும் நிர்ப்பந்தத்துக்கு ஆளா வோம், பிறகு நிலேமை இன்னும் படுமோசமாவது திண் ணம். சோஷலிஸ்டுக் குடியரசைப் பாதுகாப்பதற்கு மூவா யிரம் மில்லியன் இழப்பீட்டுத் தண்டத் தொகை அவ்வளவு ஏறிய விலே அன்று. சமாதானத்தில் இப்போது கையொப்ப மிடுவது மூலம் ஏகாதிபத்தியவாதிகள் (ஜெர்மன், பிரிட் டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்) ரீகாவையும் பாக் தாதையும் எடுத்துக் கொண்ட பிறகும் தொடர்ந்து போரிடு கிருர்கள், இதே சமயம் நாம் வளர்ந்து வருகிருேம் சோஷ லிஸ்டுக் குடியரசு வளர்ந்து வருகிறது என்பதை மக்கள் விரிவாகவும் கண்ணுரவும் காணும்படி நாம் நிதர்சனப் படுத்தியுள்ளோம்.

2

சில அம்சங்களில் தமது ஆதரவாளர்களான ஸ்தாலின் மற்றும் ஸினேவியெவிடமிருந்து வேறுபடுவதாகத் தோழர் லெனின் சுட்டிக் காட்டுகிறுர்.[47] மேற்கத்திய நாடுகளில் ஒரு வெகுஜன இயக்கம் நிச்சயமாயும் இருக்கிறது, ஆனுல் அங்கே புரட்சி இன்னும் தொடங்கவில்லே. அந்தக் காரணத் தால் நாம் நமது போர்த்தந்திரத்தை மாற்றுவோமானுல் நாம் சர்வதேச சோஷலிசத்துக்குத் துரோகிகள் ஆவோம். சமாதானம் செய்து கொள்வது சில காலம் மேற்கத்திய நாடுகளில் இயக்கத்தைப் பலவீனப்படுத்தும் என்று ஸினேவியெவ் கருதுவதை லெனின் ஒப்புக்கொள்ளவில்லே. சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைமுறிவதால் ஜெர்மன் இயக்கம் உடனே வளர்ச்சியடையும் என்று நாம் நம்புவோமானுல் நம்மை நாமே தியாகம் செய்து கொள்ள வேண்டும், ஏனெனில் ஜெர்மன் புரட்சி நமது புரட்சியைக் காட்டிலும் மேலதிகமான சக்தி வாய்ந்ததாகும். எனினும், அங்கு இன்னும் இயக்கம் தொடங்கவில்லே என்பதும், ஆனுல் இங்கு ஏற்கெனவே ஒரு புதுப்பிறவியான உரக்கக் கத்தும் குழந்தை இருக்கிறது என்பதும், நாம் சமாதானத்துக்கு உடன்படுகிறோம் என்று தெளிவாக இப்போது நாம் கூருத பட்சம் நாம் நிச்சயம் அழிவோம் என்பதும் முற்ற முழு உண்மைகள். பொதுவான சோஷலிஸ்டு புரட்சி தொடங்கும் வரை நாம் தாக்குப் பிடிக்க வேண்டுவது நமக்கு முக்கியமானது. ஆனுல் சமாதானத்தைச் செய்து கொள்வது மூலமே நாம் இதைச் சாதிக்க முடியும்.

3

சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதைச் சாத்தியமான சகலவழிகளிலும் இழுபறியாகத் தாமதிப்

போம் என்ற முன்மொழிவு மீது ஓட்டளிக்குமாறு லெனின் பிரேரேபிக்கிருர்.

நி. லெனின் (வி. உல்யானவ்)
நூல் திரட்டு, தொகுதி 15ல்,
1922ல் முதலில் வெளியிடப்
பட்டது;
மூன்ரும் உரை
ரு.ச.ஜ.தொ. கட்சி மத்தியக்
கமிட்டி குறிப்பேடுகள்.
1917 ஆகஸ்ட்—பிப்ரவரி 1918
என்ற புத்தகத்தில், 1929ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 255-258

தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் மூன்றுவது அகில ருஷ்யக் காங்கிரஸ்

1918 ஜனவரி 10-18 (23-31)[48]

மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நடவடிக்கைகள் பற்றிய உரை ஜனவரி 11(24)

தோழர்களே, ருஷ்யாவில் சோவியத் ஆட்சி அதிகாரமும் சோவியத் அரசாங்கமும் நிறுவப்பட்டதற்குப் பின் கடந்து சென்ற இரண்டு மாதங்கள் பதினைந்து நாட்களுக்கான மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை அதன் சார்பில் நான் உங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இரண்டு மாதங்களும் பதினைந்து நாட்களும்—இது இதற்கு முந்தியதான தொழிலாளர் ஆட்சி அதிகாரம் நீடித்து நிலவி ஒரு முழு நாட்டின் மீதும் சுரண்டலாளர் முதலாளிகள் மீதும் ஆட்சி செலுத்திய கால அளவைக் காட்டிலும் ஐந்து நாட்கள் மட்டுமே அதிகமாகும்; 1871 பாரிஸ் கம்யூன் போது நிறுவப்பட்ட பாரிஸ் தொழிலாளரின் ஆட்சி அதிகாரமே அது.

நாம் முதலாவதாயும் இந்தத் தொழிலாளர் ஆட்சி அதிகாரத்தை நினைவில் இருத்த வேண்டும், நமது சிந்தனையைப் பின் செல்ல விட்டு அந்த ஆட்சி அதிகாரத்தை அக்டோபர் 25ல் நிறுவப்பட்ட சோவியத் ஆட்சி அதிகாரத்துடன் ஒப்பு நோக்க வேண்டும். இதற்கு முந்தியதான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை இன்றையதுடன் ஒப்பு நோக்குவோமானல் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் எத்தகைய பிரம்மாண்டமான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது என்பதையும், போர் பொருளாதார நாசம் ஆகிய நம்பற்கரிய

அளவு சிக்கலான நிலைமைகள் இருந்த போதிலும் கூட எத் தகைய அளப்பரிய அதிக சாதகமான நிலையில் சோவியத் ஆட்சி அதிகாரம் ருஷ்யாவில் இலங்குகிறது என்பதையும் நாம் உடனே காண முடியும்.

வரலாற்றிலேயே முதல் தடவையாக சோவியத் ஆட்சி அதிகாரத்தின் கருவுருவான கம்யூனே நிலைநாட்டிய பாரிஸ் தொழிலாளர்கள், இரண்டு மாதங்கள் பத்து நாட்களுக்கு ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்ட பிறகு, பிரெஞ்சு காடேட்டுகள், மென்ஷிவிக்குகள், கலேதின் ஆதர வாளர்களான வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் செயலினுல் அழிவுற்றனர். தொழிலாளர் அரசாங்கத்தின் முதல் அனுபவத்திற்கு பிரெஞ்சுத் தொழிலாளர் முன் என்றுமே கண்டிராத அளவுக்குப் பொறுக்கவியலாத இன் னல்களைத் தாங்க வேண்டி இருந்தது. இந்த அரசாங்கத்தின் பொருளையும் செயல் நோக்கத்தையும் பிரான்சில் இருந்த மிகப்பெரும் பெரும்பான்மை விவசாயிகள் அறிந்திருக்க வில்லை.

நாம் அளவிடற்கரிய முறையில் மேலதிகமான சாதகமான கால-இடச் சூழலில் இருக்கிறோம், காரணம் ருஷ்யாவின் படையாளிகளும் தொழிலாளரும் விவசாயிகளும் ஒரு சோவியத் அரசாங்கத்தைப் படைத்துருவாக்க முடிந்தது. இந்தப் பொறியமைவு உலக முழுவதற்கும் அவர்களது போராட்ட முறைகளை அறிவித்தது. இதுவே ருஷ்யாவின் தொழிலாளர் விவசாயிகளை, பாரிஸ் பாட்டாளிகளின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வேறுபட்டதான ஒரு நிலையில் இருத்தியுள்ளது. பாரிஸ் பாட்டாளிகளுக்குப் பொறியமைவு இருக்கவில்லை, நாடு அவர்களைப் புரிந்து கொள்ளவில்லை. நாம் உடனடியாக சோவியத் ஆட்சி அதிகாரத்தைச் சார்ந்து நிற்க முடிந்தது. இதனுல்தான் சோவியத் ஆட்சி அதி காரத்துக்கு மக்களின் மிகப் பெரும் பெரும்பான்மையின் அனுதாபமும், ஆர்வ மிகுந்த மிகவும் அர்ப்பணிப்பான ஆதரவும் இருக்கின்றன. எனவே சோவியத் ஆட்சி அதி காரம் வெல்லற்கரியது என்பது குறித்து நாம் என்றுமே ஐயுறவில்லை.

சோவியத் ஆட்சி அதிகாரம் குறித்து ஐயுறவு கொண் டோர், முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளிடம் சமரசம் செய்து கொள்வதற்காக உணர்வு பூர்வமாகவோ உணர் வின்றியோ அதை அடிக்கடி விற்பனை செய்தும் காட்டிக் கொடுத்தும் வந்தவர்கள், பாட்டாளிகளின் தனி ஆட்சி அதிகாரத்தை ருஷ்யாவில் கட்டிக்காக்க இயலாது என்று செவிடுபடக் கூக்குரல் எழுப்பினுர்கள். எந்த ஆட்சி அதி காரம் தொழிலாளி வர்க்கத்தையும் பெரும்பான்மையான விவசாயிகளையும் எல்லா உழைக்கும் சுரண்டப்படும் வர்க் கங்களையும் திரட்டி, நிலப்பிரபுக்களையும் முதலாளித்துவ வர்க்கத்தினரையும் எதிர்த்துப் போராடும் தனி ஒரு, பிரிக்க வொண்ணுத வகையில் பரஸ்பரம் இணைந்துள்ள சக்தியாக ஒற்றுமைப்படுத்த முடிகிறதோ அந்த ஆட்சி அதிகாரம் மட்டுமே எத்துணை காலம் வேண்டுமாயினும் நீடித்து நிலவ முடியும் என்பதை போல்ஷிவிக்குகள் எவரும் அல்லது அவர் களது ஆதரவாளர்களும் ஒரு கணம் கூட மறந்து விடவில்லை.

நமது கட்சி வேலைத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது போல தொழிலாளர், ஏழை விவசாயிகள் அரைப்பாட்டாளிகளின் ஒரு கூட்டணி மட்டுமே ருஷ்யாவின் மக்கள் தொகையின் பெரும்பான்மையை அரவணைத்துக் கொண்டு அரசாங்கத் துக்கு உறுதியான ஆதரவை உத்தரவாதம் செய்ய முடியும் என்பதை நாம் என்றுமே சந்தேகித்ததில்லை. அக்டோபர் 25க்குப் பிறகு சில வாரங்களுக்கு உள்ளாகவே எல்லா இடர்ப்பாடுகளையும் வென்று சமாளித்து இந்த உறுதியான கூட்டணியின் அடிப்படையில் ஓர் அரசாங்கத்தை உடனடி யாக நிறுவ நம்மால் முடிந்தது.

ஆம், தோழர்களே! சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி அதன் பழைய வடிவில்—இந்தக் கட்சியில் யார் சோஷலிசத் தின் மெய்யான ஆதரவாளர்கள் என்பதை விவசாயிகள் இன்னும் புரிந்து கொள்ளாத போது—சமத்துவமான அடிப் படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை என்ற கோ ஷத்தை முன்வைத்தது. இதை யார் நிறைவேற்றுவார்கள், இதை முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டணி சேர்ந்தா சேராமலா எப்படி இதைச் செயல்படுத்துவது என்பது

குறித்து அக்கட்சி கவலைப்படவில்லை. அப்போது அதை நாம் ஒரு மோசடி என்று சுட்டியுரைத்தோம். இந்தப் பகுதி மக்கள் தன் பக்கம் இல்லை என்பதையும், இது வெறும் நீர்க் குமிழி என்பதையும் இப்போது உணர்ந்துள்ளது. முதலாளித் துவ வர்க்கத்துடன் கூட்டணி சேர்ந்து சமத்துவமான அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையினைத் தன்னால் நிறைவேற்ற முடியும் என்று வாதிடுகிறது. இதில் தான் அடிப்படையான மோசடி காணக் கிடக்கிறது. மக் களின் வாழ்க்கையின் மிகவும் மகத்தான ஒரு தருணத்தில் ருஷ்யப் புரட்சி உழைப்பாளி மக்கள் மற்றும் முதலாளித் துவ வர்க்கத்தார் இடையேயான ஒத்துழைப்புக்கு ஓர் அனு பவத்தை முன்வைத்த போது, போர் மக்களை நாசப்படுத்திக் கோடிக் கணக்கான மக்களுக்குப் பட்டினிச்சாவே கதி என்றாக்கி, அதன் பின்விளைவுகள் நடைமுறையில் சமரசத் தின் விளைவு என்ன என்பதைப் புலப்படுத்திய போது, சமரசப் பாதை வழியே சென்ற பிறகு சோவியத்துகள் தாமே அதை அனுபவித்தும் உணர்ந்தும் தெரிந்து கொண்ட போது, விவசாயிகளின் உழைப்பாளர் பகுதியினை உலக முழுதிலுமான தொழிலாளர்களின் மாபெரும் சோஷலிஸ்டு இயக்கத்துடன் ஒன்றுசேர்க்க விரும்பியவர்களின் போதனை களில் ஓர் ஆழமான வீரியமிக்க மகத்தான சோஷலிஸ்டு மையக்கூறு இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

இக்கேள்வி விவசாயிகளுக்கு ஒரு தெளிவான தனிச் சிறப்பான நடைமுறைப் பிரச்சினையாக ஆன உடனேயே சில காரியங்கள் நிகழ்ந்தன. இவை குறித்து யாருக்கும் சந்தேகமில்லை. இவை விவசாயிகள் சோவியத்துகள் மற்றும் காங்கிரசுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளன: சோஷலிசத்தை அமுல்படுத்தும் நேரம் வந்தவுடன் விவசாயிகள் முதலாளித் துவ வர்க்கத்தாருடன் கூட்டணி அல்லது உழைப்பாளி மக் களுடன் கூட்டணி என்ற இரண்டு பிரதான அரசியல் கொள் கை வழிகளைத் தெளிவாகக் காண முடிந்தது. பிறகு, அவர் கள் விவசாயிகளின் மெய்யான நோக்கங்களையும் நலன்களை யும் உருப்படுத்திக் காட்டும் கட்சி இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியே என்பதை உணர்ந்தார்கள். இந்தக்

கட்சியுடன் நாம் நமது அரசாங்க கூட்டணியை ஏற்படுத்திக் கொண்ட போது நாம் துவக்க முதலே இந்தக் கூட்டணி மிகவும் தெளிவான மிகவும் வெளிப்படையான கோட்பாடு களைச் சார்ந்து நிற்கும்படி அமைத்துக் கொண்டோம். வங்கி களைத் தேசவுடைமையாக்கி தொழிலாளர் கண்காணிப்பை நிலைநாட்டும் தொழிலாளர்களுடன் கூட்டணி சேர்ந்து ருஷ்யாவின் விவசாயிகள் நிலத்தை சமூகவுடைமையாக்க விரும்புவார்களாளுல் அவர்கள் நமது விசுவாசமிக்க கூட் டாளிகளாவார்கள், மிகவும் விசுவாசமுள்ள மதிப்பு மிக்க நேசசக்தி ஆவார்கள். சோஷலிசத்துக்கும் முதலாளித்துவத் துக்கும் இடையே கிட்டத்தட்ட கடினமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நீண்டதான மாறுதல் கட்டம் இருக் கிறது என்பதை இந்தக் காலகட்டம் மேற்கொள்ளும் வடி வங்கள், சிறிய அல்லது பெருவீத உரிமையுடைமையா, சிறிய அல்லது பெருவீத சாகுபடி முறையா எது மேலோங்கி இருக் கிறது என்பதால் நிர்ணயிக்கப்படும். இந்த வெளிப்படை யான உண்மையை எந்த சோஷலிஸ்டும் ஒப்புக் கொள்ள மறுக்க மாட்டார். எல்லா மக்களும் படித்தவர்களாக இருக் கும், பெருவீதப் பண்ணைகள் கொண்டதான எஸ்த்லாந்தில் சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதும், பிரதானமாயும் குட்டி முதலாளித்துவ நாடாக இருக்கும் ருஷ்யாவில் சோஷலிசத் திற்கு மாறிச் செல்வதும் ஒரே மாதிரியாக இராது. இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

விவசாயிகள்மீது சோஷலிசம் வலுவந்தமாகத் திணிக்கப் படக் கூடாது என்றும் நாம் உதாரணத்தின் சக்தியிலும் விவசாயிகள் அன்ருட அனுபவத்தைத் தன்வயப்படுத்திக் கொள்வதிலுமே கவனம் செலுத்த வேண்டும் என்றும் அர சியல் உணர்வுடைய ஒவ்வொரு சோஷலிஸ்டும் கூறுகிருர். விவசாயிகள் சோஷலிசத்துக்கு எவ்வாறு கடந்து செல்வதை விரும்புவார்கள்? இந்தப் பிரச்சினை இப்போது நடைமுறை யில் ருஷ்ய விவசாயிகளை எதிரிடுகிறது. சோஷலிஸ்டு பாட் டாளி வர்க்கத்தை ஆதரித்து அவர்கள் எவ்வாறு சோஷ லிசத்துக்கு மாறிச் செல்வதைத் துவக்க முடியும்? இந்த மாறிச் செல்வதை விவசாயிகள் ஏற்கெனவே துவக்கி விட்

டார்கள். அவர்களிடம் நமக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன் நாம் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி உறுதியான அடித்தளத்தில் கட்டப்பபட்டதாகும், அது ஒவ்வொரு மணி தோறும் வலுவுக்கு மேல் வலுப் பெற்று வளர்ந்து வருகிறது. கோஷ்டிப் போராட்டம் வேலையைத் தடங்கல் செய்யும் என்று மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் உள்ள நாங்கள் முதலில் அஞ்சினோம். ஆனால் இப்போது இரண்டு மாதங்கள் சேர்ந்து வேலை செய்த அனுபவத்துக்குப் பிறகு பெரும்பான்மையான பிரச்சினைகளில் நாம் ஒருமுகமான முடிவுக்கே வந்து சேருகிறோம் என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

உதாரணமாக, நகரத்துக்கும் நாட்டுப் புறத்துக்கும் இடையே எந்த வகையான பரிவர்த்தனை இருக்க வேண்டும் என்பதை விவசாயிகளுக்கு அனுபவம் எடுத்துக் காட்டும் போது மட்டுமே அவர்கள் தாமாகவே, கீழ்மட்டத்தில் இருந்து தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் தமது சொந்த உறவுகளை நிறுவிக் கொள்ள முடியும். மறு புறம், உள் நாட்டுப் போரின் அனுபவம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் சுரண்டலாளர் ஆட்சியைத் தாட்சண்யமின்றி அடக்குவது தவிர்த்து, சோஷலிசத்திற்கான வேறு பாதை எதுவும் கிடையாது என்பதை விவசாயிகளுக்கு நிதர்சனப் படுத்திக் காட்டி விட்டது. (கரவொலி.)

தோழர்களே, இந்தக் கருப்பொருளை இந்தக் கூட்டத்திலும் சரி அல்லது மத்திய நிர்வாகக் கமிட்டியிலும் சரி நாம் குறிப்பிடும் போதில் நான் கூட்டத்தின் வலது கோஷ்டியில் இருந்து ''சர்வாதிகாரி!'' என்ற ஆர்த்துரையினை அடிக்கடி கேட்கிறேன். ஆம், ''நாம் சோஷலிஸ்டுகளாக இருந்த போது'' எல்லோரும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அங்கீகரித்தார்கள். தமது வேலைத்திட்டங்களில் அதைப் பற்றி எழுதினார்கள். உழைப்பாளி மக்கள் சுரண்டப் படக் கூடாது, சுரண்டுவது பாவம் இழிவானது என்பதை மக்களிடம் சொல்லி இணங்க வைத்து நிரூபிப்பது சாத்தியம், மக்கள் இதைப் பற்றி இணங்கச் செய்து விடில்

பூமியில் சுவர்க்கம் தோன்றும் என்று விரிவாகப் பரப்பப் பட்டு வந்த பொய்யான கருத்திடம் கோபாவேசம் கொண் டார்கள். இந்தக் கற்பனுவாத கருத்துப்படிவம் தத்துவம் என்ற முறையில் நீண்ட கால முன்பே தகர்க்கப்பட்டது, இப்போது அதை நடைமுறையில் தகர்ப்பது நமது பணி யாகும்.

எல்லாம் நேர்த்தியாக சுவை கூட்டி அமைந்த முறையில் சோஷலிஸ்டுகள் ஒருதட்டில் சோஷலிசத்தைக் கொண்டு வருவார்கள் என்ற வகையில் நாம் சோஷலிசத்தைச் சித்திரித்துக் காட்டக் கூடாது. அது என்றுமே நடக்காது. வரலாற்றில் வர்க்கப் போராட்டத்தின் எந்த ஒரு பிரச்சினை யும் பலாத்காரம் மூலம் அன்றி வேறு வழியில் தீர்க்கப் பட்டது கிடையாது. பலாத்காரம் உழைப்பாளி மக்களால் சுரண்டலாளர்களை எதிர்த்துச் சுரண்டப்படும் மக்கள் திர ளால் செயல்படுத்தப்படும் போது—நாம் அதை ஆதரிக் கிருேம்! (ஆரவாரமான கரவொலி.) முதலாளித் துவ வர்க்கத்தாருடன் உணர்வு பூர்வமாகவோ உணர் வின்றியோ சேர்ந்து நிற்கும் பேர்வழிகளின் அலறல் கேட் டோ முதலாளித்துவ வர்க்கத்தார்களால் மிகவும் மிரட்டப் பட்டும் அவர்களது ஆட்சியால் மிகவும் ஒடுக்கப்பட்டும் வந்த காரணத்தால் முன் என்றுங் கண்டிராத உக்கிரமான வர்க்கப் போராட்டத்தைக் கண்டு கிலியடித்துப் போய் கண்ணீர் விட்டுக் கதறுவது குறித்தோ, தமது மெய்க்கோள் களை மறந்து விட்டு, சோஷலிஸ்டுகளாகிய நாம் சுரண்டலா ளர்களை எதிர்த்துப் போராடாமல், அவர்களது எதிர்ப்பை ஒடுக்காமல் முழு வெற்றி அடைய வேண்டும் என்று நடக்க முடியாத ஒன்றை நடத்தி முடிக்கும்படி எம்மிடம் கோரு வது குறித்தோ நாம் கிஞ்சிற்றும் அமைதி குலையவில்லை.

1917 கோடையிலேயே, இது ''இறுதியும் தீர்மான கரமுமான போராட்டத்தின் விவகாரம்'' என்பதையும், சோவியத்துகள் ஆட்சிக்கு வருமானல் முதலாளித்துவ வர்க் கத்தின் கடைசிக் கோட்டை, உழைப்பாளி மக்களை ஒடுக்கு வதற்கான அவர்களது பிரதான ஆதாரம் அவர்களது கரங்

களில் இருந்து கிழித்தெறியப்படும் என்பதையும் சுரண்ட லாளர்கள் புரிந்து கொண்டு இருந்தார்கள்.

இதனுல்தான், சுரண்டலாளர்கள் தமது எதிர்ப்பை நிறுத்தி, தம்மில் ஆகச் சிறந்தவர்களுக்கும் கூட சுரண்டும் வர்க்கங்களின் ஆட்சி இனி மேல் என்றுமே திரும்பி வர முடியாதபடிப் போய் விட்டது, இப்போது முதல் சாமான்ய விவசாயி உத்தரவு போடுவார், அது எவ்வளவு தான் பிடிக்காததாக இருந்தாலும் அவர்கள் கீழ்படிந்து தீர வேண்டும் என்ற கருத்துக்கு இணங்கி வர வேண்டும் என் பதாகச் சுரண்டலாளர்களைக் கட்டாயப்படுத்துவதற்காக அக்டோபர் புரட்சி இந்த முறையான நெறி திறம்பாத போராட்டத்தைத் தொடங்கியது.

இது பல இடர்ப்பாடுகளை தியாகங்களை தவறுகளைச் சுமத்தும், இது புதியதான விஷயம், வரலாற்றில் முன் என்றும் கண்டிராதது, புத்தகங்களில் இருந்து படித்தறிய முடியாதது. வரலாற்றில் இது காறும் நிகழ்ந்திராத மிக முக்கியமான ஆகக் கடினமான மாறுதல் ஆகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனுல் இந்த மாறுதல் கட் டத்தைக் கொண்டு வர வேறு வழி எதுவும் இல்லை. ருஷ்யா வில் சோவியத் ஆட்சி அதிகாரம் நிறுவப்பட்டது என்ற உண்மை புரட்சிகர மக்கள்தான் புரட்சிகர அனுபவத்தில் எல்லோரையும் விடச் செழுமை பெற்றுத் திகழ்பவர்கள் என்பதைப் புலப்படுத்தி விட்டது. ஒரு சில கட்சி ஆட்களுக்கு லட்சக் கணக்கான பேர் உதவிக்கு வரும் போது மக்கள் தான் சுரண்டலாளர்களின் அடத்தை மெய்யாகவே ஒடுக்கு வார்கள்.

இதனுல்தான் ருஷ்யாவில் இன்றைய நேரத்தில் உள் நாட்டுப் போர் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. ''உள்நாட்டுப் போர் ஒழிக!'' என்ற கோஷம் எமக்கு எதிராக முன்வைக்கப்படுகிறது. அரசியல் நிர்ணய சபை எனப்படு வதன் வலது பிரிவின் பிரதிநிதிகளில் இருந்து இந்தக் கோஷம் கத்தப்படுவதை நான் கேட்க நேர்ந்தது. உள்நாட்டுப் போர் ஒழிக... இதன் பொருள் என்ன? யாருக்கு எதிரான உள்நாட்டுப் போர்? போக்கிரிகளுக்கும் அதிகாரிகளுக்கும்

லஞ்சம் கொடுக்க லட்சக் கணக்கில் செலவழித்து வரும் கர்னீலவ், கேரென்ஸ்கி, ரியாபுஷின்ஸ்கி ஆகியோரை எதிர்த்து அல்லவா? இந்த லஞ்சங்களை அறிந்தோ அறியாமலோ வாங்கிக் கொள்ளும் நாசவேலைக்காரர்களை எதிர்த்து அல்லவா? அவர்கள் மத்தியில் இந்த லஞ்சங்களை அறியாமல் வாங்கும் விவரம் தெரியாத பேர்வழிகள் இருக்கிருர்கள் என்பதில் சந்தேகமில்லை. காரணம், பழைய முதலாளித்துவ அமைப்பு அதன் அஸ்திவாரத்தோடு அழிக்கப்பட முடியும் அழிக்கப்பட வேண்டும், அதன் இடிபாடுகள் மீது ஒரு முற்றிலும் புதிய சோஷலிஸ்டு சமூக அமைப்பு கட்டப்பட முடியும் கட்டப்பட வேண்டும் என்பதை அவர்களால் கற்பனை செய்யவும் இயலாது. அத்தகைய பேர்வழிகள் சந்தேகமன்னியில் இருக்கிருர்கள் என்ருலும் அது நிலைமையை மாற்றி விடுமா?

இதனுல்தான் சொத்துடைத்த வர்க்கங்களின் பிரதிநிதிகள் தம் சகலத்தையும் பணயம் வைக்கத் தயாராக இருக்கிருர்கள். இதனுல்தான் இவை அவர்களுக்கு இறுதியும் தீர்மானகரமுமான போராட்டங்களாக இருக்கின்றன. சோவியத் ஆட்சியைத் தாக்கி நொறுக்கும் தமது முயற்சிகளில் அவர்கள் எத்தகைய கொலைகாரச் செயலையும் புரியத் தயங்க மாட்டார்கள். உழைப்பாளி மக்கள் தமது கரங்களில் ஆட்சி அதிகாரத்தினை எடுத்துக் கொள்ளும் போது ஆளும் வர்க்கங்கள் தமது பணப் பைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் காரியத்தில் முன் என்றும் கேட்டிராத வன் செயல்களில் சுட்டுக் கொல்வதில் இறங்கும் என்பதை சோஷலிசத்தின் வரலாறு முழுவதும் குறிப்பாக புரட்சிகர வேட்கையில் மிகவும் செழுமையுற்று விளங்கும் பிரெஞ்சு சோஷலிசத்தின் வரலாறு நமக்குப் புலப்படுத்தவில்லையா? இந்த ஆட்கள் நம்மிடம் உள்நாட்டுப்போர் பற்றிப் பேசும் போது நாம் ஏளனம் மூலம் பதிலளிக்கிருேம். ஆனுல் அவர்கள் மாணவர்கள் மத்தியில் தமது கோஷங்களைப் பரப்பும் போது—நீங்கள் அவர்களை ஏமாற்றுகிறீர்கள்! என்று நாம் கூறுகிருேம்.

வர்க்கப் போராட்டம் அதன் இன்றைய மிக கடைசி

யான வடிவத்தை மேற்கொண்டது தற்செயலானதல்ல. இந்த வடிவத்தை மேற்கொண்டு சுரண்டப்பட்ட வர்க்கம் அதன் வர்க்க விரோதியை முற்றுக அழிப்பதன் பொருட்டு ஆட்சி அதிகாரத்தின் எல்லா சாதனங்களையும் தன் சொந்தக் கரங்களில் எடுத்துக் கொள்கிறது. ருஷ்ய மண்ணில் இருந்து அதிகார வர்க்கத்தாரை மட்டுமன்றி, நிலப்பிர புக்களையும்—பல குபேர்னியாக்களில் ருஷ்ய விவசாயிகள் செய்திருப்பது போன்று—ஒழித்துக் கட்டுவதற்கு இவ்வாறு செயல்படுகிறது.

மக்கள் கமிசார்களின் கவுன்சிலை அதிகார வர்க்கத்தா ரும் நிலப்பிரபுக்களும் சீர்குலைவு திட்டத்துடன் சந்தித்தார் கள். இது அவர்கள் சோஷலிசத்துக்கு உதவ விரும்பவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டு. இந்த முதலாளிகள் மோசடிக் காரர்கள், போக்கிரிகள் நாசகாலர்கள் கும்பு முழுவதும் முதலாளி வர்க்கத்திடன் லஞ்சம் வாங்கிய கும்பு, உழைப் பாளி மக்களின் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து வரும் கும்பு என்பது தெளிவாகத் தெரிந்தது தானே. முதலாளித்துவத் தில் இருந்து சோஷலிசத்துக்கு நேரடியான பாய்ச்சல் சாத் தியம் என்று நினைத்தவர்கள் அல்லது இதை அரசியல் நிர்ணய சபையின் வழி மூலமாக அடைந்து விடலாம் என்று மக்கள் தொகையின் பெரும்பான்மையை நம்பவைப்பது சாத்தியம் என்று கற்பனை செய்தவர்கள்—இந்த முதலாளித் துவ-ஜனநாயகக் கட்டுக் கதையை நம்பியவர்கள்—அதை நம்பியபடி களியாட்டம் போடட்டும். ஆனுல் வாழ்க்கை இந்தக் கட்டுக் கதையை அழித்து விடுமானுல் அவர்கள் புகார் செய்யக் கூடாது.

வர்க்கப் போராட்டத்தின் பொருள் என்ன, அதிகார வர்க்கத்தார் ஏற்பாடு செய்த சீர்குலைவின் விளைவு என்ன என்பதைப் புரிந்து கொண்டவர்கள் நாம் சோஷலிசத்துக் குள் நேரடியாகப் பாய்ந்து விட முடியாது என்பதை அறி வார்கள். தமது ஆட்சியை மீட்டமைப்பதில் நம்பிக்கை கொண்ட தமது பணப் பைகளைப் பாதுகாத்து நிற்கிற பூர்ஷ்வா வகைப்பட்டோரும் முதலாளிகளும் இன்னும் இருக் கிருர்கள். போக்கிரிகளும், முதலாளித்துவத்தால் அறவே

மிதித்துத் துவைக்கப்பட்டோரும், பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் கருத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுமான ஊழல் பேர்வழிகளின் ஒரு பகுதியினரும் இன்னும் இருக்கின்றனர். அலுவலக ஊழியர்களும் சமுதாயத்தின் நலன்களுக்காகப் பழைய அமைப்பு முறையினைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதும் அதிகார வர்க்கத்தாரும் இன்னும் இருக்கின்றனர். இந்தப் பகுதிகள் முற்றுக வீழ்ச்சியுருத நிலையில், ருஷ்யன் மற்றும் ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கத்தை முழுமையாக அழித்தொழிக்காத வரையில் சோஷலிசம் வெற்றியடைந்து விடும் என்று எப்படி நினைக்க முடியும்? ரியாபுஷீன்ஸ்கிகள் தமது வர்க்க நலன்களைப் புரிந்து கொள்ளவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? வேலை செய்ய வேண்டாம் என்று நாசவேலைக்காரர்களிடம் சொல்லி அவர்களுக்குப் பணம் தருவது இவர்கள் தான். அல்லது அவர்கள் பிரிந்து நின்று செயல்படுகிருர்களா? ஈடு பத்திரங்களை வாங்குவதன் மூலம் அவர்கள் பிரெஞ்சு, பிரிட்டிஷ், அமெரிக்க முதலாளிகளுடன் சேர்ந்து செயல்படவில்லையா? இந்த வாணிக நடவடிக்கைகளில் இருந்து அவர்களுக்கு அதிக ஆதாயம் கிடைக்குமா இல்லையா என்பதை இனி மேல் தான் பார்க்க வேண்டும். குவியல் குவியலாக அவர்கள் இப்போது வாங்கித்தள்ளும் ஈடு பத்திரங்கள் காகிதக் கூளத்தின் வெறும் பயனற்ற குவியல்களாகி விடாதா?

இதனுல்தான் தோழர்களே, பயங்கரச் செயல், சர்வாதிகாரம், உள்நாட்டுப் போர் ஆகியவற்றைப் பயன்படுத்தி வருவதாக எம்மீது சுமத்தப்படும் வசைகள் குற்றச் சாட்டுகளுக்கு நாம் பதில் அளிக்கிறேம். நாம் அவர்களை விட பலமுடையவர்களாக இருப்பதால் நாம் மெய்யான பயங்கர முறைகளைக் கையாளவில்லை—நம்மிடம் சோவியத்துகள் உள்ளன, அவர்களைக் கீழடங்குமாறு கட்டாயப்படுத்த வேண்டும் என்றால் நாம் வங்கிகளைத் தேசவுடைமையாக்கி அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்தாலே போதும். உள்நாட்டுப் போரைத் தூண்டுவதாக சாட்டப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்கு நமது பதில்: ஆம், வேறு

எந்த அரசாங்கமும் பகிரங்கமாகப் பிரகடனம் செய்ய முடியாததை நாங்கள் பகிரங்கமாகப் பிரகடனம் செய்திருக்கிறோம். உள்நாட்டுப் போர் குறித்துப் பகிரங்கமாகப் பேச முடிந்த உலகிலேயே முதல் அரசாங்கம் தொழிலாளர், விவசாயிகள், படையாளிகளின் அரசாங்கமே. ஆம், சுரண்டலாளர்களை எதிர்த்து, ஓர் உள்நாட்டுப் போரைத் துவங்கி நடத்தி வருகிறோம். இதை நாங்கள் எவ்வளவு அதிகத் துலக்கமாகக் கூறுகிறோமோ அந்த அளவுக்கு அதிக விரைவாக இந்தப் போர் முடிவுக்கு வரும், அந்த அளவுக்கு விரைவாக எல்லா உழைப்பாளி மக்களும் சுரண்டப்படும் மக்களும் நம்மைப் புரிந்து கொள்வார்கள், சோவியத் ஆட்சி அதிகாரம் எல்லா உழைப்பாளி மக்களின் மெய்யான ஜீவாதாரமான லட்சியத்துக்குப் போராடி வருகிறது என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

தோழர்களே, இந்தப் போராட்டத்தில் நாம் விரைவில் வெற்றி அடைந்து விடுவோம் என்று நான் கருதவில்லை. ஆனால் நமது அனுபவம் மிகவும் செழுமையுறும்: இரண்டு மாதக் காலத்திற்குள் நாம் பெருமளவு சாதிக்க முடிந்துள்ளது. சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து கேரென்ஸ்கி தாக்குதல் தொடுக்க முயன்றதையும் அந்த முயற்சி முற்றாகத் தோல்வி அடைந்ததையும் நாம் அனுபவத்தில் கண்டோம். உக்ரேனிய கேரென்ஸ்கிகளின் ஆட்சி அதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்டதை அனுபவத்தில் கண்டோம். போராட்டம் அங்கே இன்னும் முடிவடையவில்லை. ஆனால் அதைக் கண்ணுற்ற எவரும், சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பிரதிநிதிகளிடம் இருந்து குறைந்தபட்சம் ஒரு சில மெய்யான அறிக்கைகளைக் கேள்விப்பட்ட எவரும் உக்ரேனிய ராடாவின் முதலாளித்துவ சக்திகளின் முடிவு நெருங்கி விட்டது என்பதைத் தெளிவாகக் காண முடியும். (கரவொலி.) உக்ரேனியன் முதலாளித்துவ ராடாவை எதிர்த்து உக்ரேனிய மக்கள் குடியரசின் சோவியத் ஆட்சி அதிகாரம் வெற்றியடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கலேதினை எதிர்த்த போராட்டத்தைப் பொருத்த வரை

—இதில் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிரான சமூக அடித்தளம் இருக்கிறதோ—இங்கு உண்மையில் எல்லாமே, உழைப்பாளி மக்கள் சுரண்டப்படும் அடிப்படையில், முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் அடிப்படையில் இருக்கிறது. கலேதினின் லட்சியம் கவைக்குதவாதது என்று விவசாயிகள் காங்கிரஸ் தெளிவாக நிதர்சனப்படுத்தி விட்டது. உழைப்பாளி மக்கள் அவருக்கு எதிராக இருக்கிருர்கள். சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அனுபவம், செயல்கள் மூலமான, சோவியத் அமைப்புகளின் உதாரணம் மூலமான பிரசாரம் பலன் அளிப்பதாக உள்ளன. தோன் பிராந்தியத்தில் இருக்கும் கலேதினின் பலக் கோட்டை வெளிப்புறத்தை விட உள்ளுக்குள் சரிந்து வீழ்ச்சியடைந்து வருகிறது.

இதனுல்தான் ருஷ்யாவில் உள்நாட்டுப் போர் முனையினைப் பார்க்கும் போதில் நாம் முழுமையான திட நம்பிக்கையுடன் கூற முடியும்: இங்கு சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வெற்றி முழுமையடைந்து விட்டது, அற முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. மேலும் தோழர்களே, சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வெற்றி சாதனையாவதற்குக் காரணம் துவக்கம் முதலே அது சோஷலிசத்தின் காலகாலமான அபிலாஷைகளுக்குச் செயலுருவம் தரத் தொடங்கியது. அதே போதில் மக்கள் திரள் மீது நிலையுறுதியாயும் வைராக்கியமாயும் சார்ந்து நின்றது. சமுதாயத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட மிதித்துத் துவைக்கப்பட்ட பகுதியினரைச் செயலூக்கமுள்ள வாழ்வை நோக்கி விழிப்பூட்டுவதும், அவர்களை சோஷலிஸ்டுப் படைப்பாற்றல் பணிக்கு உயர்த்துவதும் தனது கடமை என்று கருதியது. இதனுல்தான் தாவணச் சதுக்கப் படைப் பயிற்சி மற்றும் படையாளிகளைச் சித்திரவதை செய்யும் பழைய சேனை பழங்காலத்துக்குப் பின்வாங்கிச் சென்றது. அது குப்பைக் கூளத்தில் எறியப்பட்டது. அதில் மீதமாக எதுவும் இல்லை. (கரவொலி.) சேனையில் முழுமையான ஜனநாயகமயமாக்கல் நிறைவேற்றப்பட்டு விட்டது.

பின்னிஷ் ரயிலின் ஒரு பெட்டியில் நான் அமர்ந்திருந்த

போது நிகழ்ந்த ஒரு சம்பவத்தை விவரிக்கிறேன். சில பின்னிஷ் ஆட்களுக்கும் ஒரு கிழவிக்கும் இடையில் நடந்த உரையாடலைக் கேட்டேன். என்னுல் பின்னிஷ் மொழி பேச முடியாது எனவே உரையாடலில் கலந்து கொள்ள முடியவில்லை. அந்த பின்னிஷ் பேர்வழிகளில் ஒருவன் என்னைத் திரும்பிப் பார்த்தபடிச் சொன்னுன்: ''இந்தக்கிழவி சொன்ன விசித்திரமான விஷயம் உமக்குத் தெரியுமா? அவள் சொன்னுள்: 'இப்போது துப்பாக்கி வைத்திருக்கும் ஆளைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. நான் ஒரு நாள் காட்டில் இருந்த போது துப்பாக்கி வைத்திருக்கும் ஓர் ஆளைச் சந்தித்தேன். நான் பொறுக்கிச் சேர்த்த விறகுகளை அவன் பறித்துக் கொள்ளவில்லை. மாருக இன்னும் கொஞ்சம் சேர்த்துக் கொடுத்தான்'.''

இதை நான் கேள்விப்பட்டதும் எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன்: நூற்றுக் கணக்கான செய்திப் பத்திரிகைகளும்—சோஷலிஸ்டோ கிட்டத்தட்ட சோஷலிஸ்டோ அவர்கள் தம்மைத் தாமே எப்படி அழைத்துக் கொண்டாலும் சரி அது பற்றிக் காரியமில்லை—நூற்றுக் கணக்கான மிகவும் உரத்ததான குரல்களும் ''சர்வாதிகாரிகள்'', ''சீரழிப் போர்'' என்பது போன்ற சொற்கள் கொண்டு எம்மை நோக்கிக் கூச்சலிடட்டும். கவலையில்லை. மக்கள் மத்தியில் இருந்து இப்போது இன்னெரு குரல் எழுந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். அம்மக்கள் தமக்குத் தாமே சொல்லிக் கொள்கிருர்கள்: துப்பாக்கி வைத்திருக்கும் ஆளைக் கண்டு நாம் பயப்பட வேண்டுவதில்லை. காரணம் அவன் உழைப்பாளி மக்களைக் காத்து நிற்கிருன், சுரண்டலாளர் ஆட்சியை ஒடுக்குவதில் தாட்சணியமின்றி இருப்பான். (க ர வொ லி.) இதைத்தான் மக்கள் உணர்கின்றனர். இதனுல்தான் செங்காவலர்கள் எப்படித் தமது வலிமையை சுரண்டலாளர்களுக்கு எதிராகத் திருப்புகிருர்கள் என்பது பற்றி அந்த சமான்ய, படிப்பில்லாத மக்கள் விவரிக்கும் போது நடத்திவரும் பிரசாரம், அந்தப் பிரசாரம் வெல்லற்கரியதாக உள்ளது. இது லட்சோபலட்சம் கோடானு கோடி மக்கள் மத்தியில் பரவும். மேலும்

பத்தொன்பதாம் நூற்ருண்டில் பிரெஞ்சு கம்யூன் எதை உருவாக்கத் தொடங்கி—முதலாளித்துவ வர்க்கத்தால் அது தகர்க்கப்பட்டதால் மிகவும் சிறிய காலத்துக்கு மட்டுமே தொடர்ந்து வைத்திருக்க முடிந்ததோ—அந்த சோஷலிஸ்டு சேஞ்சேனையை அது உருவாக்கும். எல்லா சோஷலிஸ்டு களும் எப்போதும் இலக்காகக் கொண்டிருந்த மக்களைப் பொதுப்பட ஆயுதபாணிகளாக்கும் பணி நிறைவேற்றப் படும். ஆயுதமேந்திய போராட்டத்துக்கு உழைப்பாளி மக்களைப் பயிற்றுவிக்க இயலும் வகையில் இது புதிய செங்கா வலர் தொண்டர்களை உருவாக்கும்.

ருஷ்யாவிடம் அதிகாரிகள் இருக்க மாட்டார்கள், எனவே அதனுல் போராட இயலாது என்று ருஷ்யாவைப் பற்றி வழக்கமாகக் கூறுவதுண்டு. ஆனுல் கேரென்ஸ்கியையும் கலேதினையும் எதிர்த்து தொழிலாளர்கள் போராடியதைக் கண்ட இதே முதலாளித்துவ அதிகாரிகள் என்ன சொன்ஞர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அவர்கள் சொன்ஞர்கள்: ''செங்காவலர்களின் தொழில் நுணுக்கத் தரம் மிகவும் தாழ்ந்தது. ஆனுல் அவர்களுக்குச் சற்றே பயிற்சி தரப்படுமானுல் அவர்களிடம் வெல்லற்கரிய சேனை இருக்கும்''. இதற்குக் காரணம் உலகப் போராட்ட வரலாற்றிலேயே முதல் தடவையாக அதிகாரவர்க்க அறிவின் கருவி களல்லாத, மாருக சுரண்டப்படுவோரை விடுதலை செய்யும் போராட்டத்தின் கருத்துக்களால் வழி நடத்தப்படும் நபர்கள் சேனையில் சேர்ந்திருக்கிருர்கள். நாம் துவக்கியுள்ள பணி பூர்த்தி அடையும் போது ருஷ்யாவின் சோவியத் குடியரசு வெல்லற்கரியதாக விளங்கும். (கரவொலி.)

சோஷலிஸ்டு சேனை சம்பந்தப்பட்ட வரை சோவியத் ஆட்சி அதிகாரம் கடந்து சென்றுள்ள பாதை ஆளும் வர்க்கங்களின் இன்னொரு கருவியான மேலதிகமான நுண்ணயம் வாய்ந்த, மேலும் அதிகச் சிக்கலான ஒரு கருவியான முதலாளித்துவ நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வரையும் கூடக் கடந்து செல்லப்பட்டுள்ளது. இந்த முதலாளித்துவ நீதிமன்றம் ஒழுங்கைக் கட்டிக் காப்பதாக உரிமை பாராட்டியது. ஆனுல் உண்மையில் சுரண்டப்படும் மக்களைத் தாட்

சண்யமின்றி ஒடுக்கும் கண்மூடித்தனமான நுண்ணயமுள்ள கருவியேயாகும், பண மூட்டைகளின் நலன்களைப் பாதுகாக்கும் ஒரு கருவியேயாகும். எந்த வழியில் செயல்பட வேண்டும் என்று எல்லாப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளும் புலப்படுத்தியுள்ளனவோ அந்த வழியில் சோவியத் ஆட்சி அதிகாரம் செயல்பட்டது. அது பழைய நீதிமன்றத்தை உடனே ஒட்டை உடைசல் குவியல் மீது வீசியது. நாம் பழைய நீதிமன்றத்தைச் சீர்ப்படுத்தாமல் அதை உடனே ஒட்டை உடைசல் குவியல் மீது வீசிவிட்டோம் என்று அவர்கள் கூக்குரல் போடட்டும். அதன் மூலம் நாம் ஒரு மெய்யான மக்கள் நீதிமன்றத்துக்கான பாதை சமைத்தோம். அடக்கு முறைச் சட்டங்களின் வன்மையால் அல்ல, அதை விட அதிகமாக மாபெரும் உதாரணத்தால் உழைப்பாளி மக்களின் செல்வாக்கால் சடங்கு முறைகள் எதுவும் இன்றி இதைச் செய்தோம். நீதிமன்றத்தை ஒரு சுரண்டும் கருவி என்ற நிலையில் இருந்து கல்வி போதனையின் ஒரு கருவியாக சோஷலிஸ்டு சமூக அமைப்பின் உறுதியான அடித்தளங்களின் மீது, மாற்றி அமைத்தோம். அத்தகைய சமூக அமைப்பினை நாம் உடனே எய்தி விட முடியாது என்பதில் சந்தேகம் இல்லை.

உலகம் முழுதிலுமான மாபெரும் மக்கள் புரட்சிகளின் அனுபவம் சுட்டிக் காட்டிய பாதையில் சோவியத் ஆட்சி அதிகாரம் மேற்கொண்டுள்ள பிரதான நடவடிக்கைகள் இவையே. ஒரு புதிய ஆட்சி அதிகாரத்தை நிறுவும் பொருட்டு இந்தப் பாதை வழியே சில நடவடிக்கைகளை உழைப்பாளி மக்கள் எடுக்கத் துவங்காத புரட்சி ஒன்று கூடக் கிடையாது. துரதிருஷ்டவசமாக அவர்கள் இதைச் செய்யத் தொடங்க மட்டுமே செய்தார்கள், முடிக்க இயலவில்லை. புது மாதிரியிலான ஆட்சி அதிகாரத்தை அவர்களால் உருவாக்க இயலவில்லை. நாம் அதை உருவாக்கியுள்ளோம். நாம் ஏற்கெனவே சோவியத்துகளின் ஒரு சோஷலிஸ்டு குடியரசை நிறுவியுள்ளோம்.

சோஷலிசத்திற்கான மாறுதல் கட்டத்திற்குள் இப்போது மட்டுமே பிரவேசித்திருப்பது பற்றியோ, இன்னும்

சோஷலிசத்தை எட்டிவிடவில்லை என்பது பற்றியோ எனக்கு எவ்விதமான பிரமைகளும் இல்லை. ஆனால் நீங்கள் நமது அரசு சோவியத்துகளின் ஒரு சோஷலிஸ்டுக் குடியரசு என்று கூறுவீர்களானல் நீங்கள் சரியாகவே கூறியிருக்கிறீர்கள் எனலாம். பல மேலை முதலாளித்துவக் குடியரசுகளில் மிகவும் ஜனநாயகமானது எனப்படும் ஒன்று கூட முழுமையாக ஜனநாயகமானதாக இல்லை என்பதை எல்லோரும் அறிவர் இருந்த போதிலும் இந்த முதலாளித்துவக் குடியரசுகள் ஜனநாயகக் குடியரசுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவ்வாறு அழைப்பவர்களின் அளவுக்கு உங்கள் வரையறுப்பும் சரியானதே. அவை துண்டு துணுக்கான ஜனநாயகத்தை வழங்குகின்றன, சுரண்டலாளர்களின் உரிமைகளில் சின்னஞ்சிறு துண்டுகளை வெட்டுகின்றன, ஆனல் இந்நாடுகளில் உழைப்பாளி மக்கள் வேறு எங்கும் போலவே மிகவும் ஒடுக்கப்படுகிறார்கள். இருந்த போதிலும் நாம் முதலாளித்துவ அமைப்பு முறை பழைய முடியாட்சிகளாலும் அரசியல் சட்டக் குடியரசுகளாலும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதாகக் கூறுகிறோம்.

நமது விஷயத்திலும் அவ்வாறே. நாம் முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் கட்டத்தைக் கூட இன்னும் பூர்த்தி செய்யவில்லை. சர்வதேசப் பாட்டாளிகளின் உதவி இல்லாமல் அதைப் பூர்த்தி செய்துவிடலாம் என்ற நம்பிக்கையை நாம் என்றுமே நினைவில் பேணியதில்லை. இது சம்பந்தமான பிரமைகள் ஏதும் நமக்குக் கிடையாது. முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும் பாதை எவ்வளவு இடர்ப்பாடானது என்பதை நாம் அறிவோம். ஆனல் நமது சோவியத் குடியரசு ஒரு சோஷலிஸ்டுக் குடியரசு என்று கூற வேண்டுவது எமது கடமை, ஏனெனில் நாம் இந்தப் பாதையை மேற்கொண்டிருக்கிறோம், நமது சொற்கள் வெறும் சொற்களாகி விட மாட்டா.

முதலாளிகளின் ஆட்சியை அரித்தழிப்பதற்கான பல நடவடிக்கைகளை நாம் முன்வைத்துள்ளோம். நமது ஆட்சி அதிகாரம் நமது எல்லா நிறுவனங்களின் செயல்பாடுகளையும்

ஒரு தனிக் கோட்பாடு மூலம் ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்பதை நாம் அறிவோம். இந்தக் கோட்பாட்டைப் பின் வரும் சொற்களில் வெளியிடுகிறோம்: ''ருஷ்யா சோவியத்து களின் ஒரு சோஷலிஸ்டு குடியரசு என அறிவிக்கப்படு கிறது''. (கரவொலி.) இது நாம் என்ன செய்ய வேண்டுமோ எதை நாம் ஏற்கெனவே செய்யத் தொடங்கி விட்டோமோ அதைச் சார்ந்திருக்கும் அந்த உண்மை யாகும். இது நமது செயல்பாடுகளின் ஆகச் சிறந்த ஒருங் கிணைப்பாகும். நமது வேலைத்திட்டத்தின் பிரகடனமாகும். எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் சுரண்டப் படும் மக்களுக்கான வேண்டுகோளாகும். அவர்களுக்கு ஒன்று, சோஷலிசம் என்பது என்ன என்பது அறவே தெரி யாது, அல்லது அதை விட மோசமாக செர்னேவ்-த்ஸெ ரெத்தேலி முதலாளித்துவச் சீர்திருத்தக் கதம்பத்தினைச் சோஷலிசம் என்று நம்புகிறார்கள். இதை நாம் புரட்சியின் பத்துமாதத்தின் போது அனுபவித்துச் சோதனை செய்துள் ளோம். இது புரட்டே தவிர சோஷலிசம் அல்ல என்பதை உறுதியாக அறிந்துள்ளோம்.

இதனால் தான் ''சுதந்திர'' இங்கிலாந்தும் பிரான்சும் நமது புரட்சியின் பத்துமாதக் காலத்தில் தம் நாட்டுக்குள் போல்ஷிவிக்குகள் மற்றும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சி யாளர் செய்திப்பத்திரிகைகளின் ஒரு பிரதிகூடப் புக முடியாதபடித் தம்மால் இயன்றதனைத்தையும் செய்துள்ளன. ருஷ்யத் தொழிலாளர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை எல்லா நாடுகளிலும் இருக்கும் தொழிலாளரும் விவசாயி களும் இயல்பு உணர்வாலேயே புரிந்து கொள்கிறார்கள் என்பதைக் கண்டதால்தான் அவை இவ்வாறு செயல் பட வேண்டி இருந்தது. ருஷ்யப் புரட்சி பற்றிய செய் தியையும், சோவியத் ஆட்சி அதிகாரம் பற்றிய கோஷத் தையும் ஆரவாரமான கரவொலியுடன் ஆர்வத்தோடு வர வேற்காத கூட்டம் ஒன்று கூட இல்லை. எல்லா இடங்களி லும் உள்ள உழைக்கும் மக்களும் சுரண்டப்படும் மக்களும் தமது கட்சியின் தலைவர்களுடன் ஏற்கெனவே மோதத் தொடங்கி விட்டனர். இந்தத் தலைவர்களின் பழைய சோஷ

லிசம் ருஷ்யாவில் ச்ஹெயீத்ஸே, த்ஸெரெத்தேலி சோஷ லிசத்தைப் போன்று இன்னும் புதைக்கப்பட்டுவிடவில்லை, ஆனுல் அது உலகின் எல்லா நாடுகளிலும் ஏற்கெனவே சோர்ந்து விட்டது, ஏற்கெனவே மடிந்து விட்டது.

ஒரு புதிய அரசு—சோவியத்துகளின் குடியரசு, பழைய முதலாளித்துவத் தடை வேலிகளைத் தகர்த்து வரும் உழைக்கும் மக்கள் சுரண்டப்படும் மக்களின் குடியரசு—பழைய முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எதிராக நிற்கிறது. புதிய அரசு வடிவங்கள் படைத்துருவாக்கப்பட்டுள்ளன. இவை சுரண்டலாளர் ஒடுக்கப்படுவதையும், நேற்றைய பண மூட்டைகள் நேற்றைய அறிவுக் களஞ்சியம் காரணமாக இன்னும் வலுவுடன் இருக்கும் இந்த முக்கியத்துவமில்லாத சிலரது எதிர்ப்பை வென்று சமாளிப்பதையும் சாத்தியமாக்கியுள்ளன. அவர்கள்—பேராசிரியர்கள் ஆசிரியர்கள் பொறியியலாளர்கள்—தமது அறிவாற்றலால் முதலாளித்துவ வர்க்கத்துக்குச் சேவை செய்ய விரும்புவதாக விளம்பித் தமது அறிவாற்றலை உழைக்கும் மக்களைச் சுரண்டும் ஒரு கருவியாக மாற்றுகிருர்கள்—இல்லையேல் வேலை செய்ய மறுக்கிருர்கள். ஆனுல் அவர்களது ஆட்சி அதிகாரம் தொழிலாளர், விவசாயிகளின் புரட்சியால் தகர்க்கப்பட்டு விட்டது. அவர்களுக்கு எதிராக ஓர் அரசு உதித்தெழுந்து வருகிறது. இதில் மக்கள் தாமே சுதந்திரமாகத் தமது பிரதிநிதிகளைத் தேர்வு செய்து கொள்கின்றனர்.

எந்த ஓர் ஆட்சி அதிகாரத்தையும் எந்த ஓர் அரசையும் முழுமையாக ஒழிப்பதன் மாறுதல் கட்டத்தைத் தெளிவாகச் சுட்டிக் காட்டும் ஆட்சி அதிகாரத்தின் ஓர் அமைப்பு நம்மிடம் உண்மையாகவே இருக்கிறது என்று நாம் துல்லியமாயும் இன்றைய கட்டத்தில்தான் சொல்ல முடியும். இது, சுரண்டலின் எல்லாச் சுவடுகளும் ஒழிக்கப்படும் போது, அதாவது சோஷலிஸ்டு சமூகத்தில் சாத்தியமாகும்.

இப்போது நான் ருஷ்யாவின் சோஷலிஸ்டு சோவியத் அரசாங்கம் நிறைவேற்றத் தொடங்கியுள்ள நடவடிக்கைகள் பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன். ஏற்கப்பட்ட முதல் நடவடிக்கைகளில் ஒன்று வங்கிகளைத் தேசவுடைமை

யாக்குவதாகும். இதன் குறிக்கோள் ருஷ்யாவின் மண்ணில் இருந்து நிலப்பிரபுக்களைத் துடைத்தொழிப்பது மட்டும் அல்ல; அதோடு முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிப்பதும் மூலதனம் லட்சோப லட்சம் கோடானு கோடி உழைப்பாளி மக்களை ஒடுக்கும் சாத்தியக் கூறை அடியோடு ஒழிப்பதும் ஆகும். வங்கிகள் நவீன முதலாளித்துவப் பொருளாதாரத்தின் முக்கியமான மையங்களாகும். அவை நம்பற்கரிய செல்வத்தைத் திரட்டி இந்தப் பரந்த நாடு முழுவதும் வினியோகம் செய்கின்றன. அவை முதலாளித்துவ வாழ்க்கையின் செயல் ஆற்றல் மையமாகும். அவ்வை பல நூற்றுண்டுகள் கால்மாக வளர்ந்து வந்த நுண்ணயமான சிக்கலான நிறுவனங்களாகும். அவற்றை எதிர்த்தே சோவியத் ஆட்சியின் முதல் வீச்சடிகள் தொடுக்கப்பட்டன. சோவியத் ஆட்சி அரசு வங்கி விஷயத்தில் மூர்க்கமான எதிர்ப்பை முதலில் எதிரிட நேர்ந்தது. ஆனால் இந்த எதிர்ப்பு சோவியத் ஆட்சியைத் தடைப்படுத்தி விடவில்லை. பிரதானமான காரியத்தில், அரசு வங்கியை நிறுவுவதில் நாம் வெற்றி பெற்றோம். இந்தப் பிரதானமான சாதனம் தொழிலாளர், விவசாயிகள் கரங்களில் இருக்கிறது. இந்த அடிப்படை நடவடிக்கைகளுக்குப் பிறகு— இவற்றின் விவரங்கள் இன்னும் வகுக்கப்பட வேண்டும்— நாம் தனியார் வங்கிகள் மீது கைவைக்கத் தொடங்குவோம்.

சமரசவாதிகள் நம்மிடம் ஒருக்கால் எவ்வாறு பரிந்துரைத்திருப்பார்களோ அந்த வழியில் நாம் செயல் படவில்லை. அதாவது, முதலில் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது வரையில் காத்திருப்பது, பிறகு ஒருவேளை ஒரு மசோதாவை வரைந்து அரசியல் நிர்ணய சபையில் கொண்டு வருவது, அதன் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு நமது நோக்கங்களை அறிவிப்பது, அதன் மூலம் பிடிக்காத இந்த விவகாரத்தில் இருந்து தம்மைத் தாமே சிக்கறுத்துக் கொள்ள அவர்கள் ஓட்டைகளைக் கண்டு பிடிக்க உதவுவது, ஒருவேளை அவர்களையும் நமது கூட்டத்திற்குள் இழுத்து

பிறகு அரசுச் சட்டங்களைச் செய்வது அது ''அரசுச் சட்டமாக'' இருக்கும் என்பதே அவர்கள் வழி.

அவ்வாறு செய்வது சோஷலிசத்தை நிராகரிப்பதாகும். நாம் முற்றும் எளிய முறையில் செயல்பட்டோம். ''படித்த'' ஆட்களின் அல்லது தமது அறிவின் மீதமிச்சங்களில் வாணிபம் நடத்தும் முதலாளித்துவ வர்க்கத்தின் படியாத ஆதரவாளர்களின் கண்டனங்கள் எழுமே என்பது குறித்து அஞ்சாமல் நாம் செயல்பட்டோம். எம் செயலாட்சியில் ஆயுதமேந்திய தொழிலாளரும் விவசாயிகளும் இருக்கிறார்கள் என்று கூறினோம். இன்று காலை அவர்கள் எல்லாத் தனியார் வங்கிகளையும் கைப்பற்றி இருக்க வேண்டும். (கரவொலி.) அவர்கள் அதைச் செய்த பிறகு, ஆட்சி அதிகாரம் நமது கரங்களுக்கு வந்த பிற்பாடு, இதற்குப் பின்னால் மட்டுமே நாம் என்ன நடவடிக்கைகளைக் கைக் கொள்வது என்பது பற்றி விவாதிப்போம். காலையில் வங்கிகள் கைப்பற்றப்பட்டன. மாலையில் மத்திய நிர்வாகக் கமிட்டி ஓர் அரசாணை பிறப்பித்தது: ''வங்கிகள் தேசியச் சொத்து என்று சாற்றப்பட்டன''. அரசுக் கண்காணிப்பு, வங்கித் தொழில் சமூகமயமாக்கப்படுதல், அது சோவியத் ஆட்சியிடம் ஒப்படைக்கப்படுதல் நடைபெற்றது.

பல நூற்றாண்டுகள் இடையே முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முறையில் இருந்து தோன்றி வளர்ந்த வங்கித் தொழில் போன்ற சிக்கலான நுண்ணயமான ஒரு பொறியமைவு சில நாட்களில் தகர்க்கப்பட்டு விடும் அல்லது மாற்றப்பட்டு விடும் என்று எம் மத்தியில் எவருமே கற்பனை கூடச் செய்திருக்க முடியாது. அதை நாம் என்றுமே சொல்லவில்லை. ஆனால் விஞ்ஞானிகளும் போலி விஞ்ஞானிகளும் தம் தலைகளை அசைத்து ஆரூடம் சொன்ன போது நாம் கூறினோம்: நீங்கள் எதை வேண்டுமாயினும் ஆரூடம் கூறலாம். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான ஒரே ஒரு வழியை மட்டுமே நாங்கள் அறிவோம், அது என்னவென்றால், விரோதியின் போர் தளத்தைப் பிடித்துக் கொள்வது நமது தவறுகளில் இருந்து அனுபவத்தின் மூலம் ஆட்சி செய்யக் கற்றுக் கொள்வது என்பதே. நமது பாதையில்

இருக்கும் இடர்ப்பாடுகளை நாம் கிஞ்சிற்றும் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் பிரதான காரியத்தை நாம் செய்து விட்டோம். முதலாளித்துவச் செல்வத்தின் மூலாதாரம் அதன் வினியோக இடத்தில் அரித்தழிக்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு அரசுக் கடன்களை மறுத்துத் தள்ளுபடிச் செய்வதோ நிதி ஆதிக்கத் தளைகளை வீழ்த்துவதோ மிகவும் எளிதான செயலாகும். தொழிலாளர் கண்காணிப்புப் புகுத்தப்பட்டதற்குப் பின்னால், தொழிற்சாலைகளின் உடைமை பறிமுதலை நோக்கி மாறிச் செல்வதும் மிக எளிதே. தொழிலாளர் கண்காணிப்பினைப் புகுத்துவது மூலம் நாம் உற்பத்தியைத் தனித்தனித் துறைகளாகப் பிரித்து விட்டோம் என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்த முட்டாள் கதையை நாம் ஒதுக்கித் தள்ளினோம். தொழிலாளர் கண்காணிப்பைப் புகுத்துவது என்பது ருஷ்யா முழுவதிலும் பரவுவதற்கு மிகுந்த காலம் பிடிக்கும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். ஆனால் நாம் ஒரு பாதையை மட்டுமே அங்கீகரிக்கிறோம் என்பதைக் காட்ட விரும்பினோம். கீழ் மட்டத்தில் இருந்து மாறுதல்கள் என்பதே இந்தப் பாதை. தொழிலாளர்கள் தாமே கீழ் மட்டத்தில் இருந்து புதிய அடிப்படை பொருளாதாரக் கோட்பாடுகளை உருவாக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். இதற்கு அதிக காலம் தேவை.

தொழிலாளர் கண்காணிப்பில் இருந்து உயர் பொருளாதாரக் கவுன்சிலை உருவாக்குவதை நோக்கி நாம் கடந்து சென்றோம். வங்கிகளையும் ரயில்வேக்களையும் தேசவுடைமை யாக்குவதுடன் சேர்த்து—இது அடுத்த சில நாட்களுக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும்—இந்த நடவடிக்கை மட்டுமே ஒரு புதிய சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தைக் கட்டுவதற்கான வேலையை நாம் துவங்குவதை சாத்தியமாக்கும். இந்த வேலையில் நம்மை எதிரிடும் இடர்ப்பாடுகள் குறித்து நாம் மிகவும் நன்றாக அறிவோம். ஆனால் யார் உழைப்பாளி மக்களின் அனுபவம் மற்றும் இயல்பூக்கத்தைச் சார்ந்து நின்று இந்தப் பணியினை நிறைவேற்றப் பாடுபடுகிறார்களோ அவர்கள் மட்டுமே செயலில் சோஷலிஸ்டுகள் என்று நாம்

உறுதியாகக் கூறுகிறோம். மக்கள் பல தவறுகள் செய்வார்கள், ஆனல் பிரதான காரியம் செய்து முடிக்கப்பட்டு விட்டது. சோவியத் ஆட்சி அதிகாரத்திடம் வேண்டுகோள் விடுத்தால் சுரண்டலாளர்களை எதிர்த்து மனப் பூர்வமான ஆதரவு கிடைக்கும் என்பதை மக்கள் அறிவார்கள். அவர்களது வேலையை எளிதாக்கும் நோக்கமுள்ள எல்லா நடவடிக்கைகளுக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் முழுமையான ஆதரவு உண்டு. சோவியத் ஆட்சி அதிகாரத்தால் எல்லாவற்றையும் தெரிந்திருக்க முடியாது, எல்லாவற்றையும் காலா காலத்தில் சமாளித்திருக்க முடியாது. மிக அடிக்கடி அது இடர்ப்பாடான பணிகளை எதிரிட நேர்கிறது. மிக அடிக்கடி தொழிலாளர், விவசாயிகள் தூதுக்குழுவினர் அரசாங்கத்திடம் வந்து உதாரணமாக இன்னின்ன துண்டு நிலங்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்பது போன்ற கேள்விகளைக் கேட்கின்றனர். அவர்களிடம் திட்ட வட்டமான கருத்துக்கள் எதுவும் இல்லை என்பதைக் கண்டு நானே பல தடவை சங்கடத்திற்கு உள்ளானேன். நீங்கள்தான் ஆட்சி அதிகாரம்; நீங்கள் செய்ய விரும்புவதை எல்லாம் செய்யுங்கள்; நீங்கள் விரும்பியதை எடுத்துக் கொள்ளுங்கள்; நாங்கள் உங்களைக் கட்டாயம் ஆதரிப்போம்; ஆனல் உற்பத்தியைக் கவனித்துக் கொள்ளுங்கள், உற்பத்தி பயன் உடையதாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று நான் அவர்களிடம் கூறினேன். பயனுள்ள வேலையை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தவறுகள் செய்வீர்கள், ஆனல் அனுபவத்தால் அறிந்து கொள்வீர்கள். தொழிலாளர்கள் ஏற்கெனவே அனுபவத்தால் அறிந்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் ஏற்கெனவே சீர்குலைவு புரிவோரை எதிர்த்துப் போராடத் தொடங்கி விட்டார்கள். தொழிலாளி மக்களின் முன்னேற்றத்தைத் தடங்கல் செய்யும் தடை வேலியாக மாற்றப்பட்டு விட்டது கல்வி போதனை. அது தகர்த்துத் தள்ளப்படும்.

போர், பின்னணியிலும் முனையிலும் இருப்பவர்களை ஒருங்கே ஊழல்படுத்தி வருகிறது என்பதில் சந்தேகமில்லை. போர் சப்ளைகள் துறையில் வேலை செய்வோருக்குச் சாமான்ய

விகிதத்திற்கும் அதிகமான ஊதியம் தரப்படுகிறது. இது போரில் சேராமல் ஒளிந்து கொண்டிருக்கும் எல்லோரையும், கிடைத்ததைச் ''சுருட்டிக்'' கொண்டு வெளியேறும் ஒரே விருப்பத்தில் ஊறிக்கிடக்கும் தெருச்சுற்றிக் கயவாளிகளையும் அரைக் கயவாளிகளையும் கவர்வதாக உள்ளது. இந்தத் தெருச்சுற்றிக் கயவாளிகளும் அரைக் கயவாளிகளும் பழைய முதலாளித்துவ அமைப்பு முறையின் மீதமாக இருக்கும் படுமோசமான பகுதிகள், பழைய தீமைகள் அனைத்தின் கருவிகளாவர். இந்த நபர்களை நாம் உதைத்து விரட்ட வேண்டும், அகற்ற வேண்டும். தொழிற்சாலைகளில் மிகவும் சிறந்த எல்லாப் பாட்டாளி வர்க்கத்தினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும், அவர்களை எதிர்கால சோஷலிஸ்டு ருஷ்யாவின் கருவாக உருவாக்க வேண்டும். இது எளிதான பணி அல்ல, இது பல சச்சரவுகளுக்கு இடமளிக்கும், மிகவும் அதிகமான உராய்வுகளையும் மோதல்களையும் உண்டாக்கும். மக்கள் கமிசார்களின் கவுன்சிலைச் சேர்ந்த நாமும் சொந்த முறையில் நானும் அவர்களிடமிருந்து புகார்களையும் அச்சுறுத்தல்களையும் கேட்டிருக்கிறோம். ஆனால் நாம் மனுச் செய்து கொள்வதற்கான ஒரு நீதிபதி இருக்கிறார் என்பதை அறிந்து நாம் அமைதியாகவே இருக்கிறோம். அந்த நீதிபதி தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஆகும். (கரவொலி.) இந்த நீதிபதியின் முடிவு மறுக்கவொண்ணாதது, நாம் அதை எப்போதும் சார்ந்து நிற்போம்.

முதலாளித்துவ வர்க்கத்தைச் சுற்றி தொழிலாளி வர்க்கத்தின் உயர் பிரிவைச் சேர்ந்த அற்பமான சிலரைத் திரட்டிக் கொள்ளும் பொருட்டு, முதலாளித்துவம் திட்டமிட்டே தொழிலாளர்களைப் பாகுபாடு செய்கிறது. இந்தப் பிரிவுடன் மோதல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. போராட்டம் இன்றி நாம் சோஷலிசத்தைச் சாதனையாக்க முடியாது. நாம் போராடத் தயாராக இருக்கிறோம், அதை நாம் துவங்கி விட்டோம், சோவியத்துகள் எனும் பொறியமைவின் துணையுடன் அதை நடத்தி முடிப்போம். தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்

தின் முன் நாம் கொண்டு வரும் எந்த ஒரு பிரச்சினேக்கும் எளிதில் தீர்வு காண வல்லது. ஏனெனில் தனிச் சலுகை பெற்ற தொழிலாளர் குழு எவ்வளவு பலமானதாக இருந்த போதிலும், அனைத்துத் தொழிலாளரின் பிரதிநிதித்துவ அமைப்பின் முன் அவர்கள் கொண்டு வரப்படும் போது, இந்த நீதிமன்றத்துக்கு அவர்கள் எதிர்ப்புக் காட்ட முடியாது என்று மீண்டும் கூறுகிறேன். இந்த வகையான ஏற்பாடு இப்போதுதான் துவங்கியுள்ளது. தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் தமது சொந்த வலிமையில் இன்னும் போதுமான நம்பிக்கை ஏற்படவில்லே. காலகாலமாக இருந்த மரபு அவர்கள் மேலே இருந்து உத்தரவை நோக்கிக் காத்திருப்பதைப் பெருமளவு வழக்கமாக்கி விட்டது. பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாக இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் இன்னும் முழுமையாக உணர்ந்து மதிப்பிடவில்லே. அவர்கள் மத்தியில் பீதியுறும், மிதித்துத் துவைக்கப்பட்ட நபர்கள் இருக்கிருர்கள். அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் வெறுக்கத்தக்க நடைமுறைப் பாணியினேக் கடந்து செல்ல வேண்டும் என்று நினேக்கிருர்கள். முதலாளித்துவத் தப்பெண்ணங்களில் மிகவும் வெறுக்கத்தக்கதான இது மற்ற எல்லாவற்றை விடவும் நீண்ட காலம் வாழ்ந்து வந்துள்ளது. ஆனல் இது அழிந்து வருகிறது, முற்ருக அழிந்து போகும். சோவியத் ஆட்சி அதிகாரம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையுடனும் கூடவே, சாமான்யத் தொழிலாளியும் விவசாயியும் அரசை நிர்வாகம் செய்ய முடியாது என்ற பழைய முதலாளித்துவத் தப்பெண்ணத்தை முழுமையாக உதறித் தள்ளும் மக்களின் எண்ணிக்கை இடையருது அதிகரிக்கும் என்பதை நாங்கள் மெய்யாக உணர்கிருேம். அதைச் செய்ய சாமான்ய மக்கள் ஒருங்குவார்களானுல் அவர்களால் செய்ய முடியும், அனுபவமும் பெற முடியும்! (**கரவொலி.**)

மக்கள் மத்தியில் இருந்து தலேவர்களேயும் அமைப்பாளர்களேயும் தேர்வு செய்வது எமது ஸ்தாபனம் சம்பந்தமான பணியாகும். இப்போது இந்தப் பேரளவான பிரம்மாண்டமான வேலே நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்று விட்டது. சோவியத் ஆட்சி அதிகாரம் இருந்திராவிடில் இதை நிறை

வேற்றுவது குறித்து சிந்தனை கூடச் செய்திருக்க முடியாது. சோவியத் ஆட்சி அதிகாரம் மக்களை உயர்த்தி மேம்படுத்தும் ஒரு வடிகட்டும் பொறியமைவு ஆகும்.

நம் வசம் கண்காணிப்பு சம்பந்தமான ஓர் அரசுச் சட்டம் இருக்கிறது. இது மட்டுமன்றி, இதை விட மதிப்புடைய வேறு சிலவும் உள்ளன. தொழில்களின் முழுக்கிளைகள் மீதும் தொழிலாளர் நிர்வாகத்தை உத்தரவாதம் செய்யும் பொருட்டு முதலாளிகளின் சங்கங்களுடன் பாட்டாளிகளின் சார்பில் உடன்பாடுகள் ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளே இவை. அத்தகைய உடன்பாடு தோல் தொழிலாளர்களுக்கும் தோல் பண்ட முதலாளிகளின் அகில ருஷ்ய சங்கத்துக்கும் இடையே வரையப் பெற்றுக் கிட்டத்தட்டப் பூர்த்தியாகி விட்டது. இந்த உடன்பாடுகளுக்கு நான் தனி முக்கியத்துவம் அளிக்கிறேன்.[49] தொழிலாளர்கள் தமது வலிமையைப் பற்றி உணர்ந்து வருவதை அவை காட்டுகின்றன.

தோழர்களே, எனது அறிக்கையில் குறிப்பாயும் வேதனை தரும் இடர்ப்பாடான பிரச்சினைகளான சமாதானம் உணவு வழங்கீடு ஆகியன பற்றி நான் விளக்கவில்லை. காரணம் அவை நிகழ்ச்சி நிரலில் இருக்கும் விசேஷ இனங்கள் ஆகும். அவை தனிப்பட விவாதிக்கப்படும்.

இந்தச் சுருக்கமான அறிக்கையைச் செய்வதன் மூலம், கடந்த இரண்டரை மாத காலமாக நாம் பெற்ற அனுபவம் என்ன, ருஷ்யப் புரட்சியின் இந்தப் புதிய கட்டத்தில் வர்க்க சக்திகளின் உறவு எவ்வாறு உருவாகியது, ஒரு புதிய அரசு அதிகாரம் எவ்வாறு நிறுவப்பட்டது, அதன் முன் எதிரிடும் சமூகப் பணிகள் என்ன என்பதன் வரலாறு முழுவதும் எனக்கும் மக்கள் கமிசார்களின் கவுன்சில் பூராவுக்கும் எவ்வாறு தோற்றமளிக்கிறது என்பதைக் காட்டுவதே எனது நோக்கமாகும்.

வங்கிகளைத் தேசவுடைமையாக்கியது மூலமும் நிலம் முழுவதையும் முற்றுக உழைக்கும் மக்களுக்கு உடைமை மாற்றி வழங்கியது மூலமும் ருஷ்யா சோஷலிசத்தைச் சாதனையாக்கத் தொடங்கி விட்டது. மேலும் நம் முன் காணக்

கிடக்கும் இடர்ப்பாடுகள் குறித்து நாம் நன்ருக அறிவோம். ஆனல் நமது புரட்சியை முந்திய புரட்சிகளுடன் ஒப்பு நோக்கும் போது, நாம் பேரளவான வெற்றிகளைச் சாதிப் போம் என்பதையும், பூரண வெற்றியை உத்தரவாதம் செய்யும் பாதையில் நாம் செல்கிருேம் என்பதையும் நாம் மெய்யாகவே உணர்கிருேம்.

மேலும் முன்னேறிய நாடுகளின் மக்கள் திரள் நம்மைப் பின்பற்றும். இந்த நாடுகள் ஒரு கொள்ளைக்காரப் போரால் பிளவுற்றுள்ளன. இந்நாடுகளின் தொழிலாளர்கள் ஜனநாயகத்தில் மேலும் நீண்ட காலத்திற்குப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிருர்கள். நமது பணியின் இடர்ப்பாடுகளைச் சிலர் சித்திரிக்கும் போது, உலகளவில் மட்டுமே சோஷலிசத்தின் வெற்றி சாத்தியம் என்று நம்மிடம் கூறப்படும் போது இது முதலாளித்துவ வர்க்கமும் அதன் விருப்பமுள்ள அல்லது விருப்பில்லா ஆதரவாளர்களும் ஒரு மறுக்க முடியாத உண்மையினைப் புரட்டச் செய்யும் ஒரு முயற்சி மட்டுமே குறிப்பாயும் ஒரு கவைக்குதவாத முயற்சியே என்று நாம் கருதுகிருேம். தனி ஒரு நாட்டில் சோஷலிசத்தின் இறுதி வெற்றி சாத்தியமல்ல என்பது மெய்யே. சோவியத் ஆட்சி அதிகாரத்தை ஆதரித்து நிற்கும் நமது தொழிலாளர் விவசாயிகளின் படைப் பிரிவு, மாபெரும் உலக சேனையின் படைப் பிரிவுகளில் ஒன்று. அச்சேனை இப்போது உலகப் போரினல் பிளவுண்டுள்ளது. ஆனல் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வருகிறது. நமது புரட்சி குறித்த ஒவ்வொரு துண்டுத் தகவலும், ஒவ்வொரு துளிச் செய்தியும், ஒவ்வொரு பெயரும் பாட்டாளி வர்க்கத்தால் உரத்த பரிவு மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வரவேற்கப்படுகின்றன. காரணம் ருஷ்யாவில் பொது லட்சியம் கடைப்பிடிக்கப்படுகிறது, இது பாட்டாளி வர்க்க எழுச்சியின் சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியின் லட்சியம் என்பதைப் பாட்டாளி வர்க்கம் அறிந்திருக்கிறது. உயிர்ப்புள்ள ஓர் உதாரணம், ஒரு நாட்டில் எங்கேனும் ஒரு வேலையைச் செய்து முடிப்பது எந்த விதமான பிரகடனங்கள் மாநாடுகளை விடவும் பயனுறுதியுடையது;

இதுவே எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்களுக்கு உத்வேகம் அளிக்கிறது.

1905 அக்டோபர் வேலைநிறுத்தம்[50]—வெற்றிகரமான புரட்சியின் முதல் நடவடிக்கை—உடனடியாக மேற்கு ஐரோப்பாவுக்குப் பரவியது. பிறகு *1905*ல் ஆஸ்திரியத் தொழிலாளர்களின் இயக்கத்தை வெளிக் கொணர்ந்தது. ஏற்கெனவே அந்தச் சமயத்தில், புரட்சியின் ஒரு நாட்டுத் தொழிலாளிகளின் போராட்டத்தின் உதாரணத்தின் மதிப்புக் குறித்த நடைமுறை எடுத்துக் காட்டு நமக்குக் கிட்டியது. இன்றோ, ஒவ்வொரு மணியும் உலகின் எல்லா நாடுகளிலும் சோஷலிஸ்டுப் புரட்சி முதிர்ச்சியடைந்து வருவதை நாம் காண்கிறோம்.

நாம் பிழைகளையும் கண்மூடித்தனமான பிசகுகளையும் செய்வதோ அல்லது நமது பாதையில் தடைகளை எதிரிடுவதோ அவர்களுக்கு முக்கியமல்ல. அவர்களுக்கு முக்கியமாக இருப்பது நமது உதாரணம். அதுவே அவர்களை ஒற்றுமைப்படுத்துகிறது. அவர்கள் சொல்கிறார்கள்: எதுவரினும் சரி நாம் ஒன்று சேர்ந்து செல்வோம், முயன்று வெற்றி கொள்வோம். (கரவொலி.)

சோஷலிசத்தின் மாபெரும் மூலவர்களான மார்க்சும் எங்கெல்சும் பல்லாண்டு காலம் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியையும் உலக சோஷலிஸ்டுப் புரட்சியின் ஆக்கத்தையும் உன்னிப்பாகக் கவனித்தார்கள். முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதில் நீடித்த பிரசவ வேதனை இருக்கிறது என்பதைத் தெளிவாகக் கண்டார்கள். இதற்கு நீண்ட காலத்திய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியம், கடந்த காலத்துக்கு உரியதான அனைத்தும் தகர்க்கப்பட வேண்டுவது அவசியம், முதலாளித்துவத்தின் எல்லா வடிவங்களும் தாட்சண்யமின்றி அழிக்கப்படுவதும் அவசியம், அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் அவசியம், அவர்கள் பூரண வெற்றியை உறுதிப்படுத்தத் தமது முயற்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதையும் அவர்கள் கண்டார்கள். அவர்கள் சொன்னார்கள்: பத்தொன்பதாம் நூற்றாண்டின்

கடைசியில் ''பிரெஞ்சுக்காரர் இதைத் துவங்குவார், ஜெர் மானியர் முடித்து வைப்பார்''.[51] பிரெஞ்சுக்காரர் துவங்கக் காரணம் புரட்சியின் பல்லாண்டு காலப் போக்கில் அவர் புரட்சிகரப் போராட்டத்தில் அந்தத் தீரமிக்க முன்முயற் சியைப் பெற்றுள்ளார். இது அவரை சோஷலிஸ்டுப் புரட்சி யின் முன்னணிப் படையாளி ஆக்கி விட்டது.

இன்று நாம் சர்வதேச சோஷலிஸ்டு சக்திகளின் வேறு ஓர் இணைப்பினைக் காண்கிறோம். எளிதில் கொள்ளையடிக் கும் வாய்ப்புகள் கொண்டதும், தனது தொழிலாளரின் உயர் பிரிவினருக்கு லஞ்சம் தரக் கூடியதுமான சுரண்டும் நாடு கள் இடையில் இல்லாத நாடுகளில் இயக்கம் துவங்குவது எளிது என்று நாம் கூறுகிறோம். போலி சோஷலிஸ்டு, கிட்டத் தட்ட அமைச்சு சார்ந்த, செர்னேவ்-த்ஸெரெத்தேலி பாணி மேலை ஐரோப்பியக் கட்சிகள் எதையும் நிறைவேற்ற வில்லை, அவற்றுக்கு உறுதியான அடித்தளம் கிடையாது. இத்தாலியின் உதாரணத்தை நாம் கண்டோம்; கடந்த சில நாட்களின் போது கொள்ளைக்கார ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்த ஆஸ்திரியத் தொழிலாளர்களின் வீரஞ் செறிந்த போராட்டத்தை நேரில் கண்டோம்.[52] கொள்ளைக்காரர் கள் இயக்கத்தைச் சிறிது காலம் தவக்கப்படுத்துவதில் வெற்றியடையலாம். ஆனல் அதை அவர்கள் முற்ருகத் தடுத்து நிறுத்தி விட முடியாது. அது வெல்லற்கரியது.

சோவியத் குடியரசின் உதாரணம் நீண்ட காலத்துக்கு அவர்கள் முன் நிற்கும். நமது சோவியத்துகளின் சோஷ லிஸ்டுக் குடியரசு சர்வதேச சோஷலிசத்தின் ஓர் ஒளிச் சுடராக எல்லா உழைக்கும் மக்களுக்கும் ஓர் உதாரணமாக உறுதியுடன் நிற்கும். அங்கே—மோதல், போர், இரத்தம் சிந்தல், லட்சோபலட்சம் மக்களின் உயிர்ப்பலி, முத லாளித்துவச் சுரண்டல்; இங்கே—மெய்யான சமாதானக் கொள்கை, சோவியத்துகளின் ஒரு சோஷலிஸ்டுக் குடியரசு.

மார்க்சும் எங்கெல்சும் எதிர்பார்த்ததில் இருந்து வேறு வகையாகக் காரியங்கள் நிகழ்ந்து விட்டன. சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியின் முன்னணிப்படையாக விளங்கும் பெருமை ருஷ்யாவின் உழைக்கும் மக்களுக்கு சுரண்டப்

படும் மக்களுக்குக் கிடைத்துள்ளது. புரட்சியின் வளர்ச்சிப் போக்கு எது வரைக்கும் செல்லும் என்பதை நாம் இப்போது தெளிவாகக் காண முடியும். ருஷ்யர் இதைத் துவங்கினர். ஜெர்மானியரும், பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும் இதை முடித்து வைப்பர். சோஷலிசம் வெற்றிவாகை சூடும்! (கரவொலி.)

இஸ்வேஸ்தியா, இதழ்கள் *8,9,10*ல்
1918, ஜனவரி *12, 13, 14*
தேதிகளில்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி *35*,
பக்கங்கள் *259-279*

ஜெர்மன் ரைக் அரசாங்கத்துக்கு நகல் கம்பியில்லாச் செய்தி[53]

ருஷ்யன் சோஷலிஸ்டுக் குடியரசு போர் நிலைமை முடிந்து விட்டதாகச் சாற்றி எல்லா போர் முனைகளிலும் தனது சேனையைக் கலைக்கத் தொடங்கி விட்டது. இந்த நிலையில் ஜெர்மன் அரசாங்கம் ருஷ்யன் சோவியத் குடியரசுக்கு எதிராகத் துருப்புக்களை முஸ்தீப்புச் செய்வதை ஒட்டி மக்கள் கமிசார்களின் கவுன்சில் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. ருஷ்யாவின் தொழிலாளர், விவசாயிகளின் அரசாங்கம் இத்தகைய நடவடிக்கையை எதிர்நோக்கி இருக்க முடியாது. காரணம் போர்நிறுத்தம் செய்த தரப்புகளில் எதுவும் பிப்ரவரி *10*ந் தேதியோ அல்லது வேறு எந்த நேரத்திலோ போர்நிறுத்தம் முடிந்து விட்டதாக நேரடியாகவோ மறைமுகமாகவோ எத்தகைய அறிவிப்பையும் செய்யவில்லை. *1917* டிசம்பர் *2 (15)* உடன்படிக்கைப்படி இரு தரப்பும் அவ்வாறு செய்வதாக ஒப்புக் கொண்டிருந்தன.

எழுந்துள்ள இந்த நிலைமையில், பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் ஜெர்மன் அரசாங்கம் கோரிய நிபந்தனைகளின் மேல் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான தனது தயார் நிலையை சகஜமாக அறிவிக்கும் கட்டாயத்தில் இருப்பதை மக்கள் கமிசார்களின் கவுன்சில் தன்னைத் தானே உணர்கிறது.

அதே சமயம் மக்கள் கமிசார்களின் கவுன்சில், ஜெர்மன் அரசாங்கம் அதன் சமாதான நிபந்தனைகளை முறைப்படுத்தி முன்வைக்கும் பட்சத்தில், இந்த நிபந்தனைகள் ஒப்புக் கொள்ளக் கூடியனவா இல்லையா என்பது பற்றி 12

மணி நேரத்துக்குள் மறு மொழிதரத் தயாராக இருப்பதாயும் தெரிவிக்கிறது.

1918, பிப்ரவரி 18ந் தேதி, இரவில் எழுதப்பட்டது

செய்தி வெளியிடப்பட்டது 1918, பிப்ரவரி 19 (6), பிராவ்தா, இதழ் 30, (மாலைப்பதிப்பு)

நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 339

சோஷலிஸ்டு தாயகம் ஆபத்தில் இருக்கிறது![54]

போரின் புதிய கடுஞ் சோதனைகளில் இருந்து இந்த வளமும் வலியும் இழந்த பாழ்பட்ட நாட்டைக் காக்கும் பொருட்டு, நாம் மிகப் பெரிய தியாகம் செய்ய முடிவு செய்து ஜெர்மானியரிடம் அவர்களது சமாதான நிபந்தனைகளில் கையெழுத்திடத் தயார் என்று அறிவித்தோம். எமது போர் நிறுத்த தூதர்கள் ரெஷிட்ஸாவில் இருந்து ட்வின்ஸ்குக்கு பிப்ரவரி 20 (7)ந் தேதி புறப்பட்டு விட்டனர். இன்னும் பதில் வரவில்லை. ஜெர்மன் அரசாங்கம் அவசரமாகப் பதில் அனுப்ப விரும்பவில்லை என்பது தெளிவு. அது சமாதானம் ஏற்படுவதை விரும்பவில்லை என்று தோன்றுகிறது. எல்லா நாடுகளின் முதலாளிகளும் அதனிடம் ஒப்படைத்துள்ள பணியினை நிறைவேற்று முகமாக ஜெர்மன் ராணுவவாதம் ருஷ்ய உக்ரேனிய தொழிலாளர் விவசாயிகளை நெரித்து வதைக்கவும் நிலங்களை நிலப்பிரபுக்களுக்கும் ஆலைகள் தொழிற்சாலைகளை வங்கி அதிபர்களுக்கும் ஆட்சி அதிகாரத்தை முடியாட்சிக்குத் திருப்பித்தரவும் விரும்புகிறது. ஜெர்மன் ஜெனரல்கள் பெத்ரோகிராதிலும் கீவிலும் தமது ''அமைப்பை'' நிறுவ விரும்புகிறார்கள். சோவியத்துகளின் சோஷலிஸ்டுக் குடியரசு மிகவும் பேரிடரான அபாயத்தில் இருக்கிறது. ஜெர்மனியின் பாட்டாளிகள் எழுச்சியுற்று வெற்றியடையும் வரையில், முதலாளித்துவ-ஏகாதிபத்திய ஜெர்மனியின் படைகளை எதிர்த்து சோவியத்துகளின் குடியரசினை, அர்ப்பணிப்பு உணர்வுடன் பாதுகாப்பது ருஷ்யாவின் தொழிலாளர் விவசாயிகளின் புனிதமான

கடமையாகும். மக்கள் கமிசார்களின் கவுன்சில் தீர்மானிப்ப தாவது: *1*) நாட்டின் அனைத்து மனிதசக்தியும் ஆதாரவளங் களும் புரட்சிகரப் பாதுகாப்பின் சேவைக்கென முற்றிலும் ஒதுக்கப்படுகிறது. 2) எல்லா சோவியத் மற்றும் புரட்சிகர அமைப்புகள் ஒவ்வொரு இடத்தையும் கடைசித்துளி இரத் தம் வரை பாதுகாத்து நிற்கும்படி உத்தரவிடப்படு கின்றன. *3*) ரயில்வே நிறுவனங்களும் அவற்றோடு தொடர் புடைய சோவியத்துகளும் விரோதி போக்குவரத்து அமைப் பினைப் பயன்படுத்திக் கொள்ள முடியாதபடித் தடுக்க உச்ச பட்சம் முயல வேண்டும்; பின்வாங்க நேருமானால் ரயில்வே பாதைகளை அழித்து ரயில்வே கட்டிடங்களை வெடி வைத்துத் தகர்த்துவிட வேண்டும் அல்லது எரித்து விட வேண்டும்; பொறி-வண்டித் தொகுதிகள் பெட்டிகள் எஞ்சின்கள் யாவும் உடனே கீழ்த்திசைக்கு நாட்டின் உட் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். *4*) எதிரியின் கரங் களில் சிக்கிடும் அபாயத்தில் உள்ள பொதுவான எல்லா தானிய, உணவு இருப்புக்களும் விலைமதிப்புள்ள சொத்துக் களும் நிபந்தனை இன்றி அழிக்கப்பட வேண்டும்; இவை செயல் படுத்தப் படுவதைக் கண்காணிக்கும் கடமை வட் டார சோவியத்துகள் அவற்றின் தலைவர்களின் சொந்தப் பொறுப்பாகும். *5*) பெத்ரோகிராத், கீவ், இதர நகரங் கள், சிறு நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்கள் ஆகிய புதிய போர்முனைப் பாதையில் இருக்கும் அனைத்திலும் உள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் ராணுவ நிபுணர் களின் நெறியாக்கத்தின் கீழ் பதுங்கு குழிகள் வெட்டு வதற்குப் பட்டாலியன்களைத் திரட்ட வேண்டும். 6) இந்த பட்டாலியன்களில் முதலாளித்துவ வர்க்கத்தின் உடல் வலு வுள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஆடவர் மகளிர் செங் காவலர்களின் மேற்பார்வையில் உட்படுத்தப்படுவர்; எதிர்ப் போர் சுடப்படுவர். *7*) புரட்சிகரப் பாதுகாப்பு லட்சி யத்தை எதிர்க்கும் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தை ஆதரிக்கும் வெளியீடுகளும், ஏகாதிபத்தியப் படைகளின் படையெடுப்பைச் சாதகமாக எடுத்துக் கொண்டு சோவியத் ஆட்சியை வீழ்த்த முயலும் வெளியீடுகளும் ஒடுக்கப்பட

வேண்டும்; இத்தகைய வெளியீடுகளின் உடல் வலுவுள்ள ஆசிரியர்கள் சிப்பந்திகள் பதுங்கு குழிகள் வெட்டவும் வேறு பாதுகாப்பு வேலை செய்யவும் திரட்டப்பட வேண்டும்.

8) விரோதியின் கையாட்கள், கொள்ளை லாபக்காரர்கள், கொள்ளைக்காரர்கள், போக்கிரிகள், எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சியாளர்கள், ஜெர்மன் ஒற்றர்கள் அந்த இடத்திலேயே சுடப்பட வேண்டும்.

சோஷலிஸ்டு தாயகம் ஆபத்தில் இருக்கிறது! சோஷலிஸ்டு தாயகம் நீடூழி வாழ்க! சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சி நீடூழி வாழ்க!

மக்கள் கமிசார்களின் கவுன்சில்

பிப்ரவரி 21, 1918,
பெத்ரோகிராத்

பிராவ்தா, இதழ் *32*,
இஸ்வேஸ்தியா, இதழ் *31*,
பிப்ரவரி 22 (9) 1918

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 357-358

தனியான, பிரதேசக் கைப்பற்றல் தன்மை கொண்ட சமாதானப் பிரச்சினை மீது ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி மேற்கொண்ட நிலை

அன்புள்ள தோழர்களே!

ஜெர்மன் அரசாங்கம் பிரேரேபித்த சமாதான நிபந்தனைகளுக்கு உடன்பட மத்தியக் கமிட்டியை நிர்ப்பந்தித்த காரணங்கள் குறித்து உங்களுக்கு ஒரு விளக்கம் சமர்ப்பிப்பது இன்றியமையாதது என்று மத்தியக் கமிட்டியின் ஒழுங்கமைப்புக் குழு கருதுகிறது. தோழர்களே! மாநாடுகளுக்கு இடையில் கட்சி முழுவதையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மத்தியக் கமிட்டியின் கருத்து குறித்துக் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் சாங்கோபாங்கமாக அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே ஒழுங்கமைப்புக் குழு இந்த விளக்கத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கிறது. சமாதான உடன்பாட்டின் நிபந்தனைகளில் கையொப்பமிடுவது சம்பந்தமாக மத்தியக் கமிட்டி ஒருமுகப்பட்ட கருத்து கொண்டிருக்கவில்லை என்பதை அறிவிப்பது அவசியம் என்று ஒழுங்கமைப்புக் குழு கருதுகிறது. எனினும் முடிவு எடுக்கப்பட்டுவிட்டதால் கட்சி முழுவதும் இதை ஆதரிக்க வேண்டும். இன்னும் சில நாட்களில் கட்சி மாநாடு நடைபெறவிருக்கிறது; கட்சி முழுவதின் யதார்த்த நிலையினை மத்தியக் கமிட்டி எந்த அளவுக்குச் சரியாகப் பிரதிபலித்துள்ளது என்ற பிரச்சினையைத் தீர்ப்பது அப்போதுதான் சாத்தியம். மாநாடு வரைக்கும் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கட்சியின்பால் தங்களுக்குள்ள கடமையினை அனுசரித்தும், நமது அணிகளின் ஒற்றுமையைப் பேணிக்காக்கவும், தங்களுடைய மத்திய தலைமை அமைப்பான, கட்சியின் மத்தியக் கமிட்டியின் முடிவுகளை நிறைவேற்ற வேண்டும்.

இந்த நாள் (பிப்ரவரி 24, 1918) ஜெர்மனியுடன் நம்ப முடியாத அளவுக்குக் கடுமையான, பிரதேசக் கைப்பற்றல் தன்மை கொண்ட சமாதான உடன்பாட்டில் கையொப்ப மிட அத்தியாவசியம் ஏற்பட்டதற்குப் பிரதான காரணம் நம்மிடம் படையில்லை, நம்மால் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பதே.

1917 அக்டோபர் 25க்குப் பிறகு, பாட்டாளிகள், ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரம் வெற்றி பெற்ற பிறகு, நாம் அனைவரும் ஏன் பாதுகாப்புவாதிகளானோம், தந்தையர் நாட்டைப் பாதுகாக்க முனைந்தோம் என்பது எல்லோரும் அறிந்ததே.

தந்தையர் நாட்டைப் பாதுகாப்பது என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், நம்மிடம் படை இல்லாத போது, விரோதி முழு ஆயுதபாணியாகச் சிறந்த தயாரிப்புடன் இருக்கும் போது, ஓர் ஆயுதப்போரில் நாம் அகப்பட்டுக் கொள்வதற்கு இடமளிப்பது அனுமதிக்கவே தகாதது.

சோவியத்துகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தொழிலாளர், விவசாயிகள், படைவீரர்கள் ஆகிய பொது மக்களில் ஐயத்துக்கிடமின்றி மிகப்பெரும்பான்மையினர் போருக்கு எதிராக இருக்கும் போது சோவியத் சோஷலிஸ்டு குடியரசால் ஒரு போரை நடத்த முடியாது. அப்படிச் செய்வது ஒரு கண்மூடித்தனமான சூதாட்டமாகும். சமாதான உடன்பாடு எத்தனை மிகமிகக் கடுமையானதாக இருப்பினும் சரி, இந்தப் போருக்கு முடிவுகட்டிவிட்ட பிறகு ஜெர்மன் ஏகாதிபத்தியம் மீண்டும் ஓர் ஆக்கிரமிப்புப் போரை ருஷ்யா மீது தொடுக்குமானால் அது வேறு விஷயம். அப்போது சோவியத்துகளில் பெரும்பான்மை நிச்சயமாகப் போருக்கு ஆதரவாக நிற்கும்.

இன்று ஒரு போரைத் தொடுப்பது என்றால் அது வாஸ்தவத்தில் ருஷ்ய முதலாளிகளின் ஆத்திரமூட்டும் சூழ்ச்சிக்கு இரையாவதாக இருக்கும். இந்தச் சமயத்தில் ருஷ்யா பாதுகாப்பின்றி இருக்கிறது, அற்ப ஜெர்மன் படையும்கூட அதை நசுக்கிவிடும், பிரதான ரயில்வே பாதைகளைத் துண்டித்து விட்டாலே ஜெர்மானியர் பெத்ரோகிராத், மாஸ்கோ நகர

மக்களைப் பட்டினி போட்டுச் சரணுகதியடைய வைக்க முடியும் என்பதெல்லாம் ருஷ்ய முதலாளிகளுக்கு மிகவும் நன்ருகத் தெரியும். முதலாளிகள் போரை விரும்பக் காரணம், அவர்கள் சோவியத் ஆட்சியினைத் தூக்கி எறிந்து ஜெர்மன் முதலாளிகளுடன் உடன்பாட்டிற்கு வர விரும்புவதேயாகும். ஜெர்மன் படைகள் ட்வின்ஸ்க், ரெஷிட்ஸா, வெண்டென், காப்சால், மீன்ஸ்க், டிரிஸா முதலிய இடங்களுக்கு வந்த போது முதலாளிகள் மகிழ்ச்சி கொண்டாடியதே இதைத் தெட்டத் தெளிவாக ஊர்ஜிதம் செய்கிறது.

இன்றுள்ள நிலையில் புரட்சிப் போருக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சொல்வது வெறும் புரட்சிகரமான வாய்ச்சொல் தவிர வேறில்லை. ஏனெனில் ராணுவம் இல்லாமல், மிக மிகச் சிறந்த பொருளாதாரத் தயாரிப்பு இல்லாமல், சீரழிந்து போன ஒரு விவசாய நாடு, முன்னேற்றமடைந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நவீனப் போர் தொடுப்பது என்பது அசாத்தியமாகும். ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை; ஏனெனில் அது நம்மைக் கைதிகளாக்கிச் சிறைப்பிடித்து நசுக்கிவிடும். ஆயுதந்தாங்கிய எழுச்சியின் மூலம், குறிப்பாக இப்பொழுது—இத்தகைய எதிர்ப்பு நம் விஷயத்தில் முற்றிலும் பயனற்றதாகவும், ஜெர்மன், ருஷ்ய முதலாளிகளுக்குச் சாதகமாகவும் இருக்கிற போது—நாம் எதிர்த்துப் போராட வேண்டும் என்ற கோரிக்கை வெட்டிப் பேச்சாக இருக்கும்.

சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்திற்கு உதவி கொடுக்க வேண்டும் என்று காரணம் கூறி இந்த நிமிடத்தில் புரட்சிகரப் போருக்கு ஆதரவாக வாதிப்பதும் இதே போன்ற வெறும் வாய்ச்சொல்லாகும். பிரதிகூலமான காலத்தில் போரை ஏற்பதன் மூலம் ஜெர்மன் ஏகாதிபத்தியம் சோவியத் குடியரசினை நசுக்குவதை நாம் எளிதாக்குவோமானல், ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திற்கும் சோஷலிஸ்டு லட்சியத்திற்கும் உதவி புரிய மாட்டோம், பாதகமே விளைப்போம். எல்லாத் துறைகளிலும் உறுதியான, முறையான வேலை செய்வதின் மூலம் எல்லா நாடுகளிலு

முள்ள புரட்சிகர சர்வதேசியவாதிகளுக்கு மட்டுமே நாம் உதவி புரிய வேண்டும்; ஆனால் ஆயுதந்தாங்கிய எழுச்சி ஒரு சூதாட்டம் என்பது அப்பட்டமாயிருக்கையில் அந்தச் சூதாட்டத்தில் இறங்குவது ஒரு மார்க்சியவாதிக்குத் தகுந்ததல்ல.

இரண்டு, மூன்று வாரங்களில் (இது சாத்தியம்) லீப்க்னெஹ்ட் வெற்றி பெறுவாரானால்[55] நம்மை எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் அவர் விடுவிப்பார் என்பது உறுதி. ஆனால் லீப்க்னெஹ்ட் நிச்சயமாயும் தவிர்க்க முடியாத வகையிலும் அடுத்த சில வாரங்களுக்குள் வெற்றி ஈட்டிவிடுவார் என்று மக்களுக்கு வாக்குறுதியளிப்போமானால் அது முட்டாள்தனமாகவும் அனைத்து நாடுகளின் உழைக்கும் மக்களின் ஒருமைப்பாடு என்ற மாபெரும் கோஷத்தினைக் கேலிக்கூத்தாக்குவதாகவும் இருக்கும். இவ்வாறு வாதம் செய்வதின் விளைவாக, ''உலகப் புரட்சியில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்'' என்ற மாபெரும் கோஷம் வெற்றுச் சொல்லாக மாற்றப் படுகிறது.

இன்றுள்ள நிலை 1907 வேனிற்காலத்தில் இருந்த நிலைக்கு யதார்த்தத்தில் ஒப்பாக உள்ளது. அன்று ருஷ்ய முடியரசுவாதியான ஸ்தலீப்பின் நம்மை நசுக்கிச் சிறைப் படுத்தினான்; இன்று ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் நம்மை நசுக்கிச் சிறைப்படுத்துகிறார்கள். அன்று, துரதிருஷ்டவசமாக சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கட்சி முழுவதாலும் ஆதரிக்கப்பட்ட உடனடி எழுச்சி என்ற கோஷம் வெறும் வாய்ச் சொல் என்று நிரூபிக்கப் பெற்றது. இன்று, இந்த நிமிடத்தில், புரட்சிகரப் போர் என்ற கோஷம் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைக் கவர்ந்திருக்கிற ஒரு வாய்ச்சொல்லாக உள்ளது என்பது தெளிவு; அவர்கள் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் வாதங்களைத் திரும்பத் திரும்ப ஒப்பிக்கிறார்கள். நாம் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் சிறைக் கைதிகள்; உலக ஏகாதிபத்தியத்தின் இந்தத் தலைவனை முறியடிப்பதற்கான நீண்ட கடும் போராட்டம் நம்முன் இருக்கிறது; இந்தப் போராட்டம் சோஷலிசத்திற்கான இறுதியான, முடிவான போராட்டம் என்பதில் ஐயமில்லை; ஆனால் ஏகாதிபத்தியத்தின் தலைவனுக்கு எதிராக ஆயுதந்தாங்கிய

எழுச்சி மூலம் இந்தப் போராட்டத்தை இப்போது தொடங்குவது என்பது வெறுஞ் சூதாட்டம்; எந்த மார்க்சியவாதியும் இதில் எப்பொழுதும் இறங்க மாட்டான்.

நாட்டின் பாதுகாப்புத் திறனையும் எங்கும் சுயக் கட்டுப்பாட்டினையும் முறையாகவும், இடைவிடாமலும், சர்வாம்சத்திலும் அதிகரித்தல், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சோவியத் ஆட்சியை வலுப்படுத்துவதற்கும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாட்டினை மேம்படுத்தும்படிக் கடுமையான தோல்வியைப் பயன்படுத்தல்—இவைதான் இன்றுள்ள கடமையாகும், புரட்சிகரப் போருக்குச் சொல்லளவிலல்ல, நடைமுறையில் தயாரிப்புகள் செய்யும் மார்க்கமும் இதுவேயாகும்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் தாக்குதல் இன்னும் தடுத்து நிறுத்தப்படவில்லையாதலால் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அதற்கு எதிராக ஒருமுகப்பட்ட எதிர்ப்பை ஒழுங்கமைக்க வேண்டும் என்பதை இறுதியாக எடுத்துக்கூறுவது இன்றியமையாதது என்று ஒழுங்கமைப்புக் குழு கருதுகிறது. சமாதான ஒப்பந்தத்தில், யாவற்றிலும் கடுமையானதில்கூட, கையொப்பமிட்டுப் புதிய போராட்டங்களுக்குத் தயாராவதற்கு அவகாசம் பெறுவது சாத்தியமல்ல என்று இருப்பின் நமது கட்சி, முழு மும்முரமான எதிர்ப்பு காட்டுவதற்காகச் சகல முயற்சிகளையும் செய்வது அவசியம் என்று வலியுறுத்த வேண்டும்.

சற்று அவகாசம் பெற முடியுமானால், ஒழுங்கமைப்பு வேலைகளுக்காகக் குறைந்த பட்ச அவகாசமாவது பெற முடியுமானல், இதற்காக நம்மாலியன்ற முயற்சி அனைத்தையும் செய்தல் வேண்டும். நமக்கு எவ்வித ஒத்திவைப்பும் கிடைக்காவிடில் நமது கட்சி பொதுமக்களைப் போராடும்படியும் மிகவும் உத்வேகபூர்வமான தற்காப்பில் ஈடுபடுமாறும் வேண்டுகோள் விடுக்க வேண்டும். எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கட்சியின்பால், தங்களுடைய நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின்பால், மக்களின்பால், பாட்டாளி வர்க்கத்தின்பால் தங்களுக்குள்ள கடமையினை ஆற்றுவார்கள் என்பதில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

சோவியத் ஆட்சியினைப் பேணிக்காப்பது மூலம், தனது சொந்த முதலாளிகளுக்கு எதிராக நம்ப முடியாத அளவிற்குக் கஷ்டமான, கடுமையான போராட்டத்தை நடத்தி வரும், அனைத்து நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்திற்கு மிகப் பலம் வாய்ந்த, மிகச் சிறந்த ஆதரவினை நல்கி வருகிறோம். இன்று ருஷ்யாவில் சோவியத் ஆட்சி சரிந்தால் சோஷலிஸ்டு லட்சியத்திற்கு இதைவிடக் கடுமையான அடி வேறு இருக்க முடியாது.

தோழமை கனிந்த வாழ்த்துக்களுடன்,

ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டியின் ஒழுங்கமைப்புக் குழு

பிப்ரவரி 24, 1918ல் எழுதப்பெற்றது

பிராவ்தா, *இதழ் 35, பிப்ரவரி 26 (13), 1918ல் வெளியிடப்பட்டது*

நூல் திரட்டு, *தொகுதி 35, பக்கங்கள் 389-392*

1918 பிப்ரவரி 18முதல் 24ம் தேதி வரையுள்ள வாரம் ருஷ்ய, சர்வதேசப் புரட்சி வரலாற்றில் ஒரு மாபெரும் திரும்புமுனையாக இருக்கும்.

1917 பிப்ரவரி 27ந் தேதியன்று, ருஷ்யப் பாட்டாளி வர்க்கம், யுத்தம் செல்லும் போக்கினைக் கண்டு எழுச்சி யுற்ற விவசாயிகளில் ஒரு பகுதியுடனும் முதலாளிகளுடனும் சேர்ந்து முடியரசை முறியடித்தது. 1917 ஏப்ரல் 21ல் பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்திய முதலாளிகளின் யதேச் சாதிகார ஆட்சியினைக் கவிழ்த்து, முதலாளிகளுடன் சமர சத்திற்கு வர வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ள குட்டிமுதலாளிகளின் கைக்கு அதிகாரத்தை மாற்றியது. ஜூலை 3ந் தேதி நகர்ப்புறத்துப் பாட்டாளி வர்க்கம் தானாகவே நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மூலம் சமரசவாதி களின் அரசாங்கத்துக்குக் கடுமையான அதிர்ச்சியைக் கொடுத்தது. அக்டோபர் 25ல் அது இந்த அரசாங்கத்தைத் தூக்கி எறிந்துவிட்டுத் தொழிலாளர், ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரத்தை ஸ்தாபித்தது.

இந்த வெற்றியை உள்நாட்டுப் போரில் பாதுகாக்க நேர்ந்தது. இதற்கு மூன்று மாதம் பிடித்தது; இது காட்சினா வின் அருகில் கேரென்ஸ்கியை எதிர்த்து வெற்றி பெற்றதோடு தொடங்கி, முதலாளிகள், ஐங்கர்கள், புரட்சி எதிர்ப்புக் கசாக்குகளில் ஒரு பகுதியினர் இவர்களை எதிர்த்து மாஸ்கோ, இர்க்கூட்ஸ்க், ஒரென்பூர்க், கீவ் முதலிய இடங் களில் ஏற்பட்ட வெற்றிகளோடு தொடர்ந்து, கலேதின்,

கர்னீலவ், அலெக்சேயெவ் இவர்களை எதிர்த்து, ரொஸ்தோவ்-நா-தோனூ என்ற நகரத்தில் பெற்ற வெற்றியுடன் முடிவடைந்தது.

பாட்டாளி வர்க்க எழுச்சித் தீ பின்லாந்திலும் ஜ்வாலை விட்டது,[56] இந்தப் பெருந் தீ ருமேனியாவிலும் பரவியது.

உள்நாட்டு முனையில் வெற்றிகள் ஒப்பு நோக்கில் எளிதாகவே கிடைத்தன; காரணம், தொழில்நுட்பத்திலும் ஒழுங்கமைப்பிலும் விரோதிகளுக்கு எவ்விதச் சிறப்பும் இருக்கவில்லை, மேலும் எவ்விதப் பொருளாதார அடிப்படையோ, வெகுஜனங்களிடம் ஆதரவோ அவர்களுக்கு இருக்கவில்லை. இந்த வெற்றிகள் மிக எளிதில் கிடைத்ததன் விளைவாகச் சில தலைவர்கள் தலைக்கிறுக்கம் கொள்ள இடமேற்பட்டது. ''எல்லாம் எளிதில் நடக்கும்'' என்பது அவர்களின் கருத்து.

விரைவாகத் தன்னைத்தான் கலைத்துக்கொண்டு போர் முனையைக் கைவிட்டு வரும் ராணுவத்தில் பிரம்மாண்டமான அளவு பரவியிருந்த கட்டுக்குலைவை அவர்கள் அசட்டை செய்திருந்தார்கள். புரட்சி வாய்ச்சொற்கள் கொண்டு போதை ஏறிக் கிடந்தார்கள். இந்தச் சொற்களை உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தினார்கள். ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தத்திலிருந்து ருஷ்யா பெற்ற தாற்காலிக ''விடுதலையினைச்'' சகஜம் என்று கருதி விட்டார்கள்; எனினும் வாஸ்தவத்தில் இந்த ''விடுதலை'' ஜெர்மன், ஆங்கில-பிரெஞ்சுக் கொள்ளைக்காரர்களிடையே நடந்து வந்த போரில் ஏற்பட்ட தாற்காலிக நிறுத்தத்தின் விளைவுதான். ஆஸ்திரியாவிலும் ஜெர்மனியிலும் துவங்கி வரும் வெகுஜன வேலைநிறுத்தங்கள், ஜெர்மன் ஏகாதிபத்தியத்திடமிருந்து ஏற்படும் கடும் அபாயங்களிலிருந்து நம்மை விடுவிக்க வரும் புரட்சி என்று கருதி விட்டார்கள். குறிப்பாக மிகவும் கடினமான, துன்பகரமான வகையில் பிறந்து வரும் ஜெர்மன் புரட்சிக்கு விடாப்பிடியான, காரியரீதியான, தன்னடக்கமுள்ள வேலையின் மூலம் உதவி புரிவதற்குப் பதில் ''லீப்க்னெஹ்ட் எங்கள் பக்கமிருக்கும் போது ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளால் என்ன செய்ய முடியும்?

அவர்களை உதைத்தெறிந்து விடுவோம்!'' என்று கரங்களை ஆட்டி வீருப்புப் பேசினார்கள்.

1918 பிப்ரவரி *18* முதல் *24*ந் தேதி வரையுள்ள வாரம், ட்வின்ஸ்கைப் பிடித்தது முதல் (பின்னால் மீட்கப்பட்ட) ப்ஸ்கோவ் பிடிபட்டது வரையுள்ள வாரம், சோவியத் சோஷலிஸ்டு குடியரசினை எதிர்த்து ஏகாதிபத்திய ஜெர்மனி ராணுவத் தாக்குதலை நடத்திய வாரம் நமக்கு மிகவும் கடுமையான, மனக்கசப்பும் துயரமும் தருகிற படிப்பினையை, அதே சமயம் அவசியமான, பயனுள்ள, உதவிகரமான படிப்பினையைத் தந்தது. கடந்த வாரத்தில் மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப் பெற்ற இருவகையான தந்திச் செய்திகளையும் தொலைபேசித் தகவல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தது அளவற்ற முறையில் பயனுள்ளதாக இருந்தது! ஒருபுறத்தில் கட்டுமீறி வெள்ளமாகப் பெருகும் ''தீர்மான உருவில்'' வந்த புரட்சிகரமான வாய்ச்சொல்—மத்திய நிர்வாகக் கமிட்டியின் சனிக்கிழமைக் கூட்டத்தில்[57] ''இடதுசாரி'' (ஹ்ம்... ஹ்ம்...) சோஷலிஸ்டு-புரட்சியாளனை ஷ்தேயின்பெர்க்கின் இந்த வகையில் மிகச் சிறந்த மாதிரியான பேச்சை நினைத்துக்கொண்டு ஷ்தேயின்பெர்க்கின் வாய்ச்சொல் என்று இதை அழைக்கலாம். மறுபுறம், படைகள் இருந்த இடத்தில் நிற்க மறுப்பு, நார்வா கோட்டைக்கூடப் பாதுகாக்க மறுப்பு, பின்வாங்கும் பட்சத்தில் எல்லாவற்றையும் நாசம் செய்துவிடுக என்ற உத்தரவை மீறி நடப்பு ஆகியவற்றைப் பற்றிய வேதனை தரும், மானக்கேடான தகவல்கள்; ஓடிப்போதல், குழப்பம், திறமையின்மை, நிராதரவு, படுசோம்பல் இவற்றைப் பற்றியோ பேசவே வேண்டியதில்லை.

கடுமையான, மனக்கசப்பும் துயரமும் தருகிற படிப்பினை—அவசியமான, பயனுள்ள, உதவிகரமான படிப்பினை!

வர்க்க உணர்வும் சிந்திக்கும் சக்தியுமுள்ள தொழிலாளி இந்த வரலாற்றுப் படிப்பினையிலிருந்து மூன்று முடிவுகளைச் செய்வான்: தந்தையர் நாட்டின் பாதுகாப்பு, அதன் பாதுகாப்புத் திறன், சோஷலிஸ்டு, புரட்சிகரப் போர் இவை பற்றிய நமது நிலை குறித்தும், உலக ஏகாதிபத்தியத்துடன்

நாம் மோதலுக்கு வரக் கூடிய சூழ்நிலைமைகள் குறித்தும், சர்வதேச சோஷலிஸ்டு இயக்கம் சம்பந்தமான நமது நிலையைப் பற்றிய பிரச்சினையைச் சரியாக முன்வைப்பது குறித்தும் இந்த மூன்று முடிவுகள் இருக்கும்.

1917 அக்டோபர் *25* முதல் நாம் பாதுகாப்புவாதிகளாக இருக்கிறோம்; அன்று முதல் தந்தையர் நாட்டின் பாதுகாப்புக்காக அரும்பாடுபட்டு வருகிறோம். காரணம் நாம் ஏகாதிபத்தியத்திடமிருந்து முறித்துக்கொண்டு விட்டோம் என்பதைச் செயல் மூலம் எடுத்துக்காட்டியுள்ளோம். ஏகாதிபத்தியச் சதிகாரர்களின் ஆபாசம் நிறைந்த, இரத்தக் கறை படிந்த ஒப்பந்தங்களை நாம் ரத்து செய்து வெளியிட்டிருக்கிறோம். நமது சொந்த முதலாளி வர்க்கத்தைத் தூக்கி எறிந்து விட்டோம். முன்நாட்களில் நாம் ஒடுக்கி வந்த மக்களுக்குச் சுதந்திரம் வழங்கியுள்ளோம். நம் நாட்டு மக்களுக்கு நிலத்தையும் தொழிலாளர் கண்காணிப்பையும் தந்திருக்கிறோம். நாம் ருஷ்ய சோவியத் சோஷலிஸ்டு குடியரசினைப் பாதுகாக்க நிற்கிறோம்.

நாம் தந்தையர் நாட்டைப் பாதுகாக்க நிற்பதால் நாட்டின் பாதுகாப்புத் திறன், போருக்குத் தயாரிப்பு போன்ற விஷயங்களில் பொறுப்புள்ள கண்ணோட்டம் அவசியம் என்று கோருகிறோம். புரட்சிப் போர் பற்றிய புரட்சிகரமான வாய்ச்சொற்களை எதிர்த்துத் தாட்சண்யமற்ற போரைப் பிரகடனம் செய்கிறோம். நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தல், ரயில்வே பாதைகளைப் (இவை இன்றி நவீன யுத்தமுறை என்பது வெற்றுச் சொல்லே) புனரமைத்தல், எங்கும் கண்டிப்பான புரட்சிக் கட்டுப்பாட்டையும் சுயக்கட்டுப்பாட்டையும் மீண்டும் ஸ்தாபித்தல் இவற்றுடன் தொடங்கிப் புரட்சிப் போருக்கு நீண்ட காலம் தீவிரமாகத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

தந்தையர் நாட்டின் பாதுகாப்பினை உளத்திற்கொண்டு பார்க்கும் போது, உண்மையில் நமக்கென்று ராணுவம் இல்லாத நிலையில், நம்மைவிட அளவு கடந்த வகையில் அதிக பலம் கொண்ட, நன்கு ஆயத்தமாகியுள்ள விரோதியுடன் ஆயுதப் போரில் பிரவேசிப்பது பெருங்குற்றமாகும்.

தந்தையர் நாட்டின் பாதுகாப்பிற்காக நாம் மிகவும் கடுமையான, கொடுமையான, கொடூரமான, கேவலமான சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும். இது ஏகாதிபத்தியத்திடம் ''சரணடைவதற்காக'' அல்ல, மாருக ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தீவிரமாக, நல்ல திறமையோடு போராடுவதற்குப் பயிற்சியும் தயாரிப்பும் செய்து கொள்ள வேண்டும்.

கடந்த வாரம் ருஷ்யப் புரட்சியை உலக வரலாற்று வளர்ச்சியில் அளவிட முடியாதபடி உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தியுள்ளது. இந்த நாட்களுக்குள் வரலாறு முன்னேறியுள்ளது, திடீரெனப் பல படிகள் மேலே ஏறியுள்ளது.

இதுகாறும் நாம் (உலக ஏகாதிபத்தியத்தோடு ஒப்பிட்டால்) மிகவும் அற்பமான, வெறுப்புக்கும் பரிதாபத்துக்கும் உரிய விரோதிகளை—ரமானவ் என்ற மடையன், கேரென்ஸ்கி என்ற ஜம்பப் பேர்வழி, ஜங்கர்கள், முதலாளிகள் கும்பல்கள் போன்றவர்களையே—எதிர்த்து நின்றிருக்கிறோம். இப்போதோ நமக்கு எதிராகப் பண்பாட்டிலும் தொழில் நுட்பத்திலும் சிறந்த, அற்புதமான ஒழுங்கமைப்புடைய உலக ஏகாதிபத்தியம் என்ற ராட்சசன் எழுந்திருக்கிறான். இந்த ராட்சசனை எதிர்த்துப் போராட வேண்டும். அவனை எதிர்த்து எப்படிப் போராடுவது என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். மூன்றாண்டு காலப் போரின் விளைவாக ஈடிணையற்ற சீரழிவுக்கு இலக்கான விவசாய நாடு, சோஷலிஸ்டு புரட்சியைத் துவக்கியுள்ள நாடு, ஆயுதப் போரைத் தவிர்க்க வேண்டும், மிகப் பெரிய தியாகங்கள் செய்ய நேரிடினும் சரி, தவிர்ப்பது இன்னும் சாத்தியமாக இருக்கும் போது, இதைத் தவிர்க்க வேண்டும்; ''கடைசியான நிர்ணயமான போராட்டம்'' துவங்குவதற்கு முன் பயனுள்ள ஏதோ ஒன்றைச் செய்யும் வாய்ப்பு பெறுவதற்காக இவ்வாறு செயல்பட வேண்டும்.

முன்னேறியுள்ள ஏகாதிபத்திய நாடுகளில் சோஷலிஸ்டு புரட்சி வெடித்த பிறகு தான் அந்தப் போராட்டம் துவங்கும். இத்தகைய புரட்சி மாதத்திற்கு மாதம், வாரத்திற்கு வாரம் முதிர்ச்சியடைந்து பலம் பெற்றுவருகிறது என்பது

நிச்சயம். முதிர்ச்சியடைந்துவரும் இந்தப் பலத்திற்குக் கட்டாயம் உதவி அளிக்க வேண்டும். அதற்கு எப்படி உதவுவது என்பதை அறிந்திருக்க வேண்டும். உண்மையில் ராணுவம் இல்லாத காலத்தில் அண்டையிலுள்ள சோவியத் சோஷலிஸ்டு குடியரசினை நாசத்திற்கு விட்டுக் கொடுத்தால் வளர்ந்துவரும் அந்தப் பலத்திற்குப் பாதகம் விளையுமே அன்றி, உதவி கிட்டாது.

''ஐரோப்பாவில் சோஷலிசத்தின் வெற்றியை நம்பி இருக்கிறோம்'' என்ற மகத்தான கோஷத்தை வெறும் வாய்ச் சொல்லாக மாற்றிவிடக் கூடாது. சோஷலிசத்தின் பூரண வெற்றியை நோக்கிச் செல்லும் நீண்ட கடினமான பாதை நம் மனதில் இருக்குமானால் இது உண்மையான கோஷம். ''சோஷலிஸ்டு புரட்சியின் சகாப்தத்தை'' அதன் முழுமையிலும் பார்க்கும் போது இது மறுக்க முடியாத தத்துவவியல்-வரலாற்றியல் உண்மையாகும். ஆனால் கருத்தியலான உண்மை எதுவும் ஸ்தூலமான எல்லா வகையான நிலையுடனும் பொருத்திப் பார்க்கும் போது வெற்றுச் சொல்லாகி விடுகிறது. ''ஒவ்வொரு வேலைநிறுத்தமும் சமூகப் புரட்சியின் வெட்ட வெட்ட முளைக்கும் தலைகளையுடைய பாம்பை ஒளித்து வைத்திருக்கிறது'' என்பது மறுக்க முடியாதது. ஆனால் ஒவ்வொரு வேலைநிறுத்தத்திலிருந்தும் புரட்சிக்குக் குண்டோட்டமாக விரைந்து விடலாம் என்று கருதுவது மடத்தனம். ஐரோப்பியப் புரட்சி வெடிக்கும் என்றும் அது அடுத்த சில வாரங்களுக்குள், ஜெர்மானியர் பெத்ரோகிராத், மாஸ்கோ, கீவ் நகரங்களை அணுகுமுன், நமது ரயில்வே போக்குவரத்தை அவர்கள் ''தீர்த்துக் கட்டும்'' முன், நிச்சயம் வெற்றி பெற்றுவிடும் என்றும் மக்களுக்கு உத்தரவாதம் கொடுக்கும் பொருளில் நாம் ''ஐரோப்பாவில் சோஷலிசத்தின் வெற்றியை நம்பி இருக்கிறோம்'' என்றால் பொறுப்புள்ள சர்வதேசியவாதிகளாகவும் புரட்சியாளர்களாகவும் அல்ல, மாறாக அசட்டுத் துணிச்சல்காரர்களாகவே இயங்குபவர்களாவோம்.

லீப்க்னெஹ்ட் முதலாளிகளை எதிர்த்து இரண்டு அல்லது மூன்று வாரங்களில் வெற்றி பெறுவாரானால் (இது அசாத்

தியமல்ல) அவர் நம்மை எல்லா இன்னல்களிலுமிருந்து விடுவித்துவிடுவார். இதில் சந்தேகமே கிடையாது. ஆனுல் நாம் இன்றைய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் இன்றைய போர்த்தந்திரத்தை நிர்ணயிக்கும் போது அடுத்த சில வாரங்களில் லீப்க்னெஹ்ட் வெற்றி காணலாம் என்ற நம்பிக்கை மீது செயல்படுவோமாஞல் நாம் கேலிக்கு மட்டுமே உரியவர்களாவோம். இந்தக் காலத்து மகத்தான புரட்சிகர கோஷங்களை வெறும் புரட்சிகரமான வாய்ச் சொல்லாக மாற்றியவர்களாவோம்.

தொழிலாளர் தோழர்களே, புரட்சியின் வேதனைமிக்க, ஆனுல் பயனுள்ள படிப்பினைகளிலிருந்து கற்றுக்கொள்வீர்! தந்தையர் நாட்டினைப் பாதுகாக்க, சோவியத் சோஷலிஸ்டு குடியரசினைப் பாதுகாக்க, விடாப்பிடியுடன், தீவிரமாயும், ஊசலாட்டமின்றியும் ஆயத்தமாவீர்!

பிராவ்தா (மாலைப்பதிப்பு),
இதழ் 35, பிப்ரவரி 25 (12), 1918

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் *393-397*

அரசாங்கத்தின் வெளியேற்றம் பற்றி மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நகல் முடிவு[58]

1) மாஸ்கோவை அரசாங்கத்தின் தலைமை இடமாகத் தேர்வு செய்க.

2) ஒவ்வொரு துறையில் இருந்தும் மத்திய நிர்வாகப் பொறியமைவின் குறைந்த பட்சமான தலைவர்களை இரண்டு அல்லது மூன்று டசன் பேர்களுக்கு அதிகப்படாமல் (குடும்பங்களையும் சேர்த்து) வெளியேற்ற வேண்டும்.

3) என்ன நேர்ந்தாலும் சரி அரசு வங்கி, தங்கம் மற்றும் அரசாங்கப் பத்திரங்கள் அலுவலகம் ஆகியவற்றை உடனே வெளியிடத்துக்கு வெளியேற்ற வேண்டும்.

4) மாஸ்கோவிலுள்ள விலைமதிப்புள்ள பொருட்களை வெளியேற்றத் தொடங்குக.

பிப்ரவரி 26, 1918ல்
எழுதப்பட்டது

லெனின் நூல் திரட்டு,
தொகுதி 11ல்,
1929ல் முதலில்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கம் 398

விநோதமானதும் விபரீதமானதும்

நமது கட்சியின் மாஸ்கோ பிராந்திய பியூரோ 1918 பிப்ரவரி 24ந் தேதியன்று நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில்[59] மத்தியக் கமிட்டி மீது நம்பிக்கையின்மையை வெளியிட்டிருக்கிறது, ''ஆஸ்திரியாவுடனும் ஜெர்மனியுடனும் செய்துள்ள சமாதான ஒப்பந்தத்தின் ஷராக்களை அமுலாக்குவதோடு சம்பந்தப்படுத்தப் பெறும்'' அதன் முடிவுகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டது, மேலும் அந்தத் தீர்மானத்துக்கு உள்ள ஒரு ''விளக்கக் குறிப்பில்'' அது ''மிக நெருங்கிய எதிர்காலத்தில் கட்சியில் ஒரு பிளவு ஏற்படுவது அநேகமாகத் தவிர்க்க முடியாததாகும் என்று கருதுகிறது'' என்று பிரகடனப்படுத்தி இருக்கிறது.*

---

* தீர்மானத்தின் முழு வாசகம் பின்வருமாறு: ''மத்தியக் கமிட்டியின் நடவடிக்கைகளைப் பற்றி விவாதித்த பிறகு, ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மாஸ்கோ பிராந்திய பியூரோ, மத்தியக் கமிட்டியின் அரசியல் கொள்கை, உள்ளமைப்பு ஆகியவற்றை உத்தேசித்து அதன்மீது நம்பிக்கையின்மையை வெளியிட்டது, கிடைக்கிற முதல் சந்தர்ப்பத்தில் ஒரு புதிய மத்தியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தும். மேலும், ஆஸ்திரியாவுடனும் ஜெர்மனியுடனும் செய்துள்ள சமாதான ஒப்பந்தத்தின் ஷராக்களை அமுலாக்குவதோடு சம்பந்தப்படுத்தப் பெறும் அதனுடைய முடிவுகளுக்கு முற்றுகக் கீழ்ப்படியும் கடமை தனக்கு இல்லை என்றும் மாஸ்கோ பிராந்திய பியூரோ கருதுகிறது.'' இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.—ஆ-ர்.

இதிலெல்லாம் விபரீதமானதாக எதுவுமில்லை, விநோத மானதுங்கூட எதுவுமில்லை, ஒரு தனியான சமாதானத்தைப் பற்றிய பிரச்சினை மீது மத்தியக் கமிட்டியோடு தீட்சண்ய மாகக் கருத்துவேறுபாடு கொள்ளும் தோழர்கள் மத்தியக் கமிட்டியைத் தீட்சண்யமாகக் கண்டிப்பதும், ஒரு பிளவு தவிர்க்க முடியாதது என்கிற தங்களுடைய துணிபை வெளி யிடுவதும் முற்றிலும் இயல்பானதேயாகும். அதெல்லாம் கட்சி உறுப்பினர்களின் மிகமிக நியாயமான உரிமையாகும், அது முற்றாகப் புரிந்து கொள்ளத் தக்கதே.

ஆனால் விநோதமானது,விபரீதமானது இதோ இருக்கிறது. தீர்மானத்துடன் ஒரு ''விளக்கக் குறிப்பு'' இணைக்கப் பெற்றுள்ளது. அதன் முழு வாசகம் பின்வருமாறு:

''மிக நெருங்கிய எதிர்காலத்தில் கட்சியில் ஒரு பிளவு ஏற்படுவது அநேகமாகத் தவிர்க்க முடியாததாகும் என்று மாஸ்கோ பிராந்திய பியூரோ கருதுகிறது. மேலும், தனி யான சமாதானத்தைச் செய்துகொள்வதை ஆதரித்துக் கோருபவர்களையும் கட்சியிலுள்ள எல்லா மிதவாத சந்தர்ப் பவாதிகளையும் ஒருங்கே சமமாக எதிர்க்கும் எல்லா முரணற்ற புரட்சிகரமான கம்யூனிஸ்டுகளும் ஒன்றுபடுவதற் கான குறிக்கோளைத் தனக்கென்று நிறுவிக்கொள்கிறது. **உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து, இப்போது வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிக்கொண்டுவருகிற சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப் பயனுள் ளதே என்று நாங்கள் கருதுகிறோம்.** நமது முதன்மையான கடமை சோஷலிஸ்டு புரட்சியின் கருத்துக்களை எல்லாப் பிற நாடுகளுக்கும் பரப்புவதென்றும், தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தை உண்டாக்குவதென்றும், ருஷ்யாவில் முதலாளித்துவ எதிர்ப்புரட்சியை ஈவிரக்கமின்றி நசுக்கு வதென்றும் முன்போலவே நாங்கள் சாதிக்கிறோம்.''

இந்த வாசகத்தில் நாம் அழுத்தம் கொடுத்திருக்கும் சொற்கள்தாம்... விநோதமானவை, விபரீதமானவை.

இந்தச் சொற்களிலேதான் விஷயத்தின் கரு அடங்கி யிருக்கிறது.

தீர்மானத்தின் ஆசிரியர்கள் முன்வைத்துள்ள கொள்கை முழுவதையும் இந்தச் சொற்கள் ஒரே அபத்தமாக்கி

விடுகின்றன. இந்தச் சொற்கள் அவர்களது தவற்றின் வேரை அசாதாரணமான தெளிவுடன் அம்பலப்படுத்துகின்றன.

''உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து, சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப் பயனுள்ளதே...'' அது விநோதமானது, ஏனெனில் முதனிலைகளுக்கும் முடிவுக்கும் தொடர்புகூட இல்லை. ''உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து, சோவியத் ஆட்சியின் ராணுவத் தோல்வியை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப் பயனுள்ளதே''—இப்படிப்பட்ட ஒரு கூற்று சரியாகவோ, தப்பாகவோ இருக்கலாம், ஆனால் அது விநோதமானது என்று சொல்லியிருக்க முடியாது. இது முதல் விஷயம்.

இரண்டாவது விஷயம்: சோவியத் ஆட்சி ''இப்போது வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிக் கொண்டுவருகிறது''. இது விநோதமானது மட்டுமல்ல, சுத்த விபரீதமானதுங்கூட. ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே சிக்கலில் சிக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. இந்தச் சிக்கலை நாம் விடுவித்தாக வேண்டும்.

முதல் பிரச்சினையைப் பொறுத்தவரை, உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து போரில் தோல்வியடையும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப் பயனுள்ளதாயிருக்கும், அது சோவியத் ஆட்சியை இழப்பதில் கொண்டுபோய் விடும், வேறு சொற்களில் சொல்வதென்றால் ருஷ்யாவில் முதலாளி வர்க்கம் வெற்றிபெறுவதில் கொண்டு போய் விடும் என்பதே ஆசிரியர்களின் கருத்தாக இருக்கும் போலும். இந்தக் கருத்துக்கு குரல் கொடுப்பதின் மூலம் நான் எனது (*1918, ஜனவரி 8ல் எழுதிய, 1918, பிப்ரவரி 24ல் பிராவ்தாவில் பதிப்பிக்கப்பட்ட*) ஆய்வுரைகளில்* சொன்னதின், அதாவது, ஜெர்மனி வைத்த சமாதான நிபந்தனைகளை ஏற்க மறுப்பது ருஷ்யாவின் தோல்வியிலும் சோவியத் ஆட்சி வீழ்த்தப்படுவதிலும் கொண்டுபோய்விடும் என்று சொன்னதின், உண்மையை ஆசிரியர்கள் மறைமுகமாக ஒத்துக்கொள்கிறார்கள்.

எனவே, la raison finit toujours par avoir raison—

* இத்தொகுதி, பக்கங்கள் *126—139* பார்க்க.—ப-ர்.

உண்மை எப்போதும் வெல்லும்! எனது ''அதிதீவிர வாத'' எதிர்ப்பாளர்கள், பிளவுபடுத்தப்பயமுறுத்துகிற மாஸ்கோவாசிகள்—ஒரு பிளவைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசும் நிலைக்கு வந்து விட்டிருக்கிறபடியாலேயே—தங்களுடைய ஸ்தூலமான காரணங்களை, புரட்சிகரமான போரைப் பற்றிப் பொதுப்படையான வாய்ச்சொல் வீச்சோடு நிறுத்திக்கொள்கிற ஆசாமிகள் மௌனத்திலே தட்டிக் கழிக்க விரும்பும் அதே காரணங்களைப் பற்றி அதே அளவுக்கு வெளிப்படையாகப் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். என்னுடைய ஆய்வுரைகளின் வாதங்களின் அசல் சாராம்சமே என்னவெனில் (இதை என்னுடைய 1918, ஜனவரி 7ம் தேதிய ஆய்வுரைகளைக் கவனமாகப் படிக்க அக்கறை காட்டுகிற எவனும் பார்க்கக் கூடும்) இந்த மிகமிகக் கடுமையான சமாதானத்தை இன்றே, உடனடியாக ஏற்றுக்கொண்டு தீர வேண்டும், அதே சமயத்தில் ஒரு புரட்சிகரமான போருக்குத் தீவிரமாகத் தயாரிப்புச் செய்ய வேண்டும் (மேலும், இப்படிப்பட்ட தீவிரமான தயாரிப்புகளின் நலன்களுக்கென்றே அதை ஏற்க வேண்டும்) என்பதே. ஒரு புரட்சிகரமான போர் பற்றிப் பொதுப்படையான வாய்ச்சொல் வீச்சோடு நிறுத்திக்கொள்கிற ஆசாமிகள் என் வாதங்களின் அசல் சாராம்சத்தைப் புறக்கணித்தார்கள், அல்லது காணத் தவறினார்கள், அல்லது காண விரும்பவில்லை. என் வாதங்களின் சாராம்சம் பற்றி மேற்கொண்ட ''மௌனம் எனும் சதியை'' உடைத்து விட்டதற்கு எனது ''அதிதீவிரவாத'' எதிர்ப்பாளர்களாகிய மாஸ்கோவாசிகளுக்குத்தான் என் நெஞ்சின் அடியாழத்திலிருந்து இப்போது நான் நன்றி தெரிவிக்க வேண்டியிருக்கிறது. மாஸ்கோவாசிகள்தாம் அவற்றிற்கு முதன்முதலில் பதில் கொடுத்தவர்கள்.

அவர்களின் பதில் என்ன?

அவர்களின் பதில் என்னுடைய ஸ்தூலமான வாதத்தின் சரிநிலையை ஒத்துக் கொள்வதேயாகும். ஆம், மாஸ்கோவாசிகள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், நாம் இப்போது ஜெர்மானியர்களை எதிர்த்துச் சண்டை போட்டால் நிச்சய

மாகத் தோற்கடிக்கப்படுவோம்*. ஆம், இந்தத் தோல்வி நிச்சயமாக சோவியத் ஆட்சியின் வீழ்ச்சியில் கொண்டுபோய் விடும்.

எனது வாதங்களின் சாராம்சத்திற்கு எதிராக, அதாவது போரை உடனே ஏற்றுக் கொள்வதாயிருந்தால் போரின் நிலைமைகள் எப்படி இருக்கும் என்பது பற்றிய என்னுடைய ஸ்தூலமான கூற்றுக்கு எதிராக மேற்கொண்ட ''மௌனம் எனும் சதியை'' உடைத்து விட்டதற்காகவும் எனது ஸ்தூலமான கூற்றின் சரிநிலையைப் பயமின்றி ஒத்துக் கொண்டதற்காகவும் மீண்டும் மீண்டும் எனது ''அதிதீவிர வாத'' எதிர்ப்பாளர்களாகிய மாஸ்கோவாசிகளுக்கு என் நெஞ்சின் அடியாழத்திலிருந்து நன்றி தெரிவிக்கிறேன்.

மேலும், எந்த ஆதாரங்களின் மீது என்னுடைய வாதங்கள்—அவை சரி என்று ஏற்கும்படி மாஸ்கோவாசிகள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறுர்கள் — நிராகரிக்கப்படுகின்றன?

உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து சோவியத் ஆட்சியின் இழப்பை நாம் கட்டாயம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிற ஆதாரங்களின் மீது.

உலகப் புரட்சியின் நலன்களுக்கு இது ஏன் தேவைப்பட வேண்டும்? விஷயத்தின் கரு, எனது வாதங்களைத் தோற்கடிக்க விரும்புகிறவர்கள் வாதம் புரிவதிலுள்ள அசல் சாராம்சம் இதுதான். மேலும், இந்த விஷயத்தின் மீது, இந்த மிகமிக முக்கியமான, அடிப்படையான, கருப்பொருளான

---

* எப்படியிருந்தாலும் சண்டை போடுவதைத் தவிர்ப்பது சாத்தியமில்லை என்கிற எதிர்வாதத்தைப் பொறுத்தவரை, உண்மைகள் அதற்குப் பதில் கொடுத்துள்ளன: ஜனவரி 8ம் தேதி எனது ஆய்வுரைகள் படிக்கப் பெற்றன; ஜனவரி 15ம் தேதி வாக்கில் நமக்குச் சமாதானம் கிடைத்திருக்கக் கூடும். நிச்சயமாக ஓர் ஓய்வு உறுதிப்படுத்தப் பெற்றிருக்கும் (மேலும் நமக்கு ஒரு மிகமிகக் குறுகிய கால ஓய்வுகூட மிகமிகப் பிரம்மாண்டமான குறிபொருளுடையதாக இருந்திருக்கும்—பௌதிக ரீதியிலும் சரி, தார்மீக ரீதியிலும் சரி; ஏனெனில் ஜெர்மானியர்கள் ஒரு புதிய போரைப் பிரகடனப்படுத்த வேண்டியதாயிருந்திருக்கும்),—புரட்சிகரமான வாய்ச்சொல் வீச்சு மட்டும் இராதிருந்தால்.—ஆ-ர்.

விஷயத்தின் மீதுதான், தீர்மானத்திலோ ''விளக்கக் குறிப்பிலோ'' ஒரு வார்த்தையேனும் சொல்லப்படவில்லை. எல்லோருக்கும் தெரிந்திருக்கிற, விவாதத்திற்கிடமற்ற விஷயத்தைப் பற்றி—''ருஷ்யாவில் முதலாளித்துவ எதிர்ப்புரட்சியை ஈவிரக்கமின்றி நசுக்குவது'' பற்றியும் (சோவியத் ஆட்சியை இழப்பதில் கொண்டுபோய் விடுகிற ஒரு கொள்கையின் வழிமுறைகளையும் சாதனங்களையும் பயன்படுத்தியா?), கட்சியிலுள்ள எல்லா மிதவாத சந்தர்ப்பவாதிகளையும் எதிர்ப்பது பற்றியும்—பேசுவதற்கு இந்தத் தீர்மானத்தின் ஆசிரியர்களுக்கு நேரமும் இடமும் கிடைத்தது. ஆனல் எது உண்மையிலே விவாதத்திற்குரியதாயுள்ளதோ, எது சமாதானத்தின் எதிர்ப்பாளர்களின் நிலையின் சாராம்சத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறதோ, அதைப் பற்றி ஒரு வார்த்தை இருக்க வேண்டுமே, கிடையாது!

விநோதம்தான். மிகமிக விநோதம்தான். இந்த விஷயத்தில் தாங்கள் குறிப்பாகப் பலவீனமாயிருக்கிறதை உணர்ந்ததினுலேதான் இதைப் பற்றி இந்தத் தீர்மானத்தின் ஆசிரியர்கள் மௌனம் சாதித்தார்களோ? ஏன் (இது உலகப் புரட்சியின் நலன்களுக்குத் தேவை) என்பதை வெளிப்படையாகச் சொல்வதென்ருல் அதற்கு அநேகமாக அர்த்தம் தங்களை அம்பலப்படுத்திக் கொண்டதாகிவிடுமே...

அது எப்படியிருந்தாலும், தீர்மானத்தின் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியிருக்கக் கூடும் வாதங்களை நாம் தேடிப்பிடிக்க வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகளோடு எந்தச் சமாதானமும் செய்து கொள்வதை உலகப் புரட்சியின் நலன்கள் தடைசெய்கின்றன என்று ஒருக்கால் ஆசிரியர்கள் நம்புகிருர்களோ? பெத்ரோகிராத் கூட்டங்கள் ஒன்றில், சமாதானத்தின் எதிர்ப்பாளர்களில் சிலர், இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள், ஆனல் ஒரு தனியான சமாதானத்தை ஆட்சேபித்தவர்களில் அற்பச் சிறுபான்மையினர்தாம் அதை ஆதரித்தார்கள்[60]. இந்த அபிப்பிராயம், பிரெஸ்ட் பேச்சுவார்த்தைகளின் சந்தர்ப்பப் பயனை மறுப்பதிலும், போலந்து, லாத்வியா, குர்லாந்து திருப்பிக் கொடுக்கப்படுகிற நிலை கூடவே

தொடர்ந்துவரும் சமாதானத்தையும் மறுப்பதிலும் கொண்டு போய் விடும் என்பது தெளிவு. இந்தக் கருத்து தவறு என்பது (எடுத்துக்காட்டாக, பெத்ரோகிராத் சமாதான எதிர்ப்பாளர்களில் பெரும்பான்மையினர் அதை நிராகரித் தனர்) பட்டப்பகல் போல் தெளிவானது. இந்தப் பார்வை நிலையிலிருந்து பார்த்தால், ஏகாதிபத்திய வல்லரசுகளால் சூழப்பட்டுள்ள ஒரு சோஷலிஸ்டு குடியரசு எந்தப் பொரு ளாதார ஒப்பந்தங்களையும் செய்ய முடியாது, சந்திர மண்ட லத்துக்குப் பறந்து போனாலன்றி நிலவவும் முடியாது.

உலகப் புரட்சியின் நலன்களுக்கு அது உந்தப்படுவது தேவையாயிருக்கிறது என்றும், அப்படி அது உந்தப்படுவது போரால் மட்டுமே முடியும் என்றும், சமாதானத்தால் என்றைக்கும் முடியாது, ஏனெனில் ஏகாதிபத்தியம் ''நியாயப் படுத்தப்படுகிறது'' என்கிற ஓர் அபிப்பிராயத்தை மக்க ளிடம் அது உண்டாக்கக் கூடும் என்றும் ஒருக்கால் ஆசிரி யர்கள் நம்புகிறார்களோ? இப்படிப்பட்ட ''தத்துவம்'' மார்க் சியத்துக்கு முற்றாக மாறுபட்டது, ஏனெனில் புரட்சிகளை ''உந்துவதை'' எப்போதும் மார்க்சியம் எதிர்த்து வந்திருக் கிறது; புரட்சிகள் அவற்றை உற்பத்தி செய்கிற வர்க்க முரண்பாடுகளின் மிகுந்து கொண்டே போகும் கூர்மை யிலிருந்து வளர்கின்றன. அப்படிப்பட்ட ஒரு தத்துவம், ஆயு தமேந்திய எழுச்சி என்கிற போராட்ட வடிவம் எப்போ தும் எல்லா நிலைமைகளிலும் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒன்று என்கிற கருத்துக்குச் சமமாகும். ஆனால், யதார்த்தத்திலோ, சர்வதேசப் புரட்சியின் நலன்களுக்குத் தேவைப்படுவது என்னவெனில், நமது நாட்டில் முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிந்துவிட்ட பிறகு சோவியத் ஆட்சி அந்த சர்வதேசப் புரட்சிக்கு உதவி புரிய வேண்டும், ஆனால் அது தன்னுடைய சக்திக்கு ஏற்றவாறு உதவியின் வடிவத் தைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்பதே. அதே புரட்சி தன் சொந்த நாட்டில் தோல்வியடையும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வதன் மூலமாக உலக ரீதியிலே சோஷலிஸ்டு புரட்சிக்கு உதவுவது என்பது உந்துவது பற்றிய தத்துவத் திலிருந்துகூடத் தொடர்கிற ஒரு கருத்தல்ல.

ஜெர்மனியில் ஏற்கெனவே புரட்சி தொடங்கி விட்டது என்றும், அது அங்கே ஏற்கெனவே ஒரு பகிரங்கமான, தேச ரீதியான உள்நாட்டுப் போரின் கட்டத்தை எட்டி விட்டது என்றும், எனவே ஜெர்மன் தொழிலாளர்களுக்கு உதவுவதில் நமது பலத்தைச் செலவிட வேண்டும் என்றும், ஒரு நிர்ணயமான போராட்டத்தை ஏற்கெனவே தொடங்கி விட்டுக் கடுமையாக நெருக்கப்பட்டு வருகிற ஜெர்மன் புரட்சியைக் காப்பாற்றுவதற்காக நாமே சாக வேண்டும் (''சோவியத் ஆட்சியை இழப்பது'') என்றும் ஒருக்கால் அந்தத் தீர்மானத்தின் ஆசிரியர்கள் நம்புகிறார்களோ? இந்தத் தத்துவத்தின்படி, நாம் சாகிற அதே நேரத்தில் நாம் ஜெர்மன் எதிர்ப்புரட்சியின் சக்திகளின் ஒரு பகுதியை வேறுபக்கம் திருப்பி விட்டவர்களாவோம், அதன் மூலமாக ஜெர்மன் புரட்சியைக் காப்பாற்றியவர்களாவோம்.

இந்த முதனிலைகள் இருப்பதாக இருந்தால், தோல்வியின் சாத்தியப்பாட்டையும், சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டையும் ஒப்புக்கொள்வது (தீர்மானத்தின் ஆசிரியர்கள் சொல்வது போல) ''சந்தர்ப்பப் பயனுள்ளது'' மட்டுமல்ல, நேரான கடமையும் ஆகும் என்பது முற்றிலும் சிந்திக்கத்தக்க விஷயமே. ஆனால் இந்த முதனிலைகள் இல்லை என்பது வெளிப்படை. ஜெர்மன் புரட்சி பக்குவப்பட்டு வருகிறது, ஆனால் அது வெடிக்கும் நிலையை ஜெர்மனியில் எட்டவில்லை, ஜெர்மனியில் உள்நாட்டுப் போர் நிலையை எட்டவில்லை என்பது வெளிப்படை. ''சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வதின்'' மூலம் நிச்சயமாக நாம் ஜெர்மன் புரட்சி பக்குவப்படுவதற்கு உதவ மாட்டோம், அதைத் தடங்கல்தான் செய்பவர்களாவோம். ஜெர்மன் பிற்போக்குக்குத்தான் நாம் உதவுவோம், அதற்கு உகந்த மாதிரி நடந்து கொள்பவர்களாவோம், ஜெர்மனியில் சோஷலிஸ்டு இயக்கத்துக்குத் தடங்கல் செய்வோம், சோஷலிசத்தின் பக்கம் இன்னமும் வராத பெருந்திரளான ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தினரும் அரைப்பாட்டாளி வர்க்கத்தினரும் சோஷலிசத்தை வெறுத்து ஒதுங்கி விடும்படிச் செய்வோம், ஏனென்றால் 1871ல் பாரிஸ் கம்யூ

னின் தோல்வியைக் கண்டு பிரிட்டிஷ் தொழிலாளர்கள் பயந்து போனது போல், அவர்கள் சோவியத் ருஷ்யாவின் தோல்வியைக் கண்டு பயந்து போவார்கள்.

விரும்பிய மட்டும் எப்படியெப்படி யெல்லாம் திருப்பி யும் புரட்டியும் பார்த்தாலும் சரி, ஆசிரியர்களின் வாதங் களில் தர்க்கம் ஏதும் இல்லவே இல்லை. ''உலகப் புரட்சியின் நலன்களை உத்தேசித்து, சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது சந்தர்ப்பப் பயனுள் ளதே'' என்கிற கருத்தைத் தாங்கி நிறுத்துவதற்குப் புத்திசாலித் தனமான வாதங்கள் ஏதுமில்லை.

''இப்போது சோவியத் ஆட்சி வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிக் கொண்டு வருகிறது''—இதுவே, நாம் பார்த்தது போல, மாஸ்கோத் தீர்மானத்தின் ஆசிரியர்கள் பிரகடனப்படுத்த முன்வந்த விபரீதமான கருத்து.

ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் நம்மை நஷ்ட ஈடு தருமாறு செய்யப் போகிறார்கள், ஜெர்மனிக்கு எதிராகக் கிளர்ச்சியும் பிரசாரமும் செய்வதைத் தடை செய்வார்கள் என்பதால் சோவியத் ஆட்சி எல்லாக் குறிபொருளையும் இழக்கிறது, ''வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகிவிடு கிறது''—இதுவே தீர்மானத்தின் ஆசிரியர்களினுடைய ''எண்ணத்தின்'' போக்காக இருக்கலாம். ''இருக்கலாம்'' என்று நாம் சொல்வதற்குக் காரணம், ஆசிரியர்கள் தங் களுடைய ஆய்வுரைக்கு ஆதரவாகத் தெளிவாகவோ குறிப் பானதாகவோ எதையும் வைக்கவில்லை.

ஆழ்ந்த, நிர்க்கதியான நிராசை, முற்றான நம்பிக்கைக் குலைவு—இவை சோவியத் ஆட்சியின் குறிபொருள் வெறு மனே சம்பிரதாயச் சடங்கே ஆகும், சோவியத் ஆட்சியை இழப்பது சாத்தியமாவதற்கு இடங்கொடுக்கிற போர்த்தந் திரங்கள் அனுமதிக்கத்தக்கவையே என்கிற ''தத்துவத்தின்'' முழுச் சாராம்சம் இதுதான். எப்படியும் மீட்சியே கிடை யாதாகையால், சோவியத் ஆட்சியும் ஒழிந்து போகட்டுமே— இந்த உணர்ச்சிதான் இந்த விபரீதமான தீர்மானத்தைப் போடச் செய்தது. சில சமயங்களில் இப்படிப்பட்ட கருத்துக் களுக்குப் போர்த்தப்படுகிற ''பொருளாதார'' வாதங்

கள் எனப்பட்டவையும் அதே நிர்க்கதியான நிராசையைத் தான் வெளிக்காட்டுகின்றன: கொஞ்சநஞ்சமான கப்பம் அல்ல, இத்தகைய பெரிய அளவில் கப்பம் வசூலிக்கப்பட முடியுமென்றால் அது என்ன சோவியத் குடியரசு? என்பது உட்கிடை.

நிராசை தவிர வேறில்லை: எப்படியும் நாம் சாவோம்!

ருஷ்யா அகப்பட்டுக் கொண்டிருக்கிற படுமோசமான நிலைமையில் இது மிகவும் புரிந்து கொள்ளத்தக்க ஒரு மனோ நிலைதான். ஆனால் இது உணர்வுபூர்வமான புரட்சிக்காரர் களிடையே ''புரிந்து கொள்ளத்தக்க'' விஷயமல்ல. அதன் குணக்குறியான விஷயம் என்னவென்றால், இங்கே மாஸ்கோ வாசிகளின் கருத்துக்கள் அபத்தநிலைக்குத் தாழ்த்தப்பட்டுப் போவதேயாகும். 1793ன் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய ஆதாயங்கள்—குடியரசும் ஜனநாயகத்துவமும்—வெறுமனே சம்பிரதாயச் சடங்கு ஆகி வருகின்றன என்றும் குடியரசை இழக்கும்படியான சாத்தியப்பாட்டை ஒப்புக்கொண்டாக வேண்டுமென்றும் என்றைக்கும் சொல்லியிருக்க மாட்டார் கள். அவர்கள் நெஞ்சிலே நிராசையை நிறைத்துக் கொண் டிருந்தவர்களல்ல, வெற்றிமீதுள்ள நம்பிக்கையை நிறைத்துக் கொண்டிருந்தவர்கள். ஒரு புரட்சிகரமான போருக்கு அறைகூவல் விடுப்பதும் அதே நேரத்தில் ஓர் அதிகார பூர்வமான தீர்மானத்தில் ''சோவியத் ஆட்சியை இழக்கும் சாத்தியப்பாட்டை ஒப்புக்கொள்வது'' பற்றிப் பேசுவதும் தன்னைத்தானே முழுக்க முழுக்க அம்பலப்படுத்திக் கொள் வதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், நெப் போலியன் போர்கள் நடந்த காலத்தில், 1918ல் ருஷ்யா அனுபவித்து வருகிறதைவிட அதிகமாகப் பிரஷ்யாவும் வேறு பல நாடுகளும் ஒப்புவமையற்ற, அளவற்ற, எவ்வளவோ கஷ்டங்களையும், தோல்வியின் சுமைகளையும், பராதீனத்தை யும், அவமானத்தையும், நாடு பிடித்தவனின் ஒடுக்குமுறையை யும் அனுபவித்தன. என்ற போதிலும், நாம் இன்று மிதிக்கப் பட முடிகிறதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாகப் பலமாக நெப்போலியனின் ராணுவ பூட்ஸுகள் தங்களை

மிதித்துத் துவைத்த காலத்தில் பிரஷ்யாவின் தலைசிறந்த மனிதர்கள் நம்பிக்கை குலைந்து நிற்கவில்லை; தங்களுடைய தேசிய அரசியல் ஸ்தாபனங்கள் ''வெறுமனே சம்பிரதாயச் சடங்கே'' என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் கை சோர்ந்து நிற்கவில்லை; அல்லது ''எப்படியும் நாம் சாவோம்'' என்கிற உணர்ச்சி வசப்படவும் இல்லை. பிரெஸ்ட் ஒப்பந் தத்தைவிட எவ்வளவோ எல்லையற்ற கடுமையான, மிருகத் தனமான, அவமானகரமான, ஒடுக்குமுறையான சமாதான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்கள்; அதன்பிறகு உரிய தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கவும் அறிந்திருந்தார் கள்; நாடு பிடித்தவனின் நுகத்தடியை உறுதியாகச் சகித்துக் கொண்டார்கள்; மீண்டும் போராடினுர்கள்; மீண்டும் நாடு பிடிக்கிறவனின் நுகத்தடியின் கீழ் வந்தார்கள்; மீண் டும் அசிங்கத்திலும் அதி அசிங்கத்தனமான சமாதான ஒப் பந்தங்களில் கையெழுத்திட்டார்கள்; மீண்டும் நிமிர்ந்தெழுந் தார்கள்; **கடைசியிலே தங்களை விடுதலை செய்துகொண் டார்கள்** (அதிக பலமுள்ள, தங்களுக்குள் போட்டி போட்டுக் கொள்கிற, நாடு பிடிக்கிறவர்களிடையேயுள்ள சச்சரவு களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அல்ல).

நம் வரலாற்றிலும் இது ஏன் திரும்ப நடக்கக் கூடாது?

நாம் ஏன் நம்பிக்கைக் குலைவுக்குப் பணிந்து போக வேண்டும்? ''சோவியத் ஆட்சி வெறுமனே சம்பிரதாயச் சடங்கே ஆகி வருகிறது'' என்று சொல்கிற தீர்மானங்களை—அட தெய்வமே, மிக மிக வெட்கக் கேடான சமாதானத் தைவிட வெட்கக் கேடானவை ஆயிற்றே இவை—ஏன் எழுத வேண்டும்?

நவீன ஏகாதிபத்திய அசுரர்களை எதிர்க்கும் போராட் டத்தில் கிடைக்கும் மிகக் கடுமையான ராணுவத் தோல்வி கள் ருஷ்யாவிலும் ஏன் தேசிய குணவியல்பை உருக்குப்பதம் பெறச் செய்யக் கூடாது? சுயக்கட்டுப்பாட்டை ஏன் பலப் படுத்தக் கூடாது? டம்பப் பேச்சுக்கும் வாய்ச்சொல் வீச்சுக் கும் ஏன் முற்றுப்புள்ளி வைக்கக் கூடாது? ஏன் எதையும் தாங்கும் மனுேசக்தியைப் போதிக்கக் கூடாது? நெப்போ லியனுல் நசுக்கப்பட்ட போது பிரஷ்யர்கள் கையாண்ட

சரியான போர்த்தந்திரங்களின் பக்கம்—நம்மிடம் ராணுவம் இல்லாத போது சமாதான ஒப்பந்தங்களிலேயே மிக மிக அவமானகரமான சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, பிறகு சக்திகளை ஒன்றுதிரட்டிக் கொணடு மீண்டும் மீண்டும் நிமிர்ந்தெழுகிற போர்த்தந்திரங்களின் பக்கம்—மக்களை ஏன் திருப்பிக் கொண்டுவரக் கூடாது?

முன்பு கேட்டிராத அளவு கடினமான முதல் சமாதான ஒப்பந்தத்திற்கே, அது நம்ப முடியாத அளவுக்குக் கொடியதாக இருந்தபோதிலும், பிற நாடுகள் அதைவிடக் கசப்பான துர்ப்பாக்கியங்களை உறுதியுடன் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கிற போது நாம் ஏன் நம்பிக்கைக் குலைவுக்கு உள்ளாக வேண்டும்?

பலமில்லாத போது ஒருவன் பணிந்து தீர வேண்டும் என்று அறிந்து, அப்படியிருப்பினும் எந்த விலை கொடுத்தாயினும் மீண்டும் மீண்டும் நிமிர்ந்தெழும் சக்தி பெற்றும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பலத்தை வளர்த்துக் கொள்ளும் சக்தி பெற்றும் இருக்கிற பாட்டாளியின் உறுதிக்குப் பொருத்தமாக இந்த நம்பிக்கைக் குலைவுள்ள போர்த்தந்திரங்கள் உள்ளனவா, அல்லது நம் நாட்டில், இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கட்சி என்கிற வடிவத்திலே புரட்சிகரமான போரைப் பற்றி வாய் வீச்சடிப்பதிலே தனக்கு நிகரில்லை என்று காட்டிக் கொண்டுள்ள குட்டிமுதலாளிகளின் முதுகெலும்பற்ற தன்மைக்குப் பொருத்தமாயுள்ளனவா?

இல்லை, அன்பார்ந்த மாஸ்கோ ''அதிதீவிரவாதத்'' தோழர்களே! மிக மிக வர்க்க உணர்வுள்ள, உறுதியாயுள்ள, அதே தொழிலாளர்களைச் சோதனைகளின் ஒவ்வொரு நாளும் உங்களிடமிருந்து துரத்திவிடும். சோவியத் ஆட்சி சம்பிரதாயச் சடங்கு ஆகிக் கொண்டு வரவில்லை, ஆகவும் செய்யாது என்று அவர்கள் சொல்வார்கள்—ப்ஸ்கோவில் நாடு பிடிப்போன் இருந்து கொண்டு தானியம், உலோகத்தாதுப் பொருட்கள், பணம் என்ற வடிவத்தில் ஆயிரம் கோடி ரூபிள் கப்பம் கட்டும்படிச் செய்து கொண்டிருக்கிற இன்று மட்டுமல்ல, அவன் நீஷ்னி நோவ்கரத், ரொஸ்தோவ்-நா-தோனு என்ற நகர் வரை வெகு தூரத்திற்கு வந்தாலுங்கூட,

இரண்டாயிரம் கோடி ரூபிள் கப்பம் கட்டும்படிச் செய் தாலுங்கூட.

அன்னியனின் எந்த நாடுபிடிப்பும் எப்பொழுதும் மக்களின் அரசியல் ஸ்தாபனத்தை ''வெறுமனே சம்பிரதாயச் சடங்காகச்'' செய்ய முடியாது (மேலும், வரலாற்றுக்குத் தெரிந்த எதையும் விட எவ்வளவோ மேலானது மட்டுமல்ல சோவியத் ஆட்சி என்பது). அதற்கு மாறாக, அன்னியனின் எந்த நாடுபிடிப்பும் சோவியத் ஆட்சியின்பால்—அது மட்டும் கண்மூடித்தனமான முட்டாள் செயல்களில் இறங்காமலிருந்தால்—மக்களின் மனப்பற்றைப் பலப்படுத்தும்.

மேலும், நம்மிடம் ராணுவம் இல்லாத போது மிகமிக அசிங்கத்தனமான சமாதானத்திலும் கையெழுத்திட மறுப்பது ஒரு கண்மூடித்தனமான சூதாட்டமாகவே இருக்கும்; அதற்காக, இத்தகைய மறுப்பு தெரிவித்த அரசாங்கத்தை மக்கள் நியாயமாகவே கண்டிப்பார்கள்.

பிரெஸ்ட் ஒப்பந்தத்தைவிட அதிகக் கொடியதான, அவமானகரமான சமாதான ஒப்பந்தங்கள் முன்பு வரலாற்றிலே கையெழுத்திடப்பட்டுள்ளன (மேலே சில உதாரணங்கள் தந்தோம்). அவை அரசாங்கத்தின் செல்வாக்கைக் கெடுக்கவோ அதைச் சம்பிரதாயச் சடங்கு ஆக்கவோ இல்லை; அவை அரசாங்கத்தையோ மக்களையோ நாசம் செய்யவில்லை, அதற்குப் பதிலாக மக்களை எஃகுபோல் உறுதிப்படுத்தின; மிகவும் கடினமான நிலைமையிலேயுங்கூட நாட்டைப் பிடித்தவனின் காலடியின் கீழிருந்து கொண்டே, பயிற்சி பெற்ற ராணுவத்தை நிர்மாணிக்கும் கண்டிப்புள்ள, கஷ்டமான கலையை மக்களுக்கு அவை போதித்தன.

ஒரு புதிய, உண்மையான தேசபக்தப் போரை நோக்கி, சோவியத் ஆட்சியைக் காத்துப் பேணுவதற்கும் திடப்படுத்துவதற்கும் உரிய ஒரு போரை நோக்கி, ருஷ்யா போய்க்கொண்டிருக்கிறது. ஒருவேளை, இன்னொரு சகாப்தம்—நெப்போலியன் போர்களின் சகாப்தம் போல்—சோவியத் ருஷ்யா மீது ஆக்கிரமிப்பாளர்கள் சுமத்திய விடுதலை போர்களின்

(ஒன்றல்ல, பல போர்கள்) சகாப்தமாக இருக்கலாம். அது சாத்தியமே.

எனவே, ராணுவம் இராத காரணத்தால் கட்டாய மாகச் செய்து தீர வேண்டியிருக்கிற அந்தக் கடுமையான, மிகவும் கடுமையான சமாதானத்தையும்விட, எந்த அவ மானகரமான சமாதானத்தையும்விட, அவமானகரமான நிராசையே அதிக அவமானகரமானது. புரட்சி யெழுச்சியை யும் போரையும் பொறுப்பு உணர்ச்சியோடு எடுத்துக் கொண் டால், ஒரு டஜன் மோசமான சமாதான ஒப்பந்தங்களாலும் கூட நாம் சாக மாட்டோம். நிராசையாலும், வாய்ச்சொல் வீச்சாலும் நம்மை நாமே அழித்துக் கொள்ளாமலிருந்தால் நாட்டைப் பிடிப்பவன் எவனும் நம்மை அழிக்க முடியாது.

பிராவ்தா, இதழ் *37,*
பிப்ரவரி 28 (15), 1918;
பிராவ்தா, இதழ் *38,*
மார்ச்சு 1 (பிப்ரவரி 16), 1918

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 399-407

ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)இன் விசேஷ ஏழாவது மாநாடு[61]

மார்ச்சு 6—8 1918

1

மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை மார்ச்சு 7

ஓர் அரசியல் அறிக்கை மத்தியக் கமிட்டி எடுத்த நடவடிக்கைகளை வரிசைப்படுத்திக் கூறும் ஒன்ருக இருக்கலாம்; ஆனல் இன்றுள்ள நிலையில் இன்றியமையாததாக இருப்பது அத்தகைய ஓர் அறிக்கையல்ல, — மாருக நமது புரட்சி முழுவதினதும் மொத்தமான பார்வையீடு தேவை; இதனல் மட்டுமே நமது முடிவுகள் எல்லாவற்றுக்கும் மார்க்சிய அடிப்படையைத் தர முடியும். புரட்சியின் வளர்ச்சியின் முழு முந்திய போக்கையும் பரிசீலித்து, அதன் பிந்திய வளர்ச்சிப் போக்கு ஏன் மாற்றமடைந்தது என்பதை நாம் கண்டறிய வேண்டும். சர்வதேசப் புரட்சிக்குப் பிரம்மாண்ட முக்கியத்துவம் உடைய திரும்பு முனைகள் நமது புரட்சியில் இருந்தன; இத்தகைய திரும்பு முனைகளில் ஒன்று அக்டோபர் புரட்சி.

பிப்ரவரிப் புரட்சியில் முதல் வெற்றிகள் ஏற்பட்டதற்குக் காரணம் பாட்டாளி வர்க்கத்தைக் கிராமப்புறப் பொது மக்கள் மட்டுமன்றி முதலாளிகளும் பின்பற்றியதுதான். இதனல் ஜாரிசத்தை எதிர்த்து எளிதாக வெற்றி பெற முடிந்தது; 1905ல் இதைச் சாதிக்க முடியவில்லை. பிப்ரவரிப் புரட்சியில் தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் எவ்விதக் கட்டளையுமின்றி அமைக்கப்பெற்றது 1905 ஆண்டின் அனுபவத்தைப் பின்பற்றியது. நாம் சோவியத் ஆட்சியின் கோட்பாட்டினைப் பிரகடனம் செய்ய நேர்ந்தது.

போராட்டத்தில் தங்களுக்கு ஏற்பட்ட சொந்த அனுபவத்திலிருந்தே பொது மக்கள் புரட்சியின் கடமைகளைக் கற்றுக் கொண்டனர். ஏப்ரல் 20—21 தேதிய நிகழ்ச்சிகள் ஆர்ப்பாட்டமும் ஆயுதந்தாங்கிய எழுச்சி போன்றதொன்றும் விசித்திரமான வகையில் இணைக்கப் பெற்றவையாகும். முதலாளித்துவ அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு இது போதிய காரணமாக இருந்தது. இதன் பிறகு அதிகாரத்திற்கு வந்திருந்த குட்டி முதலாளித்துவ அரசாங்கத்தின் இயல்பிலிருந்து கிளைத்த சமரசக் கொள்கையின் நீண்ட கால கட்டம் தொடங்கியது. ஜூலை நிகழ்ச்சிகளால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்க முடியவில்லை, ஏனெனில் பொது மக்கள் இன்னும் அதற்கு ஆயத்தமானவர்களாக இல்லை. இதனால்தான் இதைச் செய்யும்படிப் பொறுப்புள்ள எந்த ஸ்தாபனமும் அவர்களை அழைக்கவில்லை; ஆனால் விரோதிகள் முகாமில் சென்று வேவு காணும் நடவடிக்கை என்ற முறையில் ஜூலை நிகழ்ச்சிகள் மிகப் பெரிய முக்கியத்துவம் வாய்ந்தவை. நடைமுறைப் படிப்பினைகள் என்ற முறையில் கர்னீலவ் கலகமும்[62] பிந்திய நிகழ்ச்சிகளும் அக்டோபர் வெற்றியைச் சாத்தியமாக்கின. அக்டோபரிலும்கூட அதிகாரத்தைப் பங்கீடு செய்ய நினைத்தவர்களின்[63] பிசகு அவர்கள் அக்டோபர் வெற்றியை ஜூலை நாட்கள், தாக்குதல், கர்னீலவ் கலகம் முதலானவைகளுடன் இணைப்பதற்குத் தவறியதேயாகும்; இந்த நிகழ்ச்சிகள் சோவியத் ஆட்சி தவிர்க்க முடியாதது என்று லட்சோபலட்சம் சாமான்ய மக்களை உணர வைத்தன. இதைத் தொடர்ந்து ருஷ்யா முழுவதிலும் எல்லோரும் சமாதானத்தை விரும்பும் சூழ்நிலைமையில் நமது வெற்றிகரமான பவனி தொடங்கியது. நாம் மட்டும் தனியாக போரிலிருந்து வாபஸ் பெறுவதின் மூலம் சமாதானத்தைப் பெற முடியாது என்பது நமக்குத் தெரியும்; ஏப்ரல் மாநாடு* நடந்த அன்றே இதை நாம் சுட்டிக் காட்டினோம். சமரசக் கொள்கை போரை நீடிக்கச் செய்கிற

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கங்கள் 101—196 பார்க்க.—ப-ர்.

தென்றும், அந்தக் கொள்கை தாக்குதல் தொடுக்கவும் பல வருடங்கள் நீடிக்கக் கூடிய ஒரு போரில் சிக்கிக்கொள்ள வும் ஏகாதிபத்தியவாதிகளின் மிருகத்தனமான வீண் முயற்சி களில் கொண்டுவிடுகிறது என்றும் ஏப்ரலுக்கும் அக்டோ பருக்கும் இடையிலிருந்த காலகட்டத்தில் படைவீரர்கள் தெட்டத் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். இந்தக் காரணத்தினுல்தான் இயன்ற அளவு விரைவாகச் சமாதானத் திற்கான தீவிரக் கொள்கையினை எந்த விலை கொடுத்தும் ஏற்பது அவசியமாக இருந்தது, சோவியத்துகள் தங்க ளுடைய கரங்களில் அதிகாரத்தை மேற்கொள்வதும் நிலப் பிரபுக்களின் உடைமைகளை இறுதியாக ரத்துச் செய்வதும் அவசியமாக இருந்தன. நிலப்பிரபுக்களின் உடைமைகளை கேரென்ஸ்கி மட்டுமன்றி அவ்க்சேன்தியெவும் ஆதரித்தார் கள் என்பதும் அவர்கள் நிலக் கமிட்டி உறுப்பினர்களைக் கைது செய்யுமாறு உத்தரவிடுமளவுக்குச் சென்று விட்டனர் என்பதும் உங்களுக்குத் தெரியும். நாம் மிகப் பெரும்பா லான மக்கள் உள்ளத்தில் பதித்த இந்தக் கொள்கையும் ''சோவியத்துகளுக்கு அதிகாரம்'' என்ற கோஷமும் அக் டோபரில் பீட்டர்ஸ்பர்கில் மிக எளிதில் வெற்றி பெறு வதற்கு உதவின; ருஷ்யப் புரட்சியின் இறுதி மாதங்களைத் தொடர்ந்த வெற்றிப் பவனியாக மாற்றின.

உள்நாட்டுப் போர் யதார்த்தமாகியது. புரட்சியின் துவக்கத்தில், போரின் துவக்கத்திலேயே, நாம் எடுத் துரைத்த அனுமானம், அதாவது ஏகாதிபத்தியப் போர் உள் நாட்டுப் போராக மாறும் என்ற அனுமானம், அதை சோஷ லிஸ்டு வட்டாரங்களில் கணிசமான பகுதியினர் அவநம் பிக்கையுடனும் கேலியுடனும் அசட்டை செய்திருந்த போதி லும், போரில் ஈடுபட்டிருந்த ஒரு மிகப்பெரிய நாட்டில், மிகவும் பின்தங்கிய நாட்டில், 1917 அக்டோபர் 25ல் வாஸ்தவத்திலேயே நிறைவேறியது. இந்த உள்நாட்டுப் போரில் மிகப் பெரும்பாலான மக்கள் நமது பக்கம் நிற்பது நிரூபணமாயிற்று, இதனுல்தான் இவ்வளவு அசாதாரண மான அளவு எளிதாக வெற்றி கிட்டியது.

போர்முனையை விட்டு நீங்கிய படைகள், சமரசக் கொள்

கைக்கு முடிவு கட்ட வேண்டும் என்ற அதிகப்பட்சமான புரட்சி உறுதியினைத் தாம் சென்ற இடங்களுக்கெல்லாம் கொண்டு சென்றன; சமரசத்தை ஆதரிக்கும் சக்திகள், வெண்படையினர், நிலப்பிரபுக்களின் புதல்வர்கள் மக்களிடை எல்லாவித ஆதரவையும் இழந்து நின்றார்கள். விரிவான பொது மக்களும், நமக்கு எதிராக அனுப்பப்பட்ட ராணுவப் படைப்பிரிவினரும் போல்ஷிவிக்குகளின் பக்கம் சேர்ந்து விட்டதால் அவர்களை எதிர்த்து நடத்திய போராட்டம் படிப்படியாகப் புரட்சியின் வெற்றிப் பவனியாக மாறியது. இதை நாம் பெத்ரோகிராதில் கண்டோம்; காட்சின முனையிலும் கண்டோம்; அங்கு கேரென்ஸ்கியும், கிரஸ்னேவும் செந்தலைநகருக்கு எதிராகத் தலைமை தாங்கி நடத்தி வந்த கசாக்குகள் ஊசலாடத் தொடங்கின; பின்னல் இதை மாஸ்கோவிலும், ஒரென்பூர்கிலும், உக்ரேனிலும் கண்டோம். ருஷ்யா முழுவதிலும் உள்நாட்டுப் போர் அலையாகப் பொங்கியடித்தது; பழம் கனிந்துவிட்ட காரணத்தால், பொது மக்கள் முதலாளிகளோடு சமரசம் செய்யும் கொள்கையின் எல்லா விளைவுகளையும் அனுபவித்துவிட்ட காரணத்தால், எங்கணும் நாம் அசாதாரணமான முறையில் மிக எளிதாக வெற்றி ஈட்டினேம். ''சோவியத்துகளுக்கே முழு அதிகாரமும்'' என்ற நமது கோஷம், நீண்ட கால வரலாற்று ரீதியான அனுபவத்தால் பொது மக்கள் நடைமுறையில் சோதனை நடத்தியதன் விளைவாக, அவர்களது சதையும் ரத்தமுமாகப் பரிணமித்து விட்டது.

இதனுல்தான் 1917 அக்டோபர் 25க்குப் பிறகு உள்ள முதல் மாதங்களில் ருஷ்யப் புரட்சி தொடர்ச்சியான வெற்றிப் பவனியாகத் திகழ்ந்தது. இந்தத் தொடர்ந்த வெற்றிப் பவனியின் விளைவாக, சோஷலிஸ்டு புரட்சிக்குத் தவிர்க்க முடியாத வகையில் உடனடியாக எதிர்ப்பட்ட கஷ்டங்கள் மறக்கப் பெற்றன, பின்னணிக்குத் தள்ளப் பெற்றன. முதலாளித்துவப் புரட்சிக்கும் சோஷலிஸ்டு புரட்சிக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளில் ஒன்று: நிலப்பிரபுத்துவத்திலிருந்து எழும் முதலாளித்துவப் புரட்சி விஷயத்தில் பழைய அமைப்பின் ஆழத்தில் புதிய பொருளாதார ஸ்தாபனங்

கள் படிப்படியாகச் சிருஷ்டியாகி அவை நிலப்பிரபுத்துவ சமூகத்தின் சகல அம்சங்களையும் படிப்படியாக மாற்றுகின்றன என்பதாகும். முதலாளித்துவப் புரட்சியின் முன் ஒரே ஒரு கடமை இருந்தது, அதாவது முந்திய சமூக அமைப்பின் கட்டுகளை எல்லாம் ஒழித்தல், அகற்றல், நிர்மூலமாக்குதல் என்பதே. இந்தக் கடமையினை நிறைவேற்றுவதன் மூலம் ஒவ்வொரு முதலாளித்துவப் புரட்சியும் தன்னால் தேவைப் படுவதைப் பூர்த்தி செய்கிறது; முதலாளித்துவத்தின் வளர்ச் சியை அது துரிதப்படுத்துகிறது.

சோஷலிஸ்டு புரட்சி முற்றிலும் வேறான நிலையில் இருக் கிறது. வரலாற்றின் நெளிவு சுளிவுகள் காரணமாக சோஷ லிஸ்டு புரட்சியைத் தொடங்கும் நாடு எவ்வளவு அதிகமாகப் பின்தங்கி நிற்குமோ, பழைய முதலாளித்துவ உறவு களிலிருந்து சோஷலிஸ்டு உறவுகளுக்கு மாறிச் செல்வது அதற்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கும். நிர்மூலம் செய் யும் கடமைகளுடன் நம்ப முடியாத அளவு கஷ்டமான புதிய கடமைகள், ஸ்தாபனக் கடமைகள், சேர்ந்து நிற் கின்றன. 1905ன் மகத்தான அனுபவத்தைப் பெற்ற ருஷ்யப் புரட்சியின் பொதுஜனப் படைப்பாற்றல் 1917 பிப்ரவரி யிலேயே சோவியத்துகளைச் சிருஷ்டித்திராவிட்டால் அக்டோ பரில் எக்காரணத்தைக் கொண்டும் அவை ஆட்சி அதிகாரத் தினை ஏற்றிருக்க முடியாது; காரணம், இயக்கத்தின் தயாராக வுள்ள, லட்சோபலட்சம் மக்களைத் தழுவி நிற்கும் ஸ்தா பன வடிவங்களைச் சார்ந்தே வெற்றி பெறுவது சாத்திய மாக இருந்தது. அப்படிப்பட்ட தயாராகவுள்ள வடிவமாக சோவியத்துகள் விளங்கின; இதனால்தான் அரசியல் துறை யில் நமக்கு ஒளிமயமான வெற்றிகள் கிடைத்தன; இதனால் தான் நாம் அனுபவித்த வெற்றிப் பவனி நடந்தது; ஏனென் றால் அரசியல் ஆட்சியின் புதிய வடிவம் ஏற்கெனவே தயாரா கவே இருந்தது. நாம் செய்ய வேண்டியிருந்ததெல்லாம், சில உத்தரவுகளை நிறைவேற்றுவதன் மூலம் புரட்சியின் முதல் மாதங்களில் கரு உருவில் இருந்த சோவியத்துகளின் ஆட்சியை ருஷ்ய அரசில் நிறுவப்பெற்று விட்ட சட்டபூர்வ மான வடிவமாக—ருஷ்ய சோவியத் குடியரசாக—மாற்று

வது என்பது மட்டுமே. இக்குடியரசு எடுத்த எடுப்பி லேயே பிறந்து விட்டது; அது அப்படி உடனடியாகவும் சுளுவாகவும் பிறந்ததற்குக் காரணம், எந்தக் கட்சியும் இந்த கோஷத்தை வெளியிடும் முன்பே 1917 பிப்ரவரி யில் பொது மக்கள் சோவியத்துகளை நிறுவி விட்டதுதான். 1905ல் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால் அறிவு பெற்று இயங்கிய மக்களின் ஆழ்ந்த படைப்பாற்றல்தான் பாட் டாளி வர்க்க ஆட்சியின் இந்த வடிவத்தைச் சிருஷ்டித்தது. உள்நாட்டு விரோதிகளை எதிர்த்து வெற்றி பெறுவது என் பது மிகவும் எளிதாயிற்று. அரசியல் ஆட்சியைப் படைப் பதும் மிகவும் எளிதாகவே இருந்தது, ஏனெனில் பொது மக்கள் இந்த ஆட்சியின் எலும்புக்கூட்டினை, அடிப்படை யினை நம்மிடம் கொடுத்தனர். சோவியத் குடியரசு எடுத்த எடுப்பிலேயே பிறந்து விட்டது. ஆனால் பிரம்மாண்டமான கஷ்டமுடைய இரு பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படா மலிருந்தன; இவற்றுக்குப் பரிகாரம் காண்பது புரட்சியின் தொடக்க மாதங்களில் நடந்த வெற்றிப் பவனி போல எளிதல்ல; சோஷலிஸ்டு புரட்சியின்முன் பின் நாட்களில் பிரம்மாண்டமான கஷ்டமுடைய கடமைகள் எழும் என்பது பற்றி எங்களுக்குச் சந்தேகம் இருக்கவில்லை, சந்தேகம் இருக்க முடியாது.

முதலாவதாக, ஒவ்வொரு சோஷலிஸ்டு புரட்சியும் எதிர்நோக்கும் உள் ஸ்தாபனம் பற்றிய கடமைகள் இருந் தன. சோஷலிஸ்டு புரட்சிக்கும் முதலாளித்துவப் புரட்சிக்கு முள்ள வேறுபாடு என்னவென்றால் பின்னதின் விஷயத்தில் தயாராக உருவாக்கப்பெற்ற முதலாளித்துவ உறவுகள் இருக்கும்; ஆனால் சோவியத் ஆட்சி, பாட்டாளி வர்க்க ஆட்சி, தயாராகவுள்ள இத்தகைய உறவுகளைப் பெறுவ தில்லை; சாராம்சத்தில் தொழிற்துறையின் சில மேல்தட்டு களைச் சார்ந்திருந்த, விவசாயத்தில் மிகச் சிறிய அளவி லேயே பரவியிருந்த மிக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ வடிவங்களை நான் இங்கே குறிப்பிடவில்லை. கணக்கிடுதலை அமைத்தல், மிகப் பெரிய தொழிற்சாலைகளைக் கண்காணிப்பு செய்தல், நாட்டின் முழுப் பொருளாதார இயந்திரத்தை

ஒரே ஒரு பெரிய இயந்திரமாக, ஒரே ஒரு திட்டம் வழிகாட்ட லட்சோபலட்சம் மக்கள் வேலை செய்யும் ஒரு பொருளாதார அமைப்பாக, மாற்றுவது என்ற பிரம்மாண்டமான ஒழுங்கமைப்புக் கடமை நமது தோள் மீது சுமத்தப்பட்டிருந்தது. இப்போது தொழிலாளர்கள் இருந்துவரும் நிலையில் உள்நாட்டுப் போர் பிரச்சினைகளை நாம் தீர்த்துக்கொண்டது போல ''ஜே!'' கோஷம் போட்டு இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண முடியாது. விஷயத்தின் சாரமே இத்தகைய முறையில் பரிகாரம் காண்பதைத் தடை செய்தது. கலேதினுடைய ஆதரவாளர்களை எதிர்த்து எளிதில் வெற்றி கண்டு, முக்கியம் என்று கருதக்கூட இடமில்லாத எதிர்ப்பைச் சமாளித்து சோவியத் குடியரசை நாம் ஸ்தாபித்தோம்; நிகழ்ச்சிகளின் இத்தகைய போக்கு முந்திய யதார்த்த வளர்ச்சி முழுவதாலும் நிர்ணயிக்கப்பெற்றதாக இருந்தது; எனவே, நாம் செய்ததெல்லாம் கடைசிச் சொல்லை உச்சரித்து விளம்பரப் பலகையினை மாற்றியது, அதாவது ''சோவியத் ஒரு தொழிற்சங்க அமைப்பாக உள்ளது'' என்ற விளம்பரப் பலகையைக் கழற்றிவிட்டு அதன் இடத்தில் ''சோவியத் அரசாங்க அதிகாரத்தின் ஒரே ஒரு வடிவம்'' என்ற பலகையினை மாட்டியதுதான்; ஆனால் ஒழுங்கமைப்புப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இந்தத் துறையில் நமக்கு மிகப் பெரிய கஷ்டங்கள் எதிர்ப்பட்டன. நமது புரட்சியின் கடமைகள் குறித்துச் சிந்தனை செய்ய விரும்பும் எவருக்கும், முதலாளித்துவ சமூகத்தில் போர் விளைத்துள்ள சீர்குலைவினைச் சமாளிப்பதற்குச் சுயக் கட்டுப்பாடு என்ற நெடிய கடினமான பாதையில் செல்ல வேண்டும் என்பதும் அசாதாரணமாகக் கடினமான, இடைவிடாத, நீண்டகால உழைப்பின் மூலம் மட்டுமே இந்தச் சீர்குலைவைச் சமாளிக்கவும் அதைத் தீவிரப்படுத்தும் சக்திகளை—இந்தச் சக்திகள் புரட்சியினைப் பழைய விலங்குகளை அகற்றும் வழி என்று கருதி எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு ஆதாயத்தினைத் தங்களுக்கெனப் பெற்றுக்கொள்ள முனைந்தன—முறியடிக்கவும் முடியும் என்பதும் தெட்டத் தெளிவாக இருந்தன. நம்ப

முடியாத அளவு பொருளாதாரக் குழப்பம் இருந்த காலத்தில் சிறு விவசாயிகள் பெரும்பான்மையாக உள்ள ஒரு நாட்டில் இத்தகைய சக்திகள் பெரிய அளவில் தோன்றியது தவிர்க்க முடியாததாக இருந்தது; இந்தச் சக்திகளை எதிர்த்து நாம் போராட வேண்டும்; இப்போதுதான் தொடங்கியுள்ள இந்தப் போராட்டம் நூறு மடங்கு கடினமானது, இதில் ஆடம்பரமான வாய்ப்புகள் எவையும் இல்லை. நாம் இந்தப் போராட்டத்தின் முதல் கட்டத்தில்தான் இருக்கிறோம். நம் முன் கடினமான சோதனைகள் உள்ளன. கலேதினைப் பின்பற்றியவர்களை எதிர்த்துப் போராடிய போது கொடி பறக்கவிட்டு நாம் வெற்றிப் பவனி வந்தது போல வரலாம் என்ற கருத்துக்கு யதார்த்த நிலைமைகள் இடந்தரவில்லை. இந்தப் போராட்ட முறையைப் புரட்சியின் முன் உள்ள ஒழுங்கமைப்புக் கடமைகளுக்குக் கையாள முயலும் எவரும் ஓர் அரசியல்வாதி, ஒரு சோஷலிஸ்டு, சோஷலிஸ்டு புரட்சியின் ஒரு தீவிர ஊழியர் என்ற வகையில் திவாலானவராகக் காட்சியளிப்பார்.

புரட்சியின் முன், அதன் தோள் மீது சுமத்தப்பட்ட பிரமாண்டமான கஷ்டங்களில் இரண்டாவது க்ஷ்டம், அதாவது சர்வதேசப் பிரச்சினை, ஸ்தூலமான உருவில் எழுந்த போது புரட்சியின் தொடக்க கால வெற்றிப் பவனியில் மயங்கிப் போன நமது இளந்தோழர்களில் சிலரது பாடு இப்படித்தான் இருந்தது. நாம் கேரென்ஸ்கி கும்பல்களை எதிர்த்து இவ்வாறு எளிதாக வெற்றி அடைந்தோம் என்றால், நம் நாட்டில் இவ்வாறு எளிதாக ஆட்சியைச் சிருஷ்டித்தோம் என்றால், மிகச் சிறிய கஷ்டம்கூட இன்றி நிலங்களைச் சமூகவுடைமையாக்கல், தொழிலாளர் கண்காணிப்பு இவற்றைப் பற்றிய அரசாணைகளை நிறைவேற்றினோம் என்றால், இவை அனைத்தையும் நாம் இவ்வளவு எளிதாகப் பெற்றோம் என்றால், அதற்குக் காரணம், அதிருஷ்டவசமாக அமைந்த நிலைமைகளின் இணைவு நம்மைச் சிறிது காலத்துக்குச் சர்வதேச ஏகாதிபத்தியத்திடமிருந்து காப்பாற்றிற்று என்பது தான். தனது மூலதனத்தின் முழு வலிமையும், மிக உயர்ந்த முறையில் ஒழுங்கமைக்கப்பெற்றுள்ள தனது ராணுவத்

தந்திரமும்—இதில் சர்வதேச முதலாளித்துவத்தின் அசல் பலமும் அசல் உறுதியும் அடங்கியிருக்கின்றன—இவற்றுடன் கூடிய சர்வதேச ஏகாதிபத்தியம் எந்த சந்தர்ப்பங்களிலும், எந்த நிலையிலும் சோவியத் குடியரசுடன் அக்கம் பக்க மாக வாழ முடிந்திராது; அதன் யதார்த்த நிலையும், அத னுடன் பிணைந்துள்ள முதலாளித்துவ வர்க்கத்தின் பொரு ளாதார நலன்களும் அதற்குக் காரணமாகும்; வர்த்தகத் தொடர்புகள், சர்வதேச நிதி உறவுகளின் விளைவாக அது சோவியத் குடியரசுடன் அக்கம் பக்கமாக வாழ முடிந் திராது. இந்தத் துறையில் மோதல் தவிர்க்க முடியாதது. இதுதான் ருஷ்யப் புரட்சிக்கு ஏற்பட்ட மிகப் பெரும் இடர்ப் பாடு, அதன்முன் எழுந்த மிகப் பெரிய வரலாற்றுப் பிரச் சினை: சர்வதேசப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண வேண் டிய அவசியம், ஒரு சர்வதேசப் புரட்சியை எழுப்பவும் நமது குறுகிய தேசியப் புரட்சியிலிருந்து உலகப் புரட்சிக் கான மாற்றத்தைக் கொண்டுவரவும் வேண்டிய அவசியம். இந்தப் பிரச்சினை நம்ப முடியாத அளவுள்ள இடர்ப்பாடுடன் நமக்கு எதிர்ப்பட்டிருக்கிறது. தங்களை இடதுசாரியினர் என்று கருதி வந்த நமது இளம் நண்பர்களில் மிகப் பலர் மிக முக்கியமான விஷயத்தை—அதாவது அக்டோபருக்குப் பிந்திய, மாபெரும் வெற்றி நிகழ்ந்த வாரங்களில், மாதங்க ளில் நாம் ஏன் மிக எளிதாக வெற்றி மேல் வெற்றி கண் டோம் என்பதை—மறக்கத் தொடங்கி விட்டார்கள் என்று நான் மீண்டும் கூறுகிறேன். ஆனால் நம்மைத் தாற்காலிக மாக ஏகாதிபத்தியத்திடமிருந்து காத்து நிறுத்திய சர்வ தேச சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் விசேஷ இணைவினால்தான் இது சாத்தியமாயிற்று. ஏகாதிபத்தியம் நம்மைப் பொருட் படுத்தும் நிலையில் இருக்கவில்லை. நாமும் அதைப் பொருட் படுத்த மாட்டோம் என்று கருதினோம். எனினும் தனிப்பட்ட ஏகாதிபத்தியவாதிகளுக்கு நம்மைப் பொருட்படுத்த நேரம் இல்லாததன் ஒரே காரணம், நவீன உலக ஏகாதிபத்தியத்தின் முழு மகத்தான சமூக-அரசியல், ராணுவ வலிமையும் அந்தக் காலத்தில் உட்போர் புரிந்து வந்ததால் இரு கோஷ்டி களாகப் பிளவுற்றுக் கிடந்தது. இந்தப் போரில் ஈடுபட்

டிருந்த ஏகாதிபத்தியக் கொள்ளையர் நம்ப முடியாத தொலைக்குச் சென்று விட்டிருந்தனர், சாவுவரை தீராத வெம்போரில் ஒருவரையொருவர் இறுகப் பிடித்திருந்தனர்; இதனுல் இந்தக் கோஷ்டிகளில் எதனுலும் ருஷ்யப் புரட்சிக்கு எதிராகப் பெரிய சக்தியை மையப்படுத்த முடியவில்லை. அக்டோபரில் இத்தகைய சந்தர்ப்பச் சூழ்நிலைகள் நமக்கிருந்தன: இவ்வளவு அதிருஷ்டவசமான சமயத்தில் நமது புரட்சி வெடித்தது முரணுரையாகத் தோன்றும், ஆனுல் அது நியாயமானது; இந்தத் தருணத்தில் மிகப் பெரும்பாலான ஏகாதிபத்திய நாடுகள் லட்சக் கணக்கான மனித உயிர்களை நிர்மூலமாக்குவது என்ற உருவில் முன் என்றும் கேட்டிராத துன்பங்களை அனுபவித்திருந்தன; இதோடு போர் முன் என்றும் கேட்டிராத துன்பங்களால் இந்த நாடுகளின் மக்களை வாட்டி வருத்தியது; இதோடு போர் நடந்த நாலாம் ஆண்டில் போரிடும் நாடுகள் முட்டுச் சந்திற்கு, பாதைப் பிரிவுக்கு வந்தன; இத்தகைய நிலைக்கு வீழ்ந்துவிட்ட மக்கள் தொடர்ந்து போராட முடியுமா என்ற கேள்வி யதார்த்தமாகவே எழுந்தது. இரு ராட்சசக் கொள்ளைக்காரக் கும்பல்கள் உடனடியாக ஒன்றின்மேல் ஒன்று பாயவோ, அல்லது ஒன்று மற்றதுடன் சேர்ந்து நமக்கு எதிராகப் போராடவோ முடியாத நிலையிலிருந்த அதிருஷ்டமான தருணத்தைமட்டுமே, சர்வதேச அரசியல், பொருளாதார உறவுகளில் நிகழ்ந்த இந்தத் தருணத்தை மட்டுமே, நமது புரட்சி ஐரோப்பிய ருஷ்யாவில் ஒளிமிக்க தனது வெற்றிப் பவனியை நடத்தவும் பின்லாந்தில் பரவவும் காக்கஸஸையும் ருமேனியாவையும் கைப்பற்றத் தொடங்கவும் பயன்படுத்த முடிந்தது, அப்படிப் பயன்படுத்தியது. இந்த வெற்றிப் பவனியில் மதி மயங்கி, சர்வதேச ஏகாதிபத்தியத்தையும் சமாளித்து விடலாம், அங்கும் வெற்றிப் பவனி இருக்கும், அங்கும் உண்மையான கஷ்டங்கள் இரா என்று கருதிய கட்சி ஊழியர்கள், படிப்பாளிகளான மீ மனிதர்கள், கட்சியின் முன்னணிப் பகுதிகளில் தோற்றமளித்ததற்கும் இதுவே காரணமாகும். இதில்தான் ருஷ்யப் புரட்சியின் யதார்த்த நிலையில் உள்ள முரண்பாடு அடங்கியிருக்

கிறது; சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்டிருந்த தாற்காலிகத் திண்டாட்டத்தை ருஷ்யப் புரட்சி தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது; ரயில்வே வண்டி ஒரு சக்கரக் கைவண்டி மீது மோதி அதைச் சுக்கு நூறுக உடைப்பது போல நம்மீது மோதவிருந்த இயந்திரம் சிறிது காலத்திற்குத் தடைபட்டிருந்தது; அது தடைபட்டதற்குக் காரணம் இரு கொள்ளைக்காரக் கும்பல்கள் மோதியதேயாகும். இங்கும் அங்கும் புரட்சி இயக்கம் வளர்ந்து வந்தது, ஆனல் எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும், எவ்வித விலக்கும் இன்றி, இந்த இயக்கம் பெரும்பாலான இடங்களில் இன்னும் துவக்கக் கட்டத்திலேயே இருந்தது. அதன் வளர்ச்சி வேகம் நம்முடையதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. ஐரோப்பாவில் சோஷலிஸ்டு புரட்சிக்குரிய பொருளாதார முதனிலைகள் பற்றிக் கவனமாகக் கருத்துச் செலுத்தும் எவருக்கும் ஐரோப்பாவில் புரட்சியினைத் தொடங்குவது அளவிட முடியாத வகையில் மிகக் கடினம், நம் நாட்டிலோ அதைத் தொடங்குவது அளவிட முடியாத வகையில் மிகவும் எளிது, ஆனல் அங்குள்ளதை விட இங்கு புரட்சியினைத் தொடர்ந்து நடத்துவது என்பது மிகக் கடினம் என்பது முற்றிலும் தெளிவாக இருந்தது. இந்த யதார்த்த நிலையின் விளைவாக நாம் அசாதாரணமாகக் கடினமான, சட்டென நிகழ்ந்த வரலாற்றுத் திசை மாற்றத்தை அனுபவிக்க நேர்ந்தது. நமது எதிர்ப்பு சக்திகளுக்கு எதிராக, சோவியத் ஆட்சியின் விரோதிகளுக்கு எதிராக நமது உள்நாட்டுப் போர் முனையில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடந்த ஒரே வெற்றிப் பவனியிலிருந்து நம்மிடம் உண்மையான பகைமை வைத்திருக்கும் உண்மையான சர்வதேச ஏகாதிபத்தியத்துடன் போராடுவதற்கு நாம் மாறிச் செல்ல வேண்டியிருந்தது. வெற்றிப் பவனி என்ற காலகட்டத்திலிருந்து அசாதாரணமான வகையில் கடுமையான, கடினமான நிலை என்ற காலகட்டத்துக்கு மாறிச் செல்ல வேண்டியிருந்தது; இந்தக் கடுமையான, கடினமான நிலையிலிருந்து எவ்விதமான ஒளிமிகுந்த கோஷங்களின் மூலமும் சொற்களின் மூலமும்—அது எவ்வளவு இனிமையாக

இருப்பினும்சரியே—தப்பித்துக் கொள்ள முடியவில்லை; ஏனெனில் சீர்குலைந்திருக்கும் நமது நாட்டில் மக்கள் நம்ப முடியாத அளவுக்குச் சோர்ந்து போய் விட்டனர்; அவர்கள் தொடர்ந்து போராடுவது சாத்தியமல்ல என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது, மூன்றாண்டு காலத்திய, கடும் வேதனை தரும் போரின் விளைவாக அவர்கள் தகர்ந்துபோய் ராணுவ ரீதியில் முற்றிலும் பயனற்றவர்களாகி விட்டார்கள். அக்டோபர் புரட்சிக்கு முன்பே ருஷ்யப் படைகள் போராட மாட்டா என்று எல்லா முதலாளிகளிடமும் சற்றும் தயக்கமின்றிக் கூறிய, போல்ஷிவிக் கட்சி உறுப்பினர்களல்லாத படைவீரர்களின் பிரதிநிதிகளை நாம் பார்த்தோம். ராணுவத்தில் இருந்த இந்த நிலைமை மிகப் பெரிய நெருக்கடியினைக் கொண்டுவந்தது. சிறு விவசாயிகள் பெரும்பான்மையாகவுள்ள ஒரு நாடு போரினால் சீர்குலைந்து, முன்பு கேட்டிராத அளவிற்குத் தாழ்வுற்று மிக மிகக் கடினமான நிலையில் வைக்கப்பட்டது: நம்மிடம் ராணுவம் இல்லை, ஆனால் நாம் சர்வாயுதபாணியான கொள்ளையனுடன் அக்கம் பக்கமாக வாழ வேண்டியுள்ளது, பிரதேசங்களைக் கைப்பற்றி இணைத்துக் கொள்ளாமலும் இழப்பீட்டுத் தண்டத் தொகை இல்லாமலும் சமாதானம் வேண்டும் என்பதற்கு ஆதரவாக எழும் கிளர்ச்சியினால் அவன் சற்றும் பாதிக்கப்படாமல் கொள்ளையனாகவே இருந்து சூறையாடி வருகிறான். ஒரு சாதுவான வீட்டுப் பிராணி புலியுடன் அண்டையில் படுத்திருந்து பிரதேசங்களைக் கைப்பற்றி இணைத்துக்கொள்ளாமலும் இழப்பீட்டுத் தண்டத் தொகை இல்லாமலும் சமாதானத்திற்கு வரும்படி அதைக் கெஞ்சியது போல இருந்தது அந்த நிலை; இத்தகைய சமாதானத்தைப் பெற ஒரே வழி புலியைத் தாக்குவதுதான். நமது கட்சியின் மேல்தட்டுகளைச் சேர்ந்த சில படிப்பாளிகளும் தொழிலாளர் ஸ்தாபனங்களின் ஒரு பகுதியினரும், இது இருக்க வேண்டிய முறை அல்ல என்ற சாக்குப்போக்குகளையும் கிளப்பிவிட்டு இந்த எதிர்கால சாத்தியப்பாட்டினை ஒதுக்கித் தள்ள முயன்றார்கள். இப்படிப்பட்ட சமாதானம் சாத்தியம் என்பது அவர்களுக்கு நம்ப இயலாததாக இருந்தது; இதுகாறும்

நாம் ரண களத்தில் கொடிகளைப் பறக்கவிட்டுச் சென்ருேம்; பெரிய ''ஜே'' கோஷங்களை எழுப்பி நமது எதிரிகள் அனைவரின் மீதும் வெற்றியடைந்தோம்; ஆகவே அவக்கேடான நிபந்தனைகளை ஏற்றுப் பணிவது என்பது அவர்களுக்குச் சிந்திக்க முடியாததாக இருந்தது. நிச்சயமாக இல்லை! நாம் மிக மிகப் பெருமை கொண்ட புரட்சியாளர்கள்; எல்லாவற்றுக்கும் மேலாக ''ஜெர்மானியர் நம்மைத் தாக்க முடியாது''[64] என்று நாம் பிரகடனம் செய்கிருேம்.

இந்த நபர்கள் தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்ட முதல் வாதம் இதுவே. வாலாறு நம்மை தற்போது அசாதாரணமாகக் கஷ்டமான நிலையில் மாட்டிவைத்திருக்கிறது; என்றும் கேட்டிராத இடர்ப்பாடுகள் நிறைந்த ஒழுங்கமைப்புப் பணிகளின் நடுவே நாம் பல வேதனை தரும் தோல்விகளை அனுபவிக்க நேரும். உலக வரலாற்றின் கண்ணேட்டத்துடன் பார்க்கும் போது நமது புரட்சி தன்னந்தனியாக இருக்குமானுல், வேறு நாடுகளில் புரட்சி இயக்கங்கள் இல்லாவிடில், அதன் இறுதி வெற்றியில் எவ்வித நம்பிக்கையும் நிச்சயமாக இராது. போல்ஷிவிக் கட்சி இந்தப் பணியினைத் தனியாக மேற்கொண்ட போது புரட்சி எல்லா நாடுகளிலும் முதிர்ச்சியடைந்து வருகிறது—நாம் எத்தகைய இடர்ப்பாடுகளை அனுபவிக்க நேரினும்சரி, எதிர்காலத்தில் என்ன தோல்விகள் வந்தபோதிலும்சரி—இறுதியில், துவக்கத்தில் அல்ல, உலக சோஷலிஸ்டு புரட்சி வரும், ஏனெனில் அது அணுகிக் கொண்டிருக்கிறது, அது முதிர்ச்சியடையும், ஏனெனில் அது முதிர்ச்சியுற்று வருகிறது, முழுமையாக முதிர்ச்சியுறும் என்ற உறுதியான நம்பிக்கையுடன்தான் நாம் இப்பணியினை மேற்கொண்டோம். இந்த இடர்கள் எல்லாவற்றிலிருந்தும் நமக்கு விமோசனம் தருவது ஐரோப்பியப் புரட்சியே என்று திரும்பவும் கூறுகிறேன். இந்த உண்மையினை, முற்றிலும் கருத்தியலான இந்த உண்மையினை, அடிப்படையாயும் வழிகாட்டியாயும் கொண்டு இது நாளடைவில் வெற்றுச் சொல்லாகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; ஏனெனில் எந்தக் கருத்தியலான உண்மையினையும் பகுப்பாய்வு செய்யாது பயன்படுத்திஞல் அது வெறும்

வாய்ச் சொல்லாகிவிடும். ஒவ்வொரு வேலைநிறுத்தமும் புரட்சியின் வெட்ட வெட்டத் தலை முளைக்கும் பாம்பினைத் தன்னுள் மறைத்துக் கொண்டிருக்கிறது, இதைப் புரிந்து கொள்ளாதவன் சோஷலிஸ்டாக இருக்க முடியாது என்று கூறுவது சரி. ஆம். ஒவ்வொரு வேலைநிறுத்தத்தின் பின்னாலும் சோஷலிஸ்டு புரட்சி கவிந்து நிற்கிறது. ஆனால் ஒவ்வொரு குறிப்பிட்ட வேலைநிறுத்தமும் சோஷலிஸ்டு புரட்சிக்கான உடனடி நடவடிக்கை என்று கூறுவது முற்றிலும் வெற்றுச் சொல்லாக இருக்கும். ''ஒவ்வொரு தடவையும் அதே இடத்திலும்'' என்று சொல்லும் பழமொழியைப் போன்ற இப்படிப்பட்ட சொல்லடுக்குகளைக் கேட்டுக் கேட்டு நமக்குக் காது புளித்துப்போய் விட்டது; இந்த அராஜக வாய்ச் சொற்களை எல்லாம் தொழிலாளர்கள் நிராகரித்து விட்டார்கள். ஏனெனில் ஒவ்வொரு வேலைநிறுத்தத்தின் பின்னாலும் சோஷலிஸ்டு புரட்சியின் பல தலைகளுடைய பாம்பு கவிந்து நிற்பது என்பது எவ்வளவு தெளிவானதோ அந்த அளவுக்கு ஒவ்வொரு வேலைநிறுத்தமும் புரட்சியாகப் பரிணமிக்கலாம் என்று கூறுவது படு அபத்தம் என்பதும் தெட்டத் தெளிவானதாகும். உலக சோஷலிஸ்டு புரட்சி முதிர்ச்சியுறும் போதுதான்—அது இப்போது எங்கும் முதிர்ச்சியுற்று வருகிறது—நமது புரட்சியின் முன் உள்ள கஷ்டங்கள் அனைத்தையும் சமாளிக்க முடியும் என்பது எந்த அளவுக்கு மறுக்க முடியாததோ, அந்த அளவிற்கு இன்று நமது புரட்சியிலுள்ள ஒவ்வொரு ஸ்தூலமான இடர்ப்பாட்டையும் மறைத்துக் கொண்டு ''நான் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தை நம்பியிருக்கிறேன், ஆகவே நான் எந்த முட்டாள் செயலையும் செய்யலாம்'' என்று கூறுவது முற்றிலும் அபத்தம். ''லீப்க்னெஹ்ட் நமக்கு உதவி புரிவார்; ஏனெனில் அவர் வெற்றியடைவது நிச்சயம்.'' அவர் மிகச் சிறந்த ஸ்தாபனத்தைச் சிருஷ்டிப்பார், முன்கூட்டியே எல்லாவற்றையும் நன்ருகத் திட்டமிடுவார், நாமோ மேற்கு ஐரோப்பாவிலிருந்து தயாராயுள்ள மார்க்சிய சித்தாந்தத்தை எடுத்துக் கொண்டது போல — அதன் விளைவாகத்தான் இந்தச் சித்தாந்தம் மேற்கு ஐரோப்பாவில் வெற்றி பெறப்

பல பத்தாண்டுகள் தேவைப்படுகிற போது நம் நாட்டில் அது சில மாதங்களுக்குள் வெற்றி பெற்றது—இங்கும் தயாராயுள்ள வடிவங்களைக் கையாள எடுத்துக்கொள்ள லாம். ஆகவே வெற்றிப் பவனி என்ற பழைய போராட்ட முறையைப் புதிய வரலாற்றுக் காலகட்டத்தில் கையாள் வது முற்றிலும் அர்த்தமற்ற சூதாட்டமாகும். இந்தப் புதிய காலகட்டம் நம் முன் பலவீனமான கேரென்ஸ்கியையோ கர்னீலவையோ அல்ல, சர்வதேசக் கொள்ளையனை ஜெர் மன் ஏகாதிபத்தியத்தை வைத்திருக்கிறது; ஜெர்மனியில் புரட்சி இன்னும் முதிர்ச்சியுற்று வருகிறது, ஆனல் முற்றி லும் முதிர்ச்சியடைந்த நிலையினை எய்தவில்லை என்பது வாஸ்தவம். எதிரிகளுக்குப் புரட்சியைத் தாக்கத் துணி வில்லை என்று கூறியது இத்தகைய சூதாட்டமாக இருந்தது. பிரெஸ்டில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போது நாம் எந்தச் சமாதான நிபந்தனைகளையும் ஏற்கும்படி நிர்ப்பந் திக்கும் நிலை இன்னும் இருக்கவில்லை. சக்திகளின் யதார்த்த அணிசேர்க்கையைப் பார்த்தால் இடைக்காலம் மட்டும் போதாது என்பது தெளிவாக இருந்தது. ஜெர்மானியர் தாக்குதல் தொடுப்பார்கள் என்பதையும் ஜெர்மன் சமூகம் உடனடிப் புரட்சியைப் பெறுமளவு புரட்சிச் சூல் கொண்டு இருக்கவில்லை என்பதையும் பிரெஸ்ட் பேச்சுவார்த்தைகள் எடுத்துக் காட்ட வேண்டியிருந்தது. தங்களுடைய நடத் தையின் மூலம் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் அந்த வெடிப்பை, அல்லது தங்களை இடதுசாரியினராகக் கருது கிற நமது இளம் நண்பர்கள் சொல்வது போல ஜெர் மானியர் தாக்க முடியாத நிலையினை, தயார் செய்யவில்லை என்று நாம் அவர்கள் மீது குற்றம் சாட்டக் கூடாது. நம் மிடம் ராணுவம் இல்லை, புலி ஒன்று நமது சாதுவான வீட்டுப் பிராணியின் பக்கத்தில் படுத்திருக்கிறது என்பதை நாம் நினைவில் வைத்திருந்த போதிலும் நாம் படைகளைக் கலைக் கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று அவர்களுக்குச் சொல் லும் போது அவர்கள் இதைப் புரிந்துகொள்ள மறுக்கிறார் கள். நாம் படைகளைக் கலைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தபோதிலும் நாமாகத் தனியாகத் துப்பாக்கிச் சனி

யன்களை மண்ணில் ஊன்றும்படி உத்தரவு போட்டுப் போரை நிறுத்துவது சாத்தியமல்ல என்பதை ஒரு கணமும் மறந்து விடவில்லை.

பொதுவாகப் பார்க்கும் போது நமது கட்சியில் உள்ள எந்த ஒரு போக்கும், எந்த ஒரு சார்பும், எந்த ஒரு ஸ்தாபனமும்கூடப் படைக்கலைப்பினை எதிர்க்கவில்லை, ஏன்? நமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? சற்றும் இல்லை. படையினால் போராட முடியாது, இன்னும் சில வாரங்கள்கூட அது போர்முனையில் நிற்க முடியாது என்று அக்டோபருக்கு முன்பே போல்ஷிவிக்குகள் அல்லாத படை அதிகாரிகள் கூறியிருந்தார்கள். அக்டோபருக்குப் பின்னால், உண்மைகளை ஏற்க விரும்பும் எவருக்கும், இனிமையற்ற கசப்பான யதார்த்தத்தினைப் பார்க்க விரும்பும் எவருக்கும், மறைந்து நிற்கவோ தொப்பியினால் கண்களை மூடிக்கொள்ளவோ அல்லது, ஐம்பமான சொல்லடுக்குகளால் தம்மை ஏமாற்றிக் கொள்ளவோ விரும்பாத எவருக்கும் இது தெட்டத் தெளிவாக இருந்தது. நம்மிடம் படையில்லை, அதைத் தக்க வைத்திருக்கவும் முடியவில்லை. அதை எவ்வளவு விரைவில் சாத்தியமோ அவ்வளவு விரைவில் கலைப்பதே சிறந்தது. சரீரத்தின் நோயுற்ற உறுப்பைப் போன்ற இந்தப் படை என்றும் கேட்டிராத சித்திரவதைகளை ஏற்றுப் போரின் தொல்லைகளால் மிகவும் அல்லலுற்றது; அது போர்த் தளவாடங்களில் போதிய முஸ்தீப்பின்றிப் போரில் பிரவேசித்து விட்டு ஒவ்வொரு தாக்குதலையும் கண்டு பீதியுறும் நிலையில் இதிலிருந்து வெளிவந்தது. கேட்டிராத இப்படிப்பட்ட துன்பங்களை அனுபவித்து விட்டவர்களின் மீது நாம் இதற்காகக் குற்றஞ்சாட்ட முடியாது. ''நாங்கள் ரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறோம். எங்களால் இனிமேலும் போராட முடியாது'' என்று ருஷ்யப் புரட்சியின் முதற்கட்டத்திலேயே நூற்றுக் கணக்கான தீர்மானங்கள் போட்டுப் படை வீரர்கள் பச்சையாக எடுத்துக் கூறினார்கள். நாம் செயற்கையான முறையில் போரின் முடிவைச் சற்றுத் தள்ளிப் போட்டிருக்கலாம், கேரென்ஸ்கி புரிந்த மோசடி வேலையைச் செய்திருக்கலாம், முடிவைச் சில வாரங்களுக்கு ஒத்திப் போட்

டிருக்கலாம், ஆனல் புறநிலை யதார்த்தம் தனக்குரிய வழியை ஏற்படுத்திக் கொண்டது. ருஷ்ய அரசாங்கம் என்ற சரீரத்தின் நோய் பற்றிய பகுதியான நமது படை இந்தப் போரின் பளுவை இனிமேல் தாங்கவே முடியாது. படையினை எவ்வளவு விரைவில் கலைத்து விடுகிருேமோ அந்த அளவு விரைவில் அது நோய் பற்ருத மற்றப் பகுதிகளில் தோய்ந்து விடும்; அந்த அளவு விரைவில் நாடு புதிய கடுமையான சோதனைகளை எதிர்கொள்ள ஆயத்தமாக முடியும். இதை உணர்ந்தே நாம் ஏகமனதாக, சிறிதும் ஆட்சேபம் இன்றி—வெளிநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது அது அபத்தம் என்று தோன்றினும்—படையினைக் கலைப்பது என்ற முடிவினை ஏற்ருேம். அது ஒரு சரியான நடவடிக்கை. நாம் படையினைக் கலைக்காது வைத்திருக்க முடியும் என்று நம்புவது விளையாட்டுத்தனமான பிரமையே என்று கூறினேம். எவ்வளவு விரைவில் படையினைக் கலைக்கிருேமோ அவ்வளவு விரைவில் சமூகம் என்ற சரீரம் முழுவதும் நலமுறத் தொடங்கும். இதனல்தான் ''ஜெர்மானியரால் தாக்க முடியாது'' என்ற புரட்சிச் சொல்லடுக்கில்—''நாம் போர் நிலை முடிவுற்றதாகப் பிரகடனம் செய்யலாம்; போரும் இல்லை, சமாதான உடன்பாட்டில் கையொப்பமிடுவதுமில்லை''[65] என்ற மற்ருெரு சொல்லடுக்கு இதிலிருந்தே தோன்றியது—மிக ஆழமான தவறு இருந்தது; அது நிகழ்ச்சிகளை மனக்கசப்பு தரும் முறையில் மிகையாக மதிப்பீடு செய்வதின் அத்தாட்சியாக இருந்தது. ஜெர்மானியர் தாக்குகிருர்கள் என்று வைத்துக்கொண்டாலோ? ''இல்லை. அவர்களால் தாக்க முடியாது''. ஆனல் சர்வதேசப் புரட்சியை வைத்து அபாயகரமாக விளையாட உங்களுக்கு உரிமை உண்டா? அந்தத் தருணம் வரும் போது நீங்கள் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் கையாட்களாக நிரூபிக்கப்படலாம் அல்லவா என்ற ஸ்தூலமான கேள்விக்குப் பதில் என்ன? ஆனல் 1917 அக்டோபர் முதல் பாதுகாப்புவாதிகளாகி விட்ட நம் அனைவருக்கும், தந்தையர் நாட்டின் பாதுகாப்பு என்ற கோட்பாட்டினை ஏற்றுள்ள நம் அனைவருக்கும், நாம் ஏகாதிபத்தியத்துடன் சொல்லளவில் மட்டுமல்ல, செயலளவிலும் கூட

முறித்துக் கொண்டு விட்டோம் என்று தெரியும்: நாம் இரகசிய உடன்பாடுகளை அழித்து விட்டோம், நமது சொந்த நாட்டில் முதலாளிகளை முறியடித்து விட்டோம், நம்முடைய நோக்கங்கள் எல்லாம் உண்மையில் என்ன என்பதைச் சகல நாடுகளும் பார்க்கும்படிப் பகிரங்கமான, நேர்மையான சமாதான யோசனையை முன்வைத்துள்ளோம். ஏற்கெனவே தனது விளைவுகளை ஏற்படுத்திவிட்ட இந்தச் சூதாட்டத்தை, சோவியத் குடியரசினைப் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதியான நிலையை ஆதரித்து நிற்பவர்கள் எப்படி மேற்கொள்ள முடியும்? இது உண்மையும் கூட, ஏனெனில் நமது கட்சிக்குள் ''இடதுசாரி'' எதிர்ப்பு உருவானதன் விளைவாக நமது கட்சி அனுபவிக்கிற கடுமையான நெருக்கடி ருஷ்யப் புரட்சி அனுபவிக்கிற மிகப் பெரிய நெருக்கடிகளில் ஒன்றாகும்.

இந்த நெருக்கடி சமாளிக்கப்பெறும். இன்றுள்ள நிலையில் அது மிகவும் அருகிலும் முற்றிலும் சாத்தியமாகவும் இருந்தபோதிலும் நமது கட்சியின், நமது புரட்சியின் கழுத்தை எக்காரணம் கொண்டும் அது முறித்துவிட முடியாது. ஆனால் கோஷ்டி வேறுபாடுகளைத் தீர்க்கப் பழைய முறையைக் கையாள்வதற்குப் பதிலாக, மிக ஏராளமான இலக்கியங்களை வெளியிடுதல், பற்பல விவாதங்கள் நடத்துதல், ஏராளமான பிளவுகளை உண்டாக்கிக் கொள்ளல் என்னும் இந்தப் பழைய முறைக்குப் பதிலாக, கற்றுக்கொள்ளுதல் என்னும் புதிய முறையை நிகழ்ச்சிகள் மக்களுக்கு அளித்திருப்பதே நாம் இந்தப் பிரச்சினையில் கழுத்தை முறித்துக் கொள்ள மாட்டோம் என்பதற்கு உத்தரவாதமாக இருக்கிறது. இந்த முறை என்னவென்றால் ஆதாரக்கூறுகள், நிகழ்ச்சிகள், உலக வரலாற்றின் படிப்பினைகள் ஆகியவற்றின் மூலம் எல்லாவற்றையும் சோதனை செய்வதே. ஜெர்மானியரால் தாக்க முடியாது என்று நீங்கள் கூறினீர்கள். உங்கள் போர்த்தந்திரத்தின்படிப் போர் நிலைக்கு முடிவு ஏற்பட்டு விட்டதாக நாம் பிரகடனம் செய்திருக்கலாம். வரலாறு உங்களுக்கு ஒரு படிப்பினையைப் போதித்தது, இந்தப் பிரமையினைத் தகர்த்தது. ஆம், ஜெர்மன் புரட்சி வளர்ந்துதான் வருகிறது; ஆனால் நாம் விரும்பும் விதத்தில்

அல்ல, ருஷ்யப் படிப்பாளிகள் விரும்பும் வேகத்தில் அல்ல, நமது வரலாறு அக்டோபரில் வளர்ச்சியுற்ற வேகத்தில் அல்ல, — அன்று நாம் ஒரு நகருக்குள் பிரவேசித்து சோவியத் ஆட்சியைப் பிரகடனம் செய்த சில நாட்களுக்குள் தொழிலாளர்களில் பத்தில் ஒன்பது பேர் நமது பக்கம் வந்து விட்டார்கள். துரதிருஷ்டவசமாக ஜெர்மன் புரட்சி அந்த வேகத்தில் இயங்கவில்லே. என்ன நினைக்கிறீர்கள்? யார் யாரைக் கணக்கில் எடுக்க வேண்டும்: நாம் ஜெர்மன் புரட்சியையோ அல்லது அது நம்மையோ? ஜெர்மன் புரட்சி உங்களைக் கணக்கில் எடுக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்கள்; ஆனல் வரலாறு உங்களுக்கு ஒரு படிப்பினையைப் போதித்து விட்டது. இது ஒரு படிப்பினே, ஏனெனில் ஜெர்மன் புரட்சி இன்றேல்—ஒருவேளே பெத்ரோகிராதிலல்ல, மாஸ்கோவிலல்ல, ஆனல் விளாடிவஸ்தோகில், நாம் பின்வாங்கிச் செல்ல நேரும் வேறு தூரப் பகுதிகளில், பெத்ரோகிராதிலிருந்து மாஸ்கோவுக்குள்ள தூரத்தைவிடத் தொலேவிலுள்ள இடங்களில்—நமது கதி அதோகதிதான் என்பது ஒரு முற்றுன உண்மை; எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும் போது, ஏற்படக் கூடிய சகல சிக்கல்களேயும் வைத்துப் பார்க்கும் போது ஜெர்மன் புரட்சி வரா விட்டால் நமது கதி அதோகதிதான். ஆனல் மிகவும் கடினமான நிலேயினேயும் நாம் வீம்பு பேசாமல் கட்டாயம் தாங்க முடியும் என்ற நமது நம்பிக்கை இதனுல் சிறிதும் தளர்ந்துவிடவில்லே.

நாம் எதிர்பார்த்தது போல மிகவும் விரைவாகப் புரட்சி வராது. வரலாறு இதை நிரூபித்துள்ளது, இதை உண்மை என்று ஏற்றல் வேண்டும், மக்கள் தொகையில் மிகப் பெரும்பகுதியினர் நாட்டின் தொலேவான இடங்களில் எந்த மக்கள் வாழ்கிருர்கள், அங்கே என்ன நடக்கிறது என்பதையெல்லாம் அசட்டைசெய்யும் தேசத்தில், நிக்கலாய், ரஸ்பூத்தின் ஆட்சி செய்யும் நாடான ருஷ்யாவில் புரட்சி தொடங்கியது போல முன்னேற்றமடைந்த நாடுகளில் உலக சோஷலிஸ்டு புரட்சி அவ்வளவு எளிதாகத் தொடங்கிவிடாது என்பதைக் கவனத்தில் வைக்க வேண்

டும். ருஷ்யா போன்ற நாட்டில் புரட்சியைத் தொடங்கு வது ஓர் இறகைத் தூக்குவது போல இலேசாக இருந்தது.

ஆனல் முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து கடைசி மனிதன் உள்பட எல்லோருக்கும் ஜனநாயகக் கலாசாரமும் ஸ்தாபனமுறையும் முதலாளித்துவத்தால் வழங்கப் பெற்றுள்ள நாட்டில் தயாரிப்பு இன்றிப் புரட்சியினைத் தொடங்கு வது தவறும் அபத்தமுமாகும். இங்கு நாம் சோஷலிஸ்டு புரட்சிகளின் துவக்கத்தின் வேதனைக் காலகட்டத்தை இப்போதுதான் அணுகி வருகிறேம். இது உண்மை. இப்புரட்சி சில வாரங்களில், ஏன் சில நாட்களில், வெற்றி பெறுவது முற்றிலும் சாத்தியம்; இதைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது, யாருக்கும் தெரியாது; ஆனல் அதன்மீது எல்லாவற்றையும் பணயம் வைக்கக் கூடாது. நாம் அசாதாரணமான இடர்களுக்கு, அசாதாரணமாகக் கடுமையான தோல்விகளுக்குத் தயாராக இருத்தல் வேண்டும்; இவை தவிர்க்க முடியாதவை; ஏனெனில் ஐரோப்பாவில் புரட்சி இன்னும் துவங்கவில்லை; இருந்தபோதிலும் அது நாளையே துவங்கலாம், அப்படி அது துவங்குமானல், நாம் ஐயங்களால் சித்திரவதைப்பட மாட்டோம், அப்போது புரட்சிப் போர் பற்றிய கேள்விகளுக்கு இடமில்லாமல் போகும்; எங்கும் ஒரு தொடர்ந்த வெற்றிப் பவனி இருக்கும். அது நிகழும், தவிர்க்க முடியாத வகையில் நிகழும்; ஆனல் இன்னும் நிகழவில்லை. வரலாறு நமக்குப் போதித்திருக்கும் எளிய ஆதாரக் கூறு இதுவே; அது இதைக் கொண்டு நம்மை வேதனையுறத் தாக்கியுள்ளது; இவையெல்லாமிருப்பினும் அடிபட்ட மனிதன் அடிபடாதவனைவிட இருமடங்கு மேல் என்ற பழமொழியை நாம் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் ஜெர்மானியர் தாக்க முடியாது என்றும் நாம் ''ஜே!'' கோஷம் போட்டே எல்லாவற்றையும் பெற்று விடலாம் என்றும் நம்பியதால்தான் வரலாறு நமக்கு மிக்க வேதனை தரும் அடி கொடுத்தது; இந்தப் படிப்பினை நமது சோவியத் ஸ்தாபனங்களின் உதவியுடன் சோவியத் ருஷ்யா அனைத்திலுமுள்ள வெகுஜனங்களுக்கு மிக விரைவில் விளக்கி உணர்த்தப் படும் என்று நான் கருதுகிறேன். அவையெல்

லாம் எழுச்சியுற்றுச் செயல் புரிந்து வருகின்றன, கூடுகின்றன, காங்கிரசுக்குத் தயாரிப்புகள் செய்கின்றன, தீர்மானங்களை நிறைவேற்றுகின்றன, நடந்ததைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கின்றன. தற்போது நிகழ்வன புரட்சிக்கு முன் குறுகிய கட்சி வட்டாரங்களுக்குள் நடந்த வாதப் பிரதிவாதங்கள் போன்றவை அல்ல, எல்லா முடிவுகளும் பொது மக்களின் விவாதத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன; அவர்கள் இம்முடிவுகளை அனுபவ மூலம், செயல் மூலம் சோதனை செய்ய வேண்டும் என்று கோருகிறார்கள்; வெறும் விளையாட்டுப் பேச்சுக்களில் அவர்கள் எப்பொழுதும் மயங்க மாட்டார்கள்; நிகழ்ச்சிகளின் யதார்த்தப் போக்கினால் நிர்ணயிக்கப்படும் வழியிலிருந்து தங்களை விலகச் செய்ய அவர்கள் எப்பொழுதும் அனுமதிக்க மாட்டார்கள். நம்முன் ஒரு படிப்பாளி அல்லது இடதுசாரி போல்ஷிவிக் இருந்தால் நம்மை எதிர்கொள்ளும் இடர்களுக்கு ஏதோ ஒரு விளக்கம் கண்டெடுத்து அவன் தப்பிவிடலாம் என்பது நிச்சயம்: ராணுவம் இல்லாமை, ஜெர்மனியில் புரட்சி துவங்கத் தவறியது போன்ற தகவல்களுக்கு அவன் ஏதோ ஒரு விளக்கம் கூறித்தப்பிவிடலாம். லட்சோபலட்சம் பொது மக்களுக்கு அரசியல் கொள்கை லட்சோபலட்சம் மக்கள் உள்ள இடத்திலிருந்தே துவங்குகிறது; ஆயிரவர் அல்ல, லட்சக் கணக்கான மக்கள் இருக்கும் இடத்திலிருந்து உண்மையான அரசியல் கொள்கை துவங்குகிறது—ராணுவம் எப்படி இருக்கும் என்பது தெரியும், போர்முனையிலிருந்து திரும்பும் படை வீரர்களை அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு—தனிநபர்களுக்கல்ல, உண்மையான பொது மக்களுக்கு—நாம் போராட முடியாது என்பதும் போர்முனையிலுள்ள ஒவ்வொருவனும் கற்பனை செய்யக் கூடிய எல்லா இடர்களையும் பொறுத்திருக்கிறான் என்பதும் தெரியும். உங்களிடம் படை இல்லை என்றால், உங்களுக்கு அருகில் ஒரு கொள்ளையன் பதிபோட்டுக் கொண்டிருந்தால், நீங்கள் மிகக் கடுமையான, அவக்கேடான சமாதான ஒப்பந்தத்தை ஏற்க நேரும் என்ற உண்மையினைப் பொது மக்கள் புரிந்துகொண்டனர். புரட்சி பிறக்கும் வரை, நீங்கள் படையின் நோயைப் போக்கி

விட்டுப் போர்வீரர்களை அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பும் வரை இது தவிர்க்க முடியாதது. அந்த நாள் வரை நோயாளி குணமடைய மாட்டான். நாம் ''ஜே'' என்று முழக்கமிட்டு ஜெர்மன் கொள்ளையனை எதிர்த்துச் சமாளிக்க முடியாது, கேரென்ஸ்கியையோ, கர்னீலவையோ முறியடித்தது போல அவனை எளிதில் முறியடிக்க முடியாது. கசப்பான யதார்த்தத்தை விட்டுத் தப்ப முயல்வோர் பல சாக்குப்போக்குகளைக் கூறியிருந்த போதிலும் அவற்றை விட்டு இந்தப் படிப்பினையையே மக்கள் படித்தறிந்துள்ளனர்.

முதலில் அக்டோபர், நவம்பரில் தொடர்ச்சியான வெற்றிப் பவனி; பிறகு திடீரென்று சில வாரங்களுக்குள் ருஷ்யப் புரட்சி ஜெர்மன் கொள்ளையனால் தோற்கடிக்கப்பட்டது; ருஷ்யப் புரட்சி ஒரு கொள்ளைக்கார சமாதானத்திற்கான நிபந்தனைகளை ஏற்க இசைந்தது. ஆம், வரலாற்றில் ஏற்பட்டுவரும் திருப்பங்கள் மிகவும் வேதனையானவை; நம் நாட்டில் இத்தகைய திருப்பங்கள் யாவுமே வேதனையானவை. 1907ல் ஸ்தலீப்பினுடன் நாம் நம்ப முடியாத அளவு மானக்கேடான உள்நாட்டு உடன்பாட்டில் கையொப்பமிட்ட போது, ஸ்தலீப்பின் டூமா என்னும் பன்றிக் கொட்டில் வழிச் செல்லும் நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்ட போது, மன்னராட்சித் தஸ்தாவேஜுகளில்[66] கையொப்பமிடும் பொறுப்புகளை ஏற்ற போது நாம் இப்போது அனுபவிப்பதையே சிறிய அளவில் அனுபவித்தோம். ''நாம் பெருமை கொண்ட புரட்சிக்காரர்கள், நாம் ருஷ்யப் புரட்சியில் நம்பிக்கை வைத்திருக்கிறோம், ஸ்தலீப்பின் சட்டபூர்வமான ஸ்தாபனங்களுக்குள் எப்பொழுதும் பிரவேசிக்கவே மாட்டோம்'' என்று அந்தச் சமயத்தில் புரட்சியின் சிறந்த முன்னணிப் படையிலிருந்து மக்கள் (தங்களுடைய நிலை சரியானது என்பதில் அவர்களுக்கும் கடுகளவும் சந்தேகமிருக்கவில்லை) கூறினார்கள். பிரவேசிப்பீர்கள் என்று நாம் கூறினோம். பொது மக்களின் வாழ்க்கையும் வரலாறும் உங்களது உறுதிச்சொற்களைவிட வலுவுள்ளவை. நீங்கள் பிரவேசிக்க மறுத்தால் வரலாறு உங்களை நிர்ப்பந்திக்கும் என்று நாம் கூறினோம். அதிதீவிரவாத இடதுசாரியினரான இந்தப்

பேர்வழிகளிலிருந்து, வரலாற்றின் முதல் திருப்பத்திற்குப் பிறகு கோஷ்டி என்ற முறையில் புகையைத் தவிர எதுவும் பாக்கி இருக்கவில்லை. நாம் அப்பொழுது புரட்சிக்காரர்களாக இருந்துகொண்டும் வேதனைதரும் சூழ்நிலைகளில் வேலை செய்துகொண்டும் இந்த நிலைமையை மீண்டும் சமாளித்துக் கொள்ள முடிந்ததானல் இப்பொழுதும் கூட நாம் அவ்வாறே சமாளிப்போம்; ஏனெனில் இது நமது சொந்த விருப்பமல்ல, தவிர்க்க முடியாத யதார்த்த அவசியமே; நம் விருப்பத்திற்கு மாருக ஐரோப்பியப் புரட்சி துணிந்து தாமதித்து விட்டதாலும், நம் விருப்பத்திற்கு மாருக ஜெர்மன் ஏகாதிபத்தியம் துணிந்து தாக்கி விட்டதாலும் இந்த யதார்த்த அவசியம் முற்றிலும் நாசமாக்கப் பெற்ற நாட்டில் ஏற்பட்டது.

இங்கு எப்படிப் பின்வாங்குவது என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். நம்ப முடியாத அளவுக்குக் கசப்பான, வருந்தத்தக்க யதார்த்த நிலையினை வெற்றுச் சொற்களின் மூலம் மறைத்துக்கொள்ள முடியாது; அரைகுறையான ஒழுங்குடனுவது நாம் பின்வாங்குவோம் ஆயின் அது நன்று. நாம் நல்ல முறையில் பின்வாங்க முடியாது, அரைகுறையான ஒழுங்குடனுவது பின்வாங்குவோம், நமது சரீரத்தின் நோயுற்ற உறுப்பு ஓரளவுக்குக் குணமாகும்படிச் சற்று இடைநேரம் பெறுவோம் ஆயின் அது நன்று. சரீரம் மொத்தத்தில் நன்ருகவே உள்ளது; அது நோயைச் சமாளித்துக்கொள்ளும். ஆனல் அது ஒரே நொடியில், இம்மென்னுமுன்னே அதைச் சமாளித்து விட வேண்டும் என்று கோர முடியாது, ஓடும் படையினைத் தடுத்து நிறுத்த முடியாது. இடதுசாரியினராக இருக்க விரும்பும் நமது இளம் நண்பர்களில் ஒருவரிடம் நான் ''தோழரே, போர்முனைக்குச் செல்வீர், ராணுவத்தில் என்ன நடக்கிறதென்று பாரும்'' என்று சொன்னபோது இந்த யோசனை அவருக்கு மனக்கசப்பு தந்தது; ''நாங்கள் இங்கு புரட்சிகரப் போரின் மாபெரும் கோட்பாடுகளுக்கு ஆதரவாகக் கிளர்ச்சி செய்வதைத் தடுக்க எங்களை வெளியே விரட்ட முயல்கிருர்கள்'' என்று அவர் கூறினர். இந்த யோசனையை முன்வைத்ததன் மூலம் கோஷ்டி

களைச் சேர்ந்த விரோதிகளைக் கடத்திவிட வேண்டும் என்று நான் உண்மையில் உத்தேசிக்கவில்லை; ராணுவம் முன் என்றும் கேட்டிராத அளவுக்கு ஓடத் தொடங்கியிருப்பதை அவர்கள் போய்ப் பார்க்கட்டும் என்று மட்டுமே யோசனை கூறியிருந்தேன். இது முன்னமேயே எங்களுக்குத் தெரிந்திருந்தது; நமது பீரங்கிகளை ஜெர்மானியருக்கு ஒரு செப்புக் காசுக்காக விற்பது போன்ற, என்றும் கேட்டிராத நிகழ்ச்சிகள் ஏற்படும் அளவுக்கு நமது படையில் கட்டுக்குலைவு பெருகி விட்டது என்பதைக் காணுதிருக்க முன்னமேயே எங்களால் முடியவில்லை. படையை தக்க வைக்க முடியாது, ஜெர்மானியர் தாக்க மாட்டார்கள் என்ற வாதம் வெறுஞ் சூதாட்டம் என்பது எப்படித் தெரிந்திருக்கிறதோ அதே போல் இதுவும் எங்களுக்குத் தெரிந்திருந்தது. ஐரோப்பியப் புரட்சி பிறப்பதில் தாமதம் ஏற்பட்டால் நாம் படு பயங்கரமான தோல்விகளை எதிர்கொள்ள நேரும்; ஏனென்ருல் நம்மிடம் படை இல்லை, ஏனென்ருல் நம்மிடம் ஒழுங்கமைப்பு கிடையாது, ஏனென்ருல் தற்போது நாம் பரிகாரம் காண முடியாத இரு பிரச்சினைகள் இவை. நீ தருணத்திற்கேற்ப நடந்துகொள்ள முடியாவிடில், மண்ணில் வயிறுபடிய ஊர விரும்பாவிடில்,—நீ ஒரு புரட்சிக்காரனல்ல, வெறும் அரட்டைப்பேர்வழியே; நான் இதை விரும்புகிறேன் என்பதால் இந்த யோசனையை முன்வைக்கவில்லை; நமக்கு வேறு பாதை இல்லை என்பதாலும் வரலாறு கருணை வைத்து எல்லா இடங்களிலும் ஏககாலத்தில் புரட்சியை முதிர்ச்சியடைய வைக்கவில்லை என்பதாலுமே இந்த யோசனையை முன்வைக்கிறேன்.

நிலைமைகள் போகும் போக்கினைப் பார்த்தால், ஏகாதிபத்தியத்துடன் மோதுவதற்கான முயற்சி என்ற முறையில் உள்நாட்டுப் போர் துவங்கியுள்ளது; இது ஏகாதிபத்தியம் முற்றிலும் கெட்டழிந்திருப்பதையும் ஒவ்வொரு படையிலும் பாட்டாளி வர்க்கச் சக்திகள் எழுச்சியுற்று வருவதையும் காட்டுகிறது. ஆம், நாம் சர்வதேச உலகப் புரட்சியைக் காண்போம்; ஆனுல் இப்போதைக்கு அது ஒரு நல்ல நாடோடிக் கதை, ஒரு மிக அழகான நாடோடிக் கதை.

குழந்தைகள் அழகான நாடோடிக் கதைகளை விரும்புவதை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால் அறிவுள்ள ஒரு புரட்சிக்காரன் நாடோடிக் கதைகளை நம்புவது சரியா? ஒவ்வொரு நாடோடிக் கதையிலும் உண்மையின் அம்சம் ஒன்று இருக்கிறது; சேவலும் பூனையும் மனித மொழியில் பேசாத ஒரு நாடோடிக் கதையைக் குழந்தைகளுக்குச் சொன்னால் அவர்கள் அதை ரசிக்க மாட்டார்கள். அதேபோல மக்களிடம் ஜெர்மனியில் உள்நாட்டுப் போர் வெடிக்கும் என்று கூறி, அத்துடன் ஏகாதிபத்தியத்தோடு மோதுவதற்குப்பதில் போர்க்களச் சர்வதேசப் புரட்சி[67] ஏற்படும் என்று உத்தரவாதம் கொடுத்தால் மக்கள், நீங்கள் மோசடி செய்கிறீர்கள் என்று சொல்வார்கள். இதன் மூலம் நீங்கள் வரலாறு நம்முன் வைத்துள்ள இடர்ப்பாடுகளை மனதளவில், விருப்பத்தளவில் மட்டுமே சமாளிக்க முடியும். ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் போராட்டத்தில் இறங்கும் நிலையில் இருந்தால் அது நன்று. ஆனால் நீங்கள் அதை அளந்து நிர்ணயித்திருக்கிறீர்களா? ஜெர்மன் புரட்சி குறிப்பிட்ட இந்தத் தினத்தில் பிறக்கும் என்பதை நிர்ணயிக்கக் கூடிய ஒரு கருவியை நீங்கள் கண்டு பிடித்திருக்கிறீர்களா? இல்லை, அது உங்களுக்குத் தெரியாது, எங்களுக்கும் தெரியாது. நீங்கள் எல்லாவற்றையும் இந்தச் சீட்டின் பேரில் பணயம் வைக்கிறீர்கள். புரட்சி பிறக்குமானால் சகலமும் காப்பாற்றப்படும். வாஸ்தவமே! ஆனால் நாம் விரும்பியபடி இது நடவாவிட்டால், நாளையே வெற்றி காணவிட்டால் என்ன நேரும்? நீங்கள் சூதாட்டக்காரர்களைப் போல நடந்து கொண்டீர்கள் என்றும், நிகழ்ச்சிகள் அதிருஷ்டவசமாகவே இருக்கும் என்று நம்பி, நடவாத ஒன்றில் சகலத்தையும் பணயம் வைத்தீர்கள் என்றும் அப்போது பொது மக்கள் உங்களிடம் சொல்வார்கள்; உலகப் புரட்சிக்குப் பதிலாக ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க நீங்கள் தகுதியற்றவர்கள் என்று தெரிய வந்தது என்றும் உலகப் புரட்சி தவிர்க்க முடியாத வகையில் வரும், ஆனால் இன்னும் அது முதிர்ச்சியடையவில்லை என்றும் பொது மக்கள் சொல்வார்கள்.

தனது படைகளைக் கலைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தால்

படைகளைக் கலைத்துவிட்ட ஒரு நாட்டின் மீது சர்வாயுத பாணியான ஏகாதிபத்தியம் மிகக் கடுமையான தோல்விகளைத் திணிக்கும் காலகட்டம் தொடங்கி விட்டது. நான் முன் கூட்டியே கூறியது நிகழ்ந்து விட்டது: பிரெஸ்ட் சமாதானத் திற்குப் பதிலாக மிகவும் மானக்கேடான சமாதானம் வந்துள்ளது; இதற்கான குற்றம் முந்திய சமாதானத்தை ஏற்க மறுத்தவர்கள் மீதே சாரும். ராணுவத்தின் குற்றத் தால்தான் நாம் ஏகாதிபத்தியத்துடன் சமாதானத்திற்கு வரு கிறேம் என்பது நமக்குத் தெரிந்திருந்தது. நாம் லீப்க் னெஹ்டுடன் அல்ல ஹோஃப்மனுடன் அமர்ந்து பேசினேம்— இப்படிச் செய்ததன் மூலம் ஜெர்மன் புரட்சிக்கு உதவி னேம். இப்போது பீரங்கிகள், வெடிகுண்டுகள் ஆகிய லட் சோபலட்ச ரூபிள் மதிப்புடைய செல்வத்தைக் கொடுத் ததன் மூலம் நீங்கள் ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்கு உதவி புரிகின்றீர்கள்; ராணுவத்தின் நிலையினை, நம்ப முடியாத வேதனை தரும் நிலையினைப் பார்த்திருந்த எவரும் இதை முன்கூட்டிச் சொல்லியிருக்க முடியும். போர்முனையிலிருந்து வந்த நேர்மையாளன் ஒவ்வொருவனும் ஜெர்மானியர் சிறி தளவு நம்மைத் தாக்கியிருந்தாலே போதும், நாம் தவிர்க்க முடியாத வகையில் முற்றுக அழிந்து போயிருப்போம் என்று சொன்னார்கள். சில தினங்களில் நாம் விரோதிக்குப் பலி யாகியிருப்போம்.

இந்தப் படிப்பினை போதிக்கப்பட்டதால், நாம் நமது பிளவினை, நெருக்கடியை, நோய் எவ்வளவு கடுமையாக இருந்தபோதிலும் சரி, சமாளிப்போம், ஏனெனில் அளவிட முடியாத மேலும் நம்பகமான ஒரு நேச சக்தி—உலகப் புரட்சி—நமக்கு உதவ முன்வரும். இந்த டில்ஸீட் சமா தானத்தின்[68], என்றும் கேட்டிராத இந்தச் சமாதானத்தின், பிரெஸ்ட் சமாதானத்தைக் காட்டிலும் மானக்கேடான, கொள்ளைக்காரத்தனமான இந்தச் சமாதானத்தின் ஊர்ஜி தம் குறித்துப் பேசப்படும் போது, நிச்சயமாக, ஆம் என்று சொல்கிறேன். நாம் பொது மக்களின் கண்ணேட்டத் திலிருந்து பார்ப்பதால் இதைச் செய்ய வேண்டும். அக்டோபர், நவம்பரில், அதாவது நமது புரட்சியின் வெற்றி முழங்கிய

காலத்தில், ஒரு நாட்டினுள்ளே அனுசரித்த போர்த்தந் திரங்களை நமது கற்பனையின் உதவியுடன் உலகப் புரட்சி யினுடைய நிகழ்ச்சிகளின் நடப்பு விஷயத்தில் கையாளும் முயற்சி தோல்வியுறுவது திண்ணம். இடைக்கால ஓய்வு வெறும் கற்பனைக் கனவு என்று கூறுவதும், கம்யூனிஸ்ட்[69] என்ற—ஒரு வேளை ''கம்யூன்'' என்ற சொல்லிலிருந்து வந்த—பெயருள்ள பத்திரிகை இந்த இடைக்கால ஓய்வெ னும் கொள்கையினை மறுக்கப் பத்தி பத்தியாக எழுதி நிரப்புவதும் காணும் போது, நான் இப்படித்தான் சொல் கிறேன்: நான் எவ்வளவோ கோஷ்டிப் பூசல்கள், பிளவு களைப் பார்த்திருக்கிறேன், ஆகவே எனக்குப் பெரிய அளவு அனுபவம் உண்டு, ஆனால் இந்த வியாதியைப் பழைய முறை யில், கட்சிக் கோஷ்டிப் பிளவுகள் என்ற முறையில், குணப் படுத்த முடியாது, ஏனெனில் இந்த வியாதியை விரைவில் வாழ்க்கை குணப்படுத்தும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது என்று நான் சொல்ல வேண்டும். வாழ்க்கை வெகு வேகமாக முன்னே செல்கிறது. இந்த விஷயத்தில் இது மிகச் சிறப்புடன் செயல்படுகிறது. வரலாறு தனது எஞ்சினை மிக வும் விரைவாக ஓட்டி வருவதால் கம்யூனிஸ்ட் பத்திரி கையின் ஆசிரியர்கள் தங்களது அடுத்த இதழை வெளி யிடுவதற்கு முன்பே அதன் கருத்துக்களில் பெத்ரோகிராதி லுள்ள பெரும்பாலான தொழிலாளர்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள், ஏனெனில் இடைக்கால ஓய்வு வாஸ்தவம் என்பதை வாழ்க்கை காட்டுகிறது. நாம் இப்போது ஒரு சமாதான உடன்பாட்டில் கையொப்பமிடுகிறோம், நமக்கு இடைக்கால ஓய்வு கிடைத்திருக்கிறது, இதைச் சாதக மாகப் பயன்படுத்தி நமது தந்தையர் நாட்டினைச் சிறந்த முறையில் காப்போம், ஏனெனில் நாம் போரில் ஈடுபட்டிருந் தோமெனில் பீதியினால் புறமுதுகிட்டோடும் படையினைத் தடுத்து நிறுத்த வேண்டி இருந்திருக்கும்; நமது தோழர் கள் இதை நிறுத்த முடியாது, அவர்களால் இதை நிறுத்த முடிந்திருக்காது, ஏனெனில் பிரசாரங்களைவிட போர் அதிக சக்தி வாய்ந்தது பத்தாயிரம் வாதங்களைவிட அதிக சக்தி வாய்ந்தது. யதார்த்த நிலையினை அவர்கள் புரிந்துகொள்ள

வில்லையாதலால் படையினை நிறுத்தி வைக்க அவர்களால் முடியவில்லை, முடியவும் செய்யாது. படைக்குப் பிடித்த இந்த நோய் சரீரம் முழுதையும் தொற்றியது. நாம் இணையில்லாத இன்னெரு பெருந்தோல்வியடைந்தோம். ஏகாதிபத்தியத்தின் தாக்குதலை இயந்திரத் துப்பாக்கிகளின்றி எதிர்க்க நாம் பொறுப்பற்ற வகையில் முற்பட்டதனுல் ஜெர்மன் ஏகாதிபத்தியம் புரட்சியின் மீது மீண்டும் ஓர் அடி, கடுமையான அடி, கொடுத்தது. நாம் இந்த இடை நேரத்தைப் பயன்படுத்தி, ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்று மக்களை வற்புறுத்தி இணங்குவிப்போம்; ருஷ்யத் தொழிலாளர்களிடமும் விவசாயிகளிடமும் நாம் பின்வருமாறு சொல்வோம்: ''சுயக் கட்டுப்பாட்டை, கண்டிப்பான கட்டுப்பாட்டை, ஏற்படுத்திக்கொள்ளுங்கள், இல்லையேல் இப்போது வீழ்ந்திருப்பது போல ஜெர்மன் காலடிக்கீழ் வீழ்ந்து கிடக்க நேரும்; மக்கள் போராட்டம் நடத்தக் கற்று, ஓடுவதற்கு அல்ல, வர்ணிக்க முடியாத இன்னல்களைச் சகிப்பதற்கு ஏற்ற ஆற்றலுள்ள படையினைச் சிருஷ்டிக்கும் வரையில் தவிர்க்க முடியாத வகையில் இந்தக் கதிக்கு ஆளாக நேரும்''. ஜெர்மன் புரட்சி இன்னும் பிறக்கவில்லை, நாளை பிறக்கும் என்று நாம் உத்தரவாதம் செய்யவும் முடியாது. ஆதலால் இது தவிர்க்க முடியாதது.

வெள்ளமாய்ப் பொழியும் கம்யூனிஸ்ட் இதழின் கட்டுரைகளால் முற்றிலும் நிராகரிக்கப் பெறும் இடைக்கால ஓய்வுத் தத்துவம் இதனுல்தான் வாழ்க்கையால் முன்வைக்கப்படுகிறது. இடைக்கால ஓய்வு என்பது உண்மை என்பதையும் இதை எல்லோரும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கிருர்கள் என்பதையும் எல்லோரும் பார்க்க முடியும். முன்னேறி வந்த ஜெர்மன் படைகள் சில தினங்களில் பெத்ரோகிராதை அடையக் கூடிய தூரத்தில் இருந்த போது நாம் இந்தச் சில தினங்களில் பெத்ரோகிராதை இழந்து விடுவோம் என்று கருதினேம்; அந்தக் காலத்தில் நமது சிறந்த கடற்படை வீரர்களும் புத்திலவ் தொழிற்சாலையில் வேலை செய்த தொழிலாளர்களும்[70], அவர்களது உற்சாகம் எவ்வளவிருந்தும், தனிமையாக நின்றனர்; அந்தக் காலத்தில்

நம்ப முடியாத அளவு குழப்பமும் பீதியும் வெடித்து நமது படைகள் காட்சினு வரை ஓடிப்போகும் நிர்ப்பந்தம் ஏற் பட்டது; அந்தக் காலத்தில் ஜெர்மானியரால் பிடிக்கப் படாத இடங்களை நாம் மீண்டும் பிடித்தோம்; தந்தி ஊழி யர்கள் ''ஜெர்மானியர் ஒருவரையும் காணேம், நாம் நிலை யத்தைப் பிடித்து விட்டோம்'' என்று செய்திகள் அனுப்பி யதில் இந்தப் பிடிப்புகள் அடங்கியிருந்தன. சில மணி நேரத்துக்குப் பிறகு ரயில்வேத்துறை மக்கள் கமிசாரகத் திலிருந்து எனக்கு வந்த தொலைபேசிச் செய்தியில் ''நாம் அடுத்த நிலையத்தைப் பிடித்து விட்டோம், யாம்பர்கை நெருங்கி வருகிறேம். ஜெர்மானியர் எவரும் இல்லை. தந்தி ஊழியர் தனது இடத்தில் தயார்'' என்று தெரிவிக்கப்பட் டது. இத்தகைய நிலைதான் இருந்தது. இதுதான் பதினெரு நாள் போரின்[71] உண்மையான வரலாறு. இதைக் கடற்படை வீரர்களும் புத்திலவ் தொழிற்சாலையில் வேலை செய்த தொழி லாளர்களும் வர்ணித்துக் கூறினர்கள்; இவர்களை சோவி யத்துகள் காங்கிரசுக்கு அழைத்து வந்திருக்க வேண்டும். அவர்கள் உண்மையைக் கூறட்டும். இது பயங்கரமான அள வுக்குக் கசப்பான, அதிருப்தி தரும், வேதனையளிக்கும், மானக்கேடான உண்மை; ஆனல் ருஷ்ய மக்கள் இதைப் புரிந்து கொள்ள முடியுமாதலால் இது நூறு மடங்கு பய னுள்ளதாகும்.

சர்வதேசப் போர்க்களப் புரட்சி குறித்து எவரும் கனவு காணலாம்; ஏனெனில் அது நிச்சயம் நிகழும். எல்லாம் உரிய காலத்தில் வரும்; ஆனல் இப்போதைக்குச் சுயக் கட்டுப்பாடு, எல்லாவற்றுக்கும் முன் கீழ்ப்படிதல் இவற்றை நிலைநாட்டப் பாடுபடத் தொடங்குங்கள்; இதன் விளைவாக நமக்குள் ஆதர்சமெனத் திகழும் ஒழுங்கு ஏற்படும், தொழி லாளர் 24 மணி நேரத்தில் ஒரு மணி நேரமாவது போராடு வதற்குரிய பயிற்சியைப் பெறுவர். இது அழகான கற் பனைக் கதையை எடுத்துக் கூறுவதைவிடச் சற்றுக் கடின மானது. இது இப்பொழுது இருக்கிறது, இதனல் நீங்கள் ஜெர்மன் புரட்சிக்கும், சர்வதேசப் புரட்சிக்கும் உதவி புரிதல் முடியும். இந்த இடைக்கால ஓய்வு எத்தனை நாட்கள்

இருக்கும் என்பது நமக்குத் தெரியாது; ஆனல் அதை நாம் பெற்றுள்ளோம். எவ்வளவு விரைவாக முடியுமோ அந்த அளவு விரைவில் படையினை நாம் கலைக்க வேண்டும், ஏனெனில் இது நோயுற்ற உறுப்பு. இதற்கிடையில் நாம் பின்லாந்தின் புரட்சிக்கு உதவுவோம்.

ஆம், நாம் வாஸ்தவத்தில் உடன்பாட்டினை மீறுகிறோம்; முப்பது-நாற்பது தடவை நாம் இதை மீறியிருக்கிறோம். இன்றுள்ளது போன்ற ஒரு சகாப்தத்தில், வேதனை மிகுந்த நீண்ட விமோசன காலகட்டம் தொடங்கியுள்ள வேளையில், இது சோவியத் ஆட்சியைப் படைத்து அதன் வளர்ச்சியில் மூன்று கட்டங்களை உயர்த்தியுள்ள இந்த சமயத்தில் நீண்ட, முன்யோசனையுள்ள போராட்டம் நிச்சயம் நடத்த வேண்டும் என்பதைக் குழந்தைகள் மட்டுமே புரிந்துகொள்ளாதிருக்க முடியும். மானக்கேடான சமாதான உடன்பாடு எழுச்சியைத் தூண்டி விடுகிறது; ஆனல் கம்யூனிஸ்ட் பத்திரிகையில் வேலை செய்யும் தோழர்கள் போர் பற்றிப் பேசும் போது மக்கள் சினத்துடன் முஷ்டிகளை இறுக்கிப் பிடித்துச் சீறி எழுகின்றனர் என்பதை மறந்து கொண்டு உணர்ச்சிகளை மட்டுமே தீவிரப்படுத்துகிறார்கள். அவர்கள் கூறுவது என்ன? ''வர்க்க உணர்வுள்ள ஒரு புரட்சிக்காரன் இதனைச் சகிக்க முடியாது; இத்தகைய மானக்கேட்டிற்கு அவன் கீழடங்க மாட்டான்.'' அவர்களுடைய செய்தித்தாள் கம்யூனிஸ்ட் என்ற பெயரை வைத்திருக்கிறது. அதற்கு ஷ்லாஹ்டிச் (''போலிஷ் நிலப்பிரபுவன்'') என்ற பெயர் மிகப் பொருத்தமாக இருக்கும்; ஏனெனில் இது எல்லாவற்றையும் ஒரு ஷ்லாஹ்டிச்சின் கண்ணோட்டத்துடன் பார்க்கிறது; இந்த ஷ்லாஹ்டிச் அழகான தோரணையில், கையில் வாளேந்திக் கொண்டு இறக்கும் போது, ''சமாதானம் மானக்கேடானது, போர் மதிப்பிற்குரியது'' என்று கூறினன். அவர்கள் நிலப்பிரபுவின் கண்ணோட்டத்திலிருந்து வாதம் புரிகிறார்கள், நானோ விவசாயிகள் கண்ணோட்டத்திலிருந்து வாதிக்கிறேன்.

படைகள் ஓடும் போது, அவை ஆயிரக் கணக்கான வீரர்களை இழக்காதிருக்க வேண்டுமானல் ஓடித்தீர வேண்

டும் என்னும் போது நான் சமாதானத்தை ஏற்பது நிலைமை இன்னும் படுமோசமாகிவிடக் கூடாது என்பதற்காகவே. உடன்பாடு உண்மையில் மானக்கேடானதா? ஏன், நிதான மனதுள்ள ஒவ்வொரு விவசாயியும் தொழிலாளியும் நான் செய்வது சரி என்றே சொல்வார்கள்; ஏனெனில் சமாதானம் சக்திகளைத் திரட்டுவதற்கு ஒரு வழி என்பதை அவர் கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். டில்ஸீட் சமாதானத் திற்குப் பிறகு ஜெர்மானியர் நெப்போலியனிடமிருந்து விடு தலை பெற்ற நிகழ்ச்சி வரலாற்றுக்குத் தெரியும்; நான் இதைப் பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன்; ஆகவே நான் வேண்டுமென்று இதனை ஒரு டில்ஸீட் சமாதானம் என்று அழைத்தேன்; இருந்தபோதிலும் மற்ற நாடுகளைப் படையெடுத்துப் பிடிக்க வெற்றியாளனுக்குப் படைகள் வழங்கி உதவுவோம் என்ற நிபந்தனை கொண்ட டில்ஸீட் சமாதான ஒப்பந்தத்தைப் போன்ற ஒரு சமாதான ஒப்பந் தத்தில் நாம் கையொப்பமிடவில்லை; எனினும் இது போன் றவை வரலாற்றில் நிகழ்ந்துள்ளன; நாமும் சர்வதேசப் போர்க்களப் புரட்சி நடக்கும் என்று நம்பிக் கொண்டே இருப்போமானால் நமக்கும் இது ஏற்படும். இத்தகைய ராணுவ அடிமைத்தனத்தையும் வரலாறு நம்மீது திணிக் காமல் பார்த்துக் கொள்வீர். சோஷலிஸ்டு புரட்சி எல்லா நாடுகளிலும் வெற்றி சூடுவதற்கு முன்னால் சோவியத் குடி யரசு அடிமைப்படுத்தப்படலாம். நம்ப முடியாத அளவுக்கு மானக்கேடான சமாதான நிபந்தனைகளை ஜெர்மானியர் ஏற்கு மாறு டில்ஸீடில் நெப்போலியன் நிர்ப்பந்தித்தான். அந்தச் சமாதான உடன்பாட்டில் பல தடவை கையொப்பமிட நேரிட்டது. அந்த நாளைய ஹோஃப்மனை நெப்போலியன் ஜெர்மானியர் சமாதான ஒப்பந்தத்தை மீறுகிறார்கள் என்று அடிக்கடி கண்டு பிடித்தான்; இன்றைய ஹோஃப்மனும் இதைக் கண்டுபிடிப்பான். அவன் இதை விரைவில் கண்டு பிடிக்காமல் இருக்க நாம் எச்சரிக்கையுடன் இருப்போம்.

கடைசிப் போர் ருஷ்ய மக்களுக்கு ஒரு கசப்பான, வேதனை மிகுந்த, ஆழ்ந்த படிப்பினை தந்தது: அவர்கள் ஒழுங்கமைத்துக்கொள்ளவும், கட்டுப்பாடுறவும், கீழ்ப்படிய

வும், பிறர் எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்க கட்டுப் பாட்டினை நிறுவவும் வேண்டுமென்பதில் இந்தப் படிப்பினை அடங்கியுள்ளது. ஜெர்மானியரிடமிருந்து கட்டுப்பாட்டினைப் படித்தறிந்துகொள்வீர்; இல்லாவிட்டால் ஒரு நாடு என்ற முறையில் நம் கதி அதோகதிதான், மேலும், நிரந்தரமான அடிமைத்தனத்தில் நாம் வாழ வேண்டும்.

அப்படித்தான், வேறு விதத்தில் அல்ல, வரலாறு சென்றது. சமாதானம் போருக்கு ஆயத்தம் செய்வதற்கான இடைவேளை, போர் ஓரளவுக்கு நல்ல அல்லது மோசமான சமாதானத்தைப் பெறுவதற்குரிய வழி என்று வரலாறு செப்புகிறது. பிரெஸ்டில் சக்திகளின் பரஸ்பர உறவு தோற்கடிக்கப்பட்ட தரப்பின் மீது திணிக்கப்படும் சமாதானத்திற்குரியதாக இருந்ததே தவிர மானக்கேடான சமாதானதிற்குரியதாக இருக்கவில்லை. ப்ஸ்கோவில் நிலவிய சக்திகளின் உறவு கேவலமான, மிகவும் மானக்கேடான சமாதானத்திற்குரியதாக இருந்தது; அடுத்த கட்டத்தில் பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் நம்மீது நான்கு மடங்கு மேலும் மானக்கேடான சமாதானம் திணிக்கப்படும். நமது இளம் மாஸ்கோ நண்பர்கள் சொல்வது போல சோவியத் ஆட்சி வெறும் உருவம் மட்டுமே[72] என்று நாங்கள் கூறவில்லை; எவையேனும் ஒரு வகைப் புரட்சிக் கோட்பாடுகளுக்காக உள்ளடக்கம் பலி கொடுக்கப்படலாம் என்று நாங்கள் கூறவில்லை; ருஷ்ய மக்கள் கட்டுப்பாடும் ஒழுங்கமைப்பும் உள்ளவர்களாக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளட்டும் என்றும் அப்போது அவர்கள் டில்ஸீட் சமாதான ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் ஏற்றுச் சமாளிக்க முடியும் என்றும் நாங்கள் கட்டாயம் கூறுகிறோம். விடுதலைப் போர்களின் முழு வரலாறும், இந்தப் போர்களில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட போது விடுதலை விரைவில் ஏற்பட்டது என்பதை நமக்குக் காட்டுகிறது. வரலாறு இந்த வழியில் முன்செல்கிறபடியால், நாம் சமாதானத்தை விட்டுப் போரை ஏற்க நேரலாம் என்றும் இது அடுத்த சில நாட்களில் ஏற்படலாம் என்றும் நாங்கள் கூறுகிறோம். ஒவ்வொருவனும் தயாராக இருத்தல் வேண்டும். எல்லாச் செய்தித்

தாள்களும் கூறுவது போல ஜெர்மானியர் நார்வாவைப் பிடிக்கவில்லை என்பது உண்மையானுல் அவர்கள் நார்வாவுக்கு அப்பால் முஸ்தீப்புச் செய்து வருகிறுர்கள் என்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமும் கிடையாது; நார்வாவில் இல்லாவிடில் நார்வாவுக்கு அருகில், ப்ஸ்கோவில் இல்லாவிடில் ப்ஸ்கோவிற்கு அருகில் ஜெர்மானியர், அடுத்த தாவலில் பெத்ரோகிராதைப் பிடிக்கும் உத்தேசத்தோடு, தங்களுடைய முறையான படைகளை அணி திரட்டிக் கொண்டிருக்கிறுர்கள், தங்களது ரயில்வேக்களை ஆயத்தமாக வைக்கிறுர்கள். இந்த விலங்கு நன்ருகத் தாவிப் பாய வல்லது. அதை ஏற்கெனவே செய்து நிரூபித்துள்ளது. அது இன்னும் ஒரு முறை தாவிப் பாயும். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இதனுல்தான் நாம் தயாராக இருத்தல் வேண்டும், வீண் ஜம்பம் பேசாமல், ஒரு நாள் இடைநேரத்தைக்கூடப் பயன்படுத்த வேண்டும்; ஏனெனில் பெத்ரோகிராதைக் காலி செய்வதற்கு ஒரு நாள்கூடப் பயன்படலாம்; இந்நகர் பிடிக்கப்பெறுமானுல் நமது லட்சக்கணக்கான பாட்டாளிகளுக்குச் சொல்லொணுத் துயர்கள் ஏற்படும். பெத்ரோகிராதைக் காலி செய்வதற்கு ஒரு சில தினங்களாவது கிடைக்கும்படி நான் இருபது தடவையல்ல, நூறுமடங்கு மேலும் மானக்கேடான சமாதானத்தில் கையொப்பமிடத் தயார் என்றும் இதை என் கடமையாகக் கருதுகிறேன் என்றும் மீண்டும் கூறுகிறேன்; ஏனென்றுல் இதன் மூலம் நான் தொழிலாளர் துயர்களைத் துடைப்பேன்—இல்லையேல் அவர்கள் ஜெர்மானியர் ஆதிக்கத்தின் கீழ் வர நேரும்; இப்படிச் செய்வதால் பெத்ரோகிராதிலிருந்து வெடிமருந்து போன்ற, நமக்கு அவசியமான தளவாடங்களை வெளியேற்ற நான் உதவுவேன். காரணம், நான் ஒரு பாதுகாப்புவாதி. காரணம், தற்போதைய கலைக்கப்பெற்ற, நோயுற்ற படை சிகிச்சை பெற்று வருகிற மிகத் தொலைவிலுள்ள பின்னணியிலாவது படையினைத் தயாரிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

இந்த இடைநேரம் எத்தனை காலம் நீடிக்கும் என்பது நமக்குத் தெரியாது, ஆனுல் நிலைமையினைச் சாதகமாகப்

பயன்படுத்த முனேவோம். இடைநேரம் நீண்ட காலம் நீடிக்கலாம்; அல்லது ஒருவேளே சில நாட்களே நீடிக்கலாம். எதுவும் நடக்கலாம்; இது யாருக்கும் தெரியாது, தெரிந்திருக்கவும் முடியாது; ஏனெனில் எல்லா வல்லரசுகளும் அனேகப் போர்முனேகளில் போரிடும்படிக் கட்டுப்படுத்த, வரையறுக்க, நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, சோவியத் குடியரசைத் தகர்த்திட வேண்டும், இரண்டாவதாக, பலமுனேகளில் போர் தொடுக்க வேண்டும், மூன்றுவதாக, ஜெர்மனியில் புரட்சி முதிர்ச்சியடைந்து வருகிறது, வளர்ந்து வருகிறது என்பதெல்லாம் ஹோஃப்மனுக்குத் தெரியும்; அவனது நடத்தை இவற்ருல் நிர்ணயிக்கப்படுகிறது; சிலர் கூறுவது போல இக்கணத்திலேயே மாஸ்கோவையும் பெத்ரோகிராதையும் அவனுல் பிடித்துவிட முடியாது. ஆனுல் நாளே அவன் இதைச் செய்யலாம்; இது சாத்தியமும்கூட. ராணுவம் நோயுற்ற சமயத்தில், எப்பாடுபட்டும் குறைந்த பட்சம் ஒரு நாளாவது ஓய்வு பெறக் கிடைக்கும் சகல வாய்ப்புகளேயும் நாம் பயன்படுத்துகிற சமயத்தில், பொது மக்களுடன் இணேப்பு வைத்துள்ள உண்மையான புரட்சியாளன் ஒவ்வொருவனும், போர் என்பது என்ன, பொது மக்கள் எத்தகையவர்கள் என்பதை அறிந்த புரட்சியாளன் ஒவ்வொருவனும் பொது மக்களேக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும், அவர்களுடைய நோயைத் தீர்க்க வேண்டும், புதிய போருக்கு அவர்களே எழுச்சியுறச் செய்தல் வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்,—இத்தகைய புரட்சியாளன் ஒவ்வொருவனும் நாம் குற்றமற்றவர்கள் என்று சொல்வான்; எந்த ஒரு கேவலமான சமாதான உடன்படிக்கையும் முறையானதே என்பதை ஒப்புக்கொள்வான். ஏனெனில் இது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் ருஷ்யாவுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் அதன் நோயுற்ற உறுப்பை அகற்றுவதற்கும் பயன்படும். விவேகமுள்ள மனிதர்கள் அனேவரும், இந்த சமாதான உடன்பாட்டில் கையொப்பமிட்டதன் மூலம் நமது தொழிலாளர் புரட்சியை நாம் நிறுத்தி விடவில்லே என்

பதைப் புரிந்துகொள்வார்கள்; ஜெர்மானியருடன் சமாதானத்திற்கு வந்தது மூலம் நாம் ராணுவ உதவி வழங்குவதை நிறுத்தவில்லை என்பதையும் பின்லாந்து மக்களுக்கு நாம் ஆயுதங்கள் அனுப்பி வருகிறோம், ஆனால் ராணுவ யூனிட்களை, அவை தகுதியற்றவை என்று கண்டு அனுப்பவில்லை என்பதையும் எல்லோரும் புரிந்துகொள்வார்கள்.

நாம் போரை ஏற்றுக்கொள்ளலாம்; ஒருவேளை நாம் நாளை மாஸ்கோவைக்கூட இழக்கலாம்; பிறகு எதிர்ப்போர் நடத்தலாம்: மக்கள் மனப்போக்கில் அவசியமான மாற்றம் ஏற்பட்டால் விரோதிகள் படைகளுக்கு எதிராக நமது படையினை அனுப்பலாம்; மக்கள் மனப்போக்கில் இந்த மாற்றம் ஏற்பட்டு வருகிறது, இதற்கு அதிக நேரம் தேவைப்படலாம்; ஆனால் மிகப் பெரும்பாலான மக்கள் அவர்கள் இப்போது சொல்கிறதிலிருந்து வேறுபட்ட ஒன்றைச் சொல்லும் போது இந்த மாற்றம் நிச்சயமாக வரும். இந்தக் காலம் வந்து விட்டது என்று என்னால் சொல்ல முடியாததால் இந்த மிகக் கடுமையான சமாதான நிபந்தனைகளை நான் நிர்ப்பந்தமாக ஏற்க வேண்டும். மறுமலர்ச்சிக்கான நேரம் வரும் போது எல்லோரும் இதை உணர்வார்கள், ருஷ்யர்கள் மூடர் அல்ல என்பதைக் காண்பார்கள், தற்போதைக்கு நாம் விலகிநிற்க வேண்டும் என்பதையும் இந்த கோஷத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதையும் ருஷ்ய மக்கள் காண்கிறார்கள், புரிந்துகொள்வார்கள். இது தான் நமது கட்சி காங்கிரசின், சோவியத்துகளின் காங்கிரசின் பிரதானக் கடமை.

நாம் புதிய வழியில் பணியாற்றக் கற்க வேண்டும். இது மிக மிகக் கடினம், ஆனால் எந்த வகையிலும் அசாத்தியம் அல்ல. நாமே அறவே மதிகெட்ட முரட்டுத் துணிகரப் போக்கினால் சோவியத் ஆட்சியினைத் தகர்த்துவிடாத வரையில் இது சோவியத் ஆட்சியினைத் தகர்க்காது. நம்மை இனிச் சித்திரவதை செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று மக்கள் கூறும் காலம் வரும். இது நடைபெற வேண்டுமானால் நாம் இந்த முரட்டுத் துணிகரச் செயலைச் செய்யக்

கூடாது, மாருகக் கடுமையான சூழ்நிலைகளில், என்றும் கேட்டிராத அளவு கேவலமான சமாதான உடன்பாட்டில் நாம் சில நாட்களுக்கு முன்னே கையொப்பமிட்டுள்ள நிலையில், பணியாற்ற வேண்டும்; ஏனெனில் போரால் மட்டுமோ அல்லது சமாதான உடன்பாட்டால் மட்டுமோ இத்தகைய வரலாற்று நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது. தங்களுடைய மன்னராட்சி அமைப்பின் காரணமாக ஜெர்மன் மக்கள் 1807ல் தளைப்பட்டிருந்தார்கள்; அவ்வாண்டில், அனேகக் கேவலமான உடன்பாடுகளுக்குப் பிறகு—இவை புதிய அவமானத்துக்கும் புதிய மீறலுக்கும் உரிய ஓய்வு நேரங்களாக மாற்றப்பட்டன—அவர்கள் டில்ஸீட் உடன்பாட்டில் கையொப்பமிட்டார்கள். மக்களின் சோவியத் அமைப்பு நமது கடமையை எளிதாக்கும்.

போர்க் கலையினைச் சரிவரக் கற்றுக் கொள்ள வேண்டும், ரயில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற ஒரே கோஷம் நமக்கு வேண்டும். ரயில்வேக்கள் இன்றி சோஷலிஸ்டு புரட்சிப் போர் தொடுப்பது என்பது அதிகத் தீங்கு விளைவிக்கிற துரோகம். நாம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும், புரட்சியிலுள்ள தலைசிறந்த சாதனைகளை அடையச் செய்யும் முழு வலிமையையும் முழு ஆற்றலையும் படைக்க வேண்டும்.

ஒரு மணிநேர ஓய்வு கிடைத்தாலும் அதைப் பயன்படுத்திக்கொண்டு தொலைவிலுள்ள பின்னணியுடன் தொடர்பு வைத்து அங்கே புதிய படைகளைச் சிருஷ்டிப்பீர். பிரமைகளைக் கைவிடுவீர்; இவற்றுக்காக வாழ்க்கை உங்களுக்குத் தண்டனையளித்தது; எதிர்காலத்தில் இன்னும் கடும் தண்டனை தரும். நம்முன் மிகக் கடுமையான தோல்விகளின் சகாப்தம் காட்சியளிக்கிறது; இது உண்மையில் இருக்கிறது; இதைக் கணக்கில் எடுக்க வேண்டும்; சட்டவிரோதமான நிலைமைகளிலும் ஜெர்மானியரிடம் கொத்தடிமைப்பட்ட சூழ்நிலையிலும் விடாப்பிடியாகப் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்; இதை அழகுபடுத்திப் பயனில்லை, இது உண்மையில் டில்ஸீட் சமாதானமே. இந்த வழியில் நாம்

செயல்பட முடிந்தால், தோல்விகள் இருப்பினும், நாம் வெற்றி அடைவோம் என்று பூரண நிச்சயத்தோடு கூற லாம். (கரவொலி.)

சுருக்கமான அறிக்கை
பிராவ்தா, இதழ் *45ல்,*
மார்ச்சு 9 (பிப்ரவரி 24), 1918ல்
வெளியிடப்பட்டது

2

மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை மீது ஆற்றிய கடைசி உரை
மார்ச்சு 8

தோழர்களே, உங்கள் அனுமதியோடு நான் ஓரளவு சிறிய குறிப்புகளுடன், அதாவது கடைசியிலிருந்து, தொடங்கு கிறேன். தோழர் புஹாரின் தமது உரையின் இறுதியில் நம்மை பெத்லியூராவுடன் ஒப்பிடுமளவுக்குப் போனுர். அவர் அப்படி நினைப்பாராஞல் நம்முடன் ஒரே கட்சியில் அவர் எவ்வாறு இருக்க முடியும்? இது வெறும் வெட்டிப் பேச்சல்லவா? அது உண்மையில் அப்படி இருந்தால் நாம் ஒரே கட்சியின் உறுப்பினர்களாக இருக்கவே கூடாது. நாம் ஒன்ருக இருப்பது, 90 சதவிகிதம் புஹாரினுடன் உடன் பாடு கொண்டிருக்கிறேம் என்பதையே காட்டுகிறது. நாம் உக்ரேனுக்குத் துரோகம் செய்ய விரும்பியதாக அவர் ஒரு சில புரட்சிகரமான வாய்ச்சொற்களைச் சேர்த்துக் கொண் டார் என்பது உண்மையே. இத்தகைய அப்பட்டமான அபத் தங்கள் குறித்துப் பேசுவதில் எவ்விதப் பயனுமில்லை என்று நம்புகிறேன். தோழர் ரியாஸானவ் விவகாரத்திற்குத் திரும்பி வருகிறேன்; பத்தாண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் விதி விலக்கு விதியை ஊர்ஜிதம் செய்வதைப் போலத் தோழர் ரியாஸானவ் தற்செயலாக ஓர் ஆழ்ந்த சொல்லைச் சொன் ஞர். (கரவொலி.) லெனின் காலத்தைப் பெறுவதற்

காக இடப்பரப்பை விட்டுக் கொடுக்கிறார் என்று அவர் கூறினர். இது ஏறத்தாழத் தத்துவார்த்த வாதமாகவே உள்ளது. இந்தத் தடவை தோழர் ரியாஸானவ் ஓர் ஆழ்ந்த சொல்லடுக்கை—அது வெறும் சொல்லடுக்கு மட்டுமே என்றாலும்—சொல்ல நேர்ந்தது; இதில்தான் முழு சாராம்சமும் அடங்கியிருக்கிறது: நான் காலத்தைப் பெறுவதற்காக உண்மையான வெற்றியாளனுக்கு இடப்பரப்பைக் கொடுத்து விட விரும்புகிறேன். இதில்தான்—மற்றென்றிலும் அல்ல—முழு சாராம்சமும் அடங்கியிருக்கிறது. புரட்சிப் போரின் தேவை, விவசாயிகளை எழுச்சியுறச் செய்தல் போன்ற மற்றெல்லாம் வெறும் பேச்சே. போர் சாத்தியமா என்ற பிரச்சினையில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது என்ற வகையில் நிலைமைகளைச் சித்திரித்துத் தோழர் புஹாரின் ''எந்த வீரனையும் கேட்டுப்பாருங்கள்'' என்கிறார் (அவர் கூறிய சொற்களை அப்படியே குறித்துக் கொண்டேன்). எந்த வீரனையும் கேட்டுப்பார்க்க வேண்டும் என்று அவர் பிரேரேபிக்கிறாராதலால் நான் மறுமொழி தருகிறேன்: நான் பேச நேர்ந்த ஒரு பிரெஞ்சு ஆபீசர்[73] அப்படிப்பட்ட ''எந்த ஒரு வீரனாகவும்'' இருக்கலாம். இந்த பிரெஞ்சு ஆபீசர், கண்களில் கோபக் கனல் பறக்க, என்னைப் பார்த்து—நான் ருஷ்யாவை ஜெர்மானியருக்கு விற்றுவிட்டேனல்லவா?—இவ்வாறு கூறினார்: ''நான் முடியரசுவாதி. பிரான்சிலும் மன்னராட்சியை ஆதரிக்கிறேன்; ஜெர்மனியின் தோல்வியை விரும்புகிறேன். நான் சோவியத் ஆட்சியினை ஆதரிப்பதாக நினைக்க வேண்டாம். (மன்னராட்சி ஆதரவாளன் சோவியத் ஆட்சியினை எப்படி ஆதரிப்பான்?) ஆனால் பிரெஸ்ட் உடன்பாட்டில் நீங்கள் கையொப்பமிடுவதை நான் ஆதரிக்கிறேன், ஏனெனில் அது அவசியமானது.'' ''எந்த வீரனையும் கேட்கலாம்'' என்றீர்களே, கேட்டுக்கொள்ளுங்கள். எந்த வீரனும் நான் சொன்னதையே—அதாவது பிரெஸ்ட் உடன்பாட்டில் கையொப்பமிட அவசியமாக இருந்தது என்பதையே—கூறுவான். தற்போது புஹாரின் பேச்சின்படி எங்கள் வேறுபாடுகள் குறைந்து விட்டதாகத் தோன்றுவதற்குக்

காரணம், இந்த வேறுபாடுகளின் மிகவும் முக்கியமான அம்சத்தை அவரது ஆதரவாளர்கள் மறைத்து வைத்து விட்டார்கள் என்பதே.

பொது மக்களை உளச்சோர்வடைய வைத்துவிட்டதாக நமக்கு எதிராக இப்போது புஹாரின் இடிமுழக்கம் செய்வது முற்றிலும் சரியே; ஆனுல் அவர் தம்மைத் தாமே தாக்கிக் கொள்கிருரே தவிர நம்மைத் தாக்கவில்லை. மத்தியக் கமிட்டியில் இந்தக் களேபரத்தை ஏற்படுத்தியது யார்? நீங்கள் தாம், தோழர் புஹாரின். (சிரிப்பு.) ''இல்லை'' என்று எவ்வளவுதான் நீங்கள் கூக்குரல் போட்டாலும் சரி உண்மை வெளிப்பட்டே தீரும். நாம் நமது தோழமைக் குடும்பத்தில் இருக்கிருேம், நமது சொந்த காங்கிரசில் இருக்கிருேம், நமக்கு ஒளித்து மறைப்பதற்கு எதுவும் இல்லை, உண்மை எடுத்துக் கூறப்பட வேண்டும். உண்மை என்னவென்ருல் மத்தியக் கமிட்டியிலேயே மூன்று போக்குகள் இருந்தன. பிப்ரவரி 17ந் தேதியன்று லோமவும் புஹாரினும் வாக்களிக்கவில்லை. வாக்களிப்பு பற்றிய விவரங்களை நான் மீண்டும் எடுத்துப் பிரதிகள் செய்யக் கேட்டிருக்கிறேன்; எந்தக் கட்சி உறுப்பினனும்—இதை விரும்பினுல்—செயற்குழு அலுவலகத்திற்குப் போய் வாக்களிப்பு பற்றிய இந்த விவரங்களைப் பார்க்கலாம். ஜனவரி 21ந் தேதிய, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த வாக்கெடுப்பு அவர்கள் தாம் ஊசலாடினுர்கள் என்பதையும் நாங்கள் சற்றும் ஊசலாடவில்லை என்பதையும் காட்டுகிறது. ''புரட்சிப் போருக்குத் தயார் செய்வதற்காக நாம் பிரெஸ்ட் சமாதானத்தை ஏற்றுக் கொள்வோம்; இதைவிடச் சிறந்த எதுவும் நமக்குக் கிடைக்கப் போவதில்லை'' என்று நாம் கூறினேம். பெத்ரோகிராதைக் காலி செய்வதற்கு ஐந்து நாள் அவகாசம் நமக்குக் கிடைத்துள்ளது. க்ரிலென்கோ, பத்வோய்ஸ்கி ஆகியோரின் அறிக்கை[74] இப்பொழுது பிரசுரமாகியுள்ளது; அவர்கள் இடதுசாரியினருடன் சேர்ந்தவர்களல்ல; க்ரிலென்கோ அறிவித்ததை நாம் கற்பனை செய்துகொண்டதாக எண்ணி க்ரிலென்கோவை நாம் ''இழுத்து மாட்டி விட்டோம்'' என்று கூறி அவர்களை

அவமதிக்கிருர் புஹாரின். அவர்கள் கூற்றை நாம் முற்றுக ஒப்புக்கொள்கிரேம்; விஷயங்கள் இப்படித்தான் இருக்கின் றன, நான் கூறியதை ராணுவ அதிகாரிகள் நிரூபித்து விட் டனர்; நீங்களோ ஜெர்மானியர் தாக்க மாட்டார்கள் என்று சொல்லி இதைத் தட்டிக் கழிக்கிறீர்கள். போர் தளவாடங் கள் பற்றிய பிரச்சினை எழாதிருந்த அக்டோபர் நாட்களுடன் இந்த நிலையினை எப்படி ஒப்பிட முடியும்? உண்மைத் தகவல்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள விரும்பும் பட்சத் தில் துலக்கமாகப் பிரதிகூலமான ஒரு போரைத் தொடங்க முடியாது என்ற விஷயத்தில் நம்மிடையே வேறுபாடுகள் இருந்தன என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். தோழர் புஹாரின் தமது முடிவுரையினை ''வெகு அண் மையில் போர் சாத்தியமா?'' என்ற இடிமுழக்கக் கேள்வி யுடன் துவக்கியது என்னைப் பெரிய அளவுக்கு அதிசயத்தி லாழ்த்தியது. ஆம், இது சாத்தியம், ஆனுல் இப்பொழுது நாம் சமாதானத்தை ஏற்க வேண்டும் என்று நான் தயக் கம் இன்றிப் பதிலளிக்கிறேன். இதில் எவ்வித முரண் பாடும் இல்லை.

இந்தச் சுருக்கமான குறிப்புகளைக் கூறிய பிறகு முந்திய பேச்சாளர்களுக்கு விவரமாகப் பதிலளிப்பேன். ராதெக்கைப் பொறுத்தவரையில் நான் விதிவிலக்குச் செய்தல் வேண் டும். ஆனுல் வேருேர் உரை நிகழ்த்தப்பெற்றது—தோழர் உரீத்ஸ்கியின் உரை அது. கானேஸா[75], ''துரோகம்'', ''பின்வாங்கி விட்டனர்'', ''இழிந்த முறையில் நிலைமை களுக்கேற்ப நடந்தனர்'' என்பன தவிர அந்தப் பேச்சில் என்ன இருந்தது? இவை எல்லாம் எதற்கு? நீங்கள் உங்கள் விமரிசனங்களை இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் ஒரு பத்திரிகையிலிருந்து கடன்வாங்கவில்லையா? தாங்கள் தீவிர இடதுசாரியினர் என்று கருதுகிற உறுப்பினர்கள் மத் தியக் கமிட்டிக்குச் சமர்ப்பித்த அறிக்கையினைத் தோழர் பூப்னவ் படித்தார். உலக முழுதிற்கும் இவர்கள் எத்தகை யவர்கள் என்பதைப் பிரகடனம் செய்யும் இந்த அறிக்கை, ''மத்தியக் கமிட்டியின் நடத்தை சர்வதேசப் பாட் டாளி வர்க்கத்தின் மீது ஒரு தாக்கு'' என்கிறது. இதில்

வெறும் சொல்லடுக்கு தவிர வேறு ஏதாவது உண்டா? ''முழு உலகத்தின் கண்முன்பு பலவீனத்தைப் பிரகடனப் படுத்துவதாம்!'' நாம் இதை எப்படிப் பிரகடனம் செய்கிறோம்? சமாதான யோசனை முன்வைத்தா? நமது படைகள் ஓடி விட்டதாலா? இந்தத் தருணத்தில் பிரெஸ்ட் சமாதானத்தை ஏற்காது ஜெர்மனியுடன் போர் தொடங்குவதின் மூலம் நாம் உலகத்திற்கு நமது படை நலிந்து விட்டது என்பதையும் அது போராட விரும்பவில்லை என்பதையும் காட்டுவோம் என்று நாம் நிரூபித்து விடவில்லையா? இந்த ஊசலாட்டம் முற்றிலும் நமது சிருஷ்டி என்று பூப்னவ் சொன்னது வெற்றுச் சொல்லாகி விட்டது. உண்மைக் காரணம் நமது படைகள் நலிந்திருப்பது. சீக்கிரமாகவோ தாமதமாகவோ ஏற்பட்டாலும் சரி நமது படைக்கு இடை ஓய்வு தேவையாக இருந்தது. நாம் சரியான போர்த்தந்திரத்தினைக் கடைப்பிடித்திருந்தால் நமக்கு ஒரு மாத ஓய்வு கிடைத்திருக்கும்; உங்களது போர்த்தந்திரம் பிசகாக இருந்ததால் நமக்கு ஐந்து நாட்கள் மட்டுமே கிடைத்தன; அதுவும் நல்லதே. பீதியுற்று ஓடும் படைகளைத் தடுத்து நிறுத்தச் சில வேளை சில நாட்களே போதும் என்று போரின் வரலாறு காட்டுகிறது. இப்போது இந்தப் பிசாசுச் சமாதானத்தினை ஏற்காதவன், இதில் கையொப்பமிட விரும்பாதவன், வெறும் வாய்ச்சொல் வீரனே தவிர, போர்த்தந்திரியல்ல. இதில்தான் சங்கடம். மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் எனக்கு, ''பலவீனத்தின் பிரகடனம்'', ''துரோகம்'' என்றெல்லாம் எழுதும் போது, அவர்கள் அதிகத் தீங்கு விளைவிக்கிற, வெறுமையான, குழந்தைத்தனமான சொல்லடுக்குகளையே எழுதுகிறார்கள். பிரகடனம் செய்யத் தகாத சமயத்தில், நம் மீது தாக்குதல் தவிர்க்க முடியாததாக இருந்த சமயத்தில், நாம் போராட முயன்றதின் மூலமே நமது பலவீனத்தினைப் பிரகடனம் செய்தோம். ப்ஸ்கோவ் விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்களை சோவியத்துகள் காங்கிரசுக்கு அழைத்து வருவோம்; ஜெர்மானியர் மக்களை எப்படி நடத்துகிறார்கள் என்று அவர்கள் சொல்லட்டும்; இதன்மூலம் அவர்கள் பீதியுற்று ஓடும் படைவீரனின் நோயைப் போக்கி, ''போல்

ஷிவிக்குகள் முடிவு கட்டுவதாகக் கூறிய போர் அல்ல, சோவியத் ஆட்சிக்கு எதிராக ஜெர்மானியர் தொடுத்துள்ள புதிய போர் இது என்பதை நான் இப்பொழுது புரிந்து கொண்டேன்'' என்று அவனைக் கூறச் செய்யட்டும். பிறகு மீட்சி வரும். ஆனால் நீங்கள், யாரும் பதிலளிக்க முடியாத கேள்வியை எழுப்புகிறீர்கள். இடைக்கால ஓய்வு எத்தனை நாட்கள் நீடிக்கும் என்பது யாருக்கும் தெரியாது.

இப்போது நான் தோழர் திரோத்ஸ்கியின் நிலையைக் குறித்துச் சில வார்த்தைகள் கூற வேண்டும். அவரது நடவடிக்கையில் இரு அம்சங்கள் இருக்கின்றன: பிரெஸ்ட் பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்தில் அவர் இந்தப் பேச்சு வார்த்தைகளை அற்புதமாகக் கிளர்ச்சிப் பிரசாரத்திற்குப் பயன்படுத்திய பொழுது நாம் எல்லோரும் தோழர் திரோத்ஸ் கியுடன் ஒரே மனதாக இருந்தோம். என்னுடன் நடத்திய உரையாடலின் ஒரு பகுதியை அவர் எடுத்துக்காட்டியிருக் கிறார்; ஆனால் ஜெர்மானியர் இறுதி எச்சரிக்கை விடுக்கும் வரையில்தான் நாம் இழுத்தடிப்போம் என்றும் பிறகு விட்டு விடுவோம் என்றும் எங்களிடையே உடன்பாடு இருந்தது என்பதை நான் இங்கு சேர்த்துக் கூற வேண்டும். ஜெர் மானியர் நம்மை ஏய்த்து விட்டார்கள். அவர்கள் ஏழு நாட்களில் ஐந்து நாட்களை நம்மிடமிருந்து கவர்ந்து கொண் டார்கள்[76]. காரியங்களைத் தாமதப்படுத்த வேண்டும் என்ற முறையில் திரோத்ஸ்கியின் போர்த்தந்திரங்கள் சரியான வையாக இருந்தன; ஆனால் போர் நிலை முடிந்து விட்டது என்று அறிவிக்கப்பட்ட போதிலும் நாம் ஜெர்மானியருடன் சமாதான உடன்பாட்டில் கையொப்பமிடவில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகு அவர் போர்த்தந்திரங்கள் தவறானவை ஆகி விட்டன. சமாதானத்தை ஏற்க வேண்டும் என்று நான் நிச்சயமான யோசனையை முன்வைத்தேன். பிரெஸ்ட் சமாதானத்தை விடச் சிறந்த எதையும் நாம் பெற்றிருக்க முடியாது. நமக்கு ஒரு மாதம் ஓய்வு கிடைத்திருக்கும் என் பதும் அது நமக்குப் பயனுள்ளதாக இருந்திருக்கும் என் பதும் இப்போது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிகிறது. வரலாறு வேறு வழியில் சென்றதால் இதை மீண்டும் நினை

லூட்டுவதில் பலனில்லை; ஆனால், ''நாங்கள் சொன்னது சரி என்பதை வாழ்க்கை காட்டும்'' என்று புஹாரின் கூறுவது வேடிக்கையாக உள்ளது. இதைப் பற்றி நான் 1915லேயே இப்படித்தான் எழுதினேன்: ''நாம் போர் தொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்; இது தவிர்க்க முடியாதது; இது வந்து கொண்டிருக்கிறது, நிச்சயமாக வரும்''. எனது கூற்று சரியாக இருந்தது. ஆனால் நாம் வீண் அட்டகாசம் செய்யாமல் சமாதானத்தை ஏற்க வேண்டி வந்தது. போர் வருவதின் காரணமாகச் சமாதானத்தை ஏற்பது என்பது மேலும் அவசியமாயிற்று; இப்போது பெத்ரோகிராதைக் காலி செய்யும் வேலையையாவது எளிதாக்குகிறோம்; எளிதாக்கி விட்டோம். இது உண்மை. ''வின்னிசேன்கோவுடன் சமாதானம் செய்து கொள்வதில்லை என்று வாக்குறுதி கொடுங்கள்'' என்ற புதிய கோரிக்கைகளைத் தோழர் திரோத்ஸ்கி முன்வைக்கிற போது, எத்தகைய சந்தர்ப்பச் சூழ்நிலையிலும் இந்தப் பொறுப்பை ஏற்க மாட்டேன் என்று நான் சொல்கிறேன்.[77] காங்கிரஸ் இந்தக் கடப்பாட்டை ஏற்குமாயின் நானும் என்னுடன் ஒப்புதல் உள்ளவர்களும் இந்தப் பொறுப்பை ஏற்க மாட்டோம். சாத்தியமான போது சாகசமாகப் பின்வாங்குவது, சில சமயம் தாக்குவது என்ற தெளிவான வழியினைக் கடைப்பிடிக்காமல் மீண்டும் சம்பிரதாய முடிவுடன் பந்தப்படுவதாகும் இது. போரில் எந்த ஒரு சம்பிரதாய முடிவுடனும் பந்தப்பட்டுக் கிடத்தலாகாது. போரின் வரலாற்றை அறியாமலிருப்பதும் சமாதான உடன்பாடு என்பது வலுப்பெறுவதற்கான ஒரு சாதனம் என்பதைத் தெரியாதிருப்பதும்—இவ்விஷயத்தில் நான் ஏற்கெனவே பிரஷ்ய வரலாற்றை மேற்கோள் காட்டியுள்ளேன்—கேலிக் கூத்தாகும். நாம் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு விட்டால் சைத்தானுக்கு நம்மை நாமே விற்றுக்கொண்டு விட்டோம், நரகத்திற்குப் போய்விட்டோம் என்று சிலர் குழந்தைத்தனமாக நினைக்கிறார்கள். இது வேடிக்கையாக இருக்கிறது; ஏனெனில் தோல்விக்குப்பிறகு சமாதான உடன்பாட்டில் கையொப்பமிடுவது என்பது வலுவைத் திரட்டுவதற்குரிய மார்க்கம் என்பது போரின் வரலாற்றிலிருந்து

தெட்டத் தெளிவாகக் காணப்படும். வரலாற்றில் ஒரு போரைத் தொடர்ந்து இன்னொரு போர் உடனடி வந்த நிகழ்ச்சிகள் இருந்தன, நாம் இவற்றை எல்லாம் மறந்து விட்டோம், பழைய போர்...* ஆக மாறுகிறது என்பதைப் பார்க்கிறோம். நீங்கள் விரும்பினால் சம்பிரதாய முடிவுகளுடன் என்றென்றைக்குமாகப் பந்தப்பட்டிருங்கள்; அப்பொழுது பொறுப்புள்ள பதவிகளையும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களிடம் ஒப்படையுங்கள். இதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்க மாட்டோம். இங்கு பிளவுபடுத்த வேண்டும் என்ற விருப்பம் லவலேசமும் கிடையாது. வாழ்க்கை உங்களுக்குச் சரியான படிப்பினை தரும் என்று நான் திடமாக நம்புகிறேன். மார்ச்சு 12ந் தேதி தொலைவில் இல்லை; அப்பொழுது உங்களுக்கு நிறைய விஷயாதாரங்கள் கிடைக்கும்[78].

தோழர் திரோத்ஸ்கி இது உண்மையான துரோகமாகும் என்கிறார். இது முற்றிலும் தவறான கருத்து என்று நான் கூறுகிறேன். இதை ஸ்தூலமாக விளக்கிக் காட்ட, நான் ஓர் உதாரணம் தருகிறேன்: சேர்ந்து நடந்து செல்லும் இரண்டு மனிதர்கள் பத்து மனிதர்களால் தாக்கப்படுகிறார்கள்; இவ்விருவரில் ஒருவன் போராடுகிறான், மற்றவன் ஓடி விடுகிறான், —இது துரோகம்; ஆனால் நமக்கு லட்சம் பேர் கொண்ட இரு படைகள் இருப்பதாகவும் அவற்றுக்கு எதிராக ஐந்து படைகள் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம்; ஒரு படையினை இரண்டு லட்சம் போர்வீரர்கள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள், மற்றொரு படை உதவிக்கு விரைதல் வேண்டும்; ஆனால் பகைவரின் மூன்று லட்சம் கொண்ட மற்ற படைகளும் அதைக் கண்ணியில் மாட்டுவதற்காகப் பதி போட்டுக் காத்திருப்பது அதற்கு தெரியும்; ஆகவே உதவிக்குப் போக வேண்டுமா? கூடாது. இது துரோகமல்ல, கோழைத்தனமுமல்ல: ஆள் தொகை அதிகரிப்பால் கருத்துக்கள் யாவும் மாறி விட்டன; படைவீரர்கள் அனைவரும்

---

* இவ்விடத்தில் சுருக்கெழுத்துப் பிரதியில் சில சொற்கள் விட்டு விடப்பட்டிருக்கின்றன.—ப-ர்.

இதை அறிவர், இனிமேல் இது சொந்தக் கருத்தல்ல: இவ்வாறு செயல்படுவதன் மூலம் நான் எனது படையினைக் காப்பாற்றுவேன்; மற்ற படை பிடிபடட்டும்; நானே என் படையினைப் புதுப்பித்துக் கொள்வேன்; எனக்கு நேச சக்திகள் உள்ளன; நேச சக்திகள் வரும் வரையில் காத்திருப்பேன். இந்த வழியில் மட்டுமே வாதம் செய்தல் வேண்டும்; ராணுவ வாதங்கள் மற்றவற்றுடன் கலப்படமானல் கிடைப்பது வெறும் சொல்லடுக்குகளே. அரசியலை நடத்தும் வழி இதுவல்ல.

செய்யக் கூடிய அனைத்தையும் நாம் செய்து விட்டோம். சமாதான உடன்பாட்டில் கையொப்பமிட்டதன் மூலம் சில நாட்களுக்காயினும் பெத்ரோகிராதைக் காப்பாற்றினேம். (செயலாளர்களும் சுருக்கெழுத்துப் பதிவாளர்களும் இதை எழுத வேண்டாம்.) இந்த உடன்பாட்டின் பிரகாரம் நாம் பின்லாந்திலிருந்து நமது படைகளை—அவை தகுதியற்றவை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே—வாபஸ் பெற வேண்டும், ஆனல் பின்லாந்திற்குள் ஆயுதங்களைக் கொண்டுசெல்வதற்கு நமக்குத் தடை இல்லை. பெத்ரோகிராத் சில நாட்களுக்கு முன் பகைவர் வசமாயிருக்குமானல், இந்த நகரம் பீதியால் அலைபட்டிருக்கும்; அப்பொழுது நாம் எதையும் வெளியே எடுத்துச்செல்ல முடிந்திருக்காது; ஆனல் இந்த ஐந்து தினங்களில் நாம் பின்லாந்து தோழர்களுக்கு உதவியிருக்கிறேம்; எந்த அளவு என்று நான் கூறவில்லை; அவர்களுக்கே தெரியும்.

நாங்கள் பின்லாந்திற்குத் துரோகம் செய்து விட்டோம் என்ற வார்த்தைகள் வெறும் சிறுபிள்ளைச் சொல்லடுக்கே. சரியான நேரத்தில் ஜெர்மானியர் முன் பின்வாங்கியதன் மூலமாகவே நாம் அதற்கு உதவினேம். பெத்ரோகிராத் வீழ்ச்சியால் ருஷ்யா அழிந்து விடாது; இந்த விஷயத்தில் தோழர் புஹாரினின் கூற்று ஆயிரந்தடவை சரி; ஆனல் நாம் புஹாரின் வழியில் தந்திரங்களைக் கையாள்வோமானல், ஒரு நல்ல புரட்சியை நாசமாக்கி விடலாம். (சிரிப்பு.)

நாம் பின்லாந்திற்கோ உக்ரேனுக்கோ துரோகம் எதுவும் செய்யவில்லை. வர்க்க உணர்வுள்ள எந்தத் தொழிலாளி

யும் நம்மீது இந்தக் குற்றத்தைச் சாட்ட மாட்டான். நம்மால் முடிந்த அளவு உதவுகிறோம். நமது படையிலிருந்து நல்ல மனிதன் ஒருவனைக்கூட நாம் அகற்றவில்லை; அகற்றவும் மாட்டோம். ஹோஃப்மன் நம்மைப் பிடிப்பான், தாக்குவான் என்று நீங்கள் கூறலாம்; ஆம், பிடிக்கலாம்; இதை நான் சந்தேகிக்கவில்லை; ஆனால் அதற்கு எத்தனை நாள் பிடிக்கும் என்பது அவனுக்குத் தெரியாது, யாருக்கும் தெரியாது. மேலும் அவன் நம்மைப் பிடிப்பான், தாக்குவான் என்ற உங்களுடைய வாதங்கள் சக்திகளின் அரசியல் சேர்க்கை பற்றிய வாதங்களாகும்; இந்தச் சேர்க்கையைப் பற்றி நான் பின்னால் பேசுவேன்.

திரோத்ஸ்கியின் யோசனையினை நான் முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாததேன் என்பதை நான் விளக்கியிருக்கிறேன்; இந்த வழியில் அரசியல் கொள்கை நடத்த முடியாது; இப்போழுது நமது காங்கிரசில் நமது தோழர்கள், உரீத்ஸ்கி இன்னும் விடாது பற்றிக் கொண்டிருக்கும் வெற்றுச் சொல்லடுக்குகளிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளனர் என்பதைக் காட்டும் உதாரணமாக ராதெக் விளங்குகிறார் என்று நான் கூற வேண்டும். அந்த உரையில் வெற்றுச் சொல்லடுக்குகள் இருந்ததாக நான் அவர் மீது குற்றம் கூற முடியாது. ''இதில் துரோகத்தின் நிழல்கூட இல்லை, மானக்கேட்டின் நிழல்கூட இல்லை; ஏனென்றால் அளவு மீறிய வலுவுடைய படையின் முன்பு நீங்கள் பின்வாங்கினீர்கள் என்பது தெளிவு'' என்று அவர் கூறினார். இந்த மதிப்பீடு திரோத்ஸ்கியின் நிலைமுழுவதையும் அழித்து விடுகிறது. ''நாம் பற்களைக் கடித்துக்கொண்டு சக்திகளைத் தயார் செய்தல் வேண்டும்'' என்று ராதெக் கூறியது மிகவும் சரி; இதை நானும் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன்; ஆத்திரக் கூச்சல் வேண்டாம், பற்களைக் கடித்துக்கொண்டு தயாரிப்புச் செய்ய வேண்டும்.

பற்களைக் கடித்துக்கொண்டு, ஆத்திரக் கூச்சல் போடாது, சக்திகளைத் திரட்ட வேண்டும். புரட்சிப் போர் வரும், இது குறித்து நம்மிடையே கருத்து வேறுபாடில்லை; கருத்து வேற்றுமை இருப்பது டில்ஸீட் சமாதான ஒப்பந்தத்

தில் கையொப்பமிடுவதா வேண்டாமா என்பது பற்றி. இதில் மிக மோசமான அம்சம் என்னவென்ருல் நம்மிடம் இருப்பது நலிவுற்ற படை; ஆம்; எனவே மத்தியக் கமிட்டிக்கு ஓர் உறுதியான கொள்கை வேண்டும்,—கருத்து வேறுபாடல்ல, தோழர் புஹாரின் ஆதரிக்கக் கூடிய நடு வாந்தரப் பார்தையுமல்ல. இடைநேர ஓய்வினை நான் மிகுந்த பிரகாசமுள்ள காலமாகச் சித்திரிக்கவில்லை; எத்தனை நாள் இது நீடிக்கும் என்பது யாருக்கும் தெரியாது; எனக்கும் தெரியாது. எத்தனை நாள் அது நீடிக்கும் என்று சொல்லுமாறு என்னை நிர்ப்பந்திப்பது கேலிக் கூத்தாகும். பிரதான ரயில் வழிகளை நாம் காத்து வைத்திருப்பதன் விளைவாக நாம் உக்ரேனுக்கும் பின்லாந்திற்கும் உதவுகிருேம். பல தந்திரங்களைச் செய்துகொண்டும் பின்வாங்கியும் நாம் ஓய்வுக் காலத்தினைப் பயன்படுத்துகிருேம்.

ருஷ்யர்கள் முரண்டு பண்ணுகிருர்கள் என்று இப்போது ஜெர்மன் தொழிலாளியிடம் கூற முடியாது; ஏனெனில் ஜெர்மானிய-ஜப்பானிய ஏகாதிபத்தியம் தாக்குதல் நடத்துகிறது என்பது தெளிவாகி விட்டது; இது எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும்; போல்ஷிவிக்குகளை நெரித்து நசுக்க வேண்டும் என்ற விருப்பம் ஒருபுறமிருக்க, மேல் பகுதியிலும் நெரித்து நசுக்க வேண்டும் என்ற விருப்பமும் கூட ஜெர்மானியருக்கு இருக்கிறது; எல்லாம் குழப்பப் பட்டுள்ளது; இந்தப் புதிய போரில் நாம் தந்திரமாக நடக்க வேண்டும், தந்திரமாக நடக்கும் திறமையை வைத்துக் கொள்ள வேண்டும்.

தோழர் புஹாரினின் உரையினைப் பொறுத்தவரை அவருக்கு வாதக் குறைவு ஏற்படும் போது உரீத்ஸ்கி சொன்னதைப் போன்ற ஒரு சொற்றொடரை முன்வைத்து, ''இந்த உடன்பாடு நம்மைக் கேவலப்படுத்துகிறது'' என்கிருர் அவர். இங்கு வாதங்கள் தேவையில்லை: நாம் கேவலப்படுத்தப் பட்டிருந்தால் தஸ்தாவேஜுகளைத் திரட்டிக் கொண்டு ஓடியிருக்க வேண்டும்; ஆனுல் நாம் ''கேவலப்படுத்தப்பட்டும்'' நமது நிலைகள் ஆட்டங்கொடுக்கவில்லை என்று நம்புகிறேன்.

தோழர் புஹாரின் நமது நிலைகளின் வர்க்க அடிப்படையினைப் பரிசீலனை செய்ய முயன்றார், ஆனால் இதற்கு மாறாக, இறந்து போன மாஸ்கோ பொருளாதார நிபுணன் ஒருவனைப் பற்றிய ஒரு கதையினைக் கூறினார். நமது போர்த்தந்திரங்களுக்கும் உணவு விஷயத்தில் வர்த்தகச் சூதாட்டங்களுக்கும் இடையில் இணைப்பினைக் கண்டுபிடித்த போது—அது மெய்யாகவே வேடிக்கையல்லவா? — வர்க்கம் முழுவதின், வர்க்கம், உணவுச் சூதாட்டக்காரர்களல்ல, போக்கினைப் பார்த்தால் ருஷ்ய முதலாளிகளும் அவர்களைச் சார்ந்து நிற்பவர்களும் — அதாவது தியேலோ நரோதா (''மக்கள் பணி''), நோவயா ஷீஸ்ன்[79] என்ற பத்திரிகைகளின் கொள்கையினைப் பின்பற்றுபவர்கள்—நம்மை இந்தப் போருக்கு முடுக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர் என்பது மறக்கப்பட்டு விட்டது. இந்த வர்க்க உண்மையினை நீங்கள் வலியுறுத்துவதில்லை. இந்தத் தருணத்தில் ஜெர்மனி மீது போர் தொடுப்பது என்பது ருஷ்ய முதலாளிகளின் ஆத்திரமூட்டும் சூழ்ச்சியில் மாட்டிக்கொள்வதாகும். இது புதியதல்ல; நம்மை இப்போது ஒழித்துக்கட்ட இது மிகத் திண்ணமான—முற்றிலும் நிச்சயமானது என்று நான் கூற மாட்டேன், ஏனெனில் எதுவும் சர்வநிச்சயமில்லை—வழியாகும். வாழ்க்கை அவர்கள் பக்கம் இருப்பதாகவும் நாம் கடைசியில் புரட்சிப் போரை அங்கீகரிப்போம் எனவும் தோழர் புஹாரின் கூறிய போது அவர் எளிதான வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்; ஏனெனில் நாம் புரட்சிப் போர் தவிர்க்க முடியாதது என்று 1915ல் முன் கூட்டி அறிவித்தோம். நமது வேறுபாடுகள் பின்வருமாறு: ஜெர்மானியர் தாக்குவார்களா இல்லையா? நாம் போர் நிலை முடிந்துவிட்டதாகப் பிரகடனம் செய்திருக்க வேண்டுமா? புரட்சிப் போரின் நலனுக்காக நாம் பின்வாங்க வேண்டுமா? இடைக்காலம் கிடைப்பதற்காகப் பிரதேசங்களை விட்டுக் கொடுத்தல் வேண்டுமா? ஆதாரப்போர்த்தந்திரமும் அரசியல் கொள்கையும் மிகவும் அருவருப்புத் தரும் சமாதான உடன்பாட்டினைச் செய்து கொள்ளக் கட்டளையிடுகின்றன.

இந்தப் போர்த்தந்திரங்களே அங்கீகரிக்கும் பட்சத்தில் நமது வேறுபாடுகள் அனைத்தும் மறைந்துவிடும்.

சுருக்கமான அறிக்கை
ரபோச்சே-க்ரெஸ்தியான்ஸ்கிய்
நிழெகரோத்ஸ்கிய் லிஸ்டோக்,
இதழ் 54ல்,
மார்ச்சு 19 (6), 1918ல் வெளியிடப்பட்டது

3

போர், சமாதானம் பற்றிய தீர்மானம்[80]

நம்மிடம் ஒரு சேனை இல்லாக் குறையினுல், போர் முனையில் உரங்குலைவுற்ற சேனையின் மிகவும் ஆரோக்கிய மற்ற நிலையில், சோவியத் சோஷலிஸ்டு குடியரசுக்கு எதிராக ஏகாதிபத்தியம் அதன் எதிர்த்தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்பாக ஒய்வு கிடைக்கும் எந்த ஒரு கடுகளவு சாத்தியக் கூறையும் அனுகூலமாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை ஒட்டியும், சோவியத் ஆட்சி ஜெர்மனியுடன் செய்து கொண்ட மிகவும் கடுமையான மானக்கேடான சமாதான உடன்படிக்கையை உறுதிப்படுத்தும் அவசியத்தை இந்தக் காங்கிரஸ் உணர்கிறது.

துவங்கியுள்ள இந்த சகாப்தத்தின், சோஷலிஸ்டுப் புரட்சி சகாப்தத்தின் இன்றைய கட்டத்தில் சோவியத் ருஷ்யா மீது ஏகாதிபத்திய வல்லரசுகளின் (மேற்கு கிழக்கு இரு திசையினதுமான) எண்ணற்ற தாக்குதல்கள் வரலாற்று முறையில் தவிர்க்க முடியாதவை. உள்நாட்டு வர்க்க உறவு களும் சர்வதேச உறவுகளும் ஒருங்கே மிகவும் இறுக்க மாக இருக்கும் சமயத்தில், இத்தகைய தாக்குதல்களின் வரலாற்று முறையிலான தவிர்க்க முடியாத்தன்மை எந்த நேரமும், உடனடியாகக் கூட பொதுவாக சோஷலிஸ்டு இயக்கத்தை எதிர்த்தும், குறிப்பாக ருஷ்யாவின் சோஷ

லிஸ்டு சோவியத் குடியரசை எதிர்த்தும் புதிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போருக்கு இட்டுச் செல்லலாம்.

எனவே, ருஷ்யாவின் தொழிலாளர் விவசாயிகளின் சுயக்கட்டுப்பாட்டையும் கட்டுப்பாட்டையும் மேம்படுத்த மிகவும் ஊக்கமான, தாட்சண்யமற்ற, வைராக்கியமுடைய, கடுமையான சட்ட நடவடிக்கைகளை ஏற்பதும், ஒரு சோஷலிஸ்டு தேசபக்த விடுதலைப் போரை நோக்கிய ருஷ்யாவின் வரலாற்று முறையிலான முன்னேற்றத்தின் தவிர்க்க முடியாத் தன்மையினை விளக்குவதும், தனி ஓர் இரும்பனைய உறுதி கொண்ட சீராக ஒன்றிணைந்த வெகுஜன அமைப்புகளை எல்லா இடங்களிலும் உருவாக்குவதும், இவை தமது அன்றாட முயற்சிகளில் மக்களின் வாழ்விலான நெருக்கடியான தருணங்களில் குறிப்பாயும் ஒரு முகப்படுத்தப்பட்ட தீரமிக்க செயல் புரியும் ஆற்றல் கொண்ட அமைப்புகளாக இருக்கும்படிப் பார்ப்பதும், கடைசியாக, ஆடவர் மகளிர் இருபாலருமடங்கிய வயது வந்த மக்கள் தொகை முழுமைக்கும் முறையான சர்வாம்சமான ராணுவ விவகாரங்கள், ராணுவப் போர் நடவடிக்கைகளில் பயிற்சி அளிப்பதும் நமது கட்சியின், வர்க்க உணர்வு கொண்ட பாட்டாளிகளின் முன்னணிப்படை முழுவதன் சோவியத் ஆட்சியின் தலையாய அடிப்படையான கடமை என்பதை அங்கீகரிப்பதாக இந்தக் காங்கிரஸ் சாற்றுகிறது.

ருஷ்யாவில் வெற்றியடைந்துள்ள சோஷலிஸ்டுப் புரட்சியைக் கெட்டிப்படுத்துவதற்கான ஒரே நம்பகமான உத்தரவாதம் அதை ஒரு சர்வதேசத் தொழிலாளி வர்க்கப் புரட்சியாக மாற்றுவதே என்று இக்காங்கிரஸ் கருதுகிறது.

உலக அரங்கில் நிலவும் சக்திகளின் இன்றைய அணிசேர்க்கையினைக் கருதிப் பார்க்கும் போது, சோவியத் ஆட்சி அதிகாரம் எடுத்துள்ள நடவடிக்கை, சர்வதேசப் புரட்சியின் நலன்களின் நோக்கு நிலையில் இருந்து தவிர்க்க வொண்ணாதது, அவசியமானது என்பதில் காங்கிரசுக்கு நம்பிக்கை உண்டு.

போரிடும் நாடுகள் எல்லாவற்றிலும் தொழிலாளி வர்க்கப் புரட்சி முதிர்ச்சியடைந்து வருகிறது, ஏகாதிபத்தியத்

தின் முழுமையான தவிர்க்க முடியாத தோல்விக்குத் தயார் செய்து வருகிறது என்பதில் நம்பிக்கையுடன், ருஷ்யாவின் சோஷலிஸ்டுப் பாட்டாளி வர்க்கம் எல்லா நாடுகளின் பாட்டாளிகளின் சோதரப் புரட்சி இயக்கத்தைத் தனது வலிமை முழுவதையும் கொண்டு தன் வசமுள்ள சகல சாதனங்களாலும் நிச்சயம் ஆதரிக்கும் என்று இக்காங்கிரஸ் சாற்றுகிறது.

1918, மார்ச்சு 8க்கு முன்பாக
எழுதப்பட்டது

கம்யூனர் செய்திப்பத்திரிகை, இதழ்1ல்,
ஜனவரி 1, 1919ல்
முதலில் வெளியிடப்பட்டது

4

போர், சமாதானம் பற்றிய தீர்மானத்திற்குச் சேர்ப்பு மார்ச்சு 8

நான் தீர்மானம் குறித்து மேலும் பேச உங்கள் அனுமதி கோருகிறேன்:

ஏற்கப்பட்ட தீர்மானத்தை வெளியிடாதிருப்பது முக்கியம் எனவும், எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தை இரகசியமாக வைத்திருக்க வேண்டும் எனவும் இந்தக் காங்கிரஸ் கருதுகிறது. பத்திரிகைகளுக்குத் தரப்படும் ஒரே தகவல்—அதுவும் இன்று அல்ல மத்தியக் கமிட்டியின் நெறிமுறைப்படி — காங்கிரஸ் இது உறுதி செய்யப்படுதலை ஆதரிக்கிறது என்பதே.

மேலும், ஏகாதிபத்திய முதலாளித்துவ அரசுகளுடன் செய்து கொள்ளப்பட்ட எல்லா சமாதான உடன்படிக்கைகளையும் எந்தத் தருணத்திலும் முறித்துக் கொள்ளவும்,

அவற்றின் மீது போர்ப் பிரகடனம் செய்யவும் மத்தியக் கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது பற்றி இக்காங்கிரஸ் விசேஷமாக வலியுறுத்துகிறது.

5

வேலைத்திட்டத்தின் மறுசீராய்வு பற்றியும் கட்சியின் பெயரை மாற்றுவது குறித்துமான அறிக்கை

மார்ச் 8

தோழர்களே, கட்சியின் பெயரை மாற்றுவது சம்பந்தமாக 1917 ஏப்ரல் முதல் ஓரளவுக்கு விரிவான அளவில் கட்சிக்குள் விவாதம் நடந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். எனவே, மத்தியக் கமிட்டி இது பற்றி ஓர் உடனடியான முடிவுக்கு வர முடிந்திருக்கிறது. இது கணிசமான சர்ச்சைக்கு இடந்தராது போகலாம்—உண்மையில் எவ்விதச் சர்ச்சையுமே இல்லாது போகலாம். நமது கட்சியின் பெயர் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி என்று மாற்றப்படும் ''போல்ஷிவிக்குகளின்'' என்ற சொல் அடைப்பு குறிக்குள் சேர்க்கப்படும் என்று மத்தியக் கமிட்டி பிரேரேபிக்கிறது. இந்தச் சேர்ப்பின் அவசியத்தை நாம் எல்லோரும் உணர்கிறோம். காரணம் ''போல்ஷிவிக்'' என்ற சொல் ருஷ்யாவின் அரசியல் வாழ்க்கையில் மட்டும் அன்றி வெளிநாட்டுப் பத்திரிகைகள் முழுவதிலும்கூட நிலவும் உரிமையினைப் பெற்றிருக்கிறது. இப்பத்திரிகைகள் ருஷ்ய நிகழ்ச்சிகளைப் பற்றிப் பொதுவாக முழுவிவரமும் தெரிந்து வைத்திருக்கின்றன. ''சமூக-ஜனநாயகக் கட்சி'' என்ற பெயர் விஞ்ஞான முறையில் பிழையானது என்பதை நமது பத்திரிகைகள் ஏற்கெனவே விளக்கியுள்ளன. தொழிலாளர்கள் தமது சொந்த அரசை நிறுவிய போது, ஜனநாயகத்துவம்—முதலாளித்துவ ஜனநாயகத்துவம்—பற்றிய பழைய கருத்துரு நமது புரட்சியின் வளர்ச்சிப் போக்கில் மேம்படுத்தப்பட்டு

விட்டதை உணரலாயினர். மேற்கு ஐரோப்பாவில் முன் எங்குமே நிலவியிராத ஒரு ரகமான ஜனநாயகத்துவத்தை நாம் வந்தடைந்தோம். அதன் முன்னேடி மாதிரி பாரிஸ் கம்யூனில் மட்டுமே காணப்பட்டது. பாரிஸ் கம்யூன் பற்றிக் குறிப்பிட்ட எங்கெல்ஸ் அது அரசு என்ற சொல்லின் சரியான அர்த்தப்படியான அரசல்ல என்று கூறினர்[81]. சுருங்கக் கூறின் உழைக்கும் மக்கள்தாமே அரசை நிர்வாகம் செய்வதையும் இக்குறிப்பிட்ட அரசு அமைப்பு முறையை ஆதரிக்கும் ஆயுதப் படைகளை நிறுவுவதையும் மேற்கொண்டதால் தனிப்பட்ட அரசாங்கப் பொறியமைவு மறைந்து வருகிறது, குறிப்பிட்ட அரசு பலவந்தத்துக்கான விசேஷப் பொறியமைவு மறைந்து வருகிறது, எனவே நாம் ஜனநாயகத்துவத்தை அதன் பழைய வடிவில் கடைப்பிடிக்க முடியாது.

மறுபுறம், நாம் சோஷலிஸ்டு சீரமைவைத் தொடங்கும் போது, இறுதியாகப் பகுத்தாயும் போது இந்தச் சீரமைவுகள் எந்த லட்சியத்தை நோக்கி நெறியாக்கம் செய்யப்படுகின்றன என்பது குறித்து நமக்குத் தெளிவான கருத்தோட்டம் வேண்டும். அதாவது நாம் உருவாக்கும் கம்யூனிஸ்டு சமூக அமைப்பு, ஆலைகளையும் நிலத்தையும் உற்பத்தி சாதனங்களையும் பறிமுதல் செய்வதோடு தன்னை வரம்பு கட்டிக் கொள்வதல்ல, பண்டங்களின் உற்பத்தி மற்றும் வினியோகத்தைக் கணக்கு வைத்தல் கண்காணித்தலுடன் நின்றுவிடுவதல்ல, மாருக ஒவ்வொருவரிடமிருந்தும் அவரது திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப என்ற கோட்பாட்டைச் செயல்படுத்தும் திசையில் முன்செல்வதாக இருக்கும். இதனுல்தான் கம்யூனிஸ்டுக் கட்சி என்ற பெயர் மட்டுமே விஞ்ஞான முறையில் சரியானதாகும். நம்மை அராஜகவாதிகளுடன் சேர்த்துக் குழப்ப இது இடந்தரலாம் என்ற ஆட்சேபத்தை மத்தியக் கமிட்டி உடனே நிராகரித்தது. அராஜகவாதிகள் தம்மைத்தாமே கம்யூனிஸ்டுகள் என்று மட்டும் அழைத்துக் கொள்வதில்லை; எப்போதும் அந்தப் பெயருடன் வேறு சிலதையும் சேர்த்துக் கொள்கிருர்கள்

என்ற காரணத்தைக் காட்டியது. இந்த விஷயத்தில் நாம் சோஷலிசத்தின் பலவகைகள் பற்றிக் குறிப்பிடலாம். ஆனுல் அவை சமூக-ஜனநாயகவாதிகள் சமூக-சீர்திருத்தவாதிகள், தேசிய சோஷலிஸ்டுகள் அல்லது இதே போன்ற கட்சிகளுடன் போட்டுக் குழப்பப்பட இடமளிப்பதில்லை.

மறுபுறம், கட்சியின் பெயர் மாற்றப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவான மிகவும் முக்கியமான வாதம் என்னவென்ருல், எல்லாப் பிரதான ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள பழைய அதிகாரபூர்வமான சோஷலிஸ்டுக் கட்சிகள் சமூக-தேசியவெறி மற்றும் சமூக-தேசபக்தியில் இருக்கும் அவற்றின் போதைமயக்கத்தை இன்னும் ஒழித்து விடவில்லை என்பதும், அது இன்றைய போரின் போது ஐரோப்பிய அதிகாரபூர்வமான சோஷலிசம் முழுமையாகவும் வீழ்ச்சியடைவதற்கு இட்டுச் சென்றது என்பதும், அதனுல், இதுவரையில் எல்லா அதிகாரபூர்வமான சோஷலிஸ்டு கட்சிகளும் தொழிலாளி வர்க்க புரட்சிகர சோஷலிஸ்டு இயக்கத்திற்கு மெய்யாகவே தடங்கலாக இருந்து வந்துள்ளன, அதற்கு மெய்யாகவே சுமையாக இருந்து வந்துள்ளன என்பதாகும். அனைத்து நாடுகளின் உழைக்கும் மக்கள் பெருந்திரளின் மாபெரும் ஆதரவை இந்தக் கட்டத்தில் நமது கட்சி ஐயத்திற்கு இடமின்றிப் பெற்றுள்ளது. நமது கட்சி பழைய அதிகாரபூர்வ சோஷலிசத்துடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு விட்டது என்ற அளவுக்கு சாத்தியமான மிகவும் தீர்மானகரமான கூரிய, துல்லியமான தெட்டத் தெளிவான அறிவிப்பைச் செய்தல் வேண்டும். இந்த நோக்கத்துக்குக் கட்சியின் பெயர் மாற்றப்படுவது மிகவும் பயனுறுதியுள்ள மார்க்கமாகும்.

மேலும் தோழர்களே, இதைவிடவும் மிகவும் அதிகக் கடினமான பிரச்சினை வேலைத்திட்டத்தின் தத்துவார்த்தப் பகுதியும் அதன் நடைமுறை மற்றும் அரசியல் பகுதியும் ஆகும். வேலைத்திட்டத்தின் தத்துவார்த்தப் பகுதியைப் பொருத்தவரை நம்மிடம் சில விஷயாதாரங்கள்—கட்சியின் வேலைத்திட்டம் பற்றிய மறுசீராய்வு மீதான மாஸ்கோ பெத்ரோகிராத் கருத்து தொகுப்புகள்—உள்ளன;[82] இவை

வெளியிடப்பட்டுள்ளன. நமது கட்சியின் முக்கிய தத்து வார்த்த ஏடுகளான பெத்ரோகிராதில் வெளியிடப்படும் புரோஸ்வெஷேனியே (''அறிவொளி'') மற்றும் மாஸ்கோ வில் வெளியிடப்படும் ஸ்பார்ட்டக் (''ஸ்பார்ட்டகஸ்'')[83] இரண்டும், நமது கட்சியின் வேலைத்திட்டத்தின் தத்து வார்த்தப் பகுதியை மாற்றுவது குறித்த சில போக்குகளை ஆதாரப்படுத்தி விளக்கும் கட்டுரைகளைத் தாங்கி வந்தன. இந்தத் துறையில் நம்மிடம் ஓரளவுக்கு விஷயாதாரங்கள் உள்ளன. இரண்டு பிரதான நோக்கு நிலைகளைக் காணலாம். இவை கோட்பாடு விஷயங்களில் எப்படியும் அடிப்படையில் வேற்றுமைப்படவில்லை, என்று நான் கருதுகிறேன். நான் தாங்கி ஆதரித்த ஒரு நோக்கு நிலை, நமது வேலைத்திட்டத்தின் பழைய தத்துவார்த்தப் பகுதியை நிராகரிக்கக் காரணம் எதுவும் இல்லை என்பதாகும். அவ்வாறு நிராகரிப்பது உண் மையில் பிசகானதாகும். முதலாளித்துவத்தின் ஆக உச்ச கட்டம் என்ற முறையில் ஏகாதிபத்தியம் குறித்த ஒரு பகுப் பாய்வை நாம் அதோடு சேர்க்க வேண்டும். மேலும் சோஷ லிஸ்டு புரட்சியின் சகாப்தம் தொடங்கி விட்டது என்ற மெய்விவரத்தில் இருந்து இயங்கத் தொடங்கி சோஷலிஸ்டுப் புரட்சி சகாப்தம் பற்றிய ஒரு பகுப்பாய்வையும், அதோடு சேர்க்க வேண்டும். நமது புரட்சியின் கதி, சர்வதேசப் பாட் டாளி சைன்யத்தின் நமது படைப்பிரிவின் கதி எதுவாயி னும் சரி, புரட்சியின் எதிர்காலச் சிக்கல்கள் எதுவாயி னும் சரி, மிகவும் முன்னேறிய நாடுகளைப் பட்டினியிலும், நாசத்திலும் காட்டு மிராண்டித் தனத்திலும் தள்ளியுள்ள ஒரு போரில் சிக்கியிருக்கும் ஏகாதிபத்திய நாடுகளின் எதார்த்த நிலைமை எப்படியும் மிகவும் மோசமானதாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னுல் 1887ல் ஓர் ஐரோப்பியப் போரின் நிகழக் கூடிய வருங்கால திசை வழி குறித்து மதிப்பீடு செய்த போது பிரெடெரிக் எங்கெல்ஸ் கூறியதை நான் திரும்பவும் கூறுகிறேன். ஐரோப்பாவில் மன்னர் மகு டங்கள் டஜன் கணக்கில் தரையில் கிடக்கும், அவைகளைப் பொறுக்கி எடுக்க எவரும் விரும்ப மாட்டார்கள் என்று அவர் சொன்னுர்; ஐரோப்பிய நாடுகளில் நம்ப முடியாத

அளவுக்கு நாசம் ஏற்படும், ஓர் ஐரோப்பியப் போரின் பயங்கரங்களில் இருந்து ஒரே ஒரு விளைவுதான் ஏற்படும் என்று கூறிய அவர் அதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''ஒன்ரு தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி அல்லது அந்த வெற்றியை சாத்தியமாக்கவும் அவசியமாக்கவுமான நிலைமைகள் உருவாதல்.''[84] இந்த விஷயத்தில் எங்கெல்ஸ் மிகவும் துல்லியமாயும் எச்சரிக்கையுடனும் கருத்து வெளியிட்டார். மார்க்சியத்தைப் புரட்டி நாசமடைந்த நிலைமைகளில் சோஷலிசம் சாத்தியமல்ல என்று காலங்கடந்த பிறகு தமது போலிதத்துவவாதம் பேசும் பேர்வழிகளைப் போல் அல்லாமல், எங்கெல்ஸ், ஒவ்வொரு போரும், முன்னேறிய சமூகத்திலும் கூட நாசம், காட்டு மிராண்டித்தனம், சித்திரவதை, பேரிடர்களை மக்கள் திரளுக்கு உண்டாக்கும், அவர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுவர் என்பதையும், அது சோஷலிசத்தின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். அவர் சொன்னர்: அது ''ஒன்ரு தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி அல்லது அந்த வெற்றியை சாத்தியமாக்கவும் அவசியமாக்கவுமான நிலைமைகள் உருவாதல்'' என்பதாக இருக்கும். அதாவது இதன் பின்விளைவாக கலாசாரம் மற்றும் உற்பத்தி சாதனங்கள் பேரளவில் அழிவுற்றதன் காரணத்தால் பல கடினமான மாறிச் செல்லும் கட்டங்கள் ஏற்படுவது சாத்தியம். ஆனல் இதன் பலன் உழைக்கும் மக்கள் அனைவரின் முன்னணிப் படையான தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி, அதோடு ஒரு சோஷலிஸ்டு சமூக அமைப்பை உருவாக்குவதற்காக அது தன் கரங்களில் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ளத் தொடங்குவது என்பதாக மட்டுமே இருக்கும். கலாசாரம் எந்தளவுக்கு அழிக்கப்பட்டாலும் அதை வரலாற்றில் இருந்து ஒழித்து விட முடியாது. கலாசாரத்தை மீட்டமைப்பது கடினமே. ஆயினும் எந்த அழிவாலும் கலாசாரம் முற்ருக மறைந்தொழியும்படிச் செய்ய முடியாது. அதன் சில பகுதிகள், அந்தக் கலாசாரத்தின் பொருளாயத மீதங்கள் அழிக்க வொண்ணுதவையாக இருக்கும். அதை மீட்டமைப்

பதில் மட்டுமே இடர்ப்பாடு இருக்கும். இங்கு ஒரு நோக்கு நிலை உள்ளது. அதாவது நாம் பழைய வேலைத்திட்டத்தை வைத்திருக்க வேண்டும்; அதனுடன் ஏகாதிபத்தியம் மற்றும் சமூகப் புரட்சியின் துவக்கம் பற்றிய பகுப்பாய்வைச் சேர்க்க வேண்டும் என்பது.

நான் வெளியிட்டுள்ள நகல் வேலைத்திட்டத்தில் இந்த நோக்கு நிலையை வெளியிட்டேன். இன்னொரு நகல் தோழர் சகோல்னிகவால் மாஸ்கோ கருத்துத் தொகுப்பில் வெளியிடப்பட்டது. இரண்டாவது நோக்கு நிலை நமது தனிப்பட்ட உரையாடல்களிலும் குறிப்பாக தோழர் புஹாரின் தோழர் வி. ஸ்மிர்னோவ் ஆகியோரால் பத்திரிகைகளிலும் மாஸ்கோ கருத்துத் தொகுப்பிலும் வெளியிடப்பட்டது. இந்த நோக்கு நிலைப்படி நமது வேலைத்திட்டத்தின் பழைய தத்துவார்த்தப் பகுதி முழுவதுமோ அல்லது கிட்டத்தட்ட முழுவதுமோ அகற்றப்பட்டு, ஒரு புதிய பகுதியால் மாற்றீடு செய்யப்பட வேண்டும். அது தற்போதைய வேலைத் திட்டம் செய்வது போன்று பண்ட உற்பத்தியின் வளர்ச்சியையும் முதலாளித்துவத்தையும் பகுப்பாய்வு செய்யாது, மாறாக நடப்புக்கால, முதலாளித்துவ வளர்ச்சியின் உச்ச கட்டத்தை அதாவது, ஏகாதிபத்தியத்தைப் பகுப்பாய்வு செய்யும், சமூகப் புரட்சியின் சகாப்தத்திற்கு உடனடி மாறிச் செல்வதையும் பகுப்பாய்வு செய்யும். இந்த இரண்டு நோக்கு நிலைகளும் அடிப்படையாயும் கோட்பாடு ரீதியிலும் வேற்றுமைப்படவில்லை என்று கருதுகிறேன். ஆனால் நான் எனது நோக்கு நிலையைத் தாங்கி ஆதரிப்பேன். பண்ட உற்பத்தி முதல் முதலாளித்துவம் வரை பகுப்பாய்வு செய்யும் பழைய வேலைத்திட்டத்தை அகற்றுவது தத்துவார்த்தரீதியில் பிழையானது என்று எனக்குத் தோன்றுகிறது. அதில் பிழையான எதுவும் இல்லை. காரியங்கள் அவ்வாறுதான் இருந்தன, அவ்வாறுதான் இருக்கின்றன. காரணம் பண்ட உற்பத்தி முதலாளித்துவத்தை ஈன்றெடுத்தது, முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துக்கு இட்டுச் சென்றது. இதுவே பொதுவான உலகம் முழுவதன் வரலாற்று முறையிலான எதிர்காலச் சித்திரம். மேலும் சோஷலிசத்தின் அடிப்படைகளை மறந்து

விடக் கூடாது. போராட்டத்தின் இனி மேற்பட்டதான சிக்கல்கள் எதுவாக இருப்பினும் சரி, இடையிடையே எந்தத் திருக்கு மருக்குகளுடன் நாம் போராட நேரினும் சரி (அவை மிகப்பல இருக்கும், நமது நாட்டில் மட்டுமே புரட்சியின் வரலாறு எத்தகைய பிரம்மாண்டமான திருப்பங்களைச் செய் துள்ளது என்பதை நாம் அனுபவத்தில் கண்டோம், புரட்சி ஓர் ஐரோப்பியப் புரட்சி ஆகும் போது காரியங்கள் இன்னும் அதிகமாகச் சிக்கலடையும், மேலும் அதிக வேகமாக இயங் கும், வளர்ச்சி விகிதம் அதிக கொந்தளிப்படையும், திருப் பங்கள் மேலும் அதிகச் சிக்கலானதாகும்) இந்தத் திருக்கு மருக்குகளில், வரலாற்றின் இந்தக் கடுமையான திருப்பங் களில் நாம் வழிதவறிவிடாமல் இருக்கும் பொருட்டு, பொது வான எதிர்கால வளர்திசையைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு, முதலாளித்துவத்தின் முழு வளர்ச்சியையும் சோஷலிசத்திற்கான முழுப் பாதையையும் இணைக்கும் செவ் வண்ண இழையினைக் காண்பதற்கு இயலும் பொருட்டு— இந்தப் பாதை நேரானது என்று நாம் எண்ணுவது இயல்பே, அதன் துவக்கம் தொடர்ச்சி முடிவு ஆகியவற்றைக் காணும் பொருட்டு அது நேரான பாதை என்றே நாம் எண்ண வேண்டும், ஆனால் வாழ்க்கையில் அது எப்பொழு துமே நேரானதல்ல, அது நம்ப முடியாத அளவுக்குச் சிக்க லானதாக இருக்கும்—இந்தத் திருப்பங்களில் நமது பாதை யைத் தவறவிட்டுவிடாது இருக்கும் பொருட்டு, பின்வாங் கும் நடவடிக்கை மேற்கொள்ளும் போது, பின்னடையும் சமயங்களில் தற்காலிக தோல்விகளின் போது அல்லது வர லாறோ அல்லது விரோதியோ நம்மைப் பின்னால் வீசிடும் போது இழப்புக்கு ஆளாகாமல் இருக்கும் பொருட்டு நமது பழைய அடிப்படை வேலைத்திட்டத்தை உதறித்தள்ளாமல் இருப்பது முக்கியமானது என்று நான் கருதுகிறேன். இதைத் தக்கவைத்துக் கொள்வதே சரியான தத்துவார்த்தக் கொள் கையாகும். இங்கு ருஷ்யாவில் இன்று நாம் முதலாளித் துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் முத லாவது கட்டத்தை மட்டுமே எட்டியிருக்கிறோம். சில காலம் தத்துவார்த்தரீதியில் மேற்கொள்ளப்பட்டதும், நமக்கு

விரும்பத்தக்கதும், இந்த மாறுதல் கட்டங்களை விரைவில் கடந்து செல்ல நமக்குத் துணைபுரிவதுமான அந்த சமாதான நிலைமையை வரலாறு நமக்கு வழங்கவில்லை. உள்நாட்டுப் போர் ருஷ்யாவில் பல விஷயங்களைக் கடினமாக்கி விட்டது என்பதையும், உள்நாட்டுப் போர் தொடர்ச்சியான பல போர்களுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதையும் நாம் உடனடியாகப் பார்க்கிறோம். முதலாளித்துவம் முழுமையாகத் தகர்வுற்று சோஷலிஸ்டு சமூகம் பிறப்பதை ஒட்டி வன்முறை தவிர்க்க முடியாத வகையில் பின்தொடரும் என்பதை மார்க்சியவாதிகள் என்றுமே மறந்து விடவில்லை, வன்முறை உலக வரலாற்றின் ஒரு கட்டத்தையும் பல்வேறு வகையான போர்களின்—ஏகாதிபத்தியப் போர்கள், நாடுகளுக்கு அகத்தேயான உள்நாட்டுப் போர்கள், இவை இரண்டும் கலந்த போர்கள், ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் பல்வேறு இணைப்புகளால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களை விடுதலை செய்யும் தேசியப் போர்களின்—ஒரு முழு சகாப்தத்தையும் அமைக்கிறது. ஏகாதிபத்திய வல்லரசுகள் பிரம்மாண்டமான அரசு-முதலாளித்துவ ராணுவ டிரஸ்டுகள் சிண்டிகேட்களின் சகாப்தத்தில் தவிர்க்க முடியாதபடி பல்வேறு கூட்டணிகளில் பிரவேசிக்கும் இந்த சகாப்தம், மாபெரும் ராட்சச வீழ்ச்சிகளின் சகாப்தம், போரினால் திணிக்கப்படும் வெகுஜன முடிவுகளும் நெருக்கடிகளும் கொண்ட சகாப்தம் தொடங்கிவிட்டது—இதை நாம் தெளிவாகக் காணலாம்—இது துவக்கம் மட்டுமே. எனவே பொதுவாக பண்ட உற்பத்தி பொதுவாக முதலாளித்துவம் குறித்த வரையறுப்பின் தொடர்பான எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ள வேண்டிய முகாந்தரம் எதுவும் இல்லை. முதலாளித்துவத்தை ஒட்டுமொத்தமாக உதறித் தள்ளுவதையும், சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதன் துவக்கத்தையும் நோக்கி இப்போதுதான் முதல் படிகளை எடுத்து வைத்துள்ளோம். சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கு எத்தனை கட்டங்கள் இருக்கும் என்பதை நாம் அறியோம், அறிந்திருக்கவும் முடியாது. அது முழு அளவிலான ஐரோப்பிய சோஷலிஸ்டுப்

புரட்சி எப்போது துவங்கும் என்பதையும், அது விரோதிகள் மீது நடவடிக்கை எடுத்து சோஷலிஸ்டு வளர்ச்சிக்கான தடங்கலற்ற பாதையில் எளிதாகவும் விரைவாகவும் பிர வேசிக்குமா அல்லது மெதுவாகத்தான் செயல்படுமா என் பதையும் சார்ந்ததாக இருக்கிறது. இதை நாம் அறியோம். ஒரு மார்க்சியக் கட்சியின் வேலைத்திட்டம் முற்ற முழு நிச்சயத்துடன் நிலைநாட்டப்பட்ட மெய்விவரங்களை அடிப் படையாக்கியதாக இருத்தல் வேண்டும். நமது வேலைத்திட் டத்தின்—புரட்சியின் எல்லாச் சிக்கல்களிலும் தனது ஊர் ஜிதத்தைக் கண்ட இந்த வேலைத்திட்டத்தின்—வன்மை இதில் மட்டுமே காணக்கிடக்கிறது. இந்த அடிப்படையில் மட் டுமே மார்க்சியவாதிகள் தமது வேலைத்திட்டத்தைக் கட்டி உருவாக்க வேண்டும். முற்ற முழு நிச்சயத்துடன் நிலை நாட்டப்பட்ட மெய்விவரங்களில் இருந்தே நாம் செயல் படத் தொடங்க வேண்டும். இந்த மெய்விவரங்கள் உலகம் முழுவதிலும் பரிவர்த்தனை மற்றும் பண்ட உற்பத்தியின் வளர்ச்சி எப்படி ஓர் ஆதிக்கம் பெற்ற வரலாற்று முறைப் புலப்பாடாயிற்று என்பதையும், அது எவ்வாறு முதலாளித் துவத்துக்கு இட்டுச் சென்றது, முதலாளித்துவம் எவ்வாறு ஏகாதிபத்தியமாக வளர்ந்தது என்பதையும் புலப்படுத்த வேண்டும். இந்த அறவே திட்டவட்டமான மெய்விவரம் நமது வேலைத்திட்டத்தில் முதலாவதாயும் முக்கியமாயும் பதிவு செய்யப்பட வேண்டும். ஏகாதிபத்தியம் சமூகப் புரட்சி யின் சகாப்தத்தைத் துவக்குகிறது என்பதும் உண்மையே, இது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது, இதைக் குறித்து நாம் விளக்கமாகக் கூற வேண்டும். இந்த மெய்விவரத்தை நமது வேலைத்திட்டத்தில் சாற்றுவது மூலம் நாம் சமூகப் புரட்சியின் ஒளிச்சுடரை உலகம் முழுவதன் முன்னும் உயர்த்தி ஏந்தி நிற்கிறோம். ஒரு கிளர்ச்சிப் பிரசார உரையாக அல்ல, மாறாக ஒரு புதிய வேலைத்திட்டமாக அதை உயர்த்தி ஏந்தி நிற்கிறோம். மேற்கு ஐரோப்பிய மக்களினங்களிடம் நாங்கள் கூறுவதாவது: ''முதலாளித்துவ வளர்ச்சியின் அனு பவத்தில் இருந்து நீங்களும் நாங்களும் திரட்டிச் சேர்த் தது இங்கு உள்ளது. இப்படித்தான் முதலாளித்துவம் இருந் தது. இவ்வாறுதான் அது ஏகாதிபத்தியமாக வளர்ச்சி

யடைந்தது. இங்குதான் சமூகப் புரட்சியின் சகாப்தம் தொடங்குகிறது. இதில் காலவரிசைப்படி முதல் பாத்திரம் வகிக்க வேண்டுவது நமது கடமை''. நாகரிகமடைந்த எல்லா நாடுகளின் முன்னும் இந்தக் கொள்கை அறிக்கையினை நாம் பறைசாற்றுவோம். இது ஆர்வமுள்ள வேண்டுகோளாக மாத்திரம் இராது, ஆனால் பரமதுல்லியத்துடன் ஆதாரப் படுத்தப்பட்டு, எல்லா சோஷலிஸ்டுக் கட்சிகளும் அங்கீ கரித்துள்ள மெய்விவரங்களில் இருந்து வருவிக்கப்பட்ட தாக இருக்கும். இது இப்போது சோஷலிசத்துக்குத் துரோகம் செய்து விட்ட கட்சிகளின் போர்த்தந்திரங்களுக்கும் நாம் அனைவரும் ஒப்புதல் தரும் தத்துவார்த்த மெய்க்கோள் களுக்கும் இடையிலான முரண்பாட்டை மேலும் தெளிவு படுத்தும். இந்த மெய்க்கோள் வர்க்க உணர்வுடைய ஒவ் வொரு தொழிலாளியின் சதையிலும் இரத்தத்திலும் புகுந்து விட்டது. முதலாளித்துவத்தின் எழுச்சியும் அது ஏகாதி பத்தியமாக வளர்ச்சியுறுவதும் என்பதே இந்த மெய்க்கோ ளாகும். ஏகாதிபத்தியப் போர்களின் தருவாயில் ஹெம் னிட்ஸ் மற்றும் பாஸெலில் நடைபெற்ற காங்கிரசுகள் ஏகாதிபத்தியத்தைப் பற்றி வரையறை செய்து தீர்மானங் கள் நிறைவேற்றின. அந்த வரையறுப்புக்கும் சோஷலிஸ்டு-துரோகிகளின் இப்போதைய போர்த்தந்திரங்களுக்கும் இடையே படுமோசமான முரண்பாடு உள்ளது.[85] எனவே அவர்களது தலைவர்கள் மீது நாம் சாட்டும் குற்றம் என்ன என்பதை மேலும் தெளிவாக மேற்கு ஐரோப்பிய உழைக் கும் மக்களுக்குப் புலப்படுத்திக் காட்டும் பொருட்டு நாம் அடிப்படையாக இருப்பதை மீண்டும் திருப்பிக் கூற வேண் டும்.

ஒரு வேலைத்திட்டத்தைக் கட்டி உருவாக்கக் கூடியதும் தத்துவார்த்தரீதியில் சரியானதுமான ஒரே அடிப்படை இது வாகும். பண்ட உற்பத்தி, முதலாளித்துவம் பற்றிய பகுப் பாய்வை, அது ஏதோ பழம் குப்பை என்று கருதிக் கைவிடு வது இப்போது என்ன நிகழ்கிறதோ அதன் வரலாற்றுத் தன்மையால் ஆணையிடப்பட்டதல்ல. காரணம் நாம் முத லாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்

வதன் முதல் படிகளுக்கு அப்பால் செல்லவில்லை, நமது மாறிச்செல்லல் ருஷ்யாவுக்குப் பிரத்தியேகமாக இருக்கும், பெரும்பாலான நாகரிக நாடுகளில் இல்லாத அம்சங்களால் மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளது. எனவே மாறிச் செல்லும் கட்டங்கள் ஐரோப்பாவில் வேருக இருப்பது சாத்தியம் மட்டுமல்ல தவிர்க்க முடியாததுமாகும். ஐரோப்பாவுக்கு முக்கியமல்லாத, ஆனுல் நமக்கு முக்கியமான மாறிச் செல்வதன் பிரத்தியேகமான தேசிய கட்டங்கள் பால் சகல கவனத்தையும் செலுத்துவது தத்துவார்த்தரீதியில் பிசகானதாகும். பண்ட உற்பத்தியின் வளர்ச்சி, முதலாளித் துவத்துக்கான மாறுதல், முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைதல் என்ற பொது அடிப்படையுடன் தொடங்க வேண்டும். இந்த வழியில் நாம் ஒரு தத்துவார்த்த நிலைப் பாட்டைப் பற்றி நின்று அதை வலுப்படுத்த முடியும். சோஷலிசத்துக்குத் துரோகம் விளைக்காமல் எவரும் இதில் இருந்து நம்மைப் பெயர்த்து விட முடியாது. இதிலிருந்து பின்வரும் தவிர்க்க முடியாத முடிவு ஏற்படுகிறது: சமூகப் புரட்சியின் சகாப்தம் துவங்குகிறது.

திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்ட மெய்விவரங்கள் கொண்ட நமது அடிப்படையில் இருந்து விலகாமல் இந்த முடிவுக்கு வருகிறோம்.

இதைத் தொடர்ந்து நமது பணி சோவியத் மாதிரி அரசை வரையறுப்பதாகும். அரசும் புரட்சியும் என்ற எனது நூலில் இந்தப் பிரச்சினை மீதான தத்துவார்த்தக் கருத்துக்களை உருவரை செய்ய முயன்றுள்ளேன்.* அரசு பற்றிய மார்க்சியக் கருத்து மேற்கு ஐரோப்பாவில் ஆதிக் கம் பெற்றுள்ள அதிகாரபூர்வ சோஷலிசத்தால் மிகவும் உச்ச அளவுக்குப் புரட்டப்பட்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இது சோவியத் புரட்சி மற்றும் சோவியத்து கள் ருஷ்யாவில் நிறுவப்பட்டதன் அனுபவத்தால் மிகச் சிறப்பான முறையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நமது

* வி. இ. லெனின். தேர்வு நூல்கள், தொகுதி 6, பக்கங்கள் 9—187 பார்க்க.—ப-ர்.

சோவியத்துகளில் புரியாததும் பூர்த்தியடையாததுமான பல அம்சங்கள் உள்ளன, இதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. அவற்றின் வேலையைப் பரிசீலிக்கும் எவருக்கும் இது தெளிவாகத் தெரியவரும். ஆனால் சோஷலிசத்தின் உலக ரீதியான வளர்ச்சியில் முக்கியத்துவமும், வரலாற்று மதிப்பும் பெற்று ஒரு முன்னேற்றப் படியாக இருப்பது அவை ஒரு புதிய மாதிரியான அரசு என்ற அம்சமே. பாரிஸ் கம்யூன் ஒரு நகரத்தில் சில வாரங்கள் நீடித்த விவகாரம், தாம் என்ன செய்கிறோம் என்பதை மக்கள் உணரக்கூட இல்லை. அதை உருவாக்கியவர்களாலேயே கம்யூன் புரிந்து கொள்ளப் படவில்லை. அவர்கள் விழிப்படைந்த மக்களின் தவறாத இயல்பூக்கத்தைப் பின்பற்றி கம்யூனை நிறுவினார்கள். தாம் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின் பிரிவு எதுவும் உணர்ந்திருக்கவில்லை. ஆனால் நாம் பாரிஸ் கம்யூனின் தோள்கள் மீதும் ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் பல ஆண்டுக் கால வளர்ச்சியின் தோள்கள் மீதும் நின்று கொண்டு இருப்பதால் சோவியத் ஆட்சி அதிகாரத்தை உருவாக்குவது மூலம் நாம் என்ன செய்கிறோம் என்பதை நாம் தெளிவாகக் காணவியலத்தக்க நிலைமைகள் இருக்கின்றன. சோவியத்துகளில் நிலவும் புரியாமை போதிய கட்டுப்பாடின்மை யாவும் இருந்த போதிலும்—இவை நமது நாட்டின் குட்டிமுதலாளித்துவத் தன்மையின் மீதமிச்சங்கள்—இவை அனைத்தும் இருந்த போதிலும் மக்கள் திரள் ஒரு புதுமாதிரி அரசை உருவாக்கியது. அது சில வாரங்கள் அல்ல பல மாதங்களாகச் செயல்பட்டு வருகிறது; ஒரு நகரத்தில் மட்டுமல்ல பல தேசிய இனங்கள் வாழ்ந்து வரும் பிரம்மாண்டமான நாடு முழுதிலும் செயல்பட்டு வருகிறது. இது பின்லாந்துக்குள் பரவியது மூலம் இந்த மாதிரியான சோவியத் ஆட்சி அதிகாரம் அதன் மதிப்பைப் புலப்படுத்தியுள்ளது. பின்லாந்து எல்லா வழிகளிலும் வேறுபட்டது. அங்கு சோவியத்துகள் இல்லை. ஆனால் எப்படியும் ஒரு புது மாதிரியான ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரமாக இருக்கிறது.[86] எனவே, இது தத்துவார்த்தரீதியில் மறுக்க முடியாதது

என்று எது கருதப்படுகிறதோ அதை நிரூபணம் செய்துள் ளது: சோவியத் ஆட்சி அதிகாரம் என்பது ஓர் அதிகார வர்க்கம் அற்ற, போலீஸ் இல்லாத, முறையான சேனை இன்றி, நிலவும் ஒரு புதுமாதிரியான அரசாகும். இந்த அரசில் முதலாளித்துவ ஜனநாயகத்துவம் ஒரு புதிய ஜன நாயகத்தால் மாற்றீடு செய்யப்படுகிறது. இந்த ஜனநாய கம் உழைக்கும் மக்களின் முன்னணிப் படையினைத் தலை மைக்குக் கொண்டு வருகிறது, அதற்கு சட்டமியற்றும் மற் றும் நிர்வாகம் செய்யும் அதிகாரத்துவத்தை வழங்குகிறது, இராணுவப் பாதுகாப்புக்கு அதைப் பொறுப்பாக்குகிறது, மக்களுக்கு மறு போதனை தரக் கூடியதான அரசு இயந் திரத்தை உருவாக்குகிறது.

ருஷ்யாவில் இது அரிதாகவே தொடங்கியுள்ளது, மோசமாகத் தொடங்கியுள்ளது. நாம் தொடங்கியுள்ளதில் எது மோசமானது என்பதை நாம் உணர்வோமானால் அந்த சோவியத் ஆட்சி அதிகாரத்தின் மீது செயல்பட வரலாறு பாங்குடைய காலாவகாசத்தைத் தரும் பட்சத்தில் அதை நாம் வென்று சமாளிக்க முடியும். எனவே, புது மாதிரி யான அரசு குறித்த ஓர் இலக்கணம் நமது வேலைத்திட்டத் தில் தலை சிறந்த இடம் வகிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். துரதிருஷ்டவசமாக நாம் அரசாங்க வேலை களின் மத்தியிலும் மிகவும் அவசரமான நிலைமைகளின் கீழும் நமது வேலைத்திட்டம் மீது தொடர்ந்து பணியாற்ற வேண்டி இருக்கிறது. எனவே, அதிகாரபூர்வமான ஒரு நகல் வேலைத் திட்டத்தை விரிவிளக்கம் செய்வதற்கு நாம் கமிஷனைக் கூடக் கூட்ட இயலவில்லை. பிரதிநிதிகளிடம் வினியோகிக்கப் பட்டிருப்பது ஏக தேசமான ஓர் உருவரை மட்டுமே. இது எல்லோருக்கும் தெளிவாகத் தெரியவரும். அதில் சோவியத் ஆட்சி அதிகாரம் குறித்த விஷயத்துக்கு ஓரள வுக்கு கணிசமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குதான் நமது வேலைத்திட்டத்தின் சர்வதேச முக்கியத்துவம் தன்னை தானே உணர்த்துகிறது. நமது புரட்சியின் சர்வதேச முக் கியத்துவத்தை கோஷங்கள், வேண்டுகோள்கள், ஆர்ப்பாட் டங்கள், கொள்கை அறிக்கைகள் அளவோடு கட்டுப்படுத்தி

விடுவது மிகவும் தவறுனது என்று நான் கருதுகிறேன். அது போதாது. நாம் எதைச் செய்யத் துவங்குகிறேம், எவ்வாறு செய்யத் துவங்குகிறேம், அதை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதை ஐரோப்பியத் தொழிலாளர்களுக்கு அப்படியே எடுத்துக் காட்ட வேண்டும். அது சோஷலிசத்தை எப்படி அடைவது என்ற பிரச்சினையை அவர்கள் முன் நேருக்கு நேராகக் கொண்டுவரும். நல்ல வேலை ஒன்றை ருஷ்யர்கள் தொடங்கியிருக்கிறார்கள், அவர்கள் அதை மோசமாகச் செய்யத் துவங்குவார்களானல் நாம் அதை நன்ருகச் செய்ய வேண்டும் என்று அவர்கள் தாமே காணும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இந்த நோக்கத்துக்காக நாம் சாத்தியமான அளவு அதிகமான ஸ்தூலமான விஷயாதாரங்களை வழங்கி, புதிதாக எதை உருவாக்க முயன்றேம் என்பதையும் கூற வேண்டும். சோவியத் ஆட்சி அதிகாரத்தில் ஒரு புது மாதிரியான அரசு உள்ளது. நாம் அதன் குறிக்கோளையும் கட்டுமானத்தையும் உருவரை செய்ய முயல்வோம். இந்தப் புது மாதிரியான ஜனநாயகத்தில் குழப்பமானதும் அறிவுக்குப் பொருந்தாததுமான பல அம்சங்கள் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை விளக்குவோம். அதன் உயிர்த்துடிப்பாக இருக்கும் உழைக்கும் மக்களுக்கு ஆட்சி அதிகாரம் மாற்றி வழங்கப்படுதல், சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை இயந்திரத்தை ஒழித்தல் ஆகியவை பற்றியும் விளக்குவோம். அரசு ஒடுக்குமுறை இயந்திரம் ஆகும். சுரண்டலாளர்கள் ஒடுக்கப்பட வேண்டும். ஆனல் போலீஸ் மூலம் அவர்களை ஒடுக்க முடியாது. அவர்கள் மக்கள் திரளாலேயே ஒடுக்கப்பட முடியும். இந்த இயந்திரம் மக்கள் திரளுடன் இணைக்கப்பட வேண்டும். சோவியத்துகளைப் போல மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். சோவியத்துகள் மக்கள் திரளுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளன. மக்கள் திரளுடன் நெருக்கமாக இருப்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்றன. அந்த மக்கள் திரளுக்குப் போதனை அளிப்பதற்கான மேலதிகமான வாய்ப்புகளை வழங்குகின்றன. ருஷ்ய விவசாயி போதனை பெற ஆவலாய் இருக்கிறன் என்பதை நாம் நன்ருக அறிவோம்.

அவன் போதனை பெற வேண்டும் என்றே விரும்புகிறோம், ஆனால் புத்தகங்களில் இருந்தல்ல மாறாக அவனது சொந்த அனுபவத்தில் இருந்து போதனை பெற வேண்டும். சோவியத் ஆட்சி அதிகாரம் ஒரு இயந்திரம், மக்கள் திரள் உடனடியாக அரசை ஆளுகை செய்யவும் நாடு தழுவிய ரீதியில் பொருள் உற்பத்தியை ஒழுங்கமைக்கவும் போதனை பெற இயலும்படிச் செய்யும் இயந்திரமாகும். இது மாபெரும் இடர்ப்பாடு நிறைந்த பணியாகும். அதன் நிறைவேற்றத்திற்கு நாம் முனைவது வரலாற்று ரீதியில் முக்கியமானதாகும். நமது ஒரு நாடு என்ற நோக்கு நிலையில் இருந்து மட்டும் நாம் முனையவில்லை, ஐரோப்பியத் தொழிலாளர்களின் உதவியையும் நாடுகிறோம். துல்லியமாயும் அந்த நோக்கு நிலையில் இருந்து நமது வேலைத்திட்டம் பற்றிய ஒரு ஸ்தூலமான விளக்கத்தை நாம் தர வேண்டும். இதனால்தான் இதனை பாரிஸ் கம்யூன் மேற்கொண்ட பாதையின் தொடர்ச்சி என்று கருதுகிறோம். இதனால்தான், ஐரோப்பியத் தொழிலாளர்கள் அந்தப் பாதையில் புகுந்து நமக்கு உதவ முடியும் என்று நம்புகிறோம். நாம் செய்வதையே அவர்களும் செய்வார்கள், ஆனால் மேலும் சிறப்பாகச் செய்வார்கள். ஈர்ப்பு மையம் சம்பிரதாயமான கருத்து நிலையில் இருந்து ஸ்தூலமான நிலைமைகளுக்குப் பெயரும். பழைய நாட்களில் கூட்டம் சேரும் சுதந்திரம் குறிப்பாயும் முக்கியமானதாக இருந்தது, ஆகையால், கூட்டம் சேரும் சுதந்திரம் பற்றிய நமது நோக்கு நிலை கூட்டங்களை எவராலும் தடுக்க முடியாது என்றாகி விட்டது, சோவியத் ஆட்சி கூட்டங்களுக்கான இடத்தை மட்டுமே தர வேண்டும். விரிவான கோட்பாடுகளைப் பொதுவாகப் பறைசாற்றுவது முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு முக்கியமானது: ''எல்லாக் குடிமக்களுக்கும் கூட்டம் கூடும் சுதந்திரம் உண்டு, அவர்கள் வெளியில்தான் கூட வேண்டும், நாம் அவர்களுக்குக் கூட்டம் கூட இடம் தர மாட்டோம்''. நாம் கூறுகிறோம்: ''குறைவான வெற்றுச் சொற்களும் அதிகமான சாரமும்'' வேண்டும். மாளிகைகள்—தவ்ரீச்செஸ்கி மாளிகை மட்டும் அல்ல வேறு பலவும் கூட—பறிமுதல் செய்யப்பட வேண்

டும். ஆனால் கூட்டம் சேரும் சுதந்திரம் பற்றி நாம் எதுவும் கூறவில்லை. அது ஜனநாயக வேலைத்திட்டத்தில் எல்லா அம்சங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். நாமே நமது சொந்த நீதிபதிகளாக இருத்தல் வேண்டும். நீதிமன்றங் களின் வேலையிலும் நாட்டின் நிர்வாகத்திலும் எல்லாக் குடி மக்களும் பங்கேற்க வேண்டும். உழைக்கும் மக்கள் அனை வரையும் நாட்டின் நிர்வாகத்துக்குள் நேரடியாக ஈர்க்க வேண்டுவது நமக்கு முக்கியமானது. இது மிகப் பெரும் சங்கடமான பணி. ஆனால் சோஷலிசத்தைச் சிறுபான்மை யால், கட்சியால் அமுல் செய்ய முடியாது. தாமே அதைச் செய்வதற்குப் போதனை பெற்ற கோடானு கோடிப் பேரால் தான் அதை அமுல் செய்ய முடியும். புத்தகங்கள், சொற் பொழிவுகளில் இருந்து போதனை பெற்றுச் செய்யாமல் மக்கள் திரள் இதைத் தானே உடனடியாகச் செய்யத் தொ டங்குவதற்கு நாம் உதவ முயல்கிறோம்; இது நமக்கு சாதக மான ஓர் அம்சம் என்று கருதுகிறோம். இந்தப் பணிகள் குறித்து நாம் தெளிவாயும் திட்டவட்டமாயும் கூறுவோ மானால், அதன் மூலம் நாம் ஐரோப்பிய மக்கள் திரள் இப்பிரச் சினையை விவாதிப்பதற்கும் அதை நடைமுறையில் முன் வைப்பதற்கும் ஊக்குவிப்பை வழங்கியவர்களாவோம். என்ன செய்யப்பட வேண்டுமோ அது ஒருவேளை சரிவரச் செய்யப் படாமல் இருக்கலாம், ஆனால் மக்கள் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும்படி மக்கள் திரளை நாம் ஊக்கி இயக்கி வருகிறோம். நமது புரட்சி என்ன செய்து வருகிறதோ அது தற்செயல் நிகழ்ச்சி அல்ல என்று இருக்கு மானால் (அது அவ்வாறு அல்ல என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம்), அது ஒரு கட்சி முடிவின் விளைவாக இல் லாமல் மார்க்ஸ் மக்கள் புரட்சி என்று அழைத்த எந்த ஒரு புரட்சியின் தவிர்க்க முடியாத விளைவாக இருக்குமானால்—அதாவது மக்கள் திரள் தாமே தமது கோஷங்கள் தமது முயற்சிகள் மூலம் உருவாக்கும் ஒரு புரட்சியாக—பழைய முதலாளித்துவக் குடியரசின் வேலைத்திட்டத்தை மீண்டும் உருவிடாததாக—இருக்குமானால், விஷயங்களை இந்த வழி யில் நாம் முன்வைப்போமானால், நாம் மிகவும் முக்கியமான

காரியத்தை சாதித்தவர்களாவோம். அதிகப்பட்ச வேலைத் திட்டத்துக்கும் குறைந்தபட்ச வேலைத்திட்டத்துக்கும் இடையிலான வேறுபாட்டை ஒழிக்க வேண்டுமா வேண்டாமா என்ற கேள்விக்கு வருகிறோம். ஆம். இல்லை. இந்த ஒழிப்பைக் கண்டு நான் அஞ்சவில்லை. காரணம், கோடை காலத்தில் நாம் கொண்டிருந்த நோக்கு நிலை இனி இருக்க முடியாது. நாம் இன்னும் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ளாத நிலையில் அன்று இது ''மிகவும் முந்தியது'' என்று நான் கூறினேன். ஆனால் இப்போது நாம் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொண்ட பிறகு அதைச் சோதனை செய்த பிறகு இது அவ்வளவு முந்தியதல்ல. பழைய வேலைத்திட்டம் இருந்த இடத்தில் நாம் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் புதிய வேலைத்திட்டத்தை எழுத வேண்டும். முதலாளித்துவ நாடாளுமன்ற முறையைப் பயன்படுத்துவதை எவ்வழியிலும் நிராகரித்து விடக் கூடாது. நாம் வீழ்த்தித் தள்ளப்பட மாட்டோம் என்று நினைப்பது கற்பனாவாதமாகும்.

ருஷ்யா ஒரு சோவியத் குடியரசை உருவாக்கியுள்ளது என்பதை வரலாற்று ரீதியில் மறுக்க முடியாது. நாம் வீழ்த்தித் தள்ளப்படும் பட்சத்தில், முதலாளித்துவ நாடாளு மன்ற முறையினைப் பயன்படுத்துவதை நிராகரிக்காத அதே போதில்—பகைமையான வர்க்க சக்திகள் நம்மைப் பழைய நிலைமைக்கு விரட்டுமானால்—நாம் அனுபவத்தால் வென்று பெறப்பட்ட சோவியத் ஆட்சி அதிகாரத்தை, சோவியத் மாதிரி அரசை, பாரிஸ் கம்யூன் மாதிரி அரசை நோக்க மாகக் கொள்வோம். அது வேலைத்திட்டத்தில் வெளியிடப்பட வேண்டும். குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் இடத்தில் நாம் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வேலைத் திட்டத்தைப் புகுத்துவோம். புதுமாதிரி அரசு பற்றிய இலக்கணம் நமது வேலைத்திட்டத்தில் முக்கியமான இடம் பெறவேண்டும்.

இப்போதே ஒரு வேலைத்திட்டம் பற்றி விரிவிளக்கம் தருவது முடியாது என்பது தெளிவு. நாம் அதன் அடிப் படை முற்கூற்றுக்களை வகுத்து பிரதான ஆராய்ச்சியுரை களைப் பற்றி விரிவிளக்கம் செய்யும்படி அதனை ஒரு கமிஷன்

அல்லது மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைக்க வேண்டும். இதைவிட மிகவும் எளிதாக—ஏற்கெனவே ஆராய்ச்சியுரைகளை வழங்கியுள்ள பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் மாநாடு சம்பந்தமான தீர்மானத்தின் அடிப்படையில் விரிவிளக்கம் சாத்தியம்.* சோவியத் ஆட்சி அதிகாரம் பற்றிய அத்தகைய இலக்கணம் ருஷ்யப் புரட்சியின் அனுபவத்தை அடிப்படையாக்கி வழங்கப்பட வேண்டும். இதை தொடர்ந்து நடைமுறைச் சீரமைப்புகளுக்கான யோசனை முன்வைக்கப்பட வேண்டும். இங்குதான், இதன் வரலாற்றுப் பகுதியில்தான் நிலமும் தொழிற்துறை நிறுவனங்களும் பறிமுதல் செய்யப்படுவது தொடங்கி விட்டது என்று குறிப்பிடப்பட வேண்டும் என்று கருதுகிறேன். இங்கு நாம் வினியோகத்தை ஒழுங்கமைத்தல், வங்கிகளை ஒரு சர்வப் பொது மாதிரியில் ஒருமுகப்படுத்தல், மேலும் நாடுமுழுதும் தழுவிய வகையில் அவற்றை அரசு நிறுவனங்களின் வலைப்பின்னலாக மாற்றுதல், பொதுஜனக் கணக்குப் பதிவியல், மக்கள் தாமே கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் நிறைவேற்றல், மேலும் சோஷலிஸ்டு நடவடிக்கைகளுக்கான அடித்தளம் நிறுவுதல் ஆகிய ஸ்தூலமான பணிகளை முன்வைக்கிறோம். இந்தப் பகுதி மிகவும் கடினமாக இருப்பதால் இது நமது சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஸ்தூலமான கோரிக்கைகளாக முறைப்படுத்தி முன்வைக்கப்பட வேண்டும். தற்போது நாம் என்ன செய்ய விரும்புகிறோம், வங்கிக் கொள்கைத் துறையில், பொருள் உற்பத்தியை ஒழுங்கமைப்பதில், பரிவர்த்தனை கணக்கு வைத்தல் கண்காணிப்பு ஆகியவற்றை ஒழுங்கமைப்பதில், சர்வப்பொது கட்டாய உழைப்பை ஏற்பாடு செய்வதில், என்ன சீரமைப்புகளைச் செய்து முடிக்க உத்தேசித்திருக்கிறோம் இத்தியாதிகளை முறைப்படுத்தி முன்வைக்க வேண்டும். இதை நாம் செய்ய இயலும் போது இந்தத் திசையில் நாம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு எந்தளவு அதிகமான அல்லது குறைவான நடவடிக்கைகளை அரை-நடவடிக்கைகளை நாம் சேர்ப்போம். என்ன

* இத்தொகுதி, பக்கங்கள் 260—262 பார்க்க.—ப-ர்.

துவங்கப்பட்டு விட்டது, என்ன இன்னும் பூர்த்தியாகாமல் இருக்கிறது என்பதை முற்றமுழுத் துல்லியத்தோடும் தெளிவோடும் இங்கு சாற்ற வேண்டும். ஏற்கெனவே துவங்கப் பட்டதன் பெரும் பகுதி இன்னும் பூர்த்தி செய்யப்பட வில்லை என்பதை நாம் நன்ருக அறிவோம். எந்த ஒரு மிகைப்படுத்தலும் இன்றி, முழுமையான புறநோக்குடன் மெய்விவரங்களில் இருந்து பிறழாமல் நாம் நமது வேலைத் திட்டத்தில் என்ன செய்திருக்கிருேம், என்ன செய்ய விரும்பு கிருேம் என்பதைச் சாற்ற வேண்டும். ஐரோப்பியப் பாட் டாளிகளுக்கு இந்த உண்மையைப் புலப்படுத்தி இதைச் செய்ய வேண்டும் என்று சொல்வோம். இதன் விளைவாக அவர்கள் இன்னின்ன காரியங்களை ருஷ்யர்கள் மோசமாகச் செய்து வருகிருர்கள், நாங்கள் அவற்றை மேலும் நன்ருகச் செய்வோம் என்று கூறுவார்கள். இந்த ஆர்வ ஊக்கம் மக்கள் திரளைச் சென்றடையும் போது சோஷலிஸ்டுப் புரட்சி வெல்லற்கரியதாகும். ஏகாதிபத்தியப் போர் மக்கள் அனை வரின் கண் முன்னே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது கொள்ளைக்காரப் போரே தவிர வேறு எதுவும் அல்ல. ஏகாதி பத்தியப் போர் உலகத்தின் கண்கள் முன்னே தன்னைத் தானே அம்பலப்படுத்திக் கொண்டு சோவியத் ஆட்சி அதி காரத்துக்கும் சோஷலிசத்துக்கும் எதிராக எல்லா ஏகாதி பத்தியவாதிகளும் நடத்தும் போராகுமானுல், அது மேலை நாடுகளில் இருக்கும் பாட்டாளிகளுக்கு இன்னுமோர் முன் னேற்றத் தூண்டுதலை அளிக்கும். அதை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். போர் சோஷலிஸ்டு இயக்கத்துக்கு எதி ரான ஏகாதிபத்தியவாதிகளின் கூட்டணி என்று சித்திரிக்கப் பட வேண்டும். இவை உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய பொதுவான சிந்தனைகள் என்று நான் கருது கிறேன். இதன் அடிப்படையில் அந்தப் பிரச்சினை மீது அடிப் படையான கருத்துக்களைப் பரிமாற்றம் செய்து கொள்ள லாம் என்று நடைமுறை யோசனை முன்வைக்கிறேன். பிறகு இங்கேயே ஒரு சில ஆதாரமான ஆராய்ச்சியுரைகளை விரி விளக்கமும் செய்யலாம். அது கடினம் என்று தெரிந்தால் இந்த எண்ணத்தைக் கைவிட்டு வேலைத்திட்டம் பற்றிய

விஷயத்தை மத்தியக் கமிட்டியிடமோ அல்லது விசேஷக் கமிஷனிடமோ விட்டுவிடலாம். அவற்றுக்குக் கட்சிக்கு ஒரு வேலைத்திட்டத்தை வரைவது சம்பந்தமாக கிடைத்துள்ள விஷயாதாரங்களை வைத்தும் காங்கிரஸ் குறித்த சுருக் கெழுத்துக் குறிப்புகள் அல்லது செயலாளர்களின் விரிவான குறிப்புகளின் அடிப்படையிலும் நெறிமுறைகள் வழங்கப் படும். கட்சியின் பெயர் உடனடியாக மாற்றப்பட வேண்டும். இதை இந்த நேரமே செய்ய முடியும் என்று நான் கருது கிறேன். நமது வேலைத்திட்டம் பதிப்புச் செய்வதற்குத் தயாரில்லாத நிலையில் இருப்பதை நிகழ்ச்சிகள் காட்டும் போது நாம் வேறு எதையும் செய்ய முடியாது என் பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக் கிறேன். நாம் இதைச் சில வாரங்களில் செய்யலாம் என்று கருதுகிறேன். ஒரு வேலைத்திட்டத்தைச் சில வாரங்களுக் குள் பெறுவதற்கு நமது கட்சியின் எல்லாப் போக்குகளையும் சேர்ந்த தத்துவாசிரியர்கள் போதியளவு உள்ளனர். அதில் தவறுனவை பல இருக்கலாம். பதிப்பு நடைகளிலான பிசகு கள் ஒரு புறம் இருக்கலாம். பதிப்பு வேலைக்குத் தேவையான மன அமைதியுடன் இதில் இறங்கி வேலை செய்ய நமக்குப் பல மாதங்கள் இல்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு இந்த வேலைத்திட்டத் தைச் செயலாக்க ஒரு வாய்ப்பைத் தருகிறோம் என்ற பூரண நம்பிக்கையுடன், நமது வேலையின் போக்கில் இந்தத் தவறு களை எல்லாம் நிச்சயமாயும் திருத்துவோம். சோவியத் ஆட்சி அதிகாரம் ஒரு புது மாதிரியான அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு வடிவம் என்பதையும் நாம் ஜன நாயகத்திடம் வேறு பணிகளை முன்வைக்கிறோம் என்பதை யும் பொதுவான சூக்குமமான சூத்திரமான ''உடைமை பறிப்போரை உடைமை நீக்கம் செய்தல்'' என்பதில் இருந்து சோஷலிசத்தின் பணிகளை வங்கிகள் நிலங்களின் தேசவுடை மையாக்கம் என்ற ஸ்தூலமான சூத்திரங்களாகச் செயல் படுத்தியுள்ளோம் என்பதையும் நாம் மெய்ம்மையில் இருந்து பிறழாமல் துல்லியமான வாய்பாடாகச் சொன்னுல் இது வேலைத்திட்டத்தின் ஒரு முக்கியமான பகுதியாக விளங்கும்.

நிலப் பிரச்சினைக்குப் புது மாதிரியாக உருவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் சிறிய விவசாயி மக்கள் பாட்டாளிகளின் பக்கம் ஆதரவாக முன்வந்து சோஷலிஸ்டுப் புரட்சிக்கு உதவுவதற்கான முதல் நடவடிக்கைகளை இதில் நாம் காண முடியும், தமது தப்பெண்ணங்கள் பழைய நம்பிக்கைகள் எதுவாக இருப்பினும் விவசாயிகள் எவ்வாறு சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் நடைமுறைப் பணியில் இறங்கி விட்டார்கள் என்பதைக் காண முடியும். இதை நாம் இதர நாடுகள் மீது திணிக்க மாட்டோம் என்ற போதிலும் மெய்நடப்பு இதுவே. சோஷலிசத்தைச் செயலாக்குவதற்காக ஆட்சி அதிகாரம் மேற்கொண்டுள்ள பாட்டாளி வர்க்கத்துக்கு விவசாயி மக்கள் சொற்களால் அன்றிச் செயல்களால் உதவ விரும்புகிறார்கள் உதவி வருகிறார்கள். சோஷலிசத்தை பலப்பிரயோகம் மூலம் புகுத்த விரும்புவதாக எம்மீது குற்றம் சாட்டுவது தவறு. நாங்கள் பிரதானமாயும் சிறிய பண்ணையின் நோக்கு நிலையில் இருந்து, நிலத்தை நீதியாகப் பங்கு பிரிப்போம். இதைச் செய்யும் போது கம்யூன்களுக்கும் உழைப்பாளர் கூட்டுறவுகளுக்கும் தனிச் சலுகை தருவோம். தானிய வர்த்தகத்தை ஏகபோகமாக்குவதை ஆதரிப்போம். வங்கிகள் ஆலைகள் பறிமுதல் செய்யப்படுவதை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று விவசாயி மக்கள் கூறுகிறார்கள். சோஷலிசத்தைச் செயல்படுத்துவதில் தொழிலாளர்களுக்கு உதவத் தயாராக இருக்கிறோம். நிலத்தைச் சமூகவுடைமையாக்குவது குறித்த ஓர் அடிப்படைச் சட்டம் எல்லா மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். இது ஏற்கெனவே செய்யப்படாமல் இருந்தால் நிச்சயமாகவும் செய்யப்படும்.[87] இந்தக் கருத்தை வேலைத்திட்டத்தில் ஸ்தூலமாக அறிவிப்போம். ஸ்தூலமாக நிலைநாட்டப்பட்டு விட்ட மெய்விவரங்களில் இருந்து தனி ஒரு படியும் கூடப் பிறழாமல் அது தத்துவார்த்த முறையில் வெளியிடப்பட வேண்டும். இது மேலை நாடுகளில் வேறு முறையில் செய்யப்படும். ஒருவேளை நாம் தவறுகள் செய்யலாம், ஆனால் மேலை நாடுகளின் பாட்டாளி வர்க்

கம் அவற்றைத் திருத்தும் என்று நம்புகிறோம். எமது வேலை யில் உதவ முன்வருமாறு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத் திற்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்த வழியில் நாம் நமது வேலைத்திட்டத்தை ஒரு சில வாரங்களில் வகுக்க முடியும். நாம் செய்யும் தவறு கள் காலம் செல்லச் செல்லத் திருத்தப்படும்; நாமே அவற் றைத் திருத்திக் கொள்வோம். அடையப் பெறும் ஆக்க பூர்வமான விளைவுகளுடன் ஒப்பிடும் போதில் இத்தவறுகள் இறகுகள் போல மிகவும் லேசானவையே.

ரபோச்சே-க்ரெஸ்தியான்ஸ்கிய்
நிழெகரோத்ஸ்கிய் லிஸ்டோக்,
இதழ் 55ல், மார்ச்சு 20 (7),
1918ல் சுருக்கமான முறையில்
வெளியிடப்பட்டது

6

கட்சியின் பெயரையும் கட்சியின் வேலைத்திட்டத்தையும் மாற்றுவது குறித்த தீர்மானம்

நமது கட்சி (போல்ஷிவிக்குகளின் ருஷ்ய சமூக-ஜன நாயகத் தொழிலாளர் கட்சி) இனிமேல் **ருஷ்ய கம்யூ னிஸ்டுக் கட்சி** என்று பெயரிடப்படும் ‘‘போல்ஷிவிக்கு களின்’’ என்ற சொல் வளைவுகளுக்குள் சேர்க்கப்படும் என்று காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

தத்துவார்த்தப் பகுதியை மறுபதிப்புச் செய்தோ அல் லது அதோடு ஏகாதிபத்தியம் மற்றும் ஏற்கெனவே தொ டங்கி விட்ட சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியின் சகாப் தம் பற்றிய இலக்கணத்தைச் சேர்த்தோ நமது கட்சியின் வேலைத்திட்டத்தை மாற்றுவதென்று காங்கிரஸ் தீர்மானம் செய்கிறது.

இதைத் தொடர்ந்து, நமது வேலைத்திட்டத்தின் அர

சியல் பகுதியிலான மாற்றத்தில் புது மாதிரியான அரசின் சோவியத் குடியரசின் மிகவும் சரிநுட்பமான சாத்தியமான அளவுக்கு அகல்விரிவான இலக்கணம் இடம் பெற வேண்டும். இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு வடிவம் என்ற முறையிலும், பாரிஸ் கம்யூன் தொடங்கிவைத்த தான சர்வதேசத் தொழிலாளி வர்க்கப் புரட்சியின் அந்த சாதனைகளின் தொடர்ச்சி என்ற முறையிலும் இது விளங்க வேண்டும். நமது புரட்சி தற்போது கடந்து சென்று விட்ட இந்த வரலாற்று கட்டத்திற்குச் சில காலம் நமது போராட்டத்தின் போக்கு நம்மைப் பின்தள்ளும் பட்சத்தில் நமது கட்சி முதலாளித்துவ நாடாளுமன்ற முறைகளைக் கூடப் பயன்படுத்துவதை நிராகரிக்காது என்பதை வேலைத்திட்டம் புலப்படுத்த வேண்டும். ஆனால் எப்படியும், எல்லா சந்தர்ப்ப சூழல்களின் கீழும் கட்சியானது, ஜனநாயகத்துவத்தின் நோக்கு நிலையில் இருந்து ஆக உயர்ந்த மாதிரியான அரசு என்ற முறையில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு வடிவம் என்ற முறையில் சுரண்டலாளர் ஆதிக்கத் தளையினை ஒழித்து அவர்களது எதிர்ப்பை ஒடுக்கும் வகையிலான ஒரு சோவியத் குடியரசுக்காகப் பாடுபடும்.

நில உறவுகள் உள்ளிட்ட பொருளாதாரப் பகுதி, கல்வி மற்றும் நமது வேலைத்திட்டத்தின் இதர பகுதிகள் இந்த உணர்விலும் திசைவழியிலும் மறு உரு அளிக்கப்பட வேண்டும். இதன் ஈர்ப்பு மையம் நமது சோவியத் ஆட்சி அதிகாரம் துவங்கி விட்ட பொருளாதார மற்றும் இதர சீரமைப்புகள் குறித்த துல்லியமான இலக்கணமாக இருத்தல் வேண்டும். அதோடு சோவியத் ஆட்சி அதிகாரம் தன் முன்வைத்துள்ளதும்,உடைமைபறிப்போரை உடைமை நீக்கம் செய்யும் திசையில் நாம் ஏற்கெனவே எடுத்துள்ள செயல் நடவடிக்கைகளில் இருந்து தொடர்வதுமான உடனடியானதிட்டவட்டமான பணிகள் குறித்துத் திட்டவட்டமாக அறிக்கை செய்தல் வேண்டும்.

முன்வைக்கப்பட்டுள்ள அம்சங்களை அடிப்படையாக்கி, நமது கட்சிக்குரிய ஒரு வேலைத்திட்டத்தை உச்சபட்சமான

அவசரத்துடன் தொகுக்கும்படியும், அதை நமது கட்சியின் வேலைத்திட்டமாக அங்கீகரிக்கும்படிச் செய்யவும் ஆவன செய்ய விசேஷக் கமிஷனைக் காங்கிரஸ் நெறிப்படுத்துகிறது.

மார்ச்சு 8, 1918ல் எழுதப்பட்டது

பிராவ்தா, இதழ் *45ல்,*
மார்ச்சு 9, 1918ல்
வெளியிடப்பட்டது

7

மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாக இருக்க "இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்" மறுப்பு குறித்துள்ள தீர்மானம்[88]

இன்று கட்சியில் இருக்கும் நிலையில் மத்தியக் கமிட்டியில் சேர மறுப்பது என்பது குறிப்பாக விரும்பத் தகாதது என்று காங்கிரஸ் கருதுகிறது; அது கட்சியின் ஐக்கியத்தை விழையும் எவருக்கும் பொதுவாகக் கோட்பாட்டின் அடிப்படையில் [அனுமதிக்கக் கூடாதது; இன்றுள்ள நிலையிலோ] இது கட்சியின் ஐக்கியத்திற்கு இருமடங்கு அபாயமாகும்.

மத்தியக் கமிட்டி எடுக்கும் ஏதேனும் நடவடிக்கை தமக்கு உடன்பாடு இல்லை என்றால், தாம் அதற்குப் பொறுப்பல்ல என்று மறுத்து ஒவ்வொருவரும் ஓர் அறிக்கையின் மூலம் தெரிவித்து விடலாம், தெரிவிக்க வேண்டும் என்றும் மத்தியக் கமிட்டியினை விட்டு விலகக் கூடாது என்றும் காங்கிரஸ் பிரகடனம் செய்கிறது.

வெகுஜன ஸ்தாபனங்களுடன் கலந்தாலோசித்த பிறகு இந்தத் தோழர்கள் தங்களுடைய ராஜினமாவினை வாபஸ்

பெறுவார்கள் என்று காங்கிரஸ் உறுதியாக நம்புகிறது; எனவே ராஜினமா அறிக்கையினைக் கணக்கில் எடுக்காமல் காங்கிரஸ் தொடர்ந்து தேர்தலை நடத்தும்.

மார்ச்சு 8, 1918ல்
எழுதப்பெற்றது

ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின்
ஏழாவது காங்கிரஸ். சுருக்கெழுத்துக்
குறிப்புகள். மார்ச்சு 6-8, 1918
என்ற புத்தகத்தில், 1923ல்
(மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாக
இருக்க ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்''
மறுப்பு குறித்துள்ள தீர்மானம்
இல்லாமல் சுருக்கமான முறையில்)
முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 36,
பக்கங்கள் 3-36, 40,
43-59, 59

அகில யூனியன் கம்யூனிஸ்டுக்
(போல்ஷிவிக்குகளின்) கட்சியின்
காங்கிரசுகள், மாநாடுகளின் குறிப்புகள்.
ஏழாம் காங்கிரஸ். மார்ச்சு 1918 *என்ற*
புத்தகத்தில் 1928ல்
முழுமையாக வெளியிடப்பட்டது

பதிப்பாளர் குறிப்புகள்

[1] பெத்ரோகிராத் சோவியத்தின் அமைப்பான புரட்சிகர-ராணுவக் கமிட்டி போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் நெறிமுறைகளின் மீது 1917, அக்டோபர் 12 (25)ந் தேதியன்று நிறுவப்பட்டது. இதன் உறுப்பினர்களில் கட்சியின் மத்தியக் கமிட்டி, பீட்டர்ஸ்பர்க் கமிட்டி, பெத்ரோகிராத் சோவியத், ஆலைக் கமிட்டிகள், தொழிற்சங்கங்கள், ராணுவ அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படுவர். கட்சியின் மத்தியக் கமிட்டியால் வழி நடத்தப்பட்ட இந்த புரட்சிகர-ராணுவக் கமிட்டி, செங்காவலர் படைப் பிரிவுகளை உருவாக்குவதிலும் தொழிலாளர்களை ஆயுத பாணிகள் ஆக்குவதிலும் போல்ஷிவிக் ராணுவ அமைப்புடன் நெருக்கமான தொடர்பு பூண்டு வேலை செய்தது. இந்தக் கமிட்டியின் முன் இருந்த பிரதானப் பணி, போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் நெறியாண்மைகளுக்கு ஏற்ப ஆயுதமேந்திய புரட்சி எழுச்சிக்குத் தயார் செய்வதேயாகும். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்காகப் போரிடும் படைகளை ஒழுங்கமைக்கும் பல்வேறு நடவடிக்கைகளைப் புரட்சிகர-ராணுவக் கமிட்டி கொண்டு நடத்தியது. இதன் தலைமை மையம் 1917, அக்டோபர் 16 (29) மத்தியக் கமிட்டியின் அமர்வில் நிறுவப்பட்ட புரட்சிகர-ராணுவ மத்திய அமைப்பு ஆகும். இதன் வேலைகளை லெனின் நெறியாண்மை செய்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசில் சோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்ட பிறகு இந்தக் கமிட்டியின் முன் இருந்த பிரதானப் பணியானது எதிர்ப்புரட்சியை எதிர்த்துப் போராடுவதும் புரட்சிகர அமைப்பினைக் கட்டிக் காப்பதுமேயாகும். சோவியத் அரசுப் பொறியமைவு உருவாக்கப்பட்டுக் கெட்டிப்படுத்தப்பட்ட நேரம் இந்தப் புரட்சிகர-

ராணுவக் கமிட்டி தனது அலுவல்களைப் புதிதாக உதித்தெழுந்த மக்கள் கமிசாரகங்களிடம் ஒப்படைத்தது. 1917, டிசம்பர் 5(18)ல் புரட்சிகர-ராணுவக் கமிட்டி கலைக்கப்பட்டது.—11

[2] தொழிலாளர்கள் படையாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் 1917, அக்டோபர் 25, 26ல் (நவம்பர் 7,8ல்) பெத்ரோகிராதில் நடைபெற்றது. காங்கிரஸ் துவங்கிய போது 649 பிரதிநிதிகள் இருந்தார்கள். அவர்களில் 390 பேர் போல்ஷிக்குகள், 160 பேர் சோஷலிஸ்டு-புரட்சியாளர், 72 பேர் மென்ஷிவிக்குகள் மற்றும் 14 பேர் மென்ஷிவிக்கு-சர்வதேசியவாதிகள். பின்னல் மேலும் அதிகப் பிரதிநிதிகள் வந்து சேர்ந்தார்கள்.

அக்டோபர் 25ந் தேதி இரவு 10.40க்கு இந்தக் காங்கிரஸ் ஸ்மோல்னி மாளிகையில் ஆரம்பமாகியது. அந்த சமயம் செஞ்சேனைப் பிரிவுகளும் கடற்படையினரும் பெத்ரோகிராத் காவற்படையின் புரட்சிகரப் பகுதியினரும் மாரிக்கால மாளிகையைத் தாக்கிக் கொண்டிருந்தனர். அங்கு இடைக்கால அரசாங்கத்தை ஐங்கர்களும் அதிரடிப் படைகளும் காத்து நின்றன. புரட்சி எழுச்சியை நெறியாண்மை செய்து கொண்டிருந்த லெனின் காங்கிரசின் முதல் அமர்வில் கலந்துகொள்ள முடியவில்லை. கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக இடைக்கால அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வலதுசாரி மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தலைவர்கள் வற்புறுத்தினர். வரவிருக்கும் சோஷலிஸ்டுப் புரட்சியினை ஒரு சதித்திட்டம் என்று அவர்கள் கருதினர்கள். பெரும்பான்மை போல்ஷிவிக்குகளை ஆதரிக்கிறது என்பதைக் கண்டவுடன் மென்ஷிவிக்குகளும், சோஷலிஸ்டு-புரட்சியாளரும், ''புந்த்'' சங்கம் ஆதரவாளர்களும் வெளிநடப்புச் செய்தனர். அக்டோபர் 26 (நவம்பர் 8) காலை 3 மணிக்கு மாரிக்கால மாளிகை கைப்பற்றப்பட்டது குறித்தும் இடைக்கால அரசாங்கம் கைது செய்யப்பட்டது பற்றியும் காங்கிரசுக்கு அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் லெனினல் எழுதப்பட்ட ''தொழிலாளிகள், படையாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு!'' விடுத்த வேண்டுகோள் காங்கிரசில் ஏற்கப்பட்டது. இது ஆட்சி அதிகாரம் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் சோவியத்துகளுக்கு மாற்றி வழங்கப்பட்டதாகப் பறைசாற்றியது.

இரண்டாவது அமர்வு அதே நாளில் இரவு 9 மணிக்குத் தொடங்கியது. சமாதானம் மற்றும் நிலம் பற்றிய லெனினது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. காங்கிரஸ் சமாதானம் மற்றும் நிலம் பற்றிய லெனினது வரலாற்று முக்கியத்துவமுடைய அரசாணைகளை ஏற்றது; தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கத்தை—லெனின் தலைமையிலான மக்கள் கமிசார்களின் கவுன்சிலை நிறுவியது. இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சோவியத் அரசாங்கத்தில் சேர மறுத்தனர். அது போல்ஷிவிக்குகளை மட்டுமே கொண்டதாக விளங்கியது. காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்பட்டதான அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியில் 62 போல்ஷிவிக்குகள், 29 இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர், 6 சமூக-ஜனநாயகவாதிகளான சர்வதேசியவாதிகள், 3 உக்ரேனிய சோஷலிஸ்டு கட்சியினர், ஒரு சோஷலிஸ்டு-புரட்சியாளர் மாக்சிமலிஸ்டு இருந்தனர். அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி விவசாயிகள் சோவியத்துகள், ராணுவ அமைப்புகள், காங்கிரசிலிருந்து வெளிநடப்புச் செய்த கோஷ்டிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு விரிவுபடுத்தப்படும் எனவும் காங்கிரஸ் முடிவு செய்தது. காலை 5 மணிக்கு காங்கிரஸ் முடிவடைந்தது.—12

3 மன்னர் குடும்ப உறுப்பினர்களின் நிலங்கள்—ஜாரின் குடும்பத்தினருக்குச் சொந்தமான நிலங்கள்.—12

4 அரசியல் நிர்ணய சபை குறித்து இத்தொகுதி, பக்கங்கள் 122-125 பார்க்க.—13

5 சார்ட்டிசம் [Chartism] — பத்தொன்பதாம் நூற்றுண்டில் 1830-40களில் பிரிட்டிஷ் தொழிலாளர்களின் ஒரு வெகுஜனப் புரட்சிகர இயக்கமாகும். சார்ட்டிஸ்டுகள் ''மக்கள் சாசனத்தை'' [*People's Charter*] தயாரித்தார்கள். அதில் அவர்கள் நாடாளுமன்றத்தின் முன்வைப்பதற்கான கோரிக்கைகளை வகுத்தார்கள். 21 வயதுக்கு மேற்பட்ட ஆடவருக்கு வோட்டுரிமை வேண்டும், இரகசிய வாக்களிப்பு உரிமை வேண்டும், நாடாளுமன்றத்தில் ஸ்தானம் வகிப்பதற்குத் தேவைப்படும் சொத்துத் தகுதியை ஒழிக்க வேண்டும் என இவை போன்ற பலவற்றுக்காக மனுச் செய்து கொண்டார்கள். பல ஆண்டுகள் நாடு முழுவதும் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. இவற்றில் லட்சக் கணக்கான தொழிலாளர்களும் கைவினைஞர்களும் கலந்து கொண்டார்கள்.

ஆங்கில நாடாளுமன்றம் ''மக்கள் சாசனத்தை'' ஊர்ஜிதம் செய்ய மறுத்தது. சார்ட்டிஸ்டுகளின் விண்ணப்பங்கள் எல்லாவற்றையும் நிராகரித்தது.

சார்ட்டிஸ்டுகளுக்கு எதிராக அரசாங்கம் கொடூரமான போர் தொடுத்தது. அவர்களது தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

பின்னாட்களில் இந்த இயக்கம் குன்றியபோதிலும் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சி மீது பலத்த செல்வாக்குச் செலுத்தியது.—*19*

6 இங்கு லெனின் குறிப்பிடுவது *1848* பாரிஸ் பாட்டாளிகளின் புரட்சி எழுச்சியையும் *1871* பாரிஸ் கம்யூனையுமே.—*19*

7 சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம்—ஜெர்மனியில் தொழிலாளி வர்க்க, சோஷலிஸ்டு இயக்கத்தை எதிர்ப்பதற்காக பிஸ்மார்க் அரசாங்கம் *1878*ல் பிறப்பித்த சட்டம். இந்தச் சட்டத்தின்படி எல்லா சமூக-ஜனநாயகக் கட்சி நிறுவனங்களுக்கும், தொழிலாளர்களின் வெகுஜன நிறுவனங்களுக்கும், தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளுக்கும் தடை விதிக்கப்பட்டது. சோஷலிச நூல்களும் வெளியீடுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. சமூக-ஜனநாயகவாதிகள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். *1890*ல் வளர்ந்து ஓங்கி விட்ட தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாக சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டியதாயிற்று.—*19*

8 இங்கு குறிப்பிடப்படுவது தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் ''உலக மக்களுக்கு'' என்ற கொள்கை அறிக்கையாகும். இது *1917*, மார்ச்சு *15*ந் தேதி ''இஸ்வேஸ்தியா பெத்ரோகிராத்ஸ்கவோ சவேத்தா ரபோச்சிஹ்-இ-சொல்தாத்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ்'' (''தொழிலாளர்கள், படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் செய்திகள்''), இதழ் *15*ல் வெளியிடப்பட்டது.—*21*

9 ஜங்கர்—பிரஷ்ய நிலவுடைமைப் பிரபுக்குலம்.—*21*

10 இங்கு குறிப்பிடப்படுவது *1917* ஆகஸ்டில் நடைபெற்ற ஜெர்மன் கடற்படையினர் புரட்சிகரப் போராட்டம். இது *1917* ஜூலை பிற்பகுதியில் *4000* உறுப்பினர்களைக் கொண்டிருந்ததான புரட்சிகர கடற்படையினர் அமைப்

பின் தலைமையின் கீழ் நடைபெற்றது. இந்த அமைப்பு ஒரு ஜனநாயக சமாதானத்துக்குப் போரிடவும், ஒரு புரட்சி எழுச்சிக்குத் தயார் செய்து கொள்ளவும் முடிவு செய்தது. ஆகஸ்டு துவக்கத்தில் இதற்கான வெளிப்பாடு கள் கடற்படையில் ஆரம்பமாயின. வில்ஹெல்ம்ஸ்ஹா வன் என்னுமிடத்தில் இருந்த ''பிரின்ஸ்-ரீஜண்ட் லுயித் போல்ட்'' என்னும் போர்க் கப்பல் கடற்படையினர் வேலை நிறுத்தம் நடத்தியதற்காக இதற்கு முன்னால் கைது செய்யப்பட்ட — தமது தோழர்களின் விடுதலைக்காகப் போராடும் பொருட்டு லீவு பெறுமல் வேலைக்கு வராமல் இருந்தார்கள்; ஆகஸ்டு 16ல் ''வெஸ்ட்ஃபாலியா'' என் னும் கப்பலில் பயர்மன்கள் வேலை செய்ய மறுத்தனர். அதே போதில் போர்க்கப்பல் ''நியூர்ன்பெர்க்'' கடலில் இருந்த போது அதன் கப்பலோட்டிகள் புரட்சி எழுச்சி யில் இயங்கினர். இந்தக் கடற்படையினர் இயக்கம் வில் ஹெல்ம்ஸ்ஹாவனில் இருந்த பல கடற்படைத் தொகுதிக் கப்பல்களுக்கும் பரவியது. ஜெர்மன் கடற்படையின் புரட்சிப் போராட்டம் மிகவும் கடுமையாக ஒடுக்கப் பட்டது. இந்த இயக்கத்தின் தலைவர்கள் சுடப்பட் டனர்; தீவிரமாகப் பங்கு பற்றிய பிறர் நீண்ட காலக் கடுஞ்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.—*21*

11 மென்ஷிவிக்குகள்—ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்ப வாதப் போக்கினர். *1903*, ருஷ்யாவின் சமூக-ஜனநா யகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கட்சியின் மத்திய அமைப்புகளுக்காக நடந்த தேர்தல் களில் லெனின் ஆதரவாளர்கள் பெரும்பான்மை பெற் றனர். இவர்கள் ''போல்ஷிவிக்குகள்'' (''பெரும்பான் மையோர்'') என்று அழைக்கப்படலாயினர். சந்தர்ப்ப வாதிகள் சிறுபான்மையினராகி ''மென்ஷிவிக்குகள்'' (''சிறுபான்மையினர்'') என்று பெயர் பெற்றனர்.

1905-07 புரட்சியின் போது மென்ஷிவிக்குகள் புரட்சி யில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை யும், தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுடன் கூட்டணி சேருவதையும் எதிர்த்தனர். மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினருடன் உடன்பாடு கொள்ள வேண்டும் என வும் அவர்களே புரட்சிக்குத் தலைமை தாங்க வேண்டும் எனவும் கோரினர். புரட்சி தோல்வியடைந்ததை ஒட்டிய பிற்போக்கு ஆண்டுகளில் பெரும்பாலான மென்ஷிவிக்கு கள் கலைப்புவாதிகள் ஆயினர்; தொழிலாளி வர்க்கத் தின் புரட்சிகரமான சட்டவிரோதமான கட்சி கலைக்கப்

பட வேண்டும் என்று கோரினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் அவர்கள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பிரவேசித்தனர், அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர், போல்ஷிவிக்குகளால் தயார் செய்யப்பட்டு வந்த சோஷலிஸ்டுப் புரட்சியை எதிர்த்துப் போராடினர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் பகிரங்கமாயும் எதிர்ப்புரட்சிக் கட்சியாக ஆயினர். சோவியத் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்துவதற்கான சதித்திட்டங்களையும் கலகங்களையும் ஏற்பாடு செய்தனர், அவற்றில் பங்கு பற்றினர்.

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் — *1901* இறுதியிலும் *1902* துவக்கத்திலும் ருஷ்யாவில் நிறுவப்பட்ட குட்டிமுதலாளித்துவக் கட்சியின் உறுப்பினர்கள். முதல் உலகப் போரின் போது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் முக்கிய பகுதியினர் சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டனர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் பிரதானத் தூண்களாய்ச் செயல்பட்டனர். இக்கட்சியின் தலைவர்கள் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாய் இருந்தனர். நிலப்பிரபுக்களது நிலவுடைமைப் பண்ணைகளை ஒழிக்க வேண்டும் என்ற விவசாயிகளது கோரிக்கைக்கு ஆதரவளிப்பதை சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி கைவிட்டு விட்டது. இடைக்கால அரசாங்கத்தில் இருந்த இக்கட்சியின் அமைச்சர்கள் நிலப்பிரபுக்களது பண்ணைகளைப் பிடித்துக் கொண்ட விவசாயிகளுக்கு எதிராகத் தண்டப்படைகளை அனுப்பினர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் முதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள் மற்றும் அன்னியத் தலையீட்டாளர்களுடன் சேர்ந்து கொண்டு சோவியத் ஆட்சி அதிகாரத்தினை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடினர்.—27

12 **இஸ்வேஸ்தியா வ்ஸேரொசீய்ஸ்கவோ சவேத்தா க்ரெஸ்தியான்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ்** (''விவசாயிகள் பிரதிநிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் செய்திகள்'')— தினசரிப் பத்திரிகை, விவசாயிகள் பிரதிநிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் ஏடு. *1917* மே முதல் டிசம்பர்

வரை பெத்ரோகிராதில் வெளியிடப்பட்டது. இது வலது சாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கருத்துக்களை வெளியிட்டது. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியை இந்தப் பத்திரிகை பகைமை காட்டி எதிர்த்தது. எதிர்ப்புரட்சிப் போக்கு காரணமாக விரைவில் மூடப்பட்டு விட்டது.—*29*

13 மன்னர் குடும்ப உறுப்பினர்களின் நிலங்கள் — குறிப்பு *3* பார்க்க.

மன்னர் நிலங்கள்—ஜாரின் சொந்த உடைமையான நிலங்கள்.

ஆலை நிலங்கள்—ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கென அரசு ஆலை தொழிற்சாலை உடைமையாளர்களுக்கு வழங்கும் நிலங்கள். அவர்கள் தமது ஊதியத்திற்குப் பதிலாக இந்த நிலங்களில் வேலை செய்தார்கள்.

தலைமுறை நிலங்கள்—தடை செய்யப்பட்ட நிலப் பிரபுக்களின் எஸ்டேட்டுகள். வமிச முறையில் ஒதுக்கீடு இன்றி தலைமுறை உரிமையாகப் பெறப்படுபவை. —*29*

14 கசாக்குகள்—ஆரம்பத்தில் இவர்கள் பண்ணை அடிமைகளாய் அல்லது நகரப் புறத்து வறியவர்களாய் இருந்தவர்கள். பின்னால் தமது ஆண்டைகளிடமிருந்து தப்பி ஓடி சுதந்திர மக்களானார்கள். தப்பி வெளியேறிய பிறகு ருஷ்ய நாட்டின் சுற்றுப் பிரதேசங்களில் குடியேறி நிலைத்து வாழத் தொடங்கினார்கள்.

*18*ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் தனியுரிமைகள் பெற்ற குடியானவர்களாயினர். இவர்கள் விசேஷ நிபந்தனைகளின் பேரில் அரசுக்கு இராணுவ சேவை செய்தார்கள். புரட்சி இயக்கத்துக்கு எதிராக விசேஷப் படைப் பிரிவுகளை அமைக்க ஜார் அரசாங்கம் அவர்களைச் சேர்த்துப் பயன்படுத்திக்கொண்டது.—*33*

15 உற்பத்தி மீதான தொழிலாளர் கண்காணிப்பு சம்பந்தமான சட்டத்தை வகுக்கும் வேலை அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றியடைந்த உடனே தொடங்கியது. *1917*, அக்டோபர் *26* அல்லது *27*ல் (நவம்பர் *8* அல்லது *9*ல்) லெனினால் எழுதப்பட்ட ''தொழிலாளர் கண்காணிப்புப் பற்றிய நகல் ஒழுங்குமுறை விதிகள்'' லெனின் சமூகமளித்த பெத்ரோகிராத் ஆலைக் கமிட்டிகளின் மத்தியக் கவுன்சிலின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அக்டோபர் *27*ந்

தேதி இது மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் முன் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொழிலாளர் கண்காணிப்பு சம்பந்தமான நகல் சட்டத்தை மேலும் விரிவிளக்கம் செய்வதற்கான அடிப்படையாயிற்று. இந்த நகல் சட்டத்தை இறுதியாக விரிவிளக்கம் செய்யும் பொறுப்பு நவம்பர் 8 (21) நடைபெற்ற அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மாநாட்டில் நிறுவப்பட்ட கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டது. நவம்பர் 14 (27)ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி இப்பிரச்சினையை விவாதித்து ''தொழிலாளர் கண்காணிப்புப் பற்றியதான ஓர் அரசாணையை'' அங்கீகரித்தது. இது லெனினது நகல் சட்டத்தின் பிரதான ஷரத்துக்களை அடிப்படையாக்கி இருந்தது. இந்த அரசாணை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியாவில்'' (இதழ் 227ல்) நவம்பர் 16(29)ல் வெளியிடப்பட்டது.—37

16 ஜங்கர்கள்—ஜார் கால ருஷ்யாவில் இராணுவ அதிகாரிகளைப் பயிற்றுவித்து வந்த இராணுவப் பள்ளிகளின் மாணவர்கள்.—40

17 ஜார்ஸ்கயே செலோ — பெத்ரோகிராதுக்கு அருகே உள்ள சிறிய நகரம்.—40

18 இங்கு குறிப்பிடப்படுவது அரசாங்கத்தின் இயைபு சம்பந்தமாகப் பேசுவதற்கு ரயில்வேத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டி ஏற்பாடு செய்த மாநாட்டில் போல்ஷிவிக்குகள் பங்கேற்றது பற்றியதாகும்.

பெத்ரோகிராதில் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சி வெற்றியடைந்த பின்னர் மென்ஷிவிக்குகள் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆதிக்கம் செலுத்திவந்த ரயில்வேத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டி எதிர்ப்புரட்சியின் ஒரு கொத்தளமாகியது. 1917, அக்டோபர் 29 (நவம்பர் 11)ல் அது ''போல்ஷிவிக்குகள் தொட்டு மக்கள் சோஷலிஸ்டுகள் வரை'' யிலான எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ''ஒருசீரான சோஷலிஸ்டு அரசாங்கம்'' எனப்படும் ஒன்றைக் கோரித் தீர்மானம் நிறைவேற்றியது. இதே நாளில் அரசாங்கத்தின் இயைபு சம்பந்தமான ஒரு மாநாட்டை இக்கமிட்டி ஏற்பாடு செய்தது. போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி இதில் கலந்து கொள்ள முடிவு செய்தது. அரசாங்கத்தையோ அகில ருஷ்ய மத்திய நிர்வாகக்

கமிட்டியையோ விரிவுபடுத்துவது பற்றிய எத்தகைய பேச்சுவார்த்தைகளும் சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசில் அங்கீகரிக்கப்பட்ட சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்டதான வேலைத்திட்ட அடிப்படையில் மட்டுமே நடைபெற முடியும் என்று அறிவித்தது. மத்தியக் கமிட்டியின் சார்பில் காமெனெவும் சகோல்னிகவும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அதிகாரப்படுத்தப்பட்டனர். அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியும் தனது பிரதிநிதிகளை—ரியாஸானவ் மற்றும் வேறு சிலரை—அனுப்பிவைத்தது.

மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் கூட்டு அரசாங்கத்தில் தலைமைப் பங்கு வகிக்கவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்ப்பதற்கு அதனைப் பயன்படுத்தவும் கருதினுர்கள். மாநாட்டில் கலந்து கொண்ட போல்ஷிவிக்குகளின் பிரதிநிதிகள் ஒரு சமரசத் தோரணை மேற்கொண்டனர். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் முன்வைத்த யோசனைகள் விவாதிக்கப்படுவதை ஆட்சேபிக்கவில்லை.

ரயில்வேத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியுடனுன பேச்சுவார்த்தைகள் மற்றும் போல்ஷிவிக்குகளின் பிரதிநிதிகளின் நடத்தை பற்றிய விஷயம் கட்சியின் மத்தியக் கமிட்டியின் நவம்பர் 1 (14)ந் தேதி அமர்வில் விவாதிக்கப்பட்டது. சமரசக் கட்சிகள் சோவியத் ஆட்சி அதிகாரத்தை குலைக்கும் நோக்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றன எனவும், எனவே மத்தியக் கமிட்டி ஒரு கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கான பயனற்ற முயற்சிகளை அம்பலப்படுத்தல் மற்றும் பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் என்ற ஒரே நோக்கத்துடன் ஆட்சி அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினை சம்பந்தமான அடுத்த அமர்வில் கலந்து கொள்ள போல்ஷிவிக்குகளின் பிரதிநிதிகளை அதிகாரப்படுத்த வேண்டும் எனவும் மத்தியக் கமிட்டி தீர்மானம் அறிவித்தது. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி தனது நவம்பர் 1 (14) இரவு நடைபெற்ற அமர்வில் பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியை விவாதித்தது; நவம்பர் 1(14)ந் தேதி மத்தியக் கமிட்டி முடிவின் உணர்வில் வகுக்கப்பெற்ற ஒரு போல்ஷிவிக் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. இருப்பினும் காமெனெவ், ஸினேவியெவ், ரீக்கவ், மில்யூத்தின், லாரின், ரியாஸானவ் மற்றும் இதரர்களைக் கொண்ட எதிர்ப்புக் குழு வலதுசாரி சந்தர்ப்பவாத நிலை மேற்கொண்டு மத்தியக்

கமிட்டியின் கொள்கை வழிக்கு எதிராகத் தமது கொள்கை வழியை முன்வைத்து அதன் முடிவைச் செயல் குலைவு செய்ய முயன்றனர். நவம்பர் 2(15)ந் தேதி மத்தியக் கமிட்டி மத்தியக் கமிட்டிக்குள் இருக்கும் எதிர்ப்பணி குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. (இந்தத் தொகுதி, பக்கங்கள் 44—47 பார்க்க.) நவம்பர் 2(15) இரவு நடைபெற்ற அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வில், உடன்பாட்டு நிபந்தனைகள் பற்றிய அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் முடிவைத் திருத்த வேண்டும் என்று கோரி இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆற்றிய உரைகளைத் தொடர்ந்து, காமெனெவும் ஸினோவியெவும் ஒரு தீர்மானத்தை வலிந்து நிறைவேற்றினர். இத்தீர்மானம் நவம்பர் 2(15)ந் தேதி மத்தியக் கமிட்டித் தீர்மானத்துடன் முரண்பட்டது, அரசாங்கத்தின் இயைபில் ஒரு மாற்றத்துக்கு வகை செய்தது. போல்ஷிவிக்குகள் அரசாங்கப் பதவிகளில் பாதியை மட்டுமே ஏற்பதற்கு இடமளித்தது. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வில் எதிர்ப்பணி இத்தீர்மானத்துக்கு வாக்களித்தது. மத்தியக் கமிட்டியின் பெரும்பான்மை நவம்பர் 3(16)ல் எதிர்ப்பணிக்கு விடுத்த இறுதி எச்சரிக்கையைத் தொடர்ந்து (இந்தத் தொகுதி, பக்கங்கள் 48—51 பார்க்க) காமெனெவ், ஸினோவியெவ், ரீக்கவ், மில்யூத்தின் மற்றும் நகீன் மத்தியக் கமிட்டியில் இருந்து விலகிக் கொண்டார்கள்; கடைசி மூவரும் தெயொடரோவிச்சும் தமது மக்கள் கமிசார் பதவிகளை ராஜினாமாச் செய்தார்கள். ரியாஸானவ், லாரின் மற்றும் சிலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். நவம்பர் 5 அல்லது 6(18 அல்லது 19) கட்சியின் மத்தியக் கமிட்டி ஓர் இறுதி எச்சரிக்கையின் வடிவில் கட்சி சார்பற்ற அமைப்புகளில் மத்தியக் கமிட்டி முடிவுகளை எதிர்த்த காமெனெவ், ஸினோவியெவ், ரியாஸானவ் மற்றும் லாரின் தமது ஸ்தாபனக் குலைவு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை கோரியது. நவம்பர் 7(20) கட்சியின் மத்தியக் கமிட்டி எதிர்ப்பணியைப் போல்ஷிவிசத்தின் கோட்பாடுகளைக் கைவிட்டு புரட்சியைத் துறந்தோடியவர்கள் என்று இனங்காட்டி எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் ருஷ்யாவின் உழைக்கும் வர்க்கங்கள் அனைத்துக்கும் அறிக்கை விடுத்தது. இவ்வறிக்கை ''பிராவ்தாவில்'' வெளியிடப்பட்டது. (இந்தத் தொகுதி, பக்கங்கள் 58—65 பார்க்க.)—42

19 இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் — இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் (சர்வதேசியவாதிகள்) கட்சியின் உறுப்பினர்கள். இக்கட்சி 1917 நவம்பர் 19—28 (டிசம்பர் 2—11)ல் நடந்த அதன் முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிறுவன வடிவம் பெற்றது. இதற்கு முன்பு இவர்கள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியில் இடதுசாரி கோஷ்டியாகச் செயல்பட்டு வந்தனர். உலக ஏகாதிபத்தியப் போரின் போது இந்த இடதுசாரி கோஷ்டி உருவாகியது.

சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் பிரிவில் பெரும்பான்மையாக இருந்தார்கள். இந்தப் பிரிவு காங்கிரசில் பங்கு பற்றுவது பற்றிய விஷயத்தில் பிளவுற்றது; வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் தமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் நெறிமுறைப்படிச் செயல்பட்டு காங்கிரசில் இருந்து வெளியேறினர். அதேபோதில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் தொடர்ந்து பங்கு பற்றி நிகழ்ச்சி நிரலின் முக்கியமான இனங்கள் மீது போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து வாக்களித்தனர். அந்த நேரத்தில் விவசாயிகள் மத்தியில் பல ஆதரவாளர்களைக் கொண்டிருந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடன் ஒரு கூட்டணி அமைப்பது அவசியம் என்று போல்ஷிவிக்குகள் கருதினார்கள். சோவியத் அரசாங்கத்தில் சேர வரும்படி இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை அழைத்தார்கள். ஆனால் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சேர மறுத்துவிட்டனர். 1917 நவம்பரிலும், டிசம்பர் துவக்கத்திலும் போல்ஷிவிக்குகளுக்கும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாக பின்னவர்கள் அரசாங்கத்தில் பங்கேற்பது பற்றிய ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. அவர்கள் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் பொதுக் கொள்கையைப் பின்பற்ற ஒப்புக்கொண்டு பல மக்கள் கமிசாரகங்களின் அவைகளில் பொறுப்பேற்கப் பிரவேசித்தனர்.

போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து பணியாற்ற வந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், சோஷலிச நிர்மாணத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றில் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு எதிராகப் போராடினர். 1918 ஜனவரி-பிப்ரவரியில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் மத்தியக் கமிட்டி பிரெஸ்ட் சமாதான

உடன்படிக்கைக்கு எதிராகப் போராட்டம் துவக்கியது. உடன்பாடு கையெழுத்தாகி 1918 மார்ச்சில் சோவியத்துகளின் நான்காவது காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்ட பிறகு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மக்கள் கமிசார்களின் கவுன்சிலிலிருந்து வெளியேறினர். 1918 கோடைக்காலத்தில் கிராமங்களிலும் சோஷலிசப் புரட்சி வளர்ச்சியுற்ற போது, இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மத்தியில் சோவியத்-எதிர்ப்பு உணர்ச்சிகள் அதிகமாயின. 1918 ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் மத்தியக் கமிட்டி, மாஸ்கோவிலுள்ள ஜெர்மன் தூதுவரைக் கொலை செய்ய ஏற்பாடு செய்தது. இதன் மூலம் பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கையை மீறி சோவியத் ருஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையில் போரைத் துவக்கிவிட அது முயன்றது. சோவியத் அரசுக்கு எதிராக அது ஆயுதந்தாங்கிய கலகத்தைத் துவக்கியது. கலகம் ஒடுக்கப்பட்ட பின்பு, சோவியத்துகளின் ஐந்தாவது அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களில் அக்கட்சித் தலைமையின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களை சோவியத்துகளில் இருந்து வெளியேற்றுவதென்று முடிவு செய்தது.

மக்கள் திரள் மத்தியில் ஆதரவு அனைத்தையும் இழந்துவிட்ட இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி சோவியத் ஆட்சிக்கு எதிராக ஆயுதமேந்திய போராட்டம் தொடங்கியது. போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து செயல்பட விரும்பிய சில இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ''நரோத்னிக்கு-கம்யூனிஸ்டுகள்'' கட்சி, ''புரட்சிகர கம்யூனிஸ்டுகள்'' கட்சி ஆகியவற்றை நிறுவினர். பின்னால் அவர்களில் கணிசமான பேர் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தனர்.—46

20 சமரசவாதக் குட்டிமுதலாளித்துவக் கட்சிகளுடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திய மத்தியக் கமிட்டியின் சிறுபான்மை உறுப்பினர்களுக்கு விடுத்த இறுதி எச்சரிக்கையில் லெனினும், பூப்னவ், திஸெர்ஜீன்ஸ்கி, யோஃபெ, முரானவ், ஸ்வெர்த்லோவ், சகோல்னிகவ், ஸ்தாலின், திரோத்ஸ்கி மற்றும் உரீத்ஸ்கியும் கையொப்பம் இட்டிருந்தார்கள்.—48

21 **நோவயா ஷீஸ்ன்** (''புதிய வாழ்வு'')—மென்ஷிவிக்கு-சர்வதேசியவாதிகளின் ஏடான தினசரிப் பத்திரிகை. இது 1917 ஏப்ரல் 18 (மே 1) முதல் 1918 ஜூலை வரையில்

வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியையும் சோவியத் ஆட்சி அதிகாரம் நிலைநாட்டப்பட்டதையும் பகைமை காட்டி எதிர்த்தது. —51

22 **இரட்சணியக் கமிட்டி** (பொதுப் பாதுகாப்புக்கான கமிட்டி) மாஸ்கோவில் சோவியத்துகளை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடுவதற்காக மாஸ்கோ நகர டூமாவில் 1917 அக்டோபர் 25 (நவம்பர் 7)ல் நிறுவப்பட்டது. இது ஐங்கர்களின் எதிர்ப்புரட்சிக் கலகத்துக்குத் தலைமை தாங்கியது. இக்கலகம் அக்டோபர் 28 (நவம்பர் 10)ல் துவங்கியது. நவம்பர் 2(15)ல் இக்கலகம் அடக்கப்பட்டது. இரட்சணியக் கமிட்டி மாஸ்கோ புரட்சிகர-ராணுவக் கமிட்டியிடம் சரணடைந்தது.—52

23 **விவசாயிகள் கேள்விகளுக்குப் பதில்** என்ற விளக்கத்தை மக்கள் கமிசார்களின் கவுன்சிலுக்கு விவசாயிகளிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்த காரணத்தால் லெனின் எழுதினார். இந்த தட்டெழுத்தில் அடிக்கப்பட்ட ''பதில்'' இதைக் கோரிய குபேர்னியாக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதில் லெனின் கையொப்பமிட்டிருந்தார். இது லெனினைக் காண வந்த விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. இந்தப் ''பதில்'' ''தெரிவேன்ஸ்கயா பெத்நோத்தா'' (''நாட்டுப்புறத்து ஏழை மக்கள்'') மற்றும் மத்திய நிர்வாகக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியா'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. ''விவசாயிகளுக்கான நெறிமுறைகள்'' என்ற தலைப்பில் சிறு பிரசுரமாயும் வெளியிடப்பட்டது. 1917 டிசம்பர் 4 (17)ல் இந்தப் ''பதில்'' ''தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தின் சட்டங்கள் உத்தரவுகள் தொகுப்பில்'' ''நிலக் கமிட்டிகளினிடம் நிலவுடைமை உரிமை மாற்றம்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. ''விவசாயிகள் கேள்விகளுக்குப் பதில்'' ஒரு முக்கியமான ஆவணமாகும். இது நிலப்பிரபுக்களின் நிலச் சொத்துரிமை புரட்சிகரமான முறையில் ஒழிக்கப்பட்டதை முறைமைப்படுத்தியது.—56

24 லெனினால் குறிப்பிடப்பட்டதான ரு. ச. ஜ. தொ. க. (போ.)யின் மத்தியக் கமிட்டித் தீர்மானம் கிடைக்கவில்லை.—61

25 காட்சினா—பெத்ரோகிராத் சுற்றுப் புறத்திலான ஒரு சிறு நகரம்.—64

[26] விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் விசேஷ அகில ருஷ்யக் காங்கிரஸ் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் நெறிமுறைப்படி 1917 நவம்பர் 11 முதல் 25 வரை (நவம்பர் 24 முதல் டிசம்பர் 8 வரை) பெத்ரோகிராதில் நடைபெற்றது.

இந்தக் காங்கிரசில் குபேர்னியா, உயெஸ்து, போர் முனை, சேனைப் பிரிவுகள் ஆகியவற்றின் விவசாயிகள் சோவியத்துகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். முதல் அமர்வில் சுமார் 260 பிரதிநிதிகள் இருந்தனர். நவம்பர் 18 (டிசம்பர் 1)ல் நிர்ணயகரமான ஓட்டுக்களுடன் கூடிய 330 பிரதிநிதிகள் சமூகமளித்தார்கள். அவர்களில் 195 இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர், 37 போல்ஷிவிக்குகள், 65 வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மையவாதிகள் உட்படுவர். பின்னால் பிரதிநிதிகள் தொகை அதிகரிக்கப்பட்டது. காங்கிரஸ் வலதுசாரி, இடதுசாரிப் பிரிவுகளிடையான கடுமையான போராட்டத்தின் அரங்கமாயிற்று. இதன் விளைவாக வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் வெளிநடப்புச் செய்தனர். இரண்டாவது காங்கிரசால் வகுக்கப்பட்ட சமாதானம், நிலம் பற்றிய அரசாணைகள் மற்றும் தொழிலாளர் கண்காணிப்பு சம்பந்தமான அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணை ஆகியவற்றை ஊர்ஜிதம் செய்யும் தீர்மானங்களை இக்காங்கிரஸ் ஏற்றது. இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் முன்வைத்த நிலப்பிரச்சினை குறித்த தீர்மானத்தையும் ஏற்றது. இதன் அடிப்படை சமத்துவமான அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை என்னும் கோட்பாடாகும்.

லெனின் இந்தக் காங்கிரசில் நிலப்பிரச்சினை பற்றியும், ரயில்வேத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியின் பிரதிநிதியின் அறிக்கை பற்றியும் உரை நிகழ்த்தினர். மேலும் நிலப்பிரச்சினை மீதான முடிவுரை நிகழ்த்தினர். லெனினது உரை நிலப் பிரச்சினை மற்றும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளருடனை கூட்டணி சம்பந்தமான நிபந்தனைகள் மீதான போல்ஷிவிக்குகளின் கருத்தைச் சுட்டியது. இது காங்கிரஸ் வேலைகளை நெறியாண்மை செய்யும் விஷயத்திலும், இடதுசாரி பிரிவின் ஒற்றுமை விஷயத்திலும் பெருமளவு செல்வாக்குச் செலுத்தியது.—66

[27] அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் உடனடியாகவே, உயர் பொருளாதாரக் கவுன்சில் அமைப்பது

பற்றிய விஷயம் எழுப்பப்பட்டது. இந்த அமைப்பு சம்பந்தமான நகல் 1917 அக்டோபர் 26 அல்லது 27 (நவம்பர் 8 அல்லது 9)ல் பெத்ரோகிராத் ஆலேக் கமிட்டிகளின் மத்தியக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதில் லெனின் கலந்து கொண்டார். நவம்பர் 9(22)ல் பெத்ரோகிராத் தொழிற்சங்கங்களின் கவுன்சிலின் விரிவுபடுத்தப்பட்ட அமர்வில் பேசிய லெனின் நாட்டின் பொருளாதாரத்தை நிர்வாகம் செய்ய ஒரு பொறியமைவை நிறுவுவதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டினர். உயர் பொருளாதாரக் கவுன்சிலை நிறுவுவது சம்பந்தமான நகல் மக்கள் சமிசார்களின் கவுன்சிலால் நியமனம் செய்யப்பட்ட ஒரு விசேஷக் கமிஷனுல் வரையப்பட்டது.

உயர் பொருளாதாரக் கவுன்சில் அமைப்பது சம்பந்தமான விவாதத்தில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியில் இருக்கும் போல்ஷிவிக்குகளின் பிரிவு இதற்குச் சட்டமியற்றும் அதிகாரங்களை ஒப்படைப்பது மூலம் இதனை தொழிலாளர் சர்வாதிகாரத்தின் திண்மை மிகுந்த அமைப்பாக உருவாக்க வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தியது. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி இந்தப் பிரச்சினையை டிசம்பர் 1(14)ல் விவாதித்தது. ''உயர் பொருளாதாரக் கவுன்சில் பற்றிய அரசாணை'' டிசம்பர் 5(18)ந் தேதி ஏற்கப்பட்டு ''கஸேத்தா வ்ரேமென்னவோ ரபோச்சிவோ-இ-க்ரெஸ்தியான்ஸ்கவோ ப்ரவீதெல்ஸ்துவா'' (''தொழிலாளிகள், விவசாயிகளின் இடைக்கால அரசாங்கத்தின் பத்திரிகை'') என்னும் செய்தித்தாளில், இதழ் 25ல் வெளியிடப்பட்டது.

இந்தக் கவுன்சிலின் வேலைகளை ஒழுங்கமைப்பதில் லெனின் அதிகக் கவனம் செலுத்தினர். அதன் செயல்களை நெறியாண்மை செய்தார். பொருளாதாரக் கவுன்சிலின் காங்கிரசுகளில் உரைகள் ஆற்றினர். உயர் பொருளாதாரக் கவுன்சிலின் வேலைகளை ஒழுங்கமைப்பது பற்றிய விஷயம் மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டங்களில் பலமுறை விவாதிக்கப்பட்டது. பெருவீதத் தொழில்துறை முழுமையாகத் தேசவுடைமையாக்கம் செய்யப்பட்ட போது உயர் பொருளாதாரக் கவுன்சில் அதன் நிர்வாக அமைப்பு ஆயிற்று.—76

28 **பூர்வாங்க நாடாளுமன்றம் (அகில ருஷ்ய ஜனநாயகக் கவுன்சில்)** *1917*, செப்டம்பர் *14—22* (செப்டம்பர் *27*—அக்டோபர் *5*) தேதிகளில் சோவியத்துகளின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-

புரட்சியாளர் கோஷ்டியால் கூட்டப்பட்டதான அகில ருஷ்ய ஜனநாயகக் காங்கிரசில் தேர்வு செய்யப்பட்டது.

இந்தப் பூர்வாங்க நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் (செப்டம்பர் 23) ஒரு புதிய அரசாங்கத்தின் கூட்டணி நிறுவுவது பற்றி சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக்குகள், காடேட்டுகளிடையேயான உடன்பாடு ஏற்கப்பட்டது. இந்தப் பூர்வாங்க நாடாளுமன்றம் ''ருஷ்ய குடியரசின் இடைக்காலக் கவுன்சில்'' என்று அழைக்கப்படும் எனவும் இது அரசாங்கத்தின் கீழ் ஓர் ஆலோசக அமைப்பாக மட்டுமே இருக்கும் என்றும் அறிவிக்கும் யோசனையைப் புதிய இடைக்கால கூட்டு அரசாங்கம் ஊர்ஜிதம் செய்தது. இதன் உறுப்பினர்களாக முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அமைப்புகளின் (காடேட்டு கட்சி முதலியவை) பிரதிநிதிகளும் சேர்ந்து கொண்டனர். மக்கள் மனங்களில் நாடாளுமன்றப் பிரமைகளை விதைத்து சோஷலிஸ்டுப் புரட்சியின் வளர்ச்சிக்கு இடையூறு செய்வதற்கான முயற்சியாகும் இது. இந்தப் பூர்வாங்க நாடாளுமன்றத்தில் இருந்து போல்ஷிவிக்குகள் விலகிக் கொள்ள வேண்டும் என்று லெனின் வற்புறுத்தினர். புரட்சி எழுச்சிக்கான தயாரிப்புக்கு எல்லா முயற்சிகளையும் ஒருமுகப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். லெனினது யோசனையைக் கட்சியின் மத்தியக் கமிட்டி விவாதித்தது. பூர்வாங்க நாடாளுமன்றத்தில் பங்கு பற்ற வேண்டும் என்று வற்புறுத்திய காமெனெவ், ரீக்கவ் மற்றும் இதர சரணகதிவாதிகளின் எதிர்ப்பு இருந்தபோதிலும் போல்ஷிவிக்குகள் பூர்வாங்க நாடாளுமன்றத்தில் இருந்து விலகிவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பூர்வாங்க நாடாளுமன்றத்தின் ஆரம்பத் தினத்தில் அக்டோபர் 7(20)ல் போல்ஷிவிக்குகள் தமது தீர்மானத்தைப் படித்துவிட்டு அதிலிருந்து வெளியேறினர்.—*81*

29 உக்ரேனிய மத்திய ராடா—இது ஓர் எதிர்ப்புரட்சி முதலாளித்துவ-தேசியவாத அமைப்பு. *1917* ஏப்ரலில் உக்ரேனிய முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் கட்சிகள், குழுக்களின் ஒரு கூட்டமைப்பால் கீவில் நடைபெற்ற அகில உக்ரேனிய தேசியக் காங்கிரசில் இது நிறுவப்பட்டது. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு ராடா ''உக்ரேனிய மக்கள் குடியரசின்'' உயர் அமைப்பு என்று தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொண்டு சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப்

பகிரங்கமான போராட்டத்தில் ஈடுபட்டது, அகில ருஷ்ய எதிர்ப்புரட்சியின் மையங்களில் ஒன்றாகியது.

1917 டிசம்பரில் கார்கவில் நடைபெற்ற சோவியத்துகளின் முதல் அகில உக்ரேனிய காங்கிரஸ் உக்ரேனை ஒரு சோவியத் குடியரசாகப் பிரகடனப்படுத்தி மத்திய ராடா வீழ்த்தப்பட்டதாக அறிவித்தது. ரு. சோ. கூ. சோ. குடியரசின் மக்கள் கமிசார்களின் கவுன்சில் உக்ரேனிய சோவியத் அரசாங்கத்தை உக்ரேனின் சட்டபூர்வமான அரசாங்கமாக அங்கீகரித்தது; எதிர்ப்புரட்சி ராடாவுக்கு எதிரான போராட்டத்தில் அதற்கு உடனடி உதவிகள் வழங்க முடிவு செய்தது. *1918* ஜனவரியில் உக்ரேனில் சோவியத் படைகள் எதிர்த்தாக்குதல் தொடுத்து ஜனவரி *26* (பிப்ரவரி *8*) கீவைக் கைப்பற்றின. முதலாளித்துவ ராடா வீழ்த்தப்பட்டது.

சோவியத் உக்ரேன் பரப்பில் இருந்து முறியடிக்கப்பட்டு விரட்டப்பட்ட, மக்கள் திரளிடம் ஆதரவு இல்லாத மத்திய ராடா ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்தது. சோவியத் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தி உக்ரேனில் முதலாளித்துவ அரசு அமைப்பை மீண்டும் நிறுவும் நோக்கத்துடன் செயல்பட்டது. சோவியத் குடியரசுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போது ராடா பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கிற்குத் தன் பிரதிநிதிகளை அனுப்பி சோவியத் பிரதிநிதிகளுக்குத் தெரியாதபடி ஜெர்மனியுடன் தனியான சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டது. இதன்படி ஜெர்மனிக்கு உக்ரேன் தானியம், நிலக்கரி மற்றும் மூலப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போராட ராணுவ உதவி பெறப்பட்டது. *1918* மார்ச்சில் மத்திய ராடா ஆஸ்திரிய-ஜெர்மன் படையெடுப்பாளர்களுடன் கீவுக்குத் திரும்பியது. உக்ரேன் புரட்சி இயக்கத்தை ஒடுக்கவோ அவசியமான உணவு வழங்கவோ ராடாவால் அறவே இயலாது என்பதை உணர்ந்த ஜெர்மானியர் ஏப்ரல் இறுதியில் அதைக் கலைத்து விட்டனர்.—*84*

30 **காடேட்டுகள் (அரசியல்சட்ட-ஜனநாயகக் கட்சியினர்)** — ருஷ்ய மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. இக்கட்சி *1905* அக்டோபரில் நிறுவப்பட்டது. முதலாளித்துவ வர்க்கத்தினர், ஸெம்ஸ்துவோ உறுப்பினர்களான நிலப்பிரபுக்கள், முதலாளித்துவ அறிவுத்துறையினர் ஆகி

யோர் இதில் சேர்ந்திருந்தனர். பிறகு காடேட்டுகள் கட்சி ஏகாதிபத்திய முதலாளித்துவக் கட்சியாக மாற்றப் பட்டது.

முதலாவது உலகப் போரின் போது இவர்கள், ஜார் அரசாங்கத்தின் நாடுபிடிக்கும் கொள்கையை ஆதரித்தார்கள். *1917* பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது காடேட்டுகள் முடியரசைக் காப்பாற்ற முயன்றனர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் தலைமைப் பதவிகள் வகித்த இவர்கள் மக்களுக்கு விரோதமான, எதிர்ப்புரட்சிக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டு புரட்சிக்குப் பிறகு காடேட்டுகள் சோவியத் ஆட்சிக்குத் தீவிர பகைவர்களாயினர், ஆயுதமேந்திய எல்லா எதிர்ப் புரட்சி எழுச்சிகளிலும் வெளிநாட்டுப் படையெடுப்புகளிலும் பங்குபெற்றூர்கள்.—*85*

31 **உணவுக்காகவும் சமாதானத்துக்காகவும்** என்னும் கட்டுரை *1917* டிசம்பர் *14(27)*ல் லெனினுல் எழுதப்பட்டது. ஸ்வீடன் இடதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சியிலிருந்து கட்சி வேலையாக பெத்ரோகிராதுக்கு வந்திருந்த ஸ்வீடன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதி ஹோக்லண்டின் வேண்டுகோளின்படி இது எழுதப்பட்டது. முதல் தடவையாக இக்கட்டுரை ஜெர்மன் மொழியில் *1918*, மே மாதம் *Yugend-Internationale* (''இளைஞர்களின் இன்டர்ஞஷனல்'') என்னும் செய்திப்பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் கீழில் உள்ள மார்க்சிய-லெனினியக் கழகத்தின் கட்சியின் மத்திய சுவடிக்கூடத்தில் இக்கட்டுரையின் கையெழுத்துப் பிரதி காணப்படவில்லை.—*89*

32 *1917*, டிசம்பர் *14(27)*ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் வங்கிகளின் தேசவுடைமையாக்கம் பற்றி நடந்த விவாதத்தின் போது லெனின் ஆற்றிய உரையாகும் இது.

அரசு வங்கி *1917*, அக்டோபர் *25* (நவம்பர் *7*)ல் கைப்பற்றப்பட்டது. டிசம்பர் *14(27)* காலை அரசாங்கத்தின் நெறிமுறைப்படித் தொழிலாளர்களும் செஞ்சேனைப் படையாளிகளும் பெத்ரோகிராதில் இருந்த எல்லா வங்கிகளையும் கடன் வழங்கு அமைப்புகளையும் கைப்பற்றினுர்கள். அதே நாளில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் ''வங்கிகளைத் தேசவுடைமையாக்கு

வது பற்றி'', ''வங்கிகளில் இரும்புப் பெட்டிகளைச் சோதனை செய்தல் பற்றி'' அரசாணைகள் ஏற்கப்பட்டன. இந்த இரண்டு அரசாணைகளும் மத்திய நிர்வாகக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியாவில்'', இதழ் 252ல், டிசம்பர் 15(28)ல் வெளியிடப்பட்டன.—91

33 **வங்கிகளின் தேசவுடைமையாக்கமும் அதன் அமுலாக்கத்திற்கு அவசியமான நடவடிக்கைகளும் பற்றிய நகல் அரசாணை** லெனிஞல் 1917, டிசம்பர் 14(27)ல் உயர் பொருளாதாரக் கவுன்சிலின் பியூரோ முன்வைக்கப் பட்டது. இந்தக் கூட்டம் பற்றிய குறிப்பேடுகள் காணப் படவில்லை, இந்த நகல் அரசாணை 1918, நவம்பரில் உயர் பொருளாதாரக் கவுன்சில் ஏடான ''நரோத்னயே கஸியாய்ஸ்துவோ'' (''மக்கள் பொருளாதாரம்'') என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டது.—95

34 குறிப்பு 21 பார்க்க.—104

35 1875, மே 5ல் மார்க்ஸ் பிராக்கேக்கு எழுதிய கடிதம் பார்க்க.—113

36 கெதேயின் ''ஃபாவுஸ்டில்'' இருந்து மெஃபிஸ்டபீலின் சொற்களை லெனின் சுட்டுகிருர்.(கெதேயின்''ஃபாவுஸ்ட்'', பாகம் 1, காட்சி 4 பார்க்க.)—113

37 **பாரிஸ் கம்யூன்**—1871ல் நடந்த புரட்சியின் விளைவாகப் பாரிஸ் நகரத் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசாங்கம். வரலாற்றில் இது முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாக விளங்கிற்று. மார்ச்சு 18 முதல் மே 28 வரை 72 நாட்களுக்குப் பாரிஸ் கம்யூன் நீடித்தது.—113

38 **உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம்** பற்றிய நகல் 1918, ஜனவரி 3(16)ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நகல் பெரும்பான்மை வாக்குகளால் ஏற்கப்பட்டது. இருவர் எதிராக ஓட்டளித்தனர். ஒருவர் ஓட்டளிக்கவில்லை. முழுமைப்படுத்துவதற்கு எனச் சமரசக் கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டது. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் ஏற்கப்பட்ட இந்தப் ''பிரகடனம்'' ஜனவரி 4(17)ல் மத்திய நிர்வாகக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியாவில்'' வெளியிடப்பட்டது. ஜனவரி 12(25)ல் இது சோவியத்துகளின் மூன்ருவது அகில ருஷ்யக் காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு

பின்னல் சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை ஆகியது.—117

39 1917, டிசம்பர் 6(19)ல் பின்னிஷ் ஸெய்மு பின்லாந்தின் சுதந்திரம் பற்றிய ஒரு பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது. 1917, டிசம்பர் 18(31)ல் மக்கள் கமிசார்களின் கவுன்சில் தேசிய இனங்கள் பிரச்சினை சம்பந்தப்பட்ட சோவியத் அரசின் கொள்கைக்கு ஏற்ப பின்லாந்தின் சுதந்திரம் பற்றிய அரசாணையைப் பிறப்பித்தது. மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டத்தில் பின்னிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதிக் குழுவுக்குத் தலைமை தாங்கி வந்த பிரதமர் பி.எ. ஸ்வின்ஹூவுட் இடம் லெனின் நேரடியாகவே அரசாணையின் வாசகத்தை அளித்தார். 1917, டிசம்பர் 22 (1918, ஜனவரி 4)ல் பின்லாந்தின் சுதந்திரம் பற்றிய அரசாணை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் உறுதிப்படுத்தப்பட்டது.

1917, டிசம்பர் 19 (1918, ஜனவரி 1)ல் சோவியத் அரசாங்கம் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் டிசம்பர் 2(15)ல் ருஷ்யா ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, துருக்கி, பல்கேரியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி பாரசீகத்தில் இருந்து ருஷ்யத் துருப்புக்களை விலக்கிக் கொள்வதற்கான பொதுத் திட்டத்தை விரித்துரைக்குமாறு பாரசீக அரசாங்கத்திடம் முன்மொழிந்தது.

1917, டிசம்பர் 29 (1918, ஜனவரி 11)ல் மக்கள் கமிசார்களின் கவுன்சில் "'துருக்கிய-ஆர்மீனியா' பற்றிய அரசாணை" பிறப்பித்தது. இந்த அரசாணை 1917, டிசம்பர் 31 (1918, ஜனவரி 13)ல் "பிராவ்தா", இதழ் 227ல் வெளியிடப்பட்டது.—120

40 அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பது சம்பந்தமான பிரச்சினைக்கு 1918, ஜனவரி 6(19)ல் நடைபெற்ற மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டத்தில் பரிகாரம் காணப்பட்டது. அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பது சம்பந்தமான அரசாணையின் பிரதான உள்ளடக்கம் லெனினல் தமது நகல் ஆராய்ச்சியுரைகளில் உருவரை செய்யப்பட்டது. மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டத்தில் லெனின் இந்த நகலை இந்த அரசாணையின் ஆராய்ச்சியுரைகளாக விரிவுபடுத்தினர். இந்த ஆராய்ச்சியுரைகள் வாசிக்கப்பட்டு ஒன்றுபின் ஒன்ருக ஏற்கப்பட்டன.

ஜனவரி 6 (19)ல் இரவில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பது சம்பந்தமான அரசாணை பெரும்

பான்மையால் ஏற்கப்பட்டது. இரண்டு பேர் எதிராக ஓட்டளித்தனர். ஐந்து பேர் ஓட்டளிக்கவில்லை. அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பது பற்றி லெனின் உரையாற்றினார். லெனினது நகல் இந்த அரசாணைக்கு அடிப்படை ஆகியது. இந்த அரசாணை 1918, ஜனவரி 7(20)ல் ''பிராவ்தா'' மற்றும் மத்திய நிர்வாகக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியா'' செய்திப்பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.—122

41 ஒரு தனியான பிரதேசக் கைப்பற்றல் தன்மை கொண்ட சமாதானம் உடனே ஏற்பட வேண்டும் என்ற பிரச்சினை மீதான ஆராய்ச்சியுரைகள் 1918, ஜனவரி 8(21)ல் நடைபெற்ற மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள், கட்சி ஊழியர்கள் மாநாட்டில் லெனினுல் படிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் மொத்தம் 63 பேர் கலந்து கொண்டார்கள்.

மாநாட்டில் 15 பேர் லெனினது ஆராய்ச்சியுரைகளை ஆதரித்து வோட்டளித்தனர்; 32 பேர் ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளின்'' நிலைமையை ஆதரித்தனர்; 16 பேர் திரோத்ஸ்கியை ஆதரித்தனர். இந்த விவரம் ஜனவரி 11(24)ல் லெனின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் பேசிய போது தெரியவந்தது.

சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வது விஷயமாக மத்தியக் கமிட்டியில் பெரும்பாலோர் லெனினை ஆதரித்த போது 1918, பிப்ரவரி 24ல் இந்த ஆராய்ச்சியுரைகள் வெளியிடப்பட்டன. ''துரதிருஷ்ட சமாதானம் என்னும் பிரச்சினையின் வரலாறு குறித்து'' என்ற தலைப்பில் லெனின் ஒரு முகவுரை எழுதினர்.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு உடனே கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசாங்கமும் சமாதானத்திற்காக விடாப்பிடியான போராட்டம் நடத்தின. சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் அக்டோபர் 26 (நவம்பர் 8)ல் ஏற்கப்பட்டதான ''சமாதானம் பற்றிய அரசாணையில்'' சோவியத் அரசாங்கம், பிரதேசக் கைப்பற்றல்களோ இழப்பீடுகளோ இல்லாத ஒரு நியாயமான ஜனநாயகமான சமாதானத்திற்கு வேண்டிப் போரிடும் நாடுகள் யாவும் உடனே பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்று முன்மொழிந்தது. அன்டான்ட் நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் இதை ஏற்க மறுத்தனர். ருஷ்யா போரில் இருந்து விலகுவது அவசர அவசியமாக இருந்ததால் சோவியத் அரசாங்கம் ஜெர்மனியுடன் தனியான சமாதானப் பேச்சுவார்த்தை

கள் தொடங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளா யிற்று. 1917, நவம்பர் 19 (டிசம்பர் 2)ல் சோவியத் ருஷ்யாவின் சமாதானப் பிரதிநிதிக் குழு பிரெஸ்ட்-லிடா வ்ஸ்கில் பல்கேரிய மற்றும் துருக்கியின் பிரதிநிதிகள் அடங்கிய ஆஸ்திரோ-ஜெர்மன் கூட்டணியின் பிரதி நிதிக் குழுவைச் சந்தித்தது. 1917, டிசம்பர் 2(15)ல் சமாதான மாநாட்டைக் கூட்ட வகை செய்யும் போர் நிறுத்த உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டது.

சமாதான மாநாடு 1917, டிசம்பர் 9(22)ல் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் துவங்கியது. இதில் சோவியத் பிரதிநிதிக் குழுவும் நான்கு தரப்பினர் கூட்டணி (ஜெர்மனி, ஆஸ் திரோ-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி) பிரதிநிதிக் குழுவும் கலந்து கொண்டன. இதன் முதல் அமர்வில் சோவியத் பிரதிநிதிக் குழு தனது சமாதான நிபந்தனைகளை வெளிப்படுத்தியது. 1918, ஜனவரி 5 (18)ல் நான்கு தரப்பினர் கூட்டணி பிரதிநிதிகள் தமது அரசாங்கங்களின் பிரதேச உரிமைக் கோரிக்கைகளை சோவியத் பிரதி நிதிக் குழுவிடம் அறிவித்தனர். அவர்களது திட்டப்படி 1,50,000 சதுரக் கிலோமீட்டர் பரப்புள்ள ருஷ்யாவின் பிரதேசம் (போலந்து, லிதுவேனியா, எஸ்தோனியா லாத்வியாவின் பகுதிகள் மேலும் உக்ரேனியரும் பெலோ ருஷ்யரும் வாழும் கணிசமான பிரதேசம்) ஜெர் மனிக்கும் ஆஸ்திரோ-ஹங்கேரிக்கும் விட்டுக் கொடுக்கப் பட வேண்டும்.

ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் முன்வைத்த நிபந் தனைகள் தெட்டத் தெளிவாயும் கொள்ளைக்காரத் தன்மை யுடையனவாக இருந்தபோதிலும் லெனின் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று வற்புறுத்தினர். காரணம் சோவியத் ஆட்சி அதிகாரத்தைக் கட்டி வளர்க்க அமை தியான இடைக்காலம் அவசியம் என்று அவர் கருதினர். அதோடு போரினல் மக்களுக்கு ஏற்பட்ட சோர்வு, நாசம், சேனை போராட இயலாது போனது ஆகியவை காரண மாகப் போர் தொடருமானல் அது தவிர்க்க முடியாத வகையில் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அழிவுக்கே இட்டுச் செல்லும் என்பதையும் உணர்ந்தார். லெனினும் அவரது ஆதரவாளர்களும் எடுத்த நிலையை திரோத்ஸ் கியும் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' ஒரு குழுவினரும் (புஹாரினும் லோமவும் யோஃபெயும் பியத்தக்கோவும் ஒஸீன்ஸ்கியும்) எதிர்த்தனர். அவர்கள் பேச்சு வார்த்தைகளை முறித்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர். ''புரட்சிகரப் போர்'' என்ற துடுக்குத்

தனமான கோஷத்தை முன்வைத்தனர். லெனினேயும் அவரது ஆதரவாளர்களையும் கடுமையாகத் தாக்கினர். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' கண்ணேட்டத்திற்கு மாஸ்கோ, பெத்ரோகிராத் மற்றும் யூரலில் இருக்கும் பல கட்சி அமைப்புகளில் ஆதரவு காணப்பட்டது. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இரண்டாவது கட்டத்தில் சோவியத் பிரதிநிதிக் குழுவுக்குத் தலைமை தாங்கிய திரோத்ஸ்கி சரணுகதி நிலை மேற்கொண்டார். பேச்சுவார்த்தைகளை சாத்தியமான எல்லா வழிகளிலும் நீட்டி இழுத்து, ஜெர்மன் இறுதி எச்சரிக்கை வரும் பட்சத்தில் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடுவது என்று மத்தியக் கமிட்டியின் நெறியாண்மையையும் லெனினது நெறிமுறைகளையும் மீறி பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் திரோத்ஸ்கி சோவியத் ருஷ்யா எந்த ஒரு சமாதான உடன்படிக்கையிலும் கையொப்பம் இடாது எனவும், போர் நடவடிக்கைகளை நிறுத்தி சேனையைக் கலைத்துவிடும் எனவும் சாற்றினர். இந்தக் கூற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைத்தது. எனவே பிப்ரவரி 18ல் ஜெர்மானியர் போர்முனை முழுதிலும் எதிர்த்தாக்குதல் தொடுத்தனர்.

பிப்ரவரி 17, 18ல்(காலை) மத்தியக் கமிட்டி அமர்வுகளில் ஜெர்மனியுடன் உடனடி சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது என்ற லெனினது பிரேரணைக்குச் சிறுபான்மை வாக்குகளே கிடைத்தன. பிப்ரவரி 18ல்(மாலை) நடந்த விசேஷ மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் ஜெர்மன் எதிர்த்தாக்கு மெய் நடப்பு ஆகிவிட்ட நிலையில், திரோத்ஸ்கியுடனும் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடனும்'' நீண்ட கடுமையான வாக்குவாதம் நடத்திய பிறகு, சமாதான உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதற்கு ஆதரவாக பெரும்பான்மை ஓட்டுக்களைப் பெறுவதில் லெனின் வெற்றி பெற்ருர். பிப்ரவரி 19ல்(காலை) பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் ஜெர்மானியர் முன்வைத்த நிபந்தனைகளின் பேரில் ஒரு சமாதான உடன்படிக்கையில் கையொப்பம் இட சோவியத் அரசாங்கம் தயாராக உள்ளது என்று கூறி ஜெர்மன் அரசாங்கத்துக்குக் கம்பியில்லாத் தந்திச் செய்தி அனுப்பப்பட்டது. (இந்தத் தொகுதி, பக்கங்கள் 179-80 பார்க்க.)

மேலும் அதிகக் கடினமான சமாதான நிபந்தனைகள் அடங்கிய ஜெர்மன் ராணுவத் தலைமையின் பதில் பிப்ரவரி 23ந் தேதி (காலை) கிடைத்தது. பிப்ரவரி 23ல் ஜெர்மனியின் புதிய இறுதி எச்சரிக்கை விவாதிக்கப்பட்ட

போது மத்தியக் கமிட்டியில் கடினமான போராட்டம் தொடர்ந்தது. இதன் விளைவாக ஜெர்மனியின் நிபந்தனைகளின் பேரில் உடனடியாக ஒரு சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடுவது என்ற லெனினது யோசனைக்கு மத்தியக் கமிட்டியின் பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது. பிப்ரவரி *23*ந் தேதி இரவில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியும் பின்னர் மக்கள் கமிசார்களின் கவுன்சிலும் ஜெர்மன் சமாதான நிபந்தனைகளை ஒப்புக் கொள்வதாகச் சாற்றின. இது உடனே ஜெர்மன் ராணுவத் தலைமைக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவசரமாகக் கூட்டப்பட்ட கட்சியின் ஏழாவது காங்கிரஸ் லெனினது நிலையைப் பெரும்பான்மை வாக்குகளால் ஊர்ஜிதம் செய்தது. மார்ச்சு *14—16*ல் நடைபெற்ற சோவியத்துகளின் நாலாவது விசேஷக் காங்கிரஸ் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் உடன்படிக்கையை ஏற்று உறுதிப்படுத்தியது.

ஜெர்மனியில் *(1918)* நடைபெற்ற நவம்பர் புரட்சி இரண்டாவது வில்ஹெல்மின் ஆட்சி அதிகாரத்தை ஒழித்து விட்டது. அதன் விளைவாக் சோவியத் அரசாங்கம் கொள்ளைக்காரத் தனமான பிரெஸ்ட் உடன்படிக்கையை ரத்துச் செய்தது.—*126*

42 நான்கு தரப்பினர் கூட்டணி — ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, பல்கேரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் கூட்டணி.—*129*

43 குறிப்பு *29* பார்க்க.—*136*

44 அரசாங்க டூமா—*1905*ஆம் வருடப் புரட்சிகர நிகழ்ச்சிகளின் விளைவுகளால் நிர்ப்பந்திக்கப்பட்டு ஜார் அரசாங்கம் கூட்டிய பிரதிநிதித்துவ சபை. பெயரளவில் சட்டமன்றமாய் இருந்த அரசாங்க டூமா உண்மையில் எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் இருந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியாகவோ, சமத்துவ அடிப்படையிலோ, எல்லோருக்கும் வாக்குரிமை எனும் அடிப்படையிலோ நடைபெறவில்லை. உழைப்பாளி வர்க்கங்களுக்கும் ருஷ்யாவில் இருந்த ருஷ்யர்கள் அல்லாத தேசிய இனத்தவருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரில் கணிசமான பகுதியோருக்கு வாக்குரிமையே சுத்தமாக இருக்கவில்லை. முதல் அரசாங்க டூமாவும் *(1906*, ஏப்ரல்—ஜூலை) இரண்டாவது அரசாங்க டூமா

வும் (1907, பிப்ரவரி—ஜூன்) அரசாங்கத்தால் கலைக்கப் பட்டன. 1907, ஜூன் 3ல் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பிறகு பிறப்பிக்கப்பட்ட புதிய சட்டத்தின்படி, தொழி லாளர்கள், விவசாயிகள், நகரத்துக் குட்டிமுதலாளித் துவப் பகுதியோர் ஆகியோரின் வாக்குரிமை மேலும் குறைக்கப்பட்டு, மூன்றாவது (1907—1912), நான்காவது (1912—1917) அரசாங்க டூமாக்களில் நிலப்பிரபுக் கள், பெருமுதலாளிகளது பிற்போக்கு கூட்டணியின் முழுநிறை ஆதிக்கம் உறுதியாக்கப்பட்டது.—140

45 போரும் சமாதானமும் பற்றிய பிரச்சினை மீதான விவா தம் 1918, ஜனவரி 11(24)ல் லெனினது உரையைத் தொடர்ந்து மத்தியக் கமிட்டியில் நடைபெற்றது. லெனினை ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும்'' திரோத்ஸ்கியும் எதிர்த் தார்கள். சமாதான உடன்படிக்கையை ஒப்புக் கொள் ளாத மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களது எதிர்ப் பையும் புரட்சிகரப் போரை ஆதரிப்பவர்களுக்கு அனு சரணை காட்டும் மக்கள் திரளின் ஒரு பகுதியின் எதிர்ப்பை யும் வென்று சமாளிக்கும் முயற்சியில் லெனின் சாத்திய மான எல்லா வழிகளிலும் பேச்சுவார்த்தைகளை இழுத்து நீட்டிக்க வேண்டும் என்று பிரேரேபித்தார். இது 12 வாக்குகள் சாதகம் 1 வோட்டு பாதகம் என்ற முறை யில் நிறைவேற்றப்பட்டது.—143

46 இது ''போல்ஷிவிக்குகளும் ஜெர்மன் சமூக-ஜனநாயக மும்'' என்ற தலைப்பில் 1918, ஜனவரி 11(24)ல் ''நோ வயா ஷீஸ்ன்'', இதழ் 7ல் வெளியான கையெழுத்திடப் படாத கட்டுரையைக் குறிப்பிடுகிறது போலும். இந்தக் கட்டுரை ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி யின் பிரமுகர் ஒருவரால் எழுதப்பட்டது என்று இந்தப் பத்திரிகை கூறியது.—145

47 லெனின் இங்கு குறிப்பேடுகளில் பதிவு செய்யப்பட்ட ஸ்தாலினது பின்வரும் வாசகங்களைக் குறிப்பிடுகிறார்: ''புரட்சிகரப் போர் என்ற கோஷத்தை ஏற்பது ஏகாதி பத்தியத்தின் பிடிக்குள் சிக்கிக் கொள்வதாகும் என்று தோழர் ஸ்தாலின் கருதுகிறார். திரோத்ஸ்கியின் நிலை ஒரு நிலையே அல்ல. மேலை நாடுகளில் புரட்சிகர இயக்கம் இல்லை. அது பற்றிய தகவல் இல்லை. எதிர்காலத்தில் வாய்ப்பு மட்டுமே உள்ளது. அவ்வளவே இதை நாம் கணக்கில் எடுக்க முடியாது. ஜெர்மானியர் எதிர்த்தாக்கு

தலைத் தொடங்குவார்களானால் அது இங்கு எதிர்ப் புரட்சியை வலுப்படுத்தும்.''

ஸினோவியெவின் உரையில் இருந்து பின்வரும் வாசகங்களை லெனின் குறிப்பிடுகிறார்: ''...நாம் ஒரு முக்கியமான அறுவைச் சிகிச்சையினை எதிரிடுகிறோம். காரணம் நாம் ஒரு சமாதானத்தைச் செய்துகொண்டோமானால் நாம் ஜெர்மனியில் தேசியவெறியைப் பலப் படுத்தியவர்களாவோம். இது சிலகாலம் வரை மேலை நாடுகள் அனைத்திலும் புரட்சிகர இயக்கத்தைப் பலவீனப் படுத்தும். இதற்கும் அப்பால் இன்னொரு வருங்கால நிகழ்வும் — சோஷலிஸ்டு குடியரசின் வீழ்ச்சியும்—ஏற்படும்.'' (''ரு.ச.ஜ. தொ.க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் குறிப்பேடுகள். ஆகஸ்டு *1917—*பிப்ரவரி *1918*'', மாஸ்கோ, *1958*, பக்கங்கள் *171—172.)—147*

48 **தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் சோவியத்துகளின் மூன்றுவது அகில ருஷ்யக் காங்கிரஸ்** பெத்ரோகிராதில் *1918*, ஜனவரி *10*முதல் *18* வரை (*23* முதல்—*31*வரை) நடைபெற்றது. காங்கிரஸ் துவங்கிய போது *707* பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அவர்களில் *441* பேர் போல்ஷிவிக்குகள். ஜனவரி *13*(*26*)ல் விவசாயிகள் பிரதிநிதிகள் சோவியத்துகளின் மூன்றுவது அகில ருஷ்யக் காங்கிரஸ் பிரதிநிதிகள் வந்தார்கள். பிறகு தாமதமாக வந்த மேலும் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இறுதி அமர்வில் *1587* பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

லெனின் மக்கள் கமிசார்களின் கவுன்சில் செயல்பாடுகள் குறித்து அறிக்கை சமர்ப்பித்தார். இறுதி உரையும் ஆற்றினார்.

லெனினது ''உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' காங்கிரஸ் ஏற்றது. இது பின்னால் சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையாயிற்று. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மக்கள் கமிசார்களின் கவுன்சில் கொள்கைகளை முழுமையாக அங்கீகரித்தும் அவற்றின் பால் பூரண நம்பிக்கை தெரிவித்தும் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. சமாதானம் பற்றிய மக்கள் கமிசார்களின் கவுன்சில் கொள்கையை காங்கிரஸ் அங்கீகரித்தது. இந்த விஷயத்தில் அதற்கு மிகவும் விரிவான அதிகாரங்களை ஒப்படைத்தது.

தேசிய இனங்கள் விவகாரத்துறை மக்கள் கமிசாரான

ஸ்தாலின் சோவியத் குடியரசுகளின் கூட்டாட்சி பற்றிய கோட்பாடுகள் மீதும் சோவியத் ஆட்சி அதிகாரம் தேசிய இனங்கள் பிரச்சினையில் பின்பற்றிய கொள்கை மீதும் சமர்ப்பித்த அறிக்கையை காங்கிரஸ் கேட்டது. ருஷ்யா வின் மக்களினங்களின் சுயேச்சையான ஒன்றியம் என்ற அடிப்படையில் சோவியத் குடியரசுகளின் ஒரு கூட்டாட்சி யாக ருஷ்ய சோஷலிஸ்டு குடியரசை உருவாக்குவது என்ற முடிவை காங்கிரஸ் ஏற்றது. சோவியத் ஆட்சி அதிகாரம் தேசிய இனங்கள் பிரச்சினையில் பின்பற்றிய கொள்கையை காங்கிரஸ் அங்கீகரித்தது. ''நிலம் பற்றிய அரசாணை'' அடிப்படையில் வகுக்கப்பட்டதான நிலத்தை சமூகவுடைமையாக்குவதற்கான சட்டத்தின் அடிப்படை ஷரத்துக்களை காங்கிரஸ் அங்கீகரித்தது.—*149*

49 இங்கு குறிப்பிடப்படுவது அகில ருஷ்ய தோல் தொழிலா ளர் தொழிற்சங்கத்துக்கும் அதிபர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளாகும். தோல் தொழில் மத்தியக் கமிட்டியில் தொழிலாளர்களுக்கு விரிவான பிரதிநிதித் துவம் கோரியது இத்தொழிற்சங்கம். அதை ஜனநாயக வழியில் மறுசீரமைக்கவும் கோரியது. பேச்சுவார்த்தை களின் விளைவாக 1918 துவக்கத்தில் தோல் தொழில் மத்தியக் கமிட்டியும் மாவட்டக் கமிட்டிகளும் மறு சீரமைக்கப்பட்டன, தொழிலாளருக்கு மூன்றில் இரண்டு பங்கு வோட்டுக்கள் கிடைத்தன. தோல் தொழில் ஸ்தல அமைப்புகளை ஜனநாயகப்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும், தோல் தொழில் மத்திய, மாவட்டக் கமிட்டி கள் பிறப்பித்த நெறிமுறைகளைக் கறாராக அனுசரிப்பது சம்பந்தமாயும் லெனின் கையொப்பமிட்ட தந்திச் செய்தி கள் 1918, ஏப்ரல் 6 எல்லா சோவியத்துகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.—*174*

50 இங்கு குறிப்பிடப்படுவது ரு.ச.ஜ. தொ. கட்சியின் மாஸ்கோ கமிட்டியின் முடிவுப்படி தொடங்கப்பட்ட பொது அரசியல் வேலைநிறுத்தம் ஆகும். இந்த வேலைநிறுத்தம் அக்டோபர் 7(20)ந் தேதி மாஸ்கோ-கஸான் ரயில்வேயில் ஆரம்பித்தது. இது விரைவாக எல்லாத் தொழிற்துறை மையங்களுக்கும் பரவி, இருபது லட்சம் மக்களுக்கும் அதிகமானோர் ஈடுபட்ட ஓர் அகில ருஷ்ய வேலைநிறுத்த மாக மாறியது. இந்த வேலைநிறுத்தத்தின் கோரிக்கை முழக்கங்களாவன: ஜார் ஆட்சியை வீழ்த்துவோம், அர சியல் நிர்ணய சபையைக் கூட்டுவோம், ஒரு ஜனநாயகக் குடியரசை நிறுவுவோம். புரட்சி இயக்கத்தின் பெருக்

கம் கண்டு ஜார் அரசாங்கம் பீதியடைந்தது, அவசர அவசரமாகச் சில சலுகைகளை வழங்கியது. அக்டோபர் 17ந் தேதி ''குடி உரிமைகள்'', ''சட்டம் இயற்றும்'' டூமா ஆகியவற்றை வாக்களித்து ஜார் ஓர் அறிக்கை விடுத்தார்.

ஜாரின் இந்த அறிக்கையின் மோசடியை போல்ஷிவிக்குகள் அம்பலப்படுத்தினர்கள், தொடர்ந்து போராடும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார்கள். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் இந்த அறிக்கையை வரவேற்றுர்கள், வேலைநிறுத்தத்தை முடித்து விடும்படித் தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டார்கள். முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவைப் பெற்ற ஜார் அரசாங்கம் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் துரோகத்தைச் சாதகமாக எடுத்துக்கொண்டு எதிர்த்தாக்குதலைத் தொடுத்தது. நாடெங்கும் வன்முறையும் அடக்குமுறையும் அலை வீசின.

மாறிவந்த நிலைமையினைக் கருத்தில் கொண்டு ரு.ச.ஜ.தொ. கட்சியின் மாஸ்கோ நகர மாநாடு அக்டோபர் 22 (நவம்பர் 4)ந் தேதி பொது வேலைநிறுத்தத்தை முடித்துக் கொண்டது. அக்டோபர் பொது அரசியல் வேலைநிறுத்தம் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வலிமையையும் செய்திறமையையும் வெளிப்படுத்தியது, நாட்டுப்புறத்திலும் ராணுவம் மற்றும் கடற்படையிலுமான புரட்சிகர இயக்கத்துக்குத் தூண்டுதலை அளித்தது. அக்டோபர் பொது வேலைநிறுத்தம் டிசம்பர் புரட்சி எழுச்சிக்குப் பாட்டாளி வர்க்கத்தை ஆயத்தப்படுத்தியது.—176

51 1870, பிப்ரவரி 12ல் மார்க்ஸ் எங்கெல்சுக்கு எழுதிய கடிதம் பார்க்க.—177

52 இங்கு குறிப்பிடப்படுவது 1917 ஆகஸ்டில் டியூரினில் நடைபெற்ற இத்தாலியத் தொழிலாளர்களின் போர்--எதிர்ப்பு இயக்கமாகும். ஆகஸ்டு 21ல் டியூரினில் உணவுப் பற்றுக்குறை சம்பந்தமாக ஓர் ஆர்ப்பாட்டம் துவங்கியது. மறு நாள் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். இது பொது வேலைநிறுத்தமாக ஆயிற்று. தெருக்களில் தடுப்பரண்கள் காட்சியளித்தன. இயக்கம் ஓர் அரசியல் போர்-எதிர்ப்புத் தன்மை பெற்றது. ஆகஸ்டு 23ல் டியூரின் புறநகர்ப் பகுதி எழுச்சியாளர் கரங்களில் இருந்தது. இயக்கத்தை ஒடுக்க அரசாங்கம் துருப்புக்களைப் பயன்படுத்தியது, ராணுவச் சட்டத்தை திணித்தது.

ஆகஸ்டு *27*ந் தேதி பொது வேலைநிறுத்தம் முடிவடைந்தது.

1918, ஜனவரியில் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நடந்த ஆஸ்திரியத் தொழிலாளர் வேலைநிறுத்தம் பொதுவான சமாதானம், தொழிலாளருக்கு மேம்பட்ட உணவு வழங்கல் என்ற கோஷத்தின் கீழ் நடைபெற்றது.—*177*

53 ஜெர்மன் ரைக் அரசாங்கத்துக்கு மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் சார்பில் பிப்ரவரி *19*ந் தேதி காலை பெர்லினுக்கு ஒரு கம்பியில்லாத் தந்திச் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால் புதிய மேலும் அதிகக் கடினமான சமாதான நிபந்தனைகளைக் கொண்டதான ஜெர்மன் அரசாங்கத்தின் பதில் சோவியத் அரசியல் தூதரிடம் பிப்ரவரி *22*ந் தேதி மட்டுமே தரப்பட்டு *23*ந் தேதி காலை பெத்ரோகிராதுக்குக் கிட்டியது. ஜெர்மன் அரசாங்கம் தனது பதிலில் இந்தப் புதிய நிபந்தனைகள் *48* மணி நேரத்துக்குள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று கோரியது. ஜெர்மன் அரசாங்கம் பதில் அனுப்புவதில் தாமதம் செய்த அதே போதில் ஜெர்மன் படைகள் போர்முனை முழுதிலும் தொடர்ந்து முன்னேறிப் பல சோவியத் ருஷ்யாவின் நகரங்களைக் கைப்பற்றி இருந்தன. பெத்ரோகிராதைத் தாக்கும் தொலைவுக்கு நெருங்கி வந்து விட்டன. (மேலும் குறிப்பு *41* பார்க்க).—*179*

54 **சோஷலிஸ்டு தாயகம் ஆபத்தில் இருக்கிறது!** என்னும் அரசாணை *1918*, பிப்ரவரி *21*ந் தேதி மக்கள் கமிசார்களின் கவுன்சிலால் நிறைவேற்றப்பட்டது. ''பிராவ்தாவிலும்'' மத்திய நிர்வாகக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியாவிலும்'' பிப்ரவரி *22*ல் வெளியிடப்பட்டது. தனி ஒரு சிறு பிரசுரமாயும் வெளியிடப்பட்டது. பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தது மற்றும் ஜெர்மன் எதிர்த்தாக்குதல் சம்பந்தமாக இந்த அரசாணை லெனினால் எழுதப்பட்டது. கட்சியும் அரசாங்கமும் விடுத்த வேண்டுகோள் புரட்சிகர மக்கள் திரளை எழுச்சியுறச் செய்து ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்துப் போராட ஊக்குவித்தது. புதிதாக நிறுவப்பட்ட செஞ்சேனைப் பிரிவுகள் ஜெர்மன் படையெடுப்பாளர்களை எதிர்த்து வீரஞ்செறிந்த போராட்டம் நடத்தின. நார்வா, ப்ஸ்கோவ் மற்றும் ரெவெலில் ஜெர்மன் படையெடுப்பாளர்களுக்குத் தீர்மானகரமான பதிலடி தரப்பட்டது. பெத்ரோகிராதுக்கு எதிரான

ஜெர்மன் எதிர்த்தாக்கு தடுத்து நிறுத்தப்பட்டது.—*181*

55 ஜெர்மனியில் எதிர்பார்க்கப்பட்ட பாட்டாளி வர்க்கப் புரட்சியை இங்கு மனதில் கொண்டுள்ளார் லெனின். இந்தப் புரட்சி ஜெர்மனியில் 1918 நவம்பரில் நடந்தது. —*187*

56 பின்லாந்து சமூக-ஜனநாயகக் கட்சி அறைகூவலின்படி 1918, ஜனவரி 27ந் தேதி பின்லாந்தில் புரட்சி வெடித்தது. ஸ்வின்ஹூவுடின் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கம் வீழ்த்தப்பட்டு ஆட்சி அதிகாரம் தொழிலாளர் கரங்களுக்கு மாறியது. ஜனவரி 29ந் தேதி பின்லாந்தின் புரட்சி அரசாங்கம்—மக்கள் பிரதிநிதிகளின் கவுன்சில்—நிறுவப்பட்டது.

ஆனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி பின்லாந்தில் தெற்கு மாவட்டங்களில் மட்டுமே வெற்றியடைந்தது. ஸ்வின்ஹூவுடின் அரசாங்கம் நாட்டின் வடக்குப் பகுதியில் உறுதியாக இருந்தது. அங்கு எதிர்ப்புரட்சி சக்திகள் யாவும் ஒன்று சேரத் தொடங்கின. ஸ்வின்ஹூவுடின் அரசாங்கம் ஜெர்மன் அரசாங்கத்திடம் உதவி கோரியது. ஜெர்மன் ஆயுதப் படைகளின் தலையீடு விளைவாக, உள்நாட்டுப் போர் 3 மாதம் நீடித்த பிறகு 1918, மே 2ல் பின்லாந்தில் புரட்சி நசுக்கப்பட்டது. வெள்ளை பயங்கர ஆட்சி நாட்டில் தொடங்கியது. ஆயிரக் கணக்கான புரட்சிகரத் தொழிலாளர் விவசாயிகள் தூக்கிலிடப்பட்டனர், சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டு மடிந்தனர்.—*191*

57 லெனின் இங்கு குறிப்பிடுவது 1918, பிப்ரவரி 23ல் மாலை நடைபெற்ற அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் போல்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் குழுக்களின் கூட்டுக் கூட்டமாகும். புதிய ஜெர்மன் சமாதான நிபந்தனைகளை ஒப்புக் கொள்வது சம்பந்தமாக இக்கூட்டம் நடந்தது. கூட்டத்தில் நிலைமை மிகவும் கடுமையாக இருந்தது.

ராதெக், ரியாஸானவ் மற்றும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் ஷ்தேயின்பெர்க் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதை எதிர்த்தனர். லெனின் கையெழுத்திடுவதை ஆதரித்தார். இக்கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. கூட்டுக் கூட்டத்திற்குப் பின்னர் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் போல்ஷிவிக்குகள் பிரிவின் கூட்டம் நடைபெற்றது. நடைபெறவிருக்கும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக்

கூட்டத்தில் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இஷ்டப்படி வாக்களிக்கும் உரிமை கோரினர். ஆனல் போல்ஷிவிக்கு களின் பிரிவு இந்தக் கோரிக்கையை நிராகரித்து வரும் மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் உடன்படிக்கை யில் கையொப்பமிடுவதை ஆதரிப்பதென்று பெரும் பான்மை வோட்டுக்களால் முடிவு எடுத்தது.

ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கையில் கை யொப்பம் இடுவது சம்பந்தமான அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி கூட்டம் பிப்ரவரி 24ல் காலை 3 மணிக்கு ஸ்வெர்த்லோவ் தலைமையில் ஆரம்பித்தது. புதிய ஜெர்மன் சமாதான நிபந்தனைகள் பற்றி லெனின் அறிக்கை செய்தார். மென்ஷிவிக்குகள், வலதுசாரி இடது சாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் அராஜகவாதி கள் உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதை எதிர்த் தனர். போல்ஷிவிக்குகள் முன்வைத்த, ஜெர்மன் சமா தான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது சம்பந்தமான தீர் மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட் டது. ஆதரவாக 116 பேரும் எதிராக 85 பேரும் வோட்டு அளிக்க 26 பேர் வோட்டளிக்கவில்லை. ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளில்'' பெரும் பகுதி வோட்டளிக்கவில்லை, மண்டபத்தை விட்டு வெளியேறினர்.—192

58 ப்ஸ்கோவை எதிர்த்த ஜெர்மன் எதிர்த்தாக்குதல் காரண மாக அரசாங்கத்தையும் அரசாங்க நிறுவனங்களையும் பெத்ரோகிராதில் இருந்து மாஸ்கோவுக்கு அப்புறப் படுத்தப்படுவது சம்பந்தமான பிரச்சினை 1918, பிப்ரவரி 26ந் தேதி மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. லெனினது நகல் முடிவு சில சிறிய திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாஸ்கோவை சோவியத் குடியரசின் தலைநகரமாக்குவது பற்றிய இறுதி முடிவு 1918, மார்ச்சில் சோவியத்துகளின் விசேஷ நான்காம் அகில ருஷ்யக் காங்கிரசில் எடுக்கப்பட்டது. —197

59 இது குறிப்பிடுவது ரு. ச. ஜ. தொ. க. (போ.)யின் மாஸ்கோ பிராந்தியப் பியூரோ நிறைவேற்றிய தீர்மான மாகும். பிரெஸ்ட் சமாதானத்திற்காகக் கட்சி போராடிக் கொண்டிருந்த தருணத்தில் இதில் தற்காலிகமாக ''இடது சாரிக் கம்யூனிஸ்டுகள்'' பேரளவில் இருந்தனர். 1918 வசந்தத்திற்குள் இந்தப் பியூரோ உண்மையில் ஒரு கட்சி -விரோத குறுங்கோஷ்டி மையமாகி விட்டது. லெனின் குறிப்பிடும் சோவியத்-விரோதப் பிளவுறுத்தல் தீர்

மானம் கட்சியின் மத்தியக் கமிட்டி புதிய ஜெர்மன் சமாதான நிபந்தனைகளை ஒத்துக் கொண்ட பிறகு பியூரோ நடத்திய சிறு அமர்வில் நிறைவேற்றப்பட்டது.—198

60 இங்கு குறிப்பிடப்படுவது 1918, ஜனவரி 21 (பிப்ரவரி3)ல் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் பல்வேறு குறுங்கோஷ்டிகளினதும் பிரதிநிதிகளின் கூட்டு மாநாட்டில் ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொள்வது பற்றிய பிரச்சினை மீது நடைபெற்ற வோட்டு சம்பந்தமானதாகும். இரண்டு ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளான'' ஒஸீன்ஸ்கி (ஒபோலென்ஸ்கி)யும் ஸ்தூக்கவும் சோஷலிஸ்டு அரசுக்கும் முதலாளித்துவ அரசுக்கும். இடையே சமாதானம் சாத்தியம் அல்ல என்பதால், எதிர்த்து வோட்டு அளித்தனர். பெரும்பான்மையான ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இருதலையான நிலை மேற்கொண்டனர்: சோஷலிஸ்டு அரசுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் இடையே சமாதானம் சாத்தியம் என்பதை ஒத்துக் கொண்டனர், ஆனால் அதே சமயம் ஜெர்மனியுடன் உடனடியாக சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதை எதிர்த்து வோட்டளித்தனர்.—203

61 **ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்)யின் ஏழாவது விசேஷக் காங்கிரஸ்** இங்கு லெனினால் குறிப்பிடப்படுகிறது. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்னான கம்யூனிஸ்டுக் கட்சியின் முதலாவது காங்கிரசான இது பெத்ரோகிராதில் 1918, மார்ச்சு 6—8ல் நடைபெற்றது. ஜெர்மனியுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கை பற்றிக் கட்சிக்குள் கடுமையான போராட்டம் நடந்து வந்ததால் இப்பிரச்சினையை இறுதியாகத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு இந்தக் காங்கிரஸ் கூட்டப்பட்டது.

முடிவு எடுப்பதில் வோட்டு அளிக்கும் உரிமையுள்ள 47 பிரதிநிதிகளும் விவாதத்தில் பங்கு பற்றும் உரிமை மட்டும் கொண்ட 59 பேரும் இந்தக் காங்கிரசில் கலந்து கொண்டனர். இவர்கள் 1,70,000க்கும் அதிகமான கட்சி உறுப்பினர்களையும் மாஸ்கோ, பெத்ரோகிராத், யூரல், வோல்கா பிராந்தியத்தின் மாபெரும் கட்சி அமைப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்தினர். காங்கிரஸ் நடைபெற்ற தருணத்தில் 3,00,000 உறுப்பினர்கள் கட்சியில் இருந்தார்கள். ஆனால் இக்காங்கிரஸ் மிகவும் விரைவில் கூட்டப்பட்டது என்னும் காரணத்தாலும் சோவியத் ருஷ்யாவில் பல மாவட்டங்களை ஜெர்மானியர் கைப்பற்றி

இருந்த காரணத்தாலும் கட்சி அமைப்புகளில் பெரும் பகுதி பிரதிநிதிகளை அனுப்ப முடியவில்லை.

காங்கிரஸ் பின்வரும் நிகழ்ச்சி நிரலை ஏற்றுக் கொண்டது: மத்தியக் கமிட்டியின் ரிபோர்ட், போர் சமாதானம் பற்றிய பிரச்சினை, வேலைத்திட்டத்தில் திருத்தம், கட்சியின் பெயர் மாற்றம், நடைமுறைப் பிரச்சினைகள், மத்தியக் கமிட்டி தேர்வு.

லெனின் காங்கிரசின் வேலைகளுக்கு வழி காட்டினார். மத்தியக் கமிட்டியின் ரிபோர்ட், வேலைத்திட்டத்தையும் கட்சியின் பெயரையும் மாற்றுதல், ஆகியவை குறித்து உரையாற்றினார். எல்லாப் பிரச்சினைகள் பற்றிய விவாதத்திலும் பங்கு பற்றினார். காங்கிரசில் அவர் *18* முறை பேசினார்.

மத்தியக் கமிட்டியின் அரசியல் ரிபோர்ட்டுக்குப் பிறகு ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' தலைவர் புஹாரின் ஓர் அறிக்கை செய்தார். அதில் அவர் ருஷ்யாவை ஜெர்மனியுடன் ஒரு போரில் சிக்கவைக்கும் மூடத்துணிச்சல் கொள்கையினை ஆதரித்துப் பேசினார். காரசாரமான விவாதம் நடைபெற்றது. *18* பிரதிநிதிகள் பேசினார்கள். லெனினது உறுதிப்பாடான வாதங்களின் செல்வாக்கின் கீழ் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளில்'' ஒரு பகுதியினர் தமது நிலையை மாற்றிக் கொண்டனர். மத்தியக் கமிட்டியின் ரிபோர்ட் ஒருமுகமாக ஏற்கப்பட்டது. போர் சமாதானம் பற்றிய விவாதம் தொடங்கியது. ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' ஒரு தீர்மானமாக முன்வைத்த ''இப்போதைய தருணம் பற்றிய ஆராய்ச்சியுரைகள்'' காங்கிரசால் நிராகரிக்கப்பட்டன. *30* பேர் ஆதரிக்க *12* பேர் எதிர்க்க *4* பேர் வோட்டளிக்காத நிலையில் பெரும்பான்மை வாக்குகளால் பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கை பற்றிய லெனினது தீர்மானம் ஏற்கப்பட்டது. (இந்தத் தொகுதி, பக்கங்கள் *260—262* பார்க்க.)

வேலைத்திட்டத்தைத் திருத்துவது பற்றியும் கட்சியின் பெயரை மாற்றுவது குறித்தும் காங்கிரஸ் விவாதித்தது. இந்தப் பிரச்சினைகள் மீது லெனின் அறிக்கை செய்து பேசினார். கட்சியின் பெயர் அதன் நோக்கங்களைப் பிரதிபலிக்க வேண்டும் என்று சுட்டினார். கட்சிக்கு ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்குகளின்) என்று பெயர் சூட்டவும் அதன் வேலைத்திட்டத்தை மாற்றவும் ஆலோசனை முன்வைத்தார். லெனினது தீர்மானமும் கட்சியின் பெயர் குறித்த அவரது யோசனையும் ஒரு முகமாக நிறைவேற்றப்பட்டன. கட்சித் திட்

டத்தை இறுதியாக தயார் செய்வதற்காக லெனின் தலைமையில் ஏழு பேர் கொண்ட ஒரு கமிஷனைக் காங்கிரஸ் தேர்ந்தெடுத்தது.

இந்தக் காங்கிரஸ் இரகசிய வோட்டு மூலம் 15 மத்தியக் கமிட்டி உறுப்பினர்களையும் 8 மாற்று உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தது. "இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளான" புஹாரின், லோமவ் (அப்போக்கவ்), உரீத்ஸ்கி மத்தியக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் மனம் விட்டு வேண்டிக் கொண்ட போதிலும் மத்தியக் கமிட்டியில் பணியாற்ற மறுத்து விட்டனர். மத்தியக் கமிட்டி பலமுறை கட்டளையிட்டபோதிலும் பல மாதங்கள் அவர்கள் எவ்வித வேலையும் செய்ய முன்வரவில்லை.

கட்சியின் ஏழாவது காங்கிரஸ் அளப்பரிய வரலாற்று முக்கியத்துவம் உடையதாகும். இது சமாதானமான ஓய்வு பெறுவதற்கான லெனினியக் கொள்கையின் பிழையற்ற தன்மையை நிரூபித்தது. கட்சியைச் சீர்குலைத்த "இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்," திரோத்ஸ்கி ஆதரவாளர்களை முறியடித்தது. சோஷலிச நிர்மாணத்தின் அடிப்படைக் கடமைகளுக்குத் தீர்வு காண்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சியிடமும் தொழிலாளி வர்க்கத்திடமும் ஒப்படைத்தது. காங்கிரசின் தீர்மானங்கள் "இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்" பிளவுறுத்தும் முயற்சிகள் தொடர்ந்து நீடித்த போதிலும் ஸ்தல கட்சி அமைப்புகளால் பரவலாக விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன.—*212*

62 கர்னிலவ் கலகம்—*1917* ஆகஸ்டில் ருஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தினரும் நிலப்பிரபுக்களும் நடத்திய ஓர் எதிர்ப்புரட்சிக் கலகம். இதற்கு ஜாராட்சி ஜெனரல் கர்னீலவ் தலைமை தாங்கினான். புரட்சிகர பெத்ரோகிராதைப் பிடித்துக் கொள்வது, போல்ஷிவிக்குகளின் கட்சியை ஒடுக்குவது, சோவியத்துகளைக் கலைப்பது, ராணுவச் சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பது, அதன் மூலம் நாட்டில் முடியாட்சியை மீண்டும் நிலைநாட்டுவது என்பதே இவர்கள் திட்டம். இக்கலகம் ஆகஸ்டு 25 (செப்டம்பர் 7)ல் ஆரம்பித்தது.

போல்ஷிவிக்குகளின் மத்தியக் கமிட்டியின் வேண்டுகோளுக்கு இணங்க பெத்ரோகிராத் தொழிலாளரும், புரட்சிகரப் படையாளிகள் கடற்படை வீரரும் கலகக்காரர்களை எதிர்த்து போராடப் பொங்கி எழுந்தனர். பெத்ரோகிராத் தொழிலாளர் உடனடி செங்காவலர் படைப் பிரிவுகளை உருவாக்கினர். பல வட்டாரங்களில்

புரட்சிகரக் கமிட்டிகள் நிறுவப்பட்டன. கர்னீலவ் படைகளின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. போல்ஷிவிக்குகளின் பிரசாரத்தால் அவற்றின் கட்டுணர்வு குலேக்கப்பட்டது. மக்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் இடைக் கால அரசாங்கம் கர்னீலவையும் அவனது கூட்டாளிகளேயும் கைது செய்து வழக்குத் தொடுக்க நேர்ந்தது —*213*

63 இங்கு குறிப்பிடப்படுவது கட்சியின் மத்தியக் கமிட்டி மற்றும் சோவியத் அரசாங்கத்தின் உறுப்பினர்களான காமெனெவ், ஸினேவியெவ், ரீக்கவ் மற்றும் சிலரின் தோல்வி மனப்பான்மை கொண்ட நிலேமையாகும். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு அவர்கள் ''ஒரு படித்தான சோஷலிஸ்டு அரசாங்கம்'' அமைக்கப்பட வேண்டும் என்ற மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கோரிக்கையை ஆதரித்தனர். (இந்தத் தொகுதி, பக்கங்கள் *42—51, 58—65* பார்க்க.)—*213*

64 ஜெர்மன் சமாதான நிபந்தனேகளே ஒப்புக் கொள்வதை எதிர்க்கும் இந்த வாதம் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளால்'' *1918*, ஜனவரி *8(21)*ல் நடைபெற்ற மத்திய கமிட்டி மற்றும் கட்சி ஊழியர் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.—*224*

65 *1918*, ஜனவரி *28* (பிப்ரவரி *10*)ல் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் ஜெர்மன் ராணுவத் தலேமையுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடந்த போது திரோத்ஸ்கி செய்த அறிக்கையை இங்கு லெனின் நினைவில் கொண்டுள்ளார்.—*228*

66 இங்கு குறிப்பிடப்படுவது மூன்ருவது அரசாங்க டூமாவின் உறுப்பினர்கள் ஜாருக்குக் கடப்பாடுடையவர்கள் என்ற பிரமாணத்தில் கட்டாயம் கையொப்பமிட வேண்டும் என்பது பற்றியதாகும். இந்தப் பிரமாணம் ஏற்கப்படாவிடில் டூமாவில் பதவி வகிக்க முடியாது என்ற காரணத்தால் இதர உறுப்பினர்களுடன் கூடவே சமூக-ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதிகளும் பிரமாணத்தில் கையொப்பம் இட்டார்கள். ஏனென்ருல் இந்த மேடை மக்களேப் போராட்டத்துக்கு ஒன்றுதிரட்டுவதற்காக அவர்களுக்குத் தேவைப்பட்டது.—*233*

67 உலகு தழுவிய அளவிலான களப் புரட்சி என்ற வாசகம் ஒபோலேன்ஸ்கி (ஒஸீன்ஸ்கி)யால் அவர் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்திற்கு எழுதிய ''போர் சமா

தானம் பிரச்சினை மீதான ஆராய்ச்சியுரைகளில்'' பயன் படுத்தப்பட்டது. இது *1918*, ஜனவரி *21* (பிப்ரவரி *3*)ல் எழுதப்பட்டு மார்ச்சு *14*ல் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு களின்'' பத்திரிகையான ''கம்யூனிஸ்ட்'', இதழ் *8*ல் வெளி யிடப்பட்டது. இந்த வாசகத்தின் பொருள் என்ன என்று விளக்குகையில் ஒபோலேன்ஸ்கி எழுதியதாவது: ''களத் தில் நடக்கும் உள்நாட்டுப் போர் என்ற முறையில் புரட்சிகரப் போர் தேசிய சேனைகள் போர்த்தந்திர நடவடிக்கைகளை நிறைவேற்றும் போதான முறையான ராணுவச் செயல்களின் தன்மையுடையதாக இருக்காது... ராணுவச் செயல்கள் கொரில்லாபோர் முறையின் தன்மை யைப் பெறும் (தடையரண் வகுத்த போர் போன்றது), வர்க்கக் கிளர்ச்சியுடன் சேர்ந்து கலக்கும்.''—*236*

68 டில்ஸீட் சமாதான உடன்படிக்கை *1807* ஜூலையில் பிரான் சுக்கும் பிரஷ்யாவுக்கும் இடையே, பிரஷ்யாவுக்கு மிகவும் கடினமான இழிவுறுத்தும் நிபந்தனைகளுடன் கையொப்ப மிடப்பட்டது. பிரஷ்யா தனது பிரதேசத்தில் பெரிய பகுதியை இழந்தது; *100* மில்லியன் பிராங்க் இழப் பீட்டுத் தண்டத் தொகை செலுத்த நேர்ந்தது. தனது சேனையை *40* ஆயிரம் ஆட்கள் அளவுக்கு மட்டுப் படுத்தவும், நெப்போலியனுக்குக் கூடுதல் ஆயுதப்படை களை வழங்கவும், இங்கிலாந்துடன் வர்த்தகத்தை நிறுத்த வும் வேண்டி வந்தது.—*237*

69 **கம்யூனிஸ்ட்** — ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' கோஷ்டி யின் ஏடாக, ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் பெத்ரோகிராத் கமிட்டி, பெத்ரோகிராத் மாவட்டக் கமிட்டி ஆகியவற்றின் சார்பாக *1918*, மார்ச்சு *5* முதல் *19* வரை வெளிவந்தது. மொத்தம் *11* இதழ்களே வெளியிடப்பட்டன. பெத்ரோகிராத் அனைத்து நகரக் கட்சி மாநாட்டுத் தீர்மானத்தின்படி *1918*, மார்ச்சு *20*ல் இது நிறுத்தப்பட்டது. ''கம்யூனிஸ்ட்'' பத்திகளில் வெளியிடப்பட்டதான பெத்ரோகிராத் கமிட்டியின் கொள் கை மிகவும் தவறானது, எவ்வகையிலும் கம்யூனிஸ்டுக் கட்சியின் பெத்ரோகிராத் அமைப்புகளின் நிலையைப் பிரதி பலிக்கவில்லை என்று மாநாடு ஒப்புக் கொண்டது. ''கம்யூ னிஸ்டுக்குப்'' பதில் ''பெத்ரோகிராத்ஸ்கயா பிராவ்தா'' (''பெத்ரோகிராத் உண்மை'') பெத்ரோகிராத் அமைப் பின் ஏடாக இருக்கும் எனவும் இந்த மாநாடு சாற்றி யது.—*238*

70 புத்திலவ் தொழிற்சாலையில் வேலை செய்த தொழிலாளர்—பெத்ரோகிராதில் உள்ள ஒரு பெரிய கனரகத் தொழில்துறை ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்.—239

71 இங்கு லெனின் குறிப்பிடுவது ஜெர்மன் எதிர்த்தாக்குதல் தொடங்கிய பிப்ரவரி 18க்கும், பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் சோவியத் பிரதிநிதிக் குழு வந்து சேர்ந்த 1918, பிப்ரவரி 28க்கும் இடையிலான கால கட்டமே என்பது தெளிவு. ஜெர்மன் எதிர்த்தாக்குதல் சமாதான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட மார்ச்சு 3ந் தேதி வரை நீடித்தது.—240

72 இங்கு குறிப்பிடப்படுவது 1918, பிப்ரவரி 24ந் தேதி ரு. ச. ஜ. தொ. கட்சியின் மாஸ்கோ பிராந்தியப் பியூரோ நிறைவேற்றிய தீர்மானம் ஆகும். இந்தக் கட்சி-விரோத தஸ்தவேஜு பற்றிய கண்டன விமரிசனத்தை லெனினது ''விநோதமானதும் விபரீதமானதும்'' என்ற கட்டுரையில் பார்க்கவும். (இந்தத் தொகுதி, பக்கங்கள் 198—211 பார்க்க.)—243

73 லெனின் இங்கு குறிப்பிடுவது 1918, பிப்ரவரி 27ந் தேதியன்று அவர் பிரெஞ்சு ராணுவ அதிகாரி கோம்தி டிலுபெர்சாக் இடம் நடத்திய பேச்சுப் பற்றி ஆகும்.—249

74 இங்கு குறிப்பிடப்படுவது இராணுவ விவகார மக்கள் கமிசாரகத்தின் அறிக்கையாகும். இது சோவியத் குடியரசில் இருக்கும் எல்லாத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சுயவிருப்பமாக ராணுவப் பயிற்சி மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. ஜெர்மனியுடனான சமாதான உடன்படிக்கை நிபந்தனைப்படி ருஷ்ய சைன்யம் முழுதும் கலைக்கப்பட வேண்டி இருந்த காரணத்தால் ராணுவப் பயிற்சி சுயவிருப்பப்படியே இருக்க முடியும். இந்த அறிக்கை 1918, மார்ச்சு 5ந் தேதி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் ''இஸ்வேஸ்தியாவில்'' வெளியிடப்பட்டது.—250

75 கானோஸா—வடக்கு இத்தாலியில் இருந்த கோட்டை மாளிகை. 1077ல் ஜெர்மன் சக்கரவர்த்தியான நாலாம் ஹென்ரிஹ் ரோமன் போப்பு ஏழாவது கிரிகோரியால் தோற்கடிக்கப்பட்டுத் தன்னைத் தானே பிரஷ்ட தண்டனையில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகவும் சக்கரவர்த்தி என்ற முறையில் தனது ஆட்சி அதிகாரத்தை

மீண்டும் பெறவும் வேண்டி இந்தக் கோட்டை மாளிகையின் வாயிலில் கழிவிரக்க உடையில் மூன்று நாட்கள் நின்றூர். எனவே ''கானேஸாவுக்குப் போவது'' என்ற தொடர், கழிவிரக்கம் காட்டல், எதிரியின் முன்னுல் மானமிழத்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. —*251*

76 *1917*, டிசம்பர் *2(15)*ல் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கில் சோவியத் அரசாங்கத்துக்கும் நான்கு தரப்பினர் கூட்டணி (ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி) யின் வல்லரசுகளுக்கும் இடையே ஏற்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை நிபந்தனைகளின்படி இரு தரப்பும் ஏழு நாள் முன்னறிவிப்புச் செய்து மீண்டும் போர்ச் செயல்களில் இறங்கலாம். ஜெர்மன் ராணுவத் தலைமை இந்த நிபந்தனையை மீறி, பிப்ரவரி *18*ந் தேதி போர்நிறுத்த உடன்படிக்கையை விலக்கிய இரண்டே நாட்களுக்குப் பின் போர்முனை முழுவதிலும் எதிர்த்தாக்குதல் தொடுத்தது.—*253*

77 *1918*, மார்ச்சு *3*ல் கையொப்பமிடப்பட்ட பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையின் ஆருவது ஷரத்துப்படி, ருஷ்யா எதிர்ப்புரட்சி உக்ரேனிய மத்திய ராடாவுடன் சமாதானம் செய்து கொண்டே தீர வேண்டும். சோவியத் அரசாங்கத்துக்கும் ராடாவுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் அப்போது நடைபெறவில்லை. *1918*, ஏப்ரல் *29*ந் தேதி ஜெர்மன் பிரதேசப்பற்றுளர்கள் காடேட்டு-அக்டோபர்வாதிகளான முதலாளி வர்க்கத்தினர் உதவியுடன் உக்ரேனில் ஒரு திடீர் அரசு மாற்றத்தைக் கொண்டு வந்தனர். ராடா வீழ்த்தப்பட்டது. அதன் இடத்தில் ஹெட்மன் ஸ்கரபாத்ஸ்கியின் சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டது. சோவியத் அரசாங்கத்துக்கும் ஸ்கரபாத்ஸ்கி அரசாங்கத்துக்கும் இடையே மே *23*ல் பேச்சுவார்த்தைகள் தொடங்கின; போர்நிறுத்த உடன்படிக்கை *1918*, ஜூன் *14*ல் கையொப்பமிடப்பட்டது.—*254*

78 மார்ச்சு *12*—ஜெர்மனியுடனை சமாதான உடன்படிக்கையினை உறுதிப்படுத்துவது குறித்த பிரச்சினையில் முடிவு எடுப்பதற்காக சோவியத்துகளின் விசேஷ அகில ருஷ்ய நாலாவது காங்கிரஸ் கூட்டப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இடைக்காலத் தேதி. இந்தக் காங்கிரஸ் *1918*, மார்ச்சு *14—16* தேதிகளில் நடைபெற்றது.—*255*

[79] தியேலோ நரோதா (''மக்கள் பணி'') — சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் நாளேடு. *1917* மார்ச்சிலிருந்து *1918* ஜூலை வரை பெத்ரோகிராதில் வெளிவந்தது. இப்பத்திரிகையின் பெயர் பல தடவை மாற்றப்பட்டது. *1918* அக்டோபரில் சமாராவில் இப்பத்திரிகையின் வெளியீடு புதுப்பிக்கப்பட்டது (*4* இதழ்கள் பிரசுரமாயின). *1919* மார்ச்சில் மாஸ்கோவில் வெளிவந்தது (*10* இதழ்கள் பிரசுரமாயின). எதிர்ப்புரட்சி போக்கு காரணமாக இப்பத்திரிகை மூடப்பட்டது.

நோவயா ஷீஸ்ன் ஆதரவாளர்கள் — குறிப்பு *21* பார்க்க.—*259*

[80] போர், சமாதானம் என்ற பிரச்சினை மீதான தீர்மானம் கட்சிக் காங்கிரசின் மார்ச்சு *8*ந் தேதிய காலை அமர்வில் ஏற்கப்பட்டது. காங்கிரசால் ஒப்புக் கொள்ளப்பட்ட லெனின் யோசனைப்படி இத்தீர்மானம் வெளியிடப்படவில்லை.—*260*

[81] *1875*, மார்ச்சு *18—28*ல் எங்கெல்ஸ் பெபெலுக்கு எழுதிய கடிதம் பார்க்க.—*264*

[82] இங்கு குறிப்பிடப்படுவது நி. லெனின் எழுதிய முகவுரையுடன், அவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த ''கட்சி வேலைத்திட்டத்தைத் திருத்துவதற்கான விஷயாதாரங்கள்'' (பெத்ரோகிராத், ''பிரிபோய்'' பதிப்பகம், *1917*) மற்றும் ''கட்சி வேலைத்திட்டத்தைத் திருத்துவதற்கான விஷயாதாரங்கள். மில்யூத்தின், சகோல்னிகவ், லோமவ் மற்றும் ஸ்மிர்னேவ் கட்டுரைகளின் திரட்டு'' (ரு.ச.ஜ. தொ. கட்சியின் மாஸ்கோ தொழில் மாவட்டப் பிராந்தியப் பியூரோவின் வெளியீடு, *1917*) ஆகும்.—*265*

[83] புரோஸ்வெஷேனியே (''அறிவொளி'') — *1911-14*லிலும், *1917*லும் வெளியிடப்பட்ட போல்ஷிவிக் தத்துவார்த்த சஞ்சிகை.

ஸ்பார்ட்டக் (''ஸ்பார்ட்டகஸ்'') — ரு. ச. ஜ. தொ. கட்சியின் மாஸ்கோ வட்டாரக் கமிட்டியின் தத்துவார்த்த சஞ்சிகை. *1918* மே முதல் அக்டோபர் வரை மாஸ்கோவில் வெளியிடப்பட்டது.—*266*

[84] எங்கெல்சால் *1887*, டிசம்பர் *15*ல் எழுதப்பட்ட '''*1806—1807* ஜெர்மன் தலைமை தேசபக்தர்கள் நினைவாக' பொர்க்ஹைம் சிறுவெளியீட்டுக்கு முகவுரை'' என்

பதன் உள்ளடக்கத்தை லெனின் விரிவிளக்கம் செய்கிறார்.—267

85 ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் ஹெம்னிட்ஸ் காங்கிரஸ் *1912,* செப்டம்பர் *15—21* தேதிகளில் நடைபெற்றது. இது ''ஏகாதிபத்தியம் பற்றி'' ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இது ஏகாதிபத்திய அரசுகளின் கொள்கையை ''கொள்ளை மற்றும் ஆக்கிரமிப்பின் வெட்கங்கெட்ட கொள்கை'' என்று சித்திரித்தது. ''ஏகாதிபத்தியத்தை வீழ்த்தும் வரை அதை எதிர்த்து இருமடங்கு ஊக்கத்துடன் போராடுமாறு'' தொழிலாளி வர்க்கத்தைக் கேட்டுக் கொண்டது.

1912, நவம்பர் *24—25* தேதிகளில் பாஸெல் நகரில் நடைபெற்ற அவசர சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரஸ் ''பாஸெல் அறிக்கையை''—போர் பற்றிய அறிக்கையை—ஏற்றுக்கொண்டது. ஏகாதிபத்திய உலகப் போரின் அபாயம் மூண்டு வருவது குறித்து இவ்வறிக்கை மக்களை எச்சரிக்கை செய்தது. அந்தப் போரின் கொள்ளைக் கார நோக்கத்தை அம்பலப்படுத்தியது. சமாதானத்திற்காகப் போராடும்படியும் ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் வலிமைக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாட்டைச்'' செயல்பட வைக்கும்படியும் அனைத்து நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தையும் கேட்டுக் கொண்டது. ஏகாதிபத்திய போர் மூளுமாயின் அதனால் ஏற்படும் பொருளாதார அரசியல் நெருக்கடியை சோஷலிஸ்டுகள் சாதகமாகப் பயன்படுத்தி ஒரு சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் போராட வேண்டும் என்று *1907*ல் ஸ்டுட்கார்ட் காங்கிரசில் லெனின் உருவாக்கிய தீர்மானத்தின் பகுதியும் இந்த அறிக்கையில் உட்படும்.—*272*

86 லெனின் பின்லாந்தின் புரட்சிகர அரசாங்கத்தை—மக்கள் பிரதிநிதிகளின் கவுன்சிலை—மனதிற் கொண்டிருந்தார். இது *1918,* ஜனவரி *29*ல் ஸ்வின்ஹுவுட் முதலாளித்துவ அரசாங்கம் வீழ்த்தப்பட்ட பிறகு நிறுவப்பட்டது. மக்கள் பிரதிநிதிகள் கவுன்சிலுக்கும் கூடுதலாக தொழிலாளர் அமைப்புகளின் பிரதானக் கவுன்சிலும் நிறுவப்பட்டது. இது அரசாங்கத்தின் ஆக உயர் உறுப்பாகும். அரசு அதிகாரம் ஸ்தாபனரீதியாகத் திரண்டதொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ''தொழிலாளர் அமைப்புகளின் செய்முகளை'' அடிப்படையாக்கி இருந்தது.—*274*

87 *1918*ஆம் ஆண்டுத் துவக்கத்தில் அயல்துறை விவகார

மக்கள் கமிசாரகத்தின் சர்வதேசப் புரட்சிகரப் பிரசாரப் பியூரோ ''நிலம் பற்றிய அரசாணையை'' அன்னிய மொழிகளில் வெளியிடத் தொடங்கியது. *1918* பிப்ரவரியில் இந்த அரசாணை ஆங்கில மொழியில் பெத்ரோகிராதில் *Decrees Issued by the Revolutionary Peoples Government* (''புரட்சிகர மக்கள் அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள்'') என்ற நூலில், தொகுதி 1ல் வெளிவந்தது.—*283*

88 மத்தியக் கமிட்டி தேர்தலின் போது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' அதில் உறுப்பினர்களாக இருக்க மறுத்தனர்.

மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாக இருக்க ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' மறுத்ததைக் கண்டித்து லெனின் முன்வைத்த தீர்மானம் காங்கிரசில் பெரும்பான்மையால் ஏற்கப்பட்டது. ஆனால் அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடப்பர் என்று கருதி காங்கிரஸ் அவர்களது பிரதிநிதிகளை (புஹாரின், லோமவ், உரீத்ஸ்கி) மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களாக தேர்ந்தெடுத்தது. இருப்பினும் இந்த மூவரும் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாக இருக்க இயலாது என்று மறுத்தனர். காங்கிரஸ் இந்த மறுப்பை ஒப்புக் கொள்ளவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுக்குப்'' பதில் புதிய மத்தியக் கமிட்டி உறுப்பினர் தேர்வை மத்தியக் கமிட்டிக் கூட்டம் வரை ஒத்திப் போட்டது.

கட்சிக் காங்கிரசுக்கும், ஜெர்மனியுடனான சமாதான உடன்படிக்கையை உறுதிப்படுத்திய சோவியத்துகளின் நாலாவது விசேஷ அகில ருஷ்யக் காங்கிரசுக்கும் பிறகு மத்தியக் கமிட்டியின் தெட்டத் தெளிவான உத்தரவுகள் இருந்தபோதிலும் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' பல மாதங்கள் வேலை தொடங்கவில்லை.—*286*

பெயர்க் குறிப்பகராதி

அந்தோனவ்-அவ்சேயென்கோ [Antonov-Ovseenko], **விளதீமிர் அலெக்சாந்தரவிச்** *(1883—1938)* — அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியில் தீவிரமான பங்கு வகித்தவர். பிரபல சோவியத் இராணுவ நிபுணர். சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் சேனை, கடற்படை விவகாரக் கமிட்டி உறுப்பினராக மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் பதவி வகித்தார்.—*35*

அப்ரமோவிச் (ரைன்) [Abramovich (Rein)], **ரஃப்பயீல் அப்ராமவிச்** *(1880—1963)* — "புந்தின்" தலைவர்களில் ஒருவர். *1917*ல் மென்ஷிவிக்கு-சர்வதேசியவாதிகளின் வலது சாரிப் பிரிவில் சேர்ந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போராடினார். மென்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் உள்ளடக்கிய கூட்டு அரசாங்கம் நிறுவப்படுவதை ஆதரித்தார். பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதை எதிர்த்தார்.—*63*

அலெக்சேயெவ் [Alexeyev], **மிஹயீல் வசிலியெவிச்** *(1857—1918)*—ஜாராட்சி ஜெனரல், முடியரசுவாதி, எதிர்ப் புரட்சியாளர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பிரதம தளபதியானார். பிறகு சில காலம் பிரதம தளபதி கேரென்ஸ்கியின் தலைமையகத்தின் தலைவராக இருந்தார். ருஷ்யாவில் உள்நாட்டுப் போர் நடந்த போது வெண்படையினர் "தொண்டர் சேனையின்" தலைவராக வடக்கு காக்கஸசில் இருந்தார். —*191*

அவிலவ் (கிளேபவ்) [Avilov (Glebov)], **நி.** *(1887—1942)*—*1904* முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் இடம் பெற்று தபால், தந்தித்

துறை மக்கள் கமிசாராக இருந்தார். *1918* முதல் இராணுவ, அரசியல், தொழிற்சங்க, அரசாங்க மற்றும் கட்சித் துறைகளில் முக்கியமான பதவிகள் வகித்தார்.—*36*

அவ்க்சேன்தியெவ் [Avksentyev], **நிக்கலாய் திமீத்ரியேவிச்** *(1878—1943)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர், அக்கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் விவசாயிகள் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்ய சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி தலைவர். கேரென்ஸ்கி அரசாங்கத்தில் உள்துறை விவகார அமைச்சராக இருந்தார். பின்னால், ருஷ்ய குடியரசின் எதிர்ப் புரட்சி ''இடைக்காலக் கவுன்சிலின்'' (பூர்வாங்க நாடாளு மன்றத்தின்) தலைவராக இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் எதிர்ப்புரட்சிக் கலகங்களுக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர்.—*27, 124, 214*

உரீத்ஸ்கி [Uritsky], **மொயிசேய் சலமோனவிச்** *(1873—1918)*—ருஷ்யாவின் புரட்சி இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு பற்றியவர். பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கைப் பேச்சுவார்த்தைகளின் போது ஓர் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு''. ரு.க.க. (போ.)இன் ஏழாவது காங்கிரசில் கட்சியின் மத்தியக் கமிட்டியின் மாற்று உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். *1918*ல் எதிர்ப்புரட்சியையும் சீர்குலைவையும் எதிர்த்துப் போராடுவதற்கான பெத்ரோகிராத் விசேஷக் கமிஷன் தலைவராக நியமனம் செய்யப்பட்டார்.—*251, 257, 258*

எங்கெல்ஸ் [Engels], **பிரெடெரிக்** *(1820—1895)*—*176, 178, 264, 267*

ஃபியொஃபிலாக்தவ் [Feofilaktov], **அ.எ.**—இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர், *1917* நவம்பரில் நடைபெற்ற விவசாயிகள் பிரதிநிதிகள் சோவியத்துகளின் விசேஷக் காங்கிரசின் பிரதிநிதி. இக்காங்கிரசில் விவசாயத்துறை மக்கள் கமிசாரகத்தின் தலைவர்கள் அடங்கிய குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.—*74*

கம்கோவ் (காத்ஸ்) [Kamkov (Kats)], **ப.தி.** *(1885—1938)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதை எதிர்த்தார். *1918* ஜூலையில் மாஸ்

கோவில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கலகத்துக்கு ஏற்பாடு செய்தவரில் ஒருவர்.—*59*

கரேலின் [Karelin], **விளதிமிர் அலெக்சாந்தரவிச்** *(1891—1938)*—இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர்; அக்கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் *1918* ஜூலையில் நடத்திய கலகத்துக்குத் தலைமை தாங்கியவர்களில் ஒருவர்.—*59*

கர்னீலவ் [Kornilov], **லாவ்ர் கியோர்கியெவிச்** *(1870—1918)*—ஜாரிஸ்டு ஜெனரல், முடியாட்சிவாதி. *1917* ஜூலை—ஆகஸ்டு மாதங்களில் ருஷ்யப் படைகள் எல்லாவற்றின் தலைவர். *1917* ஆகஸ்டில், எதிர்ப்புரட்சிக் கலகத்திற்குத் தலைமை தாங்கினர். அக்கலகம் முறியடிக்கப்பட்ட பின் கைது செய்யப்பட்டார். பிற்பாடு தோன் ஆற்றுப் பிரதேசத்துக்கு ஓடி, ''தொண்டர் சேனை'' என்ற வெண்படை ஒன்றை நிறுவி அதன் சேனுதிபதியானர்.—*13, 41, 43, 52, 54, 63, 157, 191, 213, 226, 233*

கலேதின் [Kaledin], **அலெக்சேய் மக்சிமவிச்** *(1861—1918)*—ஜாராட்சி ஜெனரல், தோன் கசாக்குகள் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு தோன் பிரதேசத்தில் கசாக்குகள் எதிர்ப்புரட்சித் தலைவருள் ஒருவர். வெண்படையினர் ''தொண்டர் சேனையை'' உருவாக்குவதில் பங்கு பற்றினர். கசாக்குகள் கலகத்துக்குத் தலைமை தாங்கினர்.—*13, 43, 84, 87, 150, 161, 191, 218, 219*

காமெனெவ் (ரோஸன்ஃபெல்ட்) [Kamenev], **லெவ் பரீசவிச்** *(1883—1936)*—*1901* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டுப் புரட்சியை நோக்கமாய்க் கொண்ட லெனினியக் கட்சிக் கொள்கையை எதிர்த்தார். காமெனெவ் தமது சொந்தப் பெயரிலும், ஸினேவியெவின் பெயரிலும் அரைமென்ஷிவிக் செய்தித்தாளான ''நோவயா ஷீஸ்ன்'' (''புதிய வாழ்வு'')இல் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சி பற்றிய மத்தியக் கமிட்டியின் தீர்மானத்தை ஏற்க மறுப்பதாகச் சாற்றும் அறிவிப்பு கட்சியின் இரகசிய முடிவை வெளிப்படுத்திய செயலும் புரட்சிக்குத் துரோகம் விளைக்கும் செயலுமாகும். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு கட்சியில் முக்கிய

பதவிகள் வகித்தார். *1925*ல் ''புதிய எதிர்ப்பணி யின்'' அமைப்பாளரில் ஒருவர். *1926*ல் திரோத்ஸ்கி-ஸினேவியெவ் கட்சி-விரோதக் கூட்டின் தலைவர்களில் ஒருவர். கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காக *1927*ல் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார். பிறகு இருமுறை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இறுதியில் மீண்டும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். *—42, 60, 61*

காவுத்ஸ்கி [Kautsky], **கார்ல்** *(1854—1938)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். ஆரம்பத்தில் மார்க்சியவாதி, பின்னர் மார்க்சியத்தை விட்டு துறந்த ஓடுகாலி. தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்தின் மிகவும் ஆபத்தான போக்குகளில் ஒன்றான மையவாதத்தின் (காவுத்ஸ்கி வாதத்தின்) சித்தாந்தவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், போல்ஷிவிக் கட்சி, சோவியத் அரசு ஆகியவற்றுக்கு எதிராகப் பகிரங்கமாக முன்வந்தார். *—74, 145*

கிரஸ்னேவ் [Krasnov], **பியோத்தர் நிக்கலாயெவிச்** *(1869—1947)*—ஜாரிஸ்டு ஜெனரல். *1917* ஆகஸ்டில் நடந்த கர்னீலவ் கலகத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். *1917* அக்டோபர் இறுதியில் சோவியத்-எதிர்ப்பு கலகத்தின் போது கேரென்ஸ்கியால் பெத்ரோகிராதுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கசாக்குப் படைப் பிரிவின் தளபதியாக இருந்தார். *—215*

கேரென்ஸ்கி [Kerensky], **அலெக்சாந்தர் ஃபியோதரவிச்** *(1881—1970)* — சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நீதி மற்றும் இராணுவ, கடற்படை அமைச்சராகவும் பிற்பாடு அமைச்சர்-அதிபராகவும் தலைமைத் தளபதியாகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப்பின் சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டார்; *1918*ல் வெளிநாடு போய்விட்டார். *—13, 40, 48, 52, 63, 81, 124, 157, 160, 163, 191, 194, 214, 219, 226, 227, 233*

கோகல்]Gogol], **நிக்கலாய் வசிலியெவிச்** *(1809—1852)*— மாபெரும் ருஷ்ய எழுத்தாளர், ருஷ்ய இலக்கியத்தில்

விமர்சன எதார்த்தவாதத்தைத் தோற்றுவித்தவருள் ஒருவர்.—*105*

க்ரிலென்கோ [Krylenko], நிக்கலாய் வசிலிபெவிச் *(1885—1938)*—பிரபல சோவியத் அரசறிஞர், *1904* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியில் தீவிரப் பங்கு வகித்தார். சோவியத்துகளின் இரண்டாம் அகில ருஷ்யக் காங்கிரசில் மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் சேனை, கடற்படை விவகாரக் கமிட்டி உறுப்பினராகப் பொறுப்பேற்றார். பிறகு தலைமைத் தளபதியானார். *1918* முதல் சோவியத் நீதித் துறை அமைப்புகளில் பணியாற்றினார்.—*35, 131 144, 250*

சகோல்னிகவ் [Sokolnikov], கிரிகோரி யாகொவ்லெவிச் *(1888—1939)*—*1905* முதல் போல்ஷிவிக். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு ரு. ச. ஜ. தொ.க. (போ.)இன் மாஸ்கோ கமிட்டியின், மாஸ்கோ பிராந்தியப் பியூரோவின், ''பிராவ்தா'' ஆசிரியர் குழுவின் உறுப்பினராக இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு கட்சி மற்றும் அரசாங்கப் பதவிகளை வகித்தார். கட்சியின் லெனினியக் கொள்கையைப் பலமுறை எதிர்த்தார். *1936*ல் கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காக கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—*268*

சாவின்கவ் [Savinkov], பரீஸ் விக்தரவிச் *(1879—1925)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சித் தலைவர்களில் ஒருவர். *1917* முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உதவி இராணுவ அமைச்சர், பிறகு பெத்ரோகிராதின் இராணுவ ஜெனரல்-கவர்னர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சிக் கலகங்களை ஏற்பாடு செய்தார், சோவியத் குடியரசுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டுக்கு உதவி புரிந்தார். வெள்ளை வெளியேறியானார்.—*40, 65*

செர்னேவ் [Chernov], விக்தர் மிஹைலவிச் *(1876—1952)*—ருஷ்யாவில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். முதலாவது உலகப் போரின் போது இடதுசாரி என்று உரிமை கொண்டாடிய போதிலும் உண்மையில் ஒரு சமூக-தேசியவெறி நிலையே மேற்கொண்டார். *1917* மே—ஆகஸ்டில் முதலா

ளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் விவசாயத்துறை அமைச்சராக இருந்தார். நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக் கொண்ட விவசாயிகள் மீது கொடிய அடக்குமுறையை ஏவி விட்டவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சி-விரோத கலகங்களுக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர் —*124, 136, 166, 177*

ச்ஹெயித்ஸே [Chkheidze], **நிக்கலாய் செமியோனவிச்** *(1864—1926)*—மென்ஷிவிக் தலைவருள் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது அரசாங்க டூமாவின் இடைக்காலக் கமிட்டி உறுப்பினர், பாதுகாப்புவாதி. தொழிலாளர்கள் படையாளர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் தலைவர், முதல் மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைவர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தைத் தீவிரமாக ஆதரித்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு ஜார்ஜியா அரசியல் நிர்ணய சபைத்—எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கத்தின்—தலைவர்.—*167*

டான் (கூர்விச்) [Dan (Gurvich)], **ஃபியோதர் இலீச்** *(1871—1947)* — மென்ஷிவிக்குகளின் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர், மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினர். இடைக்கால முதலாளித்துவ அரசாங்கத்தை ஆதரித்தார்.—*27, 140*

திபென்கோ [Dybenko], **பாவெல் எஃபிமவிச்** *(1889—1938)* —சோவியத் ராணுவப் பிரமுகர், அரசியல்வாதி. *1912* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பால்டிக் கடற்படையின் மத்தியக் கமிட்டியின் தலைவராக இருந்தார். *1917* அக்டோபரில் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சிக்கு பால்டிக் கடற்படையை ஆயத்தம் செய்வதில் தீவிரப் பங்கு வகித்தார். சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் சேனை, கடற்படை விவகாரக் கமிட்டி உறுப்பினர் பதவி ஏற்றார். உள்நாட்டுப் போர் முடிவுற்ற பிறகு செஞ்சேனையில் முக்கிய பதவிகள் வகித்தார்.—*35*

திரோத்ஸ்கி (பிரான்ஷ்டைன்) [Trotsky (Bronstein)], **லெவ் தவீதவிச்** *(1879—1940)*—ருஷ்யாவின் சமூக-ஜனநாயக

வாதி, மென்ஷிவிக். 1905-07 புரட்சியின் தோல்விக்குப் பிறகு கலைப்புவாதி ஆனர். போர், சமாதானம் மற்றும் புரட்சி ஆகிய பிரச்சினைகளில் லெனினையும் போல்ஷிவிக்கு களையும் எதிர்த்தார். முதல் உலகப் போரின் போது மையவாதி நிலை மேற்கொண்டார். 1917ல் அவர் நாடு கடந்த வாழ்வு முடிந்து பிப்ரவரி முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சிக்குப் பிறகு ருஷ்யாவுக்குத் திரும்பிய பின் போல்ஷிவிக் கட்சியில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனல் அவர் போல்ஷிவிசத்தை ஒப்புக்கொள்ளவில்லை. லெனினியத்தையும் கட்சிக் கொள் கையையும் எதிர்த்து மறைமுகமாயும் பகிரங்கமாயும் போராட்டம் நடத்தினர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு கட்சி யின் பொதுக்கொள்கையையும், சோவியத் ஒன்றியத் தில் சோஷலிசம் கட்டப்படுவதையும் தொடர்ந்து எதிர்த்த போதிலும் முக்கியமான பல பதவிகளை வகித்தார். *1927*ல் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். *1929*ல் சோவியத் ஆட்சி-விரோத நடவடிக்கைகளுக்காக நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். *1932*ல் அவரது சோவியத் குடியுரிமையை இழந்தார்.—*35, 140, 146, 253, 255, 257*

தெயொடரோவிச் [Teodorovich], இவான் அதோல்ஃபவிச் *(1875—1940)*—முழுநேரப் புரட்சியாளர், போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியைத் தொடர்ந்து மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் உணவுத்துறை மக்கள் கமிசாராகப் பணியாற்றினர்.—*36*

த்ஸெரெத்தேலி [Tsereteli], இராக்லி கியோர்கியெவிச் *(1882—1959)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்; சோவியத்துகளின் முதலாவது மத்திய நிர் வாகக் கமிட்டி உறுப்பினர். *1917* மேயில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரானர். முதலில் தபால், தந்தித்துறை அமைச்சராகவும் பிறகு உள் துறை விவகார அமைச்சராயும் இருந்தார். போல்ஷி விக்குகளுக்கு எதிரான கொடிய அடக்குமுறையைத் தூண்டி யோரில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்பு ஜார்ஜியாவில் மென்ஷிவிக்குகளின் எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—*167, 177*

நகின் [Nogin], **விக்தர் பாவ்லவிச்** *(1878—1924)*—முழுநேரப் புரட்சியாளர், போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் வாணிகம், தொழில்துறை விவகார மக்கள் கமிசாராகப் பதவி ஏற்ருர். 1917 நவம்பரில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் பங்கு பற்றும் ஒரு கூட்டு அரசாங்கம் நிறுவப்படுவதை ஆதரித்தார். கட்சிக் கொள்கையோடான தமது வேறுபாட்டை வெளிப் படுத்தி மத்தியக் கமிட்டியில் இருந்தும் அரசாங்கத்தில் இருந்தும் விலகிக் கொண்டார். பின்னுல் தமது தவறுகளை ஒப்புக் கொண்டு பொறுப்பான அரசாங்க மற்றும் நிர்வாகப் பதவிகளை வகித்தார்.—*35, 60*

நிக்கலாய் இரண்டாவது (ரமானவ்) [Nicholas II (Romanov)] *(1868—1918)*—ருஷ்யாவின் கடைசி பேரரசர். *1894* முதல் *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வரை அரசாண்டார்.—*194, 230*

நெப்போலியன் முதலாவது (போனப்பார்ட்) [Napoleon I (Bonaparte)] *(1769—1821)* — பிரான்சின் பேரரசர் *(1804-14 மற்றும் 1815)*.—*207, 210, 242*

பத்வோய்ஸ்கி [Podvoisky], **நிக்கலாய் இலீச்** *(1880—1948)* —கட்சி மற்றும் இராணுவத்தின் முக்கியப் பிரமுகர். *1901* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். *1917* அக்டோபர் ஆயுதப் புரட்சிக்கான தயாரிப்பு கட்டத்தின் போதும், புரட்சி எழுச்சியின் போதும் பெத்ரோகிராத் புரட்சிகர-ராணுவக் கமிட்டியின் தலைவர். மாரிக்கால மாளிகையைத் தாக்கிப் போரிட்ட தலைவருள் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சேனை, கடற்படை விவகாரக் கமிட்டி உறுப்பினர். பின்னுல் பொறுப்பான இராணுவ மற்றும் கட்சிப் பதவிகள் வகித்தார்.—*250*

புரிஷ்கேவிச் [Purishkevich], **விளதீமிர் மித்ரஃபானவிச்** *(1870—1920)*—பெரிய நிலவுடைமையாளர், கறுப்பு நூற்றுவர் அமைப்பில் உறுப்பினர். டூமாவில் நிகழ்த்திய யூத-விரோத இனசங்கார உரைகளால் இழிபுகழ் பெற்றவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போராடினுர்.—*63*

புஹாரின் [Bukharin], **நிக்கலாய் இவானவிச்** *(1888—1938)* —ருஷ்யப் பொதுத்துறை எழுத்தாளர். பொருளியலாளர்.

*1906*லிருந்து ரு. ச. ஜ. தொ. கட்சியின் உறுப்பினர். அரசு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், தேசங்களின் சுயநிர்ணய உரிமை ஆகிய பிரச்சினைகளிலும் பிற பிரச்சினைகளிலும் மார்க்சியத்திற்கு எதிரான நிலையில் நின்றார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு முக்கியமான பதவிகள் வகித்தார். *1918*ல் ஜெர்மனியுடனான பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கை குறித்து விவாதம் நடைபெற்ற போது, ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளது'' கட்சி எதிர்ப்புக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கினார். *1928* முதல் கட்சியில் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளின் பிரிவுக்குத் தலைமை தாங்கினார். *1937*ல் கட்சிக்குப் பகைமையான நடவடிக்கைகளுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*248, 250, 254, 258, 259, 268*

பூப்னவ் [Bubnov], **அந்திரேய் செர்கேயெவிச்** *(1883—1940)*—பிரபல அரசியல்வாதி, கட்சிப் பிரமுகர். *1903* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். *1918* முதல் கட்சி, அரசாங்க, இராணுவத் துறைகளில் முக்கிய பதவிகள் வகித்தார். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' கட்சி எதிர்ப்புக் கோஷ்டியின் உறுப்பினர்.—*251*

பெத்லியூரா [Petlura], **சிமோன் வசிலியெவிச்** *(1877—1926)*—உக்ரேனிய முதலாளித்துவத் தேசியவாதிகளின் தலைவர்களில் ஒருவர். *1917*ல் எதிர்ப்புரட்சி உக்ரேனிய ராடாவில் இராணுவ விவகாரங்கள் துறை பொதுச் செயலாளராக இருந்தார். அந்நிய இராணுவத் தலையீட்டின் போதும், உள்நாட்டு போரின் போதும் உக்ரேனில் எதிர்ப்புரட்சியின் தலைமைப் பிரமுகர்களில் ஒருவர்.—*248*

பெலீன்ஸ்கி [Belinsky], **விசரியோன் கிரிகோரியெவிச்** *(1811—1848)*—தலைசிறந்த ருஷ்ய புரட்சிகர ஜனநாயகவாதி, இலக்கிய விமர்சகர், அரசியல் சமூகப் பிரச்சினைகள் பற்றிய கட்டுரை எழுத்தாளர், பொருள்முதல்வாதத் தத்துவவியலாளர். பெலீன்ஸ்கி பண்ணை அடிமை உடைமையை எதிர்த்துப் போராடிய விவசாயிகளின் சித்தாந்தவாதியாவார். அவரது கருத்துக்கள் ருஷ்யாவில் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதிலும் விடுதலை இயக்கத்திலும் மாபெரும் செல்வாக்குச் செலுத்தின.—*105*

மார்க்ஸ் [Marx], **கார்ல்** *(1818—1883)—113, 176, 177, 278*

மார்த்தவ் (ஸெதர்பாவும், யூலி ஓஸிப்பவிச்) [Martov (Tsederbaum)] *(1873—1923)*—மென்ஷிவிசத்தின் தலை

வர்களில் ஒருவர். முதலாவது உலகப் போரின் போது மையவாதி. 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் மென்ஷிவிக்கு-சர்வதேசியவாதிகளின் குழு ஒன்றிற்குத் தலைமை தாங்கினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியின் பகைவனின் முகாமில் சேர்ந்து கொண்டார்.—51, 64

மில்யூத்தின் [Milyutin], **விளதீமிர் பாவ்லவிச்** *(1884—1938)*—ருஷ்யன் சமூக-ஜனநாயகவாதி. முதலில் மென்ஷிவிக்குகளை ஆதரித்து நின்றார். பிறகு 1910ல் போல்ஷிவிக் ஆனர். சோவியத்துகளின் இரண்டாம் அகில ருஷ்யக் காங்கிரசில் மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் விவசாயத் துறை மக்கள் கமிசாராகப் பொறுப்பேற்ருர். 1917 நவம்பரில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் பங்கு பற்றும் ஒரு கூட்டு அரசாங்கத்தை ஆதரித்தார். கட்சியின் கொள்கையுடனை தமது வேறு பாட்டை வெளியிட்டார். மத்தியக் கமிட்டியில் இருந்தும் சோவியத் அரசாங்கத்தில் இருந்தும் விலகிக் கொண்டார். 1918 முதல் 1921 வரை உயர் பொருளாதாரக் கவுன்சிலின் துணைத்தலைவர். பின்னல் பொறுப்பான இதர அரசாங்க, நிர்வாகப் பதவிகள் வகித்தார்.—35, 60

ரமானவ் [Romanov]—பார்க்க **நிக்கலாய் இரண்டாவது (ரமானவ்).**

ரஸ்பூத்தின் (நவீஹ்) [Rasputin (Novykh)], **கிரிகோரி யெவ்ஃபீமவிச்** *(1872—1916)*—இரண்டாம் நிக்கலாய் மன்னர் பரிவாரத்தின் மத்தியில் மாபெரும் செல்வாக்குப் பெற்றிருந்த சாகசவாதி.—230

ராதெக் [Radek], **கார்ல் பெர்ங்கார்தவிச்** *(1885—1939)*—இருபதாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் கலீஷியா, போலந்து, ஜெர்மனியின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் ஈடுபட்டார். முதல் உலகப் போரின் போது (1914—1918) சர்வதேசியவாத நிலையை ஏற்றுச் செயல்பட்டார். 1917ல் போல்ஷிவிக்குகளின் கட்சியில் சேர்ந்தார். லெனினது கட்சிக் கொள்கையினைப் பலமுறை எதிர்த்தவர். பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க் சமாதான உடன்படிக்கை பற்றிய விவாதத்தின் போது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு''. 1923 முதல் திரோத்ஸ்கி ஆதரவாளர்கள் கோஷ்டியின் முனைப்பான உறுப்பினர். கட்சி-விரோதச் செய்கைகளுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—251, 257

ரியாபுஷின்ஸ்கி [Ryabushinsky], **பாவெல் பாவ்லவிச்** *(பிறப்பு: 1871)*—மாஸ்கோவில் இருந்த பெரிய முதலாளி, வங்கி அதிபர். எதிர்ப்புரட்சித் தலைவர்களில் ஒருவர். *1917* ஆகஸ்டில் ''பஞ்சத்தின் கடும் கரத்தால்'' புரட்சியை நெரித்தழிப்பதாக அச்சுறுத்தியவர். கர்னீலவ் கலகத்தை ஊக்குவித்து ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர்.—*157, 159*

ரியாஸானவ் (கோல்டன்தாஹ்) [Ryazanov (Goldendakh)], **தவீத் பரீசவிச்** *(1870—1938)* — சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். *1917*ல் ஆருவது கட்சிக் காங்கிரசில் ரு. ச. ஜ. தொ. க. (போ.)யின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு தொழிற்சங்கங்களில் வேலை செய்தார். *1918* துவக்கத்தில் பிரெஸ்ட் சமாதான ஒப்பந்தம் பற்றிய கருத்துவேற்றுமை காரணமாகத் தற்காலிகமாகக் கட்சியில் இருந்து விலகினுர்.—*248*

ரீக்கவ் [Rykov], **அலெக்சேய் இவானவிச்** *(1881—1938)*—போல்ஷிவிக்குகளின் கட்சியில் *1899*ல் சேர்ந்து கொண்டார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பல முக்கியமான அரசாங்கப் பதவிகளை வகித்தார். கட்சியின் மத்தியக் கமிட்டி அரசியல் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். திரும்பத் திரும்ப லெனினியக் கட்சிக் கொள்கையை எதிர்த்து வந்தார். *1917* நவம்பரில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அடங்கலான கூட்டு அரசாங்கம் நிறுவப்பட வேண்டும் என்ற நிலையை அனுசரித்தார். கட்சிக் கொள்கை தமக்கு உடன்பாடானதாய் இல்லை என்று அறிவித்து மத்தியக் கமிட்டியிலிருந்தும், அரசாங்கத்திலிருந்தும் விலகினுர். *1928*ல் கட்சியினுள் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளின் பிரிவின் தலைவர்களில் ஒருவர் ஆனுர். கட்சி-விரோத செயற்பாடுகளுக்காக *1937*ல் கட்சியிலிருந்து தள்ளப்பட்டார்.—*35, 60*

லீப்க்னெஹ்ட் [Liebknecht], **கார்ல்** *(1871—1919)*—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகர். இடதுசாரி ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது புரட்சிகர சர்வதேசியவாதி. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர். *1919* பெர்லின் தொழிலாளர் புரட்சி எழுச்சியின் தலைவர்களில்

ஒருவர். இந்தப் புரட்சி எழுச்சி ஒடுக்கப்பட்ட பிறகு கா. லீப்க்னெஹ்ட் எதிர்ப்புரட்சியாளர்களால் மிருகத்தனமாகக் கொலைசெய்யப்பட்டார்.—*187, 191, 196, 226, 237*

லுனச்சார்ஸ்கி [Lunacharsky], **அனத்தோலி வசிலியெவிச்** *(1875—1933)* — முழுநேரப் புரட்சியாளர், முக்கிய சோவியத் அரசுத் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் *1929* வரை கல்வித்துறை மக்கள் கமிசார். எழுத்தாளர், பத்திரிகையாளர், நாடகாசிரியர், கலை, இலக்கியம் குறித்து பல நூல்களும் எழுதியவர்.—*35*

லெனின் (உல்யானவ்) [Lenin (Uliyanov)], **விளதிமிர் இலீச்** *(1870—1924).—35, 42, 48, 50 68, 69, 71 76, 141, 143, 147, 249*

லோமவ் (அப்போக்கவ், கியோர்கி இபலீத்தவிச்) [Lomov (Oppokov)], **அ.***(1888—1938)—1903* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். முழுநேரப் புரட்சியாளர், பின்னர் சோவியத் அரசுறவாளரானர். சோவியத்துகளின் இரண்டாம் அகில ருஷ்யக் காங்கிரசில் மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் நீதித்துறை மக்கள் கமிசாராகப் பொறுப்பேற்றார். *1918*ல் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு'' ஆனர்.—*36, 250*

வில்ஹெல்ம் இரண்டாவது (ஹோஹென்ஸோலர்ன்) [Wilhelm II (Hohenzollern)], *(1859—1941)*—ஜெர்மன் சக்கரவர்த்தி, பிரஷ்யாவின் மன்னர் *(1888—1918).—21, 26*

வின்னிசேன்கோ [Vinnichenko], **விளதிமிர் கிரீலவிச்** *(1880—1951)*—உக்ரேனிய முதலாளித்துவத் தேசியவாதி. *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சி உக்ரேனிய ராடாவின் அமைப்பாளர் மற்றும் தலைவர்களில் ஒருவர். *1918—1919*ல் பெத்லியூராவுடன் சேர்ந்து உக்ரேனில் முதலாளித்துவத் தேசியவாத அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கினர்.—*254*

ஷ்தேயின்பெர்க் [Steinberg], **இஸாக் ஸஹாரவிச்**—வழக்குரைஞர், இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் தலைவருள் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் நீதித்துறை மக்

கள் கமிசாராக இருந்தார். பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்படுவதை எதிர்த்தார். சமாதான உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்ட பிறகு இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளருடன் சேர்ந்து மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் இருந்து விலகிக் கொண்டார். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்ட பின் நாடு விட்டு வெளியேறினர். *—192*

ஷ்லியாப்னிக்கவ் [Shlyapnikov], **அலெக்சாந்தர் கவ்ரீலவிச்** *(1885—1937)—1901* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் தொழிலாளர் நல மக்கள் கமிசாராகப் பதவி ஏற்றூர். பிறகு தொழிற்சங்கத்திலும் நிர்வாகத்திலும் பதவிகள் வகித்தார். *1920—1922* கட்சி-விரோத ''தொழிலாளர் எதிர்ப்புக் குழு'' நிறுவி அதற்குத் தலைமை தாங்கினர். *1933*ல் கட்சிக் களையெடுப்பின் போது கட்சியில் இருந்து விலக்கப்பட்டார். *—35*

ஸினேவியெவ் (ரடமீஸ்லிஸ்கி) [Zinoviev (Radomyslsky)], **கிரிகோரி யெவ்சேயெவிச்** *(1883—1936)—1901* முதல் போல்ஷிவிக் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குத் தயாரிப்பு நடைபெற்ற காலத்தில் ஊசலாடினர், ஆயுதமேந்திய எழுச்சியை எதிர்த்து நின்றூர். ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியைப் பிரகடனம் செய்த மத்தியக் கமிட்டியின் தீர்மானத்தை ஏற்க மறுத்து அரைமென்ஷிவிக் பத்திரிகையான ''நோவயா ஷீஸ்ன்'' *(''புதிய வாழ்வு'')* ஏட்டில் காமெனெவ் தன் பெயராலும் ஸினேவியெவின் பெயராலும் அறிக்கை வெளியிட்டது மூலம் கட்சியின் இரகசிய முடிவை வெளிப்படுத்தியது புரட்சிக்கு விளைத்த துரோகமாகும்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு கட்சி, சோவியத் உறுப்புகளில் பல முக்கிய பதவிகள் வகித்தார். பலமுறை கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்துப் பேசினர். *1917* நவம்பரில் மென்ஷிவிக்குகளும், சோஷலிஸ்டு-புரட்சியாளரும் பங்கு பெறக் கூடிய தான கூட்டு அரசாங்கம் உருவாக்கப்படுவதை ஆதரித்தார். *1925*ல் ''புதிய எதிர்ப்பணி'' அமைப்பாளரில் ஒருவராக இருந்தார். *1926*ல் கட்சி-விரோத திரோத்ஸ்கி-ஸினேவியெவ் கூட்டின் தலைவர்களில் ஒருவர். அவரது

கட்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*60, 61, 147*

ஸ்குவர்த்ஸோவ்-ஸ்தெபானவ் [Skvortsov-Stepanov], இவான் இவானவிச் *(1870—1928)*—ருஷ்யப் புரட்சி இயக்கத்தின் பழம் பெரும் தலைவர். கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கிய உறுப்பினர். சோவியத் அரசுறவாளர், எழுத்தாளர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் போது மாஸ்கோ புரட்சிகர-ராணுவக் கமிட்டி உறுப்பினராக இருந்தார். பின்னுல் சோவியத் ருஷ்யாவின் முதல் நிதித்துறை மக்கள் கமிசாரராகப் பதவி வகித்தார். —*35*

ஸ்தலீப்பின் [Stolypin], **பியோத்தர் அர்காதியெவிச்** *(1862—1911)*—ஜாராட்சி ருஷ்யாவின் அரசுறவாளர். *1906—1911* ஆண்டுகளில் ருஷ்யாவின் மந்திரி சபைத் தலைவர், உள்துறை விவகார அமைச்சர். *1905—1907* ஆண்டுகளில் நடந்த முதல் ருஷ்யப் புரட்சி ஒடுக்கப்பட்டதும் அதை அடுத்து வந்த அரசியல் பிற்போக்குக் காலமும் புரட்சி இயக்கத்தை ஒடுக்க மரணத் தண்டனை பரவலாகப் பயன்படுத்தப்பட்டதும் (இதுவே ஸ்தலீப்பின் பிற்போக்கு *1907—1910* என்று அழைக்கப்படுகிறது) இவரது பெயருடன் இணைக்கப்படுகின்றன.—*187, 233*

ஸ்தாலின் (ஜுகஷ்வீலி) [Stalin (Jugashvili)], **இயோசிஃப் விஸ்ஸரியோனவிச்** *(1879—1953)*—*1898* முதல் கட்சி உறுப்பினர். *1912* முதல் ரு. ச. ஜ. தொ. க. (போ.)இன் மத்தியக் கமிட்டி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கான தயாரிப்புகள் மற்றும் நிறைவேற்ற கட்டத்தில் புரட்சி எழுச்சிக்குத் தயார் செய்வதற்காக மத்தியக் கமிட்டியால் நிறுவப்பட்ட புரட்சிகர-ராணுவ மையத்தின் உறுப்பினராக இருந்தார்.

1917 நவம்பர் முதல் *1923* ஜூலை வரையில் தேசிய இனங்கள் விவகாரத்துறை மக்கள் கமிசாராகவும் *1919* மார்ச்சு முதல் அரசுக் கட்டுப்பாட்டுத் துறை கமிசாராகவும் பிறகு தொழிலாளர் விவசாயிகள் கண்காணிப்பு போர்டின் தலைவராகவும் *1922* ஏப்ரல் *25*ந் தேதி வரை இருந்தார். ரு. க. க. (போ.)இன் அரசியல் பியூரோவின் உறுப்பினர். உள்நாட்டுப் போரின் போது குடியரசின் புரட்சிகர-இராணுவக் கவுன்சிலின் மற்றும் பல போர் முனைகளின் புரட்சிகர-இராணுவக் கவுன்சில்களின் உறுப்பினர்.

*1922*ல் கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். *1941*க்குப் பின் மக்கள் கமிசார்களின் கவுன்சில் தலைவரானார். பின்னால் சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவைத் தலைவரானார்.

கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராக நீண்ட காலம் இருந்த ஸ்தாலின் இதர தலைவர்களுடன் சேர்ந்து சோஷலிசத்தைப் படைத்துருவாக்க ஊக்கமுடன் போராடினார். கட்சி-விரோதப் போக்குகளைக் குறிப்பாயும் திரோத்ஸ்கிவாதம் மற்றும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து முறியடிப்பதில் பெரும் பங்கு வகித்தார்.

இவை யாவும் இருந்த போதிலும் சோவியத் வாழ்க்கையில் முரணானதான பல அம்சங்கள் அவரது பெயருடன் தொடர்பு பூண்டிருந்தன. அவைகளைக் கம்யூனிஸ்டுக் கட்சி மார்க்சியம்-லெனினியத்துக்கு அன்னியமானதான தனிநபர் வழிபாட்டின் வெளிப்பாடுகள் என்று வரையறுத்தது.—*36, 147*

ஸ்பிரோ [Spiro], **வி.ப.**—இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். சோவியத்துகளின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசுக்குப் பிரதிநிதியாக வந்தார். பின்னால் உக்ரேனில் வேலை செய்தார். ருமேனியன் போர்முனையில் விசேஷக் கமிசாராகப் பணி புரிந்தார்.—*59*

ஸ்மிர்னேவ் [Smirnov], **வி.மி.** *(1887—1937)*—*1907* முதல் போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு உயர் பொருளாதாரக் கவுன்சிலின் தலைமைக் குழு உறுப்பினராக இருந்தார். *1918*ல் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு''. பின்னால் பல தடவை கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்தார். கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காகக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—*268*

ஹோஃப்மன் [Hoffmann] **மாக்ஸ்** *(1869—1927)*—ஜெர்மன் ஜெனரல். *1916* செப்டம்பர் முதல் தலைமையகத்தின் தலைவர், கிழக்குப் போர்முனையில் ஜெர்மன் துருப்புக்களின் தலைமைத் தளபதி. சோவியத் ருஷ்யாவுக்கும் ஆஸ்திரோ-ஜெர்மன் கூட்டணி நாடுகளுக்கும் இடையே பிரெஸ்டில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய பாத்திரம் வகித்தார்.—*237, 242, 244*

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41. பி. சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், சென்னை—600 098.

ஷோ-ரும்
136, மவுண்ட் ரோடு, சென்னை—600 002.

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை—625 001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641 001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620 008.
செர்ரி ரோடு, சேலம்—636 001.

விற்பனை நிலையங்கள்
3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

அடுத்து வரும் வி. இ. லெனின், தேர்வு நூல்கள், எட்டாம் தொகுதியில் நமது காலத்தின் முக்கியப் பணிகள், சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள், விஞ்ஞான, தொழில்நுட்ப வேலை குறித்த நகல் திட்டம், "இடதுசாரி" சிறுபிள்ளைத்தனமும் குட்டி முதலாளித்துவ மனோபாவமும், அமெரிக்கத் தொழிலாளர்களுக்குக் கடிதம் முதலியவை இடம் பெறுகின்றன.